THAIVEEDU MAY 2023 மே www.thaiveedu.com

# தாய்வீடு



புலமையாளன் பார்த்திபன் வடிவேலு



ஒரு விதைக்கொள்ளைக்காரனின்
சாகசமும்
இறப்பர் தோட்டத் தமிழர்களும்

- என். சரவணன்



அத்தலையும் மனிதர்களுள்
ஒருவராக நின்றவர்
ஜி. நாகராஜன்

- சு. வேணுகோபால்



யூரி ஜுகோவ் :
வரலாற்றை
இருட்டறையிலிருந்து
மீட்டுவரல்

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905.209.8080
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

# வலி சுமந்த மாதம்

'மானுக்கு... மாட்டுக்கு... மரையோடு மயிலுக்கு
ஆனைக்குக்கூட அனுதாபப்படும் நாட்டில்...
மனித உயிர் மட்டும் மலிவு.
மிக மலிவு'.

1986-இலே எழுதப்பட்ட இந்த வரிகளுக்குச் சொந்தக்காரரான கவிஞர் புதுவை இரத்தினதுரை, மனித உயிர்கள் மிக மிக மலிந்துபோயிருந்த 2009-ஆம் ஆண்டின் மே மாதத்தில் இலங்கை அரச படைகளால் கைது செய்யப்பட்டுக் காணாமலாக்கப்பட்டார்.

மே மாதம் வலி சுமந்த மாதம்.

ஆயுதப்போர் முடிவுக்கு வந்து பதினான்கு ஆண்டுகள் கடந்த பின்பும் வலி தீரவில்லை. தீர்வதற்கான வழிவகைகள் தெரியவில்லை. தீர்ப்பதற்கான காத்திரமான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுவதாய் இல்லை.

மே 2009-இலே முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் அடைக்கப்பட்ட மக்கள் இப்போதும் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் வாழ்வது போன்றதொரு சூழலில், நிரந்தரமானதும் எங்கும் நீக்கமற நிறைந்ததுமான இராணுவப் பிரசன்னத்தின் மத்தியிலேயே வாழ்கிறார்கள். பதினான்கு ஆண்டுகளாய் இந்த நிலையே தொடர்வதால், அது பழக்கப்பட்டுவிட்டதாய் இருக்கலாம். ஆனால், இதுவே நாகரிக உலகில் ஒரு மக்கட்கூட்டம் வாழ்வதற்கான சாதாரண நிலை என யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இங்ஙனம் இராணுவமும் காவற்றுறையும் சுற்றிச்சூழ்ந்துள்ள நிலையிலும், குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் பெருகிவருவதும், பெருக்கப்பட்டுவருவதும் தமிழர் தாயகத்திலே இனவழிப்பு இன்னொரு வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளதையே காட்டிநிற்கிறது.

காணாமலாக்கப்பட்டவர்களின் கதியிலும் எந்த மாற்றமும் இல்லை. அவர்கள் கண்டுபிடிக்கப்படவும் இல்லை. 'அவர்களுக்கு என்ன நடந்தது?' என்ற கேள்விகளுக்கு விடைகளும் இல்லை. காணாமலாக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறலும் இல்லை. காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளைத்தேடித் தொடர்போராட்டம் நடத்திவந்த பல தாய்மாரும், தமது போராட்டம் முடிவடையாமலேயே ஏமாற்றத்தோடு இவ்வுலகைவிட்டுப் பிரிந்துகொண்டிருக்கிறார்கள். அபகரிக்கப்பட்ட காணிகளை மீளக் கையளிப்பதென்ற கதைகள் முடிவுக்கு வந்து, புதிய காணிகள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழர் தாயக நிலத்திலே, சந்திக்குச் சந்தி, மூலைக்கு மூலை புத்தர் சிலைகளும் அரச மரங்களும் காவற்றுறையினரின் பாதுகாப்புடன் முளைத்துக்கொண்டிருக்க, தமிழர்களுக்கு வழிபடும் உரிமைகூட மறுக்கப்படும் நிகழ்வுகள் பரவலாக நடைபெறுகின்றன.

கொரோனா கொண்டுவந்த பொருளாதார அழுத்தத்தின் எதிரொலியாய், தென்னிலங்கையில் வெடித்த மக்கள் போராட்டமும் பிசுபிசுத்துப்போய்விட, அந்தப் போராட்டத்தின்போது சிங்கள மக்களோடு ஏற்பட்ட உணர்வுத்தோழமையால் ஏதாவது நன்மை விளையும் என்ற நம்பிக்கையும் பொய்யாகிப்போயுள்ளது. ஆட்சியமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தவெனத் தோன்றிய அந்தப் போராட்டத்தால், ஆள் மாற்றத்தை மட்டுமே செய்யமுடிந்தது. ஆட்சியமைப்பிலும் ஆட்சியாளர்களின் சிந்தனையிலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இந்த மாற்றமடையாத சிந்தனையின் தொடர்ச்சியாகவே இப்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் புதிய மொந்தையில் பழைய கள் என்பதுபோலப் புத்துருவாக்கம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. இலங்கையிலே தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்கான அடிப்படையாகத் திகழும் தமிழ்த்தேசியத்தைச் சிதைக்க இலங்கை அரசு அடுத்தடுத்து எடுத்த நகர்வுகளைத் தடுக்கத் திராணியற்றிருந்த தமிழ் அரசியல் தலைமைகள், இப்போதைய நகர்வுகளையும் தடுக்கமுடியாத நிலையிலேயே உள்ளன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படைகள் ஆட்டங்கண்டு பலகாலம் ஆகிவிட்டதெனினும் தமிழ் அரசியல் தலைமைகளோ இன்னமும் அதைப் பிடித்தே தொங்கிக்கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. சட்ட மறுப்புப் போராட்டம் என்பதெல்லாம், மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிப்பதுபோன்ற அரசியல் வங்குரோத்து நிலையையே சுட்டுகிறது. பனங்காட்டு நரிக்குச் சலசலப்புப் போன்றதுதான் சிங்கள ஆட்சியாளர்களுக்குச் சட்ட மறுப்புப் போராட்டம் என்ற எச்சரிக்கையும். இத்தகையதொரு போராட்டத்தை மீண்டும் சிங்கள அரசு கோரக் கரங்கொண்டு நசுக்கும். தமிழ் மக்களின் நீதியான போராட்டங்களை மட்டுமல்லாது, சிங்கள மக்களின் போராட்டங்களையும் இலங்கை அரசுகள் இவ்விதமாகத்தான் அடக்கி வந்துள்ளன என்பது வரலாறு.

இனவழிப்பு முள்ளிவாய்க்காலில் உச்சம்பெற்று 14 ஆண்டு முடிகின்ற நிலையில், கொடூரமான முறையில் பறிக்கப்பட்ட உயிர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்கு அப்பால், எஞ்சியுள்ள மக்களுக்காக நாம் என்ன செய்யப்போகிறோம் என்ற கேள்வி எம்முன் பூதாகரமாக எழுந்து நிற்கிறது.

தாய்வீடு

# இம்மாதத் தாய்வீட்டில்...


வலி சுமந்த மாதம் 3

அமாவாசை வெளிச்சத்தில் அமெரிக்க டொலர் 5
- ரதன்

கருத்தோவியம் 8

உக்ரேன்: பூட்டின் நிலைப்பாடும் சொம்ஸ்கியின் கருத்துரையும் 9
- மணி வேலுப்பிள்ளை

உடைந்த கண்ணாடியில் மினுங்கும் இரவுகள்! 11
- மா. சித்திவினாயகம்

நூற்றாண்டு காணும் பெரியாரின் சமூக நீதிப் போராட்டம் 14
- நெல்லை ஜெயசிங்

ஏட்டில் எழுதிவைத்தார் - அங்காதிபாதம் 400 16
- பால. சிவகடாட்சம்

ஒற்றைத் தடுப்பூசியில் புற்றுநோய்க்குச் சிகிச்சை 19
- சுப்ரமணியம் ஜெயசீலன்

வாகனத் தரிப்பிடப் பாதை 24
- வேலா சுப்ரமணியம்

போதையும் ஆசையும் 26
- கு. பிரபு

ஐ.சி.ஆர்.சி-யும் அது கடந்துபோன எமது வாழ்வியலும் 27
- வேதநாயகம் தபேந்திரன்

கண்ணியம் என்பது சிறந்த நடத்தை 30
- சி. நற்குணலிங்கம்

திருவள்ளுவரின் சீற்றம் 32
- குமார் புனிதவேல்
ஓவியம்: டிராட்ஸ்கி மருது

உரோமப் பேரரசின் இன்றைய நிலை 34
- குரு அரவிந்தன்

மூன்று தசாப்த காலத்து அனுபவங்களை வெளிக்காட்டிய ஓவியங்களின் காட்சி 38
- து. கௌரீஸ்வரன்

பேராசிரியர் ந. சண்முகரத்தினம் அவர்களின் நான்கு நூல்கள் வெளியீடு! 41
- ரூபன் சிவராஜா

கே.ஜி. ஜியார்ஜ் படைப்புலகம் 45
- ஓவியர் ஜீவா

புலமையாளன் பார்த்திபன் வடிவேலு 48

அன்ரன் எனும் ஒரு கலைஞன் 50
- செல்வம் அருளானந்தம்

ஈழத்து மெல்லிசைப் பாடல்களின் பிதாமகன் எஸ்.கே. பரராஜசிங்கம் 52
- வே. விவேகானந்தன்

சமூக மேம்பாட்டுச் சிந்தனையாளர் ஜே.எம். ஷம்சுத்தீன் மௌலானா 55
- இனியவன் இசாறுதீன்

மல்லாவி மத்திய கல்லூரியின் கல்வி விருத்திக்கு... 58
- த. சிவபாலு

மலையகத்தின் மௌனத்துக்கு வயது கணித்த கவிஞர் சு. முரளிதரன் 61
- மல்லியப்புசந்தி திலகர்

வடஇலங்கைத் தமிழர் பொருளாதாரத்தின் வரலாற்று அடிப்படைகள்
17-ஆம் நூற்றாண்டிலிருந்து 20-ஆம் நூற்றாண்டு வரை 64
- கந்தையா சண்முகலிங்கம்

அத்தலையும் மனிதர்களில் ஒருவராக நின்றவர் ஜி. நாகராஜன் 68
- சு. வேணுகோபால்
ஓவியம்: ஜீவா

மிக உள்ளக விசாரணை நமது மனசாட்சியின் விசாரணை 76
- காஞ்சனா ப்ரியகாந்த்
தமிழில்: ஜிஃப்ரி ஹாசன்

மட்டக்களப்பு பாடும் மீன் புதிர் 79
- வண. ஃபிரா. ஜே.டபிள்யூ. லங்கே, எஸ்.ஜே
தமிழில்: சா. திருவேணிசங்கமம்

பழந்தமிழ் நூல்களை மீட்டெடுக்கத் திருப்புமுனை ஏற்படுத்திய சமணர் செய்த பொய் நூல் 84
- எஸ். சத்யதேவன்

யூரி ஜுகோவ்: வரலாற்றை இருட்டறையிலிருந்து மீட்டுவரல் 88
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொலிவியாவின் நீர்ப் போர் 94
- சதீஸ் செல்வராஜ்

ஒரு விதைக் கொள்ளைக்காரனின் சாகசமும் இறப்பர்த் தோட்டத் தமிழர்களும் 98
- என். சரவணன்

நினைவு நல்லது - நிறைவு 106
P. விக்னேஸ்வரன்

பஞ்சானும் குஞ்சும் படிச்ச கவி கொஞ்சமில்லை 119
- எம்.ஐ.எம். சாக்கீர்

நரபலி 125
- த. ஜீவராஜ்
ஓவியம்: டிராட்ஸ்கி மருது

கண்முன் நிகழும் காலத்தின் கூத்து 128
- கிருங்கை சேதுபதி
ஓவியம்: ஜீவா

தமிழ்வலை 133

தொல்காப்பியத்தில் சமூகவியல் - மறுவாசிப்பு 134
- பொன்னையா விவேகானந்தன்

கம்பனின் கருவூலம் திறந்து.... 138
- மாவிலிமைந்தன் சி. சண்முகராஜா

ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள் - இலக்கியம், தொல்லியல், பிற சான்றுகள் 141
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 145
- நா. சுப்பிரமணியன்

பூமா 151
- அகரன்
ஓவியம்: டிராட்ஸ்கி மருது

பெறுமதி சேர்க்கப்பட்டது 154
- வசந்தி தயாபரன்
ஓவியம்: செல்வன்

மீட்சி 158
- அரவிந்த் வடசேரி
ஓவியம்: ஜீவா

தோணிகள் கரையேறுகின்றன 162
- எ. ஜெனாத்
ஓவியம்: செல்வன்

சாம்பலில் திரண்ட சொற்கள் 167
- தேவகாந்தன்
ஓவியம்: ஜீவா

மூமு 173
- இவான் துர்கனெயெஃவ்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்
ஓவியம்: ஜீவா

எவரெவர் கைவிடம் 191
- நாஞ்சில் நாடன்
ஓவியம்: ஜீவா



# அமாவாசை வெளிச்சத்தில் அமெரிக்க டொலர்

– ரதன்

‘நாங்கள் சீனாவின் யுவான்-ஐ வர்த்தக பரிவர்த்தனைக்கான பணமாக பாவிக்க ஆதரவாகவுள்ளோம், ரஷ்யா, லத்தீன் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா ஆகிய பிரதேசங்களூடான வர்த்தகத்துக்கு யுவான்-ஐ பரிமாற்றப் பணமாக பாவிக்கும் எண்ணத்தை, சீனாவின் அதிபர் ஜி ஜின்பிங் உடனான மூன்று நாள் மாநாட்டின் ஆரம்ப நாளான மார்ச் 20, 2023-ல் ரஷ்ய அதிபர் புட்டின் தெரிவித்திருந்தார். இந்த மாநாட்டின் பின்னர் உலக அரங்கில் யுவான், அமெரிக்க டொலருக்கான மாற்றீடாக அமையுமா? என்ற கேள்வி சர்வதேச ஊடகங்களால் எழுப்பப்பட்டது.

உக்ரைன் போரின் பின்னாலும், கொரோன தொற்றுக் காலத்தின் பின்னாலும் சர்வதேச வர்த்தகத்தில் பல மாற்றங்கள் வெளிப்பட்டன. சீனா - ரஷ்யாவுடனான உறவு, சர்வதேச களத்தில் தவிர்க்கப்பட முடியாத முக்கிய ஆளுமையாகியது, பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, சவுத் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான பிரிக்ஸ் (BRICS) அமைப்பின் நடவடிக்கைகள் மாறியது, பரம எதிரிகளாக இருந்த ஈரானுக்கும் சவூதிக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றது, இந்தியா ரஷ்யாவிடமிருந்து பெற்ற எண்ணெய்க்கான பணத்தை டொலரல்லாத நாணயங்களினூடாகச் செலுத்தியது, பிரான்ஸ் - சீனாவுடனான வர்த்தக பரிமாற்றத்துக்கு யுவான் நாணயத்தைப் பாவிக்க ஆலோசித்தது, சவூதி அரேபியாவும் சீனா-ரஷ்யா சார்பு நாடுகளுடனான எண்ணெய் வணிகத்துக்கு யுவான்-ஐ பரிவர்த்தனை பணமாக பாவிக்க ஆலோசித்தது போன்ற சர்வதேச நிகழ்வுகள், அமெரிக்க சாம்ராஜ்யத்துக்கு எதிரான போக்காக கணிக்கப்படுகின்றது. அதே சமயம், இந்நிகழ்வுகள் அல்லது நடவடிக்கைகள் அமெரிக்க டொலரின் முக்கியத்துவத்தை குறைத்து அதனை சர்வதேசத்தின் பலம் பொருந்திய நாணயம் என்ற நிலையிலிருந்து மாற்றப்படுவதற்கான முன் நிகழ்வுகள்.

யுவானின் எழுச்சியானது அமெரிக்க டொலரின் வீழ்ச்சியா?

அமெரிக்கா பல நாடுகளுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இந்த நாடுகள் தங்களது வர்த்தக பரிமாற்றங்களுக்கு டொலருக்கு மாற்றீடான ஒரு நாணயத்தை தேடுவது தவிர்க்க முடியாதது. இன்றைய நிலையில் உலகின் பலம் பொருந்திய பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடாக சீனாவுள்ளது. இந்த நாடுகளுக்கு சீனாவின் யுவான் தவிர்க்க முடியாத ஒரு தேர்வாகின்றது.

மே 2018-ல் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ரம்ப் ஈரானின் அணு சக்தி விரிவாக்கத்துக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை பிரயோகித்தார். இதனை ஐரோப்பிய ஒன்றியம் எதிர்த்தது. அப்போதைய ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் Jean-Claude Juncker கடுமையாக எதிர்த்தார். சர்வதேச வர்த்தகத்திலிருந்து ஈரான் அப்புறப்படுத்தப்படுகின்றது. இந்த நடவடிக்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் ஈரானுக்குமான வர்த்தகத்தையும் பாதித்தது. டொலர் வர்த்தக பரிமாற்ற பணமாக இருந்தமையால் இது பல நாடுகளுக்கு சிக்கலை ஏற்படுத்தியது. ஐரோப்பிய ஒன்றியம் யூரோவை ஈரானுடான வணிக நடவடிக்கைகளுக்கு பாவித்தது.

அமெரிக்காவின் பற்றாக்குறை (Deficit) 2022-இல் 1.38 ரில்லியன் டொலர்கள். அமெரிக்காவின் மொத்தக் கடன் 31.46 ரில்லியன் டொலர்கள்.

டொலரின் பலமானது அமெரிக்க சாம்ராஜ்யத்துக்கு மிகமிக முக்கியமானது. அதன் கடன் தொகை ரில்லியன்களை எட்டிய போதும், டொலரின் பலமானது அமெரிக்காவின் பொருளாதாரத்தையும், அதன் வல்லரசு நிலையையும் மாற்றியமைக்காது என்பது அமெரிக்கவின் அசைக்க முடியாத நம்பிக்கையுமாகும்.

பைடனின் அமெரிக்க அரசு, உக்ரையினுடனான ரஷ்ய போரில் ரஷ்யாவுக்கு எதிரான பொருளதாரத் தடைகளை ஏற்படுத்திய போது, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளும் ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தின. இந்த நாடுகளின் நாணயங்களான பவுண், கனடிய டொலர் ஆகியவை சர்வதேச ரீதியில் பெறுமதிமிக்க, நிலையான நாணயங்களாகும். அதே வேளை, அமெரிக்க பொருளாதார அறிஞர்கள் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடை அமெரிக்காவை பாதிக்கும் எனத் தெரிவித்திருந்தார்கள்.

## இரண்டு சர்வதேச நாணயங்கள் அமையுமா?

சர்வதேச வணிகத்துக்கு, உலக நாடுகள் ஒரு பெறுமதிமிக்க வலுவான நாணயத்தையே விரும்புகின்றது. இந்த நாணய

மாக யுவான் மாற்றம் பெறுமா? இல்லையேல் சர்வதேசம் இரண்டாக பிளவுபட்டு இரண்டு சர்வதேச நாணயங்கள் அமையுமா?

சீனா திறந்த பொருளாதார சந்தைக்கு வந்த போது மேற்கின் சில விதிகளுக்கு தன்னை உட்படுத்திக் கொண்டது. உலக வணிக அமைப்பில் இணைந்த போது அதன் கோரிக்கைக ளுக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்ய முன்வந்தது. மேற்கின் பண முதலைகள் சீனாவின் மிகக் குறைந்த வேதனம், மிகக் குறைந்த உற்பத்திச் செலவு போன்றவற்றால் கவரப்பட்டனர். சீனாவும் வாருங்கள் வாருங்கள் என இரு கரம் கூப்பி வர வேற்றது. சீனாவில் முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க அளவு பங்குகளை சீனா தன்வசம் வைத்தி ருந்தது. இதனால், உலகின் பொருட்கள் உற்பத்தியில் சீனா தன்னை முதலிடத்துக்குத் தள்ளியது. இதற்காக தனது நாண யத்தைக்கூட அடிக்கடி தேவைக்கேற்ப குறைத்துக் கொண் டது. இதன் மறுபக்கத்தைப் பற்றி, அப்போது மட்டுமல்ல இப்போதும் முதலீட்டு நிறுவனங்கள் கவலை கொள்ள வில்லை.

அமெரிக்காவில் செய்யப்பட்ட வேலைகள் சீனாவிற்கு தானா கவே மாற்றமாகின. ஒரு பொருளை அமெரிக்காவில் உற் பத்தி செய்வதை விட மிகக் குறைந்த செலவில் சீனாவில் உற்பத்தி செய்ய முடியும். பொருட்களை கப்பலில் அமெரிக் காவிற்கு கொண்டு வந்தார்கள். உற்பத்திச் செலவு, போக்கு வரத்துச் செலவு என்பவற்றை கூட்டிப் பார்த்தாலும் அமெரிக் காவின் உற்பத்திச் செலவை விட பல மடங்கு குறைவு. இது, சீனாவின் மத்தியதர வர்க்கத்தினரின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

உலக உற்பத்தியை ஆக்கிரமித்து தேசிய உற்பத்தியை அதிகரித்த சீனா, முன்னர் அமெரிக்கா உதவி செய்து வந்த ஆபத்திலிருந்த நாடுகளுக்கு பண உதவி செய்தது, படிப்ப டியாக அந்நாடுகளை சீனா தன் பொருளாதார ஆதிக்கத் தின் கீழ் கொண்டுவந்தது. சிம்பாவே போன்ற நாடுகளுக்கு பெருமளவு பண உதவி செய்தது. இந்த நாடுகளில் சீனா தனது முதலீடுகளைச் செய்யத் தொடங்கியது. அந்த நாடுக ளின் அரசியலில் தன்னை உட்புகுத்தாமல், அதன் பொரு ளாதாரத்தில் தனது செல்வாக்கை அதிகரித்தது. மத்திய கிழக்கு நாடுகளிலும் தனது வணிக எண்ணிக்கையை அதிக ரித்தது.

காலனித்துவ ஆட்சிகள் வீழ்ச்சி கண்டபோது பல நாடுகள் சுதந்திர நாடுகளாகின. ஆனாலும் மேற்கு நாடுகள் வேறு ஒரு வகையில் இதே நாடுகளை தங்களது கட்டுப்பாட்டுக் குள் வைத்திருந்தன. இந்த நாடுகளின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக மேற்கு நாடுகள், குறிப்பாக அமெ ரிக்கா மாறியது. தங்களது ஆதரவு சக்தியை ஆட்சி பீடத் தில் அமர்த்தியது. தங்களுக்கு அடங்காவிட்டால், அடாவடி யாக மாற்றியது. இதற்கு சிலி சிறந்த உதாரணம்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச வணிக அமைப்பு போன்றவற்றிற்கு ஊடாக உலகை தனது கட்டுப் பாட்டுக்குள் அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் வைத்திருந் தன. உலகின் சர்வதேச நாணயமாக அமெரிக்க டொலர் மாறியது. ஜி-7 நாடுகளின் நாணயங்களின் பெறுமதிகளும் உயர்வாகவே வைக்கப்பட்டிருந்தன. இதன் மூலம் சர்வதேச வணிகச் சந்தையின் தீர்மானிக்கும் சக்தியாக அமெரிக்காக மாறியது.

தனது தேவைக்கு ஏற்ப பண வீக்கங்களை உருவாக்கி டொலரின் பெறுமதியை அதிகரிக்கச் செய்தது. இன்றைய நிலையில் அமெரிக்காவின் கடன் 31 ரில்லியனாகவுள்ளது. சீனா கடனற்றுள்ளது. பல நாடுகள் அமெரிக்க டொலருக்கு மாற்றீடான நாணயத்தை விரும்புகின்றன. கியூபா போன்ற கம்யூனிசிய நாடுகள் அமெரிக்க டொலரை ஏற்றுக் கொள்வ தில்லை. சம்பியாவில் அமெரிக்க டொலர் பாவனை சட்டவி ரோதமான தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பிரிக்ஸ் நாடு கள் தங்களுக்கிடையிலான வர்த்தக பரிமாற்றத்துக்கு டொல ரைப் பாவிப்பதில்லை.

இந்தியாவும் பல வருடங்களுக்கு முன்பே ரூபாயை முன்னி லைப்படுத்தத் தொடங்கிவிட்டது. பல நாடுகளுடன் ரூபாயில் வர்த்தகம் செய்யத் தொடங்கிவிட்டது. ஈரானுடனான எண் ணெய் இறக்குமதிக்கு ரூபாய்களில் பணத்தை இந்தியா செலுத்தியது.

கனடாவில் அமெரிக்க டொலரில் வங்கிக் கணக்குகள் வைத் திருக்கலாம். அதே போல் இந்தியாவும் இலங்கை, சிங்கப் பூர், ஜேர்மனி, இஸ்ரேல், இங்கிலாந்து, பங்களாதேஸ், ரஷ்யா உற்பட்ட 19 நாடுகளின் வங்கிகளில் இந்திய ரூபா யில் வங்கிக் கணக்குகளை வாடிக்கையாளர்கள் வைத்தி ருக்க இந்திய மத்திய வங்கி ஆவன செய்துள்ளது.

ஆனால் இந்தியா தனது நாட்டிலிருந்து 250,000 டொலர்க ளுக்கு மேல் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதாகவிருந் தால் ஆர்.பி.ஐ-ன் அனுமதியைப் பெறவேண்டும். குறைந்த காலத்தில் பண வெளியேற்றமானது நாணய பரிமாற்ற விகி தத்தில் ஒரு நிலையற்ற தன்மையை ஏற்படுத்திவிடும் என இந்தியா பயப்படுகின்றது.

1970-ல் வியட்நாம் போரினால் அமெரிக்காவின் பொருளாதா ரம் வீழ்ச்சி கண்டிருந்தபோது, அப்போதைய அமெரிக்க அதிபர் நிக்சன் டொலர் - தங்கம் மாற்றீடை இடைநிறுத்துவ தாக அறிவித்தார் (Bretton Woods Agreement). இதன் பின் னர் floating rates-க்கு மாற்றீடானது. இதனால் ஜப்பானின் யென் பாதிப்படைந்தது. ஓர் அமெரிக்க டொலர் 360 யென் என்ற நிலையிலிருந்தது. அப்போது யப்பான் உலகெங்கும் தனது இலத்திரனியல் பொருட்களை அதிகளவு ஏற்றமதி செய்து கொண்டிருந்தது. இவ் அறிவித்தல் யப்பானிய நாண யத்தின் பெறுமதியை அதிகரிக்கும். இதனால் ஏற்றுமதி பாதிக்கப்படும் என யப்பான் அஞ்சியது. அஞ்சியதைப் போலவே நடைபெற்றது. இதன் பின்னர் ஒரு அமெரிக்க டொலர் 308 யென் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது. இதன்

பின்னர் 1973-ல் ஏற்பட்ட எண்ணெய் விலை சிக்கல்கள் யப்பானை பொருளாதார வீழ்ச்சிக்கு தள்ளியது. யப்பானின் அதிவேக பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அமெரிக்கா கட்டுப்படுத்தியது.

2013-ல் யப்பான் தனது நாணயமான யென்னின் பெறுமதியை குறைப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. 'Japan has used currency intervention to give Japanese auto companies one of their most significant unfair competitive advantages, adding tens of billions of dollars to their operating profits for every one-yen drop against the dollar' என்றது. ஒரு யென்னின் குறைப்பு அதாவது ஒரு அமெரிக்க டொலர் 97.60 யென்னிலிருந்து 98.60-ஆக (2013) குறைக்கப்பட்டால் பில்லியன் கணக்கில் யப்பானிய நிறுவனங்கள் லாபம் பெறும் என்பதே அமெரிக்காவின் குற்றச்சாட்டு.

பிரிக்ஸ் நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் உலகின் 40 வீதமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. ஆர்ஜன்ரீனா, ஈரான், அலஜீரியா ஆகிய நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கு விண்ணப்பித்துள்ளன. துருக்கி, எகிப்து, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், மெக்சிக்கோ மற்றும் பல ஆபிரிக்க நாடுகள் இவ் அமைப்பில் இணைவதற்கான விருப்பமிருப்பதாக கூறியுள்ளார்கள். இதில் சவூதி, அமெரிக்காவின் நட்பு நாடு. மெக்சிக்கோ அயல் நாடு. ஏற்கனவே வட-அமெரிக்க சுதந்திர வர்த்தக வலயத்துள் உள்ளது. பிரிக்ஸின் அபிவிருத்தி வங்கியின் தலைவராக முன்னாள் பிரேசிலின் அதிபர் H.E. Mrs. Dilma Rousseff, வளர்ந்து வரும் நாடுகளின் அபிவிருத்தி முக்கியம் எனவும், அதற்காக அபிவிருத்தி வங்கி பாடுபடும் எனக் குறிப்பிட்டுள்ளார். பிரிக்ஸின் வளர்ச்சியானது அமெரிக்காவிற்கும், அமெரிக்க டொலருக்கும் சவாலானதாகும்.

பிரிக்ஸின் அபிவிருத்தி வங்கியின் வளர்ந்து வரும் நாடுகளின் உள்கட்டமைப்பு அபிவிருத்தி என்பது சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றின் கோட்பாட்டுகளுக்கு எதிரானது.

அமெரிக்க டொலரின் ஆதிக்கத்தினூடாகவும், தனது ஆயுத பலத்தினூடாகவும் உலகை ஆட்டிப் படைத்த அமெரிக்காவின் இறுதி அத்தியாயம் ஆரம்பமாகிவிட்டது. பொருளாதாரத்திலும் இராணுவ ரீதியாகவும் உச்ச வளர்ச்சியடைந்துள்ள சீனாவும், இராணுவ ரீதியாக பலம் பொருந்திய ரஷ்யாவும் கூட்டுச் சேர்ந்துள்ளார்கள். மறு புறத்தில் எண்ணெய் வளத்தின் செல்வத்தில் வாழ்ந்து வரும் மத்திய கிழக்கு நாடுகள் தங்களுக்குள் ஒற்றுமையாக முயற்சிக்கின்றார்கள். இந்த நாடுகளுக்கிடையிலான வர்த்தக பரிமாற்றத்தை தங்களது நாட்டின் நாணயத்தினூடாகவே செலுத்தவிரும்புகிறார்கள்.

ஒவ்வொரு நாடும் தங்களது நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்துகின்றன. எனவே, நாணய பரிமாற்ற விகிதம் சுயமாக உண்மையாக இருக்க வேண்டும். கட்டமைப்பு சக்தியையும் மேலாதிக்கத்தையும் வரலாற்று ரீதியாகவும் தொடர்ந்து தக்கவைக்கும் அமெரிக்காவின் தொடர்ச்சியான நாணய பரிமாற்ற விகிதம் மீதான ஆதிக்கம் சுதந்திரமான, உண்மையான விகிதத்தை ஏற்படுத்தாது. இதனால், குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகள் பாதிப்படைகின்றன.

இன்றைய சூழலில் வல்லரசு நாடுகளான அமெரிக்கா, சீனா போன்றவற்றிற்கு நாணய பரிமாற்ற விகிதங்கள் சாதகமாக முடியும். இந்திய ரூபாய் பயன்பாடு, அதனைச் சுற்றியுள்ள வறிய நாடுகளான இலங்கை, பங்களாதேஸ், நேபாளம் போன்ற நாடுகளின் பொருளாதாரத்தை மேலும் பலவீனமாக்கும்.

அமெரிக்க டொலருக்கு பதிலாக சீனாவின் யுவான், இந்திய ரூபாய்கள், ரஷ்யாவின் ரூபிள் போன்ற நாணயங்களை சர்வதேச நாடுகள் பயன்படுத்தலாம். ஆனால் இவை சீனா, அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளுக்கே அதிக இலாபத்தை பெற்றுக் கொடுக்கும்.

வளர்ந்து வரும் நாடுகள் இப்பொழுது பல நாணயங்களை சேமிப்பில் வைத்திருக்க நிற்பந்திக்கப்படுகின்றார்கள்.

இன்று பல நாடுகள் தங்கத்தை தங்களது சேமிப்பில் அதிகளவு வைத்திருக்க முயற்சிக்கின்றார்கள். இது இன்றுள்ள நாணய பரிமாற்ற நிலையற்ற நிலையையே எடுத்துக்காட்டுகின்றது. இன்றும் தங்கம் தங்களை பாதுகாக்கும் என நம்புகின்றார்கள். சீன அரசாங்கம் இருபதினாயிரம் தொன் தங்கத்தை சேமித்து வைத்துள்ளது. ஆனால் இந்திய மக்களிடம் மட்டும் ஐம்பதினாயிரம் தொன் தங்கம் சேமிப்பில் உள்ளது.

இன்று சுமார் 85 வீதமான வர்த்தக பரிமாற்றங்கள் SWIFT முறையினூடாகவே நடைபெறுகின்றது. இது மேற்கு நாடுகளால் உருவாக்கப்பட்ட பணம் அனுப்பும் முறை. யுவானூடாக 4.6 வீதமான பணப் பரிமாற்றங்களே நடைபெற்றுள்ளன. பிரிக்ஸ் அமைப்பு SUCRE என்ற முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. காலப் போக்கில் எண்ணிக்கைகள் மாற்றமடையலாம்.

நிக்சனின் நிதிக் களஞ்சியத்தின் (Treasury) அமைச்சர் John Connally 'the dollar is our currency, but your problem' டொலர் எங்களுடையது, ஆனால் அதுவே உங்களது பிரச்சினையாகும். இன்று வரை டொலரால் பல நாடுகள் பிரச்சினைகளை சந்தித்துள்ளன.

சவூதி அரேபியாவிற்கு பாதுகாப்பு வழங்குகின்றோம். எண்ணெய் வர்த்தகத்தை டொலரில் செய்ய வேண்டும் என்று அன்றைய எரிந்து கொண்டிருந்த எண்ணெய் பிரச்சினையை தனக்கு சாதகமாக்கி டொலரை பலப்படுத்தியது அமெரிக்கா. டொலரை பலவீனமாக்கும் நாடுகளை, நாணய பரிமாற்ற விகிதத்தை மாற்றி அமெரிக்க பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்தவர்களை வீழ்ச்சியடையச் செய்தது. அதுவே இன்று அமெரிக்காவிற்கு ஆபத்தாகவும் முடிந்துள்ளது. சர்

வதே நாணய நிதியம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள அமைப்பு. அமெரிக்கா தலையாட்டினால் உதவி கிடைக்கும். பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். இன்று சீனா வும் இவர்கள் நிதி வழங்கும் நாடுகளுக்கு நிதி வழங்குவத னால் இவர்களால் நிதி வழங்கப்படும் நாடுகளை முற்றாக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாதுள்ளது. சீனாவின் வளர்ச்சியானது பல வடிவங்களில் அமெரிக்காவிற்கு சவாலா கவுள்ளது.

ஆனால், இன்றைய திறந்த வர்த்தக சந்தையில் அமெரிக்க நிதி மற்றும் முதலீட்டுச் சந்தைகள் திறந்து விடப்பட்டுள்ளன. ஆனால் சீனாவினது அப்படியல்ல. இது ஒரு சுதந்திரமான, உண்மையான பணப் பரிமாற்றத்துக்கு ஏதுவாக இருக்காது. இன்று பல நாடுகள் தங்களது நாட்டின் நாணயத்திலேயே பணப் பரிமாற்றத்தை விரும்புகின்றார்கள். இதனால் டொல ருக்கு பதிலாக பல நாணயங்கள் பணப் பரிமாற்ற நாணயங் களாக அமையும்.

மெக்சிக்கோ பிரிக்ஸில் இணைந்தால் அல்லது இணைய முயற்சித்தால் வட-அமெரிக்காவில் பொருளாதார நிலைமை கள் மாற்றமடையும். இது கனடாவையும் பாதிக்கும். அமெ ரிக்கா-கனடா ஒரே நாணயத்தை பயன்படுத்த வேண்டிய நிலைமையும் ஏற்படும். தென் அமெரிக்காவின் இரண்டு மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளான பிரேசிலும், ஆர்ஜன்ரீனாவும் ஒரே நாணயத்தை பாவிப்பது பற்றி ஆலோசிக்கின்றார்கள். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் யூரோ-வை பாவிப்பது போல் காலப்போக்கில் பல நாடுகள் ஒரு நாணயத்தை இணைந்து பாவிப்பதற்கு முயற்சிக்கலாம்.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் - மே 2013 C. Fred Bergsten சர்வதேச பணச் சந்தை 'now faces a clear and present danger: currency wars. Virtually every major country is seeking depreciation, or at least non-appreciation, of its currency to strengthen its economy and create jobs'.

**பிற்குறிப்பு:**

- Gold's estimated market cap is $12.1 trillion (by multiplying the current gold price by the world's above-ground gold reserves.)
- BRICS are estimated to hold over 80% of this $12.1 trillion in gold.
- The Chinese Yuan (CNY) and Renminbi (RMB) are interchangeable terms for China's currency.
- The Renminbi(RMB) is the official name of China's currency. The principal unit of RMB is called the Chinese Yuan (CNY).



rathan@thaiveedu.com



# உக்ரேன் :
# பூட்டின் நிலைப்பாடும் சொம்ஸ்கியின் கருத்துரையும்

- மணி வேலுப்பிள்ளை

**மேற்குலகு:**

ரஷ்ய அதிபர் பூட்டின் மேலைநாடுகளை வஞ்சப்புகழ்ச்சியுடன் 'எமது மேற்கத்தைய பங்காளிகள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

'அவர்கள் பேராசை பிடித்தவர்கள், பழங்கால உலக மாயைக்கு உள்ளானவர்கள், உலக வணிக ஒழுங்கினைக்



கெடுத்தவர்கள்' என்று சாடியிருகிறார்.

'மேற்குலகிற்கு பித்துப்பிடித்திருக்கிறது. அமெரிக்கர் தம்மை இவ்வுலகின் இறைதூதர் என்று கருதுகிறார்கள் ரஷ்யா மீதான காழ்ப்பு அவர்களைப் பிடித்து ஆட்டுகிறது' என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக அரசுகளை 'ஆளும் மேட்டிமைக் குழாங்கள்' என்று கண்டித்திருக்கிறார். 'உலக அரசியலில் மேற்குலகின் ஆதிக்கம் நிலைக்கப் போவதில்லை' என்று எச்சரித்துள்ளார்.

'அவர்கள் மெய்நிலைவரத்தை மறுக்கிறார்கள் வரலாற்றை எதிர்த்திசையில் திருப்பிவிட எத்தனிக்கிறார்கள் கழிந்த நூற்றாண்டுக்கான நியதிகளின்படி சிந்திக்கிறார்கள். மற்ற நாடுகளை தமது கோடிப்புறங்களாகவும், தாம் கட்டியாளும் நாடுகளாகவும், கருதுகிறார்கள்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய சொத்துகளை முடக்குவதன் மூலமோ, மேற்குலக நிறுவனங்களை ரஷ்யாவிலிருந்து வெளியேறும்படி நிர்ப்பந்திப்பதன் மூலமோ அவர்களால் ரஷ்யப் பொருளாதாரத்தையும், தொழில்துறையையும், நிதிவளத்தையும், வணிக உறவையும், வாழ்க்கைத் தரத்தையும் ஒடுக்க முடியாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

'எனது இறப்பு ஒரு மிகைபடுதப்பட்ட செய்தி' என்று நகையாடிய அமெரிக்க எழுத்தாளர் மார்க் துவெயினை மேற்கோள் காட்டி, 'எனது சுகயீனம் ஒரு மிகைபடுத்தப்பட்ட செய்தி' என்று பூட்டின் நகையாடியிருக்கிறார்.

கிழக்கு உக்ரேனில் பெரும்பாலும் ரஷ்யர்கள் வாழும் டொனெற்ஸ்க், லுஹன்ஸ்க் பிரதேசங்களை உள்ளடக்கிய புலம் டொன்பாஸ் எனப்படுகிறது. டொன்பாசை விடுவிப்பதற்கான 'விசேட படை நடவடிக்கை'க்கும் உலக பொருளாதார நெருக்கடிக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. மேற்குலகு தாம் புரிந்த அசட்டுத்தனங்களுக்கு நியாயம் கற்பிப்பதற்காகவே 'விசேட படை நடவடிக்கையை'ப் பயன்படுத்துகிறது என்பது அவர் வாதம்.

டொன்பாசில் ரஷ்ய படையினரும், டொன்பாஸ் குடிப்படையினரும் தமது சுதந்திரத்துக்காக மட்டுமல்லாது பாரிய, பல்லின, சுதந்திர ரஷ்யாவின் வருங்காலத்துக்காகவும் போராடுகிறார்கள். 'விசேட படை நடவடிக்கை'யின் குறிக்கோள் எய்தப்பட்டே தீரும் என்பது அவர் முழக்கம்.

**நோம் சொம்ஸ்கி:**

'உக்ரேன் போரைப் பேசித்தீர்க்க கிடைக்கும் எந்த வாய்ப்பையும் தவற விடக்கூடாது. இரு தரப்புகளும் தத்தம் இலக்கினை எய்தாவிட்டாலும், எட்டப்படும் தீர்வை அவை சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்கிறார் நோம் சொம்ஸ்கி.

‘பேசித்தீர்க்காவிட்டால், ஒரு தரப்பு மண்டியிடும் வரை போர் தொடர்தல் திண்ணம். ரஷ்யா மண்டியிடும் என்ற பேச்சுக்கே இடமில்லை. கடைசி உக்ரேனியர் உள்ளவரை போராடுவது எனும் அமெரிக்காவின் நிலைப்பாடு உக்ரேனை அழித்தொழித்து வருகிறது என்று சொம்ஸ்கி கருத்துரைத்துள்ளார். தமது கருத்துரைக்கு சொம்ஸ்கி இப்படி விளக்கமளித்துள்ளார்:

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்படுவதை தடுப்பதே அமெரிக்காவின்



கொள்கை. ரஷ்யா திரும்பவும் ஓர் ஆக்கிரமிப்பில் இறங்க முடியாவாறு சேதமடையும் வண்ணம் போரைத் தொடர்வதே அமெரிக்காவின் நோக்கம்.

போரைத் தொடருதல், உக்ரேனியரை வருத்துதல், கொல்லுதல், காலநிலை மாற்ற இலக்குகளை எதிர்த்திசையில் திருப்புதல், அணுவாயுதப் போர் எனும் ஆபத்துக்கு வழிவகுத்தல், கோடிக்கணக்கான உலக மக்களை பட்டினிச் சாவுக்கு இட்டுச்செல்லுதல்... இவை எல்லாம் ரஷ்யாவை ஊறுபடுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.

இப்படித்தான் ஜேர்மனி மீண்டும் வலிமை அடையாவாறு, அதனை ஒரு வேளாண்மை நாடாக்கும் நோக்குடன் 1919ல் வேர்சாய் பொருத்தனை செய்யப்பட்டது. இப்பொழுது ரஷ்யாவை ஒரு பண்ணைச் சமூகமாக மாற்றும் நோக்குடன் போர் புரியப்படுகிறது.

ரஷ்யா பேரழிவுக்கு உள்ளாகும் வரை போரைத் தொடர்வதற்கு, போர்ச்செருக்கு மிகுந்த அமெரிக்காவும், பிரித்தானியாவும் உறுதி பூண்டுள்ளன. எனினும் ரஷ்யா பேரழிவுக்கு உள்ளாகுமென நான் நினைக்கவில்லை. மாறாக, உக்ரேனே பேரழிவுக்கு உள்ளாகும் என்று எச்சரிக்கிறார் நோம் சொம்ஸ்கி.

பிரான்சு, ஜேர்மனி, இத்தாலி முதலிய நாடுகள் நெகிழ்வுப் போக்குடையவை. அவை ரஷ்யாவுடனும், உக்ரேனுடனும் பேசித்தீர்க்க முயன்றபொழுது, அவற்றை அமெரிக்கா அதட்டி அடக்கிவிட்டது.

ரஷ்யாவும் பூட்டினும் தோல்வியை ஒப்புக்கொண்டு, வாயைப் பொத்திக்கொண்டு, பின்வாங்கக் கூடுமா? அல்லது உக்ரேனை அழித்தொழிப்பதற்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, அணுவாயுதப் போருக்கு இட்டுச்செல்லக் கூடுமா? அதை அறிவதற்காகவே போர் எனும் கொடிய சூதாட்டம் தொடர்ந்து ஆடப்படுகிறது என்கிறார் நோம் சொம்ஸ்கி.

நான் நெடுங்காலமாக உயிர்வாழ்ந்து வருபவன். இன்று போல் என்றுமே அமெரிக்காவில் எதேச்சாதிகாரம் ஓங்கியதில்லை. இன்று உளவுப்படை வந்து, என்னை மடக்கிப் பிடித்து, சிறையில் அடைக்கும் என்று நான் கருதவில்லை. அவர்கள் என்னை ஏறெடுத்தும் பார்க்கப் போவதில்லை. ஆனால் ஊடகங்கள் எல்லாவற்றையும் இழுத்துப் பூட்டிவிடுவர்கள்.

இங்கு ரஷ்ய தொலைக்காட்சி பார்க்க அனுமதி இல்லை. ரஷ்ய நிலைப்பாட்டை அறிவதற்கு நாங்கள் இந்திய அல்லது அல் ஜசீரா தொலைக்காட்சியை பார்க்க வேண்டியுள்ளது. இந்தளவு தணிக்கை இங்கு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. இது ஒரு விசித்திரமான, பித்துப்பிடித்த நிலைப்பாடு.

அமெரிக்க ஆட்சியாளரின் நிலைப்பாட்டிலிருந்து வழுகுவோர் அனைவரும் படுபாவிகள், பொய்யர்கள், கயிறு திரிப்பவர்கள் என்று தூற்றப்படுகிறார்கள். நாங்கள் ஐரோப்பாவை விட அமெரிக்காவிலேயே அதிகம் தூற்றப்படுகிறோம்.

வெளிப்படையான உண்மைகளை எமது மைய ஊடகங்களில் எடுத்துரைக்க முடியாது. எனது வாழ்நாளில் இந்தளவு தணிக்கையை இதுவரை நான் எதிர்கொண்டதில்லை. இரண்டாம் உலகப் போரின் போதுகூட இவ்வளவு தணிக்கை இடம்பெற்றதில்லை என்று பொருமுகிறார் சொம்ஸ்கி.

அண்மையில் சீன அதிபர் சி-பிங்கை சென்று சந்தித்த பிரஞ்சு அதிபர் மைக்ரோன் புதிய நிலைப்பாட்டை எடுத்துள்ளார்: உக்ரேன் போர் உட்பட எல்லா விடயங்களிலும் ஐரோப்பிய ஒன்றியம் சுதந்திரமான கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் ஐரோப்பிய ஒன்றியம் எவர்க்கும் அடிமைப்பட்ட புலமல்ல... அதாவது ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவுக்கு அடிமைப்பட்ட புலமல்ல. அமெரிக்காவின் சொற்படி ஐரோப்பிய ஒன்றியம் நடக்க வேண்டியதில்லை!

ஐரோப்பிய அரசுகள் சிலவும், மைய ஊடகங்கள் சிலவும் மைக்ரோனின் கருத்தினைக் குறித்து கேள்வி எழுப்பியுள்ளன. எனினும், மைக்ரோனின் கருத்து சொம்ஸ்கியின் கருத்தை மட்டுமல்ல, ஐரோப்பிய குடிமக்களின் கருத்தினையும் புலப்படுத்துவதாகவே தெரிகிறது.



mani.v@thaiveedu.com

# உடைந்த கண்ணாடியில் மினுங்கும் இரவுகள்!

**- மா. சித்திவினாயகம்**

ஒரு போர் எத்துணை கொடூரங்களை அப்பாவி மனிதர்க்குச் செய்யும் என்பதை என் போன்ற ஈழத்து அகதிகள் நன்றாகவே அறிவர்.

அது நாம் கண்ட கொடுமையின் அனுபவம். அவற்றின் கொடூரத்தை ஈழ வீதிகளில் நாம் பார்த்துப் பதைபதைத்துப் பயத்தோடு கலங்கி ஓடியிருக்கின்றோம். தமிழ் அன்னைகள் தொலைத்த பிள்ளைகளை, தந்தைகளை இழந்த குடும்பங்களை, கொத்துக் குண்டுகள் குடும்பமாய் தின்ற எம் உறவுகளை, பிஞ்சிலேயே கருக்கி எறிந்த எம் சிறார்களை கண் முன்னாலே பறித்தெடுத்து விட்டு எம்மை நோக்கி அது தன் கரம் நீட்டிய வேளை எம் தேசத்தை விட்டு தூரத் தொலைந்தோம். பல இலட்சக் கணக்கானோரின் குருதி வழிந்தோடிய மண்ணின் சுதந்திர வாழ்விற்காக நாம் நித்தமும் அழுதிருக்கிறோம். போர் புரிந்திருக்கின்றோம், ஆர்ப்பாட்டங்கள் செய்திருக்கின்றோம். கவிதைகள், கதைகள், கட்டுரைகள், பேச்சு வார்த்தைகள் என்று அத்தனையும் பொய்த்துப் போர் எமைத் தின்றது.



எம் கனவுகளையும், கல்வியையும், வாழ்வையும் ஒரு சேரச் சீரழித்து விட்டு எம்மைத் தனக்காக்கி வைத்திருந்தது போர். கல்வியிழக்கச் செய்து இளைஞர் யுவதிகளை அது இருகரம் நீட்டி வரவேற்றணைத்து கொன்று துப்பியது. திரும்பும் திசையெங்கும் போரின் அவலம் எம்மை அச்சுறுத்தியது. எம் மொழியில் நாம் எழுதிய யாவும் பயங்கரவாதம் என்றது போர். நாம் எடுக்கும் பொருள்கள் அத்தனையும் பயங்கர ஆயுதமென பிரகடனப்படுத்தியது அதிகாரம். அதனோடு எம்மால் பொருத முடியவில்லை. தப்பித்துப் புலம் பெயர்ந்தவர்கள் பிழைத்துக் கொண்டார்கள். நிலம் பெரிதென நிலைபெற்றவர்கள் கோரமாய் அழிக்கப்பட்டார்கள்.

வந்த இடங்களிலும் போர் எம்மை விடுவதாயில்லை. ஒவ்வொரு மனிதரும், மனிதர்க்கு எதிரியாயும், ஒவ்வொரு நாடும், நாடுகளுக்கு எதிரியாகவும் மாறி நிற்கிற கொடூர நாட்கள் இது. அழகான இந்த உலகை, வானை, மண்ணை, மலரை, மலையை அழித்தொழிக்கவே ஒவ்வொருவரும் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள்.

சமாதானக் கவிதை எழுதவென நான் என் கையில் வைத்திருந்த பேனாவையும் காகிதங்களையும் பறித்தெடுத்துவிட்டு, எப்படியாகிலும் என் கையில் துப்பாக்கியைத் திணித்து விடத் துடிக்கிறது போர். பெரிய, கறுப்பு பூட்ஸைக் கால்களில் பொருத்திபடியே என் தலையில் ஒரு முரட்டு இராணுவத்தானின் தொப்பியை அது தரவில்லையே தவிர மதப் பெயரால், இனப் பெயரால், மொழிப் பெயரால், சாதியப் பெயரால், பாலினப் பெயரால் அடுத்தவனை நயவஞ்சகமாக கொல்கிற அனைத்தையும் இது நாளும் கற்பித்த வண்ணமே நகர்கின்றது.

நான் முதன் முதலாக அகதியாகித் தப்பியோடிய ஜேர்மனியில் நான் சந்தித்த பெரும்பாலான ஜேர்மனியர்களும் நல்லவர்கள் போலவே இருந்தார்கள். ஆனால் இந்த நல்லவர்கள் இங்கு தான் மிகப்பெரிய யூத இனக் கொலையை ஹிட்லரின் பெயரால் நடத்தி முடித்தவர்கள்.

இந்த உலகம் பணத்தாலோ, படை பலத்தாலோ பலமாயுள்ளவர் எவரோ உடனேயே அவரது கைப்பாவையாகிவிடும் என்பதற்கு ஜேர்மனி ஒரு சாட்சி.

6 மில்லியன் யூதர்களை எரிவாயு அறைகளுக்குள் பூட்டி சித்திரவதைப்படுத்தி அவர்களைக் கொன்று மகிழ்ந்தவர்கள் ஜேர்மானியர்கள். ஹிட்லர், ஜேர்மனியர்கள்தான் உலகில் உயர்ந்த இனம் என்றும், தங்களுடைய எல்லா தீமைகளுக்கும் யூதர்களே காரணம் என்றும் சொன்ன போது மார்ட்டின் லூதர், கான்ட், நீட்சே, ஹெகல், கார்ல்மார்க்ஸ், ஹோதி போன்ற உலகில் மிகச் சிறந்த தத்துவார்த்த சீர்திருத்த வாதிகள் தோன்றிய நாட்டில் மறு பேச்சின்றி எந்த மனச் சாட்சியு மற்று யூதர்களை வெறுத்தவர்கள் ஜேர்மனியர்கள். யூதரின் சொத்துக்களை பறிமுதல் செய்ததன் மூலம் மிகப்பெரிய பணக்காரர்களானார்கள். ஜேர்மனிய மக்கள் யூதர்களின் தங்குமிடங்களை தகவலறிந்து இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். சிலர் தங்கள் சொந்த முயற்சியில் யூதர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டனர். ஏனையோர் யூதர்களை கொல்லும் கொலையாளிகள் ஆனார்கள். நாஜி ஜேர்மனியிலும் பிற இடங்களிலும் யூதர்களுக்கு எதிரான துன்புறுத்தல் அல்லது வன்முறையைக் கண்டும் காணாத பார்வையாளர்களாகவே பலரும் இருந்தனர். அண்டை வீட்டார், வகுப்புத் தோழர்கள் மற்றும் சக பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கொடுமைப்பட்டுச் சித்திவதைப்படுவதை பெரும்பாலானோர் பேசத் தவறிவிட்டனர்.

ஆனால் இன்றைக்குப் பலம் வாய்ந்த இஸ்ரேலின் ஒரு யூதர் வதைபட்டால் கூட கண்ணீர் வடித்துக் கலங்குவதாகச் சொல்கின்றார்கள் ஜேர்மானியர்கள். அதுமட்டுமன்றி இஸ்ரவேலரே உலகை மீட்கும் உன்னதப்பாட்டின் ஞானிகள் என்கின்றார்கள்.

1938-ம் ஆண்டு நவம்பர் 10-ம் திகதி அன்று ஜேர்மானிய தூதரகத்தைச் சேர்ந்த ஒருவன் யூதர் ஒருவரால் கொல்லப்பட்டதற்காக பல்லாயிரக்கணக்கான யூதர்களுக்கு சொந்தமான கடைகள், வீடுகள், கட்டடங்கள் மற்றும் ஜெப ஆலயங்களின் ஜன்னல்கள் அடித்து நொருக்கப்பட்டன. தெருக்களில் சிதறி உடைந்த கண்ணாடிக் குவியல்கள் மனிதக் குருதியில் நனைந்து கிறிஸ்ரலாய் மின்னியது. இந்தக் கொடிய நாள் கிறிஸ்டல் நாக்ட் அதாவது ‘கிரிஸ்டல் நைட்’ என்று உலக வரலாற்றில் பொறிக்கப் பட்டிருக்கின்றது.

இரவு நேரத்தில் பேர்லின் தெருக்களில் நடந்த கொடுமையின் கொடூரத்தை அன்றைய நாளில் 10 வயதுச் சிறுமியாக இருந்து உயிர் தப்பிய யூதச் சிறுமியான ரூத் பின்வருமாறு நினைவு கூர்ந்திருந்தார். ‘மிகுந்த நம்பிக்கையோடு என் தந்தையின் கையைப் பிடித்து ஓடிய நான் அவரது கையை விட்டு ஒற்றை நாளில் அனாதையாக்கப்பட்டேன். கண்ணாடித் துண்டுகளினுள்ளும், இறந்து கிடந்த யூத உடல்களிலும், இரத்தச் சேற்றினுள்ளும் காலிடற ஓடினேன். நட்சத்திரக் குறியைக் கேலியாக்கி ‘யூதச் சுவையின்’ அதாவது ‘யூதப் பன்றிகள்’ என எழுதிக் கோசமிட்டார்கள். நான் அங்கே அந்தக் கொடூரங்களைப் பயத்தோடு பார்க்கின்ற வேளை வான் மேகங்களூடாக, என் தந்தை என்னைக் காக்க வருவார் என்றே நினைத்தேன். அது மட்டுமே எனக்கிருக்கும் ஓர் ஆன்ம திருப்தி’ என நாசிகளின் கொடூரத்தை அந்தப் பிஞ்சு இருதயம் அன்று பதிவாக்கியிருந்தது.

மோசே எழுதிய பத்துக் கட்டளைகளை யூதர்கள் விசுவாசிப்பது என்பது உலகத்தின் மிகப் பெரிய அநீதியா? தன் கழுத்து நட்சத்திரத்தை அறுத்தெறிந்து விட்டு கிறிஸ்துவத்திற்கு அவளை மதம் மாற்றியவர்களிடம் அவள் கேட்ட அந்தக் கேள்விக்கு யாரிடமும் இற்றைவரை பதிலில்லை.

கடவுளை நேசித்த யூத மக்களை, தானும் கடவுளை நேசிப்பதாக கூறி கடவுளின் சித்தப்படியே நான் செயல்படுகிறேன். காட்டிக் கொடுக்கின்ற யூதர்களைக் கொல்வதன் மூலம் கடவுளின் விருப்பத்தை நான் நிறைவேற்றுகின்றேன். அதனால் ஜேர்மனியில் மட்டுமல்ல உலகெங்கும் யூதர் அழியும் நாளே புனிதமான கடவுளின் நாளென்றவர் ஹிட்லர். அதனால் தான் வேரோடும், வேரடி மண்ணோடும் பதைக்கப் பதைக்க யூதர்களை இலட்சக் கணக்கில் கொன்று குவித்தார் ஹிட்லர். தானும், தன் ஜேர்மானியப் படை வீரர்களும் கட்டியிருந்த இடுப்புப் பட்டியான பெல்டில் ‘கடவுள் நம்முடன்’ (Gott mit uns) என்று எப்போதும் எழுதி வைத்திருந்தவர் அவர்.

ஜேர்மனி கபளீகரம் செய்த தெற்கு போலந்தில் உருவாக்கப்பட்டிருந்த Auschwitz வதை முகாம் உலக வரலாற்றில் மிகப் பயங்கரமான கொடூரக் கொலைக்களம். ஜேர்மனியின் பல்வேறு இடங்களில் இருந்தும் பிடிபட்ட யூதர்களை கூட்ஸ் வண்டிகளில் இறைச்சிக்கு அறுக்கப்படும் விலங்குகளை ஏற்றுவது போல் ஏற்றி அங்கு கொண்டு சென்று கொன்றார்கள். அப்படிக் கொண்டு வரப்பட்ட யூதர்களில் சிலர் வரும் வழியில் உணவின்றியும் மூச்சு திணறியும் இறந்தனர். அப்படி பாதியில் இறந்தவர்கள், நரகமென்னும் Auschwitz கொலைக்களக் கொடூரத்திலிருந்து தப்பித்து வீடுபேறடைந்த விதியுள்ளவர்களாக வரலாறு பேசுகிறது.

முகாமிற்கு வந்த யூதர்களின் அடையாளமாக அவர்கள் கையில் எண்கள் கொண்டு பச்சை குத்தப்பட்டது. அப்படி எண் குத்தபடாதவர்கள் அன்றே கொல்லப்படக் கூடியவர்கள். அவர்களை வைத்து ஹிட்லரின் படை அனைத்து வேலை-களை யும் வாங்கியது. மொட்டைத் தலை, உடுத்த கிழிந்த ஆடை, பசிக்கு பத்தாத உணவு, சுகாதாரமற்ற இருப்பிடம், மலங்கலந்த நீர் என அணு அணுவாக அந்த மக்களை அங்கு வதைத்தனர். கன்னிப் பெண்களை கூட்டாக சேர்ந்து பலாத்காரம் செய்து கொன்று விடுவது தினசரி நடைமுறையாக இருந்தது. கர்ப்பிணிப் பெண்களுக்கு கரு கலைக்கப்பட்டு வேலை வாங்கப்பட்டு அவர்களும் கொல்லப்பட்டனர்.

தினமும் அங்கு வரவழைக்கப்பட்டு சித்திரவதை அனுபவிக்க தயாராகும் யூதர்களால், அந்த முகாம் நிரம்பி வழிந்த வேளை அவர்களை கொத்து கொத்தாக கொன்றுவிட ஹிட்லரால், ஆணையிடப்படுகின்றது. அதன்படி பல லட்சக்கணக்கானோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சுட்டு கொல்லுதல் முறையானது தோட்டாக்களின் விலை, நேர விரையம் மற்றும் சலிப்பு என்பதால் அதற்கு மாற்றாக சிந்தித்து உருவாக்கப்பட்டது தான் Gas Chamber எனப்படும் விசவாயுக் கொலையறைகள்.

1945-ம் ஆண்டு சோவியத் யூனியன் படை Auschwitz-ஐ கைப்பற்றும் வரை 5 ஆண்டுகள் தொடர்ந்து இயங்கிய இந்த பெரிய வதை முகாமில் கொல்லப்பட்ட யூதர்களின் மொத்த எண்ணிக்கை 1.1 மில்லியனுக்குமதிகம். இரண்டாம்

உலகப்போரில், போர் புரிந்த நாடுகளுக்கிடையே இறந்த வர்களின் எண்ணிக்கையை விட Auschwitz Gas Chamber-இல் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தான் அதிகம்.

இப்படித்தான் ஈழ நாட்டின் முள்ளிவாய்க்கால் பெருந்தெரு வில் சுதந்திரத்திற்காகப் போராடிய தமிழர்களை கொடூர இர சாயனக் குண்டுகளாலும். கொத்துக் குண்டுகளாலும் கொடூர மாக கொன்றழித்து எஞ்சியோரை தோற்றுப் போனாவர்களா கப் பிரகடனப்படுத்தி, நிர்வாணமாக்கி, வரிசையில் வரச் செய்து கொலை முகாம்களுக்குள் அடைத்து, பதைக்கப் பதைக்க வன்கொடுமையில் கொன்று தின்றது இலங்கையின் இனவாத அரசு. இடைநடுவே தெருவில் இறந்து போயிருந் தால் அவமானத்தோடு அன்னிய முகாமிற்குள் நாம் அழிந்தி ருக்கத் தேவையில்லை என்ற ஆதங்க அழுகுரல்களோடு மானத் தமிழர் பலர் மறைந்து போனார்கள்.

யூதர்களைப் போலவே ஈழத்தமிழர்களை ஒட்டுமொத்தமாக உலக வரலாற்றிலிருந்து அழித்துவிட சிங்கள அரசு தமிழர் களை அழித்தும், அகதியாக்கியும் காலத்திற்குக் காலம் இனப் படுகொலையை இற்றைவரை செய்தே வருகின்றது.

1958 இனக் கலவரத்துக்கு பின்பு இலங்கையில் இடம்பெற்ற மிகப் பாரதூரமான தமிழர் மீதான இனவெறிப் போர் 1977 இனக்கலவரமாகும். 1977 ஓகஸ்ட் 15-16-ம் திகதிகளிலிருந்து இரண்டு வார காலங்களுக்கு நீண்ட இந்தக் கலவரத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்த தமிழர்கள் உயிரி ழப்புக்கள், சொத்திழப்புகள் என பாரதூரமான பாதிப்புக்க ளைச் சந்தித்தனர். போர் என்றால் போர் சமாதானமென்றா லும் போர் என்று பிரகடனப்படுத்திய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனேயின் அனுசரணையோடு 75000-ற்குமதிகமான தமிழர்கள் அகதியாக்கப்பட்டார்கள். பல நூற்றுக் கணக்கா னோர் கொன்றொழிக்கப்பட்டார்கள். அந்த வேளை கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்தவர்க ளான என் சகோதரர் கணபதிப்பிள்ளையவர்களும், நண்பர் செல்வராஜா அவர்களும் தமிழர்கள் என்பதற்காகப் படு கோரமாகத் தாக்கப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பியிருந் தார்கள். செல்வராஜா அவர்களின் முதுகில் சிங்கள காடை யர்கள் உதய சூரியன் சின்னத்தை கத்தியால் குத்திக் கிழித்து வரைந்து தங்களின் கொடூர வன்மத்தை தமிழர் முது கில் பதிவாக்கியிருந்தார்கள். இவை நான் என் சிறு வயதில் கண்டவை.

1977 என்பது தமிழ் இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய திட்டமிட்ட இனவழிப்புத் தாக்குதல். தமது உறவு களை, வீடுகளை, வியாபார ஸ்தலங்களை தாக்குதல்க ளுக்கு இரையாக்கிவிட்டு நிர்க்கதியாக நின்ற இந்தத் தமிழ் மக்கள் கொழும்பில் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட் டார்கள். பின்னர் கப்பலில் ஏற்றப்பட்டு அனுப்பி வைக்கப் பட்டார்கள். இலங்கை ஒரு நாடு, ஒரு தேசம் என்று இன் றைக்கும் மார் தட்டுபவர்கள், வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்க மறுப்பவர்கள் இவர்களை எதற்காக கப்பலில் ஏற்றி வடக்கே அனுப்பினார்கள் என்பதற்கு இன்னமும் வகையறிந்திலர்.

அருளரின் 'லங்காராணி' 1977 இனவெறியின் தரிசனமாகும்.

1977-ம் ஆண்டு இனக் கலவரம் தோட்டத் தொழிலாளர்களை எவ்வாறு பாதித்தது என்பதனையும், இலங்கையில் 1939, 1956, 1958, 1961, 1974, 1977, 1979, 1981, 1983, 2009 என தொடர்ச்சியாக நடந்தேறிய துரோகப் பெரும் இனவெறிச் சூறையாடல்களினையும் ஆவணப் பதிவுகளாக தினக்குரல், தாய்வீடு உள்ளிட்ட உலகின் முன்னணி ஊடகங்களில் தொடர்ந்து வெளிப்படுத்தி வருபவர் எழுத்தாளர் சரவணன். இனவழிப்பின் மூலம் தமிழர்களுக்கு பாடம் கற்பிக்க வேண் டும், அவர்களை இனித் தலைதூக்க விடக்கூடாது என்கிற, பயத்தையும் பீதியையும் அவர்களுக்கு தரவேண்டும் என்கிற கொடூர வெறியே ஆதிக்கச் சிங்கள இனவெறியரசின் கொள்கை என்பதை ஆணித்தரமாக துணிவோடு சொல்லும் எழுத்தாளர் அவர்.

இன்னிலையில் இன்றைக்கு தோன்றியுள்ள உக்ரேனிய ரஷ் யப் போர் மூன்றாம் உலக யுத்தம் ஒன்றிற்கு வலிந்து இழுத் துச்செல்கிற பயங்கரத்தை எமக்களிக்கின்றது.

போரில்லா உலகத்துக்காகத்தான் பூமியிலுள்ள நல்ல மானி டம் நெடுங்காலமாக ஏங்கித் தவிக்கின்றது. எங்கும் போரிட் டுப் போரிட்டு பேரழிவில் துயருற்ற மானுடம், போர் வேண் டாம் என்கின்ற குரலைக் காலந்தோறும் உயர்த்தியே வந்தி ருக்கிறது. ஆனாலும், இற்றைவரை போர் நிற்கவில்லை. எத் தனை முயற்சிகள் எடுத்தாலும் இதிலிருந்து எம்மால் விடுபட முடிவதில்லை.



sithivinayagam@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272



# நூற்றாண்டு காணும் பெரியாரின் சமூக நீதிப் போராட்டம்

**- நெல்லை ஜெயசிங்**

இந்தியாவை ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலப் பகுதியில் குறிப்பாக 1920-ம் ஆண்டுகளில் திருவாங்கூர் சமஸ்தானம் அரச வம்சத்தின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளது. அதாவது இந்தியா முழுவதும் ஆங்கிலேய ஆட்சி நடந்தது. ஆனால் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மட்டும் சனாதன சட்டம் மூலம் மன்னராட்சி நடைபெறலாயிற்று. அக்காலகட்டத்தில் கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தில் வைக்கம் என்ற ஊரில் சோமநாதர் கோயில் இருந்தது. இக்கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் உயர் சமூகத்தினர் தவிர பிற சாதியினர் குறிப்பாக ஒடுக்கப்பட்டவர்கள் நடக்கக் கூடாது என்ற நடைமுறை 1925-க்கு முன் பல ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. இது போன்ற சமூக பாகுபாட்டிற்கு எதிராக 1918-ல் சட்ட சபையில் டி.கே. மாதவன் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறவில்லை. எனவே இத்தடையை தகர்த்தெறியும் நோக்கத்துடன் 1924 மார்ச் 30-ம் நாள் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இதுவே வைக்கம் போராட்டத்தின் ஆரம்பம் என வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது. சமூக ஏற்றத் தாழ்வுகளை தகர்த்தெறியவும் சமூக உணர்வுகளை வளர்க்கவும் இப்போராட்டம் வித்திட்டமையால் வரலாற்றை மாற்றி அமைத்த சமூக நீதிக்கான போராட்டம் என நூற்றாண்டு கடந்தும் நினைவு கூறப்படுகிறது.

**அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்முயற்சி:**

பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே இந்தியா முழுவதும் சமூக கொடுமைகள் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன. உயர் சமூகத்தினர் என கூறிக் கொள்வோர் வைத்ததே சட்டம் என்ற நிலை இருந்தது. கேரள மாநிலத்திலும் சனநாயகக் கொடுமைகள் உச்சத்தில் இருந்தன. உயர் சமூகத்தினர் தவிர மற்றவர்கள் குடை பிடிக்க கூடாது; கிணறு, குளம், சாலை, சந்தை ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது, ஆண்கள் யாரும் மீசை, தாடி வளர்க்கக் கூடாது, அதையும் மீறி வளர்க்க முற்பட்டால் தனியாக அதற்கு வரி கட்ட வேண்டும் என்ற கொடிய நிலை இருந்தது. இக்கொடுமைகளை முடிவிற்கு கொண்டு வருவதன் முதற் கட்டமாக தொடங்கப்பட்டதே பொதுப் பாதையில் அனைவரும் நடந்து செல்வதற்கான போராட்டமாகும்.

ஆங்கில ஆட்சிக்கு எதிராக தேசமெங்கும் விடுதலைக்காக எழுச்சி மிகு போராட்டம் நடந்து கொண்டிருந்த போது, கேரள முன்னணி காங்கிரஸ் தலைவர்களாக இருந்த கே.பி. கேசவமேனன், ஜோர்ஜ் ஜோசப், ஈழவர் தலைவர் டி.கே.மாதவன், கே. கேளப்பன் ஒருங்கிணைந்து வைக்கம் என்ற சிறிய ஊரில் சிவன் கோயிலைச் சுற்றியிருந்த தெருக்களில் நலிவுற்ற மக்கள் நடப்பதற்கான உரிமை கோரி போராட்டத்தை மக்கள் ஆதரவுடன் ஆரம்பித்தனர். போராட்டக் காரர்களை சமஸ்தான அதிகாரிகள் காவல் துறையின் துணையுடன் தினமும் கைது செய்தனர்.

காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி இப்போராட்டத்தை தொடங்கியபோது தமிழ் நாட்டில் இருந்து ராஜாஜி, டாக்டர் வரதராஜுலு போன்ற உயர் ஜாதி காங்கிரஸ் தலைவர்களும் களத்திற்கு வந்து ஆதரவு தெரிவித்தனர். போராட்டத்தை தொடங்கிய முக்கியமான காங்கிரஸ் தலைவர்களை ஆட்சியாளர்கள் கைதுசெய்தனர். இந்நிலையில் போராட்டத்தை தொடர்ந்து நடத்திச் செல்ல தலைவர்கள் தேவைப்பட்டனர். அப்போது அருகாமை மாநிலமான தமிழ்நாட்டில் காங்கிரஸ் தலைவராக இருந்த ஈ.வே.ரா பெரியார் போராட்டத்தை தொடர்ந்து நடத்த அழைக்கப்பட்டார்.

**பெரியார் தலைமையில் போராட்டம்:**

சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக வாழ்நாள் முழுவதும் குரல் கொடுத்து வந்த பெரியார் காங்கிரஸ் தலைமையின் அழைப்பை ஏற்று வைக்கம் வந்து போராட்டத்தை வழி நடத்த தொடங்கினார். எழுத்தாளர் பாமரன் கூறுவதைப் போன்று அறிவு முதிர்ச்சியும் பெருந்தன்மையும் அனுபவமும் உற்சாகமும் நாட்டுப் பற்றும் ஒருசேரக் கொண்டவர் பெரியார் என்பதால், அவரின் வருகை போராட்டத்திற்கு புதிய உற்சாகத்தை அளித்தது. அவரின் பேச்சு திருவிதாங்கூர் மக்களை ஈர்ப்பதாக இருந்தது. பெரியாருக்கும் போராட்டத்திற்கும் ஆதரவாக தமிழ் நாட்டில் இருந்தும் தொண்டர்கள் வைக்கம் சென்றனர். கோவிலை சுற்றியுள்ள ஊர்களில் பெரியாரின் வலிமையான பரப்புரைகளால் போராட்டத்திற்கு ஆதரவு பெருகத் தொடங்கியது. பேசுவதற்கு மட்டுமல்லாமல் கோட்டயம், கொல்லம் மாவட்டங்களுக்கு பிரவேசிக்கவும் தடை போடப்பட்டது. அவற்றை கண்டு கொள்ளாமல் பெரியார் தடைகளை மீறி உரையாற்றினார். சனாதன வாதிகள், உயர் சாதியினர் போராட்டத்தை முறியடிக்க போராட்டக்கா

ரர்கள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தினர். சத்தியாகிரக போராட்டம் நடத்தியவரகளின் கண்களில் சனாதன வாதிகள் சுண்ணாம்பைப் பூசி போராட்டத்தை தடுக்க முயன்றனர்.

வைக்கம் ஊரில் கோவில் தெருக்களில் நடந்தவர்கள் தினமும் கைது செய்யப்பட்டு வந்த நிலையில் பெரியாரையும் கைது செய்து அருவிக்குத்தி சிறையில் அடைத்தனர். போராட்டம் நின்று விடக் கூடாது என்று நினைத்த பெரியார் நாகம்மையாரை போராட்டக் களத்திற்கு கொண்டு வரலானார். கொழுத்தும் வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் நாகம்மையார் பெண்களை திரட்டி போராட்டத்தை தொடர்ந்தார். இந்நிலையில் விடுதலையாகி வெளிவந்த பெரியார் மீண்டும் போராட்டத்தை தொடர்ந்தார். மாற்று மதத்தவர்கள் போராட்டக்காரர்களுக்கு உணவு அளித்து பல்வேறு வகையில் உறுதுணையாக இருந்தனர்.

போராட்டம் தீவிரம் அடைவதைக் கண்ட ஆட்சியாளர்கள் இரண்டாம் முறையாக மீண்டும் பெரியாரை கைது செய்தனர். இம்முறை கடுங்காவல் தண்டனைக்கு உள்ளான பெரியார் கை, கால்களில் விலங்கிடப்பட்டு கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டார். எனினும் போராட்டம் தொடர்ந்தது. சில நாட்களில் விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான பெரியார் போராட்டத்தை தொடராமல் ஈரோடு செல்வார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பெரியார் சற்றும் சளைக்காமல் போராடக் களத்திற்கே மீண்டும் வந்து அறவழிப் போராட்டத்தை தொடர்ந்தார். வைக்கம் போராட்டம் குறித்து முதலில் ஆங்கிலத்தில் நூல் எழுதிய டி.கே. ரவீந்திரன் அவர்கள் 'போராட்டக் களத்திற்கு பெரியார் வந்த பிறகுதான் இயக்கத்திற்கு ஒரு புதிய உயிர் கிடைத்தது' என்கிறார். கேரளப் பேராசிரியர் கே.கே. குசுமான் 'ஒடுக்கப்பட்டவர்களின் தலைவராக இந்தியா முழுவதும் அறிமுகமாகி இருந்த பெரியார் தன் வெடிப்புறப் பேசும் திறனால் இக்கட்டான நேரத்தில் போராட்டத்தை வளர்த்தெடுத்தார்' என குறிப்பிட்டுள்ளார்.

ஒடுக்கப்பட்டவர்கள் சமத்துவ உரிமையைப் பெற முதற்படியாக அமைந்த வைக்கம் போராட்டம் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக... 604 நாட்கள் போராட்டம் நடந்தது. பெரியார் 74 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். போராட்டம் தொடங்கி ஒரு வருடம் கடந்த பின்... மகாத்மா காந்தி 1925 மார்ச் 9-ம் நாள் வைக்கம் வரலானார். திருவிதாங்கூர் ராஜா மரணம் அடைந்த நிலையில் மகாத்மா காந்தி ராணியிடம் பேசினார். காவல் துறையிடம் பேசினார். வைதீக பிராமணர்களிடமும் கடுமையாக பேசினார். ஆட்சியாளர்களுடனான மகாத்மா காந்தியின் பேச்சுவார்த்தையில் உடனடியாக பயன் கிடைக்காத போதும் 8 மாதங்கள் கழித்து 1925 நவம்பர் 23 அளவில் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

இப்போராட்டத்தின் சிறப்பை உணர்ந்த இன்றைய கேரள இடதுசாரி அரசு, 2023 ஏப்பிரல் 01-ம் நாள் முதல், தொடர்ந்து 603 நாட்கள் மாநிலம் எங்கும் வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவை கொண்டாட முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் கேரள மாநில முதல்வர் தோழர் பிணராய் விஜயன் 'மறுமலர்ச்சி நாயகர் தந்தை பெரியார் வைக்கம் போராட்டத்தை முன்நின்று நடத்தியது வரலாற்று சிறப்பு மிக்கதாகும்' என புகழாரம் சூட்டியுள்ளார்.

போராட்டம் முடிந்து நடைபெற்ற வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் உரையாற்றிய பெரியார் 'தெருவில் நிரூபித்த சுதந்திரத்தைக் கோவிலுக்குள்ளும் நிரூபிக்க வேண்டியது மனிதர் கடமை' என்றார். 'வைக்கம் போராட்டம்தான் மகர் போராட்டத்தை நடத்துவதற்கு எனக்கு தூண்டுதலாக உந்து சக்தியாக அமைந்திருந்தது' என அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். சமூக மாற்றங்களுக்கு வித்திட்ட வைக்கம் போராட்டமானது கோயில் நுழைவுப் போராட்டங்கள், தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்கள் என அனைத்திற்கும் முன்னோடியாக விளங்கியது எனலாம்.

தமிழ் நாட்டில் அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகர் ஆவதற்கும் கேரளத்தில் ஒரு தலித் மேல் சாந்தி ஆவதற்கும் தொடக்கப் புள்ளி வைக்கம் போராட்டத்தில் இருந்தே தொடங்கியது எனலாம். உயர் சாதியினரின் ஆதிக்கத்தை தட்டிக் கேட்பதற்கான திறவுகோல் வைக்கம் போராட்டம் ஆகும். எனவேதான் தமிழ் நாட்டின் முதலமைச்சர் திரு.- ஸ்டாலின் அவர்கள் 'மீண்டும் சனாதன, வர்ணாசிரம, சாதியவாத, மதவாத சக்திகள் கோலோச்ச நினைக்கும் காலத்தில் நமக்கு இந்தக் கடமை அதிகம் இருக்கிறது. இதற்கு பெரியார் என்ற பெருவிளக்கு நமக்கு பயன்படும். அதற்கு வைக்கம் போராட்டம் கலங்கரை விளக்காக அமையும்' என அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். பின் தங்கிய மக்களுக்கு 69% இட ஒதுக்கீட்டை பெற்றுத் தருவதில் அதன் அடித்தளமாக இருந்தது பெரியாரின் கொள்கைகள் என உறுதிபடக் கூறும் முதல்வர், வைக்கம் விழாவை தேசிய விழாவாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் நாட்டில் வைக்கம் என்றால் அது சமூக நீதியின் அடையாளமாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக நம் மண்ணில் மிக தந்திரமாக புகுத்தப்பட்ட சனாதனக் கொடுமைகளில் இருந்து இந்த சமூகம் மீண்டெழ அடித்தளமிட்ட வைக்கம் போராட்ட வரலாற்றை இன்றைய இளம் தலைமுறையினரிடம் எடுத்துரைத்து நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டிய கடமை உணர்வு சமூக சீர்திருத்த எண்ணம் கொண்ட அனைவரிடமும் இருக்க வேண்டும். வைக்கம் போராட்டம் நடந்து 100 வருடங்கள் கடந்துவிட்டன. ஆதிக்க மனப்பான்மை சற்று தளர்ந்திருக்கிறதேயன்றி முற்றாக நீங்கவில்லை. சாதிய மனநிலை மாறவில்லை. தீண்டாமையின் வடிவங்கள் மாறியிருக்கிறதேயன்றி முற்றாக ஒழிய வில்லை. பல்லாயிரம் கோவில்களில் தலித் மக்கள் இன்றும் உள் நுழைந்து வழிபட முடியாத நிலை இருக்கிறது. திரையரங்குகளில், நவீன பிரமாண்டமான விற்பனை நிலையங்களில் இன்றும் பழங்குடியின மக்கள் உள்ளே அனுமதிக்க மறுக்கின்ற ஆதிக்க மனப்பான்மை காணப்படுகிறது. எனவே இக்கொடுமைகளுக்கு எதிரான போராட்டம் என்பது மிக நீண்ட பயணமாகும்.



jeyasingh@thaiveedu.com

# ஏட்டில் எழுதிவைத்தார் - அங்காதிபாதம் 400

- பால. சிவகடாட்சம்

**திருக்கோணமலை ஈசனை முதலில் போற்றித் தொடங்கும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலான அங்காதிபாதம் 400 என்னும் நூலுக்குரிய பாடல்கள் 124 மட்டுமே எமக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகளில் உள்ளன. எனினும், நூலினை முழுமைப்படுத்த எண்ணி இந்நூலினைப் பெரிதும் ஒத்திருப்பதும், பரராசசேகரத்தைச் சார்ந்ததாக அறியப்படுவதும், 1936-ம் ஆண்டு ஐ. பொன்னையா என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதும், இன்றுவரை உரை எழுதப்படாமலும் இருக்கும் அங்காதிபாதம் என்னும் பிறிதொரு நூலில் இருந்து மீதிப் பாடல்கள் பெறப்பட்டு உரையுடன் இங்கு தரப்படுகின்றன.**

## வாதத்தாலுண்டாகும் நோய்கள்

*செய்யவே வாதத்தால் வருநோய் சொல்வேன்*
*சிக்கிமல சலங்கடுத்தல் உளைதல் குத்தல்*
*நையவே கண்கறுத்துக் கண்ணீர் வீழ்ந்து*
*நாச்சிதறி வெடித்துவாய் திக்கிப் பேசல்*
*மெய்தடித்து மிகநோதல் பொருமல் கொள்ளல்*
*விந்துவலி தான் குறைந்து மந்த மாதல்*
*பையவே குளிர்ந்திருத்த லான வெல்லாம்*
*பலவாகக் கண்டறிந்து சிந்திப் பாயே* - 199

வாதத்தால் வருகின்ற நோய்கள் பற்றிக் கூறுவேன். மலச்சிக்கல், சலம் அடைத்தல், சலக்கடுப்பு, வயிற்றுளைவு, மலம் சலம் தொடர்பான குத்துவலி, கண்கள் கறுத்துக் கண்ணீர் விழுதல், நாக்கு வெடித்து வாய் திக்கிப் பேசுதல், உடம்பு தடித்து மிகுந்த நோவு ஏற்படல், விந்தின் வலிமைகுறைந்து மெதுவாக அசைதல், உடல் மெல்லக் குளிர்ந்திருத்தல் ஆகிய குணங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்து வாதத்தால் ஏற்படும் நோய்களை அறிந்து கொள்வாய்.

## பித்தத்தாலுண்டாகும் நோய்கள்

*சிந்திப்பாய் பித்தத்தால் வருநோ யைக்கேள்*
*தேகமெலாம் வெச்சென்று சிரசிற் சூடாய்ச்*
*சந்திப்பாய் நாக்குப்பல் வரண்டு கைத்துத்*
*தலைசுழன்று கண்ணெரிந்து தாகஞ் செய்யும்*
*தொந்திப்பாய்க் குழறிமிகப் பிதற்றிப் பேசும்*
*சோருமல சலஞ்சிவந்து மஞ்ச ணிக்கும்*
*வந்திப்பாய்ச் சத்திசெய்து துயிலா தூணு*
*மறந்து திரிந் திடும்பித்தச் செயலீ தாமே* - 200

பித்தத்தால் வரும் நோய் பற்றிக் கூறுவேன். கவனித்துக் கேள். உடம்பெல்லாம் உஷ்ணமாகி தலை சூடாகி நாக்குப் பல் என்பன வரண்டு கசந்து தலை சுற்றி கண் எரிந்து தாகமாகி தடுமாற்றத்துடன் பிதற்றிப் பேசும். மலசலம் சிவந்து அல்லது மஞ்சள் நிறமடையும். சத்தி எடுக்கும், நித்திரை குறையும். உண்ணவும் மறந்து திரியும். பித்தம் அதிகரித்தன் விளைவுகள் இவையாகும்.

## சிலேற்பனத்தா லுண்டாகும் நோய்கள்

*செயலான சேற்பனத்தி னோயைக் கேளும்*
*செப்புடம்பு நாக்குப்பல் வெளுத்துக் காட்டும்*
*இயலான வாயினிக்கும் வேர்வை யுண்டாம்*
*இருமல் விக்கல் கக்கல் தொய்வு மூச்சு முண்டாம்*
*மயலான மிடறுதனைக் கம்மிப் பேசும்*
*வாயூறி வழுவழுக்கு மலச லாதி*
*பயில்வாக வெளுத்து நுரைத் துடனே வீழும்*
*பரீட்சிப்பாய் சேற்பனத்தின் பாங்கைத் தானே* - 201

சிலேத்துமத்தினால் ஏற்படும் நோய் பற்றிக் கேட்பாயாக. உடம்பு, நாக்கு, பல் என்பன வெளுப்படையும். வாய் இனிக்கும், வியர்வை உண்டாகும். இருமல், விக்கல், கக்கல், தொய்வு, மூச்சிரைப்பு என்பன எற்படும். குரல் கம்மிப் பேசும். வாயில் எச்சில் ஊறி வழுவழுப்பாக இருக்கும். மலசலம் வெளுப்படைந்து நுரையுடன் கழியும். சிலேத்துமத்தின் இக்குணங்களைப் பரிசோதித்துப் பார்த்திடுவாய்.

## வாதம் மீறினால் குணம்

*பாங்காக வாதந்தான் மீறு மாகில்*
*பருவயிறு சுவாதமுடன் குக்துக் கோழை*
*நீங்காத பிடிப்புளைவு வாயு தொந்தம்*
*நீர்வெடித்துப் பாய்தல்மந்தம் விடமிப் பாதல்*
*தூங்குசன்னி வாதசுர மதனிற் தோடந்*
*தொகுத்தகிரா ணிக்கழிச்ச லுதர தோடம்*
*வாங்குபல வலிகுளிர்ச்சி குன்ம வாத*
*மலசலங்கட் டிடல்வாத வந்திப் பாமே* - 202

வாதம் அளவுக்கு மீறினால் வயிறு வீங்கி சுவாசத்துடன் குத்து, சளி, வாதப்பிடிப்பு, வாய்வுத்தொல்லை, நீர் வெடித்துப் பாய்தல், மாந்தம், சன்னிவாதசுரம், வயிற்றோட்டம், வயிற்றில் தோஷம், குன்மவாதம், மலசலம் கட்டுதல் என்பன தொடர்ந்து காணப்படும்.

## பித்தம் மீறினால் குணம்

*வந்தித்த பித்தமதி கரித்து நின்றால்*
*வாயுவுடன் வெப்பிரத்த ரோகஞ் சூலை*
*தொந்தித்த குன்மமுடன் குடனோய் மிக்க*
*துயர்புரி மூளையிற்சூடு சிரவ ரட்சி*
*நிந்தித்துப் பேசிடுத லாடல் பாடல்*
*நித்திரையற்றுப்பயந்து கோபங் கொள்ளல்*
*சந்தித்த காமாலை பலவும் பித்தஞ்*
*சாதிக்கு மதிவதனத் தைய லாளே* - 203

பித்தம் அளவுக்கு மீறி அதிகரித்து நின்றால் வாய்வுடன் வெப்பு நோய், பித்த ரோகம், சூலைநோயுடன் தொடர்ந்திருக்கும் குன்மம், குடல்நோய், மிக்க துன்பத்தைக் கொடுக்கும் மூளைச்சூடு, தலைவரட்சி, பிறரை நிந்தித்துப் பேசுதல், ஆடுதல், பாடுதல், நித்திரை இல்லாது பயப்படல், கோபப்படல் மற்றும் காமாலை உட்படப் பலநோய்களுக்கு உட்படுத்தும் என்பதை மதிமுகப் பெண்ணே அறிந்து கொள்.

## சிலேற்பனம் மீறினால் குணம்

*தையலே சிலேற்பனந்தான் மீறி நின்றாற்*
*சத்திவிக்கல் இளைப்பிருமல் சயமே யாவி*
*உய்யலிலா வுளை மாந்தை வரட்சி வெப்போ*
*டுண்மூச்சுத் தொய்வுமுட்டுக் கம்மிப் பேசல்*
*பையவுடன் மெலிந்தசனஞ் சிறுத்துக் காட்டல்*
*பலகாலும் வேர்வைகொளல் நெஞ்ச டைத்தல்*
*நையமிக வெலும்புதனைப் பற்றி நாளு*
*நலமிலாப் பலபிணிகள் நண்ணும் பாரே* - 204

பெண்ணே! சிலேத்துமம் அளவுக்கு மீறினால் சத்தி, விக்கல், இளைப்பு, இருமல், காசநோய், உயிருக்கு ஆபத்தான உளமாந்தை வரட்சி, வெப்பு, உள்மூச்சு, தொய்வு, முட்டு, குரற் கம்மிப் பேசுதல், உடல்மெலிவு, போசனம் குறைதல், பலமுறையும் வேர்த்துக்கொட்டுதல், நெஞ்சடைத்தல், எலும்பைப் பற்றிய நோய்களுடன் கெட்ட பலநோய்கள் சேரும் பார்த்திடுவாய்.

## சேர்க்கையின் குணம்

## வாத பித்த சேர்க்கை

*நண்ணுகின்ற வாதமிரண் டொன்று பித்தம்*
*நலமாகத் தொந்தித்தாற் றலைகனத்துத்*
*திண்ணமதா யுடம்பெங்கும் குத்தி நோவாம்*
*செமியாமல் வயிறூதிப் பொருமிக் கொள்ளும்*
*கண்ணதனில் துயிலுண்டாய்த் தலை நீர் கொண்டு*
*கால்கைபொருத் துகள் மிகவு முளைவுண் டாகி*
*ஒண்ணு தலார் போகத்தில் விருப்பமாகும்*
*உண்மையிது வென வாராய்ந் துறுதி காணே* - 205

வாதம் இரண்டு பங்கும் பித்தம் ஒன்றுமாகச் சேர்ந்து நின்றால் தலை கனத்து உடம்பெங்கும் குத்தி நோகும். உணவு செமிக்காமல் வயிறூதிப் பொருமல் உண்டாகும். தலையில் நீர் கோர்த்துக் கால் கை மூட்டுக்களில் மிகுந்த உளைவு தோன்றும். பெண்போகத்தில் விருப்பம் உண்டாகும். இக்குணங்கள் உண்மையாக உள்ளனவா என்பதை ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்வாய்.

## பித்தவாத தொந்தம்

*உறுதியாம் பித்தமிரண் டொன்று வாதம்*
*ஓடியே தொந்திக்கிற் பிடரி நொந்து*
*வெறிதாகச் சிரம்வரண்டு குத்துண் டாகி*
*விழிகளிரண்டும் பெருக்கக் கெரிப்ப தாகும்*
*வறிதாகச் செவியிரைந்து விறைத்து நொந்து*
*வலியவுடம் பெங்குமே தின வுண் டாகும்*
*அறிவாயிக் குணம்பித்த வாத மென்றே*
*அதிமதுரச் செழுங்கனிவா யழகார் மானே* - 206

பித்தம் இரண்டு மடங்கும் வாதம் ஒன்றுமாகச் சேர்ந்தால் பிடரி நொந்து, தலை வரட்சியடைந்து, தலைக்குத்து ஏற்படும். கண்கள் இரண்டும் கரித்து, காதிரைச்சல் ஏற்படும். விறைத்து நொந்து உடலெங்கும் அரிப்பு உண்டாகும். இனிமையான செங்கனிவாய்ப் பெண்ணே இக்குணங்கள் கண்டால் இவை பித்தவாதத்தின் குணங்கள் என்று அறிந்து கொள்வாய்.

## சிலேற்பனவாத தொந்தம்

*அழகான சேற்பமிரண் டொன்று வாதம்*
*அடுத்திடுகி லதிகமாய்ப் பசியுண் டாகும்*
*விழைவாகப் விளைப்பதுவு மதிக முண்டாம்*
*மெய்யெங்கு மசமசப்பாய்த் தினவு காணும்*
*குழைவாக நீர்த்தாகந் தானுண் டாகும்*
*கூறியநா வழுவழுத்துக் குரலுங் கம்மும்*
*தழைவான மிடறு புகைந் திருக்கு மாகிற்*
*சார்ந்திடுசேற் பன வாதங் கண்டி டாயே* - 207

சிலேத்துமம் இரண்டு பங்கும் வாதம் ஒன்றுமாகச் சேர்த்திடுமாகில் அதிக பசியுண்டாகும். தொய்வுக்குணங்களும் அதிகமாக ஏற்படும். உடம்பெங்கும் சொறியும் அரிப்பும் தோன்றும். தண்ணீர்த்தாகம் ஏற்படும். நாக்கு வழுவழுத்துக் குரலும் கம்மும். தொண்டையில் புகைச்சல் காணப்படும். இக்குணங்கள் சிலேத்தும வாதச் சேர்க்கையின் குணங்கள் என்பதை அறிந்துகொள்வாய்.

## சிலேற்பனப் பித்த தொந்தம்

*கண்டிடுவாய் சேற்பமிரண் டொன்று பித்தம்*
*கலந்தோடிற் சிரமதிகங் கனத்து நோவாம்*
*உண்டவசனங்களெலாஞ் செரியா தாகும்*
*உற்றுவிழி மூக்குகளாற் றண்ணீர் பாயும்*
*மண்டியெழுஞ் சன்னிதோ டங்கள் கூடும்*
*வாய்கசக்கு முடன் முழுதுங் குளிரே காணும்*
*வண்டுளக்கி மதுவுண்ணுங் கருமென் கூந்தல்*
*மடமானே சேற்பபித்த மதித்தி டாயே* - 208

சிலேத்துமம் இரண்டு பங்கும் பித்தம் ஒன்றுமாகக் கலந்து நாடி ஓடினால் தலைப்பாரம் மிகுந்து நோவுண்டாக்கும். உண்ட உணவெல்லாம் சமிபாடு அடையாது. கண்கள் மூக்கில் இருந்து நீர் சிந்தும். சன்னி தோஷங்கள் கூடும். வாய் கசந்து உடம்பு முழுவதும் குளிர்ந்து காணப்படும். வண்டு மிதித்துத் தேன் உண்ணும் மெல்லிய கருங்கூந்தலை உடையவளே! சிலேத்தும பித்தக் குறிகுணங்கள் இவற்றைக் கவனத்தில் கொள்.

## பித்த சிலேற்பனத் தொந்தம்

*மதிக்கவரும் பித்தமிரண் டொன்று சேற்பம்*
*வந்திடுகில் நாக்குமிக மதர்த்திருக்கும்*
*கதித்துவயி றதுவலிக்கு நோவுண் டாகும்*
*கடுப்பாகி நீர்சிறுத்துச் சிவந்து வீழும்*
*கொதித்துமிக நெஞ்செரித்து வாய்கைப் பாகிக்*
*கொள்ளாது தீவனந்தான் புளித்தேப் புண்டாம்*
*உதிக்குமதி யனையமுக மடமின் னானே*
*ஓது பித்த சேற்பமென வுரைத்திட்டாரே* - 209

பித்தம் இரண்டு பங்கும் சிலேத்துமம் ஒரு பங்குமாகச் சேர்ந்து வந்தால் நாக்கு மிகத்தடித்து இருக்கும். வயிற்றில் கடுமையான வலியுண்டாகும். சிறுநீர் கடுத்து அளவில் குறைந்து சிவப்பு நிறத்தில் கழியும். நெஞ்செரிவுடன் வாய் கைத்து உணவு உண்ணாது புளித்த ஏப்பம் உண்டாகும். உதிக்கும் சந்திரனை ஒத்த முகமுடைய பெண்ணே! இதுவே பித்த சிலேத்துமச் சேர்க்கை என்று கூறிவைத்தார்கள்.

### வாத சிலேற்பனத் தொந்தம்

*உரைத்திடவே வாதமிரண் டொன்று சேற்பம்*
*உற்ற முறை தான் கூடி நிற்கு மானால்*
*நிரைத்தமயிர்க் கூர்ச்சாகி மெய் குளிர்ந்து*
*நீர்த்தாக மிகவுண்டாய்ச் சோம்பலாகித்*
*திரைத்தவயி றது நொந்து மந்த மாகிச்*
*சிக்கியே நுரைத்துமலங் கழிந்து வீழும்*
*அரைத்தபரி மளச்சாந்த முலைமின் னாளே*
*வாதசேற் பன குணமென் றறிந்தி டாயே* - 210

வாதம் இரண்டு பங்கும் சிலேத்துமம் ஒன்றாகவும் கூடி நின்றால் மயிர்க்கூச்செறிந்து உடம்பு குளிர்ந்து மிகுந்த தாகம் எடுத்து சோம்பல் மிகுந்து வயிறு நொந்து மலச்சிக்கலுடன் மந்தமாகி மலம் நுரைத்துக் கழியும். வாத சிலேத்துமத்தின் குணம் இதுவென அரைத்த பரிமளச் சாந்து பூசிய மார்பகங்களை உடையவளே! அறிந்து கொள்வாய்.

### திரிதோடத் தொந்தம்

*அறிந்திடுவாய் நாடியிவை மூன்றுங் கூடில்*
*அச்சமாய்க் கண்டுங்கு மறிவு கேடாய்ச்*
*செறிந்தவுடம் புள்ளழன்று வேர்வை காணுஞ்*
*சிலீரிட்டுச் சூடாகித் தாக முண்டாம்*
*அறிந்திடுகால் கைவிறைக்குங் காத டைக்கும்*
*வலுத்தசுரந் தோடமதாய்ச் சன்னி தோன்றும்*
*பிறிந்திடா திக்குணங்கள் பலவு முண்டாய்ப்*
*பேதமுறும் பலதோடம் பேணிப் பாரே* - 211

வாத நாடி, பித்த நாடி, சிலேத்தும நாடி இம்மூன்றும் கூடினால் அளவுக்கு மீறி நித்திரை கொள்ளும், அறிவு மயங்கி உடம்பு உள்ளே வெப்பமாகி வியர்வை தோன்றும். குளிர்ந்து பின் சூடாகித் தாகம் எடுக்கும். கால்கை விறைக்கும். காது அடைக்கும். பலமான காய்ச்சலுடன் சன்னி தோன்றும். இவ்வாறான குணங்கள் ஒன்று சேர்ந்து காணப்பட்டுப் பலவிதமான தோஷங்கள் உண்டாகும்.

### வாதவுடம்பின் குணம்

*பேணாத காரியத்தின் மிகவி சாரம்*
*பெருக்கி நிற்றல் பேசாது பேசல் நாளும்*
*நாணாது பொய்யதனை மெய்ய தாக*
*நவின்றிடுதல் தீயதனில் நாட்டம் வைத்தல்*
*கோணாது கனாவதனின் மெய்வ ருந்தல்*
*குளிர்க்குடைதல் கூசிமனஞ் சலிப்புக் கொள்ளல்*
*தூணாக வேயுடம்பு பொருமிக் காட்டல்*
*தோகையே வாதவுடற் சொயமி தாமே* - 212

புகழப்படாத ஒரு காரியம் குறித்து மிகவும் கலக்கம் அடைந்து சஞ்சலப்படுதல், பேசாததெல்லாம் பேசல், எப்போதும் வெட்கமில்லாது பொய்யை மெய்யாகப் பேசுதல், தீய விடயங்களில் விருப்பம் கொள்ளுதல், குளிருக்கு அஞ்சுதல், கூச்சம் அடைந்து மனம் சலித்துக்கொள்ளுதல், உடம்பைப் பெருக்கிப் பலவானாகக் காட்டுதல். பெண்ணே! வாத உடம்பு உடையவர்களின் சுபாவம் இதுவென அறிவாய்.

### பித்தவுடம்பின் குணம்

*சொயமாக மெய்ம்மெலிதல் மலந்தான் சிக்கல்*
*சொல்லுமுறை மெத்தெனவா யினிமை யாதல்*
*நயமாகிப் பெண்களுடன் மகிழ்ச்சி கொள்ளல்*
*நாடியே கருமத்திற் கூர்மை கொள்ளல்*
*வயமான விளமைதனின் மயிர் நரைத்தல்*
*வலியவுடல் சூடாகி வெச்சென் றிட்டல்*
*பயனான பலகலை கண் மிகப்பா ராட்டல்*
*பயித்தியமா முடம்புடைய பாக மீதே* - 213

சுயமாக உடம்பு மெலிவடைதல், மலச்சிக்கல் ஏற்படுதல் பேச்சு மெதுவாகவும் இனிமையாகவும் இருத்தல், பெண்களுடன் நட்பை வளர்த்து மகிழ்ச்சி அடைதல், கருமமே கண்ணாயிருத்தல் இளமையில் மயிர் நரைத்தல், உடல் சூடாகி வெம்மையாதல், பல்வேறு கலைகளையும் வியந்து பாராட்டல், பித்தவுடம்பு உடையோரின் பக்குவம் இதுவாகும்.

### சேற்பனவுடம்பின் குணம்

*பாகமா முடம்பிறுகன் மலந்தான் சிக்கல்*
*பல புகழ்பா ராட்டல்கனாப் பரிந்து காணல்*
*போகமா னதைவெறுத்தல் பொறுமை யாதல்*
*பொய்களவா திகணீத்தல் புலவோர்ப் போற்றல்*
*தாகமாய்ப் போசனத்தி லாசை வைத்தல்*
*தலைமயிர்நீண் டிடலறிவு தன்னைக் கூடல்*
*யோகமாய்த் திருமடந்தை யருளைச் சார்ந்தல்*
*உற்றசிலேற் பனவுடம்பின் மிகுதி காணே*- 214

பக்குவமான உடம்பு இறுகி மலச்சிக்கல் ஏற்படுதல், பலரும் புகழ்வதை விரும்புதல், கனவுகள் காணல், போகங்களை வெறுத்தல், பொறுமையாக இருத்தல், பொய் களவு முதலானவற்றை விட்டுவிடுதல், படித்தோரைப் போற்றுதல், நல்லுணவில் ஆசை வைத்தல், தலைமயிர் நீண்டு வளர்தல், அறிவுதனை நாடுதல், இலக்குமியின் அருளைப் பெறுதல், இவை யாவும் சிலேத்தும உடம்புடையோரின் இயல்புகளாகும்.

### மேற்கூறிய குணங்கள் மாறுபட்டுத் தோன்றுதற்குக் காரணம்...

*மிகுதியாம் இக்குணங்கள் குறைந்துங் கூடி*
*மேற்பட்டுத் தானிருக்கும் விதங்க ளெல்லாம்*
*பகுதியாங் காலத்தின் பேதத் தாலும்*
*பகரிளமை மூப்பான பருவத் தாலும்*
*புகுதியா மனக்கனப்புச் சலிப்பி னாலும்*
*பொருந்தியதோர் நாடி குணம் பேத மாகும்*
*தகுதியா மாந்தருடை மரணக் கூற்றின்*
*தன்மையினை யுரைக்குமுறை தனைத்தே ராயே* - 215

மேற்கூறப்பட்ட குணங்கள் கூடிக்குறைந்து வேறுபட்டுக் காணப்படுவது காலநிலையைப் பொறுத்தும், இளமை மூப்பு ஆகிய பருவங்களைப் பொறுத்தும், மனக்குழப்பம், சலிப்பு என்பவற்றாலும் நாடிக் குணம் மாறுபடுவதால் ஆகும். அடுத்து சாவை நெருங்கும் ஒருவரிடம் காணப்படக்கூடிய மரணக் குறிகுணங்கள் பற்றிக் கூறப்படுவதைத் தெரிந்துகொள்வாய்.



Sivakadadcham@thaiveedu.com



# ஒற்றைத் தடுப்பூசியில் புற்று நோய்க்கு சிகிச்சை

- சுப்ரமணியம் ஜெயசீலன்

இந்த அண்டத்தையே ஆட்டிப் படைத்திடும் ஜீவராசியான மனித இனத்தின் வளர்ச்சிப் பாதையை வார்த்தைகளைக் கொண்டு விபரித்துவிட முடியாது. ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இமாலய மாற்றங்களாகவே கருதப் பட வேண்டும். எனினும் ஒரு சில விடயங்களில் செல்வந்தர்களா ஏழைகளா என்ற பாரபட்சமின்றி நிலைகுலைந்து போகச் செய்யும் சந்தர்ப்பங்கள் - மனிதர்களைக் கடந்து போவது யதார்த்தமானது. அந்த வகையில் சில வகையான ஆட்கொல்லி நோய்கள் தாக்கியதன் பின்னர் அதிலிருந்து மீள்வது என்பது மருத்துவ விஞ்ஞானத்துறைக்கு இன்றளவிலும் பெரும் சவால் மிக்கதாகவே காணப்படுகின்றது. அரிய நோய்கள், சில புற்றுநோய் வகைகள் உள்ளடங்களாகக் குறிப்பிட்ட சில நோய்களுக்கு மருந்து வகைகள் இதுவரையில் முழுமையாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. அவ்வாறான நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களின் மரணத்தின் நாட்களைச் சற்றே தள்ளிப்போட முடியுமே தவிர, நோய்களிலிருந்து குணமடைந்துவிட முடியாது. எனினும், அண்மையில் இந்த பூமிப் பந்தை புரட்டிப் போட்ட கோவிட் - 19 பெருந்தொற்று மருத்துவ உலகின் நீண்ட கால ஆய்வுகளைக் குறுக்கி ஒற்றை ஊசியில் கொடிய நோய்களைக் குணப்படுத்தும் அற்புத வித்தையை மெய்ப்பித்து ஒட்டுமொத்த மானுட குலத்தையும் மெய்சிலிர்க்கச் செய்துள்ளது. அவ்வறான அரிய வகையான தடுப்பூசிகள் பற்றிய சிறு பார்வையாக இந்தப் பத்தி அமைகின்றது.

புற்றுநோய் (cancer), இருதய நோய் (cardiovascular) மற்றும் தன்னெதிர்ப்பு (autoimmune diseases) நோய்கள் போன்ற ஆட்கொல்லி நோய்களுக்குத் தடுப்பூசி உருவாக்கும் விஞ்ஞானப் பரிசோதனை ஆய்வுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தப் புதிய வகைத் தடுப்பூசிகளின் மூலம் பல மில்லியன் கணக்கான நோயாளர்களின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என மருத்துவ நிபுணர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். எதிர்வரும் 2030-ம் ஆண்டளவில் பல்வேறு ஆட்கொல்லி நோய் நிலைமைகளுக்குத் தடுப்பூசிகள் சிகிச்சையாக அமையும் என தெரிவிக்கின்றனர்.

இந்த அகிலத்தை ஆட்டிப்படைத்த பெரும் தொற்றுக்களில் ஒன்றான கோவிட் - 19 பெருந்தொற்றுக்குத் தடுப்பூசிகள் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தத் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பம் மருத்துவ உலகின் தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சாத்தியங்களை உருவாக்கியுள்ளது. புற்றுநோய் போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்தக் கூடிய தடுப்பூசி வகைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு 15 ஆண்டுகள் வரையில் காத்திருக்க நேரிடும் என முன்னதாக ஆய்வாளர்கள் எதிர்வு கூறியிருந்தனர்.

எனினும் கோவிட் தொற்றுக்கு மிகவும் துரித கதியில் தடுப்பூசி அறிமுகம் செய்யப்பட்டிருந்தது, இதனைத் தொடர்ந்து புற்றுநோய், இருதய நோய் போன்ற அதிக அளவில் மரணங்களுக்கு ஏதுவாக அமையும் நோய்களுக்கு 12 முதல் 18 மாதங்களுக்குள் தடுப்பூசிகளை அறிமுகம் செய்ய முடியும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். கோவிட் தடுப்பூசி வகைகள் பல்வேறு நிறுவனங்களினால் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அந்த வகையில் மிக முக்கியமான தடுப்பூசிகளில் ஒன்றாக மொடர்னா (Moderna) நிறுவனத்தின் தடுப்பூசி வகைகளைக் குறிப்பிட முடியும். எதிர்வரும் ஐந்து ஆண்டு காலப்பகுதிக்குள் அனைத்து வகையான நோய்களுக்கும் தடுப்பூசிகளை அறிமுகம் செய்யக்கூடிய சாத்தியங்கள் உண்டு என மொடர்னா நிறுவனத்தின் பிரதம மருத்துவ அதிகாரி டாக்டர் போல் பார்டன் (Dr. Paul Burton) தெரிவிக்கின்றார். பல்வேறு புற்றுநோய் வகைகளுக்குச் சிகிச்சை அளிப்பதனை இலக்காகக் கொண்டு தடுப்பூசிகள் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவிக்கின்றார்.

மொடர்னா நிறுவனம் புற்றுநோய்த் தடுப்பூசி வகைகளை அறிமுகம் செய்யும் முனைப்புகளில் தீவிரம் காட்டி வருவதாக அவர் தெரிவிக்கின்றார். மிகவும் வினைத்திறனாகச் செயற்படக்கூடியதும் துல்லியமாகச் சிகிச்சையளிக்கும் தடுப்பூசிகளைத் தயாரிப்பதற்கு முனைப்புக் காட்டப்பட்டு வருவதாகவும் இந்தத் தடுப்பூசி மூலம் மில்லியன் கணக்கானவர்களின் உயிர்களைக் காக்க முடியாவிட்டாலும் பல்லாயிரக் கணக்கானவர்களைக் காப்பாற்ற முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உலகில் பல்வேறு வகையான புற்றுநோயாளர்களுக்கு வெற்

றிகரமாகச் சிகிச்சையளிக்கும் பல புற்றுநோய்த் தடுப்பூசிகளை அறிமுகம் செய்ய முடியும் என அவர் தெரிவிக்கின்றார்.

சுவாசப் பிரச்சினைகள் பலவற்றுக்கு ஒற்றைத் தடுப்பூசியின் மூலம் சிகிச்சை அளிக்கப்பட முடியும் என அவர் குறிப்பிடுகின்றார். கோவிட், சளிக் காய்ச்சல், சுவாசப் பிரச்சினை போன்றவற்றிற்கு எம்.ஆர்.என்.ஏ (MRNA) சிகிச்சை முறை அறிமுகம் செய்யப்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார். எம்.-ஆர்.என்.ஏ எனப்படும் சிகிச்சை முறையானது தற்பொழுது மருந்து மாத்திரைகளினால் குணப்படுத்த முடியாத நோய்களுக்குச் சிகிச்சையளிக்கும் ஓர் தொழில்நுட்பத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

நோய்களினால் பாதிக்கப்பட்ட உடலின் கலன்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் அறிவுறுத்தல்களை வழங்கும் ஒரு முறைமையே இந்த எம்.ஆர்.என்.ஏ முறை எனப்படுகின்றது. குறிப்பாக உடல் நிறங்களுக்குப் புரதப் பொருளை உருவாக்கி நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்பெறச் செய்யும் ஒரு பொறிமுறையாக இந்தச் சிகிச்சை முறையைச் சுட்டிக்காட்ட முடியும். மருந்து மாத்திரைகளினால் குணப்படுத்த முடியாது என முன்னதாகக் கூறப்பட்ட பல நோய்களுக்கு இந்தத் எம்.ஆர்.என்.ஏ அடிப்படையிலான சிகிச்சை முறைகளினூடாக மிகவும் அரிய வகையிலான நோய்களைக் குணப்படுத்த முடியும் என அவர் தெரிவிக்கின்றார்.

இன்னும் 10 ஆண்டுகாலப் பகுதியில், குணப்படுத்தவே முடியாது எனக் கூறப்பட்ட நோய்களுக்கு வெற்றிகரமாகச் சிகிச்சை அளிக்கும் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்ய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். நோய் ஒன்றின் மரபு ரீதியான ஏதுக்களை அடையாளம் கண்டு அதற்குச் சிகிச்சையளிக்கக்கூடிய தொழில்நுட்பங்களை மருத்துவ உலகம் அண்மித்து வருவதாகவும், மரபணுக்களை மாற்றியமைத்து அல்லது பழுது பார்த்து நோயைக் குணப்படுத்தக்கூடிய முறை உருவாக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறுகின்றார். எனினும் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தச் சிகிச்சையளிக்கும் முறைகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் தீவிர ஆய்வுகளுக்கு உரிய முதலீடுகள் தொடர்ந்தும் செய்யப்படாவிட்டால் வீணாகிவிடும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.ஆர்.என்.ஏ மூலக்கூறு புரதங்களை உருவாக்கக் கலன்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குகின்றது. ஒரு செயற்கை வடிவத்தைச் செலுத்துவதன் மூலம் கலன்களின் நோய் எதிர்ப்பு அமைப்பு செயலிழப்பதனைத் தடுக்க முடிகின்றது. குறிப்பாக எம்.ஆர்.என்.ஏ அடிப்படையிலான புற்றுநோய்த் தடுப்பூசியொன்று, நோயாளியின் உடலில் ஏற்கனவே உருவாகி வரும் புற்றுநோய்ச் செல்களுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி எச்சரிப்பதுடன் ஆரோக்கியமான செல்களைத் தாக்கி அழிக்காமல் நோய்வாய்ப்பட்ட கலன்களை மட்டும் தாக்கியழிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரோக்கியமான கலன்களில் காணப்படும் புரதப் பகுதிகளுக்கு மேலதிகமாகக் காணப்படும் புரதப் பகுதியைக் கொண்டு புற்றுநோய்க் கலன்களில் காணப்படும் புரதப் பகுதிகளை அடையாளம் காணுதல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை வெளிப்படுத்த முடியாத கலன்களை அழித்து சக்தி வாய்ந்த கலன்களை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து உடலுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் பணியை இந்த எம்.ஆர்.என்.ஏ முறை ஊடாகச் செயல்படுத்த முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முதலில் நோயாளி ஒருவரின் புற்றுநோய்க் கட்டியின் திசுக்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும், ஆய்வுகூடம் ஒன்றுக்கு அனுப்பி இந்தத் திசுக்களின் தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும், ஆரோக்கியமான கலன்களிலும் புற்றுநோய்க் கட்டி காணப்படும் கலன்களிலும் காணப்படும் வித்தியாசங்கள் இதன் மூலம் கண்டறிந்து கொள்ளப்படும்.

கணினி இயந்திர மொழிப் படிமுறை (algorithm) ஒன்றின் அடிப்படையில் புற்றுநோய் வளர்ச்சிக்கான மூலக்கூறுகள் எவை என்பது அடையாளம் காணப்படும். மேலும் எந்தக் கலன்களின் எந்தப் பகுதியிலிருந்து அசாதாரணமான புரதச் சத்து வெளிப்படுத்தப்படுகின்றது என்பதும், இது நோய் எதிர்ப்பு சக்தியை எவ்வாறு பலவீனப்படுத்துகின்றது என்பது குறித்தும் ஆய்வு நடத்தப்படுகின்றது. பின்னர் மிகவும் நம்பிக்கையான துல்லியமான எம்.ஆர்.என்.ஏ-கள் உருவாக்கப்படுகின்றன. பின், இவை பிறபொருள் எதிரியாக்கி ஒவ்வொரு நபருக்கும் தனித்துவமான பிறபொருள் எதிரியாக்கிகளுடன் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படும்.

‘இதுவரை MRNA தொழில்நுட்பமானது தொற்று நோய்கள் அல்லது கோவிட் பெருந்தொற்று போன்றவற்றிற்கான சிகிச்சை முறைமையாகவே காணப்பட்டது. எனினும் அண்மைய சில மாதங்களில் இந்த எண்ணக்கரு பொய்ப்பிக்கப்பட்டுள்ளது. பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சையளிக்கும் வெற்றிகரமான முறைமையாக இந்த எம்.ஆர்.என்.ஏ முறைமை வளர்ச்சி பெற்று உள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை’ என டொக்டர் போல் பார்டன் கூறுகின்றார்.

இந்தச் சிகிச்சை முறைமையை அனைத்து வகையான நோய் சிகிச்சைகளிலும் பயன்படுத்த முடியும். புற்றுநோய், தொற்று நோய்கள், இருதய நோய்கள், தன்னெதிர்ப்பு நோய்கள், அரிதான நோய்கள் போன்ற பல்வேறு நோய் நிலைமைகளின் போது சிகிச்சை அளிப்பதற்காக இந்த முறைமையைப் பயன்படுத்த முடியும், இந்த அனைத்துத் துறைகளிலும் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகள் மிகவும் ஆரோக்கியமான சாதகமான முடிவுகளை வெளிக்காட்டி இருப்பதாக அவர் மேலும் கூறுகின்றார்.

கடந்த ஜனவரி மாதம் மொடர்னா நிறுவனம் RSV அல்லது சுவாசநுண்குழல் அழற்சி நுண்மித் தொற்று நோய்க்குத் தடுப்பூசி ஒன்றை பரீட்சார்த்தமாக அறிமுகம் செய்து, அதன் வெற்றி குறித்து அறிவித்திருந்தது. குறிப்பாக ஆகக் குறைந்தது இருமல், காய்ச்சல் போன்ற நோய்க் குறிகளிலிருந்து மீள்வதற்கு இந்தத் தடுப்பூசி 83.7 வினைத்திறன் தன்மையைக் காண்பிப்பதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. 60 வயதிற்கும் மேற்பட்டவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டு இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த தகவல்களின் அடிப்படையில் அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு (US Food and Drug Administration) குறித்த தடுப்பூசியைச் சிகிச்சைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதி

வழங்கியது.

கடந்த பெப்பிரவரி மாதம் மொடர்னா நிறுவனம் அறிமுகம் செய்த புற்றுநோய்த் தடுப்பூசிக்கும் அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு அனுமதியை வழங்கி இருந்தது. தோல் புற்றுநோய் மெலனோமாவினால் (melanoma) பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு இந்தத் தடுப்பூசி பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகைத் தாக்கிய பெருந்தொற்று தடுப்பூசி ஆய்வு நடவடிக்கைகளை வேகமாக உந்தச் செய்துள்ளது என தாம் கருதுவதாகவும் இதனால் பல்வேறு நலன்கள் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கவும் பாரியளவு தடுப்பூசிகளைத் துரிதகதியில் உருவாக்கவும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது எனவும் இதற்குக் காரணம் கோவிட் பெருந்தொற்று நேரத்தில் வெளிப்படுத்திய உழைப்பு என குறிப்பிடுகின்றனர்.

பைசர் (Pfizer) நிறுவனமும் இன்புளுவென்சா அல்லது சளிகாய்ச்சல் நோயைத் தடுப்பதற்கான தடுப்பூசிகளை அறிமுகம் செய்யும் இறுதித் தருவாயில் இருப்பதாக அறிவித்துள்ளது. முன்னணி மருந்து உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான பயோஎன்டெக் (BioNTech) நிறுவனத்துடன் இணைந்து பெருந்தொற்று நோய்களைத் தடுக்கக்கூடிய தடுப்பூசி வகைகளை அறிமுகம் செய்வதற்கான ஆய்வுகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளது. கோவிட் - 19 தடுப்பூசி தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளின் ஊடாகப் பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொண்டதாகவும் குறிப்பாகத் எம்.-ஆர்.என்.ஏ ஆய்வு அபிவிருத்தி தொடர்பிலான புதிய பரிமாணங்களைக் கண்டறிந்து கொண்டதாகவும் இந்த அனுபவங்களும் கற்றல்களும் எதிர்காலத்தில் ஆய்வு நடவடிக்கைகளை விஸ்தீரனப்படுத்தவும் சிறந்த முடிவுகளைப் பெற்றுக் கொள்ளவும் வழியமைக்கும் எனவும் பைசர் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கின்றார். ஒரே ஆண்டில் பல தசாப்தங்களில் கிடைக்கப் பெறக்கூடிய விஞ்ஞான அறிவாற்றலைப் பெற்றுக்கொண்டதாக அவர் குறிப்பிடுகின்றார்.

ஏனைய தடுப்பூசித் தொழில்நுட்ப நிறுவனங்களும் பெருந்தொற்று நிலைமைகளினால் நன்மை அடைந்துள்ளன. அடுத்த தலைமுறை புரத அடிப்படையிலான தடுப்பூசிகள் உள்ளிட்ட, குறிப்பாக அமெரிக்காவின் உயிரி தொழில்நுட்ப நிறுவனமான நோவா வாக்ஸ் நிறுவனமும் புதிய தடுப்பூசிகள் குறித்து ஆய்வுகளை நடத்தி வருகின்றது. இந்த நிறுவனத்தின் தடுப்பூசியானது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி கட்டமைப்பிற்கு நுண்மித் தொற்று ஒன்று உட்புகுந்துள்ளது என அறிவித்து நோய் எதிர்ப்பு சக்தியை வலுவூட்டக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டுகிறது.

மரபு ரீதியான தடுப்பூசித் தொழில்நுட்பங்களில் மிகப்பெரிய முன்னேற்றமும் வேகமும் அடிப்படை மாற்றங்களும் ஏற்பட்டுள்ளதாக நோவா வாக்ஸ் நிறுவனத்தின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவுத் தலைவர் டொக்டர் பிலிப் டுபோவ்ஸ்கி (Dr. Filip Dubovsky) தெரிவிக்கின்றார். எனினும் இந்தப் புதிய தடுப்பூசிகள் ஏற்கனவே காப்புரிமை பெற்ற தடுப்பூசிகளை விட வித்தியாசமானவை எனக் குறிப்பிடுகின்றார். உண்மையில் எம்.ஆர்.என்.ஏ வகை தடுப்பூசிகள் அந்த வகையைச் சார்ந்தவை எனவும் தமது நிறுவனமும் இவ்வாறான தடுப்பூசிகளை உற்பத்தி செய்து வருவதாகவும் குறிப்பிடுகின்றார்.

கடந்த காலங்களில் காலத்தை நிர்ணயிக்க முடியாது காணப்பட்ட பல்வேறு தடுப்பூசித் தொழில்நுட்பங்கள் மிகத் துரித கதியில் முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளமை கோவிட் பெருந்தொற்றின் மிகப் பெரிய தாக்கம் எனத் தொற்று நோய் ஆயத்த மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான அமைப்பின் பிரதம நிறைவேற்ற அதிகாரி டாக்டர் ரிச்சர்ட் ஹேக்கட் (Dr. Richard Hackett) தெரிவிக்கின்றார். 15 ஆண்டுகள் வரையில் நடத்தப்படவிருந்த ஆய்வுகள் ஒன்று முதல் ஒன்றரை ஆண்டுகளுக்குள் வெற்றி கண்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

தடுப்பூசி தொடர்பில் சுவாரசியமான பல்வேறு விடயங்கள் காணப்படுவதில் எந்த சந்தேகமும் கிடையாது எனவும், இந்த இடத்திலிருந்து நகர்வுகள் எவ்வாறு அமையும் என்பதே மிகப்பெரிய கேள்வி எனவும் பிரித்தானிய ஆக்ஸ்போர்ட் தடுப்பூசிக் குழுவின் பிரதான பேராசிரியர் அன்று போலாம் (Prof. Andrew Pollard) தெரிவிக்கின்றார்.

ஐரோப்பாவில் தற்பொழுது நிலவி வரும் முரண்பாட்டு நிலைகள் யுத்த நிலைமைகள் போன்ற ஏதுக்களினால் தடுப்பூசி தொடர்பான முனைப்பு குறைந்து விடும் அபாயம் காணப்படுவதாகவும், இந்தத் தடுப்பூசிகள் தொடர்பில் காணப்பட்ட முனைப்புத் தீவிரம் தொடர்ந்தும் அதே வேகத்துடன் முன்னெடுக்கப்பட்டால் இந்த முயற்சிகள் அபரிமிதமான வெற்றிகளைப் பறைசாற்றும் எனவும், அந்த முயற்சிகள் வீணாகி விடக்கூடாது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

நோய்த் தொற்றுக்களைத் தடுத்தல் நோய்களுக்கான நிவாரணிகளை வழங்குதல் போன்றவற்றிற்குக் காட்டப்படும் முனைப்புக் குறைந்து, யுத்தம் அல்லது ராணுவ நோக்கங்களுக்கான முதலீடுகளும் ஆய்வுகளும் முன்னிலை பெற்றால் அது மனித குலத்திற்கு அழிவுகளையே அன்றி நன்மையைத் தரக்கூடியது அல்ல என அவர் குறிப்பிடுகின்றார். எனவே நோய்களைக் கண்டறிந்து துரித கதியில் அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கும் முறைமைகள் குறித்த ஆய்வு முயற்சிகள் இன்னும் வீரியத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை உருவாக்குவதற்குச் செலவிடும் தொகையை விடவும் குறைந்த தொகையில் இவ்வாறான ஆய்வுகளை முன்னெடுக்க முடியும் என்பதை அனைவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்துகின்றார்.

மருத்துவ உலகின் மிகப்பெரிய ஆய்வாளர்கள் மற்றும் பிரதான மருந்துப் பொருள் உற்பத்தி நிறுவனங்களின் அயராத உழைப்பினால் நிச்சயமாக வெகு விரைவில் மிகவும் அரிய வகையிலான ஆட்கொல்லி நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்த தடுப்பூசிகள் அறிமுகம் செய்யப்படும் என்பதே ஆய்வாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகக் காணப்படுகின்றது.



jeyaseelan.s@thaiveedu.com

இளவாலை விஜயேந்திரனின்

# எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது?

## கவிதை நூல் வெளியீடும் கலை மாலையும்

**20.05.2023 | சனி மாலை 6 மணி**

Rommen Scene, Karen Platous Vei 31, 0988 Oslo.

## ஒரு நாய்க் கதை – நாடகம்

அன்ரன் செக்கோவ் | விஜயேந்திரன் | ச. லிமலநாதன்

உரைகள் – கவிதை மொழிவு – இசை – நடன நிகழ்வுகள்

பேசும் தூரிகை – ஓவியக் காட்சி

நூற்பேச்சு

அனைவரும் வருக!

# ஒரே மண்டபத்தில்

இரண்டு இலக்கிய நிகழ்வுகளும் வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சியும்

## பாலேந்திராவின்

அரங்கக் கட்டுரைகள்

## "அரங்க நினைவலைகள்"

பாலேந்திரா – ஆனந்தராணி ஆகியோரின் ஆற்றுகை நிகழ்வும் இடம் பெறும்

# மே 14

ஞாயிறு மாலை 4.00 மணி

பாலேந்திரா +447946578785 (WhatsApp)







நூல் அறிமுகம்

காலம் செல்வத்தின்

## "பனிவிழும் பனைவனம்"

# மே 14

ஞாயிறு மாலை 6.00 மணி

காலம் செல்வம்: 1 416 731 1752

4.00 மணி முதல்... "வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சி"யும் இடம்பெறும்.

**Scarborough Village Recreation Centre**
3600 Kingston Rd, Scarborough ON M1M 1R9



# வாகனத் தரிப்பிடப் பாதை

## - வேலா சுப்ரமணியம்

பனிக்காலத்தில் பட்ட அவஸ்தைகள் முடிந்து மெதுவாக வசந்தகாலத்தின் ஊடாக கோடை காலத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்து விட்டோம். குறிப்பாக வீட்டுரிமையாளர்கள் இத்தகைய காலநிலையை எதிர்பார்த்துப் பெருத்த அங்கலாய்ப்புடன் காத்திருக்கிறார்கள் என்பதை home depot, garden centre போன்ற இடங்களில் மக்கள் வெள்ளம் குவிந்திருப்பதில் இருந்து அறியமுடியும். அந்த வகையில் கோடைகாலத்தில் நாம் வீட்டிற்கு செய்யக்கூடிய அல்லது செய்யவேண்டிய பராமரிப்பு அம்சங்கள் பற்றி ஆராய்வோம்.

**வாகனத் தரிப்பிடப் பாதையைச் சுத்தம் செய்தலும் பராமரித்தலும்:**
**(Driveway Cleaning & Maintenance)**

பொதுவாகக் கூறுவதானால் சுமார் 75%ற்கு மேலானவர்கள் Driveway பராமரிப்பைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அதில் பலர் அதன் முக்கியத்துவத்தை அறியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும். குறிப்பாக கனடாவில் உறைபனியின் கொடுமையில் இருந்து தப்பிக் கொள்வதற்காக எல்லோரும் மிகத் தாராளமாக உப்பு போடுகிறோம். இந்த உப்பு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதனை நாம் பயணிக்கும் தெருக்களில் உள்ள கிடங்குகள் மூலம் அறிந்து கொள்ள முடியும். அத்தகைய பாதிப்புக்கள் தான் எமது வாகனத் தரிப்பிடப் பாதைகளிலும் போடப்பட்ட உப்பு மெதுவாக அரித்து அரித்து பாரிய பாதிப்புக்களைக் காலப் போக்கிலே ஏற்படுத்துகின்றது.

**நான்கு விதமான வாகன தரிப்பிடப் பாதை:**

பொதுவாக 4 விதமான வாகன தரிப்பிடப் பாதைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

- Asphalt Driveway
- Interlock Driveway
- Concrete Driveway
- Stamped Concrete Driveway

இந்த வகையான ஊர்திப் பாதைகளில் குறிப்பாக Concrete Drive way-களுக்கு உப்பினைப் பாவிக்கவே கூடாது. அவற்றுக்கு உகந்த சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட Ice Melter-ஐப் பாவிப்பது தான் பொருத்தமானது. Costco, Canadian Tire போன்ற இடங்களில் பனிக்காலங்களில் இவற்றினை வாங்கிப் பாவிக்க முடியும். சாதாரண உப்பைவிட சற்று விலை அதிகமாக இருந்தாலும் அதனால் ஏற்படும் பலன் அதிகம் என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.



வசந்தகாலத்தினைக் கண்டவுடன் முதலாவதாகச் செய்ய வேண்டிய வேலை வாகனத் தரிப்பிடப் பாதையை நன்றாகக் கழுவிவிடுதல். எமது கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் போடப்பட்ட உப்பு அல்லது Ice Melter போன்றவை மேற்பகுதியில் இருந்தும் வெடிப்புகளில் இருந்தும் அரிப்பதைத் தடுப்பதற்கு 'Power Washer' மூலம் நன்றாகக் கழுவுதல் நன்று. பெய்யும் மழைக்குக் கழுவப்படும் என நினைப்பது தவறானது.



**வாகனத் தரிப்பிடப் பாதைகளை பாதிப்படையச் செய்யும் காரணிகள்:**

- உப்பு.
- கூடிக்குறையும் காலநிலை மாற்றம்.
- வாகனங்களில் இருந்து ஒழுகும் Engine oil, Transmission oil, Gasoline etc;
- பராமரிப்பின்மை.

**பராமரிப்பு:**

எத்தகைய தரிப்பிடப் பாதைகள் ஆக இருந்தாலும் 2 - 4 வருடங்களுக்கு ஒருமுறை அவற்றினை முறைப்படி புறப் பூச்சு (Seal Coating) செய்ய வேண்டியது மிக அவசியமானது. புதிய Asphalt Driveway ஆக இருந்தால் 3 மாதத்தில் புறப்பூச்சு செய்தல் வேண்டும். பொதுவாகக் காணப்படும் Asphalt Driveway-களில் காணப்படும் சிறு பள்ளங்களையோ வெடிப்புகளையோ அடைத்துவிட்டு புறப்பூச்சுச் செய்தால் ஊர்திப் பாதைகள் பார்ப்பதற்கு அழகாக இருப்பது மட்டுமன்று அதற்குரிய வாழ்க்கைக்காலமும் அதிகரிக்கும். முதலீடு செய்வது மட்டுமல்ல செய்த முதலீட்டை முறையாக பாதுகாக்காதுவிட்டால் ஏற்படப்போவது 'முதல் நஷ்டம்' என்பதை பலரும் உணர்ந்து கொள்வதில்லை அல்லது அறிந்து கொள்ள முயற்சிப்பதில்லை என்பது துரதிஷ்டவசமானது.

(Regular driveway maintenance is needed to prevent cracks, chuckholes, or any type of erosion that may occur. Instead of spending a ton of money on a driveway repair company, learn how to do-it-yourself.)

Asphalt Driveway-களைப் புறப்பூச்சு செய்வதற்கான புறப்பூச்சுக்களை சாதாரண Home Depot போன்ற கட்டட நிர்மாணக் கடைகளில் வாங்கி நாங்களே செய்து கொள்ளலாம். யூன் - ஆகஸ்ட் மாதங்களில் வெப்பம் கூடிய காலப்பகுதியில் இவற்றினைச் செய்வது பொருத்தமானது. Concrete, Interlock Driveway-களை Seal செய்ய உரிய துறைசார் வல்லுனர்களை நாடுதல் சாலச்சிறந்தது. அல்லது அதற்கெனச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட மூலப்பொருட்களை உரிய இடங்களில் பெற்று நீங்களே செய்து கொள்ளலாம். குறிப்பாக இத்தகைய மூலப்பொருட்களை Spray பண்ணுவதுதான் சிறந்தது என்பதால் அதற்குரிய உபகரணங்களில் முதலீடு செய்வது சரியானதா என்பதை சிந்தித்துச் செயற்படவும்.

குறிப்பாக அளவுக்கதிகமாக வருடாவருடம் புறப்பூச்சு செய்ய முற்பட்டால் அதனாலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. அதாவது அளவுக்கு அதிகமான புறப்பூச்சில் வெடிப்புக்கள் ஏற்பட்டு வாகனத் தரிப்பிடப் பாதைகளின் அழகு கெட்டுவிடும் என்பதையும் நினைவில் வைத்திருக்கவும். பொதுவாக 2 - 4 வருடத்திற்கு ஒரு முறை புறப்பூச்சு செய்வது போதுமானது என்பதே அத்தகைய மூலப் பொருட்களை உற்பத்தி செய்பவர்களது சிபார்சு ஆகும்.

**புறப்பூச்சு செய்வதால் ஏற்படும் பலாபலன்கள்:**

- ஆயுட்காலம் விரிவுபடுத்தப்படும்
- உண்மையான நிறம் பாதுகாக்கப்படும்
- எப்போதும் அழகாக இருக்கும்.
- வாகனத்திலிருந்து சிந்தும் ஒயில் ஒழுக்குகளில் இருந்து பாதுகாக்கும்.
- சுத்தமாக வைத்திருத்தல் மிகச் சுலபம்
- செலவிடும் தொகை சிறு அளவானாலும், நீண்ட காலத்தில் இதனால் ஏற்படும் பலனின் அளவு மிக அதிகமானது.

Seal coating your asphalt will help ward off the elements and extend the Beauty and Longevity of your Asphalt Driveway!!!

A Smoother Driveway is easier to keep clean!

Seal your Driveway when it is new, to keep it looking new!

Fill all cracks and holes to prevent water from getting into the foundation or base to prolong decay!

An ounce of prevention is worth a pound of cure...



velasubramaniam@thaiveedu.com

# போதையும் ஆசையும்

சாவினை தோள்சுமந்து இன்னும்
தமிழன்னை வலியோடு அழுகின்றாளே !
கொலைமலிந்த தேசமாய் கடலலை
கொந்தளித்து அழுகின்றதே !
போதைகளின் வேடந்தாங்கலாய்ப்
புரையோடிப் போனதென நெடுந்தீவு
கண்ணீர் வடிக்கிறதே !

அன்பும் பண்பும் அலைபாயும் தீவினிலே !
வன்மம் வந்தின்று வாடகைக்கு
அமர்ந்ததுவோ !
உப்புக்கரித்த காற்றினிலே
உயிருள்ள மனங்களும் கருவாடாய்ப்
போனதுவோ !

கற்பாறை மேனியிலும் கொஞ்சம்
கடலலைகள் நீர் தெளிக்கும்
கருணை செத்த மனிதமனம் இன்று
கல்லாகி கிடக்கிறதே !
ஆசைக்கும் காசுக்கும்
பாசமிப்போ பலிக்கடாவாய் ஆனதுவே !

கல்வேலி புகுந்த காற்று அன்று அயல் வீட்டு
கறிமணத்தைக் கொண்டுவரும் - இன்று
கட்டி வைத்த மதில் சுவர்கள்
கொலைக் கதறலையும் தடுத்ததுவோ !

எம்தாய்த் திருநாட்டில் என் வீட்டுப்
பானையிலே யார் வந்து நஞ்சு வைப்பார்
நெஞ்சுத் துணிவோடு படுத்துறங்கும்
வேளையிலே பாவி மிருகங்கள்
பாதகம் செய்தனவோ !

சோகமேகங்கள் சூழ்ந்தின்று
கண்ணீர் மழை பொழிகிறதே !
யார் வந்து தடுப்பாரோ !

- கு. பிரபு



# ஐ.சி.ஆர்.சி - யும் அது கடந்துபோன எமது வாழ்வியலும்

– வேதநாயகம் தபேந்திரன்




அழகிய இலங்கைத் தீவை ஆட்டிப் படைத்த 30 ஆண்டு காலப் போருக்கு முடிவு வந்துவிட்டது. போர்க்காலத்தில் எமது மக்களுக்குப் பலவிதமான பணிகளை ஆற்றிய சர்வ தேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழு - I.C.R.C தொடர்பான பணிகளை நன்றியுடன் நினைவுகூர வேண்டியதுடன் அதனை ஆவணப்படுத்தும் நோக்கத்துடன் இப்பதிவு மலர்கின்றது.

உள்நாட்டுப் பிரிவினைப் போர் 1970-களின் நடுப்பகுதியில் மெல்ல மெல்லக் கருக்கொண்டது. 1980-களின் ஆரம்பத்தில் முனைப்புப் பெற்றது. 1983 யூலை 23-ம் திகதிக்குப் பின்ன ராக அதிதீவிரம் பெற்றது.

ஆனால் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழு 1989-ம் ஆண்டில் தான் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் தனது மனிதாபிமானப் பணிகளை ஆற்றத்தொடங் கியது.

போரின் கூர்மையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தான் இருந்தது. அதனால் இப்பிரதேசத்தை முதன்மையாகக் கொண்டு பணிகளை ஆரம்பித்தது.

எமது நாட்டுக்கான தலைமைப் பணியகம் கொழும்பு நகரில் இருந்தது. அதே வேளையில் வடக்குக் கிழக்கில் பல மாவட்ட அலுவலகங்கள் இயங்கின.

இலங்கை அரச படைகளும் விடுதலைப் புலிகள் இயக்க மும் நீண்ட காலம் போரில் மோதிக் கொண்டன. இத்தகைய சந்தர்ப்பத்தில் பொதுமக்களின் அன்றாடப் பணிகள் நிறை யவே பாதிக்கப்பட்டன.

பொதுமக்கள் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத தட்டுப்பாட்டு நிலை இருந்த போது வாகனத் தொடரணி மூலமாக அவற்றை விநியோகம் செய்யும் பணி யில் ஈடுபட்டது. லொறி எனப்படும் பார ஊர்திகளின் முன் பாக செஞ்சிலுவைச் சங்கத்தின் இலட்சினையை வெள்ளைச் சீலையில் பொறித்தபடி பயணம் செய்தன.

அப்போது அரச படைகள் நிலை கொண்டுள்ள பிரதேசங் கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசம் என அழைக்கப்பட்டன. அரச படைகளின் ஆளுகைக்கு உட்படாத விடுதலைப் புலி களின் கட்டுப்பாட்டில் அமைந்த பிரதேசங்கள் கட்டுப்பா டற்ற பிரதேசம் என அழைக்கப்பட்டது.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து அரச கட்டுப்பா டற்ற பிரதேசங்களுக்குத் தட்டுப்பாடான பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன. அரசபடைகள் பாதுகாப்பு நோக் கம் கருதித் தடைசெய்யப்பட்ட பொருள்களைத் தவிர்ந்த ஏனைய பொருள்கள் அனுமதிபெறப்பட்ட தொகைக்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாடு முற்றிலும் கடலால் சூழப்பட்டிருந் தது. இதனால் சரக்குக் கப்பல் மூலமாக அனுமதிக்கப்பட்ட பொருள்கள் கொண்டு வரப்பட்டன. கப்பலின் நாற்புறமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்கொடி போர்த்தப்பட்டிருக்கும்.

பருத்தித்துறை துறைமுகம் ஊடாகவே அனைத்துப் பொருள் களும் கப்பல் மூலமாக வந்தன.

நோயாளர் கப்பல் சேவையும் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தி லுள்ள வைத்தியசாலைகளில் அக்காலத்தில் சிறப்பு மருத் துவ நிபுணர்களோ, மருந்துப் பொருள்களோ போதியளவில் இருக்கவில்லை.

இதனால் பருத்தித்துறைக்கும் திருக்கோணமலைக்கும் இடை யேயான நோயாளர் கப்பல் சேவை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ஊடாக இச்சேவை நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படும் ஒவ்வொரு நோயாளருடனும் ஒரு உதவியா ளர் கப்பலில் பயணம் செல்ல அனுமதிக்கப்பட்டார். விடுத லைப் புலிகளின் பாஸ் எனப்பட்ட பயண அனுமதி நடைமு றையைப் பூர்த்தி செய்த பின்னரே கப்பலில் ஏற அனுமதிக் கப்பட்டனர்.

போரில் ஈடுபட்ட இருதரப்பினரதும் சடலங்களைப் பரிமாறுவ தற்கும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் உதவியது. இது மிகவும் சிக்கலான பணி என்ற போதும் மிகவும் அர்ப்பணிப் புடன் பணியாற்றினார்கள்.

அது போலப் போர்க் கைதிகளைப் பரஸ்பரம் பரிமாறுவதற் கும் உதவினார்கள்.

அரசாங்கம் பயங்கரவாதச் சந்தேக நபர்கள் எனக் கைது செய்யப்படுவோரைப் பார்வையிடும் பணியையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டது. கைதிகளின் நலன் களைப் பேணுவதுடன் அவர்கள் தொடர்பான தகவல்களை அவர்களது பெற்றோர்களுக்கும் வழங்கினார்கள்.

கைது செய்யப்பட்டோர் விடுதலையாகி வந்தபின்னும் அவர்களது வாழ்க்கை முறை எப்படி உள்ளது. எப்படி வாழ்கின்றார்கள் போன்ற தகவல்களைத் திரட்டினார்கள்.

1990 யூன் 150-ம் திகதி இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமாகியது. அவ்வருடம் செப்ரெம்பர் 26-ம் திகதிக்குப் பின்னர் புதிய சூழல் ஒன்று உருவானது. அப்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து 200 மீற்றர் தூரத்தைப் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்த சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், அரசாங்கம், விடுதலைப் புலிகள் ஆகிய முத்தரப்பும் இணங்கியது.

வைத்தியசாலையிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் இரவு நேரத்தில் சிலுவை போன்ற வடிவில் ரியூப் லைற்றுகள் மின்சாரத் தூண்களில் பொருத்தப்பட்டு ஒளிர்ந்தன. மண்ணெண்ணை 200 ரூபா முதல் 300 ரூபா வரையில் விற்ற அக்காலப்பகுதியில் இரவு நேரத்தில் அந்த மின்சார வெளிச்சத்தில் கல்வி கற்றோரும் இருந்தார்கள்.

போதனா வைத்தியசாலையின் ஓடு, அஸ்பெஸ்ரஸ் சீற் கூரைகளில் செஞ்சிலுவை அடையாளம் இட்டு போர் விமானங்களின் குண்டு வீச்சு நிகழாதவாறு காத்தார்கள்.

போரினால் பொதுமக்கள் இடம் பெயர்ந்த போது, பொதுமக்கள் தற்காலிகமாக வசிப்பதற்கேற்ற தறப்பால்களை வழங்கினார்கள். அவசரத் தேவைக்குரிய உணவுப் பொதிகளையும் வழங்கினார்கள்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டார்கள்.

தொலைபேசி மூலமான தொடர்பாடல் யாவும் முற்றாகச் சீர்குலைந்திருந்த அக்காலத்தில் இறப்புச் செய்திகளைப் பரிமாறினார்கள். செய்மதித் தொலைபேசி மூலமாக இவர்களால் பரிமாறப்பட்ட செய்தியை ஆதாரமாகக் கொண்டு பயண அனுமதி பெற்று மரண நிகழ்வில் கலந்து கொண்டோர் இருந்தார்கள்.

1995 ஒக்ரோபர் 30-ம் திகதி யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேச மக்கள் தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்களுக்குப் பெருமளவில் இடம் பெயர்ந்தார்கள். அப்போது உள்நாடு, வெளிநாட்டில் உள்ள தமது உற்ற உறவுக்குத் தகவல் வழங்கும் பணியைச் சிறப்பாகச் செய்தார்கள்.

பாடசாலை மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை வினாத் தாள்களை, காகிதாதிகளை, எடுத்து வந்து அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் பரீட்சைகளை நடத்த உதவினார்கள். அது போல விடைத் தாள்களை எடுத்துச் சென்று மதிப்பீட்டிற்குக் கொடுத்து உதவினார்கள். இணையவழி இல்லாத அக்காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்து வந்து உதவினார்கள்.

இது போல அரச பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகளுக்கும் உதவினார்கள்.

யாழ்ப்பாணத்திருந்து கண்டி வீதி ஊடான போக்குவரத்து 1990 யூன் முதல் 12 வருடங்களாகத் தடைப்பட்டிருந்தது. 2002 பெப்பிரவரி 22-ம் திகதி கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலமாக அவ்வருடம் ஏப்ரல் 08-ம் திகதி திறக்கப்பட்டது.

அப்போது யாழ் குடாநாட்டின் முகமாலைப் பிரதேசத்திலும், வவுனியாவில் ஓமந்தை விளக்குவைத்த குளம் பிரதேசத்திலும் சோதனைச் சாவடிகள் அமைந்தன. ஒரு புறம் அரசாங்கப் படைகளும் மறுபுறம் விடுதலைப் புலிகளும் நிலை கொண்டார்கள். அப்போது இருதரப்புக்கும் இடையே 500 மீற்றர் தூரம் யுத்தசூனிய வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இந்த யுத்த சூனிய வலயத்தைக் கண்காணித்து இருதரப்பு மோதல்கள் இல்லாமல் பொதுமக்கள் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் வழித்துணை வழங்கினார்கள்.

துரதிஸ்டவசமாக 2002 ஏப்ரல் 08-முதல் 2006 ஓகஸ்ட் 11 வரை 4 வருடம் 4 மாதங்கள் 04 நாள்கள் மட்டுமே இப்பாதைப் பயணம் நடைபெற்றது. 2006-ம் ஆண்டு ஓகஸ்ட் 11-ம் திகதியன்று இறுதிப் போர் முகமாலையில் ஆரம்பித்த பின்பாக அரசாங்கம் சர்வதேச தொண்டு நிறுவனங்களில் பணியாற்றும் வெளிநாட்டவர்களை வன்னிப் பிரதேசத்திலிருந்து வெளியேறுமாறு அறிவித்தது.

அப்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவில் பணியாற்றிய வெளிநாட்டவர்கள் வெளியேறினார்கள்.

உள்நாட்டவர்கள் மட்டுமே தொண்டு நிறுவனங்களில் பணியாற்றினார்கள். 2008-ம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியிலிருந்து 2009 மே மாதம் வரையிலும் மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பிரதேசங்களில் மக்கள் ஒதுங்கி இருந்த போது சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமும் உள்ளூர்ப் பணியாளர்கள் மூலமாக இப்பிரதேசத்தில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டது. குறிப்பாகச் செய்மதித் தொலைபேசி மூலமான தொடர்பாடலை மேற்கொண்டார்கள்.

தரைவழிப் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்ட போது கடல்வழியாகக் கப்பல் மூலமாக மிகவும் ஆபத்தான நேரத்தில் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்தார்கள்.

போரில் காயப்பட்டவர்களை அதே கப்பலில் மீட்டு எடுத்துச் சென்று திருகோணமலை புல்மோட்டை மருத்துவமனையில் அனுமதித்தார்கள்.

போர் முடிவடைந்த பின்னர் சரணடைந்த கைதிகளின் பாதுகாப்புத் தொடர்பாக உயரிய அக்கறை எடுத்துப் பணிகளை ஆற்றினார்கள். மீள் குடியேற்றப் பணிகளிலும் உதவினார்கள். தற்போது கொழும்பில் ஒரு தலைமைப் பணியகத்தைக் கொண்டு இயங்குகின்றார்கள்.

கடந்து போன எமது வாழ்வியலில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிய பணிகள் நன்றிக்கும், போற்றுதலுக்கும் உரியது. வரலாற்றின் ஏடுகளில் நிச்சயம் பதியப்படும்.



thabendran.v@thaiveedu.com



தமிழ் இசை கலாமன்றம்
பூமிப் பந்தின் எத்திசைக்கும் தமிழுக்குத் தடம்பதித்த
தெய்வத்தமிழ் புலவன், தத்துவமெய்ஞானி
வள்ளுவனுக்கு புகழ்சேர்க்க
படம் பதிக்கும் நன்நாளும்,
கலைநிகழ்ச்சியும்
காலம்: வைகாசி(May) 14, 2023
நேரம்: மாலை 4:30 மணி
இடம்: தமிழ் கலை அரங்கு
1220 Tapscot Road, Scarborough.
அனுமதி இலவசம்: அனைவரும் வருக தமிழர் தலைமகனை வணங்க.




சிந்தனைக் களம்
(இசை, நடனம்)
இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.
Zoom ID: 880 5042 5655 Passcode: 941 755
13 மே 2023 (சனிக்கிழமை) 9:00pm-11:30pm (கனடா-ரொறன்ரோ)
(இலங்கை, இந்தியா - 14 மே 2023 ஞாயிற்றுக்கிழமை 6:30am-9:00am
(சிட்னி - 14 மே 2023 ஞாயிற்றுக்கிழமை 11:00pm-1:30pm)
உரைத்தொடர் - 28
உரைப் பொருள்
'ஈழத்து நாதஸ்வர இசைமரபில்
பஞ்சாபிகேசன் பரம்பரை'
உரையாளர்
'நாதஸ்வர இன்னிசை வேந்தன்', கலாநிதி
சாவகச்சேரி M.P. நாகேந்திரன்




ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணையவழிக் கலந்துரையாடல்
நாள் : 19 மே (வெள்ளிக்கிழமை 2023 )
நேரம் : இரவு 8:00 – 10:00 மணி ( கனடா ரொறன்ரோ)
நாள் : 20 மே (சனிக்கிழமை 2023 )
நேரம் : காலை 1:00 – 2:00 மணி ( இலண்டன் )
காலை 5:30 – 7:30 மணி(இலங்கை, இந்திய )
காலை 10:00 – 1:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி )
சேப்பியன்ஸ்
பேசு நூல் :
யுவால் நோவா ஹராரியின் "சேப்பியன்ஸ்"
(மனித குலத்தின் ஒரு சுருக்கமான வரலாறு)
பேசுபவர்: எழுத்தாளர் க.சண்முகலிங்கம்
Zoom ID: 84777257162 Passcode: 554268

# கண்ணியம் என்பது சிறந்த நடத்தை

- சி. நற்குணலிங்கம்

கண்ணியம் என்பது கௌரவம், மகிமை, மேன்மை, கனம் எனப் பொருள்படும். கண்ணியம் என்பது, எல்லா மனிதர்களும் தகுதியுள்ள மரியாதையையும், மதிப்பையும் குறிக்கிறது, மற்றும் மறுக்க முடியாத அளவிலான மனித தரத்தைக் கொண்டிருப்பவர்களுக்கு உறுதிப்படுத்தப்படுகிறது. கண்ணியம் ஒரு விஷயம் அல்லது செயலுக்குத் தகுதியான மரியாதை. கடமைகளை நிறைவேற்றும்போது கண்ணியம் என்பது முறைப்படி நேர்மை மற்றும் மக்களின் மரியாதை ஆகியவற்றைக் குறிக்கிறது. இது ஒரு மரியாதைக்குரிய நிலை. இது கடமையைச் சுற்றிய ஒன்றாகும். கடமையைச் செய்யும் பொழுது கைக்கொள்ளவேண்டிய ஒன்று. அந்தக் காரியத்தில் சம்பந்தப்படாதவரையும் கருத்தில் கொண்டதாகும். கண்ணியம் என்பது அவரவர் செயற்பாடுகள், பணிகள், சமூகத்தின் மீதான பொறுப்பாண்மை என்பவற்றின்மூலம் ஒருவருக்குக் கிடைக்கப்பெறுவதாகும். கௌரவம் (Dignity) இழந்த உங்களை உங்களால் நேசிக்கவோ, மதிக்கவோ முடியுமா?

சுயகௌரவம், வறட்டுக் கௌரவம், குடும்பக் கௌரவம் எனக் கௌரவம் (Pride) விசாலமானது. அனைவருக்கும் சரியான சமமான உரிமை, வாய்ப்பு, மதிப்புமிக்க வாழ்வு இவையே சுயகௌரவம் (Self Respect) எனப்படும். எது, எதற்கோ கண்டவன் காலில் விழாமல் கம்பீரமாக நிற்பது சுயகௌரவம். வைராக்கியம் வேறு வறட்டுக்கௌரவம் (False Pride) வேறு. வைராக்கியம் வாழவைக்கும். வறட்டுக்கௌரவம் தன்னையும் தன்னைச் சுற்றி உள்ளவர்களையும் அழித்துவிடும். வறட்டுக்கௌரவம் பார்க்காது வாழப் பழகிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் என்னை நல்லமாதிரி நினைக்க வேண்டும் என்பதற்காகக் கௌரவமாக நடிக்கக் கூடாது. ஆசிபெற, வணங்கவேண்டிய திருவடிகளில் விழாமல் நிற்பது வறட்டுக்கௌரவம். சுயகௌரவம் தெளிவு, வறட்டுக்கௌரவம் போதை. சுயகௌரவம் விழிப்பு, வறட்டுக் கௌரவம் விழித்திருப்பது போன்ற தூக்கம். சுயகௌரவம் ஒரு மனிதரின் ஆளுமையை நிர்வகிக்கின்ற விஷயம். அவர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவருள் ஊடுருவி இருக்கும் அம்சம் அது. வறட்டுக்கௌரவம் என்பது அர்த்தமற்றுக், காரணமின்றி கௌரவம் பார்ப்பது. வறட்டுக்கௌரவத்தை நிர்வகிப்பது ஒரு கோழை மனிதரின் அகங்காரம் அல்லது கையாலாகாத்தனம். எதிரிகளின் அவமானங்களைக்காட்டிலும் நெருங்கியவர்களின் அன்புக்காக சுயகௌரவத்தை இழந்தவர்கள் பலர்.

குடும்பம் என்பது சமூகத்தின் இயல்பானதும், அடிப்படையானதுமான குழு அலகாகும், என்பதுடன் அது சமூகத்தாலும், தேசத்தாலும் பாதுகாக்கப்படுவதற்குத் தகுதி பெற்றது. குடும்ப உறுப்பினர்களின் கௌரவம் பாதுகாக்கப்படுவதில் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. பிள்ளைகளால் பெற்றோரினதும், பெற்றோரால் பிள்ளைகளினதும் கௌரவம் பறிபோன சந்தர்ப்பங்கள் பல. இது குடும்பம் பிரிவடைவதற்கும், சிதைவடைவதற்கும் காரணமாகிறது. குடும்பம் கட்டுக்கோப்புடன் இயங்க குடும்பக்கௌரவம் (Family honor) முக்கியமானதாகும். நம்முடைய அழகோ, அறிவோ அல்லாது நாம் பழகும் விதமும், பிறரை நாம் மதிக்கும் விதத்திலும் எமக்குக் கௌரவம் தருபவர்களும் இருக்கிறார்கள்.

தத்துவத்தில் கௌரவம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தார்மீகக் கண்ணியம் என்பது இது மக்களின் ஒழுக்கத்திற்கும் சமூகத்தில் அவர்களின் நடத்தைக்கும் தொடர்பானது. உண்மையான கண்ணியம் என்பது மற்றவர்களால் பெறப்படுவது. மனிதகௌரவம் என்பது ஒரு நபரின் மதிப்பு மற்றும் உள்ளார்ந்த, மீறமுடியாத அருவமான உரிமை. இது ஒரு அடிப்படை உரிமை, மற்றும் அது மனிதரின் உள்ளார்ந்த மதிப்பாகும். கௌரவம் இல்லையேல் உறவினர்கூட நெருங்க யோசிப்பார்கள். மரம் பட்டுப்போனால் பறவைகள் வருவதில்லை.

கண்ணியம் மற்றும் உரிமைகளில் அனைத்து மனிதர்களும் சுதந்திரமாகவும், சமமாகவும் பிறந்தவர்கள். மனிதகௌரவம் இயல்பானது, நேர்மையானது மற்றும் பூர்த்தி, திருப்தி உணர்வை வளர்க்கிறது. ஆளுமையை வலுப்படுத்துகிறது. கௌரவம் ஒரு விடயத்தை அல்லது ஒரு செயலை மேம்ப

டுத்துவதாகும். கண்ணியமானவர் பாதையில் யாரும் குறுக்கிட்டாலும்கூட அவர் தன் மாண்பைக் கைவிடக்கூடாது. கௌரவமானவர்கள் அதிகம் புகழப்படுவார்கள். அவ்வேளை அதனைப் புகழ் போதையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் நடந்துகொள்ளும் விதத்தில் மக்கள் ஈர்ப்பு, கண்ணியம், வீரம், விசுவாசம் மற்றும் பெருமையுடன் அவ்வாறு செய்தால் கௌரவம்பற்றிய பேச்சு நிலவும். நீ சென்ற இடத்தில் உனக்கு கௌரவம் அளிக்கப்படவில்லை என்றால் அந்த இடத்திற்கு வந்துவிட்டேன் என்ன செய்வது மௌனமாக இருப்பதுதான் சிறந்த வழி.

எல்லா மனிதர்களும் தங்கள் சுதந்திரத்தைப் பயன்படுத்துவதன்மூலமும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான முடிவுகளை எடுப்பதன் மூலமும் தங்கள் வாழ்க்கையை வடிவமைக்கவும், மாற்றவும், மேம்படுத்தவும் முடியும். ஒரு சமூகத்திற்குள் இருக்கும் மனிதருக்குச் சரியான மதிப்பு மற்றும் கௌரவம் செய்யவேண்டியது சரியானதாகும். சமூகத்தில் ஒருவரது ஒழுக்கம் நடத்தைகளில் பிரதிபலிக்கும்போது சமூகம் அவரை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும். தனிப்பட்ட கௌரவம் எனும்போது ஒரு நபர் தன்னிடம் வைத்திருக்கும் மரியாதை மற்றும் மதிப்பை அடிப்படையாகக் கொண்டது. நாம் எப்படி இருக்கிறோம் என்பதைப் பொறுத்தே நாம் மற்றவர்களின் மரியாதைக்கு உரியவர்கள் ஆகின்றோம். ஒவ்வொரு நபரின் வேறுபாடுகளையும் நாம் அடையாளம்கண்டு அந்த வேறுபாடுகளைப் பொறுத்து அந்த நபர் யார் என்பதில் பெருமிதம் கொள்ளலாம்.

'என் கண்ணியம் சொல்லும்வரை நான் அவரை நேசித்தேன்' என்கிறார் அரிஸ்ரோற்றில். 'வெற்றியைவிட கண்ணியமான தோல்விகள் உள்ளன' என்கிறார் ஜார்ஜ் லூயிஸ் போர்ஜஸ். கௌரவமாக நடந்துகொள்வது என்பது இலேசான காரியம் அல்ல. வார்த்தை மனநிறைவாக இருக்க வேண்டும். பிறர் கண்ணியமற்று நடப்பதையும் அதனால் ஏற்படும் நோகடிப்பையும் தடுக்க வேண்டும். எப்போதும் உதவிட முனைப்பாகவும், தீங்கு செய்யாதிருக்கவும் முயற்சிக்க வேண்டும். இருவருக்கு இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றும்போது விவாதங்களின் தீவிரத்தால் ஒருவருக்கு ஒருவர் தனிப்பட்ட தாக்குதலில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். கண்ணியமற்ற செயற்பாடுகள் மற்றவர்களை துயர்மடையச் செய்யும், கோபமடையச் செய்யும். வார்த்தைகள் திருப்தி அளிக்கக்கூடியதாக இருந்தால் அடுத்தவர்கள் மனதில் தாக்கம் ஏற்படாது. பிரச்சனைகளும் தோன்றாது. கண்ணியம் என்பது சிறந்த நடத்தை. எனவே மரபு ஒழுங்கு மீறாமல் செயல்படுவது சிறந்ததாகும். கௌரவம், கண்ணோட்டம், சாதுர்யம், பண்பாடு என்பன குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலத்தில் வாழும் மக்களின் சமூக வாழ்க்கையுடன் ஒட்டியிருக்க வேண்டும் என்றும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நடை, உடை, பாவனை, உணவு, நல்லொழுக்கம் முதலியவைகளில் நேர்த்தியான தன்மை வெளிப்படவேண்டும்.

'ஏமாற்றுவதைக்காட்டிலும் தோற்றுப்போவது கௌரவத்துக்கு உரியது' - ஆப்பிரகாம் லிங்கன் கருத்து. கவலைகளைக் கண்டவர்களிடம் கொட்டினால் கண்ணியம் இழப்பாய். கடவுளிடம் கொட்டிக், கண்ணீர்மல்க கையேந்தினால் நிம்மதி அடைவாய். கம்பீரம் என்பது உடல் அல்ல, அது செயல். கருணை என்பது உதவியல்ல அன்பு. கண்ணியம் என்பது தனியாகப் பேச்சல்ல, நடத்தையும் கூட. *'அறிவியல் முறைகள் வேண்டும். எங்கள் அகிம்சைக்கு ஆயுதம் வேண்டும்! பொறியியல் துறைகள் வேண்டும்! அவை பொல்லாங்கில்லாமல் வேண்டும்! கருவிகள் பலவும் வேண்டும்! அவை கண்ணியம் பேசவேண்டும்'* என்கிறார் அப்துல்கலாம். கண்ணியம் என்ற சொல்லுக்கு அர்த்தமாக வாழவேண்டும். கெட்ட நடத்தைகள் சுயபலத்தைப் பறிக்கும். பிறரிடம் நம்மை அடிமையாக்கும். நேர்மை, கண்ணியம், உண்மை நமது பலம். வழித்துணையாக வருபவர் காதலராகவோ, கணவன் மனைவியாகவோ இருக்க வேண்டும் என்பதில்லை. கண்ணியம் தவறாத நண்பராகவும் இருக்கலாம். தற்பெருமை எங்கு முடிகிறதோ அங்கே கண்ணியம் ஆரம்பமாகிறது.

ஒரு முடிவை எடுக்கும்போது வறட்டுக்கௌரவத்துக்கு முதலிடம் கொடுக்கக் கூடாது. எப்போதும் நமக்காக நாம் வாழ வேண்டும். அடுத்தவர் வாழ்க்கையைப் பார்த்து அவ்வாறு வாழ முற்படக்கூடாது. சிக்கலில்மாட்டி நிம்மதி இழக்க நேரிடும். நம்மைவிட உயர்ந்தவர்களைப் பார்த்து பொறாமைப் படாமலும், நம்மைவிடத் தாழ்ந்தவர்களைப் பார்த்து வெறுப்பு, ஏளனம் காட்டாமலும் எவராக இருந்தாலும் சமமாகப் பாவித்து அன்பு செலுத்துவது சிறந்த பண்பு. இத்தகைய இனிய பண்பு நலன்கள் நம் மனத்தின் அடிஆழத்தில் நீர் ஊற்றுப்போல் இருக்க வேண்டும். நம் மனதில் நாம் சேர்த்துக் கொண்ட போட்டி, பொறாமை, வறட்டுக்கௌரவம் போன்றவற்றால் அந்த ஊற்று மீறப்பட்டுவிடும்.

எங்கோ இருக்கும் நாலுபேருக்காக எல்லாக் கனவையும் கலைத்து எச்சத்தனமாக வாழ முற்படக்கூடாது. கௌரவத்தைக் குலைப்பதற்கென பலர் முயற்சிப்பார்கள். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. மற்றவருக்குக் கௌரவம் கொடுப்பது என்பது வயதைப் பொறுத்ததல்ல, அவர்கள் செய்யும் செயலைப் பொறுத்ததே ஆகும். நம்மீதான கௌரவம் யாரும் சொல்லி வரக்கூடாது. அது நடத்தையால் தானாகக் கிடைக்க வேண்டும். கௌரவமான மனிதர்களுடன் சேர்ந்தால் நாமும் அவ்வாறு இருக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டு, தேவையற்ற பண்புகளை ஒதுக்கிவிடுவோம். நாம் சேரும் இடத்தைப்பொறுத்தே நமது தரமும் இருக்கும். கண்ணியம் என்பது சிறந்த நடத்தை. கௌரவமான நடத்தை உங்களுக்குச் சான்றிதழாக உதவும். கௌரவமானவர்களைச் சமூகம் என்றும் நேசிக்கும். தரமான வாழ்க்கைக்குக் கௌரவம் அவசியம்.



natkunalingam@thaiveedu.com



# திருவள்ளுவரின் சீற்றம்

**- குமார் புனிதவேல்**

வாழ்க்கை வளமாக அமைவதற்கு வழிகாட்டியாய் இருந்து எங்களுக்கு திருக்குறளைத் தந்த திருவள்ளுவர், அதில் வெகுளாமை என ஒரு அதிகாரத்தை ஒதுக்கி சீற்றத்தை தவிர்ப்பதன் அவசியத்தை தெளிவாக எழுதி உள்ளார். இது திருக்குறளின் 31-வது அதிகாரமாகும். அந்த அதிகாரத்தில் தரப்பட்ட கருத்துக்கு மாறாக திருவள்ளுவரே சினந்து, சில



குறள்கள் பாடி இருப்பதைக் கவனித்தவேளை வியப்பாய் இருந்தது. திருவள்ளுவரும் சிலர் வேதனையை எண்ணி வேதனைப்பட்டு, அவ்வேதனைக்கு காரணமாய் இருந்தவர் மேல் சினந்து சில குறட்பாக்களை பாடியுள்ளார். அத்தகைய குறள்களை இங்கு பகிர்ந்து கொள்வோம்.

முதலில் வெகுளாமை பற்றி திருவள்ளுவருடைய நிலைப் பாடு என்ன என்பதை கவனிப்பது உசிதம். அந்த அதிகாரத் தின் நடுக்குறளாக 305-வது குறளில் என்ன குறிப்பிடுகிறார் என நோக்கின், ஒருவர் துன்பம் வராமல் தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால், அவர் தனக்கு சினம் வராமல் காத் துக்கொள்ள வேண்டும் என்கிறார். காரணம் சினம் வர இடம் கொடுத்தால் அந்தச் சினமே அவரை அழித்துவிடும் என்கி றார்.

***'தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்***
***தன்னையே கொல்லுஞ் சினம்'***

- குறள்: 305

எவ்வளவு அழகான அறிவுரை. ஆனால், அதைக் கூறிய திருவள்ளுவரே சினம் கொண்டு கூறிய சில குறள்களைக் கவனிப்போம்.

### இறைவன் மீது சீற்றம்:

திருவள்ளுவர் மிகவும் சாந்தமும் பொறுமையும் உடையவர் என்பதை நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் அவர் இறைவ னையே சபிக்கிறார். ஒருவருக்கு உயிர் கொடுத்துப் பின் அவரால் படைக்கப்பட்டவர் பிச்சை எடுத்து வாழ வேண்டும் என நியதியைப் படைத்த அந்த இறைவனும் ஊர் ஊராக பறந்து பிச்சை எடுத்து கெட்டுப்போகட்டும் என்று சினந்து கூறுகிறார். வறுமையின் வேதனையை உணர்ந்து பெரும் இரக்கம் உடையவராய் திருவள்ளுவர் இருந்தமையால் இப் படிக் கூறியுள்ளார்? இதோ அந்தக் குறளை பகிர்ந்து கொள் வேன்.

***'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து***
***கெடுக உலகியற்றி யான்'***

- குறள்: 1062

இந்த குறளில் திருவள்ளுவர் ஒருவர் பிச்சை எடுத்து வாழ வேண்டும் என விதி சமைத்தால், அப்படி விதியை படைத்த வனும் பிச்சை எடுப்பவனைப்போல் ஊர் எல்லாம் பரந்து திரிந்து பிச்சை எடுத்து அழியட்டும் என்று பெரும் சினம் கொண்டு சபிக்கிறார். இறைவனும் அக்கொடுமையை அனு பவித்து அழியட்டும் என்கிறார். அவரது சீற்றத்திற்கு கார

ணம் வறியவர் வேதனையில் ஏற்பட்ட இரக்கம் என்பதை மறக்கலாகாது.

### அரசன் மீது சீற்றம்:

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் அரசர்கள் நாட்டை ஆட்சி செய்தார்கள். ஆனால் இன்றைய காலத்தில் குடியாட்சி அமைப்பில் நாட்டை ஆட்சி செய்வது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகளே. இங்கு நாம் பார்க்கப்போகும் குறள் அரசர்களுக்கு மட்டுமல்ல ஆட்சி செய்யும் எவர்க்கும் பொருந்தும். இலங்கையில் அரசியல்வாதிகள் அதர்மமான அரசியல் நடத்திய குடிமக்களை கொடுமைப்படுத்திய வேளை அண்மையில் குடிமக்கள் கொதித்து எழுந்ததையும், ஆட்சி மாற்றம் வேண்டி போரிட்டதையும் யாவரும் அறிவோம். ஒரு காலத்தில் பிரெஞ்சு மன்னர்களின் கொடுமை தாங்க முடியாமல் மக்கள் கிளர்ந்து எழுந்து நடத்திய பிரெஞ்சுப் புரட்சியையும் நீங்கள் அறிவீர்கள். அடிமையாகி ஆங்கிலேயர்களுக்கு கூலிப்படையாக மாறிய மன்னருக்கு எதிராக கொதித்து எழுந்த மக்கள் புரட்சியையும் நீங்கள் அறிவீர்கள்.

முறையாக ஆட்சி செய்யாது கொடுங்கோன்மை செயும் அரசனை அழிப்பதற்கு வேலும் தேவை இல்லை, வில்லும் தேவை இல்லை அவன் கொடுமையான ஆட்சியினால் வேதனையுற்ற மக்களின் கண்ணீரே அந்த மன்னனை அழித்து விடும் என்று சீற்றத்துடன் தனது குறளில் அறிவுறுத்துகிறார் திருவள்ளுவர்.

*‘அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை’*

- குறள்: 555

திருவள்ளுவர் மிகச் சீற்றத்துடன் கூறுகிறார் ‘தவறான ஆட்சியால் துன்பப்பட்டு, துன்பம் பொறுக்காத குடிமக்கள் சிந்திய கண்ணீர்தான் ஆட்சியாளரின் செல்வத்தை அழிக்கும் ஆயுதம்’ என்று.

### கயவர்கள் மீது திருவள்ளுவர் கோபம்:

இதில் சுவையான விடயம் யாதெனில் திருவள்ளுவர் கயவர்களை தேவர்களுக்கு ஒப்பிடுகிறார். இங்கு தேவர்கள் உளரா அல்லது இல்லையா என்பது முக்கியமல்ல. அக்காலகட்டத்தில் அனைவரும் தேவர்களை உயர்ந்தவர்களாகவும், சிறந்தவர்களாகவும் கருதினார்கள். ஆனால் திருவள்ளுவரோ அவர்களை கயவர்களுக்கு ஒப்பிடுகிறார். அது ஏன் எனப் பார்ப்போம்.

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் முனிவர்களும் ஞானிகளும் இல்லறத்தை ஒதுக்கவில்லை. கௌதம முனிவர் ஒரு பெரும் ஞானி. அவரது மனைவி அகலிகை பேரழகியும், சிறந்த பெண்ணுமாவள். விரும்பியதை தரும் கற்பகதரு மரத்தையும் வேண்டியதைத் தரும் காமதேனு எனும் பசுவையும் உடைய தேவர்களின் மன்னனான இந்திரன் அகலிகையின் அழகில் ஆசை கொண்டு கயவர்கள் போல் வஞ்சனையால் அவளிடம் உறவு கொண்டதாகக் கூறப்படுகிறது. அதனால் தான் கயவர்களை தேவர்களுக்கு ஒப்பானவர் எனத்தன் குறளில் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

*‘தேவர் அனையர் கயவர் அவருந்தாம்*
*மேவன செய்தொழுக லான்*

- குறள்: 1073

திருவள்ளுவர் சினந்து கூறுகிறார் கயவர்கள் தாம் ஆசைப் பட்டதை அடைவதற்காக தேவர்களைப் போல் எந்தத் தவறையும் தயக்கமின்றிச் செய்வார்கள் என்கிறார். ஆனால் திருவள்ளுவர் இத்தகைய கயவர்களை எப்படித் திருத்துவது என்பதற்கு அறிவுரை கூறவும் தவறவில்லை. அங்கேயும் அவருடைய சினம் தெரிகிறது. அவர் தனது 1078-வது குறட்பாவில் நல்லவர்கள் தவறு செய்யும் வேளைகளில் சொல்லித் திருத்தலாம். ஆனால், கயவர்களைத் திருத்துவதற்கு அவர்களை கரும்பை சாறு எடுப்பது போல் கசக்கிப் பிழிந்தால் தான் அவர்கள் ஓரளவு பயன்படுவர் என்கிறார். தவறுகள் நடக்கும் வேளைகளில் பாராமுகமாய் இருந்தால் அதுவும் தவறு தானே?

*‘சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்*
*கொல்லப் பயன்படும் கீழ்’*

- குறள்: 1078

### விலை மாதர் உறவு மீது சீற்றம்:

விலை மாதருடன் வைக்கும் உறவை வள்ளுவர் மிக வெறுத்தார். அவர் காமவேட்கையையோ அல்லது உடல் உறவையோ குறை கூறவில்லை. தனது 1821-வது குறளில் கள்ளு சுவைத்தால் தான் மகிழ்ச்சி தரும். காமமோ நினைத்தாலே இன்பம் தரும் என்கிறார். இப்படிக் கூறும் திருவள்ளுவர் விலை மாதருடன் உடல் உறவு கொள்பவரை மிகச் சினந்து கூறுகிறார் ‘நீ ஒரு பிணத்துடன் இருட்டறையில் உறவு கொள்கிறாயே’ என்று.

திருவள்ளுவர் விலைமாதை பிணமாக கூறுவது, அவளுக்கு உடல் உறவு கொள்பவனிடம் ஒருவிதமான கவர்ச்சியோ ஆர்வமோ இல்லை. அவள் நோக்கம் கிடைக்கும் பணத்தின் மீதே. உணர்ச்சிகள் இல்லா உடம்பை பிணம் என்கிறார். அந்த ஈனச்செயலை அவன் செய்வதால் இருட்டறையில் அந்த புணர்ச்சி இடம் பெற்றதாக, அந்த அறை இருட்டறை என்கிறார்.

*‘பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்*
*ஏதில் பிணந்தழீஇ அற்று’*

- குறள்: 913

மேற் தரப்பட்ட குறள்களில் இருந்து அறிவது என்ன? என்ற கேள்வி எழுவது இயல்பே. அதர்மமான ஒரு விடயம் இடம் பெறும் வேளைகளில் நாம் அமைதியாக ஒதுங்கிக் கொள்வது கையாலாகாத தன்மையே. தவறு நடக்கும் வேளையில் தட்டிக் கேட்க வேண்டியது அனைவருடைய கடமையுமாகும். எனவே சினத்தை காக்கும் அதே வேளையில் தவறுகளை தடுப்பதும் எம் அனைவருடைய கடமையுமாகும்.

வாழ்க வள்ளுவம் வாழ்க வளமுடன்



kumar.punithavel@thaiveedu.com



# உரோமப் பேரரசின் இன்றைய நிலை

**- குரு அரவிந்தன்**

இத்தாலி நாட்டுக்குச் சென்ற போது பழைய நகரங்கள் சிலவற்றைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. வரலாற்றில் கிரேக்கப் பேரரசு, உரோமப் பேரரசு என்றெல்லாம் படித்திருந்தாலும் அந்த இடங்கள் எல்லாம் கற்பனையில் மட்டும் இருந்ததே தவிர, அந்த இடங்களைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கிரேக்கப் பேரரசர் அலெக்ஸாந்தர் த கிரேட் என்றும், உரோமப் பேரரசர் யூலியஸ் சீசர் என்றும் படித்திருக்கின்றோம். உரோமப் பேரரசர் யூலியஸ் சீசர் பொ.ஊ.மு.(கி.மு.) 100 தொடக்கம் பொ.ஊ.மு. 44 வரை வாழ்ந்தவர். காலங்கள் கடந்து விட்டாலும், கட்டடக் கலைகளால் நிறைந்த உரோம் நகருக்குச் சென்று அவரது சிலையை அங்கே பார்த்த போது, 'நேற்றிருந்தார் இன்றில்லை' என்ற தத்துவத்தைத்தான் அப்போது புரிந்து கொள்ள முடிந்தது. 2000 வருடங்களுக்கு முற்பட்ட கட்டடங்களை எல்லாம் இப்போது புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். யூலியசீசர் கொலை செய்யப்பட்ட செனட் மண்டபத்தையும், அவரை அடக்கம் செய்த சமாதியையும் பார்க்க முடிந்தது. அங்குள்ள அருங்காட்சியகத்தில் உரோமர் காலத்துச் சிலைகளை நிறையவே காணமுடிந்தது.

இத்தாலி நாட்டின் டைபர் ஆற்றங்கரையில் உரோம் நகர் அமைந்திருக்கின்றது. இந்த நகரின் எல்லைக்குள்தான் உலகிலேயே சிறிய நாடும், பாதுகாப்புப் படையைக் கொண்டதுமான வத்திக்கான் தன்னாட்சி நாடும் அமைந்திருக்கின்றது. ஆதிகாலத்தில் இலத்தீன் மொழிதான் இங்கு பேசப்பட்டது, அதுவே திரிந்து, கலப்படைந்து அதிலிருந்துதான் இத்தாலிய மொழியும் பிறந்தது. பழைய கட்டடங்களில் இலத்தீன் எழுத்துக்கள்தான் காணப்படுகின்றன. ஐரோப்பாவில் காணப்படும் அனேகமான மொழிகளில் இலத்தீன் மொழியின் கலப்பைக் காணமுடியும். ஐதீகக் கதைகளின்படி உரோம நகரம் பொ.ஊ.மு.. 753-ம் ஆண்டு நிறுவப்பட்டது. ஓநாயின் பால் குடித்து வளர்ந்த இரட்டையர்களாகிய ரோமுலுஸ் மற்றும் ரிமுஸ் என்பவர்கள் இணைந்து இந்த நகரத்தை உருவாக்கியதாகத் தெரிகின்றது. அதன் நினைவாக, நான் சென்று பார்த்த பல இடங்களில் ஓநாயின் சிலைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. உரோம் சுமார் 500 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. 1946-ம் ஆண்டில் இருந்து இத்தாலியின் தலைநகராக இருக்கின்றது. 1927-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'உரோமா' உதைபந்தாட்டக் கழகத்தின் சின்னமாக இரண்டு குழந்தைகள் ஓநாயின் பாலைக் குடிக்கும் சின்னமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. 'ஐ லூப்பி' என்று இத்தாலிய மொழியில் அழைக்கப்படும் இந்த விளையாட்டுக் கழகத்திற்கு 'ஓநாய்கள்' என்றதொரு பெயருமுண்டு.

ஏகாதிபத்திய அரசாக ஒரு காலத்தில் இருந்த உரோமப் பேரரசு ஐரோப்பாவிலும் மத்திய தரைக் கடல் சூழ்ந்த பகுதிகளிலும் பரவியிருந்தது. இது இத்தாலி, இங்கிலாந்து, ஸ்பெயின், போத்துக்கல், பிரான்ஸ், கிறீஸ், துருக்கி, ஜெர்மனி, எகிப்து போன்ற பல பகுதிகளைக் காலத்திற்குக் காலம்



தனது ஆட்சியின் கீழ் வைத்திருந்தது. இந்தப் பேரரசின் மன்னனாக பொ.ஊ.மு.(கி.மு.) 44-ம் ஆண்டு வரை ஜூலியஸ் சீசர் இருந்தார். அதன் பின் பல மன்னர்கள் இந்தப் பேரரசை ஆண்டார்கள். பொ.ஊ.பி. 476-ம் ஆண்டுவரை இந்தப் பேரரசு நிலைத்து நின்றது. அதாவது பொ.ஊ.மு. 5-ம் நூற்றாண்டில் எழுச்சிகண்ட இந்தப் பேரரசு பொ.ஊ.பி. 4-ம் நூற்றாண்டு வரை நிலைத்து நின்றது. உரோம் ஒரு காலத்தில் மன்னராட்சியாகத் தொடங்கிக் குடியரசாக மாற்றமடைந்து, அதன் பின் பேரரசாக மாறியிருந்தது. கிரேக்க நாகரிகத்தின்



தொடர்ச்சியாக உரோம நாகரிகம் வளர்ந்ததாக ஆய்வாளர் குறிப்பிடுவர். இதுவே ஒரு காலத்தில் கத்தோலிக்க நாகரிகம் வளர்வதற்கும் உதவியாக இருந்தது.

சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பார்த்தால், அவர்களில் பற்றீசியன்ஸ், பிளிபியன்ஸ் என்று இரண்டு பிரிவுகள் இருந்தன. பற்றீசியன்ஸ் பெரியநிலச் சொந்தக்காரர்களாகவும், செல்வந்தர்களாகவும், ஆட்சியதிகாரம் கொண்டவர்களாகவும் இருந்தனர். பிளிபியன்ஸ் விவசாயிகளாகவும், சிறு வர்த்தகர்களாகவும், வறியவர்களாகவும் இருந்தனர். பல பிரிவுகளாக இருந்த இத்தாலியை ஒன்றிணைத்து ஆட்சி புரிந்தவர் விக்டர் இமானுவேல் என்ற அரசர். இவர் தான் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வித் திட்டத்தை அறிமுகம் செய்தவர். இவரைக் கௌரவிப்பதற்காக விக்டர் இமானுவேல் நினைவகம் ஒன்றை 1911-ம் ஆண்டு இங்கே கட்டியிருக்கின்றார்கள். சலவைக் கற்களால் கட்டப்பட்ட இந்த நினைவகத்திற்கு முன்னால் அரசர் விக்டர் இமானுவேல் குதிரையில் அமர்ந்திருப்பது போன்ற ஒரு சிலையையும் அமைத்திருக்கிறார்கள்.

இங்கே மூன்று வீதிகள் ஒன்றுசேரும் இடத்தில் ‘ட்ரிவி’ என்ற நீரூற்று அமைக்கப் பட்டிருக்கின்றது. சுமார் 1000-க்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு மணித்தியாலமும் இதைப் பார்வையிட வந்து போகிறார்கள். 1762-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பெற்ற இந்த நீரூற்றில் சமுத்திரக் கடவுளான ஓசியானசின் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு சிறகுகளைக் கொண்ட குதிரைகள் நெப்ரியூன் தேரை இழுத்துச் செல்வது போன்ற சிலை அழகானது. தங்களுடைய கனவுகள், ஆசைகள் நிறைவேற வேண்டும் என்று பிரார்த்தனை செய்து சில்லறைக் காசுகளை சிலர் தண்ணீரில் வீசுவதைக் காணமுடிந்தது. ஏஞ்சல்ஸ் அன்ட் டிமோன்ஸ், யூலியா ரொபேர்ட் நடித்த எலிசபெத் ஜில்பேர்ட்டின் ‘ஈற்பிறேலவ்’ போன்ற படங்களைப் பார்த்தவர்கள் இந்தக் காட்சிகளைப் பார்த்திருப்பார்கள்.

தமிழர்களுக்குக் காளை மாட்டை அடக்குவது வீர விளையாட்டாக இருப்பது போல, உரோமேனியர்களுக்கு மல்யுத்தம் வீர விளையாட்டாகத் தொன்றுதொட்டு இருக்கின்றது. இதைவிட வாள்சண்டை, அடிமைகளை விலங்குகளுடன் மோதவிடுவது போன்ற நிகழ்வுகளும் இங்கே இடம் பெற்றிருந்தன. இதற்காக அம்பித்தியேட்டர் என்று சொல்லப்படுகின்ற அரங்கங்களை அமைத்து, அங்கே பார்வையாளர்களின் முன் சண்டை பிடிப்பதற்கு இந்த அடிமைகளைப் பாவித்தார்கள், ஆனால் இந்த அடிமைகள் வெள்ளை நிறத்தவர்கள். சண்டை பிடிப்பவர்களைக் ‘கிளாடியேட்டர்’ என்று இவர்கள் அழைத்தனர். இதற்காக பொ.ஊ.பி. முதலாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட 150 அடி உயரமான, உலக அதிசயத்தில் ஒன்றான, கொலோசியம் என்ற கட்டடத்தின் ஒரு பகுதி இப்பொழுதும் அழியாமல் இருக்கின்றது. இந்தக் கட்டடம் சுமார் 80,000 பொதுமக்கள் நிகழ்வில் பங்குபற்றக் கூடியதாக அமைந்திருந்தது. நிலக்கீழ் அறைகளில் விலங்குகளையும், அடிமைகளையும் விலங்கிட்டு வைத்ததற்கான அடையாளங்கள் இப்பொழுதும் இருக்கின்றன. கட்டடக் கலையைப் பாராட்டினாலும், வரலாறு தெரிந்தவர்கள், அந்த நாட்களில் அடிமைகளை எப்படிச் செல்வந்தர்கள் நடத்தினார்கள் என்பதை எடுத்துச் சொல்லும் இரத்தக்கறை படிந்த ஒரு நினைவுச் சின்னமாகவே இதைப் பார்க்கிறார்கள்.

புளோரன்ஸ் மாகாணம் துஸ்கனி பிரதேசத்தில் இருக்கின்றது. சுமார் 4 லட்சம் மக்கள் இங்கே வசிக்கிறார்கள். உரோமை விட அதிக கலைச் சிற்பங்களை இங்கே காணக்கூடியதாக இருந்தது. மைக்கல் ஏஞ்சலோவின் புகழ்பெற்ற ‘டேவிட்’ சிலையும் இங்கேதான் இருக்கின்றது. தேர்த் திருவிழாவில் சனங்களை விலத்துவது போல வீதிகள் எல்லாம் ஒரே சனக் கூட்டமாக இருந்தது. ஒரு காலத்தில் ஐரோப்பாவின் வர்த்தக மத்திய பகுதியாக இது விளங்கியது. பல ஆண்டு காலமாக மெடிசி அரச பரம்பரையால் ஆளப்பட்டு வந்தது.

புளோரன்ஸ் மாகாணத்தில் இருந்து சுமார் ஒரு மணி நேரப் பயணத் தூரத்தில் பிரபலமான பிஸா சாய்ந்த கோபுரம் இருக்கின்றது. இந்தக் கோபுரத்தைக் கட்டுவதற்கு 1173-ம் ஆண்டு அத்திவாரம் போடப்பட்டு, 1372-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 185 அடி உயரமான இந்தக் கோபுரம், அத்திவாரம் பலமாக இல்லாததால் இப்பொழுது சற்றுச் சாய்ந்த நிலையில் இருக்கின்றது. அதனால்தான் இதைச் சாய்ந்த

கோபுரம் என்று அழைக்கிறார்கள். மேலே ஏறிச் செல்வதற்கு 296 படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

12-ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்தக் கோபுரம் 14-ம் நூற்றாண்டில் 5.5 டிகிரி வரை மெல்ல மெல்லச் சரியத் தொடங்கியிருந்தது. நவீன முறைகளைக் கையாண்டு அத்திவாரம் பலப்படுத்தப்பட்டதால், 2008-ம் ஆண்டில் இருந்து கோபுரம் மேற்கொண்டு சரிவது நிறுத்தப்பட்டது. இன்னும் 200 வருடங்கள்வரை தாக்குப் பிடித்துப் பாதுகாப்பாக இருக்கும் என்று கட்டடக் கலைஞர்கள் நம்புகின்றார்கள். நான்கு தடவைகள் இப் பகுதி புவியதிர்வால் தாக்கப்பட்டாலும், அதன் காரணமாக கோபுரம் பாதிக்கப்படவில்லை. எந்த நேரமும் கோபுரம் சரிந்து விழலாம் என்று சில ஊடகங்கள் நம்புவதால், அதை நோக்கிக் கமெராக்களைப் பொருத்தி இருக்கிறார்கள். சுற்று



லாப் பயணிகள் சிலர் சரிந்த கோபுரத்தைத் தாங்கிப் பிடிப்பது போலப் போஸ் கொடுத்துப் படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். நானும் எனது பங்குக்குக் கோபுரத்துடன் சில படங்களை எடுத்துக் கொண்டேன்.

இத்தாலியில் நிறையவே மலைகளும், குன்றுகளும் இருக்கின்றன. பாதுகாப்புக் கருதி அனேகமான மக்கள் சிறு குழுக்களாகக் குன்றுகளிலேதான் வாழ்ந்தார்கள். குன்றுகளின் உச்சியில் கோட்டை போலப் பாதுகாப்பு மதில்களைக் கட்டி அதற்குள்தான் வாழ்ந்திருக்கிறார்கள். இப்பொழுதும் அவர்களின் பரம்பரையினர் வாழும் அந்த நகரங்களைச் சென்று பார்க்க முடிந்தது. உள்ளே தண்ணீர் வசதிகள், தேவாலயங்கள், உணவகங்கள், பாடசாலைகள் எல்லாம் இருக்கின்றன. சில குன்றுகளில் பிரபலமான 'சிலபடீஸ்' என்று அழைக்கப்படுகின்ற பெரிய பணக்காரர்கள் ஆடம்பர மாளிகைகளை அமைத்திருக்கிறார்கள். லொஸ்ஏஞ்சலில் இருந்து விடுமுறைக் காலங்களில் அங்கு சென்று தங்குகிறார்கள். இத்தாலியில் அனோகமான வீதிகளை மலைகளைக் குடைந்து சுரங்கப் பாதைகளாக அமைத்திருக்கிறார்கள்.

தலைநகரான உரோமின் தெற்கே நேப்பிள்ஸ் நகரம் இருக்கின்றது. இது இத்தாலியின் மூன்றாவது பெரிய நகரமாகவும், இத்தாலியின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றாகவும், நாபொலி மண்டலத்தின் தலைநகராகவும் இருக்கின்றது. சுமார் 2,800 ஆண்டுகள் பழமைவாந்த இந்த நகரம் சுமார் 45 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. 4200 அடி உயரமான 'வெசுவியஸ்' எரிமலை இங்கேதான் இருக்கின்றது. பொ.ஊ.மு. 79-ம் ஆண்டு இந்த எரிமலை வெடித்தபோது பல உயிர்களைப் பலி எடுத்தது. பொம்பி, ஹேக்குலியம் போன்ற நகரங்கள் எரிமலைச் சாம்பலால் அப்படியே மூடப்பட்டிருந்தன. சாம்பலால் மூடப்பட்ட பல மனித உடம்புகளைச் சமீபத்தில் ஆய்வாளர்கள் கண்டெடுத்துக் காட்சிப்படுத்தி இருக்கிறார்கள். லெட்டினால் செய்யப்பட்ட குழாய்களைத் தண்ணீர் பாவனைக்காக அந்த நாட்களில் பயன்படுத்தி இருக்கிறார்கள். மாபிள் கற்களில் அந்த நாட்களில் பதியப்பட்ட பல விடயங்களை அங்கே காணமுடிந்தது. மிகப்பெரிய ஆட்டுக்கல், உணவகம், வெதுப்பகம், சிவப்பு விளக்குப் பகுதி, நீதிமன்றம் போன்றவற்றையும் நிலமட்டத்தின் கீழ் காணமுடிந்தது. ஹஸேட்டா என்ற இடத்தில் உள்ள 1752-ம் ஆண்டு கட்டப்பட்ட அரசமாளிகை 5 மாடிகளையும், 1200 அறைகளையும் கொண்டது. மிகப் பெரிய பூங்காவோடு கூடிய இந்த மாளிகையில் 1742 யன்னல்கள் இருக்கின்றன. இப்போது காட்சியகமாக இதைப் பாவிக்கிறார்கள்.

பியாஸ்ஸா டெல்லே எர்பேயில் வெரோனா என்ற இடத்தில் யூலி யட்டின் வீடு இருக்கின்றது. யார் இந்த யூலியட் என்று நீங்கள் யோசிக்கலாம். சேக்ஸ்பியரின் 'ரோமியோ யூலியட்' நாடகம் பலருக்குத் தெரிந்திருக்கும். இந்த வீட்டிலே ஒரு சிறிய பல்கனி இருக்கின்றது. அதில் நின்றுதான் ரோமியோவை அவள் பார்த்திருக்கலாம் என்று நம்புகின்றார்கள். காதல் ஜோடிகள் பலரும் ஆர்வத்தோடு அதைச் சென்று பார்க்கின்றார்கள். எனக்குக் கம்பராமாயண வரிகள் நினைவில் வந்தது. 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்ற வரிகளை எண்ணிப் பார்த்தேன். காதலர்களுக்கும் பல்கனிக்கும் இப்படி எத்தனையோ தொடர்புகள் இருக்கலாம், யாரறிவார்?

இத்தாலியின் வடகிழக்குப் பகுதியில் வெனிட்டோ பகுதியின் தலைநகராக வெனிஸ் நகரம் இருக்கின்றது. சேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் வெனிஸ் நகரம் இதுதான். சுமார் 117 குட்டித் தீவுகளை அது உள்ளடக்கியது. 160 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. வீதிகளுக்குப் பதிலாகப் பெரும்பாலும் வாய்க்கால்களே இருக்கின்றன. அதனால் அதிகமான பாலங்களும் இங்கே இருக்கின்றன. விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்தால், வண்டிகளுக்குப் பதிலாகப் படகுகள் காத்திருந்தன. படகுகள் பயணிக்கக் கூடியதான சுமார் 150 வாய்க்கால்கள் இங்கே இருக்கின்றன. இதனால் இதைக் கால்வாய்களின் நகரம் என்று அழைக்கிறார்கள். 2019-ம் ஆண்டு வீசிய கடுமையான புயற் காற்றால் பல இடங்களில் கடல் நீர் புகுந்ததால், பெரும்பகுதி பாதிப்படைந்திருக்கிறது. பிரபல வணிகரான மார்கோபோலோ 1254-ம் ஆண்டு இங்கே தான் பிறந்தார். கடல் சார்ந்த அருங்காட்சியகம் ஒன்று இங்கே இருக்கின்றது.

வரலாற்றில் இடம் பெற்ற கிறிஸ்ரோபர் கொலம்பஸ், லியநாடோடாவின்ஸி, மைக்கேல் ஏஞ்சலோ, ஜிஜேவானி பெலினி, கலிலியோ, முஸோலினி, ஸோபியா லோறன் போன்றவர்கள் இத்தாலியில்தான் பிறந்தார்கள்.

உசாத்துணை:
https://en.wikipedia.org/wiki/Italy



kuruaravindan@thaiveedu.com




# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

*We've Moved*
*Our New Address*

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள் பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You

# மூன்று தசாப்த காலத்து அனுபவங்களை வெளிக்காட்டிய ஓவியங்களின் காட்சி



## - து. கௌரீஸ்வரன்

கடந்த மூன்று தசாப்த காலத்து ஈழத்து அனுபவங்களை வெளிக்காட்டிய ஓவியங்களின் காட்சி : மட்டுநகரில் நடைபெற்ற கமலா வாசுகியின் ஓவியக்கண்காட்சியை முன் வைத்து.

கடந்த 2023 ஏப்பிரல் 05-ந் திகதி தொடங்கி 10-ந் திகதி வரைக்கும் இலங்கையின் மட்டக்களப்பில் பிரபல ஓவியக் கலைஞர் கமலா வாசுகி அவர்களின் ஓவியங்களின் காட்சி, நகரின் லேடிமனிங் வீதியிலுள்ள இல்லம் ஒன்றில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இக்கண்காட்சியை பல்வேறு தரப்பினரும் ஆர்வத்துடன் வந்து பார்வையிட்டுத் தமது கருத்துக் களையும் பதிவு செய்துள்ளார்கள். குறிப்பாகப் புதிய இளந் தலைமுறையினைச் சேர்ந்தவர்கள் பலரும் ஊடகங்கள் வாயிலாக இக்கண்காட்சி குறித்த தகவல்களை அறிந்து ஆர்வத் துடன் வந்து, குறிப்பிட்ட நேரம் ஓவியங்களை ஆழமாக அவதானித்து இரசித்துச் சென்றமையினைக் காணமுடிந்தது. அதிகளவானோர் ஆர்வத்துடன் பார்வையிட்ட இக்கண்காட்சியானது ஆறு நாட்களுக்கு நடைபெற்ற ஒரு தனிநபர் ஓவியக் கண்காட்சியாக கவனிப்புப்பெறுகின்றது. மட்டுநகரில் ஓவியங்களை இரசிக்கும் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த கணிசமான எண்ணிக்கையிலான ஆர்வலர்கள் வாழ்ந்துவருகின்றதை நிரூபித்த மற்றுமொரு முக்கியமான ஓவியக்கண்காட்சியாக இது அமைந்திருந்தது.

ஓவியக்கண்காட்சி நடைபெற்ற வாவிக்கரையினை அண்டிய சூழலும், வீடும் ஒவ்வொருவருக்கும் அதிக நேரம் ஓவியங்களை இரசிப்பதற்கான ஏது நிலைகளை இயல்பாகவே வழங்கியிருந்தது. கடந்த மூன்று தசாப்த காலத்து அனுபவங்களைத் தொகுத்துக் காட்சியாக்கிய இக்கண்காட்சியில் ஓவியங்களின் தொகுப்பாக்கம் கண்காட்சி நடைபெற்ற வீட்டின் பௌதீகத் தன்மையினைக் கருத்திற் கொண்டு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதாவது காட்சிக் கூடத்தின் முன்பகுதியில் திண்ணையில் ஓவியர் அ. மாற்கு அவர்களின் பிரதிமை ஓவியமும் அவருடைய சில ஆக்கங்களும் வைக்கப்பட்டு, ஓவியர் மாற்கு நினைவு கூரப்பட்டிருந்தார். அதையடுத்து வீட்டின் முன் பகுதியினுள் 1980-களில் ஆக்கப்பட்ட படைப்புக்களும் அதையடுத்து பெண்களின் வல்லமைகளைப் பேசும் படைப்புக்களும், அடுத்து ஓவியத்தை ஊடகமாகக் கொண்டு பெண்கள் குழுக்களுடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளூடாக உருவாக்கம் பெற்ற ஓவிய, தானபக்/(தாபனக்?) கலையாக்கங்களும் இடம்பெற்றிருந்தன. அடுத்ததாக கேலிச்சித்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இத்துடன் அறையொன்றினுள் இலத்திரனியல் காட்சித் திரையில் கமலா வாசுகி அவர்களால் ஆக்கப்பட்டு இக்கண்காட்சியில் காட்சிப்படுத்த முடியாமல்ப் போன ஓவியங்களின் ஒளிப்படங்கள் நேர வரையறையுடன் காட்சிப்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது.



இக்கண்காட்சியில் மிகப்பெரும்பாலும் கமலா வாசுகி அவர்கள் கடந்த மூன்று தசாப்த காலத்தினுள் தனியாக உருவாக்கிய ஓவியங்களும், ஓவியத்தை ஊடகமாகக் கொண்டு பெண்கள் குழுக்களுடன் மேற்கொண்ட கலையாக்கச் செயற்பாடுகளின் போது உருவாக்கம் பெற்ற ஆக்கங்களும், கேலிச்சித்திரங்களும் இடம்பெற்றிருந்தன.

ஒரு பெண் தனது வாழ்க்கைக் காலத்தில் பல்வேறு பணிச்சுமைகளுடன் ஒரு கலைஞராகவும் வாழ்வது என்பது மிகுந்த சவாலுக்குரியது. இந்த வகையில் தனியாக நேரம் ஒதுக்கி



ஓவியங்களை வரைவது என்பது ஒரு பெண்ணைப் பொறுத்த ளவில் மிகுந்த சவால்களுடனேயே சாத்தியமாகக் கூடியது. ஒரு பெண்ணிலைவாதியாக சமூகங்களின் பல்வேறு மட்டங்க ளுடனும் கடந்த மூன்று தசாப்த காலமாக ஓய்வின்றி இயங் கிக் கொண்டிருக்கும் கமலா வாசுகி அவர்கள், இவ்வளவு



ஓவியங்களைப் படைத்துள்ளமை என்பது கவனத்திற்குரிய விடயமாகவே உள்ளது. நீண்ட நேரம் ஒதுக்கி ஓவியங்க ளைப் படைப்பதற்கான காலமும் நேரமும் வாய்க்காத போதும், தனது படைப்பாக்கங்களை நேரம் கிடைக்கும் போது உருவாக்கியமைக்கான உதாரணங்களாகவே இவரு டைய கேலிச் சித்திரங்கள் காணப்படுகின்றன.

செயற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கி இயங்கிவரும் ஒரு பெண்ணிலைவாதியாகவும், கலைஞராகவும் கமலா வாசுகி அவர்கள் விளங்குகின்றார். இப்பின்புலத்திலேயே இவருடைய படைப்பாக்கங்களின் கன திகளையும் நாம் காண வேண்டி இருக்கின்றது.

இக்கண்காட்சியில் பெண்களின் வல்லமைகள் தொடர்பாக ஆக்கப்பட்ட ஓவியங்கள் பெண்கள் சார்ந்து கட்டமைக்கப்பட் டுள்ள ஆணாதிக்கச் சிந்தனைகளைக் கேள்விகளுக்குட்ப டுத்தி, பெண்கள் கட்டுப்பாடுகள் வரையறைகள் கடந்த ஒரு சுதந்திரமான உயிர் என்பதை உணர்த்துவதாகக் காணப்பட் டன. அதாவது குடும்பம் எனும் அலகிலிருந்து நாடு எனும் பெரிய அமைப்பு வரை பெண்களின் வல்லமைகள் பல்பரி மாணங்களையுடையதாக இருந்து வருகின்றது. ஒவ்வொரு உயிரினதும் உருவாக்கம் தொடங்கி அதன் ஆரோக்கிய மான வளர்ச்சிக்கும் ஆபத்துக்கள், அழிவுகள், சவால்கள் என்பவற்றிலிருந்து மீண்டெழுவதற்கான செயற்பாடுகள் முத லானவற்றிலும் பெண்களின் வல்லமைகள் கணக்கிட முடியா தனவாகக் காணப்படுகின்றன. ஆனால் ஆணாதிக்கச் சிந் தனை மையப்பட்ட வெகுசனக் காட்சி வெளிகளில் பெண்க ளின் வல்லமைகளைக் காண முடியாத நிலைமைகள் வலுப் படுத்தப்பட்டு, பெண்களின் உடலை வைத்து வணிகமும் விளம்பரங்களும் பெருகிவரும் பின்புலத்தில் பெண்ணுடல் குறித்ததான ஆதிக்கப் பண்பாட்டை நிராகரித்து பெண்களி னுடைய வல்லமைகளின் பல்பரிமாணங்களை எடுத்துணர்த் திப் பெண்ணைச் சுதந்திரமுள்ள ஓர் உயிராகக் காண்பதற் கான காட்சிகளாகப் பெண்களின் வல்லமைகள் எனும் பல் வேறு ஓவியங்களும் விளங்கியிருந்தன.

ஈழத்தின் சமூக பொருளாதார அரசியல் வரலாற்றில் நடந்தே றிய குறிப்பிடத்தக்க கசப்பான அனுபவங்களின் மறுக்கவிய லாத மனச்சாட்சியின் பதிவுகளாக அமையும் கலைப்படைப் புக்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. அதாவது இந்திய அமைதிப்படைக் காலத்தில் யாழ்பல்கலைக்கழகத் தில் நடைபெற்ற மாணவர் போராட்டத்திற்கு எதிரான இரா ணுவ அடக்குமுறை, 1990-களில் நடைபெற்ற கொக்கட்டிச் சோலைப் படுகொலை, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை, பல்வேறு தரப்



பினரும் சிறுவர்களைப் போர் நடவடிக்கைகளுக்குப் பயன்ப டுத்துவதற்காகப் பலவந்தமாகப் பிடித்தமை, காணாமலாக் கப்பட்டவர்களும் அவர்களைத் தேடும் அவலமும், பெண்க ளுக்கு எதிராக நடைபெற்றுவரும் பாலியல் வன்கொடுமை கள், மட்டுநகரில் 2000-ம் ஆண்டு வெசாக்தினத்தன்று நடை பெற்ற அவலமான இழப்புக்கள், சாதி ரீதியான ஒடுக்கு முறை என வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளின் சாட்சி







யங்களாக இந்த ஓவியக்கண்காட்சியின் படைப்புக்கள் விளங்கியிருந்தன.

இந்த ஓவியங்கள் ஒவ்வொன்றும் அது வெளிப்படுத்தும் வரலாற்று நிகழ்வையும் சம்பவத்தையும் ஆழமாகத் தேடுவதற்கான வழிகளைத் திறந்து கொடுப்பதாக இருக்கின்றன. ஆதிக்கத்தினதும் அடக்கு முறைகளினதும் வரலாற்று உண்மைகளைச் சரியாக அறிவதே அத்தகைய அவலங்கள் தொடராமல் ஆக்கபூர்வமாக எதிர்காலத்தை வடிவமைக்க ஏதுவாக இருக்கும் இதற்காகவே வரலாறு பற்றிய அக்கறை அதிகமாக செலுத்தப்பட்டு வருகின்றது. பெண்ணிலைவாதிகள் பெரும்பாலும் தாம் வாழும் காலத்தின் வரலாற்று நிகழ்வுகளை ஆதிக்கங்களுடன் சமரசஞ் செய்து வரலாற்றுத் திரிபுபடுத்தல்களுக்கான மூலங்களை உருவாக்காமல், உண்மையாக மானுடநேயத்துடன் வெளிப்படுத்திப் பதிவாக்கி வருவதனைக் காண்கின்றோம்.

இந்தவகையில் இலங்கைத்தீவில் மூன்றுதாப்த காலமாக உள்நாட்டுப் போர் உருவாகி வளர்ந்த காலத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணிலைவாதியினால் ஆக்கப்பெற்ற படைப்புக்களாக இவை ஒவ்வொன்றும் உள்ளன. இதனால் இப்படைப்புக்கள் ஆதிக்கத்திற்கும் அடக்குமுறைகளுக்கும் எதிரான கலைத்துவ வெளிப்பாடுகளாக அமையும் அதேவேளை வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் நடந்தேறிய ஆதிக்கம் மற்றும் அடக்குமுறைகளினுடைய கசப்பான அனுபவங்களின் சாட்சியங்களாகவும், ஆவணங்களாகவும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்றன. இதனால் இந்த ஒவ்வொரு ஓவியங்களும் காலத்தால் அழியாத நிராகரிக்கமுடியாத கலைப்படைப்புக்களாகக் கவனிப்புப் பெறுகின்றன.

இந்த ஓவியக்கண்காட்சியில் கேலிச்சித்திரங்கள் பலவும் அதற்கென பிரத்தியேக அறையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கேலிச்சித்திரங்கள் இலகுவாகவும் ஆழமாகவும் விடயங்களைப் பார்வையாளர்களிடத்திலே கொண்டு சேர்க்கும் கட்புல ஊடகமாக விளங்குவதால், இதனைப் பலரும் கவனித்துப் பார்க்கிறார்கள். தமிழ்ச் சூழலில் கேலிச் சித்திரங்கள் என்பவை மிகப்பெரும்பாலும் ஆணாதிக்கச் சிந்தனைகளுடன் ஆக்கப்பட்டுப் பரவலாகி வருவதையே காண்கிறோம். ஆனால் கமலா வாசுகி அவர்கள் கேலிச் சித்திரங்களை வரைவதில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டிய பின்புலத்தில் பெண்ணிலைவாதச் சிந்தனைகளுடன் கருத்துச்செறிவுடைய பல சித்திரங்களை வரைந்து அதனைச் சமூக ஊடகங்களில் பகிர்ந்து வந்தார். ஓய்வின்றிய வேலைகளுக்கு மத்தியிலும் மனதில் தோன்றும் எண்ணங்களைப் படைப்பாக்குவதில் கேலிச்சித்திரங்கள் கைகொடுப்பதால் இவர் பல்வேறு கேலிச்சித்திரங்களை ஆக்கி வருகின்றார். இந்தக்கேலிச் சித்திரங்கள் சமகாலச் சூழலில் மனிதர்கள், இயற்கை, பொருளாதாரம், அரசியல், பண்பாடு என்று பலதரப்பட்ட விடயங்களையும் பெண்ணிலைவாத அனுபவங்களுடன் வெளிக்கொணர்பவையாகக் காணப்படுகின்றன. இந்தக்கேலிச் சித்திரங்கள் ஒவ்வொன்றும் பெண்ணிலைவாதத்தை சமகாலத்து உலக நிலவரங்களுடன் தொடர்புறுத்தி இலகுவாக விளங்கிக்கொள்வதற்கான படைப்புகளாகவும் விளங்குகின்றன. ஓவியத்தில் ஆர்வங்கொண்டு கண்காட்சிக்கு வந்த இளந்தலைமுறையினர் பலர் இந்தக் கேலிச்சித்திரங்களை அதிக நேரம் அவதானித்ததையும் அவற்றை ஒளிப்படம் எடுத்துக் கொண்டதையும் காணமுடிந்தது.

இவ்வாறு ஆக்கபூர்வமான அனுபவங்களை வழங்கிய கலைச் செயற்பாடாக் கமலா வாசுகியின் ஓவியக் கண்காட்சி மட்டுநகரில் நடந்தேறியுள்ளது.



gowrieeswaran@thaiveedu.com




**ஆய்வுத்துறைப் பங்களிப்புகளோடு தமிழிலும் தொடர்ச்சியாக எழுதிவருபவர் பேராசிரியர் சண்முகரத்தினம் (சமுத்திரன்). சர்வதேச அரசியல், பொருளாதாரம், அபிவிருத்தி சூழலியல், போர் முரண்பாடுகள், இலங்கை அரசியல், இனமுரண்பாடு, பௌத்த சிங்களப் பெருந்தேசியவாத மேலாதிக்கம், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம், மார்க்சியச் சிந்தனைகள், கலை-இலக்கிய விமர்சனங்கள் உள்ளிட்ட பேசுபொருட்களில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவந்துள்ளார். அவருடைய ஆய்வுகளும் எழுத்துகளும் தமிழ் அரசியல், சமூகப் பொருளாதார மீள் சிந்தனைகளுக்குச் செழுமையான பங்களிப்பினை வழங்குவன. உரையாடல்களுக்கு வழிகோலும் தன்மையுடையன.**

மார்ச் 25.03.23 அன்று நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் பேராசிரியர் ந. சண்முகரத்தினம் (சமுத்திரன்) அவர்களின் நான்கு நூல்களின் அறிமுக நிகழ்வும் அதனைத் தொடர்ந்து அவருடனான உரையாடல் நிகழ்வும் நடைபெற்றன. கவிதா லட்சுமியின் தலைமையில், எஸ்.கே. விக்னேஸ்வரன், மைத்ரேயி சபாரட்ணம், சபேசன் மற்றும் இப்பத்தியாளர் ஆகியோர் நூல்களின் அறிமுக உரைகளை ஆற்றினர். சமுத்திரனுடனான உரையாடலை மருத்துவக் கலாநிதி ச. விமலநாதன் நெறிப்படுத்தியிருந்தார்.



- ‘இலங்கைத் தேசிய இனப் பிரச்சினை: சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் அடிப்படைகளும் மேலாதிக்கமும்’
- ‘இலங்கை: மீள் சிந்திப்பிற்கான சில முன்மொழிவுகள்’
- ‘சர்வதேச அரசியல் பொருளாதாரம்
- ‘கலை, இலக்கியம், சமூகம், அரசியல்’ - விமர்சனப் பார்வை

எனும் தலைப்புகளில் நான்கு நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

இலண்டன் ‘சமூகம் இயல்’ பதிப்பகத்தினர் நூல்களைத் தொகுத்துப் பதிப்பித்து வெளியிட்டிருந்தனர். பதிப்பாளர் பௌசரினதும் அவரது குழுவினரதும் பணியும் உழைப்பும் பெரியது.

பேராசிரியர் சண்முகரத்தினம் நோர்வேயில் வாழ்கின்ற சிந்தனையாளர், மார்க்சிய அறிஞர். நோர்வேயின் கல்வித் துறைக்குப் பெரும் பங்களிப்பினை வழங்கியுள்ளவர். சர்வதேச மட்டத்தில் அறியப்பட்ட கல்வியாளர். நோர்வேயின் Aas-ல் அமைந்துள்ள சூழலியல் மற்றும் உயிரியல் விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தில் (Norwegian University of Life Sciences) ஆய்வுத் துறைத் தலைவராகக் கடமையாற்றியவர். பர்கன் நகரில் அமைத்துள்ள ‘Christian Michelsens institute - CMI’ ஆய்வுமையத்தில் ஆய்வாளராகப் பணியில் இருந்தவர்.

போராசிரியர் குறித்துத் தனது தொகுப்புரையிற் கவிதா குறிப்பிடும் போது...,

‘நோர்வேப் பல்கலைக்கழகங்களுக்கும் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குமிடையிலான சில கூட்டுச் செயற்பாடுகளுக்கான முன் கையெடுப்பினை மேற்கொண்டவர். இலங்கை மாணவர்கள் உட்பட்ட வளர்முக நாடுகளிலிருந்து மாணவர்கள் கல்வியுதவித்தொகை பெற்று நோர்வேப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெறுவதற்கான சில திட்டங்களுக்கும் வழி கோலியவர். நோர்வே மற்றும் சர்வதேச மட்டத்திலான பல மனிதாபிமான மற்றும் உதவி நிறுவனங்களின் ஆலோசகராகவும் பங்களித்துள்ளார். இலங்கையில் பல்கலைக்கழகக் காலத்தில் மாணவரணித் தலைவராகப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர். அதனாற் கைது செய்யப்பட்ட சம்பவமும் உள்ளது’ என்றார்.

இவருடைய ஆளுமைக்கும் கருத்தியல் பார்வைக்கும் அடிப்படையாக இளமையிலிருந்து அவரிடம் ஆழமான வாசிப்புப்



பழக்கம் இருந்திருக்கின்றது என்பதை பேராசிரியரின் மகனும் ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ஜொகான் சண்முகரத்தினம் தனது 'நாம் இன்னும் சுவாசிக்கின்றோம்' (Vi puster fortsatt) எனும் தன்னனுபவ நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார் என்பதையும், 'நூலகத்தில் அதிக நேரத்தைச் செலவிடுவது அவரின் வழக்கம். பெரும்பாலானவர்கள் மத்தியில் அதிக கவனம்பெறாத இலக்கியங்களை நூலகத்திலேயே ஆழமாக கக்கற்றார். சாதிய அமைப்பு மற்றும் வர்க்கப் பாகுபாடு









டைய சமூக அமைப்பு மீது கோபம் கொண்டார்' என ஜொகான் தனது நூலில் எழுதியிருந்தமையையும் கவிதா மேற்கோள் காட்டினார்.

சண்முகரத்தினம் அவர்கள், இலங்கையிலும் ஜப்பானிலும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பினை மேற்கொண்டவர். ஜப்பானில் ஆய்வுத்துறையில் பணியாற்றியுள்ளார். கல்வியியல், ஆய்வுத்துறைப் பங்களிப்புகளோடு தமிழிலும் தொடர்ச்சியாக எழுதிவருபவர். சமுத்திரன் என்ற புனைபெயரிற்தான் தமிழில் அவர் அதிகம் எழுதியுள்ளார். சர்வதேச அரசியல், பொருளாதாரம், அபிவிருத்தி, சூழலியல், போர் முரண்பாடுகள், இலங்கை அரசியல், இனமுரண்பாடு, பௌத்த சிங்களப் பெருந்தேசியவாதத்தின் மேலாதிக்கம், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம், மார்க்சியச் சிந்தனைகள், கலை-இலக்கிய விமர்சனங்கள் உள்ளிட்ட பேசுபொருட்களில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவந்துள்ளார். அவ்வெழுத்துகளே நான்கு நூல்களாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன.

அவருடைய ஆய்வுகளும் எழுத்துகளும் தமிழ் அரசியல், சமூகப் பொருளாதார மீள் சிந்தனைகளுக்குச் செழுமையான பங்களிப்பினை வழங்குவன. பரந்த தளங்களில் உரையாடல்களுக்கு வழிகோலும் தன்மையுடையவை.

## இலங்கைத் தேசிய இனப் பிரச்சினை: - சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் அடிப்படைகளும் மேலாதிக்கமும்

1983 ஜூலை இனக்கலவரத்தை அடுத்து எழுதப்பட்ட நீண்ட கட்டுரையே இத்தொகுப்பு. சண்முகரத்தினம் அவர்கள் ஜப்பானில் வசித்த காலத்தில் இதனை எழுதியுள்ளார். நிறுவனமயமாகிவிட்ட சிங்களப் பெருந்தேசியவாத்தின் தோற்றுவாயையும் அதன் அடிப்படைகளையும் வளர்ச்சிப் போக்கினையும் பேசுகின்றது.

பௌத்த-சிங்களப் பெருந்தேசியவாதம் நிறுவனமயப்பட்டமைக்குப் பின்னால் உள்ள அரசியல் வரலாற்றினையும் சமூகப் பொருளாதார, மத அம்சங்களையும் ஆராய்கின்றது இந்நூல். 'இனவாதம்' மேலாதிக்க நிலையை அடைந்த அக-புற நிலைகளை விளக்குகின்ற நூலாக இது உள்ளது. மட்டுமல்லாமல் நிறுவனமயப்பட்ட ஒரு கருத்தமைவாகவும் (ideology) அதன் அம்சங்கள் பேசப்படுகின்றன.

இந்நூல் குறித்து நா. சபேசன் கருத்துரை ஆற்றியிருந்தார்:

இலங்கையின் இனப்பிரச்சினையை விளங்கப்படுத்தக்கூடிய இடதுசாரித் தலைவர்கள் எம்மிடையே இருக்கவில்லை. இனப் பிரச்சினை கொழுந்துவிட்டெரியத் தொடங்கிய காலத்

தில் அது பற்றிய புத்தகங்களே பெரிதாக வெளிவரவில்லை. 1983-ற்கு முன்னர் வந்த புத்தகம், ஆபிரிக்க நாடுகளில் நீதி பதியாகவிருந்த சச்சி பொன்னம்பலம் ஆங்கிலத்தில் எழுதிய புத்தகம் தான் முதலாவது புத்தகமாகும். அத்தகைய சூழ லிற்தான் பேராசிரியர் எழுதிய இந்த நூல், சிங்கள மேலா திக்கவாதம் எவ்வாறு இலங்கையிலே வேரூன்றியது என்ப தைத் தமிழிலே சொன்ன முதல் நூலாக வெளிவந்தது. தேசிய விடுதலை பற்றிய ஆழமான கருத்துகள் இந்நூலில் முன்வைக்கப்படுகின்றன.

இது ஒரு அரசியல் வழிகாட்டியாகவும் கணிசமான முக்கியத் துவம் பெறுகின்றது. இன்றைக்கு நாம் திரும்பிப் பார்க்கின்ற போதும்கூட, சிங்களப் பெருந்தேசியவாதம் எவ்வாறு தன் னைத் தகவமைத்துக் கொண்டிருக்கின்றது. தமிழர்களின் நாற் பதாண்டுகால யுத்தம், அதன் தோல்வி போன்றவற்றை ஆழ மாக மீள்சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் ஈழத்தமிழ்ச் சமூ கம் இருக்கின்றது. இந்த நூல் அவ்விடயங்களில் முக்கிய மான பங்களிப்புகள் பலவற்றைச் செய்திருக்கின்றது என்றார் சபேசன்.

## கலை, இலக்கியம், சமூகம், அரசியல் - விமர்சனப் பார்வை

அவ்வப்போது பேராசிரியர் எழுதிய கலை இலக்கியப் பார் வைகளும் விமர்சனங்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள் ளன. கால அடிப்படையிற் பார்க்கும் போது 1976 - 2021



வரையானவை. 12 கட்டுரைகளில் பெரும்பாலானவை கலை இலக்கியம் சார்ந்த விமர்சன மற்றும் மதிப்பீடுகள். ஏனை யவை சமூக, அரசியல் சார்ந்தவை.

கால அளவில் ஒன்றுக்கொன்று பெரும் இடைவெளி கொண் டவை இக்கட்டரைகள் எனும் போதும், ஈழ மற்றும் புலம் பெயர் கலை இலக்கியப் போக்கில் நிகழ்ந்த மாற்றங்களை இவற்றினூடாக உணர்ந்து கொள்ள முடியும். மட்டுமல்லா மல், சர்வதேச அரசியல், சூழலியல், அபிவிருத்தி, மார்க்சிச அறிஞர் ஒருவரின் கலை இலக்கிய ரசனை மற்றும் மதிப்பீ டுகள் என்ற வகையிலும் இக்கட்டுரைகளுக்கு முக்கித்துவம் உள்ளது.



இந்நூல் குறித்த அறிமுகத்தினை வழங்கியிருந்தார் மைத் ரேயி சபாரத்தினம்:

நூலின் உள்ளடக்கம், அதில் பிரதிபலிக்கும் வரலாற்றுப் பார்வை, புலம்பெயர் வாழ்வை ஆவணப்படுத்தலில் அக்கட் டுரைகளின் பங்களிப்பு என மூன்று அடிப்படைகளில் அந் நூல் பற்றிய தனது பார்வையினை மைத்ரேயி பகிர்ந்திருந் தார். கலை இலக்கியம் சார்ந்த 12 கட்டுரைகளைக் கொண்ட நூலில் சமுத்திரன் தான் வாசித்து ரசித்த நூல்கள், பார்த்து மகிழ்ந்த அரங்க நிகழ்வுகள், அவதானித்த புலம்பெயர் இலக்கியப் போக்குகள் தனது மனதில் தோற்றிய சிந்தனைகை ளைப் பதிவுசெய்துள்ளார். நூல் விமர்சனம் என்ற வகைக் குள் கவிதைகள், நாவல்கள் மற்றும் கட்டுரைத் தொகுதிகள் அடங்கியுள்ளன. அரங்க நிகழ்வுகள் பற்றிய விமர்சனத்தில் பாலேந்திராவின் ‘மழை’ நாடகம், கவிதாவின் ‘அசையும் கவி தைகளும் ஞானரதம் நடன நாடகமும்’ என்பன அரங்க நிகழ் வுகள் பற்றிய பார்வைகளைக் கொண்ட விமர்சனக் கட்டுரை கள். இறுதியாகப் புலம்பெயர் தமிழ் இலக்கியம் பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை இடம்பெற்றுள்ளது என்று கட்டுரைகளின் உள்ளடக்கம் பற்றியும் அவற்றின் வகைமை பற்றியதுமான குறிப்புகளை அவர் பகிர்ந்து கொண்டார். ஈழத் தமிழர் போராட்டத்திற் புலம்பெயர் எழுத்தாளரின் பங்கு, புலம்பெ யர் இலக்கியத்தின் எதிர்காலம் குறித்த கேள்விகள் என்ற இரு கட்டுரைகள் அதனுள் அடங்குகின்றன.

இக்கட்டுரைகளை மேற்சொன்னவாறு வகைப்படுத்தினாலும் இவற்றுக்கிடையே சில பொது அம்சங்கள் காணப்படுகின் றன. நூலிழை போல் இவற்றுக்கிடையில் ஊடறுத்துச் செல் லும் தொடர்புகள் உள்ளன. இந்தப் பொதுத்தன்மை அல் லது ஊடறுப்புகள் அரசியல் என்ற பொதுப் பதத்திற்குள் அடங்குகின்றன. இந்த அரசியல் சமுத்திரனின் மார்க்சியப் பார்வையினூடு, வர்க்கம், பால், சாதி, இன அடக்குமுறை கள், சமூக அநீதிகளைத் தொட்டுச் செல்கின்றது. இக்கட்டு ரைகளின் இன்னொரு பொதுத்தன்மையாக வரலாற்றுப் பார்வை விரவி நிற்கின்றது எனவும் தெரிவித்தார்.

## இலங்கை: மீள் சிந்திப்பிற்கான சில முன்மொழிவுகள்!

இலங்கைத்தீவின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய இந்நூ லின் கட்டுரைகள், பௌத்த சிங்களப் பெருந்தேசியவாதம், தமிழ்த் தேசியவாதம், தமிழர் விடுதலைப் போராட்டம் பற்றிப் பேசுகின்றன.

அத்தோடு பிராந்திய சக்தியான இந்தியாவின் மேலாதிக்கம் பற்றிய ஆய்வுப் பார்வைகளும் இடம்பெற்றுள்ளன. தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், மலையக மக்கள், புலம்பெயர் தமிழர் ஆகிய மக்கள் தரப்புகள் தொடர்பாகவும், இலங்கைத் தீவின் சமூகம், பொருளாதாரம், அபிவிருத்தி குறித்த பார்வைகளும் விமர்சனங்களும் முன்மொழிவுகளும் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நூல் பற்றிய கருத்துரையினை ஆற்றியிருந்தார் எஸ்.கே. விக்னேஸ்வரன்:

முதலாவது பகுதியில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள், தேசிய விடுதலைப் போராட்டம் அவசியம் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கியமான வெவ்வேறு விடயங்களைப் பற்றிப் பேசும் கட்டுரைகளாகும். அடுத்து தமிழ் மக்களது அரசியல், அபிவிருத்தி என்பவை தொடர்பான பகுதியின் கட்டுரையான ‘பலம் மிக்க தலைவரின் வருகையும் ஜனநாயகத்தின் தடம்புரளலும்’ என்ற கட்டுரை முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ காலத்து அரசியல் பற்றிப் பேசுகிறது. அவர் மேலும் குறிப்பிடுகையில்,

1970-களில் தீவிரம் பெற்ற தமிழ் மக்கள் மீதான இனரீதியான ஒடுக்குமுறை நடவடிக்கைகள், அவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தனிநாடு, ஆயுதப்போராட்டம் என்று வளர்ச்சி பெற்றுவந்த போராட்டம், அதைக் காரணமாக்கி மேலும் தீவிரமாக்கப்பட்ட ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் மீதான சமூக, அரசியல், பொருளாதார நெருக்கடிகள், அவற்றினடியாகப் பிறந்த கோட்பாடுகள், நாட்டின் பல்லின மக்களிடையேயான உறவில் அவை ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் விளைவுகள், சர்வதேச அரசியல் நிலை என்று சுருக்கமாக அனைத்து விடயங்களையும் அலசுவதுடன், தேசிய இனப்பிரச்சினை தொடர்பான மீள் சட்டகமாக்கலை நோக்கிய ஒரு கலந்துரையாடலை முன்னெடுப்பதன் அவசியத்தையும் கூறி, அதற்கான சில குறிப்புகளையும் முன்வைக்கிறது. நிலவும் யதார்த்த அரசியல் நிலமைகளின் கீழ், ஒடுக்கப்படும் இனங்கள் தமக்குரிய சமத்துவமான உரிமைகளை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஓர் அரசியல் வழியைக் கண்டடைவதற்காக முன்வைக்கப்படும் சிந்தனைகள் இவை என்றார் விக்னேஸ்வரன்.

பேராசிரியரின் மாணவியும் அவரோடு கல்வித்துறையில் நீண்ட காலம் இணைந்து பணியாற்றியவருமான இணைப் பேராசிரியர் டார்லி சோஷாவிக், சண்முகரத்தினம் அவர்கள் பற்றிய தனது அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்:

சண்முகரத்தினம் அவர்களையும் அவருடைய எழுத்துக்களையும் கொண்டாடுவதற்கு இது ஓர் அற்புதமான சந்தர்ப்பம். அவரும் அவருடைய எழுத்துகளும் மொழிகளையும் எல்லைகளையும் தலைமுறைகளையும் தாண்டி நம்மில் பலருக்கு உந்துதலளிக்கின்றது என்றும் டார்லி குறிப்பிட்டார். சண் அவர்களின் தொழில்வாழ்க்கை கல்விக்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆனால் இங்கு வெளியிடப்பட்டுள்ள நான்கு தொகுதிகளும் அவரது எழுத்துக்கள், கல்வியின் எல்லைகளைக் கடந்த பல்துறை சார்ந்தவை என்பதைக் காட்டுகிறது எனவும் விதந்துரைத்தார்.

## சர்வதேச அரசியல், பொருளாதாரம்:

உலகமயமாக்கல், நவதாராளவாதம், ‘1917 ஒக்ரோபர் புரட்சி, கடன் ஏகாதிபத்தியம், மூலதனம், முதலாளித்துவத்தின் எதிர்காலம், இயற்கை - சூழலியல் சார்ந்த மார்க்சிய அணுகுமுறைகள், செல்வந்த நாடுகளின் அதிகரிக்கும் ஏற்றத் தாழ்வுகளும் ஜனநாயகச் சிதைவுகளும், மார்க்சியத்தின் இன்றைய பயன்பாடு, கொரோனாப் பேரிடரின் அரசியல் பொருளாதாரப் பரிமாணங்கள் பற்றிய பேசுபொருட்களைக் கொண்டுள்ள கட்டுரைகள் இந்நூலின் மையப்பொருளாக உள்ளன.

கோட்பாட்டு ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் மார்க்சிய நோக்குநிலையிலும் விமர்சன அணுகுமுறையிலும் அவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச அரசியல், பொருளாதாரம், நூல் குறித்த கருத்துரையினை இக்கட்டுரையாளர் ஆற்றியிருந்தார்:

இந்நூலின் குவிமையப்பட்ட அம்சமாக - அதாவது அதிகம் விவாதிக்கப்படும் பேசுபொருட்களாக - புத்தகம் முழுவதிலும் இழையோடும் பேசுபொருட்களாக நவதாராளவாதமும் முதலாளித்துவ மேலாதிக்கமும், அதன் விளைவுகள் பற்றிய கருத்துகளும் உள்ளன. அத்தோடு இயற்கை - சூழலியல் சார்ந்த மார்க்சியச் செல்நெறிகள் பற்றிய பார்வைகளையும் -மார்க்சியத்தின் இன்றைய பயன்பாடு பற்றிய கட்டுரையையும் அந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளலாம் என்றார்.

இந்நூல் சர்வதேச அரசியல் - பொருளாதாரம், சூழலியல் கற்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு - குறிப்பாக இலங்கை - தமிழகம் போன்ற இடங்களில் மாணவர்களுக்கு அதிகம் பயனுடையது. உலகம் எப்படி இயங்குகின்றது, என்ன வகையான நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது என்பதை ஆழமாகவும் கருத்தியல் ரீதியாகவும் அறியவும் கற்கவும் விரும்பும் அனைவருக்கும் பயனுடையது. குறிப்பாக சமூக, அரசியல், கலை, இலக்கியம், பண்பாடு சார்ந்து இயங்குபவர்களுக்கும் எழுதுபவர்களுக்கும் பயன்தரக்கூடியது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## உரையாடல்:

புத்தகங்களின் அறிமுக - வெளியீட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து இடம்பெற்ற சமூத்திரனுடனான உரையாடலில், அவருடைய இளமைக்காலச் சமூக, அரசியல் மற்றும் இடதுசாரியச் சிந்தனை மீதான ஈடுபாடுகள் உருவான புறச்சூழல்கள் குறித்துப் பகிர்ந்துகொண்டிருந்தார். தொடர்ந்து அவருடைய எழுத்துகள் மற்றும் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை மற்றும் அதன் சமகால நிலைமைகள், எதிர்காலம் குறித்த புதிய அணுகுமுறை, சிந்தனைகளின் தேவைகள் குறித்த தனது கருத்துகளையும் பகிர்ந்துகொண்டிருந்தார். பார்வையாளர்களின் கேள்விகள், கருத்துகளுக்கான நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



rooban.s@thaiveedu.com



# கே. ஜி. ஜியார்ஜ் படைப்புலகம்

**- ஓவியர் ஜீவா**

மலையாளப்படங்களை தொடர்ந்து பார்க்கும் நோய் என்னை பீடித்த உச்ச வேளையில் நான் பார்த்த ஒரு திரைப்படம் 'ஸ்வப்னாடனம்'. அந்த கருப்பு வெள்ளை திரைப்படத்தின் உருவாக்கம் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இயக்கம் கே.ஜி. ஜியார்ஜ் என்ற, எனக்கு அறிமுகமில்லாத ஒரு பெயர். ராமச்சந்திரபாபுவின் ஒளிப்பதிவும் பாஸ்கர் சந்திர-வார்க்கரின் இசையமைப்பும், படத்தின் இயக்கமும் என்னை கட்டிப்போட்டது. கே.ஜி. ஜியார்ஜின் ரசிகன் ஆகிப்போனேன். திருமண உறவினால் மனம் பிறழ்ந்த ஒரு டாக்டரின் கதை அது!

ஜியார்ஜ் பூனே திரைப்படக்கல்லூரியின் பட்டதாரி. ராமு காரியத்திடம் உதவியாளராக சேர்ந்து அவரது மாயா, நெல்லு போன்ற திரைப்படங்களில் பணி புரிந்தவர். வெறும் வறட்டுக் கலைப்படங்கள் எடுப்பதில் ஆர்வமற்றவர் ஜியார்ஜ். பூரணமான கலையும், திரைப்படங்களின் கணக்கற்ற சாத்தியங்களும் நிறைந்திருந்தன அவரது திரைப்படங்களில்!

பலவிதமான பாணிகளில் இவர் திரைப்படங்களை இயக்கியது ஒரு புதுமைதான். அவற்றில் சில திரைப்படங்களை பார்ப்போம்! இரண்டாவதாக அவர் இயக்கிய 'வியாமோஹம்', பி.எஸ். ராமையா எழுதி, தமிழில் வெளிவந்த 'போலீஸ்காரன் மகள்' படத்தின் தழுவல். 'ராப்பாடிகளுட கதா' பத்மராஜன் எழுதியது! 'இனியவள் உறங்கட்டே, ஓணப்புடவை'யை தொடர்ந்து வந்த 'மண்ணு' நான் திரையரங்கில் காண வாய்ப்பு கிடைத்த படம்.

நிலவுரிமை மற்றும் விவசாய நில குத்தகை சட்டங்களை கருவாக வைத்து உருவாக்கிய திரைப்படம் 'மண்ணு'. சோமன், சுகுமாரன், சாரதா போன்ற சிறந்த கலைஞர்கள் நடித்த திரைப்படம். அடுத்த திரைப்படமான 'உள்கடல்' ஒரு வாலிபனின் வெவ்வேறு காதல்களைப் பற்றிய திரைப்படம். இதில் வேணு நாகவள்ளியும் புதுமுகம் ஷோபாவும் நடித்திருந்தனர். ஒளிப்பதிவாளரை யூகித்திருப்பீர்கள்... பாலு மகேந்திராவே-தான்.

சர்க்கஸ் தொழிலை பின்புலமாக வைத்து நிறைய மலையாளப்படங்கள் வந்திருக்கின்றன. நாயர் புடிச்ச புலிவால், தம்பு, ஆரவம், மேளா என்று சொல்லிக்கொண்டே போகலாம். மேளா, ஜியார்ஜ் இயக்கியது. சரக்கஸில் கோமாளியாக பணிபுரியும் ஒரு குள்ள மனிதன், விடுமுறையில் ஊருக்கு சென்று ஒரு அழகிய பெண்ணை திருமணம் செய்து கொண்டு வருகிறான். அங்கு அவன் மீது பரிவு கொண்ட நண்பன் ஒருவனுக்கும் தன் மனைவிக்கும் உறவு இருக்குமோ என்ற சந்தேகம் அவனை தற்கொலைக்கு தூண்டும் வரை கொண்டு செல்கிறது. அற்புதமான இந்த திரைப்படத்தில் அப்போதைய புதுமுக நடிகர் மம்முட்டியும், குள்ள நடிகர் ரகு, அஞ்சலி நாயுடு ஆகியோர் நடித்திருந்தனர்.

'கோலங்கள்' என்ற திரைப்படத்தை தொடர்ந்து வந்தது 'யவனிகா'. பாவனா தியேட்டர்ஸ் என்ற நாடகக் கம்பெனியின் தபேலா கலைஞன் ஐயப்பனை திடீரென்று காணவில்லை. எங்கே சென்றான் என்று தெரியவில்லை. காவல்துறை துப்பறியத்தொடங்குகிறது. நம் கண் முன்னால் அந்த நாடக கம்பெனி கலைஞர்களின் வாழ்க்கையும் ஐயப்பன் குறித்த பல தகவல்களும் விரியத்தொடங்குகின்றன. குடிகாரனும் பெண் பித்தனுமான அந்த கலைஞன் கொல்லப்பட்டிருப்பானோ, அப்படியென்றால், யார் கொன்றிருக்கக்கூடும் என்ற கோணத்தில் புலனாய்வுகளும் விசாரணைகளும் தொடர்கின்றன. அகிரா குரசோவாவின் 'ரோஷோமான்' படத்தில் வருவது போல, ஒவ்வொருவர் கோணங்களில் நமக்கு கதையின் போக்கு சொல்லப்படுகிறது. கடைசியில் குற்றவாளியை கண்டுபிடிக்கிறார்கள். ஜியார்ஜின் சிறந்த படங்களில் ஒன்று மட்டுமல்ல, மலையாள திரைப்பட வரலாற்றில் முக்கியமான ஒரு திரில்லர், யவனிகா. காவல் அதிகாரியாக மம்முட்டி, தபலிஸ்ட் ஐயப்பனாக கோபி, நாடக நடிகர்களாக நெடுமுடி வேணு, வேணு நாகவள்ளி, ஜகதி, ஜலஜா, நாடக கம்பெனி உரிமையாளராக திலகன், குமாஸ்தாவாக ஸ்ரீனிவாசன், மற்றும் அசோகன் என்று சிறந்த நடிகர்களால் சிறப்பு பெற்றது இந்த திரைப்படம். விசாரணை காட்சிகள், ஒவ்வொரு நடிகரது மேடை வேடமும் நிஜத்தில் அவர்கள் குணாதிசயமும் என்ற ஒப்பீடுகள் எல்லாமே வியக்கத்தக்கவையாக இருந்தன. நடிகர் பாலகோபாலன் (நெடுமுடி) நிஜத்தில் மகா குஜால் பேர்வழியாக இருப்பார். ஆனால் மேடையில் அவர் ஒரு சோக நாயகன். நிஜத்தில் சோகமான பார்வையுடன் ஜலஜாவை காதலிக்கும் ஜோசப் கொல்லப்பள்ளி (வேணு நாகவள்ளி) மேடையில் நைட்கவுனும் வாயில் சிகரெட்டும், பலத்த சிரிப்புடனும் ஆர்ப்பாட்டமாக வரும் வில்லன். வாலி



பத்துள்ளலும் கேலிப்பேச்சுமாய் வலம் வரும் வருணன் மேடையில் கைத்தடியுடன் குளறல் மொழி பேசும் வயதான தாத்தா! ஐயப்பனாக வந்த கோபியின் நடிப்பு உச்சம். திமிர்ப்போக்கும், வித்யாகர்வமும், சாராயப்போதையும், காமப்பார்வையும், தபேலாவை தொட்டவுடன் ஆவேசமாக பறக்கும் கைகளும் என்று ஒரு எதிர்நாயகனாக பின்னி எடுத்தார் கோபி.

பல இயக்குநர்களுக்கு தாங்கள் சார்ந்திருக்கும் திரைப்படத் துறையின் பின்னணியிலேயே ஒரு திரைப்படத்தை உருவாக்



கவேண்டும் என்ற ஆவல் இருக்கும். ஒரு சின்ன சர்வே எடுத்துப்பாருங்கள், எத்தனை இயக்குநர்கள் இதை செய்திருக்கிறார்கள் என்று. கே.ஜி. ஜியார்ஜும் ஒரு திரைப்படத்தை இந்த பின்னணியின் இயக்கினார். படத்தின் பெயர் 'லேகயுடே மரணம் - ஒரு பிளாஷ்பாக். ஒரு கேரள சிற்றூரிலிருந்து திரைப்பட வாய்ப்பு தேடி தாயாரால் கோடம்பாக்கத்துக்கு இழுத்து செல்லப்பட்ட ஒரு பெண்ணின் கதை இது. அவளுக்கு கிடைக்கும் வாய்ப்புகள், ஏறிச் செல்லும் ஏணிகள், அவளுடன் காதல் வயப்பட்ட இயக்குநர், புகழின் உச்சியில் இருக்கும்போது, தூக்குக்கயிற்றில் தொங்கும் அவளது அவல நிலை என்று செல்லும் இந்த படத்தைபார்க்கும் எவருக்கும் கண் முன்னால் வந்து நிற்பார்கள் பாலுமகேந்திராவும் ஷோபாவும். ஷோபா மரணத்தின் மர்மம் இன்னும் விலகாத நிலையில், அன்றே இது ஒரு துணிச்சலான முயற்சி. சென்னை கோடம்பாக்கத்து துணை இயக்குநர்கள், துணை நடிகர்கள், நடிகர்கள் ஏஜென்ட்கள், அப்போதைய சூப்பர் ஸ்டார்கள்.... என்று அருமையான ஒரு ஸ்டடி செய்திருப்பார் இயக்குநர். பிரேம் நசீர் என்ற சூப்பர் ஸ்டாரை பிரதிபலிக்கும் பிரேம் சாகர் என்ற பாத்திரமும் இருந்தது. மம்முட்டி இந்த வேடத்தில் நடித்திருந்தார். சாந்தம்மா என்ற பெயரில் புறப்பட்டு சென்னையில் லேகாவாக மாறிய நடிகையாக நளினியும் அவர் தாயாராக சுபாவும், வழுக்கைத்தலையை மறைக்க எப்போதும் தொப்பியணிந்த இயக்குநராக கோபியும், சந்தர்ப்பங்களை பயன் படுத்திக்கொள்ளும் உதவி இயக்குநராக நெடுமுடி வேணுவும் பிரமாதப்படுத்தியிருந்தனர்.

யவனிகா, லேகயுட மரணம்... படங்களை தொடர்ந்து வந்த 'ஆதாமிண்டே வாரியெல்லு' இன்னொரு அற்புதமான திரைப் படம். பெண்களின் வாழ்க்கை பிரச்சினைகளை, மூன்று கதாபாத்திரங்களை கொண்டு சித்தரித்திருப்பார் ஜியார்ஜ். பகலில் வேலைக்கு சென்றாலும், தன் புகுந்த வீட்டுக் குடும்பத்தை சேர்ந்த மூன்று தலைமுறை மனிதர்களையும் பராமரிக்கும் கடமை வசந்திக்கு. மனம் பிறழ்ந்து கடைசியில் மனநல விடுதியில் அடைக்கலமாகும் தலைவிதி அவளுக்கு. சுஹாசினி சிறப்பாக நடித்த படங்களில் இது ஒன்று. ஒரு பணக்கார தொழிலதிபரை மணந்த ஆலிஸ், கள்ள உறவில் அடைக்கலம் தேடுகிறாள். மணவிலக்கு மறுக்கப்பட்ட நிலையில் மரணத்தை தழுவுகிறாள். ஸ்ரீவித்யாவுக்கு இந்த வேடம்! மூன்றாவது பெண் ஏழை. கடுமையாக பாதிக்கப்பட்டவள். ஆனாலும் இந்த இரண்டு பெண்களைப்போல தோல்வியை தழுவாமல், தான் அடைக்கப்பட்டிருந்த அரசு பெண்கள் காப்பகத்தில் இருந்து மற்ற பெண்களையும் அழைத்துக் கொண்டு வெளியே தப்பித்து ஓடுகிறாள். ஓடும்போது குறுக்கே இருக்கும் படப்பிடிப்புக்குழுவையும், உபகரணங்களையும் தள்ளிவிட்டுக்கொண்டு ஓடுகிறாள். படப்பிடிப்புக்குழு வேறு யாரும் அல்ல. இந்த திரைப்படத்தை பதிவு செய்து

கொண்டிருக்கும் ஜியார்ஜ் குழுவினர்தான். மூன்றாவது பெண் அம்மிணியாக வந்தவர் கருத்த அழகி சூர்யா. வழக்கமான ஜியார்ஜ் அபிமான நடிகர்கள் கோபி, மம்முட்டி, வேணு நாகவள்ளி, திலகன் ஆகியோரும் நடித்திருந்தனர். மாமச்சன் முதலாளியாக, ஸ்ரீவித்யாவின் கணவனாக நடித்த கோபி தன் தேர்ந்த நடிப்பினால் உச்சம் தொட்டார். ஜியார்ஜுக்கு மேலும் ஒரு மணிமகுடம் இந்த ஆதாமின் முதுகெலும்புத் திரைப் படம்!

அடுத்த திரைப்படமோ முற்றிலும் வேறு பாணி. கேரளத்து அரசியல் நிகழ்வுகளையும் சூழலையும் லஞ்ச லாவண்யங்க ளையும், நகைச்சுவை கலந்து தந்த திரைப்படம் ‘பஞ்சவடி பாலம்’. முடியும்போது ஓர் அவலச்சுவையுடன் முடியும். தேவையற்ற இடத்தில் கூட ஒரு பாலம் கட்டினால் அரசியல் வாதிக்கு லாபம்தான். பெண்டாட்டிக்கு அடங்கிய அரசியல் பிரமுகர் துஸ்ஸாசனகுரூப் ஆக கோபியும், அவர் மனைவி மண்டோதரியாக ஸ்ரீவித்யாவும், வழக்கம் போல நெடுமுடி வேணு, திலகன், ஸ்ரீனிவாசன், ஜகதி, வேணு நாகவள்ளி என்று ஜியார்ஜின் அபிமான நடிகர்களும் அதகளம் செய்தி ருந்தார்கள்!!

மனோதத்துவ திரில்லர் வரிசையில் அடுத்து வந்த திரைப்ப டம் ‘இரகள்’! வன்முறை குறித்த ஆழ்ந்த மனோவியல் பார்வை. ஒரு றப்பர்தோட்ட முதலாளி வீடும் அதன் அங்கத் தினர்களும் நிறைந்திருக்கும் கதைக்களனில், கல்லூரியிலி ருந்து தற்காலிக விடுப்பு தண்டனையில் வீட்டுக்கு வந்திருக் கும் கடைக்குட்டி மகன் பேபிதான் கதையின் நாயகன். அவ னுள் எப்போதும் கொப்பளித்துக்கொண்டிருக்கும் வன்மு றைத்தாகம், தன் சக மாணவனை ஒரு ஒயர் துண்டினால் மூச்சுத்திணற வைத்த கொலை முயற்சி காரணமாய்தான் சஸ்பென்ஷன். வீட்டுக்கு அந்த ஒயர் துண்டை பெருமையு டன் எடுத்துக்கொண்டுதான் வந்திருக்கிறான். கள்ளக்காதலில் ஈடுபட்டிருக்கும் அவன் அத்தையை தண்டிக்க அவன் காத லனை கொல்லுதல், தான் விரும்பும் பெண் வேறு ஒருவ னுக்கு நிச்சயிக்கப்பட்டதும், அவனையும் கொல்லுதல் என்று காரணங்களால் நிகழும் தொடர் கொலைகள்! சில கொலை முயற்சிகள்! பேராசையும் வன்முறையும் பொங்கி வழியும் ஒரு குடும்பத்தில் இப்படி ஒருவன் எப்படி உருவானான் என்று கண்டறிவது அவ்வளவு கடினமா என்ன!

பேபியாக கணேஷ்குமார், குடும்ப அங்கத்தினர்களாக திலகன், சுகுமாரன், ஸ்ரீவித்யா போன்றவர்களும், அவன் விரும் பும் பெண்ணாக ராதாவும் நடித்திருந்தனர். அவனது தாய்மா மன் பாதர் ஸ்டீபன் என்ற வேடத்தில் வந்தவர் கோபி.

‘கதைக்கு பின்னில்’ ஓர் எழுத்தாளனுக்கும், அவன் வீட்டில் அடைக்கலம் தேடி வந்த பெண்ணுக்கும் இடையே நடைபெ றும் சம்பவங்களை பின்புலமாக வைத்து இயக்கப்பட்ட சிறந்த ஒரு திரைப்படம். மம்முட்டியும் தேவி லலிதாவும் நடித்திருந்தனர்.

‘மற்றோராள்’ பதைபதைக்க வைக்கும் இன்னொரு திரைப்ப டம். இரண்டு வளர்ந்த பிள்ளைகள் உள்ள தம்பதிகள் கைம லும் சுசீலயும். நல்ல பதவியில் உள்ளவர்தான்... ஆனால், குடும்பத்தில் அவ்வளவு நல்லிணக்கம் இல்லை. திடீரென்று




ஒரு நாள் சுசீல காணாமல் போகிறாள். அவர்களது இளம் நண்பர்களான தம்பதிகள் பாலனும் வேணியும் அவளை தேடி கண்டுபிடிக்கின்றனர். இப்போது அவள் ஒரு கார் மெக் கானிக்குடன் அவனுடைய ஒண்டுக்குடிசையில் வாழ்கிறாள். இந்த அதிர்ச்சி ஏற்படுத்தும் அதிர்வுகளும் தொடரும் சம்ப வங்களும் இந்த திரைப்படத்தின் அடர்த்தியை அதிகரிக் கும்! குரமன ஜனார்த்தன் நாயரும் சீமாவும் தம்பதிகளாக நடித்திருந்தனர். இளம் ஜோடியாக மம்முட்டியும் ஊர்வசியும்!

1998-க்கு பிறகு ஜியார்ஜுக்கு திரைப்படங்கள் இயக்கும் வாய்ப்பு வரவில்லை. விளவங்கோடு தேசம் அவரது கடை சிப்படம். ஒரு சரித்திரப்புனைவு பின்னணியில் மம்முட்டி, ராஜீவ், குஷ்பு போன்றவர்கள் நடித்திருந்தனர்.

படம் பெரிய சலனத்தை ஏற்படுத்தவில்லை.

பல் வகையான தீம்களிலும், வெவ்வேறு பின்புலத்தில் திரைப்படங்கள் இயக்கியிருந்தாலும், அவற்றின் தரமும் கலையழகும் ஆழமும் அடர்த்தியும் எந்த படத்திலும் குறை யாமல் பார்த்துக்கொண்ட என் அபிமான இயக்குநரின் பெரிய வருத்தம் என்ன என்றால், மலையாளத்தின் அற்புத நடிகன் மோகன்லாலை இயக்கும் தருணம் வாய்க்கவே யில்லை என்பதுதான்!



jeeva@thaiveedu.com

# புலமையாளன் பார்த்திபன் வடிவேலு

பார்த்திபன் வடிவேலு என்ற மொழிப்புலமை மிக்க சிறந்த ஆளுமையை கனடாத் தமிழ் உலகம் இன்று இழந்து நிற்கிறது.

திரு. பார்த்திபன் வடிவேலு அவர்கள் தமிழ்மொழியிலும் ஆங்கிலமொழியிலும் ஆழமான புலமை மிக்கவராக இருந்தார். இருமொழிகளிலும் சரளமாகத் தொடர்பாடக்கூடியவர் என்பதற்கு அப்பால், இருமொழிகளிலும் இலக்கியங்களை நுகரும் புலமையும், அவற்றை ஆய்வுநோக்குடன் விமர்சிக்கும் ஆற்றலையும் கொண்டிருந்தார். இத்தகு புலமை எளிதில் அனைவருக்கும் வாய்ப்பதில்லை. இரு மொழியிலும் சிறந்த மொழிபெயர்ப்பை வழங்குவதில் ஒப்பில்லாதவராகத் திகழ்ந்தவர் இவர். இவருடைய இவ்வாற்றலைப் பல சான்றோர் பாராட்டியிருக்கின்றனர்.

சற்றே நோய்வாய்ப்பட்டிருந்த அவர், ஏப்ரல் மாதம் 21-ம் நாளன்று யாரும் எதிர்பார்த்திருக்காத பொழுதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்த செய்தி பெருந்துயரைத் தருகின்றது. இவருடைய இழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினருக்கும் தாய்வீடு தன்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றது.

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறுவயதிலேயே ஆங்கிலம் தமிழ் என்ற இரு மொழிகளிலும் ஆர்வம் உள்ளவராகத் திகழ்ந்தார். பலரும் தயங்குகின்ற ஆங்கில மொழிக்கல்வியைத் தன் துறையாக எடுத்துக் கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கால்வைத்த இவர், பின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து ஆங்கிலத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். அங்கு இவருடைய ஆங்கிலமொழிப் புலமையையும் ஆர்வத்தையும் அறிந்த பேராசிரியர்கள் சிலர், இவர் கனடா, கால்ரன் பல்கலைக்கழகத்தின் புலமைப்பரிசிலைப் பெற உதவினர். இதுவே இவர் கனடாவுக்கு வரக் காரணமாயிற்று.

கனடா மண்ணிலே பார்த்திபனோடு மிக நெருக்கமாகச் செயற்பட்ட பேராசிரியர் அருட்திரு சந்திரகாந்தன் அடிகளாரும், பேராசிரியர் திருமதி. பார்வதி கந்தசாமி அவர்களும் தாயகத்திலேயே பல்கலைக்கழகச் சூழலில் பார்த்திபனுடன் அறிமுகமாகியிருந்தனர்.

ஆங்கிலத்தை முதன்மொழியாகக் கொண்ட கனடாவில், அதேமொழியின் இலக்கியத்துறையில் முதுகலைப் பட்டம் பெறுவது எளிதானதல்ல. ஆங்கிலேயர்களே தயங்கும் துறை அது. அதைச் செவ்வனவே பயின்று, ஆங்கில இலக்கியத்துறையில் முதுமானிப் பட்டம் பெற்றார்.

கல்விக்குப் பின்னர், பலதளங்களில் அவர் ஆசிரியராகப் பணியாற்றினாலும் சமூகம் சார்ந்த மொழிபெயர்ப்புப் பணிகளில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

குறிப்பாகப், பேரா. பார்வதி கந்தசாமி அவர்களின் நெறிப்படுத்தலில் இயங்கிய வசந்தம் உளவளத்துணை நிறுவனத்துடன் இணைந்து பல சமூகம் சார்ந்த பணிகளை முன்னெடுத்திருந்தார். அவற்றுள் மொழிபெயர்ப்புப் பணி முதன்மையானதாக இருந்தது. Centre for addiction and mental health என்ற நிறுவனத்தின் Depression and stress என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அத்துடன், Community resource connections of toronto என்ற உளவளத்துறை நிறுவனத்தின் மிக முதன்மையான கையேடாகத் திகழ்ந்த navigating the mental health என்ற நூலை ‘உளநல சேவைகளுக்கான வழிகாட்டல்’ என்ற தமிழ்த் தலைப்பில் மொழிபெயர்த்துப் பாராட்டுப் பெற்றார். புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறிய தமிழர் பலருக்கும் இன்றுவரை இந்நூல் சிறந்தவொரு வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

வசந்தம் அமைப்பு, றைசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பல்வேறு ஆய்வுப்பணிகளை முன்னெடுத்து வருகின்றது. அவ்வாறான ஆய்வுத்திட்டங்களுக்கான மொழிபெயர்ப்புகளையும் ஒலிபெயர்ப்புகளையும் தமிழில் அழகுறச் செய்து கொடுத்தவர் பார்த்திபன். அவருடைய மொழிபெயர்ப்புத் தமிழ், எளிமையானதாகவும் வாசிப்போருக்கு நன்கு

விளக்கமளிக்கவல்லதாகவும் நகைச்சுவை உணர்வுடனும் அமைந்திருக்கும். இவற்றைவிடவும் அவருடைய மொழிபெயர்ப்புப் பணி பரந்திருந்தது. பலருடைய அகதிக்கோரிக்கை வழக்குகளுக்குரிய மொழிபெயர்ப்புகளையும் திறம்படச் செய்து கொடுத்திருக்கின்றார். தாய்வீடு இதழுக்குத் தேவையான மொழிபெயர்ப்புகளையும் அவ்வப்போது செய்து தந்தவர்.

சிறந்தவொரு மொழிபெயர்ப்பாளர் மட்டுமன்றி, ஆற்றல்மிக்க ஆசிரியராகவும் திகழ்ந்தார். பல்வேறு தளங்களிலும் ஆற்றல் மிக்க ஆசிரியராக அவர் திகழ்ந்தபோதும், அத்தளங்களில் அவர் நிலைபெற்று நிற்கவில்லை.

1999-ல் கனடா தொழில்நுட்பக்கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்திய தமிழ் இலக்கிய இளங்கலைப் பட்டப்படிப்பில் ஆங்கிலமும் ஒரு பாடமாக இருந்தது. இந்தப் பாடத்தைக் கற்பிப்பதற்காகப் பேரா. பார்வதி கந்தசாமி அவர்களால் அழைத்துவரப்பட்டவர் திரு. பார்த்திபன். அவ்வேளை சுறுசுறுப்பும் துடிப்பும் மிக்க இளைஞனாகத் திகழ்ந்த பார்த்திபன், அந்த வகுப்புகளை நடத்திய அழகு அற்புதமாக இருந்தது. ஆங்கிலத்தை அத்துணை எளிதாக, நகைச்சுவை உணர்வுடன் கற்பிக்க முடியுமா? என்ற வியப்பை அனைவருக்கும் ஏற்படுத்தினார். இன்றளவும் அந்த மாணவர்களால் மறக்கமுடியாத ஆசிரியராகவே அவர் திகழ்கின்றார். இளங்கலை வகுப்பில் பயின்ற ஆசிரியர் திருமதி. சாரதா குமாரசுவாமி அவர்களின் துணையுடன், Link எனப்படும் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் வகுப்புகளிலும் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார்.

ஆங்கிலத்தைப் போலவே, தமிழ் இலக்கியங்களிலும் ஆழமான அறிவு கொண்டவர் பார்த்திபன். அவ்வப்போது பல கட்டுரைகளையும் தமிழில் எழுதி வந்திருக்கின்றார். வசந்தம் நடத்திய ஒரு விளம்பரச் சஞ்சிகையிலும் பணியாற்றியிருக்கின்றார்.

தொண்ணூறுகளின் தொடக்கத்திலேயே கனடாவில் ஒலித்த தமிழ் வானொலிகளிலும் பணியாற்றத் தொடங்கியிருந்தார். திரு கோணேஸ் அவர்களின் 'ரேடியோ ஆசியா' என்ற வானொலியில் செய்திகளைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியை மேற்கொண்டார். பின் கீதவாணி வானொலியில் இணைந்து செய்தி ஆசிரியராகவும் நிகழ்ச்சித் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியிருந்தார். தனக்குத் தமிழ்மொழியில் இருந்த விருப்பே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்

பதின்மூன்று வயதேயான அவர் மகள் ஆதனி, தந்தையால் அறிவூட்டப்பட்ட சிறுமி என்றே கூறலாம். தன் மொழிப்புலமையை அவர் மகளுக்குக் கடத்திச் சென்றிருக்கின்றார் எனக் கூறுமளவுக்கு ஆதனி ஆற்றல் பெற்றிருக்கின்றார்.

இன்னும் பல்லாண்டு இவ்வுலகில் வாழ்ந்து, பெயர்வுத் தமிழ்ச்சமூகத்துக்கு இவர் ஆற்றியிருக்க வேண்டிய பணிகள் பல. பல்துறை ஆற்றல்மிக்க ஒருவர், தன்னை பாதுகாக்கத் தவறிவிட்டாரா என்பதற்கு விடைகள்தான் தெரியவில்லை.

பார்த்திபன் போன்றோரைப் பேணிச்செல்வதில் சமூகமும்



பெருமளவிலான பங்களிப்புகளைச் செய்யவேண்டும் என்ற உண்மையையே பார்த்திபனின் இழப்பு வலியுறுத்துகின்றது.

■ ■ ■



# அன்ரன் எனும் ஒரு கலைஞன்

**- செல்வம் அருளானந்தம் -**

இந்தச் சிறிய வாழ்வில் பெரிய பெரிய கனவுகளுடன் வாழ்ந்தவர் அன்ரன். ஆனால் வளம்பெற்ற கலைஞராக வாழமுடியாத இந்தவாழ்வில் உண்மையான கலைஞராக இறுதிவரை வாழ்ந்தவர்.

யாழ்ப்பாணத்தில் சில்லாலை என்னும் சிறு கிராமத்தில் பிறந்து, சுற்றிச் சுழன்று எங்கெல்லாமோ அலைந்து, கனடாவில் கரையேறியவர். வாழ்வில் மகிழ்ந்தும் கலங்கியும் எம்



மோடு உறவாடியவர், இன்று கனடா ரொறன்ரோ மண்ணில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்.

அவருடைய மரணச்சடங்கில், யேசுவுக்குத் தீர்ப்பிட்ட ரோமானியக் கவர்னர் பிலாத்துவாக அவர் நடித்த புகைப்படத்தைப் பெரிதாக்கி வைத்திருந்தார்கள். உலகம் ஒரு நாடகமேடை, நாமெல்லாம் நடிக்க வந்தவர்கள் என்பதை அது சொல்லாமல் சொல்லி நின்றது.

அன்ரன் ஒரு நல்ல நடிகர். கூத்துக்காரர். அதைவிட, நாலு பேர் கூடியிருக்கும் இடத்தை மகிழ்ச்சியாக வைத்திருப்பதில் ஓர் அற்புதன்.

இடைவிடாத உழைப்பாளியான அவர், நல்லதொரு கலைஞராகத் திகழ ஆசைப்பட்டவர். வாழ்வு தந்த நெருக்கடிகளினால் தன் நேரத்தைக் கலைகளுக்கு ஒப்புக்கொடுக்க முடியாமல் தவித்தவர்.

சில்லாலையில் வாழ்ந்தபோது ஜேம்ஸ் ஜெயபாலன் என்பவர் இயக்கிய ஒரு நாடகத்தில் முக்கிய கதாபாத்திரமாகத் தோன்றி, நல்ல நடிகர் என்று பெயர் வாங்கினார். முதல் தடவையாகக் கனடா திருமறைக் கலாமன்றத்தின் 'யேசுவின் திருப்பாடு' கலைநிகழ்வில் மரியசேவியர் அடிகளாரால், யேசுவுக்குத் தீர்ப்புச் சொல்லும் கவர்னர் பிலாத்து என்னும் முக்கிய பாத்திரமேற்று நடித்தவர். தன் நடிப்பால் அடிகளாராலும் பார்வையாளர்களாலும் பாராட்டப்பெற்றவர்.

அதே ஜேம்ஸ் ஜெயபாலன் இயக்கத்தில் கனடா உலகத்தமிழ் இயக்கத்தின் கலைப்பிரிவு நடத்திய ஒரு கூத்தில் முக்கிய பாத்திரமேற்றுப் பாடி ஆடி நடித்தார். பின்பு நண்பரும் செயற்பாட்டாளருமான லோகநாதன் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க 'கனடா ஸ்டீல் வேக்கஸ் யூனியனுக்காக' உலகமயமாதலை விளங்கப்படுத்தும் 'நாட்கள் இதோ வருகின்றன' என்ற, நான் இயக்கிய கூத்துருவ நாடகத்தில் என் பக்கத்துணையாகத் திகழ்ந்தவர் அவர்தான்.

தொடர்ந்து காலம் இலக்கிய நிகழ்வுக்காக 'வீரர்கள் துயிலும் நிலம்' எனும் கூத்தை நான் இயக்கினேன். றெஜி மனுவல்பிள்ளை நாயகனாகவும் அன்ரன் வில்லனாகவும் நடிக்க, அந்தக் கூத்து பலராலும் பாராட்டப்பட்டது. குரல்வளம் சிறக்காவிட்டாலும் உடல்மொழியாலும் தாளம் தப்பா இசையாலும் அவர் ஒரு பெரிய கூத்துக்காரர்தான்.

அவருடைய அப்பாவும் ஊர் அறிந்த ஒரு கூத்துக்காரர்தான்.



அது அவர் இரத்தத்தில் வந்தது. என் கூத்து நிகழ்வுகளில் எப்போதும் அன்ரன் எனக்கொரு பக்கபலம்.

'வீரர்கள் துயிலும் நிலம்' கடும் உழைப்பை வேண்டி நின்ற தொரு தயாரிப்பு. எனக்கு அது என்னை மிஞ்சிய நிகழ் வாய்ப் போயிற்று. அச்செலவு ஒரு தனிமனிதருக்குத் தாங்க முடியாத ஒன்று. அன்ரனும் றெஜியும் அச்செலவின் ஒரு பகு தியை எனக்குத் தந்துதவினார்கள்.

அன்ரனின் பக்கத்துணையில்லாவிட்டால் என் கூத்து முயற்சி களை நான் சிறப்பாகச் செய்திருக்க முடியாது. நடிகரும் கலைஞருமான கிருபா முகநூலில் எழுதியபடி நடிகர்களைப் பயிற்சிக்கு ஏற்றிஇறக்குவதில் பெரும்பங்கு வகித்தார்.

தாய்வீடு அரங்கியல் விழாவுக்காக நான் பங்காற்றியபோது, ஆரம்பகாலங்களில் அன்ரன் ஒரு துணை. நவீன நாடகங்க ளில் பங்காற்றவேண்டும் என்ற தணியாத ஆசையில், மன வெளி அமைப்பின் பயிற்சிகளில் கலந்து கொண்டவர். செழி யன் எழுதிப் புராந்தகன் இயக்கிய நாடகம் ஒன்றில் பங்கேற் றுப் பல ஒத்திகைகளுக்குச் சென்றவர். ஆனால், அந்த நாட கம் ஏதோ காரணங்களால் நடைபெறவில்லை.

இவற்றை விடவும் உறவினர், நண்பர்கள் வீட்டில் நடக்கும் கல்யாணம், பிறந்தநாள் விழாக்களில் ஏதோவொரு கலைநி கழ்ச்சி செய்து மக்களை சந்தோசப்படுத்துவார்.

அப்படி நான் கடைசியாகப் பார்த்தது 'நாதர்முடி மேல் இருக்கும் நல்ல பாம்பே' என்ற பாடலுக்குத் தன் மகனை நடுவில் வைத்து சிவாஜி போல் நடித்தது.

எனக்கு மிக நெருக்கமான அவர் சாதாரண குடும்பத்தில் பிறந்து? தன் முயற்சியால் கொழும்பு சென்று அங்கு வியா பாரியாகி நன்றாகவே வாழ்ந்தார். பின்னர் 83 இனக்கலவரம் அவரை அங்கிருந்து துரத்தியது. பிறகு, கப்பலுக்கு வேலைக்குப்போய் அப்படியே கனடா வந்தார். இங்கு தொழிற்சாலைகளிலும் உணவகங்களிலும் வேலைசெய்து, பின் ஒரு கடைக்கு உரிமையாளராகி நல்ல பெயர் எடுத் தார்.

'எழுதிச் செல்லும் விதியின் கை மேலும் மேலும் எழுதிச் சென்றது என்பதுபோல, விதி அவனைச் சுற்றிப் பிடரி பிடித்து உந்தி நின்றது' என்று கம்பன் சொன்னதைப் போல, அவரைத் துன்பங்கள் ஏதோவொரு வழியில் துரத்திக்கொண் டேயிருந்தன.

மனைவியை இழந்த அன்ரன், அந்தத் துயரத்தை நாளும் சுமந்தார். அதுவே அவர் நோய்வாய்ப்பட்டு, இந்த உல கத்தை விட்டுப் பிரிவுற்று மனைவியைச் சென்றடையக் கார ணமானதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

'மனிதனாக வாழ முயற்சித்த நல்ல கலைஞர்' என அன்-ரனை நான் நினைவுகூர்கின்றேன்.



*selvam.a@thaiveedu.com*




இலங்கையின் வடக்கே, யாழ்ப்பாணக் குடாநாட்டில், செம் மண் வலயத்துள் அமைந்து, பொருளாதார வளமும், கல்வி, கலைகளில் செழிப்பும் மிக்க, கட்டுவன் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் அமரர் எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்கள். இவர் திரு. திருமதி. கந்தையா - சரஸ்வதி இணையருக்கு மகனாக 1936-ம் ஆண்டு மலேசியாவில் பிறந்தார். தென்னாசியாவிலேயே முதலாவது வானொலி எனப் பெயர் பெற்ற இலங்கை வானொலியில் ஈழத்து மெல்லிசைப் பாடல்களைத் தேடியும், இசையமைத்தும், பாடியும் காற்றலையில் தவழவிட்ட பெருமைக்குரியவர்களில் இவர் முதன்மையானவராகக் கருதப்படுகின்றார்.



தனது ஆரம்பக் கல்வியை மலேசியாவில் கற்ற இவர், உயர் கல்வியைத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் தொடர்ந்தார். அங்கு திறமைச்சித்தி பெற்று, பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காகச் சென்னைக் கிறிஸ்த்துவக் கல்லூரியில் இணைந்து கொண்டார். அங்கு விலங்கியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்று, விஞ்ஞானமானிப் பட்டதாரியாக இலங்கைக்குத் திரும்பி, 1958-ம் ஆண்டு ஹட்டன் சென். ஜோன் பொஸ்கோக் கல்லூரியில், விஞ்ஞானப் பாட ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். அப்பதவியில் மூன்று ஆண்டுகள் மாத்திரமே பணியாற்றிய அவர், 1961-ம் ஆண்டு இலங்கை வானொலியில், வர்த்தகசேவைப் பிரிவில் அறிவிப்பாளராக இணைந்து கொண்டார்.

எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்கள் இலங்கை வானொலியில் இணைவதற்கு இளமையில் இசைத் துறையில் அவர் கொண்ட ஆர்வமே முக்கிய காரணமாகும். பாடசாலை மாணவனாகப் படிக்கும் காலத்திலேயே பாடல்களை இராகத்தோடு பாடும் திறமையை இயல்பாகக் கொண்டிருந்தார். இசைத் துறையில் இவர் கொண்ட ஆர்வத்தை அவதானித்த இவரது தந்தையார் சி. கந்தையா அவர்கள் இவரையும் இவரது சகோதரர் எஸ்.கே. மகேசன் அவர்களையும், அச்சுவேலியைச் சேர்ந்த பிரபல பாடகர் தம்பிமுத்து பாகவதரிடம் கர்நாடக இசை பயில அனுப்பினார். அவரிடம் இசை நுணுக்கங்களைப் பயின்ற எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்கள், பின்னர் வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையிலும் சித்தி பெற்றார். இவரது சகோதரர் எஸ்.கே. மகேசன், வைத்தியத் துறையில் உயர் கல்வி கற்று வைத்தியக் கலாநிதியாகப் பணிபுரிந்தார். எனினும் இருவரும் இணைந்து சிறந்த பாடகர்களாகப் பல மேடைகளையும் பரதநாட்டிய அரங்கேற்றங்களையும் அலங்கரித்தனர் என்பது தனிச் செய்தியாகும்.

வர்த்தக சேவையில் இணைந்து கொண்ட எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்கள், பல புதிய நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்து, வர்த்தக சேவையினை மேலும் மெருகூட்டினார். இந்தியத் திரைப்படப் பாடல்கள் மட்டுமே ஒலிபரப்பாகி வந்த அச்சேவையில், படைப்பாற்றல் திறமைகொண்ட நேயர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் வகையில், உள்ளூர்

சேவையில் 'ஒலி மஞ்சரி' என்னும் நிகழ்ச்சியையும், ஆசிய சேவையில் 'வானொலி மஞ்சரி' என்னும் நிகழ்ச்சியையும் அறிமுகம் செய்தார். நேயர்கள் பொது அறிவில் ஆர்வம் கொள்ளும் வகையில் 'விவேகச் சக்கரம்' என்னும் பொது அறிவு நிகழ்ச்சியை நடத்தி வந்தார். திரை இசைப் பாடல் களிலும் கர்நாடக சங்கீத இராகங்களை அவதானித்து, அப் பாடல்கள் எந்தெந்த இராகங்களை அடிப்படையாகக் கொண்டு மெட்டு அமைக்கப்பட்டுள்ளன என்பதனைச் சாதா ரண நேயர்களும் அடையாளம் காணக் கூடிய ஆற்றலை மேம்படுத்த, 'திரை தந்த இசை' என்னும் நிகழ்ச்சியை நடத் தினார். வர்த்தகச் சேவையில், முதன் முதலாக ரசிகர்கள் முன்னிலையில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட, 'ஆம் - இல்லை' பேச்சுத் திறன் போட்டியினை ஆரம்பித்து வைத்த பெருமை யும் இவரைச் சாரும்.

இலங்கை வானொலியில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை ஆரம் பித்தும் அறிமுகம் செய்தும் சிறப்பாகப் பணியாற்றிய பரரா ஜசிங்கம் அவர்கள், ஈழத்து மெல்லிசைப் பாடல்களை இலங்கை வானொலியில் அறிமுகம் செய்து வானலையில் தவழவிட்ட பெருமைக்குரியவர் ஆவார். திரு B.H. அப்துல் ஹமீத் அவர்கள், கடந்த வருடம் எழுதி வெளியிட்ட, 'வான லைகளில் ஒரு வழிப்போக்கன் - அன்பு அறிவிப்பாளரின் அரை நூற்றாண்டு அனுபவப் பதிவுகள் என்னும் நூலில், ஈழத்து மெல்லிசையின் நதிமூலம் எஸ்.கே. பரராஜசிங்கம் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தனது நூலில் 'இத் துறையில் உண்மையாக உழைத்தவர்கள் எவரும் முறை யான பதிவுகளைச் செய்யாத காரணத்தினாலும், பிற்காலத் தில் வந்த சிலர் வெறும் நுனிப்புல் மேய்ந்து தவறான பதிவு களைத் தந்துள்ளமையினாலும் அந்த வரலாற்றினைத் தெளி வாகப் பதிவு செய்வது அவசியமாகின்றது எனக் குறிப்பிட் டுத் தனது நேரடி அனுபவத்தினை விபரித்துள்ளார்.

1969-ம் ஆண்டு 'மலிபன் பிஸ்கட்' தயாரிப்பாளர்கள் குறுகிய நேர விளம்பர நிகழ்ச்சி ஒன்றைச் செய்ய விரும்பிக், காவ லூர் இராஜதுரையுடன் பரராஜசிங்கத்தை அணுகினர். கிராமி யப் பாடல்களுக்குப் புதிய மெட்டமைத்து வித்தியாசமாக ஒரு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என ஆர்வம் கொண்டி ருந்த பரராஜசிங்கம் அவர்கள் அதற்குப் பேராதரவு வழங்கி னார். ஒவ்வொரு வாரமும் மூன்று பாடல்களை இசையமைப் பாளர் எம்.கே. ரொக்சாமி (M.K. Rocksamy) அவர்களின் உதவியோடு, மூன்று கலைஞர்கள் வழங்கும் பின்னணி இசையில் இணைந்து பாடி, 'மலிபன் கவிக்குரல்' என்னும் நிகழ்ச்சியை நடத்தி வந்தார். ஆரம்பத்தில் பரராஜசிங்கத்து டன் கோகிலா - சுபத்திரா சகோதரிகளும் இணைந்து பாடியி ருந்தனர். 'மலிபன் கவிக்குரல்' முதலாவது நிகழ்ச்சியில் 'அரி சிப் பொதியோடு வந்தீரோ தங்கம்', 'கிண்ணி போல் சந்திர ரும் கிழக்கில் பார்த்த சூரியரும்', 'தென்னை மரத்துப் பாளைக்குள்ளே ரெண்டு தேரை இருந்து முழிக்குது பார்' ஆகிய பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

இப்பாடல்களை ஈழத்து மெல்லிசைப் பாடல்களின் தொடக்க மாகக் கருதலாம். அக்காலப் பகுதியில் மெல்லிசை என்ற சொல் கூட இலங்கையில் வழக்கில் இருக்கவில்லை. தனிப் பாடல்கள் என்றே அழைக்கப்பட்டன. அவை பக்திப் பாடல் களாகவோ, பாரதியார் பாடல்களாகவோ தான் இருந்தன. இத்தகைய சூழ்நிலையில் தான் பரராஜசிங்கம் அவர்கள், நாட்டார் பாடல்களைத் தேடியும், இசை அமைப்பாளர்களின் உதவியுடன் இசை அமைத்தும், இசைக்கேற்ப பாடல்களை இயற்றக் கூடிய கவிஞர்களை நாடியும், ஈழத்து மெல்லிசைப் பாடல்களுக்கு உயிர் கொடுத்தார். அந்த வகைகளில் உரு வாகிய பாடல்களில் ஒன்று தான் 'சந்தனமேடை என் இதயத் திலே' என்ற பாடல். இப்பாடலுக்கு இசையமைத்தவர் பாரீஸ் நகரில் வாழ்ந்து வந்த அமரர் எம்.எ. குணசீலநாதன் அவர் கள். அவரையும் இணைத்து, எஸ்.கே. பரராஜசிங்கம் அவர் கள் பாடிய பாங்கு பலரையும் வெகுவாகக் கவர்ந்தது. இப் பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர் என். சண்முகலிங்கம் அவர்கள். பரராஜசிங்கம் அவர்கள் பாடிய,

*'அழகான ஒரு சோடிக் கண்கள்*
*அம்புகள் பாய்ச்சி என் உளமெல்லாம் புண்கள்'*

என்ற பாடலும் மக்கள் மனதைத் தொட்ட பாடலாகும். இப் பாடலுக்கு ஒரு சுவையான வரலாறு உண்டு. எழுதியவர் பெயர் இல்லாமல் பத்திரிகையில் வெளிவந்த, ஒரு பாட சாலை மாணவனின் கன்னிக் காதல் கவிதைக்கு ஆ.மு.- ரொக்சாமி இசையமைக்க, பரராஜசிங்கம் அவர்கள் வானொ லியில் பாடி, வானலையில் தவழவிட, அது பட்டி தொட்டி எங்கும் பரவிப் பிரபல்யம் அடைந்த பின்னரே, அக்கவிதைக் குச் சொந்தக்காரர் யார்? எனத் தெரிய வந்தது. அவர் தான் பசீல் காரியப்பர்.

அறிவிப்புத் துறையிலிருந்த பரராஜசிங்கம் அவர்கள் இசைப் பகுதியின் கட்டுப்பாட்டாளராகப் பொறுப்பேற்ற பின், முதல் ஈழத்து மெல்லிசைப் பாடல் தொகுதி, 'கங்கையாளே' என் னும் பெயரில் இசைத் தட்டாக வெளிவந்தது. மேலும் நவீன மயப்படுத்தப்பட்ட மயிலிட்டி தெற்கு, கட்டுவன் 'வீரபத்திரர் வசந்தன்' போன்ற ஈழத்தின் குறிப்பிடத்தக்க கலை முயற்சி களின் உயிர் நாடியாகவும், அவர் செயற்பட்டார். சமூகப் பண்பாட்டுக் கோலங்களை அடிப்படையாக வைத்து இலங்கை வங்கியின் ஆதரவில், அவர் நடத்திய 'இதயரஞ் சனி' என்னும் சஞ்சிகை நிகழ்ச்சியின் மூலம் அவரது ஆளு மையை மேலும் சிறப்பாக அறிந்து கொள்ள முடியும். ஈழத்து மெல்லிசைப்பாடல் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணியை வியந்து, 'ஈழத்து மெல்லிசையின் பிதாமகன்' எனப் பெருமையுடன் அழைக்கப்படுகின்றார்.

ஈழத்தின் இசைப் பாரம்பரியங்களையும் நடைமுறைகளையும் நன்கறிந்த எஸ்.கே. பரராஜசிங்கம், கர்நாடக இசைப் புல மையுடன் பிறநாட்டு இசைகளின் ஞானமும், நுட்பமும் அறிந் தவராக விளங்கினார். அதனால் தான், எங்கெல்லாம் பிற இசை அழகுகளைக் கண்டாரோ, அவற்றையெல்லாம் ஈழத்த மிசைக்குக் கொண்டுவரப் பெருமுயற்சி செய்தார். பல பரி சோதனை முயற்சிகளையும் மேற்கொண்டு, ஈழத்து மெல்லி சையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு சென்றார். குறிப்பா கப் பிரபல பாக்கிஸ்தானிய இசையமைப்பாளர், சொஹெ- யில் ராணா. (Sohail Rana) அவர்கள் உருவாக்கிய இசைத் தொகுதியிலிருந்த பாடல் ஒன்றின் மெட்டு, எஸ்.கே. பரராஜ சிங்கத்தைக் கவரவே, அவரது வேண்டுகோளுக்கிணங்க என். சண்முகலிங்கம் அவர்கள் 'குளிரும் நிலவினிலே' எனப் பாடல் இயற்ற சொஹையில் ராணாவின் இசைப் பின்னணி யில் பரராஜசிங்கம் அவர்களே அப்பாடலைப் பாடித் தானும் மகிழ்ந்து நேயர்களையும் பரவசப்படுத்தினார்.

1972 ஆண்டளவில் வீணை இசை மேதை சிட்டி பாபு அவர்க

ளின் 'Musings Of A Musician' என்னும் இசைத் தொகுதி ஒன்று வெளியாகி இருந்தது. அந்த இசைத் தொகுதியில் இடம்பெற்ற 'Wedding Bells' என்னும் பாடல் மெட்டு, பரராஜ-சிங்கம் அவர்களுக்கு மிகவும் பிடித்துப்போய் இருந்தது. அவரது விருப்பத்துக்கிணங்க அங்கையன் கைலாசநாதன் அவர்களின் வரிகளில், குமார் கனகரத்தினம் அவர்களின் தொழில்நுட்பத் திறமையுடன், 'ஓ... மணிக்குரல் ஒலித்ததே' என்னும் பாடல் உருவாகியது. சிட்டி பாபுவின் அனுமதியுடன் பரராஜசிங்கம் அவர்களின் குரலில் அப்பாடல் வானலையில் தவழ்ந்து நேயர்களின் மத்தியில் பெரும் புகழ் பெற்றது. அக் காலப் பகுதியில் திருமண வைபவங்களில் இப்பாடல் பெரும்பாலும் இடம்பெறும். நாதஸ்வரக் கலைஞர்களும் விரும்பி வாசிப்பதுண்டு.

அக்காலப் பகுதியில், பிரபல சிங்களப் பாடகர் விக்டர் ரத் நாயக்க அவர்கள் இலங்கை வானொலிக் கலையகத்தில் ஏராளமான வாத்திய இசைக்கலைஞர்களைக் கொண்டு பாடல்களுக்கான பின்னணி இசையை உருவாக்குவார். அவ ரிடம் B.H. அப்துல் ஹமீத் அவர்கள் பின்னணி இசையைப் பெற்று, பொப்பிசைப் பாடகர் A.E. மனோகரனின் வரிகளில், குமார் கனகரத்தினம் அவர்களின் தொழிநுட்ப உதவியுடன் 'வயல் வெளியில் வளைந்து வளைந்து நடனமிடும் பெண்ணே' என்னும் பாடலைப் பரராஜசிங்கம் அவர்களின் கணீர் குரலில் ஒலிபரப்பினார்.

எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களின் பாடல்களால் கவரப் பட்ட B.H. அப்துல் ஹமீத், அவரது பாடல்களைத் தேடிச் சேகரித்துப் பதிவு செய்து 'இசைக் களஞ்சியம்' என்ற நிகழ்ச் சியை ஒலிபரப்பி வந்தார். இதனை அவதானித்து வந்த விவி யன் நமசிவாயம் அந்த நிகழ்ச்சிக்கு நேரமும் ஒதுக்கிக் கொடுத்தார். இந்த நிகழ்ச்சியினை மேலும் மெருகூட்ட, அப் போது பணிப்பாளராயிருந்த பொன்மணி குலசிங்கம் அவர் கள் தனியாக ஒரு வாத்தியக் குழுவினை அமைக்க உதவி செய்தார். இசையமைப்பாளர் அமரர் ஆர். முத்துசாமி அவர் களின் தலைமையில் வாத்தியக்குழு இயங்கியது. ஆரம்பத் தில் எஸ்.கே. பரராஜசிங்கத்துடன் இணைந்து திருமதி. அம் பிகா தாமோதரம், திருமதி. மீனா மகாதேவன் ஆகியோர் ஈழத்துப் பாடல்களைப் பாடியிருந்தனர்.

பரராஜசிங்கம் அவர்கள் தயாரிப்பாளராகப் பணியாற்றிய போது, கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றிய விவியன் நமசி-வாயம் அவர்களின் ஒத்துழைப்புடன் வத்தளையைச் சேர்ந்த வில்சன் என்பவரின் 'தண்டர் ஸ்பாக்ஸ்' குழுவினர் பாடிய, துள்ளிசைப் பாடல்களையும் சேர்த்துக் கொண்டார். இதனை அறிந்த திருகோணமலை பரமேஸ் - கோணேஸ் சகோதரர் கள் கொழும்பிற்கு வந்து வாத்தியக் கலைஞர்களின் உதவி யுடன் நான்கு பாடல்களை ஒலிப்பதிவு செய்தனர். அந்தப் பாடல்களும் ஈழத்துப் பாடல்கள் நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள் M.P. பரமேஸ் அவர்கள் பாடிய 'உனக்குத் தெரியுமா நான் உன்னை நினைப்பது' என்னும் பாடல் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. அடுத்தகட்ட வளர்ச்சியாக நித்தி கனகரத்தினம் அவர்கள், யாழ். தினகரன் விழாவில் 'சின்னமாமியே உன் சின்ன மகளெங்கே' என்னும் பொப் பாடலைப் பாடி, பின்னாளில் பொப் இசையின் பிதா வாக அடையாளம் காணப்பட்டார். அவரைத் தொடர்ந்து சில் லையூர் செல்வராஜன், A.E. மனோகரன் போன்றவர்கள் அத் துறையில் உச்சம் பெற்றனர். இவ்வாறு ஈழத்துப் பாடல்கள் துள்ளிசையாகவும், பொப்பிசையாகவும் பரந்து வளர்ச்சி பெறப் பிள்ளையார் சுழி போட்டவர் பரராஜசிங்கம் அவர் களே என்னும் பெருமை அவரைச் சாரும்.

இவ்வாறாக ஈழத்து மெல்லிசைத் துறையில் பல புதுமைக ளைச் செய்த பரராஜசிங்கம், பின்னாளில் சில மனக்கசப் பான அனுபவங்களுடன் வானொலித் துறையிலிருந்தும் ஓய்வு பெற்றதாகக் கூறப்படுகிறது. இவர் பணியாற்றிய காலத்தில் கணீர் குரலில் பாடும் பாடகராகவும், நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகவும், அச்சு வடிவில் வெளிவந்த 'வானொலி மஞ்சரி' சஞ்சிகை ஆசிரியராகவும், சிறந்த பயிற்றுனராகவும், திறமைமிக்க நிர் வாகியாகவும் செயற்பட்டுள்ளார். மேலும் பாராளுமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகவும், xRay கதிரியக்க வல்லுனராக வும் பன்முக ஆளுமை கொண்ட இவர் 1999-ம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்தியெட்டாம் திகதி அமரத்துவம் அடைந் தார்.

தனது வாழ்க்கையினை முழுமையாக அர்ப்பணித்து, ஈழத்து மெல்லிசை வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். ஈழத்தின் தனிச் சிறப்புகளையும், அழகியலையும் மிக லாவகமாக இசை வடி வத்திலே வெளிக்கொணர்ந்தார். இலங்கையில் ஆக்க சங்கீ தம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். ஈழத்து மெல்லி சைக் கலையின் ஆக்க முயற்சிகள், அவரது இனிய குரலில் உயிர் பெற்றுப் பாமாலைகள், ஈழத்துப் பாடல்கள், இசைச் சித்திரங்கள், நடன, நாடக அரங்குகள் என விரிந்து சென் றன.

எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக B.H. அப்துல் ஹமீத், சி. நடராஜசிவம், கே.எஸ். பாலச்சந்திரன் ஆகியோர் ஒன்றிணைந்து, அவர் பாடிய மெல்லிசைப் பாடல்களைத் திரட்டி, ஒலியிழைப் பேழைக ளாக்கி, பாராட்டு விழா ஒன்றினை ஏற்பாடு செய்து, அவ்வி ழாவில், 'ஒலி ஓவியம்' என்னும் பெயரில் வெளியிட்டனர். பின் னர் அது கனடாவில் 'குளிரும் நிலவு' என்னும் பெயரில் அருவி வெளியீடாகக் குறுந்தட்டில் வெளிவந்தது. பின்னர் கனடாவில் 'குளிரும் நிலவு' என்னும் பெயரில் அருவி வெளி யீடாகக் குறுந்தட்டில் வெளிவந்தது.

அமரர் பரராஜசிங்கம் அவர்களின் தன்னலமற்ற வானொலிச் சேவைக்காகச் சர்வதேச 'உண்டா' விருது வழங்கி கௌரவிக் கப்பட்டார். அவரது பூத உடம்பு அழிந்தாலும், அவரது நாமம் இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை வரலாற்றில் அழியா இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

(குறிப்பு: இக்கட்டுரை, கடந்த வருடம் B.H. அப்துல் ஹமீத் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட, 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' - அன்பு அறி விப்பாளரின் அரை நூற்றாண்டு அனுபவப் பதிவுகள் என்னும் நூலையும், அமரர் எஸ்.கே. பரராஜசிங்கம் அவர்களுடன் ஈழத்து மெல்லிசைத் துறை யில் இணைந்து பயணித்தவரும், அவரது உறவினரும், யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தருமாகிய என். சண்முகலிங்கம் அவர்களு டன் தொடர்பு கொண்டு பெற்ற தகவல்களையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.)



vivekananthan.v@thaiveedu.com

# சமூக மேம்பாட்டுச் சிந்தனையாளர் ஜே. எம். ஷம்சுத்தீன் மௌலானா

- இனியவன் இசாறுதீன்

ஒவ்வொரு தனிமனிதரும் தான் வாழும் சமூகத்தின் பிரதிநிதியாகவும் மனச்சாட்சியாகவும் ஆர்வலராகவும் பிரதிபலிக்க வேண்டும். மக்களோடு கூடி வாழும் மனிதர், மனிதத்தை



மேம்படுத்தும் பணியில் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். நற்சிந்தனையால் நற்பண்புகளால் நற்கருமங்களால் பிறரை மேம்படுத்தும்போது சமூகம் அவரை ஒரு மகத்தான மனிதராக அடையாளம் கண்டு சமூகத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்தை வழங்குகின்றது. அத்தகைய குண இயல்புகளோடு கூடிய ஓர் வாழ்க்கை வாழ்ந்த அறிவுப் பெருந்தகைதான் அல்ஹாஜ் ஜே.எம். ஷம்சுத்தீன் மௌலானா.

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் செறிந்து வாழும் ஊர் அட்டாளைச்சேனை. அட்டாளைச்சேனை நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தையும் பல சிறப்புக்களையும் கொண்டது. கல்வி, கலை, கலாசாரம், இலக்கியம், அரசியல், ஆன்மீகம், வேளாண்மை, விவசாயம் என்று காணப்படும் கரையோரக் காட்சிச் சூழலில் அது கவி வளத்தோடு பரிணமிக்கின்றது. ஆசிரியர் கலாசாலை, அறபுக்கல்லூரி, கல்விக்கல்லூரி, தேசிய பாடசாலை என இவ்வூரின் கல்வி விலாசம் விசாலமானவை. இவை மட்டுமன்றி இஸ்லாமிய இலக்கிய கவிதைக் கருவூலங்களைக் கருத்தரித்த பெருமையும் இவ்வூருக்கு இருக்கின்றது. பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்க புரவலர்களையும் புலவர்களையும் புலமைவாதிகளையும் கொண்ட இந்த கல்விக் களஞ்சியம் அட்டாளைச்சேனை. ஆதியிலிருந்து இயற்கையெழில் மிகுந்த இந்த ஊரில், ஒரு பிரபல்யமான குடும்பத்தில் 24.06.1925 அன்று அவர் பிறந்தார்.

'மௌலானா' என்பது அறபுப் பதமாகும். இதற்கு அழகு, அமைதி, வள்ளல், தன்னம்பிக்கை என்று பல பொருள்கள் தமிழில் உள்ளன. உலகில் வாழும் எல்லா மொழிபேசும் முஸ்லீம்களிலும் மௌலானா என்னும் செல்வாக்குள்ளவர்கள் இன்னமும் வளர்ந்து - வாழ்ந்துகொண்டே இருக்கிறார்கள். இந்த அறபு-முஸ்லீம் மூதாதையர்கள் கடல்வழிப் பயணம் செய்து கரையோரக் கிராமங்களில் குடியேறி வணிகத்தை வாழ்வாதாரமாக்கிக் கொண்டு இஸ்லாத்தை வாழ்க்கையாகவும் வாழ்வியல் முறையாகவும் போதித்து வந்தார்கள்.

14-ம் நூற்றாண்டில் இஸ்லாமிய, இலக்கிய, இலக்கண காப்பியங்களை இயற்றும் துருக்கி-அறபு முஸ்லீம்களின் வருகை இந்தியாவிலும் இலங்கையிலும் அதிகரித்தது. அதிலும் கடல்வழிக் கரையோரக் கிராமத்து முஸ்லீம்கள் இதில் குறிப்

பிடத் தக்கவர்கள். இந்தியாவிற்கு இடம்பெயர்ந்த இவ்வழித் தோன்றல்கள் இலங்கையிலும் இஸ்லாமிய கலை, கலாசார, ஆன்மீக நெறியை பரப்பினார்கள் என்று பண்டைய நூல்கள் பகர்கின்றன. இன்றும் பயன்படுத்தப்படும் 'தொழுகை, நோன்பு, ஆணம், பள்ளிவாசல்' போன்ற சொற்பதங்கள் ஆதியில் சமணத்திலிருந்து வந்த தூயதமிழ் என்பதும் அதை சமணர்களே முழுக்க முழுக்க பயன்படுத்தினார்கள் என்றும் பழைய வரலாறுகள் கூறுகின்றன.

*'ஒப்பரிய சட்டையும் உடுத்திலகு பட்டும்*
*தொப்பியும் முகத்திடை துலக்க முளராகி'*

என்று அளவில் சிறிதான 545 செய்யுள்களைக் கொண்ட திரு வாதவூரடிகள் புராணத்தில் கடவுள் மாமுனிவர் பாடியுள்ளார்.

கிழக்கிலங்கையின் மூத்த அறிஞர்களில் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர் அல்ஹாஜ் ஜே.எம். ஷம்சுத்தீன் மவுலானா. மொழி, சமூகம், அறிவியல், ஆன்மீகம், மனிதாபிமானம் என்ற பல பரிமாணங்களில் அவரது தேசிய அடையாளம் அகன்று நிற்கின்றது. 1945-ல் அட்டாளைச்சேனையில் பயிற்சி பெற்று பள்ளி ஆசிரியர் பணி தொடங்கி, இலங்கையின் பல் வேறு பிரதேசங்களில் அவர் அதிபராகவும் பிரதி அதிபராக வும் பணியாற்றினார். தனிமனித ஆளுமையாகத் தனித்துவம் பெற்று ஒரு தனிநபர் தமிழ் நிறுவனமாகச் செயலாற்றினார். இவை தவிர பாண்டித்தியம் பெற்ற ஒரு தமிழ்ப்பண்டிதர் என்ற பெருமையும் அவருக்குண்டு. சமயோசிதமாகச் சிந்தித் துச் செயலாற்றுகின்ற சமூகப்பற்றாளர், சிறந்த நிர்வாகி என் கிற புகழையும்கூட அவர் சம்பாதித்திருக்கிறார்.

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தகைமை பெற்ற அவர் அறபு மொழியில் ஆறு வருடங்கள் 'ஷரீஆ' சட்டம் கற்றார். அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபிக் கல்லூரியை நிறுவ முயன்ற முதுபெரும் அறிஞர்களில் அவர் ஒரு முதல் மனிதராய் நின்றார். கல்லூரி நிறுவப்பட்டதன் பின் அதன் ஆளுநர் சபை உபதலைவராகப் பணியாற்றினார். அட்டா ளைச்சேனை இணக்கசபை, அம்பாறை மாவட்ட அரசியல் அதிகாரசபை, ஜூம்ஆ பள்ளிவாசல் நிருவாகசபை ஆகிய வற்றில் பிரதம ஆலோசகராய் பதவி வகித்தார். பலநோக் குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கமநல சேவை நிலையம் ஆகியவற்றின் தலைவராக திறம்படச் சேவை செய்தார். கல் விப்புலத்தில் மட்டும் காலூன்றி நிற்காமல் முன்னாள் காதி நீதிபதியாக பணியாற்றியபோது கடமையிலும் கண்ணியத்தி லும் நேர்மையிலும் நீதியிலும் நிர்வாகத்திறத்திலும் செய்த நீண்டகால சேவைக்காக முஸ்லீம் சமய கலாசார அமைச்சி னது பாராட்டையும் பெற்றார்.

37 வருடங்களின் பின் ஓய்வுபெற்றிருந்த காலத்தில் 2010 - 2011-ம் ஆண்டுகளில் தன் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள அறபா பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய போது தனக்கு உடலாரோக்கியமற்றிருந்தும்கூட க.பொ.த. சாதாரணதர மாணவர்களை தன் வீட்டுக்கு வரவழைத்து தினந்தோறும் தமிழ் இலக்கியம் போதித்தார்.

ஷம்சுத்தீன் மௌலானா தன் கொள்கையில் திடமானவர். அவரது தீர்ப்புகள் தயவு தாட்சண்யம் காட்டாதவை. நேர்மை யாகச் செயற்படும் மதிநுட்பம் மிக்க ஷம்சுத்தீன் மௌலானா தன் பிள்ளை பிழை செய்தாலும் கடும் சினத்தோடு கண்டிப் பார். அவரது நிர்வாகத்தின் கீழ் எங்கு அநீதி நிகழ்ந்தாலும் அங்கே அதைச் சுட்டிக் காட்டத் தயங்கமாட்டார்.

1950-ம் ஆண்டு முதல் சுதந்திரன், தினபதி, தினகரன், எழு வான் ஆகிய இலங்கைப் பத்திரிகைகள் அவரது ஆக்கங் களை விரும்பிப் பிரசுரித்தன. பத்திரிகைகளில் வெளிவந்த அவரது நாற்பதுக்கு மேற்பட்ட திறனாய்வுக் கட்டுரைகள் தீர்க்கமானவை. தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் உள்ள 'கருத்து முரண்பாடுகள்' என்ற அவரது கட்டுரை தினகரனில் வெளிவந்தபோது தர்க்கவாதிகள் சிலர் சர்ச்சையை உண் டாக்கியபோதும் கடைசியில் அவரது தெளிவான கருத்தை ஏற்றுக்கொண்டார்கள். 'யூதர்கள் யார்?', 'வாழ்வியலும் பண் பாடும்' என்கிற இரு நூல்களை அவர் அச்சில் தந்திருக்கி றார்.

தமிழ் இஸ்லாமிய இலக்கியம் சம்பந்தமாக அவரோடு அள வளாவ வேண்டுமென்று அவரை அணுகியபோதுதான் அவ ருக்குள்ளும் ஒரு தமிழ்ப்புலவன் இருக்கிறான் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. தன் பாடசாலை நிர்வாக அனுப வத்தைப் பற்றிப் பேசும்போது 'ஆசிரியர் என்பவர் இரண்டா வது பெற்றோர். படிப்பிக்காமல் சும்மா சுற்றும் ஆசிரியன் பிள்ளை ஒருபோதும் படிக்காது' என்றார். 'அறிவும் திறமை யும் எல்லோரிடமும் உள்ளது. ஆனால் அதை வழிநடத்தும் விதத்தில்தான் வெற்றியும் தோல்வியும் உள்ளது' என்றார். நம்பிக்கை பற்றிப் பேசும்போது 'நாளை நல்லது நடக்கும் என்பது நம்பிக்கை, நாளை நல்லது நடக்காவிடினும் அதை சமாளிக்கலாம் என்பது தன்னம்பிக்கை, எது நடந்தாலும் தொடர்ந்து முயன்று வெற்றி பெறுவேன் என்பதே நன்னம் பிக்கை' என்றார்.

1995-ம் ஆண்டில் முன்னாள் அமைச்சர் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் இலங்கை ரூபவா ஹினி தொலைக்காட்சித்திரையில் வாசித்த 'நீதிக்காய் போராடு' என்ற கவிதையைப் பாராட்டி மௌலானா தான் எழுதிய வாழ்த்துப்பாவை வாசித்துக் காட்டியபோது அவரது அனுபவ உணர்வு மெய்யானது என்பதை உணர முடிந்தது.

*'தென்கிழக்கு தேன்சொரியும்*
*வான்புகழும் நம்மலகு*
*உன் கனவு உருப்பெறவே*
*உதவினரே உத்தமரும்*
*பன்மொழியில் பாவலன் நீ*
*பாவலர்க்குப் பாவலன் நீ*
*மென்மொழியில் நீ பேசி*
*கல்மனமும் கரைத்திடுவாய்'*

இலக்கண இலக்கிய மரபு சார்ந்த புலமையாளர் ஷம்சுத்தீன் மௌலானாவின் கவிப்புலன் காத்திரமானது என்பதையும்

அமைச்சர் அஷ்ரஃப் அவர்களுக்கு அவர் எழுதியனுப்பிய கடிதத்தில் காணமுடிந்தது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அம்மையார் காலத்தில் இலங்கையில் தமிழ் முஸ்லீம்களுக்கு தென்கிழக்கு அலகு வேண்டுமென்று தனி அரசியல் அபிலாசையோடு தீவிரமாக முயன்றவர் முன்னாள் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள். அவர் ஒலுவிலை உயர்த்திவிடும் நோக்கில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தையும் துறைமுகத்தையும் உருவாக்கிவிட ஒரு அபிவிருத்தித் திட்டத்தை உண்டாக்கினார்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன் அந்தச் சூழலில் வாழ்ந்த அறிஞர் பலரிடம் கருத்தறிந்து கொள்ள அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் ஷம்சுத்தீன் மௌலானாவின் கருத்தையும் எழுதிக் கேட்டார். கல்வி முக்கியம் என்பதனால் 'பல்கலைக்கழகம் வேண்டும்' என்று பரிந்துரை செய்த ஷம்சுத்தீன் மௌலானா 'அன்றைய நிலவரத்தில் முஸ்லீம்களின் பூர்வீகநிலமான ஒலுவிலில் துறைமுகம் அமைத்தால் இனவாத அரசின் திட்டமிட்ட சிங்களகுடியேற்றம் நிகழ்ந்துவிடும், அந்நியர் ஆதிக்கம் பெருகிவிடும், இஸ்லாமிய கலாசாரம் சிதைந்து விடும், இனவாத அரசின் சிங்கள ஆக்கிரமிப்பை நிகழ்த்த எதிர்காலத்தில் ஒலுவில் துறைமுகம் ஒரு வாய்ப்பாக அமைந்து விடும், அதனால் துறைமுக அபிவிருத்தி என்பது ஒலுவிலில் நிறுவவேண்டாம்' என்று தன் கருத்தை முன்வைத்தார். அதனால் ஒலுவில் துறைமுகத் திட்டத்தை கைவிடுமாறு அவர் அமைச்சருக்கு எழுத்தில் கொடுத்தார். இதையறிந்த சில அரசியல் ஒட்டுண்ணிகள் திட்டமிட்டு அவர் எழுதிக் கொடுத்த படிவங்களை 'பல்கலைக்கழக பாட ஆய்வுக்குத் தேவை, அதைப் படித்து விட்டுத் திருப்பித் தருகிறோம்' என்று பொய் சொல்லி அவரிடமிருந்து ஒரு சில மாணவர்களின் மூலம் சுவீகரித்துக் கொண்டு சென்றுவிட்டார்கள். அதை அப்படியே இருட்டடிப்பும் செய்துவிட்டார்கள் எனவும் அறியமுடிந்தது.

அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் நிறைவேற்றிய அந்தத் திட்டங்களில் இப்போது பல்கலைக்கழகம் பல வகையில் பயனளிக்கிறது. ஆனால் துறைமுகமோ இப்போது பாழடைந்தே கிடக்கிறது. மக்கள் வாழ்வைப் பலியெடுத்துக் கொண்டிருக்கிறது. கடலரிப்பால் மீன்பிடித் தொழில் இழந்து, வாழ்விழந்து, கலாசாரம் இழந்து ஒலுவில் இப்போது சிங்கள இனவாத அரசின் ஆக்கிரமிப்பில் பூர்வீகத்தை இழந்து நிற்கிறது. இத்தகைய இன்னலில் ஷம்சுத்தீன் மௌலானாவின் அன்றைய தீர்க்கதரிசனத்தை எத்தனை பேர் இன்று எண்ணிப் பாரப்பார்களோ நாமறியோம். ஆனால் அவரது சிந்தனையை நாம் நேசிப்பதற்கும் அவரை வாசிப்பதற்கும் இது வாய்ப்பாய் இருக்கிறது.

அட்டாளைச்சேனைப் பிராந்தியத்தில் வழி தெரியாமல், வரப்புத் தெரியாமல், வயல்நிலம் தெரியாமல், பண்படுத்திப் பயிர் செய்ய முடியாமல் ஆண்டாண்டு காலமாய் குளத்து நீரில் மூழ்கிக் கிடந்த பல்லாயிரம் ஏக்கர் பரப்பளவு விவசாய நிலத்தில் அந்த ஊர் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் அவதிப்பட்டார்கள். அந்தக் கரையிலிருந்து இந்தக் கரைக்கு இடுப்புவரையான நீரைக் கடந்து செல்லமுடியாமல் ஊர்மக்கள் அல்லலுற்றனர். அவர்களது போக்குவரத்துக்கு 'பாவங்காய்ப்பாதை' என்ற ஒரு பொதுப்பாதை வேண்டுமென்று ஊர்மக்கள் கேட்டபோதும் பலகாலமாய் அன்றைய அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டபோது ஷம்சுத்தீன் மௌலானாவின் ஆலோசனையின் பேரில் 1975 ஆகஸ்ட் 30, 31 இரண்டு நாட்கள் ஊர்மக்கள் ஒன்றுதிரண்டு சிரமதானப் பணி மேற்கொண்டதால் அட்டாளைச்சேனை 'பாவங்காய்ப் பாதை' உருவாக்கப்பட்டது. அட்டாளைச்சேனையிலிருந்து அம்பாறைக்குக் காரில் செல்லும்போது காணக் கிடைக்கும் கதிர்தரு காணிநிலமெல்லாம் விளைநிலமாகவும், அதற்கு ஆதாரமாக அமைந்த கற்பாதை இப்போது ஒரு 'கொங்கிறீற் நெடுஞ்சாலையாகவும் நிலைபெற்றிருப்பது நாம் பெற்ற பெரும்பேறாகும்.

*'நேற்றைய காலடிச் சுவடுகளே*
*இன்றைய தேசிய நெடுஞ்சாலைகள்*
*ஆதலால்*
*புதுவழி காணத் தயங்காதே*
*காலடிச் சுவடுகள்*
*இல்லையெனக் கலங்காதே'*

என்றொரு கவிதையை நான் அன்று எழுதியிருந்தேன். அந்தக் கவிதை கருத்தரிப்பதற்குக் காரணமே அட்டாளைச்சேனை ஊர்மக்களின் இந்த அரிய கருமம்தான். அன்று விதைத்த விதை இன்று மரமாகி, வளர்ந்து விருட்சமாகி, விழுது விட்டிருப்பதைக் காணும்போது அது நாம் பெற்ற பெரும் பாக்கியமாய்த் தெரிகிறது. இப்படி ஆழமாகவும் அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் தீர்க்கதரிசனமாகவும் தன் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை முன் வைத்த சிந்தனையாளர் ஷம்சுத்தீன் மௌலானா இன்று ஊரில் இல்லை என்றாலும் அவர் விட்டுச் சென்ற கல்வெட்டுக்கள், காலசுவடுகள் இன்னும் இருக்கின்றன.



isarudeen@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

**E-mail: info@thaiveedu.com**   **Fax: 1-416-849-0594**   **Tel: 1-416-857-6406**




# மல்லாவி மத்திய கல்லூரியின் கல்வி விருத்திக்கு...

**- த. சிவபாலு**

விடுமுறைக்காக இலங்கை சென்ற நான், முன்னர் பணியாற்றிய யோகபுரம் தேசியப் பாடசாலை, மல்லாவி மத்திய கல்லூரி என்பனவற்றில் எனது கவனத்தைக் கூடியளவு செலுத்தினேன். என்னைப் பிரமிக்க வைத்த ஒரு விடயம், வன்னிப் பிரதேசத்தோடு எந்தவிதத் தொடர்புகளும் அற்ற, அந்தப் பிரதேசங்களைப் பற்றிக் கேள்விப்படாத ஒரு இணையர்களின் தன்னார்வப் பங்களிப்பாகும். அந்த இணை



Dr. விமல் ஜெயரட்ணம், வித்தியா ஜெயரட்ணம்

யர்கள் வேறு யாருமல்ல, நீண்டகாலத்திற்கு முன்னர் பிரித்தானியாவிற்குச் சென்று மருத்துவராகக் கடமையாற்றிய வில்லியம் விமல்ராஜ் ஜெயரட்ணம் அவர்களும் அவர் மனைவி நீலகாந்தி அவர்களும் ஆவர். Dr. ஜெயரட்ணம் தனது குடும்பத்தோடு இங்கிலாந்தில் குடியேறி அங்கேயே நீண்ட காலமாக பணியாற்றி வந்தவர். தனது ஓய்வு காலத்தை நிரந்தரமாகவே இணையரோடு இலங்கையில் கழித்துக் கொண்டிருக்கின்றார்.

Dr. விமல்ராஜ் ஜெயரட்ணம் அவர்களின் குடும்பப் பின்னணி, யாழ். தீபகற்பத்தில் கல்வியால் உயர்ந்து விளங்கும் வட்டுக்கோட்டை மற்றும் கோப்பாய், நல்லூர்ப் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டது. எட்வேட்டியன் குடும்பம் தான் அவரது குடும்பத்தின் வரன்முறையாகும். தந்தையின் தந்தையார் றொபேர்ட் சுவிசேசம்பிள்ளை கோப்பாயில் தபாலதிபராகக் கடமையாற்றினார். தந்தை மருத்துவர். சட்டத்துறையில் சிறந்து விளங்கிய குறசெற் தம்பையா குடும்பத்தைச் சேர்ந்தவர் அவரது அன்னை. விமல்ராஜ் ஜெயரட்ணம் மலையகத்தில் உள்ள உடப்புசலாவையில் பிறந்தார். தந்தை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றியதன் காரணமாகப் பல்வேறு இடங்களில் இளமைக்காலத்தைக் கழித்தார். அவரது ஆரம்பக்கல்வியைக் கல்முனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்று, பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியின் ஆரம்பப்பிரிவிலும் தொடர்ந்து மேற்பிரிவிலும் கற்று, 1958 தொடக்கம் 1964 வரை கொழும்பு மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து, கொழும்பில் உள்ள Lady Ridgeway General Hospital-இல் தனது பணியைத் தொடங்கினார். அதன்பின் மலையகத்திற்கு மாற்றலாகி, இறுதியாக மினுவாங்கொட மருத்துவமனையில் சேவையாற்றினார். உயர்கல்வியைப் பெறுவதற்காகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்ததன் விளைவாக அங்கு சிலகாலம் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இக்காலத்திலேயே தத்துவப் பேராசிரியராக இருந்த திரு. வி.எஸ். காசிநாதன் அவர்களுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அவர் இன்று அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார். இவர்களுடைய நட்பின் இறுக்கத்தைப் பேராசான் காசிநாதருடன் உரையாடியபோது புரிந்துகொள்ள முடிந்தது. அவுஸ்திரேலியாவில் வாழும் திரு. காசிநாதர் இலங்கைக்கு வரும்போது அவரோடு தங்கியிருப்பது வழமையாக உள்ளது. அது மட்டுமன்றித் தான் செல்லும் இடங்களுக்கு அவரையும் குடும்பத்தினரோடு அழைத்துச் செல்வதைப் பயனுள்ள பொழுதுபோக்காகக் கொண்டுள்ளார். நட்புக் கொள்ள வேண்டுமென்றால் நல்ல நண்பர் கிடைக்க வேண்டும்.

Dr. விமல் என அன்பாக நண்பர்களால் அழைக்கப்படும் அவர் தன்னலமற்ற பெருமை பேசாத மனிதராக, எளிமையான வாழ்க்கையினையே மேற்கொண்டு வருகின்றார். அவரோடு உரையாடுவதே ஒரு இன்பந்தரும் மனநிலையை ஏற்படுத்தியது. அவரோடு உரையாடிய போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நண்பர்களாலும் மாணவர்களாலும் கவரப்பட்ட ஒரு தத்துவ விரிவுரையாளராக இருந்த காசிநாதர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார். அத்தோடு பஞ்சரட்ணம் என்னும் அவரது நண்பரைப் பற்றியும் சிலாகித்து உரையாற்றினார். வன்னிமாவட்டத்தில் கல்விக்காகத் தான் ஏதாவது செய்யவேண்டும் எனச் சிந்தித்தபோது அதற்கு ஊக்கமளித்து என்னைச் சிந்திக்க வைத்தவர்கள் இவர்கள் இருவரும் தான் என்றார்.

Dr. விமல்ராஜ் ஜெயரட்ணம் 'மனித உடற்கூற்றியல்' விரிவுரையாளராக இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பின்னர் மேற்படிப்பை மேற்கொள்ளுவதற்காக 1973-ல் லண்டன் சென்று அங்கு மருத்துவத்துறையில் Ph.D in Medicine பெற்றுக் கொண்டதோடு அங்கேயே தொடர்ந்து மருத்துவராகப் பணியாற்றித் தனது 66-வது வயதில் ஓய்வு பெற்றார். அதன்பின் தொடர்ந்து 4 ஆண்டுகள் பகுதிநேரமாகப் பணியாற்றியுள்ளார். தனது சேவைக்காலத்தில் பிறந்த மண்ணிற்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் வருகை தந்துள்ளார். தனது பெற்றோரின் உறவினர்களைச் சென்று பார்த்துவருவதும் அவர்களோடு நேரம் செலவிடுவதும் மனமகிழ்வைத் தருவதாகக் குறிப்பிட்டதோடு சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் விரிவுரையாளராக இருந்த மூத்த சகோதரரையும் நினைவுபடுத்திக்கொண்டார்.

திருமண பந்தத்தின் துணையாளாக நீலகாந்தி சண்முகம் அவர்களை இணைத்துக்கொண்டார். அவர்களுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் கிடைத்தனர். மூத்த புதல்வர் ஆபிரிக்காவில் பணியாற்றியவேளை நோய்த்தொற்றுக்கு ஆளாகி மரணித்தமை அவரது மனதைவிட்டு அகலாத துன்பச் சுமையைத் தந்துள்ளது என்பதை அறிந்தபோது மனம் கனத்தது.

தனது 70-வது வயதில் தனது பணியிலிருந்து முழுமையாக விடைபெற்றுக் கொண்டு நாடுதிரும்பிய அவர் கொழும்பில் தங்கியிருந்தாலும், தமிழ்மக்கள் மீதும் மாணவர்கள் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். அவர் பணியாற்றிய மலையகத்தையும் மறந்துவிடவில்லை.

நான் கனடா திரும்பியதும் அவரோடு தொடர்பு கொண்டபோது 'இப்பொழுதுதான் நுவரெலியாவில் இருந்து வந்து இறங்குகின்றேன்' என்றார். பொழுது போக்கிற்காகச் சென்றிருப்பார் என நினைத்தேன். ஆனால், அவர் அங்குள்ள கொல்ஃப் கிளப்போடும் அதில் பணியாற்றுபவர்களுடனும் கொண்டுள்ள தொடர்பை அறிந்தேன். 2022-ல் அங்கு சென்று பல ஆயிரம் ரூபாய்ப் பெறுமதியான உலர் உணவுப்பொருட்களைக் கையளித்திருப்பதை அறியமுடிந்தது. இது மட்டுமன்றி வவுனியாவில் தனது நம்பிக்கைக்குப் பொறுப்பானவர்களோடு இணைந்து 'Jeyaratnam Trust' என்னும் ஒரு நன்கொடை நிதியை வன்னிமாவட்டத்தின் கல்வி மற்றும் சமூகவிருத்திக்காக நிறுவினார். அதில் மிகப்பெருந்தொகையை முதலீடு செய்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள மல்லாவி மத்தியகல்லூரிக்கு மாணவர் விடுதிகளை அமைத்துத் தந்ததோடு, அவற்றின் செயற்பாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அடிக்கடி அப்பாடசாலைக்கும் அப்பிரதேசத்தில் உள்ள சில கிராமங்களுக்கும் சென்று வருவதை வழமையாகக் கொண்டுள்ளார். இக்கல்லூரியின் கல்வி விருத்தியில் மிகுந்த அக்கறையோடு செயற்படுவதற்கு அங்கு அதிபராகக் கடமையாற்றும் திரு. ஜேசுதானந்தர் மற்றும் பெண்கள் விடுதிப்பொறுப்பாளராகக் கடமையாற்றிய சங்கைக்குரிய சகோதரி கௌசலாவும் காரணிகளாக உள்ளனர் எனக் குறிப்பிட்டு அவர்களின் பணியைப் பாராட்டி உரைக்கின்றார். மல்லாவி மத்தியகல்லூரிக்கு வெளியே அதன் மாணவர் விடுதிகளைப் பராமரிப்பதற்காக ஒரு நிதியத்தை நிறுவுவதாகவும் அழகியல் கல்விக்கான (இசை, நடனம், ஓவியம்) வகுப்பறைகளுக்காக 80 அடி நீளமான மேல்மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டித் தருவதாகவும் ஒப்புதல் அளித்துள்ளார்.

முத்தையன்கட்டுக் குடியேற்றத் திட்டத்தில் பொதுமக்களுக்கான கேட்போர் கூடத்தைக் கட்டியதோடு அங்கு உள்ள பிள்ளைகள் ஆங்கிலம் படிப்பதற்கான வாய்ப்புக்களையும் செய்து கொடுத்து யாழ் பிரதேசத்தில் இருந்து ஓர் ஆசிரியரையும் நியமித்துத் தானே அவருக்கான வேதனத்தையும் தந்து வருகின்றார்.

மூன்றுமுறிப்புக் கிராம மக்களுக்குத் தென்னை மற்றும் பழமரங்களை நடுவதற்காக வேறு இடங்களில் இருந்து மரங்களை வாங்கித்தந்து அவர்களின் விவசாயம் செழிப்படைய வைத்திருக்கின்றார். அப்பிரதேச மக்களின் பிள்ளைகள் மல்லாவி மத்தியகல்லூரியின் விடுதியில் தங்கிக் கற்கவும் வாய்ப்புக்களை நல்கியுள்ளார்.

இடம் பார்ப்பதற்காகக் கல்விளான் பகுதிக்குச் சென்ற அவர் வீதியில் விளாம்பழம் விற்றுக்கொண்டிருந்த ஒருவரிடம் விளாம்பழங்களை வாங்கும்போது அவரது காணியில் எந்த வித பயிர்களும் செய்யப்படாமைக்கான காரணத்தைக் கேட்டறிந்து உடனடியாகவே தன் செலவில் ஒரு குழாய்க்கிணறு கட்டித்தந்து அவர்களின் காணியில் பயிர் வளர்ப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

மக்கள்மீது உள்ள கழிவிரக்கமும் மாணாக்கரைக் கல்வியால் முன்னேற்ற வேண்டும் என்னும் வாஞ்சையும் அவர் அடிமனத்தில் இருப்பதனை அவரது அப்பழுக்கற்ற பணிகள் எடுத்துக்காட்டுகின்றன. இதன்விளைவாகத் தனது நண்பர்களோடு உரையாடும் வேளைகளில் மாணவர்களின் ஏழ்மை நிலைபற்றி சிலாகித்து அவர்களின் கல்வி தொடர ஏதாவது செய்யவேண்டும் என்னும் எண்ணத்தை கூறுவார். பேராசிரியர் எஸ்.வி. காசிநாதர் மற்றும் பஞ்சரட்ணம் ஆகியோரின் ஆலோசனையினால் மல்லாவி மத்தியகல்லூரியில் உள்ள சில மாணவர்களுக்கு மாதாந்தம் நிதி உதவி அளித்து வந்துள்ளார். கல்லூரியின் அதிபர் து. ஜேசுதானந்தரின் அழைப்பினை ஏற்று அங்கு வருகை தந்து பெண்கள் விடுதியைப்

பார்வையிட்டுள்ளார். அவ்விடுதியின் உடனடித் தேவைக ளைப் பூர்த்தி செய்யத் திடம்கொண்டு படிப்பதற்கான மண்ட பம், சமையல் அறைகள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். பெண்கள் விடுதியின் தேவை பூரணப்படுத்தப் பட்ட பின்னர் ஆண்கள் விடுதி ஒன்றையும் கட்டிக் கொடுக்க முன்வந்தார். வவுனியாப் பிரதேசத்தில் பணியாற்றிக் கொண் டிருக்கும் பொறியியலாளர் சிறீஸ்கந்தராசாவின் உதவியோடு திட்டமிடப்பட்டு அழகில் மிளிர ஆமைவடிவில் அமைக்கப் பட்டுள்ளது அந்த விடுதி. இந்த இரு விடுதிகளையும் அண் மையில் சென்று பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது.

மாணவர்கள் பனிக்கங்குளம், மூன்றுமுறிப்பு, கோட்டைகட்டிய குளம், கல்விளான், சிறாட்டிக் குளம், ஒலுமடு, அம்பகாமம், கிராஞ்சி, வேரவில், முழங்காவில், தேறாங்கண்டல், ஐயங் கன், ஜெயபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து வந்து தங்கி யிருந்து கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு மாணவர்க ளுக்குக் கிட்டியது, மாணவர்கள் நேர அட்டவணைக்கேற்ப கல்வி, விளையாட்டு போன்றவற்றில் ஈடுபடவும் வாய்ப்புகள் நல்கப்பட்டுள்ளன. இவற்றின் பரோபகாரியான வைத்தியக் கலாநிதி ஜெயரட்ணம் அவர்கள் நேரடியாக வருகைதந்து தங்கியிருந்து மாணவர்களின் தேவைகளை அறிந்து மேலும் உதவிகளை நல்கும் பெருமனதினைக் கண்டு வியப்படைந் தேன்.

Dr. ஜெயரட்ணம் அவர்கள் 'தனது நண்பர் காசிநாதர் சில தத்துவ நூல்களைத் தந்து அவற்றைப் படித்துப் பார்க்கும் படி தந்தமையால் எனக்கு தத்துவத்தில் மிகுந்த ஈடுபாடு ஏற் பட்டது. அதன்படி பல்வேறு தத்துவமேதைகளின் கொள்கை களை அறிந்துகொள்ள முடிந்தது' எனக்குறிப்பிட்டு கல்வி யில் மாணவர்களைத் தட்டிக்கொடுப்பதற்குத் தேவையான வற்றைச் செய்து கொடுக்கவேண்டும் என்பதனைக் குறிப்பிட் டார்.

'கல்வி முறை என்பது மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவ தில்லை, அவர்கள் கற்க அனுமதிக்கப்படுவதே' என்னும் தாகூரின் கூற்றினை இங்கு கருத்திற்கொள்ளமுடிகின்றது. மாணாக்கருக்குக் கற்பித்தல் என்பதனை பின்வருமாறு வரை யறுத்துச் செயற்படுத்த வேண்டும் என்பது அவரது கொள் கையாகும்:

- பிள்ளைகளிடத்தில் அன்பும் இரக்கமும் காண்பிக்கப்படல் வேண்டும்.
- தாய்மொழி மூலமே கல்வி கற்பிக்கப்படல் வேண்டும்.
- குழந்தைகளால் விரும்பிக் கற்கத்தக்கதாகவும் விருப்பைத் தூண்டுவதாகவும் சுவைக்கக்கூடிய கல்வி தரப்படல் வேண்டும்.
- சொந்த அனுபவமுறைக் கல்வியாக அமைதல் வேண்டும்.
- செயல்மூலம் கல்வியை வலியுறுத்துதல் வேண்டும்.
- கற்றல் கற்பித்தல் நடத்தையில் ஆசிரியருக்கும் மாணவ ருக்குமிடையே கூட்டுறவு இருத்தல் வேண்டும்.
- பிள்ளையின் இயல்பினையும் இறைநெறியையும் கருத்திற் கொள்வதோடு மெய்ஞானத்தையும் இறையியலையும் உள் ளடக்கியதாகக் கல்வி அமைதல் வேண்டும்.
- குழந்தைகளின் சுதந்திரம் என்பது அவர்கள் சுயமாக வாழும் சூழ்நிலையில் அதிகளவு அறிவினைப் பெற்றுக் கொள்ளும் தன்மை அவர்களின் முயற்சியினால் ஏற்படுவ தாக அமைதல் வேண்டும்.

எனக் குறிப்பிட்டுள்ளமையை Dr. ஜெயரட்ணம் அவர்களின் சிந்தனையோடும் செயல்வடிவத்தோடும் ஒப்பிட்டுநோக்க முடிகின்றது.

'கல்வி என்பது, ஒரு மாணவரை எழுத வைப்பதோ, படிக்க வைப்பதோ அல்ல. மாறாக, படிக்கின்ற மாணவரைச் சிந் திக்க வைக்கவும், பகுத்தறிவுடன் வாழவும், கேள்விகள் கேட் கவும் கற்றுத்தருவதுதான் கல்வி.' - அண்ணல் அம்பேத்கர்.

கல்விவாய்ப்பு எட்டாதவர்களாகப் பெருந்தொகையான மாண வர்கள் காணப்படுகின்றனர். இக்குறைகளைப் போக்கச் சித் தம் கொண்டமையாலேயே இன்று மல்லாவி மத்தியகல்லூரி யில் பெண்கள் விடுதியும் ஆண்கள் விடுதியும் அமைக்கப் பட்டன. இவ்வகையான கொடையைப் பற்றிப் பாடிய மகா கவி பாரதியாரின் வரிகளை இக்கொடையாளியோடு ஒப்பு நோக்க முடிகின்றது.

***'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்<br>ஆல யம்பதி னாயிர நாட்டல்<br>பின்ன ருள்ள தருமங்கள் யாவும்<br>பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்<br>அன்ன யாவினும் புண்ணியங் கோடி<br>ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'***

கல்வியே கருந்தனம் என்பதனை நன்குணர்ந்த பெரியார் ஜெயரட்ணம் அவர்கள் கிடைக்கப் பெற்றமை அப்பிரதேச மக்கள் பெற்ற பெரும் பாக்கியமே. இதனை இதனால் ஆய்ந்து அதனை அவன் கண்விடல் என்னும் கூற்றுக்கேற்ப இக்கல்லூரியின் அதிபர் ஜேசுதானந்தர் தன்னிடம் ஒப்படைக் கப்பட்ட பொறுப்புக்களைச் சிரமேற்கொண்டு செயற்படுத்தி வருவதனைக் காணமுடிகின்றது.

ஒரு கல்வி நிறுவனத்தைக் கட்டியெழுப்புவது என்பது சாதார ணமானதல்ல. பாடசாலைச் சமூகத்தின் ஒருங்கிணைந்த நற்ப ணியின் விளைவாகவே பாடசாலைக் கல்வியில் விருத்தி ஏற் படுகின்றது. அதற்குப் பாடசாலையின் நோக்கும் போக்கும் தெளிவானதாகவும் அழுத்தம் கொடுப்பதாகவும் அத்தோடு ஒட்டுமொத்தப் பள்ளிச் சமூகத்தின் இலட்சியங்களையும் எதிர்பார்ப்புகளையும் பிரதிபலிப்பதாகவும் அமையவேண்டும். சரியான இலக்குகளை நோக்கித் திட்டமிடப்படும் போதுதான் இது சாத்தியமாகின்றது.

***தாமின் புறுவது உலகின் புறக்கண்டு<br>காமுறுவர் கற்றறிந் தார்.***

- குறள் - 399

என்னும் குறட்பாவிற்கேற்ப தமது இன்பத்தை பாடசாலையில் கல்விகற்கும் ஏழைப் பிள்ளைகளின் முகமலர்விலும் அவர்க ளின் முன்னேற்றத்திலும் காண்கின்றனர் ஜெயரட்ணம் தம்பதி யினர். அவர்களுக்குப் பக்கதுணையாக அவரது மகனும் ஊக்கமளிப்பதனையும் அறியமுடிகின்றது.



sivapalu@thaiveedu.com

# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

## மலையகத்தின் மௌனத்துக்கு வயது கணித்த

# கவிஞர் சு. முரளிதரன்

**– மல்லியப்புசந்தி திலகர்**

மலைக்குயில் தந்த அல் அஸுமத் மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் சேர்த்து ஒரு தொகுப்பாக 'அல் அஸுமத் கவிதைகள்' என வெளியிட, சு. முரளிதரனின் புதுக் கவிதைகள் மாத்திரம் அடங்கிய கவிதைத் தொகுதியாக வெளிவந்தது 'தியாக யந்திரங்கள்'. 1986-ல் வெளிவந்த, இவரது 'தியாகயந்திரங்கள்' மலையகத்தின் முதலாவது புதுக்கவிதைத் தொகுதி என குறிக்கின்றார் அந்தனிஜீவா அவர்கள் (மலையகமும், இலக்கியமும் 1995 மலையக வெளியீட்டகம்).

1980-களில் மலையகத்துக்கு நம்பிக்கை தரும் கவிஞராக வெளிப்பட்ட சு. முரளிதரனின் முதலாவது கவிதை தொகுதியே இந்த தியாக யந்திரங்கள். முன்னதாக எழுத்தாளர் அகளங்கன் தர்மராஜாவுடன் இணைந்து 'சமவெளி மலைகள்' எனும் தொகுதியை வெளியிட்டு இருந்தாலும் தனியே அவரது கவிதைகளை மட்டும் கொண்ட தொகுதியாக வெளிவந்தது தியாக யந்திரங்கள்.







'அகளங்கனுடன் நான் இணைந்து வெளியிட்ட 'சமவெளி மலைகள்' வெற்றியைத் தந்ததும், இம் மலை மண்ணின் பெயர் சொல்ல ஒரு கவிதைத் தொகுப்பு வேண்டுமென்ற நண்பர்களின் பணிப்பும் 'தியாக யந்திரங்களி'ன் வருகைக்கு காரணமாக அமைந்தது' என நூலின் தன்னுரையிலே (நான் பேசுகிறேன்) குறிக்கின்றார் கவிஞர் சு. முரளிதரன்.

தவிரவும் 'புதுக்கவிதையின் புத்திரனை தேரேற்றி இப்போ அழைத்து வந்தாலும், மரபு மாதாவின் மடியில் சாய்ந்து எதுகை மோனைச் சோலைக்குள் சந்தக் கவிகளால் சிறகடிப்பது எனது ஜீவனுள்ள சந்தோஷம். ஆனால் சமூகத்தின் விரிசலைக் காட்டவும், உறங்கிய மக்களை பாட்டால் தாலாட்டாமல், சூட்டால் எழுப்பவும் புதுக்கவிதை ஒரு வரப்பிரசாதம் என்பதால் காலத்தின் தேவையறிந்து பயன்படுத்த வேண்டியுள்ளது' எனும் கூற்றின் மூலம் மலையகத்தில் புதுக்கவிதையின் வரவுக்காலம் இதுவென கவிஞர் சு. முரளிதரன் கட்டியங்கூறுகிறார்.

இதற்கு வலுச் சேர்ப்பது போல 'புதியது எதனையும் இலகுவில் ஏற்றுக்கொள்வதற்கு மனித உள்ளமும் இடம் கொடுப்பதில்லை. மனித சமுதாயமும் உடன்படுவதில்லை. இத்தகைய உலக இயல்பே புதுக்கவிதை விடயத்திலும் இலக்கிய உலகத்தில் காணப்பட்டது. புதுக்கவிதையை ஏற்றுக்கொள்ளலாமா, அல்லது இறக்கிவிடலாமா என்ற வகையில் சர்ச்சைகள் நிகழ்ந்து வந்தன. ஆனால், தமிழ் இலக்கிய உலகு அதற்கு வாழ்வும் கொடுத்து விட்டது' என நூலின் முன்னுரையிலே குறிக்கின்றார் கலாநிதி துரை. மனோகரன்.

இந்த இரண்டு கூற்றுகளும் புதுக்விதையின் வரவு காலமாக எண்பதுகள் இருந்துள்ளன என்பற்கான சான்றுகள் ஆகின்றன. அந்த வகையில் அரு. சிவானந்தன், அல் அஸுமத், சி. பன்னீர்செல்வம், மு.சி. கந்தையா , பண்டாரவளை அன்புச்செல்வன் போன்ற புதுக் கவிதைக் கவிஞர்களின் வருகையோடு சு. முரளிதரனும் இளங்கவிஞராக புதுக்கவிதையை மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறிக்குள் அழைத்து வந்துள்ளார். அதுவும் குறிப்பாக தனியான ஒரு புதுக்கவிதைத் தொகுதியாக வெளிவந்த (1986) 'தியாக யந்திரங்கள்' முக்கிய இடம் பெறுகிறது.

'புதுக்கவிதை வரவேற்புப் பெற்றுவிட்ட இக்காலகட்டத்தில், பல இளமுகங்கள் தமது கவித்துவத்தை அதன் மூலம் புலப்படுத்தி வருகின்றனர். அவர்களுள் ஒருவராகவே பேராதனைப் பல்கலைக்கழகத்து விஞ்ஞானதுறை பட்டதாரி மாணவரும் இளங்கவிஞருமான முரளிதரனைப் பார்க்கிறேன்' என பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கிய துரை மனோகரன் முன்னுரையிலே குறிப்பிடுவதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருந்தும்.

விஞ்ஞான பட்டதாரியான சு. முரளிதரன் ஆசிரியராகவும் பின்னர் கல்வியியல் கல்லூரி அதிபராகவும் செயற்பட்டு இப் போது கல்வி நிர்வாகத்துறையில் கல்வியமைச்சின் பெருந் தோட்டப் பாடசாலைகள் அலகின் பணிப்பாளராக பணியாற் றுகின்றார். அதே நேரம் கலாசார அமைச்சின் தேசிய சாகித்ய விழா குழு உறுப்பினராகவும் செயற்படுகிறார்.

'தியாக யந்திரங்கள்' தொகுதியில் 'தேநீர்' எனும் கவிதை இவ்வாறு அமைகிறது.

*உழைக்கும்*
*எங்கள் செவ்விரத்தம்*
*வியர்வைப் பெருக்காகும்!*

*தேயிலைக்கு ஊற்றப்பட்டே*
*அந்த*
*எங்கள் செவ்விரத்தம்*
*இளம் பச்சைக்*
*கொழுந்தாகும்!*

*அந்த*
*எங்கள் செவ்விரத்தம்*
*தளிராகும்*
*தளிர் கரத்தால்*
*கொய்யப்படும்!*

*அந்த*
*எங்கள் செவ்விரத்தம்*
*மண்ணிறத்தில்*
*வாட்டப்பட்டே*
*கருவண்ணத்தில்*
*தூளாகும்!*

*தெம்பு பெறுவதற்கு*
*தேனீரை*
*அவர் வார்க்க*
*என்றும்*
*எங்கள் ரத்தம்*
*இருப்பதனால்*
*கசிவதுவும்*
*செஞ்சாயம்!*

இந்தக் கவிதை 1981-ம் ஆண்டு வீரசேகரியில் வெளிவந்துள் ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைப்புக் கவிதையான 'தியாக யந்திரங்கள்' புதுக்கவிதை யாகவே அமைந்தபோதும் இடையிடையே 'டன்... டன்... டனக்' என தப்பு ஒலியை சொற்களாகச் சேர்த்து மலையகப் புதுக்கவிதை எனும் சிறப்பை உணர்த்துகிறார் கவிஞர் சு.முரளிதரன்.

*அன்றுமுதல்*
*நீ யெனும் யந்திரம்*
*இயங்கத் தொடங்கியது...*

*இடையிலே*
*கறுப்பாயி என்ற*
*பிள்ளை பெறும்*
*யந்திரமும்*
*எட்டடிக் காம்பராவும்*
*இணைக்கப்பட்டபின்*
*இயங்கியபடியே*
*இயந்திரங்களை*
*உற்பத்தித்தாய்!*

*'டன்..டன்..டனக்'*
*'டன்..டன்..டனக்'*

*அம்மண மலைகளுக்கு*
*ஆடை போர்த்திய*
*உன்னை*
*தியாகிகள் என*
*சில உதடுகள்*
*உச்சரித்தன!*

*உன் போன்ற*
*தியாகிகளுக்கெல்லாம்*
*சிலை வைத்தால்*
*தேயிலைகளை*
*எங்கே நடுவது...*

*'டன்..டன்..டனக்'*
*'டன்..டன்..டனக்'*

தோட்டத் தொழிலாளி ஒருவரின் மரணத்தின் பின்னர் எழும் குமுறலாக இந்த 'தியாக யந்திரங்கள்' கவிதை அமைந்து காணப்படுகிறது.

இலங்கை மலையகத்தில் எழுதவரும் யாரையும் கவர்ந்திழுக் கும் இலக்கிய ஆளுமை மக்கள் கவிமணி சி.வி. வேலுப் பிள்ளை. அவர் குறித்த சீவிய சி.வி. எனும் தலைப்பில் ஒரு கவிதையை சு. முரளிதரன் இந்தத் தொகுப்பில் எழுதி உள் ளார்.

*தோட்டத் தொழிலாளர்*
*புத்தி மரக்கட்டடையை*
*தொழிற்சங்கக்காரனாய்*
*அறிஞனாய்*
*கவிஞனாய் - வந்து*
*சீவி சீவி*
*கூர்மைப் படுத்தியவனே!*

என சி.வி. வேலுப்பிள்ளையை கவிதையில் விழிக்கிறார் கவி ஞர் சு. முரளிதரன்

*அமாவாசையாய்க்கிடந்த*
*நம் நாடோடிப் பாடல்களுக்கு*
*கோடி நட்சத்திரம்*
*பூட்டிக் கொடுத்த*
*உனக்கு என்னய்யா கைமாறு?*

என கேள்வியும் எழுப்புகிறார். மலையக இலக்கியத்தில் சி.வி. வேலுப்பிள்ளையியல் என்ற ஒரு இயலே உருப்பெற்று இருப்பதாகவும் சி.வி. வேலுப்பிள்ளையின் 105-வது பிறந்த நாள் நினைவையொட்டிய கட்டுரை (தினகரன்) ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் சு. முரளிதரன்.

*உன் இறுதி*
*இலட்சியக் கனவுகளை*
*ஜீவா அண்ணன்*
*சொல்லும்போது*
*மானசீகமாய்*
*என் தலை*
*உன் பாதங்களில்*
*பதியும்!*

என கவிஞர் சி.வி.-யின் பாதங்களில் பணியும் கவிஞர் சு. முரளிதரன் இங்கே 'ஜீவா அண்ணன்' என விழிப்பது கலைஞர், எழுத்தாளர் அந்தனி ஜீவா அவர்களையாகும்.

அந்தனி ஜீவா எப்போதும் இலக்கியத்துக்கு இளைய வரவு-களை உற்சாகப்படுத்துபவர். எண்பதுகளில் கவிஞர் சு. முரளிதரன் ஒரு இளம் வரவாக வந்தபோதும் அவரை வரவேற்று உற்சாகப்படுத்தியுள்ளார் என்பதற்கு இந்தக் கவிதை வரிகள் ஒரு சான்று. 'தியாக யந்திரங்கள்' எனும் இந்தக் கவிதைத் தொகுதியைப் பதிப்பித்தவரும் அந்தனி ஜீவா அவர்களே. (மலையகம் வெளியீட்டகம் - 57, மகிந்த பிளேஸ், கொழும்பு 6 - இதுவே அந்தனி ஜீவா அவர்களின் இல்லமுமாகும்).

'இந்நூலினைப் பதிப்பிக்க முன்வந்ததோடு மலையகக் கலை இலக்கியப் பேரவையின் மாநாட்டில் வெளியிடவும் ஏற்பாடு செய்த இம்மண்ணின் ஜீவனுள்ள கலைஞர்களுள் ஒருவரான அந்தனி ஜீவா அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்' என தனதுரையிலே சு. முரளிதரன் குறிப்பிட்டிருப்பது இங்கே சான்றாகிறது.

இந்த நூல் மட்டுமல்லாது 1987-ல் 'கூடைக்குள் தேசம்' எனும் சு. முரளிதரனின் 'ஹைக்கூ' பாணியிலான கவிதைத் தொகுதியையும், 2001-ல் 'தீவகத்து ஊமைகள்' எனும் மலையக மக்களுக்காக உயிர் நீத்த தியாகிகளை பரவலாக நினைவுபடுத்தும் சு. முரளிதரனின் கவிதைத் தொகுப்பையும் அந்தனி ஜீவாவின் மலையகம் வெளியீட்டகமே வெளியிட்டு வைத்தது.

'தீவகத்து ஊமைகள்' எனும் இவரது கவிதைத் தொகுதியில் 'திரும்பிப்பார்க்க வேண்டிய தியாகங்கள்' எனும் கவிதையில்

*கோவிந்தன் - லட்சுமணன்*
*மார்கண்டேயர்கள் இல்லை*
*புதிய*
*மார்க்கம் கண்டவர்கள்*
... என எழுதியுள்ளார்.

தொகுப்பின் தலைப்பான 'தீவகத்து ஊமைகள்' 1940-ல் முல்லோயா கோவிந்தன் முதல் பல தியாகிகளின் இழப்புக் காரணத்தை கவிதையூடே பதிவு செய்யும் நீண்டதொரு கவிதையாக அமைகிறது. 'உரிமை பேராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்' எனும் மாத்தளை ரோகிணியின் கட்டுரைத் தொகுப்பு நூல் தியாகிகளின் தகவல்களைப் பதிவு செய்ய, சு. முரளிதரனின் இந்த கவிதை அவர்கள் பற்றிய உணர்வைப் பதிவு செய்வதாக அமைவது சிறப்புக்குரியது.

*சங்கங்களுக்காகச்*
*செத்தது போதும் - இனி*
*எங்களுக்காய் சாவோமென*
*எழுதப்பட்ட*
*முதல் அத்தியாயம்*
*சிவனு லட்சுமணன்*

என மலையக மண்ணுக்காய் உயிர்நீத்த பல தியாகிகளை நினைவு கூர்ந்து செல்லும் கவிதை இவ்வாறு நிறைவு பெறுகிறது.

*வயிற்றுவலியால்*
*இறந்தவர்களுக்கு*
*வானுயர சிலையமைத்து*
*ஆளுயர மாலைபோடுவதை*
*நிறுத்துங்கள் -*
*பொறுப்புணர்வோடு*
*இந்த*
*இரத்த சகாப்தத்துள்*
*பூத்திருக்கும்*
*புனிதப் புதை குழிகளுக்கும்*
*கொஞ்சம்*
*பூத்தூவுங்கள்*
*அங்கே*
*புதைந்திருப்பது*
*மரணங்கள்*
*மட்டுமல்ல - உங்கள்*
*மனசாட்சிகளும்தான்...*

என மலையக உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளை நினைவுகூர அழைக்கிறார்.

இதே தொகுப்பில் வரும் 'மௌனத்துக்கு வயது 160' இலக்கிய உலகில் பலராலும் சிலாகித்துப் பேசப்பட்ட கவிதை!

*நான்கிற்கும் அதிகமான தலைமுறைகள்*
*மூச்சடக்கி இருந்திட - உன்*
*மௌனத்துக்கு வயது 160*

...(எனத் தொடங்கி)

*ஒருநாள் - உன் மௌன பாரம்*
*பொறுக்காது, மலைக்காற்று*
*பூப்பெய்தும் - அன்று*
*மரங்கள் வீழும்!*
*மதகுகள் உடையும்*
*மலைகளும் தகர்ந்துபோம்*
*என எண்ணும் என் மனமும்*
*யுகாந்தரமாய் நீடித்த*
*இந்த மௌனத்துக்கு*
*அர்த்தம் அம்மட்டொ - எனக்*
*கேட்டு மௌனமளிக்கும்.*
என முடியும் அந்தக் கவிதை.

மலையகத்தின் ஐந்தாவது தலைமுறையினர் வாழும் இன்றைய 2023-ல் அந்த மௌனத்துக்கு வயது 200 ஆகிவிட்டது. மலையகம்-200 எனப் பரவலாக பேசப்படுவதால் அந்த மௌனம் இலேசாக கலைபடுகிறது எனலாம். ஆனாலும் மலைகளின் மௌனத்தை மொழிபெயர்க்கவும் பூகோள காற்றில் பரப்பவும் இன்னும் பல்லாயிரம் மலையகக் கவிதைகள் வேண்டப்படுகின்றன.

(தொடரும்)



thilagar@thaiveedu.com




தந்தை செல்வா நினைவு அறக்கட்டளை 1982-ம் ஆண்டு பேராசிரியர் சி. அரசரத்தினம் அவர்களின் The Historical Foundations of the Economy of the Tamils of North Srilanka என்னும் நூலை வெளியிட்டது. இவ்வாங்கில நூல் வெளி வந்து ஏறக்குறைய 36 ஆண்டுகள் கடந்தபின் அதன் தமி ழாக்கத்தை 2019-ம் ஆண்டில் குமரன் புத்தக இல்லம் (கொழும்பு, சென்னை) வெளியிட்டுள்ளது. ‘வட இலங்கைத் தமிழர் பொருளாதாரத்தின் வரலாற்று அடிப்படைகள் - 17-ம் நூற்றாண்டிலிருந்து 20-ம் நூற்றாண்டு வரை’ என்பது தமிழ் நூலின் தலைப்பு ஆகும்.

மூன்று தசாப்த காலம் பேரழிவுப் போரின் பின்னர் மீண்டெ ழும் மிடுக்கோடு நிமிர்ந்து நிற்கும் ஈழத்தமிழர்கள், தமது 400 ஆண்டு காலத்திற்கும் மேற்பட்ட பொருளாதார வரலாற்றைத் திரும்பிப் பார்த்துக் கொள்வதற்கும், பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கும் இந்நூல் உதவுகிறது.

‘வரலாறு என்றால் என்ன?’ என்ற நூலின் ஆசிரியர் ஈ.எச். கார் நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் வரலாறு என்று கூறினார். கடந்த காலத்தை நிகழ்காலத்தின் கண்களால் பார்க்க வேண்டும் நிகழ்காலத்தின் பிரச்சனைக ளின் ஒளியில் கடந்த காலத்தைப் பார்ப்பதே வரலாறு என் றும் அவர் வாதிடுகின்றார். கடந்த காலத்திற்கும் நிகழ்காலத் திற்கும் இடையிலான உறவுப் பிணைப்பை அழுத்திக் கூறும் அவர் ‘நாம் கடந்த காலத்தை ஊடுருவிப் பார்ப்பதும் புரிந்து கொள்வதும் நிகழ்காலத்தின் மூலமாக மட்டுமே சாத் தியம்’ என்றும் கூறுகிறார். (கார். ஈ.எச். வரலாறு என்றால் என்ன? அலைகள் வெளியீட்டகம், சென்னை. 2006. பக். 39).

வடஇலங்கைத் தமிழர் பொருளாதாரத்தின் வரலாற்று அடிப் படைகள் என்னும் இச்சிறுநூல் நிகழ்காலத்தின் பிரச்சனை கள், தேவைகள் பற்றிய உணர்வும், அறிவும் கொண்ட ஒருவ ரால் எழுதப்பட்டது. கடந்த காலத்தை ஊடுருவிப் பார்ப்பதற் கும் புரிந்து கொள்வதற்கும் நிகழ்காலத்தைப் பற்றிய அவ ரது புரிதல் உதவியுள்ளது. வடஇலங்கைப் பொருளாதாரத் தின் வரலாற்றுப் பரிமாணத்தைப் புரிந்து கொள்வதற்கும் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் சமகாலப், பொருளா தாரப் பண்பாட்டுச் செயல் திட்டத்தை நாம் வகுத்துக் கொள் வதற்கும் அரசரத்தினத்தின் கருத்துக்கள் வழிகாட்டியாக உள்ளன. அவர் எடுத்துக் காட்டிய பிரதான விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

### சனத்தொகை:

இலங்கையின் பிற பகுதிகளோடு ஒப்பிடும்போது (வட இலங்கையின்) யாழ்ப்பாணம் சன அடர்த்தி மிகுந்த பகுதி யாக இருந்துள்ளது.

18-ம் நூற்றாண்டின் யாழ்ப்பாணத்தின் சனத்தொகை 150,000 ஆக இருந்துள்ளது. ஒரு சதுர மைலிற்கு 350 பேர் அப் போது அங்கு வாழ்ந்தனர் எனக் குறிப்பிடும். பேராசிரியர் நவீனத்திற்கு முற்பட்ட சமூகங்களில் (Pre - Modern Societies) இத்தகு சன அடர்த்தி அதிகமானது எனக் கருத்துரைக்கிறார். இவ்வாறான சன அடர்த்தியும் செறிவும், மக்களிடையே பொருளாதார உறவுகள் வளர்ச்சியடைவதற்கும், பிராந்திய ரீதியிலான சிறப்புத் தேர்ச்சி ஏற்படவும் காரணமாக இருந்த தென அவர் கூறுகிறார். அத்தோடு பண்டங்களதும், சேவைக ளதும் பரிவர்த்தனையும் வளர்ச்சியடைந்துள்ளது. பிற்பகுதிக ளில் இருந்து வேறுபட்ட தனித்துவமான பண்புகள் உடைய தாக யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள் ளது எனவும் அவர் குறிப்பிடுகிறார். சன அடர்த்தி மிக்க யாழ்ப்பாணத்தின் குடியிருப்புமுறை அங்கு நில உடைமை, நிலப்பயன்பாடு, சொத்துடமை உறவுகள் என்பனவற்றை எவ் விதம் பாதித்தது என்பதையும் அவர் விளக்கிச் சொல்கிறார்.

### சிற்றுடைமையாளர் சமூகம்:

யாழ்ப்பாணச் சமூகத்தைச் சிற்றுடைமையாளர் சமூகம் என வரையறை செய்யும் நூலாசிரியர் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வளர்ச்சி பெற்றது போன்ற உற்பத்திமுறை விருத்தியுறவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறார். கண்டி இராச்சியத்தின் மையப் பகுதி நிலப்பிரபுத்துவச் சமூகமாக இருந்தது. பிரித்தானியர் ஆட்சியில் கீழ்நாட்டுச் சிங்களவர் மத்தியில் பெரும் நில உடைமையாளர்கள் காலனிய அர சின் ஆதரவுடன் தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர். இதற்கு மாறாக யாழ்ப்பாண மாவட்டத்தின் சமூகம் சிற்றுட மையாளர் சமூகமாக 17-ம் நூற்றாண்டில் இருந்தே உருவாக்



கம் பெற்றிருந்தது என்ற உண்மை இந்நூலைப் படிக்கும் போது எம்மனதில் பதிவாகிறது. 1675-ல் டச்சுக்காரர் காணிக ளைப் பதிவு செய்தனர். அப்போது சிற்றுடைமை பொது வான நடைமுறையாக இருந்தது. நிலத்தில் தனியுரிமை வளர்ச்சியடைந்திருந்தது. சிற்றுடைமையாளர்களான சிறு விவ சாயிகள் தம் தோட்ட நிலத்துண்டுகளையும், வீடு வளவுக ளையும் சுற்றி வேலி அடைத்துக் கொள்ளும் பழக்கத்தை நீண்ட காலமாகவே கைக்கொண்டு வந்தனர்.

20-ம் நூற்றாண்டில் பிற பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத் திற்கு வருவோர் அதன் விநோதமான 'கிடுகுவேலிக் கலாசா ரம்' பற்றிக் குறிப்பிடத் தவறுவதில்லை. யாழ்ப்பாணத்தில் குடியிருப்புகளுக்கும், பயிர்செய்கைக்கும் தேவையான நிலத் திற்கான தட்டுப்பாடும் பற்றாக்குறையும் இருந்தது. இப்பற் றாக்குறை சமூகப் பொருளாதார உறவுமுறையையும் பண் பாட்டையும் கட்டமைப்பதில் தீர்மான காரணியாகச் செயற்பட் டது என்பதை இந்நூலைப் படிப்பதன் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. யாழ்ப்பாணத்தில் சொத்துரிமை பற்றிய வழமைச் சட்டம் வளர்ச்சியுற்றிருந்தது. சீதனம், முதுசொம், தேடிய தேட்டம் ஆகிய மூவகைச் சொத்துரிமை முறைக ளைத் தேசவழமை குறிப்பிடுகிறது.

'யாழ் மாவட்டத்தின் சமூக நிறுவனங்கள் வளர்ச்சியுற்றமை யும் மக்களிடையே நிலையான உறவுகளைப் பேணுவதற் கேற்ற சட்டமுறையொன்று வளர்ச்சியுற்றமையும் முக்கியமான தொரு விடயம்' என நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

## சந்தைப் பொருளாதாரம்:

சனத்தொகைப் பெருக்கம் காரணமாக மக்களுக்குத் தேவை யான உணவை உள்ளூரிலேயே உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்தின் உணவுத் தேவைக்கான அரிசி வெளியில் இருந்து இறக்குமதி செய் யப்பட்டது. வங்காளம், தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்க ரையோரத்தை அடுத்த பகுதி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. நெற்செய்கையால் யாழ் மாவட்டத்திற்குக் கிடைத்த அரிசி அதன் உணவுத் தேவையின் அரைப் பங்கையே நிறைவு செய்தது. இதனால் நெற்செய்கை செய்யப்படாத பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும் தமது நுகர்வுத் தேவைக்காகக் கொள்வனவு செய்ய வேண்டி யிருந்ததால் நாட்டில் பணப்புழக்கம் அதிகரித்தது. நவீனத் திற்கு முந்திய சமூகங்களில் பணப்புழக்கம் உயர் வகுப்பி னர் மத்தியில் மட்டும் காணப்படுவதுண்டு. யாழ்ப்பாணத்தில் வசதி படைத்த செல்வந்த வகுப்பினரிடம் மட்டுமல்லாது சாதாரண மக்களிடமும் பணப்புழக்கம் காணப்பட்டது. புழக் கத்தில் இருந்த நாணயங்கள் முழுவதும் அந்நிய நாணயங்க ளாகவே இருந்தன. அவற்றுள் இந்திய நாணயங்களே அதி கம். தங்க நாணயங்களும் பரோடா, பணம் (Fanam) என்பன வும் உயர் வெகுமதியுடையனவாய் இருந்தன. வங்காளம், சோழ மண்டலக் கடற்கரை, மலபார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் யாழ்ப்பாணம் வந்து போயினர். இவர்க ளால் அந்நிய நாணயங்களின் பணநிரம்பல் அதிகரித்தது. காசு எனப்படும் செப்பு நாணயங்கள் உள்ளூரில் அச்சிடப் பட்டன. இறக்குமதிகளைவிடக் கூடியளவு ஏற்றுமதிகளைச் செய்ய முடிந்ததால் தான் யாழ்ப்பாணத்தில் டச்சுக்காரர் காலத்தில் இருந்தே பணப்புழக்கம் அதிகரித்துக் காணப்பட் டது.

## ஏற்றுமதி:

யானை, புகையிலை இரண்டினதும் ஏற்றுமதியால் வடபகு திக்கு உயர் வருமானம் கிடைத்தது. 17-ம், 18-ம் நூற்றாண்டு களில் யானைகளுக்குக் கிடைத்த விலை உச்சநிலையை அடைந்தது. வங்காளம், கோல்கொண்டா, தஞ்சாவூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த செல்வந்த வணிகர்கள் வெள்ளி, தங் கக் காசுகளாகப் பரிவர்த்தனை உபயோகித்தனர்.

இது மக்களுக்கு நன்மை பயப்பதாக அமைந்தது. சமூகத் தின் பல்வேறு பகுதியினருக்கும் இதன் பயன்கள் பகிரப்பட் டன. கமக்காரர்கள், கூலி உழைப்பாளர்கள், மாட்டுவண்டி கள், படகுகள் என்பன மூலம் புகையிலையை ஏற்றி இறக்கு வோர், புகையிலைத் தரகு வியாபாரிகள் என்போர் இதன் உற்பத்தியினாலும் வர்த்தகத்தினாலும் நன்மை பெற்றனர். அதுவரை காலமும் நெற்செய்கை செய்து வந்த நிலங்கள் புகையிலைச் செய்கைக்கு மாற்றப்பட்டன. 17-ம் 18-ம் நூற் றாண்டில் யாழ்ப்பாணத்தில் வேறு பல வர்த்தகப் பண்டங்க ளும் உற்பத்தியாயின. பனைமரம் பனங்கிழங்கு, பனாட்டு, பாய்கள், கூடைகள், பனங்கட்டி, தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், சாயவேர்கள் என்பன

வும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் சிலவாகும்.

## உற்பத்தியும் மேன்மிகையும்:

ஒரு சமூகம் எந்தளவுக்கு மேன்மிகையை (Economic Surplus) உற்பத்தி செய்கிறதோ அந்த அளவுக்குச் சமூக உறவுக ளும் விரிவாக்கம் பெற்றுச் சமூகக் கட்டமைப்பு மாற்றமுறும், யாழ்ப்பாணத்தில் பயிரிடக்கூடிய நிலத்தின் அளவு மட்டுப்ப டுத்தப்பட்டதாய் இருந்த காரணத்தால் மேன்மிகையை உற் பத்தி செய்யும் ஆற்றலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. புகை யிலை மூலம் கிடைத்த வருமானமும் சிற்றுடைமையாளர்களி டையே பகிரப்பட்டது. குடும்ப அலகின் ஊடாக நடைபெற்ற இவ்வுற்பத்திப் பேரளவு உற்பத்தியாகவும், பெருமளவில் சிலர் கைகளில் மேன்மிகையைத் திரளச் செய்யக்கூடியதா கவும் இருக்கவில்லை. இக்காரணத்தால் தென்னாசியாவின் ஏனைய சமூகங்களில் காணப்படுவது போன்ற ஏற்றத்தாழ்வு கள் கொண்ட சமூக அடுக்கமைவு உருவாகவில்லை. கடின உழைப்பும், சிக்கனமான வாழ்க்கை முறையும் உடையவர்க ளாக யாழ்ப்பாணத்தவர்கள் விளங்கினர். அம்மண்ணில் இருந்து கிடைக்கக்கூடிய உற்பத்தியினால் மக்கள் அடை யக்கூடிய வாழ்க்கைத் தரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. ஆரியச் சக்கரவர்த்திகளின் அதிகாரம் உச்சநிலை யில் இருந்தும்கூட அவ்வரசில் ஆடம்பரமும் பகட்டும் இருக் கவில்லை எனப் பேராசிரியர் கூறுகிறார். 18-ம் நூற்றாண்டில் புகையிலை உற்பத்தியினால் விவசாயிகளின் வருமானம் உயர்ந்தது என்பது. உண்மையே ஆயினும் யாழ்ப்பாணத் தில் முதலாளித்துவ முறையிலான உற்பத்தி முறையோ, நிலப்பிரபுத்துவ உற்பத்தி ஊடான சந்தைக்கான உற்பத் தியோ வளர்ச்சி பெறவில்லை. காலனிய அரசின் பொருளா தாரக் கொள்கைகள் சந்தைக்கான உற்பத்தியை முடுக்கிவி டும் சாத்தியப்பாட்டை உருவாக்கவில்லை என்பதும் கவனிக் கத்தக்கது. குறிப்பாக போத்துக்கீசர் காலத்தில் சந்தைக்கான ஊக்கம் கிடைக்கவில்லை.

## சாதிமுறையும் அடிமைகளும்:

வட இலங்கைத் தமிழர் பொருளாதாரத்தின் வரலாற்று அடிப் படைகளை விளக்கும் இவ்வாய்வில் அங்கு நிலவிய சாதி முறை பற்றிய பயனுள்ள குறிப்புக்களும் உள்ளன. யாழ்ப் பாணச் சாதிமுறை பற்றி ஆராய்ந்து சிறப்பான ஆய்வுகளை எழுதியவர்களுள் பேராசிரியர் அரசரத்தினத்திற்கு முதன்மை யான இடம் உள்ளது. ஆயினும் இச்சிறு நூலில் அவர் அவ் விடயம் பற்றி விரிவாகக் குறிப்பிடும் வாய்ப்பு இருக்க வில்லை. சாதிமுறை பற்றி அவர் குறிப்பிடும் இரண்டு விட யங்களை மட்டும் இங்கு குறிப்பிடலாம். பிராமணர்கள் சிறிய எண்ணிக்கையினராக உள்ள சமூகமாக யாழ்ப்பாணம் இருந்து வந்துள்ளது. ஆகையால் தென்னிந்தியாவின் பிராம ணிய நியமங்கள் இங்கு முழுமையாகப் புகவில்லை. விவசா யமும் அதனைச் சார்ந்த தொழில்களும் மதிப்புடைய தொழில்களாக இருந்தன. மீன்பிடித் தொழில் தென்னிந்தியா வைப் போலன்றி யாழ்ப்பாணத்தில் மதிப்புடைய தொழிலா கவே கருதப்பட்டது. பிராமணர்கள் சிறிய எண்ணிக்கையின ராக இருந்த சமூகத்தில் சூத்திரர்களான நில உடைமையா ளர்களே மேலாதிக்கமுடையவர்களாக இருந்தனர். இதனால் துடக்கு என்ற கருத்து அக்காலத்தில் வலிமை பெற்றிருக்க வில்லை. டச்சுக்காரர் ஆட்சியின்போது தென்னிந்தியாவில் இருந்து அடிமைகள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட் டனர். அடிமைகள் என்று வகைப்படுத்தப்பட்டோர் பெரும் பான்மையினர் தாழ்த்தப்பட்ட சாதியினராக இருந்தனர். இவர் களுள் ஒரு பகுதியினர் காலப்போக்கில் தம்மை அடிமை நிலையில் இருந்து விடுவித்துக் கொண்டனர். சட்ட ரீதியாக விடுவித்துக் கொண்டபோதும், நிலமற்றவர்களான இக்கூலி உழைப்பாளிகள் எசமானர்களின் காணிகளில் தொடர்ந்தும் குடியிருந்து வந்தனர். அத்தோடு சாதியடிப்படையிலான சில சேவைக் கடமைகளையும் (Caste services) இவர்கள் செய்து வந்தனர்.

## கல்வி:

முத்துக்குளிப்பு, நெசவுத் தொழில், கைவினைத் தொழில்க ளின் வளர்ச்சி என்பன யாழ்ப்பாணத்தில் விவசாயம் சாராத பிற தொழில் முயற்சிகள் வளர்ச்சியடையும் வாய்ப்பை உரு வாக்கியது. ஆயினும் யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் உற் பத்தி வளர்ச்சியடையவில்லை. பிரித்தானியர் இலங்கையில் ஆரம்பித்த பெரிய கைத்தொழில் என்றால் அது கல்வி என்ற கைத்தொழில் ஆகும் எனக்கூறும் நூலாசிரியர் ‘யாழ்ப்பாணத் தவர்கள் பெற்ற கல்வி அவர்களை நிலத்தில் இருந்து பிரித் தது’ என்று குறிப்பிடுகிறார். இலங்கையின் பிறபாகங்களில் அரசாங்கத்துறையிலும், சுதந்திரமான தொழில்களிலும் இணைந்து கொண்ட தமிழர்கள் குடாநாட்டைவிட்டு வெளியே சென்றனர். உத்தியோகம் தேடி மலாயாவிற்கும் தொடுகடல் நாடுகளிற்கும் சென்றமையும், தென்பகுதி நோக்கிய இடப் பெயர்வும் தமிழர் பொருளாதாரத்தின் முக்கிய திருப்பமா கும்.

இந்நூலின் முதன்மையான கருத்துக்களை மேலே தொகுத் தும் சுருக்கியும் கூறினோம். இலங்கை வரலாறு பற்றியும், குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் பூர்வீக வாழிடங்களான வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களின் வரலாறு பற்றியும் நவீன வரலாற்று முறையியல் நோக்கில் எழுதப்பட்ட ஆய்வு கள், சில இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துறைஞர்க ளான வரலாற்று ஆய்வாளர்களால் (Professional Historians) எழுதப்பட்டன. அத்தகைய ஆய்வுகள் பலவற்றை எழுதிய வர்களில் பேராசிரியர் சி. அரசரத்தினம் (1930 - 1998) முன் னோடியாகத் திகழ்கின்றார். தந்தை செல்வா நினைவுப் பேரு ரைத் தொடரில் 1982-ம் ஆண்டு இடம்பெற்ற இரு விரிவுரைக ளின் தொகுப்பாக அமையும் இந்நூலிற்கு தந்தை செல்வா நினைவு அறக்கட்டளையின் தலைவர் பேராசிரியர் கு.நேசையா ஆங்கிலத்தில் ஒரு முன்னுரையை எழுதி வழங் கினார். அம்முன்னுரையில் இருந்து இரு பந்திகளைக் கீழே தந்துள்ளோம்.

*‘தனது விடயப் பொருளை இரு விரிவுரைகளில் ஆராயும் பேராசிரியர் முதலாவது விரிவுரையில் 17-ம், 18-ம் நூற்றாண் டுகளில் வட இலங்கையில் நில உரிமை, உறவுகளின் தோற்றம், வர்த்தகத்தின் வளர்ச்சி, தொழில் உறவுகள் என்ப னவற்றைப் பரிசீலிக்கிறார்.*

*இரண்டாவது, விரிவுரையில் 19-ம், 20-ம் நூற்றாண்டுகளின்*

*வளர்ச்சியினை இலங்கை சுதந்திரமடைந்தது வரையான காலம்வரை பரிசீலனை செய்கிறார். டச்சுக்காரரும் அதனை யடுத்துப் பிரித்தானியரும் இந்நாட்டை ஆட்சி செய்த காலத் தின் ஆவணச் சான்றுகளைத் தமது விரிவுரைகளுக்கான ஆதாரங்களாக அவர் கொண்டுள்ளார். அத்தோடு ஏனைய வரலாற்று ஆசிரியர்களின் எழுத்துக்களையும் துணையாகக் கொண்டுள்ளார். (முன்னுரை பக். 6).*

*'வட இலங்கைத் தமிழர் வாழ்விடத்தின் பொருளாதாரச் சமூக வரலாற்றின் முக்கியமான பல அம்சங்கள் இவ்விரிவு ரைகளில் ஆராயப்பட்டுள்ளன. ஆயினும் இவ்விடயங்கள் பற்றி விரித்துரைக்கும் வாய்ப்பு பேராசிரியருக்கு இருக்க வில்லை. இன்றைய பொருளாதார நிலையை விளங்கிக் கொள்வதற்கு உதவியாக அமையக்கூடிய சட்டகம் ஒன் றைத் தருவதோடு முக்கியமான விடயங்களைக் கால வரன் முறைப்படி அவர் தொகுத்தும் பகுத்தும் விளக்கியுள்ளார். இந்த விரிவுரைகளில் கூறப்பட்ட விடயங்கள் இவை பற்றிய உரையாடலைத் தூண்டுவதாயும், தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கையோடு சம்மந்தப்பட்ட விடயங்கள் பற்றிய மேல திக ஆய்வுகளுக்கு உந்துதலாகவும் அமையும் என்றே கரு துகின்றோம். அதுவே பேராசிரியர் அரசரத்தினம் அவர்க ளுக்கும், தந்தை செல்வா நினைவு அறக்கட்டளையைச் சார்ந்தோருக்கும், மனநிறைவு தருவதாகவும் அமையும். (முன்னுரை பக். 6)*

## நூலாசிரியர் பற்றிய சிறு குறிப்பு...



### வரலாற்றுத் துறைஞர்
# பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம்
### (20.03.1930 - 04.10.1998)

நவாலிக் கிராமத்தில் பிறந்தவர். யாழ்ப்பாணக் கல்லூரியில் இளமைக் கல்வியைக் கற்றார். 1947-ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் சென்ற இவர் வரலாற்றுத் துறையில் சிறப் புக் கல்வியைக் கற்று கலைமாமணி பரீட்சையில் முதற்தரச் சித்தியைப் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வர லாற்றுத் துறையில் இணைந்துகொண்ட இவர் 1957-ல் உதவி விரிவுரையாளராக நிரந்தரப் பதவி பெற்றார். 1954 - 1956 காலத்தில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கற்று கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். இவரது கலாநிதிப் பட்ட ஆய்வு பின் னர் Dutch Power in Ceylon (1658 - 1687) எனும் நூலாக வெளியிடப்பட்டது. இலண்டனில் உயர் கல்வி முடித்த பின் னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக 1961-வது ஆண்டு வரை கடமையாற்றினார். 1961-ல் மலா யாப் பல்கலைக்கழகத்தின் இந்தியக் கற்கைகள் பிரிவில் விரிவுரையாளராக இணைந்து அப்பல்கலைக்கழகத்தில் 1968 முதல் பேராசிரியராகக் கடமையாற்றினார். 1972-ல் அவுஸ்தி ரேலியாவின் நியூ இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தின் பேரா சிரியர் பதவியை ஏற்று 1995 வரை அப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். 1998-ல் அவர் அவுஸ்திரேலியாவில் காலமா னார். இவர் வரலாற்றுத் துறையில் பல ஆய்வுக் கட்டுரைக ளையும் நூல்களையும் எழுதிச் சர்வதேச அளவில் புகழ் பெற்றார். உலகின் புகழ்பெற்ற பதிப்பகங்கள் இவரது நூல் கள் பலவற்றை வெளியிட்டன. இவரது ஆய்வுக்கட்டுரைகள் பல உயர்தகுதியுடைய பருவ இதழ்களில் வெளிவந்தன.

## இவர் எழுதிய முக்கிய நூல்கள்:

- Dutch Power in Ceylonm 1658-1687(1958m Netherlands)
- Ceylon (1964, Spectrum/Prentice-u;all)
- Indian festivals in Malaya (1966, University of Malaya)
- Indians in Malaysia and Singapore. Kuala Lumpur: 1970 Oxford Uni Press. 1970.
- Maritime India in the seventeenth century (1994, Oxford Uni Press)
- Ceylon and the Dutch, 1600-1800 (1996, Variorum)
- Maritime commerce and English power (1996. Variorum)

நூல் விபரம்: வட இலங்கைத் தமிழர் பொருளாதாரத்தின் வரலாற்று அடிப்படைகள், 17-ம் நூற்றாண்டிலிருந்து 20-ம் நூற்றாண்டு வரை. (68 பக்கங்கள், குமரன் புத்தக இல்லம். இலங்கை. 2016).



shanmugalingam@thaiveedu.com

# அத்தலையும் மனிதர்களுள் ஒருவராக நின்றவர் ஜி. நாகராஜன்



– சு.வேணுகோபால்

ஓவியம் : ஜீவா

நவீன தமிழ் இலக்கியப்பரப்பில் வித்தியாசமான பார்வையில் வித்தியாசமான குரலில் நாம் பொருட்படுத்தாத வேறு வகையான வாழ்க்கையைப் பொருட்படுத்தி எழுதியவர் ஜி.-நாகராஜன். 1957 முதல் 1974 வரை எழுதியிருக்கிறார். 17 ஆண்டுகளில் தமிழ், ஆங்கிலம் என இரண்டு மொழிகளில் இரண்டு நாவல்கள், ஒரு குறுநாவல், 38 கதைகள், சில கட்டுரைகள் எழுதியிருக்கிறார். 1963-ல் 'குறத்தி முடுக்கு' குறுநாவலை எழுதி அவரே பதித்திருக்கிறார். வாசகர்களிடம் சரியாகச் சென்று சேரவில்லை. பெரிய சூடுபட்டிருக்கிறார். 1963-ல் இருந்து 1967 வரை எழுத்தில் ஒரு தொய்வு நேர்ந்திருக்கிறது. 1968 இலிருந்து 1974 வரை படைப்பெழுச்சியோடு சற்றே தீவிரமாக இயங்கியிருக்கிறார்.

ஜி. நாகராஜனுக்கு இன்று ஒரு மதிப்பை அளிப்பது, அன்று பலர் எழுதத் தயங்கிய விளிம்புநிலை மக்களையும் உதிரிகளையும் பரத்தையர்களையும் துணிந்து எழுதி இலக்கியத்தில் ஒரு புதிய இடத்தை உருவாக்கிக் காட்டியிருப்பதால்தான். பேசாப் பொருளைப் பேசத்துணிந்த ஜி. நாகராஜன் தன் சொந்த வாழ்க்கையைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் விரும்பி செய்திருக்கிறார். இம்மாதிரியான ஆக்கங்களுக்கு பிரசுரவெளியும் வாசகவெளியும் குறைவான காலத்தில் துணிந்து செய்திருக்கிறார். எல்லோருக்கும்தான் இந்த உலகில் வாழவேண்டியிருக்கிறது. அவரவர் பாடுகளுடன் முட்டி மோத வேண்டியிருக்கிறது. சிலரால் வாழ்க்கையைக் கொண்டாட முடிகிறது. பலரால் வாழ்க்கையை வசப்படுத்த முடிகிறது. இன்னும் பலரால் நிம்மதியான வாழ்க்கையைச் சரியான விதத்தில் அமைத்துக்கொள்ளமுடிகிறது. வேறு பலரால் ஏற்ற இறக்கங்களோடு எதிர்கொள்ள முடிகிறது. இதற்கெல்லாம் ஏதேதோ வகையில் பின்புலம் இருந்து அவர்களைத் தாங்கிப் பிடிக்கிறது. அலுவலகப் பணியே பிறவிப் பயன் என்று பற்றியிருக்க முடிகிறது. எந்தப் பின்புலமும் இல்லாமல் அன்றாடமே பிரச்சனையின் நியதியாக இருக்க நிமிடத்திற்கு நிமிடம் தங்கள் மேல் கவிகின்ற நெருக்கடிகளை எதிர்கொள்கிற உதிரிகளின் உலகமாக இருக்கிறது. முற்றான வேறொரு பிராந்தியம் இது. இப்படியான ஒரு வாழ்க்கைமுறையைப் பொருட்படுத்தி இலக்கியமாக ஆக்கியிருக்கிறார் ஜி. நாகராஜன்.

இவற்றில் கலையின் ஒளிவீசும் சிறுகதைகள் குறைவு. நிறைவு கூடாத கதைகள் பல. நாகராஜனின் கதை உலகம் பரந்து விரிந்ததும் அல்ல. சிறு பகுதியில் கவனம் குவிந்திருப்பது. தனிமனிதர்களின் கெட்ட புத்திகளை வேறு வேறு சில கதைகளில் தொட்டிருக்கிறார் என்றாலும் சிறுகதை என்ற வடிவில் இருக்கின்றன. பெரிய பாதிப்புகளை உருவாக்காதவை. திருப்பத்தை வைத்து சமாளிக்கின்றார்.

பாலியல் சார்ந்து எழுதப்பட்ட கதைகளில்தான் ஜி. நாகராஜன் தனித்துத் தெரிகிறார். காம உணர்ச்சியைக் கிளர்த்தும் ஒரு உணர்ச்சிப்பொருளாக எழுத்தைக் கையாளவில்லை. பாலியல் தொழிலில் ஈடுபட்டவர்களின் வாழ்வின்பாடுகள் எவ்விதம் இருக்கின்றன, அன்றாடத்தில் அதனை எவ்விதம் எதிர்கொள்கிறார்கள், அந்தத் தொழிலைக் கைக்கொள்கிறார்கள், எவ்விதம் மீள்கிறார்கள் அல்லது அந்தச் சுழலில் இருந்து வெளியேறமுடியாமல் ஏற்று நகர்கிறார்கள் என்று காட்டுகிறார். அந்த வாழ்க்கை புதிதாக இருக்கிறது. விபசாரிகள், மாமாக்கள், திருடர்கள், போக்கிரிகள், ரிக்ஷாக்காரர்கள், குடிகாரர்கள் சூழ்ந்த உதிரிகளின் உலகமாக இருக்கிறது. சமூகத்தால் வெறுக்கப்பட்டு ஒதுக்கவேண்டிய குற்றவாளிகள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கப்படுபவர்கள், ஏற்றுக்கொண்ட வாழ்க்கையைக் காட்டுகிறார். வலிந்து அவர்கள் மீது பச்சாதாபம் கொள்ளாத குணத்துடன் அணுகுகிறார். வலிகளைக் கசப்புகளைச் சொல்வதாக மட்டும் இல்லாமல் அந்த மனிதர்கள், பெண்கள் தங்களுக்கானதை எப்படிச் சாகசமாக வசப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை விலகி நின்று சொல்கிறார். காம நுகர்ச்சியைப் பின்தள்ளிவிட்டு அவர்கள் மாட்டிக்கொண்டிருக்கும் சிண்டு சிடுக்குகளையே ஒரு வாழ்க்கைமுறையாகக் காட்டுகிறார். இதனை ஒரு சாக்காக வைத்துப் பாலியல் உணர்ச்சிகளைத் தூண்டும் கிலுகிலுப்பான பகுதியை எழுதிச் சொருகும் கைங்கரியத்தை நிராகரிக்கிறார். இந்தப் பார்வையினாலேயே ஜி.-நாகராஜன் தமிழின் முக்கியமான படைப்பாளியாகிறார். தங்களை ஜி. நாகராஜன் வாரிசு என்று சொல்லிக் கொள்பவர்கள் அவர் தனித்து நடந்த இந்தத் தடத்தை மேலும் முன்நகர்த்தியிருக்கிறார்களா என்று கேட்டுக்கொண்டால் போதுமானது.

'மோகம்' என்றொரு கதை. அது சதங்கை இதழில் (ஏப்ரல் 1972)-ல் வெளிவந்தது. அக்கதையை அப்படியே 'நாளை மற்றும் ஒரு நாளே' நாவலில் ஒரு அத்தியாயமாக இணைத்திருக்கிறார். அதனால் சிறுகதை வரிசையில் வேண்டாம் என்று விடுத்துள்ளனர்.

ஐரீன் என்ற ஆங்கிலோ இந்தியப் பெண்ணும் சுப்பையா செட்டியார் என்ற பெரிய காய்கறி வியாபாரிக்கும் ஏற்படும் உறவைச் சொல்லும் கதை ‘மோகம்’. பாலியல் தொழிலை ஒப்பந்த அடிப்படையில் செய்யும் ஆங்கிலோ இந்தியப் பெண் பலே கைகாரியாக இருக்கிறாள். தன்னை ஒரு ஆங் கிலேய வம்சத்திலிருந்து வந்தவள் என்று பெருமை கொள்கி றாள். சுப்பையா செட்டியாரை பெரும் முதலாளி என்று நம்பி ஏமாந்து போனதைக் கண்டதும் ஒப்பந்தத்தைத் துண்டிக்கச் சண்டித்தனம் செய்கிறாள். மெடிக்கல் அலவன்ஸ், கிறிஸ்து-மஸ் அலவன்ஸ், சினிமா அலவன்ஸ் என்று மிக நீண்ட பட்டி யலை வைத்துக்கொண்டுதான் யாருடனும் ஒப்பந்தம் செய்கி றாள். கோடை வாசஸ்தளத்தில் தங்கி உடம்பிற்கு ஓய்வு தர பணம் கேட்கிறாள்.

செட்டியார் ஆங்கிலேயரின் பழக்கங்களிலும் அவர்களின் நிறத்திலும் சற்று மோகம் கொண்டவர். ஒரு ஆங்கிலோ இந் தியப் பெண்ணை வசப்படுத்தி வைத்திருப்பதில் பெருமை யாகத்தான் நினைக்கிறார். என்றாலும் அவள் பணத்தைக் கைப்பற்றுவதிலேயே குறியாக இருப்பதைக் கண்டு உஷார் ஆகிறார். கேட்ட பணத்தை அவ்வளவு லேசில் செட்டியாரி டம் பெறமுடியாது என்பது தெரிந்ததும் வசவுகளைப் பொழி கிறாள். அவள் வீசும் சில கெட்ட வார்த்தைகளால் வேத னைப்படுகிறார். ‘பக்கர்’ என்ற வார்த்தை அவள் வாயிலி ருந்து வருகிறது. கோபம்கொண்டு அதற்கு விளக்கம் (சரி யான ஆம்பிளை) கேட்டு மகிழவும் செய்கிறார். பிரச்சனைக ளைத் தீர்த்துக்கொள்ள முடிவெடுக்கின்றனர். ஒரு மாதத் திற்கு உள்ளாகவே சிறுதொகை கொடுத்து ஒப்பந்தத்தை முடித்துக் கொள்கின்றனர். இந்த உறவு புதிதாக இருக்கி றது. சொல்லப்படாத உலகை சொல்லுவதனாலே எடுத்தவு டன் கதை ஈர்க்கவும் செய்கிறது.

கதையில் அவள் ஒப்பந்தத்தை மீறி வேறு ஆடவனுடன் பகல் நேரத்தில் இருப்பதும், பஞ்சாயத்தைத் தீர்க்க வந்தி ருக்கும் தரகனைப் பெரிய பிசினஸ்மேன் என்று கேட்டதும் அவனை வளைத்துப்போட அப்போதே அடிபோடுகிறாள். செட்டியாருக்கு ஐரீனை வைத்துக்கொள்ளத்தான் ஆசை. என் றாலும் அவள் கேட்பதையெல்லாம் அள்ளிக் கொடுக்கவும் அவருக்கு மனசில்லை. பணத்தில் கறாராகவே இருக்கிறார். அவர்களது மோகத்தைப் பொருளாசை வெற்றிகொள்கிறது. ஐரீன் ஆங்கிலேயப் பெண்ணாகவும் தமிழ்ப் பெண்ணாகவும் வேஷம் இட்டாலும், செட்டியார் ஆங்கிலேயக் கணவனாகவும் பெரிய வியாபாரியாகவும் வேஷம் போட்டாலும் பொய் நிலைக்க மறுக்கிறது. அவர்களின் மோகம் காமத்தை விட வும் பணத்தில் தீவிரமாகப் பற்றியிருக்கிறது. இனப்பெருமை, குலப்பெருமை, தொழிற் பெருமை எல்லாம் பணப்பெருமை யிலேயே பதுங்கிக் கிடக்கிறது என்று சொல்கிறது கதை. இந் தக் கதையைச் சிறுகதை வரிசையிலும் தந்திருந்தால் நல்ல கதை வரிசைக்குக் கூடுதலான ஒன்றாக இடம்பெற்றிருக்கும்.

திருநெல்வேலி நகரின் ஒரு ஒதுக்கப்பட்ட பகுதி குறத்தி முடுக்கு. அதன் முழுப்பெயர் வள்ளிக்குறத்தி முடுக்கு. அந் தப் பகுதியில் ஒளிந்தோ, மறைந்தோ, காவல்துறைக்கு மாமூல் செலுத்தியோ அத்தான்கள் என்ற மாமாக்கள் மூலம் பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களின் பிரச்சனைகளைக்



காட்டுகிறார். இந்தப் பொறியில் மாட்டிக்கொண்ட பெண்க ளின் மீது எவ்வித இழிவுகளையும் சுமத்தாமல் மிக மிக உள் ளடங்கிய, பரிவுணர்வு வெளிப்படையாகத் தெரியா வண்ணம் காட்டியுள்ளார். 16 வயதேயான மரகதம் தொழிலுக்கு வந்த சில மாதங்களிலேயே பண விஷயத்தில் படு கெட்டிக்காரி யாக மாறிவிடுகிறாள். அக்காவின் கணவனை நம்பிவந்த தங் கம் அவனது முதலாளிக்குக் கூட்டிக்கொடுக்கப்படுகிறாள். பின் அவள் பாலியல் தொழிலில் வந்து மாட்டிக்கொள்கி றாள்.

காதல் என்ற பெயரில், குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கனவில், நேர்மையற்ற வழக்குகளில், காவல்துறையின் தந்திரங்களில், கவனி கவனி என வாடிக்கையாளர்களை உள்ளே தள்ளியபடி நெருக்கும் அத்தான்களின் கெடுபிடிக ளில் பெண்கள் சிக்கி நாசமடைகின்றனர். அவர்களது நம்பிக் கையில் மண் விழுகிறது அத்தான்கள், தலைவிகள், தரகர் கள், வாடிக்கையாளர்கள், காதலர்கள் என்று வெவ்வேறு குடும்பச்சூழலில் இருந்துவந்த பெண்கள் பலரிடம் ஏமாறுகி றார்கள். ‘குறத்தி முடுக்கு’ குறுநாவல் பற்றி ஒரே வரியில் சொல்லவேண்டுமானால் ‘துரோகத்தின் சிறு காவியம்’ என லாம். துரோகமே நீக்கமற சூழ்ந்திருக்கும் தங்கம் அக்காள் கணவன் மீதும், கதை சொல்லியான காதலன் மீதும், வாடிக் கையாளர்கள் மீதும் அன்பை மட்டுமே கொடுப்பவளாக இருக்கிறாள். இப்படி ஒரு சுபாவம்.

இந்த வள்ளிக்குறத்தி முடுக்கில் வந்து சிக்கிக்கொண்டவள் தான் தேவயானை. புதிதாக வந்த இந்த தேவயானை சிறு பெண். காமுகர்களைத் தொடர்ந்து அத்தான் அனுப்பிக் கொண்டே இருக்கிறான். வேறு வழியில்லாமல் தற்கொலைக்கு முயலும் நேரத்திலும் ஒருவன் வந்து கதவைத் தட்டுகிறான். தற்கொலை முயற்சியிலிருந்து தவறி கீழே விழுகிறாள். மீண்டும் கதவு தட்டப்படுகிறது. அத்தானின் கூட்டில் சிக்கிக்கொண்டு மீள முடியாது பாலியல் கொடூரத்தை அனுபவிக்கும் இந்த தேவயானை என்ற பாத்திரத்தைப் பிரித்தெடுத்து இன்னும் புனைவின் வீச்சோடு எழுதப்பட்ட கதைதான் 'டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழ வேட்டியும் அணிந்த மனிதர்.'

குறத்தி முடுக்கில் வரும் தேவயானைதான் இந்தக் கதையில் வரும் தேவயானை என்றாலும் இன்னும் பித்தேறிய மனநிலையைத் தீவிரமாக இதில் வெளிப்படுத்துகிறாள். சாவைத் தேடும் தருணத்திலும் ஒரு நற்கனவு புகுந்து ஆட்டுகிறது. அத்தானின் வாடிக்கையாளராகக் கொண்டுவரப்படும் டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழ வேட்டியும் அணிந்த மனிதர் அவளைத் தொந்தரவு செய்யாமல் வந்து அமர்ந்து உரையாடுகிறார். உடல் அழகை ரசிக்கிறார். தன்னைத்தர அவள் பல வகைகளில் முயல்கிறாள். அதைப் பொருட்படுத்தாமல் அன்புடன் அலாவலாவிவிட்டு உரிய பணத்தைத் தந்து விடை பெற்று போகிறார். இது அடுத்தடுத்து வாடிக்கையாளர்களில் வரும் ஒரு நிகழ்வாக வருகிறது. தூக்கில் தொங்கத் தயாரிப்பில் இருக்கும் பொழுது அடுத்த வாடிக்கையாளன் கதவைத் தட்டுகிறான். தற்கொலைத் தயாரிப்புகளை அந்த அளவில் விட்டுவிட்டு கீழே இறங்கிவந்து கதவைத் திறக்கிறாள். அத்தானும் நாடி வந்தவனும் நிற்கின்றனர். வந்து போன டெர்லின் சட்டைக்காரர் பற்றி சொல்கிறாள். அவன் தந்த ஐந்து ரூபாய் தலையணையில் தேடுகிறாள். பணம் அங்கும் இல்லை, வேறு எங்கும் இல்லை. அந்தப் பெண்ணின் மனக் கற்பனையில் வரைந்துகொண்ட ஒரு அன்பான மனிதர். மனக்கற்பனையே உண்மையில் ஒன்றாகிப்போய் அவளைத் திகைக்க வைக்கிறது. அத்தான் இவளைப் புரட்டுக்காரி என்று ஏசுகிறான். தொடர்ந்து புணர்ச்சிக்கு விரட்டுகிறான். அத்தானின் விரட்டலுக்கும் தனிமைக்கும் ஓடி ஓடி நொறுங்கிப்போன தெய்வானை தற்கொலையைத் தேர்கிறாள். இதற்கிடையேதான் ஒரு அன்பான வாடிக்கையாளன் வந்துபோனதாக நம்புகிறாள். தப்ப முடியாத கொடுமையும் அதனூடே மனம் விரித்துக்கொள்ளும் கற்பனையான மனிதரையும் குலைத்து எழுதப்பட்ட மிக வலுவான கதை. கடுமையான யதார்த்தம் கற்பனையின் சிறு அசைவையும் எதார்த்தத்தின் ஒரு பகுதியாக மாற்றிவிடுகிறது. மாயத்தன்மை அவளைத் திகைக்க வைக்கிறது. மன உளைச்சல் அதையும் நிஜமாக்கிக்கொள்கிறது. வந்து போனவர்களில் ஒன்றாகிறது. நெருக்கடியான சூழலில் நம்பிக்கையின் கீற்றை இப்படித்தான் மனம் உருவாக்கிக்கொள்கிறது அல்லது மன பேதலிப்பில் தனக்கான ஒன்றை உருவாக்கிக்கொள்கிறது. பாலியல் சுரண்டலின் உடல் நோவை, மனநோவை தீவிரமாகச் சொல்லியது 'குறத்தி முடுக்கு'. டெர்லின் கதை அந்த நோவோடு ஒரு கனிவை நாடியதையும் சேர்த்து ஒரு புதிய பரிமாணத்தைக் காட்ட முனைந்தது. அந்தப் பெண்களை இந்த யதார்த்தத்தில் வைத்துத்தான் ஒரு பரிவைக் காட்டினார். அக்காலத்தில் ஜி. நாகராஜனிடம் குடிகொண்டிருந்த முற்போக்குத் தன்மை இந்த இரு கதைகளிலும் கூடி மிகச்சிறப்பான முறையில் உருவாகி வந்திருக்கின்றன.

பரத்தை பற்றி ஜி. நாகராஜன் எழுதிய சிறு குறிப்பில் 'அடுத்து வருபவன் ஆணா, அலியா, கிழவனா, வாலிபனா, அழகனா, குரூபியா, முரடனா, சாதுவானவனா என்றெல்லாம் கவலைப்படாது அவனிடத்தில் தன்னைத்தானே ஒப்படைத்துக் கொள்கிறாளே அந்தச் சிறுமியிடத்து யாரும் ஒரு தெய்வீக உணர்வை சந்திக்காமல் இருக்க முடியாது. சமுதாயம் அவ்வப்போது கற்பிக்கும் போலி ஏற்றத்தாழ்வு உணர்ச்சிகளுக்கு இறையாகாமல் இருப்பவன் ஒருவனே இதைப் புரிந்துகொள்ள முடியும். எது எப்படி இருப்பினும் 'தேவடியாள்' என்பதை ஒரு வசைச் சொல்லாகப் பயன்படுத்த நியாயமே இல்லை. வேண்டுமென்றால் தி. ஜானகிராமனது 'கோபுர விளக்கு' என்ற சிறுகதையையோ அல்லது ஈஜின் ஒனீலின் 'அன்னா கிறிஷ்டி' நாடகத்தையாவது படித்துப் பாருங்கள். பரத்தை மாதவியின் நல்லியல்புகள்தானே மணிமேகலையிடத்து குடிகொண்டன' என்று எழுதிய உள்ளம் இந்தப் பெண்களை எவ்வளவு தூரம் கரிசனையுடன் அணுகியிருக்கிறது என்பதற்கான மேன்மையான வாக்குமூலம். இது ஒரு படைப்புப் பார்வை. இப்படி சொல்லியிருந்தாலும் எல்லாப் பரத்தையர்களையும் இந்தக் கண்ணோட்டத்தில் அவர் பார்க்கவில்லை. பரத்தையர்களின் தந்திரங்கள், எத்தனங்கள், நடிப்புகளையும் வெவ்வேறு கதைகளில் சேர்த்தே காட்டியிருக்கிறார். தாம்பத்திய உறவுகளைக் கிளுகிளுக் கதைகளுக்கும் மேலாக எழுதும் சூழலில் ஜி. நாகராஜன் பாலியல் உலகத்தை மிகமிகப் பொறுப்புணர்ச்சியுடன் பாசாங்கற்ற உண்மையின் வெளிப்பாட்டுடனும் எழுதிக் காட்டியிருக்கிறார். 'நான் விரும்பும் அளவிற்குச் சொல்ல முடியவில்லையே' என்று அவர் சொன்னதையும் சேர்த்துத்தான் இக்கதைகளை மதிப்பீடு செய்யவேண்டியிருக்கிறது.

உதிரி மனிதர்களின் நல்லியல்புகளைச் சொல்லவேண்டும் என்ற நோக்கத்தாலோ, கீழானவர்களாகக் காட்டவேண்டும் என்ற நோக்கில் அவர்களது சீரழிவுகளையோ, அவர்களுக்கு எடுப்பான ஒரு வண்ணம் பூசி வாசகர்களைக் கவர வேண்டும் என்றோ அவரது ஆக்கங்களில் இல்லை. மாறாக அந்த உதிரி மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள், அன்றாடக் களத்தில் எப்படி ஆடுகிறார்கள், மனிதர்களை எதிர்கொள்கிறார்கள், அல்லற்படுகிறார்கள் என்ற ஒரு நியதியில் விலகிநின்று உருவாக்கி இருக்கிறார். அந்த மக்கள்மீது ஒரு பரிவு இருக்கிறது. அது படைப்பாக்கத்தில் ஒரு கைப்பொருளாகக் கொண்டதல்ல. படைப்பாக்கத்திற்கு வெளியே அவரிடம் இருக்கிறது. எதுவானாலும் எப்படியானாலும் சரி தவறுகளுக்கு அப்பால் அவர்கள் ஆடுகின்ற ஆட்டங்களைச் சொல்வது மட்டுமே தன் பொறுப்பு என்று படைத்திருக்கிறார். இவ்விதம் யதார்த்தத்தின் வெம்மையைச் சொல்வதையே தனது இலக்கியப் பார்வையாகக் கொண்டு இயங்கி இருக்கிறார்.

பரத்தையர்கள் பற்றிப் பல கதைகளை ஜி.என் எழுதியிருந்தாலும் 'மோகம்', 'டெர்லின் ஷர்ட்டும்' என்கிற இரு கதைக-

ளில் கூடிவந்த படைப்பு மனம் இவ்வகையான பிற கதைக-ளில் கூடி வரவில்லை.

வந்தவனைச் சட்டுப்புட்டுவென வேலையை முடித்து வெளி யேற்ற ஆடும் நாடகங்களை, போடும் வேசங்களை, பணத் திலே குறி வைத்திருக்கும் கண்களை, வளைத்துப்போட விரிக்கும் ஜாலங்களைக் காட்டியதோடு நிறுத்திக்கொண்ட கதைகளும் உண்டு. வாடிக்கையாளரிடம் நேசம் மேலெ ழுந்து தன்னைத் தருகிற பெண்களும் உண்டு. கதை சொல்லி கண்ணியம் மதிப்பு கௌரவம் எல்லாவற்றையும் கழற்றி எறிந்துவிட்டு காமவேட்கை கொண்ட வாடிக்கையாள னாகத்தான் வருகிறான்.

இணக்கமாக நடந்து கொள்ளாத பரத்தையிடம் இனிப் போகக்கூடாது என்று நினைக்கிறவன் அவனது சம்பாத்தியத் திற்கு வாய்த்தது அதுதான் என்று திரும்பச் செல்லவைக்கும் காமத்தைச் சொல்லும் ‘சுழற்சி', தன் பரத்தைத் தொழிலில் சிறு வயது மகளையும் ஈடுபடுத்தி ஒரு வீட்டையும் கட்டி மக ளுக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைத்து, சொந் தத்தில் ஒரு சிறுவனைப் படிக்க வைக்கிற பொறுப்பை ஏற்றி ருக்கிறவள், இனி இந்தப் பாலியல் தொழில் வேண்டாம் என்று தீர்மானமாக இருக்கிறாள். அவளைப் பார்க்க வருகிற பழைய வாடிக்கையாளனைத் திருப்திப்படுத்தி ‘ஒரு கல்யா ணத்தைப் பண்ணிக்கோ' என்று அனுப்புகிற ‘பூர்வாசிரமம்' கதை, அன்றைய பசியைப் போக்குவதற்காகப் பெண் தரக ராக மாறி மைனரை ஓட்டலில் வைத்து மடக்கி, தன் மகள் உங்களுக்காகக் காத்திருப்பாள் என்று நம்ப வைத்துக் காசைக் கரைத்து ஏமாற்றிச் சாகசம் செய்கிற ‘நடிகன்'. கதை, கடத்தல், கொலை, காட்டிக் கொடுத்தல், காவலரோடு பங்கு போடுதல் என நடக்கும் கடற்கரை சார்ந்த ஊரில் ஏழைப் பிராமணத்தாய் வறுமை காரணமாகப் பாலியல் தொழில் நடத்தும் தலைவியிடம் மகளை அனுப்பி வைப்ப தைச் சொல்லும் ‘எங்கள் ஊர்' கதை, பால்வினை நோய் வந்து வயிற்று வலியில் துடிப்பவளை உன்னால்தான் எனக்கு இந்தக் கனோரியாச் சீக்கு வந்ததாகக் கூறி அடிக்கி றவன், வேதனை தாளாமல் இறந்தவள் பற்றித் தட்டி கேட்கச் செல்கிறவன் தோழியோடு சல்லாபிப்பதாக முடியும் ‘துக்க விசாரணை'-க் கதை, பொருளாதாரத்தில் வீழ்ச்சி அடைந்த தந்தை ஏதோ மகளை மருமகன் வீட்டிற்குப் பஸ் ஏற்றி அனுப்புவதைப் போல தொழிலுக்கு அனுப்பும் தந்தை, அவ ளுக்கு வந்து வாய்த்த பேடி, ஓட்டம் எடுத்ததைச் சொல்லும் ‘ஆண்மை' முதலிய கதைகளில், வாடிக்கையாளர்களிடம் நடந்துகொள்ளும் முறைகள், உரையாடல்கள், சின்னச் சின் னப் போக்கிரித்தனங்கள், அதற்கெல்லாம் அப்பால் வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் பற்றிச் சொல்கின்றன. ஆனால் இந்தக் கதைகளில் சிறுகதையின் தீவிரத்தன்மை கூடிவரவில்லை இப்படியெல்லாம் இருக்கிறது என்று சொல் கிற நிலையில் இருக்கின்றன.

சமத்காரமாக முடிவு சார்ந்து ஒரு திருப்பத்தை வைத்துச் சிறுகதையாக ஆக்குகிறார். காமத்தின் முன் போட்டுக் கொண்ட தீர்மானங்கள் கழன்றுகொள்ளவைத்தான் வெவ்வேறு கதைகள் ஒரே முடிவாகக் கொண்டிருக்கின்றன. ஒரு கண்டு பிடிப்பை மற்றக் கதைகளில் வைப்பது ஒரு சமத்காரம்தான். வெவ்வேறு பின்னணியில் வெவ்வேறான குணவியல்பு கொண்ட பரத்தையர்களைப் பற்றிக் கதைகளில் சொல்லப் பட்டிருக்கின்றன. தொழிலுக்கு அப்பால் வாழ்வின் புதிரைக் காண்பதாக இல்லை. ‘ஆண்மை' கதையில் எல்லாக் காம சேட்டைகளையும் செய்துவிட்டு இறுதியில் நான் ஆண்மை யற்ற பேடி என்று சொல்லிக், கதைசொல்லி கிளம்புவது ஒரு வித ஏமாற்று வேலை. திடீர் திருப்பம் வெற்று ஆரவாரமாக இருக்கிறது. ‘துக்க விசாரணை' கதையில் திடீர் திருப்பம் முரணுக்காகவே செய்யப்பட்டிருக்கிறது. ‘போலீஸ் உதவி', ‘பச்சைக் குதிரை' கதைகளில் திருப்பம் சரியான விதத்தில் புனைவாகவில்லை.

‘எங்கள் ஊர்' கதை கூடிவராத இரண்டு முனைகளை ஒன்றா கக் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அல்லது கதையின் ஒரு மைக்கு மெனக்கெடாததால் இரு பகுதிகளாகவே கிடக்கின் றன. இக்கதைகளில் பரத்தையரின் சில நடவடிக்கைகள் சில அவதானிப்புக்களுக்காகப் பொருட்படுத்தலாம் தவிர ‘டெர் லின் ஷர்ட்' கதைபோல நல்ல சிறுகதையாக எதுவும் தேற வில்லை. இப்படி ஒரு உலகம் இருக்கிறது என்பதை ஜி.-நாகராஜன் காட்டியிருக்கிறார் என்று சொல்வதற்கு மட்டுமே இடமிருக்கிறது. இதில் ‘பூர்வாசிரமம்' ஓரளவு பொருட்படுத் தத்தக்க வகையில் இருக்கிறது.

கதை புனைவின் முக்கியமான சூழலை உருவாக்கும் இடங் களில் செயற்கைத் தனம் தெரிகிறது. வைத்த ட்விஸ்ட்டைத் திருப்புவது என்பது ஜனரஞ்சகக் கதையில் வைக்கப்படும் வழக்கமான பாணிதான். ‘மிஸ் பாக்கியம்' கதையில் அக் காள் கணவன் அத்தானுக்கு எழுதிய கடிதத்தில் ‘குழந்தைக ளுக்கு முத்தங்கள் அத்தானுக்கு வணக்கம்' என்று எழுதுவ தற்கு பதிலாக ‘குழந்தைகளுக்கு வணக்கம் அத்தானுக்கு முத்தம்' என்று எழுதி இருப்பதை நினைவூட்டிக் கேலி பேசு மிடங்கள் கதையை வேறு கோணத்தில் வளர்க்கப் போவது போன்ற பாவனை தவிர வேறில்லை. அடுத்து பக்கத்துவீட் டில் குடியிருக்கும் அத்தானின் நண்பரான கட்டையன் ஆளில்லாத சமயத்தில் வருகிறான். தண்ணீர் கேட்கிறான். குடிக்கிறான். பின் பாக்கியத்தைத் தூக்கிக் கட்டிலில் கிடத்து கிறான். பாக்கியமும் கட்டித் தழுவுகிறாள். வேலையை முடிக் கிறான். எந்த அறிமுகமும் இல்லாமல் எந்த அச்சமும் இல் லாமல் இப்படி சுழுவாக நிகழ்த்திக் கொள்கிறார்கள். அதேச மயம் தனிமையில் இருக்கிற பையன் செல்லதுரையை அழைத்து அமர வைத்துவிட்டு கட்டிலில் மல்லாந்து படுத்த வாக்கில் பேசுகிறாள். காமம் இருவரின் கண்களிலும் வெளிப் படுகிறது. ஆனால் விலகுகிறாள். ஒரு பொருத்தமான சூழ லைத் தவிர்க்கிறாள். உடன் வேலை பார்த்த சாரதா வீட்டில் ஒருநாள் தங்கி அவளது கணவருடன் பேச ஆசைப்பட்டது நிறைவேறாமல் போவதும் வருகிறது. அப்பா காட்டிய இளை ஞனை வேண்டாம் என்று பத்து ஆண்டுகளுக்கு முன்பு நிரா கரிக்கிறாள். யாரைப் பார்த்தாலும் காமவயப்படும் பாக்கியம் அவனை நிராகரிப்பதற்கு உரிய காரணங்கள் இல்லை. இப் படி வாசகனின் காதில் பூச்சூட்டி பூச்சூட்டி ஒரு த்ரில்லிங் தருகிறார். ரங்கநாயகி என்ற மாணவியை அழைத்து வலுக் கட்டாயமாகக் கலவியில் ஈடுபடும் பாக்கியம் ஏன் செல்லத்

துரையை அவ்விதம் செய்திருக்கக்கூடாது. அதுதானே இயல்பான வாய்ப்பு. இப்படி கதைமுழுக்க உளவியலுக்கு மாறான குளறுபடிகள் மலிந்திருக்கின்றன. அப்புறம் ரங்கநாயகி மூச்சுப் பேச்சு இல்லாமல் கிடப்பதைக்கண்டு வைர மோதிரத்தைப் பொடியாக்கி அதனைப் பாக்கியம் தின்று சாவதுமாகக் கதை முடிகிறது.

பாக்கியத்தின் பணி சார்ந்து எத்தனையோ நண்பர்களைச் சந்தித்திருக்க முடியும். அதில் காதல்கொள்ள வாய்ப்பும் இருக்கிறது. தர்க்கம் இல்லாமல் கதையை எங்கெங்கோ சுற்றி இழுத்துக்கொண்டு வருகிறார். லெஸ்பியன் உறவை வித்தியாசமாகச் சொல்லவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டு எழுதப்பட்ட கதையாகத்தான் இருக்கிறது.

எனினும் இக்கதையில் சீரழிந்த அக்கா குடும்பத்திற்கு உதவச் சொல்லும் தந்தை, அக்கா பிள்ளைகளின் ஊதாரித்தனத்தின் மீது இவள் கொண்ட வெறுப்பு, சக தோழிகள் திருமணம் முடித்துச் சந்தோசமாக இருப்பதைப் பார்த்துக்கொள்ள நேரும்போது ஏற்படும் அவஸ்தை, இடைவிடாத படிப்பு, தனிமை, அத்தனிமையே கட்டுப்பாடு இல்லாமல் தின்ன வைத்து உடல் பெருக்கக் காரணமாகி வருத்தம் கொள்வது என்று கதையின் மைய இழையைத் தொட்டு வரும் சிறு சிறு பகுதிகள் நன்றாக இருக்கின்றன. கதையின் உள்ளியக்கம் சந்தர்ப்பங்களுக்கும் உளவியலுக்கும் புறம்பாக இருக்கிறது. போலியான அதிர்ச்சி வைத்தியக் கதை மிஸ் பாக்கியம்.

ஜி. நாகராஜன் தன் கதைகள் குறித்து செய்திருக்கும் சுய விமர்சனத்தில் 'மிஸ் பாக்கியம்' ஆசிரியரின் வெற்றி கண்ட சிறுகதையாக, அதாவது சிறுகதையாக 40 மதிப்பெண் பெறும் கதையாகக் குறிப்பிடுகிறார். கதையைப் படித்ததும் அப்படித்தான் தோன்றியது. ஆனால் கதையின் அகக்கூறுகள் பொருத்தமற்ற தன்மையால் புனையப்பட்டு இருப்பது தெரியவர தெரியவர கதையின் உயிரோட்டம் மங்கி சுணங்கி விட்டது. வித்தியாசமான காம உறவு, வித்தியாசமான சாவு மட்டும் கதைக்கு ஒரு நல்ல மதிப்பீட்டைத் தராது. கதைக்குள் பெருகிவரும் உண்மை ஒளிதான் படைப்பை உயர்த்துகிறது. அது இந்தக் கதையில் இல்லை. பல கதைகளிலும் தான்.

**கா**மத்தின் பாற்பட்ட பிறழ்வுகளையும் மீறல்களையும்தான் அதிகமாக ஜி.என். எழுதியிருக்கிறார். ஒரு கதை. கணவர் மதிப்புமிக்க பேராசிரியர். அவர் ஒரு மலடன் என்ற பிரச்சனை தடியூன்றி நடக்கும் காலத்தில் வருகிறது. மலடன் என்று ஏளனத்தில் அவர் ஆட்படாமல் இருக்க மனைவி ஒருவனுடன் சேர்ந்து கர்ப்பம் தரிக்கிறாள். அதைக்கேட்டு கணவர் மனைவியை அவளுடைய தம்பி வீட்டிற்கு அனுப்பி வைக்கிறார். மன அழுத்தத்தால் ஊர் சுற்றுகிறார். குழந்தை பிறக்கும்முன் இறந்துவிட நினைக்கிறார். இப்படியான கதைதான் 'வாழ்வும் எழுத்தும்'. கதையில் அவளுக்கு 45 வயதைத் தொடுவதாக இருக்கலாம். பேராசிரியர் நடைக்குச்சியைப் பயன்படுத்துவர் என்பதால் 55 வயதுக்கு மேலாகவே இருக்கும். 22 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்திருக்கிறது. இரண்டாண்டுத் தாம்பத்தியத்தில் தன் பலகீனம் உணர்ந்து மனைவியுடன் இணைவதை முற்றாகத் தவிர்த்து விடுகிறார். 20 ஆண்டுகள் இருவருக்கும் இடையே கலவியே இல்லை. மனைவி இத்தனை ஆண்டுகள் எந்த சலனமும் இல்லாமல் கணவனை மதித்து வாழ்ந்து வந்திருக்கிறாள். மிக ஒழுக்கமான பெண். இப்போது திடீரென கணவன் மலடன் இல்லை என்று காட்ட வயிற்றில் குழந்தையை உண்டாக்கி இருக்கிறாள். 20 ஆண்டுகள் கர்ம சிரத்தையோடு பேராசிரியருக்கு உண்மையாக இருந்தவள் திடீரென இப்படி உறவு பிறழ்ந்து குழந்தைப் பாக்கியத்தை உண்டாக்கிக் கொண்டாள். அதுவும் கணவனின் மலடன் பட்டத்தை அழிக்க என்று எழுதுவது ஏதேனும் நம்பும்படியாக இருக்கிறதா? மலடன் என்ற பிறரின் பார்வையை அழிக்க ஐந்து வருடத்திலோ சற்று இன்னும் தள்ளி பத்தாவது ஆண்டிலோ அவள் செய்து காட்டியிருந்தால்கூட நம்பலாம். ஏதோ ஒரு வகையில் தெரிந்தவன் என்ற குறிப்புக்கூட இல்லை. அதுவும் வயதான காலத்தில் பேராசிரியர் மலடன் இல்லை என்று மற்றவர்களுக்குக் காட்ட மீறுவது மனைவியின் குணவியல் பிற்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லை. அவளுக்கு அவ்விதமான சலனங்களே 21 ஆண்டுகள் வரை இல்லை. புனைவின் சூட்சுமங்கள் குறித்து ஜீ. நாகராஜனுக்கு அக்கறை இல்லை, புனைவு என்பது நிஜத்தை விட வலுவான கோலம் கொள்ளவேண்டும் என்ற உணர்வு அவருக்கு இருந்ததில்லை. புனைவு உருவாக்கத்தில் ஓட்டைகளை விட்டுவிட்டு கதையை வாசகனுக்கு அதிர்ச்சி ஊட்டுவதாக முடிவை வைத்தால் எந்த பிரயோஜனமும் இல்லை. அந்த முடிவிற்குக் கதைக்குள்ளே ஒரு மனநிலை இழையோடி இருக்க வேண்டும். ஓ ஹென்றி பாணியிலான கதைகளின் இறுதித் திருப்பம் எல்லாக் கதைகளுக்கும் சரியாக அமைந்துவிடாது. வித்தியாசமான முடிவாக இருந்தாலும் பொக்கானது என்று தெரிந்துவிடும்.

'கல்லூரி முதல்வர் மிஸ் நிர்மலா' கதையில் காதர் என்ற கிழவனோடு உறவுகொண்ட ஒரு மாணவி இந்த விஷயத்தை மற்றொரு தோழிக்கு எழுதியதாக வரும் கடிதம் நம்பிக்கையை உண்டாக்கவில்லை. ஏனென்றால் ஒரே அறைத் தோழிகள் ஏன் கடிதம் எழுதவேண்டும். ரகசியமாகச் சொல்வதற்கே வாய்ப்பு உண்டு. பின் ஏன் கடிதத்தை கதைக்குள் கொண்டுவருகிறார் என்றால் கல்லூரி முதல்வர் நிர்மலாவிற்கும் அந்தக் கிழக் காதருக்கும் ஒரு உறவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்குத்தான். கதை அசலாக ரூபம் கொள்ளவில்லை. புனைவாக்கம் சிறப்பாக அமையவில்லை என்றால் அது எப்பேர்ப்பட்ட கதையாக இருந்தாலும் சிறு பாதிப்பையும் ஏற்படுத்தாது. அது கதையாக மட்டுமே எஞ்சி நிற்கும் என்பது குறித்து ஜி. நாகராஜன் கவனம் கொண்டதே இல்லை. சில கதைகள் அசலாக அமைந்துவிட்டிருப்பது, அப்படி கூடிவந்துவிட்டது என்பது மட்டும்தான். பிறர் சொன்னதையோ கேள்விப்பட்டதையோ தன் அனுபவமாக மாற்றுவது தான் கலை. செயற்கைத் தனம் கலையாகாது. உண்மையில் ஜி. நாகராஜன் கதைகளை இந்த வகையில் சிலர் மிகையாகப் பாராட்டுகிறார்கள் என்பது தெரிகிறது.

இன்று யுவன்சந்திரசேகரன் எழுதும் சிறுகதைக்கு (கதைத் தொகுதி) முன்னோடியாக ஜி. நாகராஜன் ஒரு கதையை எழுதியிருக்கிறார். நன்றாகவும் இருக்கிறது. விசயம் தெரிந்த மனிதருக்கு நட்பு வட்டம் இருக்கும். அவரை நாடி நட்புக் கொள்கிற நண்பர்களும் உண்டு, தயக்கமில்லாமல் தனக்குத்

தோன்றிய கருத்துக்களை, யோசனைகளை, வழிகாட்டல் களை துணிந்து சொல்கிற கதைசொல்லிக்கு நட்பான மூன்று நண்பர்கள் கேட்டு முன்னேற்றுவது பற்றிச் சொல்வதுதான் கதை. கதைசொல்லிக்கு ஒரு சமயம் நெருக்கமாய் இருந்த ஒரு பரத்தை, ஒரு காதலி, ஆன்மிகத்தில் நாட்டம் கொண்ட ஒரு இளைஞன் இவர்களுக்கும், மற்றொரு விதத்தில் இவரது ஆங்கிலப் புலமையில் மோகம் கொண்டு நட்பான இளை ஞன், இவரது யோசனைப்படி பரத்தையையும், இவரது காதலி சினிமாத்துறை நண்பனையும் ஆன்மீக இளைஞன் அரசியலையும் கைப்பற்றுகின்றனர். இவர்கள் யோசனை கேட்டபோது செய்யலாம் என்று சின்னத் தைரியம் மட்டும் தான் சொல்கிறார். அவர்கள் வேறு யாரும் எதிர்பாராத பொருளியல் உச்சத்திற்குச் செல்கின்றனர். உண்மையில் இப்படியான அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் நேர்ந்து விடுவ தும் உண்டு. இப்படியெல்லாம் இருந்து விடுபவர்கள் உயர்ந்து விடுவார்கள் என்று நம்பி அவர் யோசனை சொல் லவில்லை. இரண்டு குழந்தைகளோடு பரத்தைத் தொழில் செய்துவந்தவளை இவனது யோசனையால் திருமணம் செய் தவன் பல தொழில்கள் செய்து தொழில் அதிபராக மாறுகி றான். காதலியைக் கதைசொல்லிக்கு உதவிய ஒரு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் அவனது காதலியைக் கலந்தது தெரி யவர திரைத்துறை நண்பரிடம் சென்று செல்வாக்குப் பெற லாம் என்கிறான். அவளுக்குப் பெரிய யோகம் அடிக்கிறது. ஆன்மிக இளைஞன் அரசியலில் புகுந்து பாராளுமன்ற உறுப்பினரானதோடு கூத்தும் குடியும் அனுபவிக்கிறான். இந்த மூன்று கோணங்களில் சொல்லப்பட்ட கதை 'நான் புரிந்த நற்செயல்கள்' இந்தப் பார்வை உள்ளார்ந்த எள்ள ளோடு நன்றாகக் கூடிவந்திருக்கிறது. பரத்தையைத் திரும ணம் செய்கிற சிஷ்யனின் பகுதி இன்னும் சிறப்பாக இருக் கிறது.

ஜி. நாகராஜனைக் கவனிக்கவைத்தது, கவர்ந்தது, எழுதத் தூண்டியது எல்லாம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக் கம் சார்ந்த வாழ்க்கையையோ மனிதர்களையோ அல்ல. பொதுச் சமூகம் விரும்பும் கௌரவத்திற்கு உரியவர்கள் அல்ல. மதிப்பற்றவர்கள், வெறுக்கப்படுபவர்கள், உதிரிகள் தான். அவர்கள் போக்கிரிகள், அத்தான்கள், பரத்தையர்கள், திருடர்கள், குடிகாரர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், கூட்டிக் கொடுப்பவர்கள், ரவுடிகள், உறவு மீறிய குடும்பப் பெண்கள் முதலியவர்கள். இவர்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. தொழில்கள் இருக்கின்றன. வாழ்க்கை இருக்கின்றன. படுக் கையறைகளில், காவல் நிலையங்களில், முச்சந்திகளில், சாராயக் கடைகளில், பிரத்தியேகமான தெருக்களில், பேருந்து நிறுத்தங்களில் தங்களை வெளிப்படுத்திக் கொள் கின்றனர். நமக்கு சிக்கலாகத் தோன்றும் உறவுகளை எப்படி சாகசமாக நகர்த்துகிறார்கள், பிரச்சனைகளை எப்படி எதிர் கொள்கிறார்கள் என்பதில் ஜி. நாகராஜன் கவனம் கொள்கி றார். அதில் உள்ள மீறல்களையும், பிறழ்வுகளையும், முரட் டுத்தனங்களையும் எழுதுவதில் விருப்பம் கொள்கிறார். கதை களின் வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்படாது உதிரிகள் குறித்து எழுதியிருக்கிறார். இந்த உலகை எழுதுவதில் இருக்கிற ஆர்வம் பிற பகுதிகளில் அதிகம் இல்லை. ஜி.என்-னின் இலக்கிய எல்லை சிறியது. வேறு எல்லைகளில் நின்று எழுத வேண்டும் என்ற பெரிய கனவு அவருக்கு இல்லை.

'மிஸ் பாக்கியம்', 'வாழ்வும் எழுத்தும்', 'நான் புரிந்த நற்செ யல்கள்', 'கல்லூரி முதல்வர் மிஸ் நிர்மலா' இந்தக் கதைகள் பாலியல் மீறல்களைச் சொல்வதற்காக எழுதப்பட்ட கதைக ளாக இருக்கின்றன. இந்த வகையில் பிறழ்வு வாழ்வின் அடி யாழத்தில் நின்று எழுதப்பட்ட உக்கிரமான கதை 'யாரோ முட்டாள் சொன்ன கதை' மட்டுமே இருக்கிறது.

ஒரு சந்தர்ப்பத்தில் பரத்தையோடு தொடர்பிருந்தாலும் அமைதியான ஒரு குடும்ப வாழ்வாக இருக்கவேண்டும் என்று விரும்புகிற மணி, ஜமீன்தார் வாரிசினால் ஏமாற்றப் பட்டு இவனை மணக்கிற பாக்கியம், ரவுடியாகவும் பெரிய புள்ளிகளுக்கு பெண்களை கூட்டிக் கொடுக்கும் பயமறியாத பரமன், தகப்பன் மீது பெரும் பாசம் கொண்ட சிறியவன் அழகர் இவர்களைச் சுற்றி நிகழ்கிறது கதை.

மணியைத் தூக்கி எறிந்துவிட்டு தன் இஷ்டம்போல் இரவில் ஆடவர்களுடன் சல்லாபித்துவிட்டு வருவதை ஒருபோதும் கணவனால் தடுக்க முடியவில்லை. அவளுக்குப் பணத்தைத் திரட்டி ஜமீந்தாரைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காகவும் பாலியல் தொழிலில் ஈடுபடுகிறாள். கணவன் மனைவியின் சண்டையில் இவனுடைய வீட்டைக் கேட்கிறாள். அதற்கு மணி சம்மதித்து வந்தாலும் குழந்தையைத்தர மறுக்கிறாள். எதையும் விட்டுத்தர மறுக்கிற குணம் கொண்டவளான பாக் கியம், அவளைத் தொழிலுக்கு அனுப்பாதே என்று மன்றாடி னாலும் காதில் வாங்காது கூட்டிக் கொடுக்கிற பரமன், இரு வரையும் அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றாலும் அவனால் விலகிச் செல்லவும் முடியவில்லை. பாக்கியத்தின் உடல் வனப்பும் அவள் தரும் காமமும் அவனைக் கிரங்க டிக்கிறது. தூங்கிக்கொண்டிருந்த பரமனை எழுப்பி தன் மனைவி எங்கே என்று கேட்கிறான். பேச்சு வாய்த் தகராறு ஆகிறது. உதை விழுகிறது. மணி ஒரு கணத்தில் பிராந்திப் புட்டியால் தாக்கிக் கழுத்தைக் குத்திக் கொலை செய்யும்படி நேர்கிறது. மனப்பதட்டம் ஆட்டிக்குலைக்கத் தடையங்களை மறைக்க முயல்கிறான். காவலர்களிடமிருந்தும், கல்லெரிபவர் களிடமிருந்தும் தப்பித்து ஓடுகிறான்.

தப்பிக்க நினைத்த பகுதி சோளக்காடாக இல்லை. கண்ணுக் கெட்டிய மட்டும் வயல்வெளி. அதன் ஓரங்களில் தென்னை மரங்கள். மணி சிறுவனாக மாடு மேய்த்த காலத்தில் செய்த ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. அங்கு வந்த பெரிய மனிதருக்கு இளநீர்க் காய்கள் பறித்துப் போட ஏறுகிறான். காற்று வீசுகிறது. மரத்தின் முக்கால் உயரத்திலிருந்து புத்தம் புதிய உலகைக் காண்கிறான். தூரத்தில் நீல வானம், தரை யெங்கும் பசுமை அமைதி கொண்டிருக்கும் வீடுகளின் தோற்றம், வீசும் காற்று இந்த இயற்கையின் பேரெழில் ஒரு நிறைவைத் தக்க வைத்திருப்பதாகக் காண்கிறான். அவ னைப் பிடுங்கி எறிவது போல இப்போது காற்று வீசுகிறது. கையெட்டும்தூரம் வந்தும் இளநீர்க் காய்களைப் பறிக்க முடியாமல் இறங்குவதாகப் படிமத்தோடு கதை முடிகிறது.

இவர்களது வாழ்க்கை எப்போதும் பிரச்சனைகளால் பின்னப் பட்டு இருக்கிறது. எது ஒன்றையும் அவிழ்த்து விடவோ முடித்து விடவோ முடிவதில்லை. பாசத்தாலோ, உடல் தேவையாலோ பேசித் தீர்த்துவிடலாம் - புரிய வைத்துவிட லாம் என்ற நம்பிக்கைகளால் அல்லாடியபடியே அடிவாங்க

நேருகிறது. வாழ்வின் நெருக்கடி கொலையில் கொண்டு போய் நிறுத்துகிறது. அமைதியும் அழகும் தென்றலும் இனிமையும் நிரம்பித் ததும்பும் ஒரு வயல்வெளி போல வாழ்வதற்கு இடமிருந்தும் மனித உறவுகள் சிக்கல் மிக்கதாக இருக்கிறது. வாழ்வின் இனிய சுவையைத் தொட முடியாமலே போய்விடுகிறது. 'யாரோ முட்டாள் சொன்ன கதை' ஜி. நாகராஜனின் சாதனைக் கதை. 'குறத்தி முடுக்கு' குறுநாவலில் ஒரு நிதானமான நகர்வில் பற்பல வாழ்க்கைக் கோலங்களை உண்டாக்கிக் காட்டினார். 'யாரோ முட்டாள் சொன்ன கதை' யில் யாரும் யாருக்கும் கட்டுப்படாத தான்தோன்றித்தனத்தால் விலையும் மோதலும் நிராகரிப்பும் முட்டி மோதிக் கொள்கிற உணர்ச்சிகளும் பிணைந்து சிறப்பாக வெளிப்பட்டிருக்கிறது.

'ஓடிய கால்கள்' கதையில் தப்பிக்க முயன்ற கைதியைக் காவலர்கள் மடக்கிப்பிடித்துத் தண்டிக்கிறார்கள். ஒவ்வொரு காவலரும் தங்கள் பலியுணர்ச்சியை விதவிதமாய்த் தீர்த்துக் கொள்கின்றனர். அவர்களது வக்கிர உணர்வுகளைச் சற்று எள்ளலோடு சொல்லி இருக்கிறார். காவலர்களின் சித்திரவதை வலிதருவதாக உருவாக்கிவிட்டு கைதி பற்றியப் பின்னணி சரியாகக் கூடி வராததால் காவல் நிலையத்தின் கொடுரத்தைச் சொல்வதற்காக மட்டும் எழுதப்பட்ட கதையாக ஆகிவிட்டது. இதே பின்னணியில் எழுதப்பட்ட 'பூவும் சந்தனமும்' கதை காவலர்களின் கீழ்மையைக் கேலியும் கிண்டலுமாகச் சொல்கிறது. ஹார்லிக்ஸ் பாட்டிலுக்காக நெளிவதும், சந்தேகத்தின் பெயரில் பிடித்துவந்த கிழவனுக்குத் தண்ணீர் தராமல் இழுத்தடிப்பதுமான காவலர், தன் மனைவியின் கள்ளத்தொடர்பைக் கண்டுபிடிக்க முடியாதவராக இருக்கிறார். இந்தப் பின்னணி 'ஓடிய கால்கள்' கதையில் கூடி வந்திருந்தால் நல்ல கதையாக ஆகியிருக்கும்.

பிட்பாக்கெட் அடிக்கும் பொறுக்கியாகக், கலகமூட்டுபவனாகக், குடிகாரனாகப், பரத்தையர்களால் விரும்பப்பட்டவனாக இருக்கிற மைலு என்ற மாந்தன் 'இழிந்த சாதி' கதையில் வரு கிறான். அவனைக் கண்ணில்லாத, மூக்கில்லாத, வாயில்லாத ஒரு ஓட்டை மட்டும் முகத்தில் உள்ளவன் துரத்துவதாக வருகிறது. வாசகனாக ஒரு உள்ளார்ந்த அர்த்தத்தை விரித்துக்கொள்ளலாம். வித்தியாசமான கதைபோல வாசிப்பில் தோன்றுகிறது. அவனுக்கு அந்த குரூபி சித்திரம் வருவதற்கான காரணங்கள் ஏதுமில்லை. புதுசாக ஒன்றைச் சொல்கிறார். அது கதைக்குள் பொருந்திவராதபோது பெரிய பாதிப்பை உண்டாக்குவதில்லை.

ஓரளவு கதைமாந்தரை வலுவாகக் காட்டிய கதை 'அப்படி ஒரு காலம் அப்படி ஒரு பிறவி'. ஒரு கொலை நிகழ்ச்சியை வீரதீரத்தோடு காட்சிப்படுத்திய கதை. 'நிலவொளியிலே' வெறும் கொலை நிகழ்ச்சி மட்டும் சிறுகதையாகிவிடாது என்ற புரிதலில் ஜி. நாகராஜன் அக்கதையில் வந்த வெள்ளையன் பாத்திரத்தை மல்லனாகப் பெயர் மாற்றிக் கொலைக்கு முன்னான அவனது செயற்பாடுகளை விஸ்தரித்து, அவன் செய்த கொலைகள், பெண் உறவுகள், சாமியாரின் தோழமை, பெரிய மனிதர்களுடனான பகை என்று பகைப்புலத்தை (பின்னணி) உருவாக்கி கதையை வலுவுள்ளதாக மாற்றியிருக்கிறார். 'நிலவொளியிலே' கதையில் வந்த டீக்கடை நாயர், வெள்ளையனின் மனைவி இவர்களை எல்லாம் நீக்கிவிட்டு அதில் வந்த கருப்பாயியைச் சற்றே வேறுதினுசாக மாற்றி மல்லலின் விட்டேத்தியான ரவுடிப் பாத்திரத்திற்கு வலுவூட்டியிருக்கிறார். இந்தக் கதையை வெறும் ஏய்ப்பு என்று ஜி. நாகராஜன் சுயவிமர்சனம் செய்திருந்தாலும் கதைக்கான உழைப்பைத்தந்து வலுவாக உயர்த்தியிருக்கிறார். மனம் ஒன்றி எழுதப்பட்ட கதைகளில்தான் நுணுக்கங்கள் கூடி வந்திருக்கின்றன. இந்த வேலையை அவரின் பல கதைகள் கோரி நிற்கின்றன. அதனாலே அவரது வெற்றியடைந்த கதைகள் குறைவாகவே இருக்கின்றன.

ஜி. நாகராஜன் மூன்று நான்கு கதைகள் அப்படியே புதுமைப்பித்தனின் கதைகளை இவரது பாணியில் சொல்லியவையாக இருக்கின்றன. 'தீராக்குறை' கதை புதுமைப்பித்தனின் 'நினைவுப்பாதை' கதையாகவும் 'ஜுரம்' கதை 'செல்லம்மாள்' கதையாகவும் இருக்கின்றன. புதுமைப்பித்தன் கதைகளில் உருவாகி வந்த கலை மேன்மை ஜி. நாகராஜன் கதைகளில் கூடிவரவில்லை. 'அங்கும் இங்கும்' கதை கூட புதுமைப்பித்தனின் 'பொய்க்குதிரை' கதையிலிருந்து குழந்தையின்மை என்ற ஏக்கத்தைச் சொல்கிற கதைதான்.

'போலீஸ் உதவி', 'பச்சைக்குதிரை', 'மயக்கம்' அவ்வளவாகப் பொருந்தி வராத திடீர் திருப்பப் பகுதிகளை வைத்துச் செய்யப்பட்ட கதைகள். 'ஆண்டுகள்', 'இருளிலே', 'போலியும் அசலும்' கதைகளில் மனித மனங்களின் கீழ்மையும் உள்ளார்ந்த ஆசைகளையும் சொல்கின்றன. சிறுமையின் சிமிட்டலைக் காட்டுகின்றன. இதற்கு மேல் விசேஷமான கதைகள் என்று சொல்வதற்கு இல்லை.

புதுமைப்பித்தன் வழியே நவீனத்துவம் வந்துவிட்டது என்றாலும் 60-களின் இறுதியில் அது உருவாக்கிய வாழ்க்கை முறை இன்னும் வெளிப்படையாகத் தெரிந்தன. அவை படைப்புகளில் வெளிபட்டன. நம்பிக்கை இழப்பு, லட்சியங்களின் தோல்வி, சுயநலம், அந்நியத் தன்மை போன்ற மனிதர்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள், அரசியல், நீதிமன்றம், கல்வி, மருத்துவம், அலுவலகம் போன்று பல்வேறு நிறுவனங்களில் நுழைந்த சீர்கேடு சர்வதிகாரப் போக்குப் போன்ற பல்வேறு பிரச்சனைகள் வாழ்க்கையில் ஓர் அங்கமாயின. கீழ்மைகளை மக்களும் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டார்கள் இதில் தனி மனித சுதந்திரம், பெண்ணியக் குரல், ஒடுக்கப்பட்டோரின் குரல், என்று வேறு தன்மைகளும் எழுந்தன. மனித சமூகத்தில் மனிதர்களின் இருத்தல் பிரச்சனை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அனுபவங்களை உண்டாக்கின.

பணி சார்ந்து நிலத்தைவிட்டு வெளியேறியது, அலுவலக வேலை என்பது ஒரு குறிக்கோளாக மாறியது, நகரங்கள் பெருகியது, உறவுகள் சிதைந்தது, ஏமாற்றுத் தன்மை குடியேறியது, கட்சி மனப்பான்மை பகைமையை உண்டாக்கியது என்று எத்தனையோ பிரச்சனைகள் மனித மனங்களை வேறு விதமாக மாற்றியிருக்கிறது. படைப்பாளி இவற்றின் ஊடே

உண்மை ஒளி எப்படி இருக்கிறது என்று தேடிப்பார்த்த விளைவுகள்தான் நவீனத்துவப் படைப்புகள். போலிகளும், சுயநலமும், கேடுகளும் நிறைந்த மானிட வீழ்ச்சியைக் கண்டு சொன்னது.

மட்டுமல்லாது டி.எஸ். எலியட், ஜார்ஜ் ஆர்வெல், காஃப்கா, காம்யூ போன்றோரின் எழுத்து முறையில் அவர்களது பார்வையும் தமிழ்ச் சூழலில் பாதிப்பை உண்டாக்கியது. இரண்டு உலகப்போர்கள் மாற்றிய ஐரோப்பிய வாழ்க்கை முறையை அவர்கள் அணுகியதைப்போல தமிழ் சமுதாயத்தையும் அணுக முற்பட்டனர். இந்த மனநிலை ‘கசடதபற’, ‘நடை’ போன்ற இலக்கிய ஏடுகளில் எழுதியவர்களிடமும் வெளிப்பட்டன. தொடர்ந்து மற்றவர்களிடமும் இந்த பாணி நகர்ந்தது. அழுத்தமான எதார்த்தவாதியாக இயங்கிய ஜி. நாகராஜனை இந்தக் காலச்சூழல் நவீனத்துவம் பக்கம் ஈர்த்தது. கண்முன் அந்நியமாகிக் கொண்டிருக்கும் சமூக மனநிலையை அவரது ‘கிழவனின் வருகை’, ‘மனிதன்’, ‘இலட்சியம்’ முதலிய கதைகள் புதிய மொழிநடையில் விமர்சித்தன. ஜி. நாகராஜனுக்கு உரிய விதத்தில் மனிதர்களிடம் தேடிச் சென்ற லட்சியம், வீழ்ச்சியின் பூதாகரமாக மாறிக்கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. இக்கதைகளுக்கு முன்னோடியாகச் சொல்லத்தக்க அவரது மற்றொரு கதை ‘கயிற்று நுனி’. கனவும் ஏமாற்றமும் கூடிக்கலந்த கதை. ஒரு கனமான பின்னணியில் எழுதப்பட்டிருந்தால் முக்கியமான கதையாக மாறியிருக்கும். கணக்கிற்கு 38 கதைகள் எழுதியிருந்தாலும் ஜி. நாகராஜன் ஒரு நல்ல படைப்பாளியாக இனம் காட்டுபவை ‘யாரோ முட்டாள் சொன்ன கதை’, ‘கிழவனின் வருகை’, ‘டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழு வேட்டியும் அணிந்த மனிதர்’, ‘மனிதன்’, ‘இலட்சியம்’, ‘அப்படி ஒரு காலம் அப்படி ஒரு பிறவி’, ‘மோகம்’ இந்த ஏழு கதைகள் மட்டும்தான். ‘குறத்தி முடுக்கு’ குறுநாவலும் ‘நாளை மற்றும் ஒரு நாளே’ நாவலும் அவரை ஒரு இலக்கியவாதியாகக் காட்டுகின்றன. ஒட்டு மொத்தத்தில் அவரது படைப்புகளின் வழி அவரை இலக்கிய பேராளுமை என்று சொல்வதற்கில்லை. பல கதைகள் டுவிஸ்டை வைத்து சமாளிக்கிறார். அதற்கே உரித்தான டுவிஸ்ட் உருவாகும்போதுதான் இலக்கியமாகும். வித்தை இலக்கியமாகாது.

ஜி. நாகராஜன் குடிகாரராகப், பரத்தனாக, உதிரிகளின் நண்பராக, எத்தராக, நோயைப் பெற்றுக்கொண்டவராக இருந்தபடி ஒரு எழுத்தாளர் வாழ்க்கையையும் வாழ்ந்ததில் உள்ள கவர்ச்சி, அவரது எழுத்துப் பணியை மீறிப் பேச வைத்தது. அவர் தன் எழுத்தில் காட்டிய அத்தனையும் மனிதர்களை விட வெறுக்கப்படும் வாழ்வை ஏற்றுக்கொண்டவராக திரிந்திருக்கிறார். அவரது தனிப்பட்ட வாழ்க்கை வாசகர்களுக்கு துணிச்சல் மிக்கதாக இருக்கிறது. எனக்கும்தான். அது படைப்பை அளவிடும் தகுதியாக ஆகிவிடாது. அவர் படைத்திருக்கும் படைப்புகளின் வீரியமும் தரமும்தான் இலக்கியப் பணியை முக்கியத்துவத்தை உண்டாக்கும். ஒரு படைப்பாளியாக ஜி. நாகராஜன் எல்லை குறிப்பிட்ட சிறு பகுதியைச் சார்ந்து. வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ பிரச்சனைகள் எட்டுத்திக்குமிருந்தும் நம்மை நெருங்குகின்றன. சில அழகிய கோலங்கள் தொட்டுச் செல்கின்றன. அரிதான வெளிச்சம் நமக்குள்ளும் பிறரிடமும் கிட்டுகின்றன. மர்மங்கள் சில சமயம் துலங்குகின்றன. இப்படியான பரந்து பட்ட வாழ்க்கைச் சித்திரங்கள் ஜி. நாகராஜன் படைப்புலகில் இல்லை. கவித்துகணங்கள் படைப்பில் கூடிவரவேயில்லை. இவ்வுலகிலும் எச்சூழலிலும் அது மேலெழுந்து வரக்கூடியதே. அப்படியான படைப்பாற்றலைக் கொண்டவரில்லை.

இன்று காலையில் ஒரு காட்சி. உக்கடம் பேருந்து நிறுத்தத்தில் நான் சென்ற வண்டி நிற்கிறது. முழுமையாக முடிக்கப்படாத மேம்பாலத்திற்கு அடியில் ஒரு பெண் ஒரு மனிதனை அணைத்திருக்கிறாள். அவரும் அணைத்திருக்கிறார். காதல் மிதமிஞ்சிச் சாலைக்கு வந்துவிட்டது. சட்டென ஏதோ பழைய காதலர்கள் சந்தித்ததுபோல சந்தித்துக்கொண்டு பிரிக்கமுடியாதபடி தழுவியபடி நிற்கின்றனர். இது என்ன பாரிஸ் மாநகரமா என்று தோன்றியது. உற்றுக் கவனித்தால் அவர்கள் காலடியில் இரண்டு மஞ்சள் நிறக் கட்டைப்பைகள் இருக்கின்றன. அங்கும் இங்கும் மனிதர்கள் நகர்ந்தபடி இருக்கிறார்கள். அந்த மனிதரின் நெற்றியில் திருநீறு துலங்குகிறது. 45 வயது இருக்கும் அவர் அணைத்தபடி பெண்ணின் முதுகைத் தட்டுகிறார். காதலர்கள் இல்லை கணவன் மனைவிதான். அந்தப் பெண்மணி அவரைவிட இரண்டு இன்ஞ் உயரம் தான். வயது 39, 40 இருக்கலாம். நின்றபடி அவர் தோளில் சாய்ந்து அணைத்து இருக்கிறாள். ஏதோ மயக்கம் போல அல்லது படபடப்பா என்று தெரியவில்லை. தன் கைகுட்டையால் அவளது முகத்தைத் துடைக்கிறார். அவர்களைக் கடந்த ஒரு கிழவி அந்தக் கட்டைப்பையைத் தூக்கி இன்னும் ஓரமாக வைக்கிறார். இப்போது அந்தப் பெண் மெல்லத் தலையைத் தூக்கிப் பார்க்கிறாள். மாநிறம் கதிகலங்கிய முகம் தெரிகிறது. அவர் நின்றபடி பெண்ணின் முதுகைத் தட்டி ஆறுதல் படுத்துகிறார். நான் பயணிக்கும் வண்டி நகர்ந்துவிட்டது. அந்தத் தம்பதிகள் எத்தனையோ சண்டைகள் போட்டிருக்கலாம். ஒரு சமயம் பிரிந்து செல்லக் கூட நினைத்திருக்கலாம். இந்தக் கணம் மனைவி அவனை அணைத்திருக்கிறாள். அணைத்ததிற்குக் கணவன் பயப்படாதே என்று தாங்கிக்கொண்டிருந்த காட்சி ஏன் என் கண்ணில் பட்டது, போகட்டும்.

அவரது நாடோடித் தன்மையால் மிகையாகப் புகழப்படுகிறார். மகத்தான இலக்கியப் பணியிலிருந்து இனம்கண்டு கொண்டாடுவது எதிர்கால இலக்கிய வளத்திற்குச் சிறப்பு சேர்க்கும். பிற எழுத்தாளர் வாழத்துணியாத வாழ்க்கையின் சகல துன்பங்களையும், அவமானங்களையும், சிறுமைகளையும் ஏற்றார். புரிந்துகொள்ளப்படாத மனிதர் அல்ல அவர். அவருக்குரிய வாய்ப்பைத் தர மறுத்த சமுதாயம் இது. நியாயமாகக் கிடைத்திருக்குமானால் இந்தத் வொண்ணாந்தித் தனத்திற்குள் விழுந்திருக்கமாட்டார். இதைவிட சிறப்பான வகையில் பங்களிப்பு செய்திருப்பார். இந்தச் சமூகமும் உறவுகளும் நண்பர்களும் கொஞ்சம் கருணை காட்டியிருக்கலாம். பாரதிக்கும், புதுமைப்பித்தனுக்கும் இரங்காத சமூகமா ஜி. நாகராஜனுக்கு இரங்கும்!

வாழ்க தமிழ்நாடு.



venugopal@thaiveedu.com

# மிக உள்ளக விசாரணை நமது மனசாட்சியின் விசாரணை

**- காஞ்சனா ப்ரியகாந்த்**

**தமிழில் : ஜி.ஃப்ரி ஹாசன்**

நான் திரைப்படங்கள் பற்றி குறிப்புகள் எழுதுகின்ற போதிலும் இந்த ஆண்டு நான் படிக்கும் ஒவ்வொரு புத்தகத்தைப் பற்றியும் குறிப்பெழுத நேரம் கிடைப்பது கடினம் என்பதால் வாசிக்கும் எந்தப் புத்தகம் பற்றியும் குறிப்புகள் எழுதுவதில்லை என்று நினைத்திருந்தேன். ஆனாலும் 'மிக உள்ளக விசாரணை' நமது மனசாட்சி பற்றியதுமான விசாரணையாக இருப்பதாக நான் நினைத்ததனால், தம்பி ஜெகனின் 'அக்கா



இந்தப் புத்தகத்தைப் பற்றி ஏதாவது எழுதவேண்டும்' என்ற வேண்டுகோளை நிறைவேற்ற நினைத்தேன்.

போர் பற்றி எனக்குத் தொலைதூர நினைவுகள் மட்டுமே உள்ளன. துருவித்துருவிப் பார்க்க வேண்டிய பைகள் பாடசாலைகளுக்குள் கொண்டு வரப்படவுள்ளதாகச் சொல்லல், தலைநகரக் குண்டுவெடிப்புகள், அங்கு நிகழும் அதனோடு தொடர்புடைய மரணங்கள், அதனோடு தொடர்புடைய அச்சங்கள், தினசரி செய்திகளில் வரும் போர் இறப்புகள் மற்றும் மற்றவர்களிடமிருந்து விலகி இருப்பதன் வலி போன்றவையே என் நினைவில் உள்ளன. யுத்தத்தின் முடிவு தெற்கில் பெரும்பாலானவர்களுக்குக் கசப்பான ஞாபகங்களிலிருந்து தூரமாவதற்கு வழிவகுத்ததென்பதையும் இங்கு நான் ஏற்றுக் கொள்கிறேன்.

நான் தரம் 10-ல் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது கொழும்பு விஷாகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான சிறுகதைப் போட்டிக்குச் 'சமாதானத்தின் நினைவுச்சின்னம்' என்ற சிறுகதையை வழங்கியிருந்தேன். கவிந்து துனுகேபொத மற்றும் விஜேந்திர விஸ்வநாதன் ஆகிய இரு நண்பர்கள் இதன் முக்கிய கதாபாத்திரங்கள். துனுகேபொத ஒரு மருத்துவர். விஜேந்திர விஸ்வநாதன் ஒரு புலிப் போராளி. கதையின் முடிவில், விஸ்வா தன் குழந்தையைக் கவிந்துவிடம் ஒப்படைக்கிறார். வடக்கில் பணிபுரிந்த கவிந்து அந்தச் சிறுவனைத் தன் குழந்தையாக ஏற்றுச் சிங்களப் பெயரில் ஊருக்குக் கொண்டு வருவதோடு கதை முடிகிறது. அந்தச் சிறுகதைதான் நான் சிறுகதைப் போட்டிக்குச் சமர்ப்பித்த முதல் கதை, போட்டியில் அந்தக் கதைக்கே முதலிடம் கிடைத்தது. அதுவே சிறுகதைத் துறையில் நான் தொடர்ந்து இயங்கப் பெரும் தூண்டுதலாக இருந்தது.

'மிக உள்ளக விசாரணையை' நான் முதன் முறையாகப் படித்தது கடந்த வருடத்தில். இரண்டாவது வாசிப்பு இந்த மாதத்தில் ஒரு நாள் நடந்தது, அதன் மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு இப்படி அமைந்திருந்தது:

'சிங்களம் எழுதத் தெரியாததால் தாங்கள் படும் சிரமங்களைத் தங்களது பிள்ளைகளும் சந்திக்கக் கூடாது என்று எண்ணி, தனது மூன்று பிள்ளைகளையும் சிங்கள மொழியில் படிக்க வைக்க நடவடிக்கை எடுத்து, பாடசாலையில் நாங்கள் தமிழரென இகழ்ச்சிக்கு உள்ளாகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, நெற்றியில் துலங்கிய குங்குமப் பொட்டை அகற்றிவிட்டு, சாரிக்குப் பதிலாக சாயாவும் சட்டையும் மாற்றிக் கொண்டு, தமக்கு பழக்கமான தமிழ்மொழியைக் கைவிட்டு எப்பொழுதும் எங்களோடு சிங்களத்தில் கதைக்கும் எனது அம்மாவுக்கு நன்றி தெரிவிக்க இதனைச் சந்தர்ப்பமாக்கிக் கொண்டேன்.

நீ ஏன் சிங்களம் படித்தாய்? அம்மா சிங்களமா? அப்பா சிங்களமா?

இந்த மூன்று கேள்விகளுக்கும் பதிலளிப்பதில் நான் ஏற்க

னவே சோர்வாக இருக்கிறேன். இன்னமும் அத்தகைய கேள் விகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நான்,
ஜெகன் கணேசன்.

என் அம்மா சில காரணங்களால் திலகத்தைத் தொடர்ந்து வைத்திருந்தார். அதனால் பலர் என்னைத் தமிழன் என்று



நினைத்தார்கள். நான் சிறுவயதில் இருந்தே என்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை, அதனால் அவர்கள் விரும்புவதை நினைக்க இடமளிக்கிறேன். நான் வாழும் சமூகத்தில் தமிழனாக இருப்பதில் நான் எந்த வேறுபாட்டையும் உணரவில்லை, ஏனென்றால் நான் உண்மையில் தமிழன் இல்லை அல்லது சிங்களம் மட்டும் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கல்வி சீர்திருத்தங்களின் விளைவாக எனக்குச் சிங்களம் நன்றாகத் தெரியும் என்பதால் இருக்கலாம்.

தமது தாய்மொழி அல்லாத மற்ற அரசகருமமொழியை ஒரு தரப்பினருக்கு மட்டும் கற்றுக்கொள்ள நேரும்போது அவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கெதிரான குரலாக நான் ஜிஃப்ரி ஹாசனின் 'மே புதுன்கே தேசய' என்ற கதையைப் பார்க்கிறேன். கதையில் ஓரிடத்தில், 'ஹாமதுரு வன்னே, ஏன் சிங்களவர்கள் தமிழ் கற்றுக்கொள்ள விரும்புவதில்லை? நீங்கள் கூட என்னிடம் ஒரு தமிழ்ச் சொல்லையேனும் கற்றுக்கொள்ளவில்லையே...'

2000-ம் ஆண்டு முதல் தரம் 1-ல் இருந்து தரம் 9 வரை சிங்கள மொழிமூலப் பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பிப்பது கட்டாயமாக்கப்பட்டதானது நீண்ட கால இடைவெளியைக் குறைக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட ஒரு முக்கியமான முடிவு என்று நான் நம்புகிறேன்.

மொழி தொடர்பான பல அரசியல் முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் இருந்தாலும், மொழி பற்றிய எனது தனிப்பட்ட கருத்துக்களையும் முன்வைக்க விரும்புகிறேன். மொழிகளின் அசல் உரிமையாளர்கள் யாராக இருந்தாலும், ஒரு நபர் மூன்று அல்லது நான்கு மொழிகள் அறிந்தவராக இருப்பது இன்றைய சமுதாயத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும். அரசாங்கத்தின் தலையீடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் மட்டுமன்றி சீன மொழியையும் கற்றுக்கொள்வது எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஜிஃப்ரி மொத்தக் கதையையும் மிகவும் சுவாரஸ்யமாக முன்வைக்கிறார். மொழிப்பிரச்சனையினால் வடக்குக், கிழக்குக் குடிமகன் ஒருவர் எதிர்நோக்கும் தொல்லைகள், துன்புறுத்தல்களைக் கிண்டலாக முன்வைக்கிறார்.

'சிங்கள ஊருக்கு வெள்ளாம வெட்ட எங்கட ஊர்ல இருந்து ஒரு கூட்டம் போயிருக்கு. ஒத்தருக்கும் சிங்களம் தெரியா. வயல் முதலாளிட பொஞ்சாதி இவங்களுக்குக் கிரிபத் செஞ்சி கொடுத்திருக்கா. கிரிபத்துக்குத் தமிழ்ல புக்க என்று சொல்ற. ஆனால் சிங்களத்தில அதுக்கு வேற கருத்து. இவங்க புக்கயத் திண்டிட்டு அக்காட புக்க கொந்தாய் என்று சந்தோசத்தில சொல்லியிருக்காங்க. இதக் கேட்ட மனிசி மண்வெட்டியால எல்லோரையும் ஓடஓட அடிச்சிருக்கு'.

மம்மலி கூறிய சம்பவங்கள் ஆரியதம்மாவுக்கு சிரிப்பாக இருந்தது. ஆனால் மம்மலிச் சம்பவங்களைக் கூறிச் சில வினாடிகளுக்குப் பின்னரே ஆரியதம்மாவால் சிரிக்க முடிந்தது. மம்மலியின் சிங்களம் உடனடியாக ஆரியதம்மாவுக்கு விளங்காததே அதுக்குக் காரணமாகும்.'

சயந்தன் எழுதிய பூரணம் சிறுகதை நான் உணர்ந்த நல்ல சிறுகதை என்றே சொல்ல வேண்டும். போரினால் இடம்பெயர்ந்த இளம்பெண்ணின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பல்வேறு இலக்கிய உத்திகள் மூலம் உணர்வுபூர்வமாக வாசகருக்கு முன்வைத்திருக்கிறார்.

'ஐயா, நான் இப்போது கர்ப்பமாக இருக்கிறேன்... இவர் என் கணவர்... முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்... எங்களுக்குத் திருமணமாகி ஆறு மாதங்களாகிறது... விமானத் தாக்குதலில் செத்து விட்டார்... முதலில் அவரைப் பற்றி சொல்லவே பயமாக இருந்தது... மன்னிக்கவும்...'

அவள் வேகமாகச் சொல்லிக் கொண்டு போனாள். நடுங்கிக் கொண்டிருந்த அவள் மெல்ல மெல்ல மீண்டு வந்தாள். இராணுவ அதிகாரி விளக்கம் எழுதுவதற்காக ஒரு காகிதத்தை நீட்டினான். கதீர் பூரணம் கிழவியைக் கட்டியணைத்துக் கொண்டிருந்த புகைப்படத்தையும் கேட்டு எடுத்துக் கொண்டான். ஐந்து நாட்கள் கடந்திருந்தன. ராணுவ அதிகாரி பூரணம் ஆச்சியுடன் கூடாரத்திற்கு வந்தான்...'

மிக உள்ளக விசாரணைத் தொகுப்பிலுள்ள சிறுகதைகளில் என்னை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய சிறுகதைகள் என்றால் ஷோபா சக்தியின் மிக உள்ளக விசாரணை, அனோஜன் பாலகிருஷ்ணனின் யானை மற்றும் ஜெயகுமாரனின் தூங்கும் நிலத்தில் கடவுள் ஆகிய கதைகளைச் சொல்வேன். நீங்கள் அதைப் படிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதனால் நான் அதை இங்கே மேற்கோள் காட்ட விரும்பவில்லை.

மகிழ்ச்சி, வளர்ச்சி, சுதந்திரம் போன்றவை புதிய கட்டடங்கள், நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளுக்கு அப்பாற்பட்டவை ஆகும். நாம் எப்போதும் நமது காயங்களை மட்டுமே பார்க்கிறோம். மற்றவர்களின் காயம் எவ்வளவு ஆழமானது என்பதைத் தென்னிலங்கையிலுள்ள பலருக்கு முன்னரே அறிய வாய்ப்புக் கிடைத்திருந்தால் அவர்களில் பலரின் கடந்த கால வாசகங்கள் மற்றும் வாசிப்புகளில் மாற்றம் நிகழ்ந்திருக்கும் என நினைக்கிறேன். காயத்தின் வலியை காயம்பட்டவர்களால் அல்லது ஏற்கனவே காயத்தின் வலியை உணர்ந்தவர்களால் மட்டுமே உணர முடிகிறது.

ஜெகன் கணேசன் இந்தச் சிறுகதைத் தொகுப்பைச் சிங்களத்தில் மொழிபெயர்த்திருப்பதை மிகப் பயனுள்ள பணியாகக் கருதுகிறேன். உலகெங்கிலுமுள்ள எழுத்தாளர்களின் படைப்புகளைச் சிங்களத்தில் மொழிபெயர்க்கிறோம். ஆனால் அரசியல் மற்றும் அரசியல் சாராத காரணங்களுக்காக எங்கள் நெருங்கிய சகோதரனைப் படிக்கத் தவறிவிட்டோம். சரத் ஆனந்த, அனுஷா சிவலிங்கம், ரிஷான் ஷெரிப், பிரிய தர்ஷனி செல்வராஜ், சாமிநாதன் விமல் போன்ற எழுத்தாளர்கள் அவ்வப்போது தலையிட்டு அந்த இடைவெளியை நிரப்பி இருந்தனர். ஜெகன் கணேசன் தனது மொழியினாலும் மொழிப்பெயர்ப்பினாலும் அந்தப் பணியை வெற்றிகரமாக முன்னெடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

மீண்டும் நான் பத்து வயதில் எழுதிய எனது வெற்றிச் சிறுகதைக்குத் திரும்புகிறேன். தென்னிலங்கையைச் சேர்ந்த பதினைந்து வயதுச் சிறுவன் போரின் போது தமிழ் சகோதரத்துவத்தை ஏற்றுக்கொண்டான். அவனும் தன் சொந்தக்காரன் என்று நினைத்தான். ஒரு குழந்தை தவறு செய்யலாம். அது குழந்தை என்பதால். அந்தக் கதையில் அன்று விஸ்வநாதனின் பிள்ளையின் பாதுகாப்புக்காகவே அதற்குச் சிங்களப் பெயரைச் சூட்ட வேண்டிய தேவை கவிந்துவுக்கு ஏற்பட்டது. ஒரு நாட்டின் இலக்கியப் படைப்பு அது உருவாகும் போது அந்நாட்டில் நிலவும் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார அம்சங்களைப் பிரதிபலிக்கிறது.

வளர்ந்தவர்கள் என்றவகையில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. அதாவது, ஒரு மனிதர் இன்னொரு மனிதருக்கு எதிராகச் செய்யக்கூடிய மிகக் கடுமையான குற்றம், அவர்களின் அடையாளத்தை அழிப்பது அல்லது அவரது விருப்பமின்றி அதனைச் செய்ய வற்புறுத்துவது. ஒரு நாட்டில் அரசு அல்லது மதத்தின் தலையீட்டால் இது நிகழும் போது, குற்றம் மேலும் தீவிரமடைகிறது.

இன்று எங்களுக்கு விஸ்வநாதனின் பிள்ளையை, விஸ்வநாதனின் பிள்ளை என்று ஏற்றுக் கொள்வதற்கும், அவனுக்கு இந்த நாட்டின் எந்த இடத்திலும் சகல உரிமைகளையும் சுதந்திரமாக அனுபவிப்பதற்கான உரிமை உண்டென்பதையும் ஏற்றுக் கொள்ள முடியுமாக இருக்க வேண்டும். அதைத்தான் அவர்கள் உண்மையில் விரும்புகிறார்கள். இது நம்மனைவருக்கும் பொதுவான ஒரு தத்துவமாகும். கவனிப்புக்குஉள்ளாக வேண்டும் என்பதற்காகச் சுய அடையாளங்களை மாற்றிக் கொள்வதை எங்களைப் போலவே மற்றவர்களும் விரும்புவதில்லை என்பதை, அடுத்தவரின் சப்பாத்தை அணிந்து கொள்ள நேரும் வேளையில் உங்களால் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சுவாரஸ்யத்துக்கு அப்பால் பரஸ்பரப் புரிதலுக்கான அணுகுமுறைக்காக இந்த மொழிபெயர்ப்பை நீங்கள் படிக்க வேண்டும் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்.



jiffry.hassan@thaiveedu.com









# மட்டக்களப்பு பாடும் மீன் புதிர்

- வண. ஃபிரா. ஜே.டபிள்யூ. லங்கே, எஸ்.ஜே

தமிழில் : சா. திருவேணிசங்கமம்



**இக்கட்டுரை மட்டக்களப்பு பாடும் மீன் புதிரை துப்புத்துலக்க முனைகிறது. மீன் பாடுகிறது என்று பொதுவாக கூறினாலும் இதுவரை அது ஐயத்துக்கிடமில்லாத வகையில் நிருபிக்கப்படவில்லை. இயற்கையாக பாடுமீன் வாழிடத்தை செயற்கையாக உருவாக்கி பரிசிக்க முடியாமல் இருப்பதே இதற்கான முழுமுதல் காரணம் என்று மீனியலாளர்கள் கூறுகின்றனர். ஆயினும் மீன் அல்லது ஊரி வகைகளிலொன்றே இந்த இசையை எழுப்புகின்றது என்பது பலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஊகமாகும் என்ற கருத்தை முன்வைக்கும் இக்கட்டுரை Journal of Ceylon Branch of Royal Asiatic Society என்ற பிரபல பருவ இதழில் 1953-ஆம் ஆண்டில் வெளிவந்தது. பல்லாண்டுகள் பாடும் மீன் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த இக்கட்டுரை ஆசிரியர் 1960 ஆண்டுவாக்கில் முதன்முதலாக அதை ஒலிப்பதிவு செய்து உலகுக்கு வெளிப்படுத்தினார்.**

பாடும் மீன் என்றால் என்ன? நிஜமாகவும் புனைவாகவும் மாறி மாறி தோற்றம் தரும் இதன் மர்மம் என்ன? கிழக்கு கரைக்கு வந்தவர்கள் கட்டிவிட்ட கதையா இது? இது எதுவாக இருந்தபோதிலும் மட்டக்களப்புக்கு வருபவர்களில் பாதி நம்புபவர்களாகவும் பாதி நம்பாதவர்களாகவும் உள்ளனர்.

உல்லாசப் பயணிகளை மட்டக்களப்பை நோக்கி ஈர்க்கும் விடயங்களில் ஒன்றாக இது உள்ளது. இந்த இசையை கேட்காது விட்டால் பயணிகள் தமது பயணம் நிறைவடைந்தது என்று திருப்தியடையமாட்டார்கள். பலர் காதார இதை கேட்டுள்ளனர் என்பது உண்மையாகும்.

உள்ளூர் மக்களைப் பொறுத்தவரை இந்த இசையொலி மிகவும் அறியப்பட்ட ஒன்றாகும். இரவு மீன் பிடிக்கு செல்லும் மீனவர்களுக்கு மிகவும் பரிச்சியமான ஒலியாகும் இது. அவர்கள் மிகவும் விருப்பத்துடன் பார்வையாளர்களை அழைத்து சென்று மீன் பாடும் இடங்களை காட்டுவார்கள். சில வேளைகளில் மீன்கள் பாடாத சந்தர்ப்பங்களில் சிறிது மனவருத்தத்துடன் உதட்டை பிதுக்கத்தான் அவர்களால் முடியும்.

எனக்கு மீன் பாடுவது பற்றி எந்த புராதன தமிழ், சிங்கள இலக்கிய சான்றுகளும் கிடைக்கவில்லை. அதனால் பன்னெடுங் காலத்துக்கு முன்பிருந்தே மீன் பாடுவது இருந்து வந்தாலும் அது பற்றிய இலக்கிய ஆதாரங்கள் இல்லை. ஆயினும் சேர் ஜேம்ஸ் எமர்சன் ரென்னற் இந்த இசையொலி பற்றி குறிப்பிட்டுள்ளார். (Vol.11,pp.468 ff.passim) இதைவிட சி. டிபேர்க் என்பவரால் எழுதப்பெற்ற சிறு குறிப்பொன்று Spolia Zeylanica-வின் பழைய பிரதியில் - 1908 ஆண்டுக்குரிய பிரதி ஒன்றில் உள்ளது.

இந்த ஒலியை தூரத்தே இருக்கும் பழைய கார் ஒன்றின் ஊது குழல் சத்தத்துடன் ஒப்பிடுதல் சரியானதாக தோன்றுகிறது. டிபேர்க் அதன் இடைவெளியை குறிப்பிடாமல் உச்சஸ் தாயியை மாத்திரம் குறிப்பிடுகிறார். ஆனால் ஓர் இசையாசிரியர் அதை ஐந்துக்கும் எட்டுக்கும் இடையில் உள்ளதாக குறிப்பிடுவார்.

மட்டக்களப்புக்குச் சென்ற - மைக்கேல் கல்லூரியில் இருந்த பழைய ஃபிரெஞ்சு மிசனறிகள் அங்கே பல இடங்களில் நாற்பது வருடங்களாக மிசன் பணிகளை ஆரம்பித்து செய்து வந்தனர். அவர்களுக்கு இந்த பாடும் மீன் புதிர் நன்கு பரிச்சயமான ஒன்றாக இருந்துள்ளது. பயிற்றப்பட்ட விஞ்ஞானியான ஃபிரா. ஃபெடினன்ற் பொன்னல், பயிற்றப்பட்ட இசை-ஞரான ஃபிரா. அல்பொன்ஸ் ரிச்சர்ட் ஆகியவர்கள் இது பற்றி பல பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர். (இன்னொரு மிசனறியான ஃபிரா. ஆதுர் றோதன் பியூஸ் இந்த பாடும் மீன் இசையை கவிதையில் வடித்துள்ளார். உதாரணத்துக்கு ஒரு வரி வருமாறு:

*Quel estrange concert nocturne*
*qui s'eleve du fond de l'eau,*
*ou le poiss si taciturne*
*chante a la lune un chant nouveau*

ஒரு முப்பது வருடங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த கிறின் என்ற தோட்டக்காரர் மட்டக்களப்புக்கும் கல்முனைக்குமிடையே ஒரு இயந்திர படகு சேவையை ஆரம்பித்து வைத்தார். பாடும் மீன் புதிரை நன்கு அறிந்திருந்த

அந்த கனவான் அது பற்றிய பூரணமான கையேடு ஒன்றை எழுதினார். துரதிஷ்டவசமாக இந்த சின்ன கையேடு எங்கோ தொலைந்துவிட்டது. எனது ஞாபகம் சரியென்றால் என் னென்ன சூழ்நிலையில் இந்த இசையொலி கேட்கும் என்ப தையும் இரவில் மாத்திரமல்ல பகலிலும் தனது இயந்திர பட கின் உலோக அடிப்பாகத்திலிருந்தும் தான் இதைக் கேட்ட தாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இரவில் மாத்திரமல்ல மாலையிலும் விடிகாலையிலும் இன்னும் மப்பு மந்தாரமாக இருக்கும் பகல் வேளையிலும் இந்த ஒலியை கேட்கலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியுயோர்க் மாநகரில் உள்ள இயற்கை வரலாறு பற்றிய அமெரிக்க (மீன்கள் பற்றிய பிரிவில்) நூதனசாலையில் காப் பாளராக இருக்கும் ஜே.எஸ். நிக்கொல் இந்த வாவிக்கு வந்து மீன்கள் பாடும் ஒலியை கேட்டார். அவர் அவைக ளுக்கு மேல் வலையை வீசிய போது அவருக்கு கௌபிஸ் எனப்படும் ஒரு வகை மீன்கள் அகப்பட்டன. அவையும் ஒலி-யெழுப்பும் மீன்கள்தான். ஆனால் அந்த ஒலி வெறும் பல்லை நறுவும் ஒலியாகும். இசையொலியல்ல. அதனால் நிக்கொல் இசையொலி மீன்கள் எழுப்புவதன்று, நீர் ஓடும் வேகத்தால் ஏற்படுவதாகும் என்ற முடிவுக்கு வந்தார்.

வாவி பிரபலமில்லாத பழங்காலத்திலிருந்து நவீன காலம் வரை இதைப் பற்றி பலரும் எழுதி வருகிறார்கள். அவை ஒரு அலுமாரியில் அடுக்கி வைக்கக்கூடிய அளவு அதிகமா னது.

## பதிவுகள்:

இது மீன் பாடும் இசையாகவோ வேறு எதுவாகவோ இருந்த போதிலும், இதை பதிந்து வைத்தல் அவசியமானது. அது அதன் இருப்பை காட்டும் அடையாளமாக இருக்கிறது. முத லாவதாக இந்த இசை நீரின் மேற்பரப்பில் இருந்து எந்த உபகரணமும் இன்றி காதால் கேட்டு மனதில் பதிந்து கொள் ளக்கூடியது. அடுத்ததாக நீருக்குள் வீட்டில் செய்யப்பட்ட ஹைட்ரோஃபோனைக் (நீர்க் கீழ் மைக்ரோஃபோன்) கொண் டும் பதிந்து கொள்ளலாம். நான் எனது ஹைட்ரோஃபோனை கல்லடி பாலத்திலிருந்து நீருக்குள் விட்டு மீன் ஒலியை பதிவு செய்தேன். இதை பின்னர் ஒலிபெருக்கியால் பெரு தாக்கி கொண்டேன். நாங்கள் பாவித்த ஹைட்ரோஃபோன் கொஞ்சம் நயமற்ற ஒன்றாகும். அதனால் ரான்ஸ்போமர், ஒலிபெருக்கி சத்தம் என்பன பதிவுக்கு இடையூறாக இருந் தன என்பதையும் சொல்லியாக வேண்டும்.

எங்களுடைய அமெரிக்க மதகுரு ஒருவரின் தாயாரான திரு-மதி ஐ. டெல். மார்மோல் என்ற இசையாசிரியர், எழுதி வைத்த குறிப்புகள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன. இந்த மீன் ஒலியில் மெல்லிசை மாத்திரமல்லாமல் ஒத்திசைவும் அடங்கியிருப்பது கண்டு அவர் ஆச்சரியப்பட்டார். யாராவது இசைஞரால் இந்தப் பதிவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டால் மேற்கூறிய செய்திகளின் உண்மை வெளிப்படும்.

## கேட்கும் நிலைமைகள்:

இந்த ஒலியின் இயல்பு மற்றும் மூலம் ஆகியவற்றை விளக் குவற்கு முதல், இதனுடைய கேட்கும் இயல்புகளை பற்றி சில சொற்கள் சொல்வது அவசியமானது. மட்டக்களப்பு வாழ்பவர்கள் புதிரான இந்த மீன் இசையை பற்றி நன்கு அறிந்து வைத்துள்ளனர். ஆயினும் அவர்களின் அறிவு இசை எழும் சூழ்நிலையை பொறுத்து மட்டுப்பட்டுள்ளது.

இந்த இசையை கேட்கக்கூடிய நிலைமைகள் எவை? முதலா வதாக கேட்கும் நேரம் இரவாக இருக்க வேண்டும். பகலில் எழுகிற ஓசைகளெல்லாம் அடங்கி இருக்க வேண்டும். இரண் டாவதாக இசையை கேட்க விரும்புகிறவர் ஒரு படகில் ஏறி வாவியின் மத்திக்கு - அங்கே பல மீன்பாடும் மையங்கள் உள்ளன - (அவற்றை சேர் ஜேம்ஸ் எமர்சன் ரென்னற் விப ரித்துள்ளார்) அங்கு செல்லுதல் வேண்டும். மூன்றாவதாக நீரோட்டமில்லாமல், அலையடிக்காமல் வாவி அமைதியாக இருக்க வேண்டும். கடைசியாக நிலாக்காலமாக இருந்தால் நல்லது. நிலாக்காலமாக இல்லாவிட்டாலும் இசையொலி கேட்கும், மற்ற நிலைமைகளோடு வாவியின் ஆழமான (அவ் வாறான ஆழம் முப்பது அடியாகும் என்று கணக்கிடப்பட் டுள்ளது) இடத்திற்கு போனால் நல்லது.

என்னுடைய சொந்த அநுபவத்தின்படி நீரில் முக்குளிப்பவர் களுக்கு குறைந்தது தனது தலையை நீரில் அமிழ்த்தி இருப்பவர்களுக்கு தவறாமல் இசையொலி கேட்கும். அவ் வாறு கேட்டால் அவ்விசை சகல ஒத்திசைவுடன் ஒலிப்பது ஆச்சரியமாக இருக்கும்.

## இந்த தோற்றத்தை எவ்வாறு விளக்கலாம்?

- உள்ளூர் மக்கள் இதைப் பற்றி என்ன சொல்கிறார்கள்? எல்லாவற்றையும் விட சதா இதனோடு சம்பந்தப்பட்டிருக் கும் உள்ளூர் மீனவர்களின் அவதானிப்பு என்ன? இந்த மர்மமான ஒலி பற்றி எந்த மூடநம்பிக்கையும் உருவாக வில்லை. ஆனால் இவ்வாறான தோற்றம் நிலவும் சையா மில் மீன் பாடுவதை பயபக்தியுடன் நோக்கி பல கதை களை புனைந்துள்ளனர். இதைப் பற்றி மேலும் அறிய - பார்க்க: Journal of the Siamese Society of Natural History (Supplement7,(i),1927,pp.49-54)

மட்டக்களப்பில் வாழும் உள்ளூர் மக்கள் சிலரோடு நான் பேசிய போது அவர்கள் ஊரி என்னும் ஒடு கொண்ட சிறிய நீர்வாழ் உயிரியால் இந்த இசை எழுப்பப்படுகிறதென்று கூறினர். சேர் ஜேம்ஸ் எமர்சன் ரென்னற்றும் அதையே குறிப் பிட்டுள்ளார். அவர்கள் ஓடு கொண்ட சிறிய ஊரியை குறிப் பிடுகிறார்களா சத்தம் போடும் சிறிய நண்டை குறிப்பிடுகி றார்களா என்பது தெரியவில்லை. ஆயினும் இப்படி ஒரு வகை நண்டை யாரும் வாவியில் காண்டதுமில்லை. அவை இசையெழுப்ப வல்லன என்று யாரும் குறிப்பிட்டதுமில்லை. ஆயினும் ஊரிக்கு எதிராக பல வாதங்கள் எழுப்பப்படுகின் றன. முதலாவதாக இந்த இசை விரைவாக இடத்துக்கிடம் மாறி ஒலிக்கிறது. ஆனால் முனிவன் நண்டோ ஊரியேர் வேறு மெல்லுடலிகளோ இவ்வளவு விரைவாக நகர்ந்து போய் ஒலியெழுப்பாது. இரண்டாவதாக மீனியலாரும் கடல் வாழ் உயிரினவியலாரும் எந்த மெல்லுடலிகளும் மனிதர் கதைப்பது போன்ற சத்தத்தை எழுப்பவல்லன அல்ல என்று உறுதியாக குறிப்பிட்டுள்ளனர். இந்த விடயத்தை பிற்பாடு

பார்க்கலாம்.

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்கள் பலவகை மீன்கள் ஒலி எழுப்புகின்றன என்று கூறியுள்ளனர். அந்த மீன்கள் பிடிக்கும் போது நீங்கள் பக்கத்தில் இருந்தால் அவைகளை வாங்குவதோடு அவை எழுப்பும் ஒசையையும் கேட்கலாம். மீனவர்கள் அவற்றின் தமிழ்ப் பெயர்களையும் உங்களுக்கு சொல்வார்கள்.

அனுபவம் உள்ள மீனவர் ஒருவர் சத்தம் எழுப்பும் மீன் வகைகளில் ஒன்றைக் கும்மிருட்டில் பிடித்தால் அது எந்த மீன் என்று அது எழுப்பும் சத்தத்தை மாத்திரம் கொண்டு இனம் காண்பார். சத்தம் எழுப்பும் மீன் வகைகளில் சில வருமாறு:

**கத்தலை:** ஒப்பீட்டளவில் பெரிய மீன். பொதுவாக 8-10 இறாத்தல் நிறையும் 18-24 அங்குல நீளமும் உடையது. இதற்கு பெரிய தலையும் மெல்லிய வாலும் உள்ளது. அதனுடைய உடல் வெள்ளை நிறமானது, வயிறும் வாலும் மஞ்சள் நிறமானது. அது எழுப்பும் ஒலி வாத்தின் சத்தத்தை ஒத்திருக்கும். அந்த சத்தம் தொண்டையில் உற்பத்தியாகி வாய் வழியாக வெளியேறுகிறது. இந்த சத்தம் தவளை அல்லது தேரை எழுப்பும் சத்தத்தை ஒத்திருக்குமா என்று யாராவது கேட்டால் பதில் இல்லை என்பதாகும்.

**பாரைக்குட்டி:** சராசரியாக 8-10 அங்குல நீளமுடைய சிறிய மீன். நீருக்கு வெளியே எடுத்தால் பலமான சத்தத்தை எழுப்புகிறது.

**சேரி:** இதுவும் 4-5 அங்குல நீளமுடைய சிறிய மீன். முன் கூறப்பட்ட இரு வகை மீனைவிட குறைந்த ஒலியை எழுப்பும். இது கறுப்பு கலந்த வெள்ளை முதுகை கொண்டது. தூண்டில் முள்ளில் இருக்கும் இரையை கௌவியவுடன் இது சத்தம் போடுவதை நிறுத்திவிடும் என்று மீனவர்கள் கூறுகின்றனர்.

**காலை:** 1-2 அடி நீளத்தில் வளரும் ஒரு பெரிய வகை மீன். சாப்பிட சுவையாக இருக்கும். இது எழுப்பும் சத்தம் குழந்தை அழும் சத்தத்தை ஒத்திருக்கிறது என்று கூறுகின்றனர். மஞ்சள் வயிறையும் கறுத்த உடம்பையும் கொண்ட இந்த மீனின் முகத்தின் ஒவ்வொரு பக்கத்தில் இருந்தும் நான்கு மீசைகள் முளைத்துள்ளன.

**கீளி:** இது பற்களை நறுவி ஒலியெழுப்ப கூடிய மீனாகும். வெள்ளை நிறத்தோடு மஞ்சளும் கறுப்பும் கலந்த நிறத்தில் இருக்கும். அது சுமார் 4 அங்குல நீளத்தில் வளரும் சிறிய மீனாகும். இதன் செட்டைக்கு அண்மையில் ஒரு விசித்திர வெளி நீட்டமொன்று காணப்படுகிறது.

மேற்கூறிய மீன்கள் எல்லாம் நீருக்கு வெளியே எடுத்தால் சத்தம் போடுபவை. இந்த சத்தத்தை கொண்டு மீனவர்கள் இலகுவாக அவற்றை அடையாளம் கண்டுகொள்வர்.

**காரல்:** நூற்றுக்கணக்கில் கூட்டமாக செல்லும் காரல் மீன்கள் மூன்று அங்குல நீளமுடையவை. இவைகளுக்கு செட்டைகள் இல்லை. இந்த மீனில் காணப்படும் மனதை கவரும் விசித்திரம் என்னவென்றால், இதன் தொண்டைப் பகுதியில் இருந்து ஒளி வெளிப்படுவதாகும். மீன் கூட்டம் செல்லும் போது மணியடிப்பது போன்ற இனிமையான ஒலி கேட்கும்.

**ஒட்டி:** எலிப் பாம்பு போன்ற தோற்றத்தை கொண்ட இந்த மீன் செக்லேற் நிறமுடையது. சராசரி 10 அங்குல நீளமுடையது. 8-10 அடி ஆழமான பாறைப் பாங்கான நீரில் காணப்படும் இந்த மீன் தொந்தரவுகளை சந்திக்கும் போது வெடிப் பொலி போன்று ஒலி எழுப்புகிறது.

- இந்த இசை தவளைகளால் ஏற்படுவதென்று சிலரின் வாதம் உள்ளது. நவலமுல்லவையை சேர்ந்த சி.ஈ. டேவிட்சன் அவுஸ்திரேலியாவில் உள்ள ஸ்வான் ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் தவளைகள் இம்மாதிரி சத்தம் எழுப்புகின்றன என்று கூறுகிறார். அவர் எனக்கு எழுதிய தனிப்பட்ட கடிதத்தில் அவுஸ்திரேலியாவில் காணப்படும் அந்த ஆற்றுப்பகுதி மட்டக்களப்பை பெரிதும் ஒத்துள்ளது என்று கூறியுள்ளார். அங்குள்ள விஞ்ஞான சிந்தனையாளர்கள் இது பற்றி ஆராய்ந்து தவளைகள் இசைத் தன்மை கொண்ட ஒலியை எழுப்ப வல்லன என்று கூறியுள்ளனர்.

ஆனால் டேவிட்சன் இந்த சத்தம் நீரின் கீழிலிருந்து வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். தவளைச் சத்தம் நீரின் மேலிலிருந்தே வரும். தவளைகள் தமது தொண்டையை விரித்து காற்றை உள்வாங்கி அமுக்கி வெளியேற்றுதல் மூலமாக ஒலியெழுப்பும். நீருக்கு மேல் வராமல் தவளையால் ஒலியெழுப்ப முடியாது. மட்டக்களப்பு வாவியில் வெளிவரும் இசை ஆழத்திலிருந்து வெளிவருகிறது என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

- இன்னொரு விளக்கம் வாவியின் அடியில் நீட்டிக் கொண்டிருக்கும் பாறைகளின் ஊடாக நீரோட்டம் பாய்வதால் இந்த சத்தம் ஏற்படுகிறது என்பதாகும். மட்டக்களப்பு வாவியின் அடியில் பாறைகளும் நீரோட்டமும் இருந்தால் வற்றுப் பெருக்குக்கு ஏற்ப அது ஏற்படுத்தும் ஒலியிலும் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும். ஆனால் மட்டக்களப்பு வாவியில் ஏற்படும் ஒசை ஒரே சீராக இருக்கிறது.

## இசையொலியின் சிருஷ்டி கர்த்தா யார்?

கடைசியாக மீனுக்குத்தான் வருகிறோம். நாங்கள் பதிலளிக்க வேண்டிய முதலாவது கேள்வி: மீன் பாடுமா? அதனால் இசைக் கோலங்களை பிறப்பிக்க முடியுமா? நீருக்கு அடியிலிருந்து அதன் மேலாலும் கேட்கக் கூடிய இசையொலியை அதனால் பிறப்பிக்க முடியுமா?

1945-ம் ஆண்டில் நான் அமெரிக்க பருவ இதழ் ஒன்றில் ஒரு கட்டுரையை கண்ணுற்றேன், அது மீன் எழுப்பும் சத்தங்கள் பற்றி நியூயோர்க் விலங்கியல் கழகத்தை சேர்ந்த டொக்டர் கிறித்தோபர் டபிள்யு. கோடஸ் என்பவர் செய்த பரிசோதனைகள் பற்றியது. இதைப் படித்தவுடன் நான் மட்டக்களப்பு மீன் புதிர் பற்றி விளக்கம் தருமாறு கேட்டு டொக்டர் கோடஸுக்கு ஒரு கடிதம் எழுதினேன். கோடஸ் எனது கடிதத்துக்கு பதில் தந்தார். அவர் மட்டக்களப்பு பாடும் மீன் புதிர் பற்றி தனக்கு ஏற்கெனவே தெரியும் என்று எழுதியிருந்தது எனக்கு வியப்

பாய் இருந்தது. அவர் இயற்கை வரலாற்றுகான அமெரிக்க நூதனசாலையை சேர்ந்த தனது சகபாடி ஜே.எஸ். நீக்கொல் லிடமிருந்து இதை அறிந்து கொண்டதாக எழுதியிருந்தார். நான் டொக்டர் நிக்கொல் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதியை இங்கு மேற்கோள் காட்டுகிறேன்:

*‘ஓடுள்ள உயிரி ஒன்று இப்படி ஒரு சத்தத்தை எழுப்ப முடியுமா என்பதை நம்ப தயக்கமாக உள்ளது. கடல் வாழ் உயிரினங்கள் பற்றிய போதிய அறிவுள்ள எங்களுக்கு அவைகள் சத்தம் எழுப்புவதும் தெரியும். மீனினங்கள் பல பல்வேறு முறைகளில் சத்தம் எழுப்புவதை நாம் அறிவோம். சில பற்களை நறுவியும், சில உடம்பில் உள்ள நாளங்கள் வழியாக காற்றை தள்ளியும், சில வாயில் காற்றை நிறைத்து ஊதியும், சில செட்டையால் அசைத்தும் ஒலி எழுப்புகின்றன. ஆகவே அவைகளுக்கு ஒலி எழுப்ப பொது வான முறையொன்றும் இல்லை என்பது வெளிப்படை.’*

மூன்று வருடங்களுக்கு முன்னர் யு.எஸ். கடற்படையின் பருவ வெளியீடான ஓல் ஹாண்டில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அக்கட்டுரை யு.எஸ்.ஸும் றோயல் கடற்படையும் புதிதாக உருவாக்கிய கண்ணி வெடிக்கும் ரோபிடோவுக்கும் நீரடி சத்தங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை பற்றி ஆராய்ந்ததை ஜனரஞ்சக மொழியில் விபரித்திருந்தது. (டொக்டர் கொட்டஸ் இந்த ஆய்வில் ஏற்கெனவே ஈடுபட்டி ருந்ததால் அவரது ஆய்வு முடிவுகள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன.) நேச நாடுகள் சத்தத்துக்கு உணர்வு டைய கண்ணிவெடிகளை கண்டுபிடித்ததால் யப்பானிய கப் பல்கள் பலதை நிர்மூலமாக்க முடிந்தது. ஆயினும் கடலுக்க டியில் ஏதாவது சத்தம் ஏற்பட்டால் அங்கே வைத்திருக்கும் கண்ணிவெளிகள் வெடித்து அனர்த்தங்களை ஏற்படுத்துவதும் தவிர்க்க முடியாததாக இருந்தது. அந்தக் கட்டுரையில் இருந்து பின்வரும் பகுதியை மேற்கோள் காட்டுவது பொருத் தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்:

*‘கரையில் கேட்கும் சத்தங்களை பதியக்கூடிய வகையில் பல திட்டங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. இவை பல முக் கிய அம்சங்களை கொண்டிருந்தன. மீன்கள் பல வகை சத் தங்களை எழுப்புகின்றன. சில இடங்களில் அவற்றின் சத் தம் பலமாக இருக்கும். இணைசேரும் நேரங்களில் கடலுக் கடியில் ஒரே களேபரமாக இருக்கும் இடத்தை வைத்து விஞ்ஞானிகள் மீன்களின் சத்த அளவை கணிக்கின்றனர். அலைவாய்க் கரையில் இருந்து எழும் சத்தத்தை பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. மேலும் அங்கிருந்து எழும் மீன் சத்தத்தை பதிவு செய்வதற்கான காது கேட்கும் கருவியையும் (earphones) அங்கு பொருத்தி யிருந்தோம்.’*

கடற்படையில் உள்ள படையினர், குடிசார் விஞ்ஞானிகள், உயிரியல் நிபுணர்கள் இணைந்து யு.எஸ்ஸின் கிழக்கு கரை யில் ஹைட்ரோஃபோன், பதிவு கருவிகள், டிஸ்கள் போன்ற வற்றை பொருத்தி வைத்துள்ளார்கள். அங்கே நீந்திப்போ கும் எதையும் அவர்களால் பதியவும் அளவெடுக்கவும் முடி யும். மற்ற நிபுணர்கள் பியூஃபோட் என்.சி என்ற இடத்தில் உள்ள வனசீவராசிகள் ஆய்வுகூடத்திற்கு (இவ்விடத்தில் மீன் கள் எழுப்பும் சத்தத்தை பதிவு செய்து வைத்துள்ளனர்) இங்கே கிடைத்த தகவல்களை அனுப்பி கொண்டிருந்தனர். இன்னொரு குழுவினர் விற்பனைக்காக மீன் தொட்டிகளை ஆக்கிக்கொண்டிருந்தனர். நாலாவது குழுவினர் பஹாமா வுக்கு சென்று அங்கே எட்டு இடங்களில் பதிவு எடுக்க சென்றனர். இவைகளின் தலைமைக் குழு பசுபிக் சென்று தங்கள் கருவிகளை அங்கே பொருத்துகின்ற வேலைகளை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்படி அவர்கள் பரபரப்பாக இயங்கி பரந்து கிடக்கும் உலகத்தின் பல இடங்களுக்கு தாம் கண்டறிந்த செய்தி களை அனுப்பிக்கொண்டிருக்கிறனர். இவ்வாறு அவர்களின் செயற்பாடுகள் விரிந்த அளவில் நடப்பதால் காத்திரமான முடிவுகளை உருவாக்கும். இந்த வகையில் மீனினங்கள் பல அடையாளம் காணப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன.

நான் யு.எஸ்-ஆல் வெளியிடப்பட்ட பிரசுரத்தை வாங்கிப் பார்த்த போது அதில் எம்.பி. டொப்பிரின் என்பவரால் எழு தப்பட்ட ‘கடல் வாழ் உயிரினங்களால் நீரடியில் எழுப்பப்ப டும் சத்தங்களை அளத்தல்’ என்ற கட்டுரை என்னை கவர்ந் தது. அதில் அதை அளக்க என்னென்ன முறைமைகளை கையாளலாம் என்பது பற்றியும் விளக்கப்பட்டிருந்தது. அதில் பல்வேறு இடங்களில் அவை எழுப்பும் சத்தங்களின் அளவை வரைபடம் மூலம் விளக்கியிருந்தார். பல்வேறு வகை மீனினங்களின் சத்தத்தை ஆசிரியர் விளக்கியிருந்தார்:

*‘யு.எஸ். கிழக்கு கடற்கரைகளில் காணப்படும் குரோக்கர் (Micropogon undulatus) என்னும் மீன் பறையடிப்பது போல் பெரும் சத்தம் எழுப்ப கூடியது. அதன் நுரையீரல்களில் காணப்படும் உறுப்பு இச்சத்தத்தை எழுப்ப காரணமாகிறது. மீனின் நீளத்துக்கு தக அது எழுப்பும் சத்தத்தின் அளவும் வேறுபடும்’*

இந்த சத்தம் மட்டக்களப்பு பாடும் மீனுக்கு (இது மீன் என்று நிச்சயித்தால்) தொடர்பில்லாததாக இருக்கிறது. இது நீருக்கு மேல் கேட்கக் கூடியதாக இல்லை. மெக்சிக்கோ வளைகுடா வில் நான் மீன் பிடிக்கும் போது குரோக்கர்களை பிடித்துள் ளேன். தடியையும் தூண்டிலையும் கொண்டு இரவில் மீன்பி டிக்கும் சிறுவர்கள் சத்தத்தை கொண்டு அதை இனம் கண்டு கொள்கிறார்கள்.

*இப்போது நடக்கும் ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்கது தேரை மீனாகும் (Toadfish- Opsanus tau). சுறுசுறுப்பு குறைந்த சின மடையும் இந்த மீன், நீருக்கடியில் கூடுகட்டி வாழக்கூடியது. கடல் வாழ் உயிரினங்கள் எல்லாவற்றையும் விட கடுமை யான சத்தத்தை எழுப்பும் இயல்பு கொண்டது. விட்டு விட்டு கேட்கும் இந்த சத்தம் படகொன்றில் இருந்து விசில் அடிப் பதை ஒத்திருக்கும்.*

இதைப் போல உடலமைப்பை கொண்ட கவர்ச்சியற்ற இன் னொரு மீன் ஹொக் மீனாகும்.

*‘கடற்கரையில் இருந்து தூரக் கடலில் வாழும் அயன மண் டல மீனான ஜெருண்டுக்கு இனமான இது நீரிலிருந்து வெளியே எடுக்கும் போது பல்லை நெரித்து சத்தம் எழுப்பு கிறது. இதன் உடலில் அரம் போன்ற வெளிநீட்டங்கள் காணப்படுகின்றன. இரவில் வெளி நீட்டங்களை கொண்டு*

*அவை ஒன்றோடொன்று உரசி ஒலி எழுப்புகின்றன.'*

இந்த மீன் வகை எழுப்பும் ஒலி விகற்பங்களுக்கெல்லாம் நமது மட்டக்களப்பு பாடகர்களின் இனிய இசை ஒரு போதும் ஈடாகாது. நாங்கள் இப்போது கவித்துவ பெயரை கொண்ட வேறொரு மீனைப் பார்ப்போம்:

*அது கடல் றொபின் (Prionotus carolinus) ஆகும். பரிசோதனை கூடத்தில் எடுக்கப்பட்ட அதன் சத்த மாதிரி திருப்தியளிப்பதாக இல்லை. வியாபார நிலையங்களில் எடுக்கப்பட்ட குரல் பதிவுகளே உள்ளன. அதன் குரல் மிகவும் இனிமையானது. ஏற்ற இறக்கமும் லயமும் வாய்ந்தது.*

மேற்சொன்ன மீன் வகைகளை விட இன்னும் பல உள்ளன, அவைகளை இனம் கண்டு அவைகளின் சத்தங்களை பதிவுசெய்து வைத்துள்ளனர். அவற்றில் குறிப்பிடக்கூடியது ஸ்பொட் (Leiostomus xanthurus) என்னும் மீனாகும். இது குரோக்கர் என்னும் மீன் இனமானது. இது வாத்துகள் கத்துவது போலவும் பண்ணையில் கோழிகள் கூச்சல் போடுவதை போலவும் சத்தம் எழுப்பக் கூடியது. கடற்படை ஆராய்ச்சியாளர்கள் கெளுத்தி மீன்கள் பறையடிப்பதை போல சத்தம் எழுப்புவதை கண்டுள்ளனர். இன்னும் அமைதியாக இருக்கும் இறால்கள் கூட ஒரு பாத்திரத்தில் ஒன்று சேர்த்தால் கால்களால் உரைந்து சத்தம் எழுப்புவதை அவதானிக்கலாம். இவையெல்லாம் மேற்பரப்பில் தான் சத்தம் எழுப்ப வல்லன.

## முடிவுரை:

இந்த தரவுகளிலிருந்து பாடுவது மீன்தான் என்ற கருதுகோளிற்கு நாம் வருகிறோம். அது பல்வேறு இசைக் கோலங்களை பொழிகிறது. இந்த கருதுகோளை உண்மை என்று நிருபிப்பதற்காக கோட்ஸின் வழிகாட்டல்கள் (உயிரினங்கள் தமது இயற்கை வாழிடமான கடலில் காட்டும் இயல்புகளை செயற்கை தொட்டியில் காட்டாது என்பது கோட்ஸின் பிரதான கூற்றாகும்) நமக்கு உதவுகின்றன. பக்கச் சார்பற்று கோட்ஸ்ஸின் வழிகாட்டலை பின்பற்றி இந்த அணுகுமுறையை நோக்கி நாம் நகரலாம். (நான் அவரின் வார்த்தைகளை மீண்டும் மேற்கோள் காட்டுகிறேன்: கடலில் இந்த விடயம் பற்றி எங்களுக்கு போதுமான அறிவு உள்ளது. ஆனால் மட்டக்களப்பு விடயம் வேறாக உள்ளது).

மட்டக்களப்பு பாடகர்கள் தம்மை அடையாளம் காட்ட மறுப்பவர்கள். நாங்கள் எந்த வித கருவிகளுமற்று வெறும் காதால் நீருக்கு மேல் 18 அடி உயரத்தில் இருந்து இந்தப் பாடகர்களின் இசையை கேட்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன் நான் நியுயோர்கில் கோட்ஸை அவரது நீர்த்தொட்டியில் சந்தித்த போது அவர் சொன்னார், எந்த மீனும் தமது இயற்கை வாழிடத்தை விட்டு வேறு இடங்களில் சத்தம் போடாது. அதனால் நான் நீர்தொட்டி அமைத்து பரிசோதிக்கும் முயற்சியை கைவிட்டேன். அதற்குரிய நிதி வசதியும் என்னிடமில்லாததும் ஒரு காரணம் தான்.

பிடித்து வைத்திருக்கும் மீன் எவ்வாறு நடந்து கொள்ளும்? நான் யு.எஸ். கடற்படையின் வெளியீடு ஒன்றில் வந்த விடயத்தை இங்கே மேற்கோள் காட்டுகிறேன்:

*'உயிரியல் இலக்கியத்தில் சத்தம் போடுபவை என்று கணிக்கப்பட்ட மீனினங்கள் சிலதை தொட்டியில் வைத்திருந்தால் அவை சத்தம் போடும். அவ்வாறானவை போமசென்றிடை குடும்பத்தை சேர்ந்த கரிபால்டி, கோரல் செம்மீன் என்பனவாகும். அவை எழுப்பும் சத்தம் பல்லை நறுவுவதால் ஏற்படுவது என்பது கருத்தில் கொள்ள வேண்டியது'.*

இயற்கை வாழிடத்தைவிட்டு வேறு இடங்களில் மீன் பாடும் என்பது எனக்கு சந்தேகமாக உள்ளது.

இந்தக் கருத்துக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் தெகிவளை மிருகக்காட்சி சாலையை சேர்ந்த ரோட்னி ஜொங்கிளஸின் ஆய்வு அமைகிறது. அவர் நீருக்கடியில் பார்க்கக் கூடிய முகமூடியை அணிந்து கொண்டு மீன்கள் பதுங்கியிருக்கும் இடங்களையெல்லாம் ஆராய்ந்தார். அவரின் முக்கிய கண்டுபிடிப்பு மட்டக்களப்பு வாவி மற்ற கிழக்கு மாகாணத்தில், இன்னும் தீவில் காணப்படும் வேறு வாவிகளைவிட எந்த இயல்பிலும் வேறுபட்டதில்லை. அங்குள்ள மீன்களோ ஊரிகளோ வேறு உயிரினங்களோ மற்ற வாவிகளில் வாழ்வனவற்றிலிருந்து எந்த விசித்திர தன்மைகளும் கொண்டவை அல்ல என்ற கருத்தை அவர் முன்வைத்தார். ஆயின் மட்டக்களப்பில் மாத்திரம் அதுவும் குறிப்பிட்ட இடங்களில் இருந்து மாத்திரம் இசை ஏன் கேட்கிறது? இதற்கு பதில் இடவமைவாகும். அவற்றின் வழமையான இடத்தைவிட வேறு இடங்களில் அவை பாடாது. இதனால் தனிப்பட்ட தொட்டி அமைப்பது பிரயோசனமற்ற செயல் என்ற முடிவுக்கு வந்தேன்.

மட்டக்களப்பு வாவியின் இயற்கை அமைவிடத்தை உருவாக்குவது மிகவும் சிரமமான காரியமாக உள்ளது. இந்த மீன் எந்தவித இடையூறுகளுமில்லாமல் பாடிக்கொண்டிருந்த இடத்தை ஆய்வென்று சேதப்படுத்துவது காட்டுமிராண்டித்தனம் என்ற உணர்வும் (தொந்தரவுக்கு ஆட்படும் போது குரலை உயர்த்தி தனது சினத்தை வெளிப்படுத்துவதை ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர்) எனது மனதில் உறைக்கிறது.

மட்டக்களப்பு, கல்லடிப் பாலம் மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் மாத்திரம் தான் இந்த இசையொலியை கேட்க முடியும் என்று பலர் நினைக்கிறார்கள். அது உண்மையில் அவ்வாறில்லை. உதாரணத்துக்கு மட்டக்களப்பில் இருந்து சுமார் முப்பத்தைந்து கிலோ மீற்றருக்கும் அப்பால் உள்ள துறைநீலாவணை கிராமத்திலிருந்து மேற்கே இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் வாவியின் மத்தியில் கவுடாதீவு என்னும் தீவு உள்ளது. அதன் பக்கங்களிலும் இவ்விசையொலி கேட்பதை ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர். கடும் சேறு மண்டிக்கிடக்கும் அவ்விடங்களில் பாறைகளோ நீரோட்டங்களோ கிடையாது. இது வாவியின் அடியில் பாறைகளுக்கூடாக நீர் பாய்வதால் இவ்வொலி எழுகிறதென்ற வாதத்தை பொய்யாக்கிறது.



thiruvenysangamam@thaiveedu.com

## பழந்தமிழ் நூல்களை மீட்டெடுக்கத் திருப்புமுனை ஏற்படுத்திய

# சமணர் செய்த பொய் நூல்

**- எஸ். சத்யதேவன்**



தமிழில் 'விருத்தப்பா' எனும் பாவகையை முதலில் வெற்றிகரமாக எழுதியதனூடு, பின்வந்த புலவர்கள் விருத்தப் பாவை விரும்பி பாடுவதற்கு வழிசமைத்துக் கொடுத்தது. காப்பிய இலக்கணங்களை முழுமையாகக் கொண்டுள்ளதால் பின்வந்த காப்பிய இதிகாச நூல்களுக்கு வழிகாட்டி நூலாகவும் திருப்புமுனையாகவும் அமைந்த நூலாக ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான 'சீவக சிந்தாமணி'யை தமிழிலக்கிய வரலாறுகள் சிறப்பித்துக் கூறுகின்றன.

ஆயினும் 'கலகத்தையே செய்கின்ற சமண வஞ்சகர்கள், பொய்யே கட்டிய புரட்டுத் திருட்டுச் சிந்தாமணிக் கதையை' உண்மையென்று நம்பி அநபாயச் சோழன் மனமகிழ்ந்து சிறப்புகள் செய்து பலபடப்பாராட்டிக் கேட்டு அதில் இலயித்திருந்தபோது உபயகுல மணிவிளக்காகிய சேக்கிழார் 'சமணர் பொய்ந்நூல் இது' இம்மைக்கும் மறுமைக்கும் உதவாது எனக்கூறிவேளை, இது பயனற்ற வீண் கதையெனின் பயன் தருத்தக்க கதை எது? அது இது போல் சிறப்பானதா? எனச் சோழமன்னன் கேட்க 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடியது பெரியபுராணம்' எனச் சேக்கிழார் புராணம் கட்டிய பொய்க்கதையே பெரும்பாலும் நம் சூழலில் சீவக சிந்தாமணி எனும் நூல் பற்றிய முதல் அறிமுகமாக இருந்தது.

1894-ம் ஆண்டு உ.வே. சாமிநாத அய்யர் 'புறநானூறு'-ஐ வெளியிடுகின்றார். இந்த நூல் வெளிவந்த உடன் தமிழ் நாட்டு வரலாற்றில் அதுவரை இல்லாத ஒரு கிளர்ச்சி உணர்வு தமிழ்மக்களிடையே உருவாகின்றது. பழந்தமிழகத்தின் பெருமையைப் பேசும் அந்நூல் தமிழர்களின் தொன்மை வரலாற்றை வெளிச்சமிட்டுக் காட்டித், தமிழர்கள் தங்கள் அடையாளத்தைக் கண்டுகொண்டு களிப்படைய வைத்த நூல் இது. இதுபோன்ற பழந்தமிழ் நூற்பதிப்புகளைச் செய்வதற்கான திருப்புமுனையாக அமைந்தது உ.வே. சாமிநாத ஐயர் சீவக சிந்தாமணியைப் பதிப்பித்தமையே. இதன்வழி தமிழ்ப் பதிப்புலகில் அழியாப் புகழ் பெற்ற உ.வே.சா 'சீவக சிந்தாமணி'-ஐ அறிந்துகொண்ட கதை பழந்தமிழ்ப் பதிப்பைநோக்கி திருப்புமுனையை ஏற்படுத்திய சுவாரசியமான தமிழிலக்கிய வரலாறாகும்.

உ.வே.சா கும்பகோணம் காலேஜ்ஜில் வேலைசெய்திருந்த காலத்தில் கும்பகோணத்துக்கு முன்சீபாக மாற்றம் பெற்று வந்த சேலம் இராமசுவாமி முதலியாரைப் போய்ப் பார்த்து வரவேண்டும் என்று திருவாவடுதுறை மடத்தின் ஆதீனத் தலைவர் சொல்லியதால், பெரிய ஆவலின்றிச் சேலம் இராமசாமி முதலியாரைச் சென்று சந்திக்கிறார் உ.வே.சா.

அவர்களது முதல் சந்திப்பின் உரையாடல், உ.வே.சா-வின் என் சரித்திரத்தில் பின்வருமாறு அமைகிறது.

'நீங்கள் யாரிடம் பாடம் கேட்டீர்கள்?' என்று அவர் கேட்டார்.

'மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டேன்' என்றேன்.

பிள்ளையவர்கள் பெயரைக் கேட்டவுடன் அவரிடம் ஏதாவது கிளர்ச்சி உண்டாகுமென்று எதிர்பார்த்தேன். என்னுடைய உத்தியோகத்துக்காக என்னை மதிக்காவிட்டாலும், பிள்ளையவர்கள் மாணாக்கனென்ற முறையிலாவது என்னிடம் மனம் கலந்து பேசலாமே. அவர் அப்படிப் பேச முன்வரவில்லை. கணக்காகவே பேசினார்.

'பிள்ளையவர்கள் பெயரைக் கேட்டுப் புடை பெயர்ச்சியே இல்லாத இவராவது, தமிழில் அபிமானம் உடையவராக இருப்பதாவது! எல்லாம் பொய்யாக இருக்கும்' என்று நான் தீர்மானம் செய்து கொண்டேன்.

அவர் கேள்வி கேட்பதை நிறுத்தவில்லை. 'என்ன என்ன பாடம் கேட்டிருக்கிறீர்கள்?' என்ற கேள்வி அடுத்தபடி அவரிடமிருந்து வந்தது. 'இதற்கு நாம் பதில் சொல்லும் வகையில் இவரைப் பிரமிக்கும்படி செய்துவிடலாம்' என்ற நிச்சய புத்தியோடு நான் படித்த புத்தகங்களின் வரிசையை ஒப்பிக்கலானேன், 'குடந்தை அந்தாதி, மறைசையந்தாதி, புகலூரந்தாதி, திருவரங்கத்தந்தாதி, அழகரந்தாதி, கம்பரந்தாதி, முல்லையந்தாதி, மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், திருக்கோவையார், தஞ்சை வாணன் கோவை...' என்று சொல்லிக் கொண்டே போனேன். அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத் தமிழ்




களில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் இப்படியே பிரபந்தங்களை அடுக்கினேன். அவர் முகத்தில் கடுகளவு வியப்புக் கூடத் தோன்றவில்லை.

'இதெல்லாம் படித்து என்ன பிரயோசனம்?' என்று திடீ ரென்று அவர் இடைமறித்துக் கூறினார். நான் மிக்க ஏமாற றம் அடைந்தேன். 'இவர் இங்கிலீஷ் படித்து அதிலே மோகங்கொண்டவராக இருக்கலாம். அதனால்தான் இப்ப டிச் சொல்லுகிறார்' என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. ஆனாலும் நான் விடவில்லை. புராண வரிசையைத் தொடங் கினேன்.

'திருவிளையாடற் புராணம், திருநாகைக்காரோணப் புரா ணம், மாயூரப் புராணம், கந்தபுராணம், பெரியபுராணம், குற்றாலப் புராணம்...'

அவர் பழையபடியே கற்சிலைபோல இருந்தார்.

'நைடதம், பிரபுலிங்க லீலை, சிவஞான போதம், சிவஞான-சித்தியார் உரை...' என்னும் நூல்களின் பெயர்களைச் சொன்னேன். இலக்கண நூல்களை எடுத்துக் கூறினேன். அப்பொழுதும் அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. 'அடடா! முக்கியமானவற்றையல்லவா மறந்துவிட்டோம்? அதை முதலிலேயே சொல்லியிருந்தால் இவரை வழிக்குக் கொண்டு வந்திருக்கலாமே!' என்ற உறுதியுடன், 'கம்பராமா யணம் முழுவதும் இரண்டு மூன்று முறை படித்திருக்கி றேன். பிள்ளையவர்களிடமும் சில காண்டங்களைப் பாடம் கேட்டிருக்கிறேன்' என்றேன்.

இராமசுவாமி முதலியார், 'சரி, அவ்வளவு தானே?' என்று கேட்டார். எனக்கு மிகவும் அதிருப்தி ஏற்பட்டுவிட்டது. 'கம்ப ராமாயணத்தில் கூடவா இவ்வளவு பராமுகம்! இவ்வளவு அசட்டை!' என்ற நினைவே அதற்குக் காரணம். அதற்கு மேலே சொல்ல என்ன இருக்கிறது? ஆனால் அவர் என்னை விடுகிறவராக இல்லை. மேலும் கேள்வி கேட்கலா னார்.

'இந்தப் பிற்காலத்துப் புத்தகங்களெல்லாம் படித்தது சரி தான். பழைய நூல்களில் ஏதாவது படித்ததுண்டா?'

எனக்கு அவர் எதைக் கருதிக் கேட்டாரென்று தெரிய வில்லை. 'பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களையே நான் படித்திருப்பதாக இவர் எண்ணிக்கொண்டாரோ? கந்தபுரா ணம், பெரியபுராணம் முதலியவைகளெல்லாம் பழைய நூல் களல்லவோ? கம்பராமாயணம் பழைய நூல் தானே? பழைய நூலென்று இவர் வேறு எதைத் கருதுகிறார்?' என்று யோசிக்கலானேன்.

'நான் சொன்னவற்றில் எவ்வளவோ பழைய நூல்கள் இருக் கின்றனவே!' என்று நான் கேட்டேன்.

'அவைகளுக்கெல்லாம் மூலமான நூல்களைப் படித்திருக்கி றீர்களா?' என்று அவர் கேட்டபோதுதான் அவரிடம் ஏதோ சரக்கு இருக்கிறதென்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று.

'தாங்கள் எந்த நூல்களைச் சொல்லுகிறீர்களென்று தெரிய வில்லையே?' என்றேன்.

'சீவக சிந்தாமணி படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித் திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக்கிறீர்களா?'

அவர் சொன்ன நூல்களை நான் படித்ததில்லை. என்னு டைய ஆசிரியரே படித்ததில்லை. புத்தகத்தைக்கூட நான் கண்ணால் பார்த்ததில்லை. ஆனாலும், 'இவ்வளவு புத்தகங் களைப் படித்ததாகச் சொன்னதைப் பொருட்படுத்தாமல் எவையோ இரண்டு மூன்று நூல்களைப் படிக்கவில்லை என்பதைப் பிரமாதமாகச் சொல்லவந்து விட்டாரே!' என்ற நினைவோடு பெருமிதமும் சேர்ந்து கொண்டது. 'புத்தகம் கிடைக்கவில்லை. கிடைத்தால் அவைகளையும் படிக்கும் தைரியமுண்டு' என்று கம்பீரமாகச் சொன்னேன்.

சாதாரணமாகப் பேசிக்கொண்டு வந்த முதலியார், நிமிர்ந்து என்னை நன்றாகப் பார்த்தார். 'நான் புத்தகம் தருகிறேன் தந்தால் படித்துப் பாடம் சொல்வீர்களா?' என்று கேட்டார்.

மேலே உள்ள உரையாடலிருந்து அக்கால மரபான சைவ மடத் தமிழ்ப் புலமைகளிடத்து செவ்வியல் தமிழ் நூல்கள் குறித்து அறியாமை இருந்ததையும் சேலம் இராமசாமி முத லியார் மூலம் அறிந்துகொண்ட சீவகசிந்தாமணி மூலமே உ.வே.சா-வும் பழந்தமிழ் நூல்கள் பற்றிய அறிமுகத்தைப் பெற்றார் என்பதையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

**சே**லம் இராமசுவாமி முதலியார் எவ்வாறு பழந்தமிழ் நூல்கள் குறித்து அறிந்தார். என் சரித்திரம் அதற்கும் விடைதருகிறது. 'நான் காலேஜில் படித்தபோது இதன் முதற் பகுதியாகிய நாமகளிலம்பகம் மாத்திரம் பாடமாக இருந்தது. அதை ஒரு துரை அச்சிட்டிருந்தார். அதில் தமி ழைக்காட்டிலும் இங்கிலீஷ் அதிகமாயிருந்தது. நூல் முற் றும் படித்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால் நான் போகும் இடங்களில் உள்ள வித்துவான்களை எல்லாம்

விசாரித்துப் பார்க்கிறேன். எல்லோரும் அந்தாதி, பிள்ளைத் தமிழ், புராணங்கள் இவைகளோடு நிற்கிறார்களேயொழிய மேலே போகவில்லை. அதனால் நான் மிகவும் அலுத்துப் போய்விட்டேன்.' எனச் சேலம் இராமசுவாமி முதலியார் கூறு கின்றார்.

இவ்விவரங்களின் விரிவுகளைத் தமிழறிஞர் பொ. வேல்சாமி அவர்கள் முகநூலில் வெளிப்படுத்தினார். அவற்றின் வழி இவ்வரலாறு மேலும் துலக்கமாகிறது.

1868-ல் வெளியிடப்பட்டு (இதன்போது உ.வே. சாமிநாத ஐயருக்கு 13 வயது) 1870-ல் பல்கலைக்கழகப் பட்டப்ப டிப்பு மாணவர்களுக்கு, 'சீவகசிந்தாமணியின் முதல் பகுதி யான நாமகள் இலம்பகம்' நச்சினார்கினியர் எழுதிய சிறந்த உரையுடன் பாடமாக வைக்கப்பட்டது. அன்றைய காலத துத் தமிழ்ப் புலவர்களால் மறக்கப்பட்டு அழிந்துபோகும் நிலையில் இருந்த இந்த நூலை ஆங்கில அரசாங்கம் பாடமாக வைத்து உயிர்கொடுத்தது.

பாதிரியார் ஹெச். பவாரால் மிகச் சிறப்பாக வெளியிடப பட்ட இந்நூல் பிற்காலத்தில் நவீன ஆராய்ச்சிகளுடன் பழந்தமிழ் நூல்களை வெளியிட்ட அறிஞர்களுக்கு ஒளி பாய்ச்சி வழிகாட்டியது என்றால் அது மிகையாகாது. இந் நூலில், இந்த நூலை வாசிப்பவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டு ஹெச். பவார் ஜைன சமய சித்தாந்தம் என்று பெயரிட்டு ஆங்கிலத்தில் எழுதியுள்ள தத்துவக் கட்டுரை அப்படியே பக்கத்துக்குப் பக்கம் தமிழி லும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பாதிரியார் ஹெச். பவார் ஒரு ஆங்கிலேயர் அல்லர். ஒரு பிரெஞ்ச்காரருக்கும் அவர் மனைவியாரான சென்னையைச் சேர்ந்த ஒரு தமிழ் அம்மையாருக்கும் சென்னையில் மகனா கப் பிறந்தவர். அவர் எழுதிய முன்னுரையில் 'இந்த நூலைப் பாடமாக வைப்பதின் வழியாக அழிந்துபோகும் நிலையில் உள்ள தமிழ் நூல்களை உயிர்ப்பிக்க முடியும்' என்று குறிப்பிடுகிறார். சிந்தாமணி போன்ற தமிழ்க் காப்பி யங்கள் உலகின் புகழ்ப்பெற்ற நூல்களுக்கு இணையானது என்றும் வீரமாமுனிவர் சிந்தாமணியை 'கவிதை இளவரசன்' என்று கூறுவதையும் மேற்கோளாகக் கூறுகின்றார். 1855-ல் இவரால் 'TAMIL LANGUAGE AND LITERATURE (தமிழ் மொழியும் இலக்கியமும்)' என்ற தலைப்பில் CALCUTTA REVIEW -VOL XXV-ல் (40 பக்கங்களில்) எழுதப்பட்ட மிக முக்கியமான கட்டுரையே தமிழ் இலக்கிய வரலாற் றைப் பற்றி முதல் முதலாக எழுதப்பட்ட கட்டுரை என்று கருதப்படுகிறது.

இந்நூலாய்வுபூர்வமான அடிக்குறிப்புகள், அருஞ்சொல் அகராதி, அதே அருஞ்சொல் அகராதி ஆங்கிலமொழிய லும் என்று பல வகைகளிலும் சிறப்பாக வெளியிடப்பட் டுள்ள இந்நூலை B.A. வகுப்பில் படித்துச் சுவைத்த சேலம் இராமசாமி முதலியார்தான் பத்தாண்டுகள் கழித்து கும்பகோணம் நகரத்தில் உ.வே.சா-வைச் சந்திக்கும் போது முழு நூலையும் படித்துச் சுவைக்க வேண்டும் என்ற தன் ஆசையை வெளியிட்டு, கூடவே இந்த நூலையும் சீவகசிந் தாமணி முழுமையாக எழுதப்பட்ட ஏட்டுச்சுவடியையும் அவ ரிடம் கொடுக்கின்றதையும் என் சரித்திரம் பதிவுசெய்துள் ளது. பிற்காலத்தில் உ.வே.சா-வைத் தமிழ்த் தாத்தாவாகப் புகழ்பெறுவதற்கு ஒரு அடி எடுத்துக் கொடுத்தது இந்த நூல்தான். இந்நூலில் பிற்காலங்களில் உ.வே. சாமிநா- தைய்யர் தான் வெளியிட்ட நூல்களுக்கு மிகச் சிறப்பான முன்னுரைகளை எழுதியிருப்பதற்கு இந்த நூலில் ஹெச்.- பவாரால் விரிவாக எழுதப்பட்ட ஆராய்ச்சி முன்னுரை முன் னோடியாக இருந்திருக்க வேண்டும்.

1880-ல் சீவக சிந்தாமணியை அறிந்துகொண்ட உ.வே. சாமி நாதையர் 1887-ம் ஆண்டு சீவக சிந்தாமணியின் முதல்ப திப்பை வெளியிடுகின்றார்.

ஆனால் அதற்கு முன்னரே 1883-ல் ப. அரங்கசாமிப்- பிள்ளை என்பவரால் சீவகசிந்தாமணியின் முதல் பகுதியின் மூலம் மட்டும் உரையில்லாமல் வெளியிடப்பட்டுள்ளது.

'என்ன பிரயோசனம்?' என்று ஒரு கேள்வியில் தூக்கி எறியும்படி அந்தப் புத்தகத்தில் என்னதான் இருக்கிறது? பார்த்துவிடலாம்!' எனச் சேலம் இராமசுவாமி முதலியார் கொடுத்த சீவகசிந்தாமணிப் பிரதியைப் படிக்க ஆரம்பிக்கி றார் உ.வே.சா.. அதில் நச்சினார்க்கினியர் உரையும் இருந் தது.

'அது சீவகனைப் பற்றிய காவியம் என்பது மட்டும் தெரிந்த தேயன்றி இன்ன கதையை அது சொல்வது, இன்னவகை யில் அது சிறப்புடையது என்பவற்றை அவரால் அறிய முடியவில்லை. சிந்தாமணி ஜைன நூலாதலின் விளங்காத விஷயங்களை ஜைனர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளலா மென்று எண்ணி அவரிடம் பாடம் கேட்டு வந்த இராமலிங்க பண்டாரமென்பவரின் உதவியால் சிந்தாமணியை அறிந்த ஜைனர்கள் யாரும் உள்ளனரா எனத் தேடுகிறார். அவரது நல்லூழ் காரணமாகச் சந்திரநாத செட்டியார் என்பவரின் நட்புக் கிடைக்கிறது. சந்திரநாதச் செட்டியாரால் ஜைன இலக்கியங்களிலும் சம்பிரதாயங்களிலும் நிறை அறிவு பெற்ற அப்பாசாமி நயினார் என்பவரின் தொடர்பும் உதவி யும் கிடைக்கிறது. அப்பாசாமி நயினார் சிறந்த தமிழறிஞ ரான அ. சக்கரவர்த்தி நயினாரவர்களுடைய தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது.

நச்சினார்க்கினியர் இடையிடையே மேற்கோளாகக் காட்டும் செய்யுட் பகுதிகள் இன்ன நூலைச் சார்ந்தவையென்று சீவக சிந்தாமணியை ஆராய்ந்து வந்தபோது உ.வே.சா- வால் தெரிந்துகொள்ளவே முடியவில்லை. தொல்காப்பியச் சூத்திரங்களையும் திருக்கோவையாரிலிருந்தும் திருக்குறளி லிருந்தும் சில செய்யுட் பகுதிகளை அவர் எடுத்துக் காட்டு கின்றதையும் அவர் அறிந்து கொண்டார். மற்ற மேற்கோள் களைப் படித்தபோது ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதாக இருந்ததே ஒழிய, இன்ன நூலில் உள்ளது, இன்ன விஷயத்திற்காக மேற்கோள் என்ற செய்திகள் அவ ருக்குத் தெளிவாகவில்லை.

சீவக சிந்தாமணியை மாத்திரம் படித்து ஆராய்வதனால் அந்த நூலைப் பதிப்பிக்க இயலாதென்றும் மற்றப் பழைய நூல்களையும் படித்துத் தெரிந்து கொண்டால்தான் சிந்தாம ணியின் பொருள் விளக்கமாகுமென்றும் உணர்ந்த அவ

ருக்கு சிந்தாமணியைப்போலத் தமிழ்நாட்டில் வழங்காத வேறு நூல்கள் என்ன என்ன உள்ளன என்ற ஆராய்ச்சி யிலே மனம் சென்றது. இராமசுவாமி முதலியார் சென்னைக் குப் போகும்போது அவருக்குச் சிலப்பதிகாரப் பிரதியைக் கொடுத்துச் சென்றார். சென்னைக்குச் சென்ற பிறகு அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மணிமேகலைப் பிரதியை அனுப்பினார்.

பழைய நூல்களைத் தொகுத்துப் பார்க்கும் விஷயத்தில் கவனம் சென்ற போது திருவாவடுதுறை மடத்தில் என்ன என்ன பழைய நூல்கள் உள்ளனவென்று தேடிப் பார்க்க எண்ணி ஒரு சனி, ஞாயிறு விடுமுறையில் அங்கிருந்த பழஞ் சுவடிக் கட்டுக்களைப் புரட்டிப் பார்க்கலானார். ஏடு களெல்லாம் மிகப் பழமையானவை. எடுத்தால் கையில் ஒட் டிக் கொள்ளக் கூடியவை. ஒரு கட்டில் 'ஏட்டுத் தொகை' என்றும் 'சங்க நூல்போல் தோற்றுகிறது' என்றும் எழுதிக் குமாரசாமித் தம்பிரான் கட்டி வைத்திருந்தார். அதை எடுத் துப் பார்க்கையில் நற்றிணை முதலிய சங்க நூல்களின் மூலம் என்று தெரிந்தது. 'எட்டுத் தொகை' என்பது தான் ஏட்டுத் தொகை ஆயிற்றென்று உணர்ந்தார். எல்லாவற்றின் மூலத்தையும் சேர்த்தெழுதிய ஏட்டுச் சுவடி ஒன்று அக்கட் டில் அகப்பட்டது. அதில் கலித்தொகையும், பரிபாடலும் இல்லை. எட்டுத் தொகையோடு பொருநராற்றுப் படை ஏட் டுச் சுவடி கிடைத்தது. பதினெண் கீழ்க் கணக்கு அடங்கிய அபூர்த்தியான சுவடி ஒன்றும் கிடைத்தது.

## இவற்றைப் படித்தறிந்து கொண்டதைப் பற்றி உ.வே.சா:

'சிந்தாமணி உரையில் காணப்பட்ட மேற்கோள்களைத் தனியே எழுதி வைத்துக்கொண்டு திருப்பித் திருப்பிப் பார்த்து வருவேன். அதனால் அவை மனப் பாடமாகவே இருந்தன. அவற்றிற் சில அந்தப் பழைய ஏடுகளில் காணப்பட்டன. அவற்றைக் கண்டபோது பெரிய புதையல் கிடைத்தது போன்ற சந்தோஷம் எனக்கு உண்டாயிற்று. மேலும் படிக்கத் தொடங்கினேன்.

படித்தால் எளிதில் விளங்கக்கூடிய நூல்களாக அவை தோற்றவில்லை. அவற்றில் உள்ளது வேறு ஒரு தனிப் பாஷை போலவே இருந்தது. ஆனாலும் நான் விடவில்லை. படித்துப் பார்த்தேன். தொல்காப்பிய உரைகளில் வரும் பல செய்யுட்கள் அவற்றில் இருந்தன. 'இந்த நூல் தொகு தியே ஒரு தனிப் பிரபஞ்சம்' என்ற எண்ணம் எனக்கு வரவர வலிமையடைந்தது.

அகநானூற்றைப் படித்து அதில் உள்ள செய்யுட்களுக்கு இலக்கமிட்டு அவற்றிலுள்ள அரும்பதங்களையும் தொடர்க ளையும் தொகுத்து அகராதி வரிசையில் எழுதி வைத்துக் கொண்டேன். நச்சினார்க்கினியர் எங்கெங்கே 'என்றார் பிற ரும்' என்று எழுதுகின்றாரோ அங்குள்ள மேற்கோட் பகுதிக ளிலுள்ள பதங்களையும் தொடர்களையும் அந்த அகராதி யிலே பார்ப்பேன். ஒன்று இரண்டு கிடைக்கும். அந்தப் பாட்டை எடுத்துப் பார்ப்பேன். சிந்தாமணியில் நச்சினார்க்-கினியர் எழுதியிருக்கும் உரையால் அந்தச் செய்யுள் ஒரு வாறு விளங்கும். அதிலே ஈடுபட்டு ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை படித்துப் பார்ப்பேன். சங்க நூல்க ளாகிய புதிய உலகத்தின் காட்சிகள் பனிமூடிய மலை போல என் கண்ணுக்குத் தோற்றலாயின. பனிப்படலம் படர்ந்திருந்தாலும் மலையினுடைய உயரமும் பருமையும் கண்ணுக்குப் புலப்படுதல் போலத் தெளிவாக விளங்கா விட்டாலும் அந்தச் சங்க நூற் செய்யுட்கள் பொருளமைதி யால், 'நிலத்தினும் பெரியனவாகவும், வானிலும் உயர்ந்தன வாகவும், கடல் நீரினும் ஆழமுடையனவாகவும்' தோற்றின. சிந்தாமணி உரையில், 'என்றார் அகத்திலும்' என்று முற்பகு தியில் வருகிறது. அங்கே உள்ள செய்யுட்பகுதி அகநா னூற்றில் இருந்தது.' என்று என் சரித்திரத்தில் குறிப்பிடு வார்.

சீவக சிந்தாமணியின் இறுதிப் பகுதிகளையெல்லாம் முடித்து முகவுரை முதலியவற்றையும் அச்சிற் கொடுத்து ஒரு முறை புரூவ் - திருத்தம் செய்து கொடுத்தவுடன் 'ஈசன் திருவருளால் காரியம் இனிது நிறைவேறியது' என்ற மகிழ்ச்சி மீதூர்ந்தது. உடம்பில் அப்போது ஒரு சோர்வு உண்டாயிற்று. இரவு பகலின்றி உழைத்த காலங்களிலெல் லாம் வாராத சோர்வு, முடித்துவிட்டோம் என்ற அளவில் காத்து நின்று பாய்வதுபோல என்னை அமிழ்த்தியது. அச் சுக் கூடத்தில் ஓரிடத்தில் படுத்து நித்திரை செய்யலானேன் சுகமாகத் தூக்கம் வந்தது.

தூங்கி விழித்தபோது முன்பே வந்து காத்திருந்த ஒருவர், 'இந்தாருங்கள் பத்துப்பாட்டு' என்று சொல்லி ஓர் ஏட்டுச் சுவடியை என் கையில் அளித்தார். கொடுத்தவரை நிமிர்ந்து பார்த்தேன். வேலூரிலுள்ள வீரசைவராகிய குமார சாமி ஐயரென்பரே அதை அளித்தவரென்று அறிந்தேன். அவர் இயற்றமிழாசிரியராகிய விசாகப் பெருமாளையரு டைய மருகர். அவர் பழைய வித்துவான்களின் வீடுகளில் ஆதரவற்றுக் கிடக்கும் ஏட்டுச்சுவடிகளை இலவசமாகவா வது, சிறு பொருள் கொடுத்தாவது அவ்வீட்டுப் பெண்பா லார் முதலியவர்களிடம் வாங்கி விரும்பியவர்களுக்குக் கொடுத்து ஊதியம் பெற்றுக் காலக்ஷேபம் செய்பவர் என உ.வே.சா என் சரித்திரத்தில் குறிப்பிட்டவற்றிலிருந்து சீவக சிந்தாமணியே அவருக்குப் பழந்தமிழ் நூல்களை அறிய வும் பயிலவும் காரணமாய் அமைந்தது.

அதுமட்டுமல்லாமல் 'சேக்கிழார் ஜைனர்கள் கட்டிய கதை அந்நூல் என்று சொன்னாரென்றும், நான் வாசித்திருந்தேன். அந்தச் சோழச் சக்கரவர்த்தியின் உள்ளத்தைப் பிணிக்கும் காவியரஸம் அந்த அரிய நூலில் இருப்பது உண்மை யென்றே நான் உணர்ந்தேன். அது 'பொய்யே கட்டி நடத் திய சிந்தாமணி'யானால் நமக்கென்ன? நாம் வேண்டுவன சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ் நயமுமே' என உ.வே.சா-வால் குறிப்பிடப்பட்ட சிந்தாமணியால்தான் அன் றைய காலத்து தமிழ்ப் புலவர்களால் மறக்கப்பட்டு அழிந் துபோகும் நிலையில் இருந்த பழந்தமிழ் நூல்களை மீட்டெ டுத்து வெளியிடுவதற்குத் திருப்புமுனையாக அமைந்தது.

குறிப்பு - இக்கட்டுரையின் மூலத்தகவல்கள் உ.வே.சா-வின் 'என் சரித்திரத்திலிருந்தும், பொ. வேல்சாமியின் முகநூல் குறிப்புகளிலிருந்தும் எடுக்கப்பட்டது.



sathiyathevan.s@thaiveedu.com



# யூரி ஜுகோவ்

## வரலாற்றை இருட்டறையிலிருந்து மீட்டுவரல்

**- தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ**

### தொடக்கக் குறிப்புகள்:

கடந்த மார்ச் மாதம் 3-ம் திகதி ரஷ்யாவின் முக்கியமான வரலாற்றாசிரியர்களில் ஒருவரான யூரி ஜுகோவ் இயற்கையெய்தினார். சோவியத் ஒன்றிய கால வரலாற்று உண்மைகளை ஆவணக் காப்பகங்களில் இருந்து தேடியெடுத்து ஆதாரங்களுடன் நிறுவிய முக்கிய பணியைச் செய்தவர் ஜுகோவ். இவரால் மறுக்கப்பட்ட பொய்கள், சான்றுகளுடன் எடுத்துரைத்த உண்மைகள் மேற்குலகக் கதையாடலுக்குச்



சங்கடமானவை. கடந்த அரை நூற்றாண்டுகாலமாக தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு வந்த பொய்களை ஒருவர் சான்றுகளோடு மறுக்கும் போது வரலாறே கேள்விக்குள்ளாகிறது. இதனாலேயோ என்னமோ பத்து நூல்களையும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதிய ஜுகோவ்வின் எந்தவொரு படைப்பும் இதுவரை ஆங்கிலத்தில் வெளியாகவில்லை. ஏன் வெளியாகவில்லை என்ற வினாவை விளங்கிக் கொள்வதற்கு அவர் என்ன எழுதினார் என்பதைப் புரிந்து கொள்வது முக்கியமானது.

1938-ல் மொஸ்கோவில் பிறந்த யூரி நிக்கலோவிச் ஜுகோவிற்கான (Yuri Nikolaevich Zhukov) அஞ்சலிக் குறிப்பை எழுதியுள்ள ரஷ்ய அறிவியல் அக்கடமியின் ரஷ்ய வரலாற்று நிறுவனம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

*'மார்ச் 3, 2023 அன்று, ரஷ்ய அறிவியல் அகாடமியின் ரஷ்ய வரலாற்றின் முதன்மை ஆராய்ச்சியாளர் யூரி நிக்கலோவிச் ஜுகோவ் தனது 86 வயதில் காலமானார். இவர் திறமையான மிகவும் மதிக்கப்பட்ட ஒரு ஆய்வாளராகவும் பொதுமக்களுக்கான அறிவுஜீவியாகவும் திகழ்ந்தார். யூரி நிக்கலோவிச் 40 ஆண்டுகளுக்கும் மேலாக எமது நிறுவனத்தில் பணியாற்றினார். அவர் 1981-இ எம்மோடு இணைந்தார். மாஸ்கோ அரசக் கட்டடக்கலை நிறுவனத்தில் (1961) பட்டம் பெற்ற பிறகு, காப்பகங்கள் மீதான அன்பைத் தூண்டிய நோவோஸ்டி ஊடக நிறுவனத்தில் (1962-1973) 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றினார். 1976-ல் சமூக அறிவியல் அகாடமியில் தனது முதுகலைப் படிப்பை முடித்தார். சோவியத் ஒன்றியத்தின் அரசியல் வரலாற்றில் அவரது சிறப்பு ஆர்வத்தில் இது ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தது. அவரது முனைவர்ப் பட்ட ஆய்வானது (1992) ரஷ்யப் புரட்சியின் பின்னர், சோவியத் பண்பாட்டை வளர்ப்பதற்கும் பேணுவதற்குமான அமைப்புகளின் உருவாக்கம் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது தொடர்பான ஆய்வுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. பிற்காலத்தில், அவரது ஆய்வுப்பணியின் முக்கிய கருப்பொருள் ஸ்டாலின், அவரது கூட்டாளிகள் மற்றும் அவரது ஆட்சிக்காலம். தனது வாழ்நாளில் 10 நூல்களையும் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார். அதனிலும் மேலாகச் சாதாரண மக்களுக்குத் தனது ஆய்வுகளை எடுத்துச் சென்றார். அவரது தொலைக்காட்சி விவாதங்கள் ஏராளமான கருத்தாடல்களை ரஷ்ய சமூகத்தில் உருவாக்கியது. செழுமையான வாழ்க்கை அனுபவத்தையும் விரிவான அறிவும் கொண்ட ஒரு பிரகாசமான நபர், அவருடன் தொடர்புகொள்வது சுவா*

*ரஸ்யமானது. அவர் தனது தொழிலில் அர்ப்பணிப்புடன் இருந்தார், கடைசி நாள் வரை அவர் பணிபுரிந்தார், காப்ப கங்களுக்குச் சென்றார், அறிவியல் திட்டங்களை உருவாக் கினார். அவரும் அவரது பணியும் மிகப் பிரகாசமான நினைவகம்!'*

ஜுகோவ் சோவியத் காலம் பற்றி நிறையவே எழுதியிருந்தா லும் கூட ஸ்டாலின் பற்றிய அவரது ஆய்வுகள் மிகுந்த கவ னத்தைப் பெற்றன. ஆவணக் காப்பகங்களில் இருந்து ஜுகோவ் ஸ்டாலினின் காலத்தை மறுவிசாரணை செய்தார். பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தார். அவரது இந்த ஆய்வுகள் மிகவும் முக்கியமானவை மட்டுமன்றி 1960-கள் முதல் பரப்பப்பட்டு வந்த அவதூறுகள், பொய்கள் என அனைத்தையும் கேள்விக்குட்படுத்தியது. இந்தப் பணிக்காக ஜுகோவ் என்றென்றும் நினைக்கப்படுவார். க்ருஷ்ச்சொவ், ஸ்டாலின் மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் குறித்து ஆய்வு செய்த ஜுகோவ் ஆவணக் காப்பகங்களில் இருந்து முக்கிய மான தகவல்களைக் கண்டுபிடித்துள்ளார். க்ருஷ்ச்சொவ் 1938-ல் உக்ரைனின் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது 30,000 பேரைக் கொல்லவோ அல்லது சிறையில் அடைக் கவோ மாஸ்கோவிற்குக் கோரிக்கை அனுப்பிய தந்தியை ஜுகோவ் பொலிட்பீரோ ஆவணக் காப்பகத்தில் கண்டுபிடித் தார். உக்ரேனில் 1938-ல் நடந்த கொலைகளுக்குப் பொறுப் புச் சொல்லவேண்டியவர் க்ருஷ்ச்சொவ் என்று ஜுகோவ் நிறு வுகிறார். அதேபோல இத்தந்திக்கு ஒரு வருடம் முன்பு, க்ருஷ்ச்சொவ் மாஸ்கோ பிராந்தியத்தில் கட்சித் தலைவராக இருந்தபோது, 8500 சோவியத் எதிர்ப்புத் 'துரோகிகளைச் சுட் டுக் கொல்லவும், கிட்டத்தட்ட 33,000 பேரை முகாம்களுக்கு அனுப்பவும் அனுமதி கேட்டதற்கான ஆவணங்களையும் ஜுகோவ் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்தார். இதேபோன்று ஏராளமான குற்றங்களுக்குப் பொறுப்பாளி க்ருஷ்ச்சொவ், ஆனால் ஸ்டாலினின் மரணத்தின் பின்னர் முழுப்பழியையும் ஸ்டாலின் மீது போட்டுவிட்டுத் தன்னை நிரபராதியாகப் பிர கடனம் செய்தார் என்று ஜுகோவ் தனது ஆய்வுகளின்வழி வெளிப்படுத்தினார்.

## ஜுகோவ்வின் ஆய்வுலகம்:

ஜுகோவ் பத்து நூல்களை எழுதியுள்ள போதும் அவர் ஸ்டா லின் தொடர்பான சிறப்பு ஆய்வாளர் என்றே அறியப்பட்டார். ஸ்டாலின் தொடர்பான நூல்களுக்குப் புறம்பாக அவர் எழு திய இரண்டு நூல்கள் மிகவும் முக்கியமானவை. முதலாவது: 'புதிய பொருளாதாரக் கொள்கையின் மறுபக்கம் 1923 - 1925: சோவியத் ஒன்றியத்தில் பொருளாதார அரசியற் போராட்டம்'. 1921-ல் சோவியத் ரஷ்யா எதிர்கொண்ட பொரு ளாதார நெருக்கடிகளைக் கையாளும் பொருட்டு புதிய பொருளாதாரக் கொள்கையை லெனின் அறிமுகப்படுத்தி னார். இப்புதிய பொருளாதாரக் கொள்கையின் வரலாறு ரஷ்ய வரலாற்றின் மிகவும் மர்மமான பக்கங்களில் ஒன்றா கும். அது உண்மையில் என்னவென்று பெரும்பாலானோருக் குத் தெரியாது. சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கு 5 ஆண்டு களுக்குப் பிறகு சோவியத் நாட்டில் ஒருவகைப்பட்ட முதலா ளித்துவம் வளர ஏன் அனுமதி வழங்கப்பட்டது என்பது புதி ரான வினாவாகும். ஆய்வாளர்கள் இந்த வரலாற்று நிகழ் வுக்கு முரண்பட்ட மதிப்பீடுகளை வழங்குகிறார்கள். ஒருபுறம் 'இக்கொள்கையே நாட்டிற்கு உணவளித்தது' முதல் 'இக் கொள்கையே போல்ஷிவிக்குகளின் மிகப்பெரிய தவறு' வரை பலதரப்பட்ட வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சோவியத் ரஷ்யாவின் பொருளாதாரத்திற்குப் புதிய பொருளாதாரக் கொள்கை உண்மையில் உயிர்நாடியாக மாறியதா அல்லது அதன் அறிமுகம் எதிர்பார்த்த முடிவுகளைத் தரவில்லையா என்பதைக் கண்டறிய இந்நூல் உதவுகிறது. இக்கொள்கை எப்படி, ஏன் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை இந்தப் புத் தகம் விரிவாகக் காட்டுகிறது. இக்கொள்கை என்ன முடிவுக ளைக் கொண்டுவந்து சேர்த்தது? நேர்மையற்ற ஆரம்பகால சோவியத் அதிகாரிகள் பொருளாதார நெருக்கடியிலிருந்து எவ்வாறு லாபம் ஈட்டினார்கள்? ஸ்டாலின், ட்ரொட்ஸ்கி, கமெ னேவ், புகாரின் மற்றும் சோகோல்னிகோவ் ஆகியோருக்கு இடையே பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பாக என்ன உள்கட்சிப் போராட்டம் வெடித்தது? இந்தச் சண்டையின் வர லாற்று விளைவுகள் என்ன? ஆகிய கேள்விகளை இந்நூல் விரிவாக ஆராய்கிறது.

இரண்டாவது நூலின் பெயர் கிரெம்லின் இரகசியங்கள்: ஸ்டாலின், மொலோடோவ், பெரியா, மாலென்கோவ். இந் நூல் சோவியத் ஒன்றியத்தின் அதிகார இயங்கியலைப் பேசு கிறது. இந்நூலுக்கான முன்னுரையை ஜுகோவ் பின்வருமாறு தொடங்குகிறார்: 'பல தசாப்தங்களாக, சோவியத் ஒன்றியத் தில் உண்மையில் அதிகாரம் எங்கே இருக்கிறது என்பதை தீர்மானிப்பது நடைமுறையில் சாத்தியமற்றது. கிரெம்ளினில் இருந்தவர்கள் இது தொடர்பான அனைத்தையும் கவனமாக வும் நம்பகத் தன்மையுடனும் பொதுமக்களிடமிருந்து மறைத் தனர். உண்மையில், கட்சியின் பெயர், அதன் மத்திய குழு, உச்ச கவுன்சில் மற்றும் சோவியத் ஒன்றியத்தின் அமைச்சர் கள் கவுன்சில் ஆகியவற்றின் பின்னால் ஒளிந்துகொண்டு, நாட்டின் வாழ்க்கை சார்ந்து இருக்கும் மிக முக்கியமான முடிவுகளை யார் எடுக்கிறார்கள் என்பதையும் அவர்கள் மறைத்தனர். சோவியத் ஒன்றியம் தொடர்பாகவும் மக்கள் தொடர்பாகவும் முடிவுகள் எவ்வாறு எடுக்கப்பட்டன என்பது புரியாத புதிராக இருந்து வந்துள்ளது. இதை எளிதாக விளக் குவதாயின் ஒரு தவறு, தவறான கணிப்பீடு மற்றும் குறிப் பாக அபிவிருத்தித் திட்டங்கள் தோல்வியுற்றால், தங்கள் செயலுக்கு யாரும் பொறுப்பேற்க விரும்பவில்லை. அவர்க ளது தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டாலே அவர்களது அதிகா ரம் பறிக்கப்பட்டது. ஆதலால் ஏராளமான தவறுகளை பல ரால் எளிதில் மேற்கொள்ளவும் அதை மறைக்கவும் முடிந் தது. உண்மையான அதிகாரம் எப்போதும் 'மூடப்பட்டதாக இருந்தது', திரைக்குப் பின்னால் இருந்தது. இது ஸ்டாலினுக் குப் பிறகு மிகவும் மோசமானதாயும் கேவலமானதாயும் மாறி யது.'

1930-ளின் முடிவில் இருந்து, கட்சியை அரசாங்கத்திலிருந்து பிரிக்கத் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டத னூடு நாட்டின் அன்றாட இயங்கியலில் கட்சியின் பங்கைக் கணிசமாகக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கைகள் இடம்பெற் றன. ஒரு இயல்பான இருப்புக்குத் திரும்புவதற்கான முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன. எல்லாவற்றையும் சித்தாந்தத்தின் சுமை ஏற்றப்படாமல் கல்வியறிவின் வளர்ச்சியுடன், சமூகத்

தின் ஒரு சிறிய பகுதியில் அரசியல் சுய உணர்வு தோன்றுவது, படிப்படியாக ஜனநாயக வடிவங்கள் மற்றும் சுய-அரசாங்கத்திற்கு நகரும் முயற்சிகள் என்பன ஊக்குவிக்கப்பட்டன என்று சொல்கிறார் ஜுகோவ்.

இந்தப் புத்தகம் சோவியத் ஒன்றியத்தில் அதிகாரப் பிரச்சினையின் பல்பரிமாணத்தை 1938-1954 என்ற குறுகிய காலத்துக்குள் மட்டுப்படுத்தி ஆராய்கிறது. ரஷ்யாவின் பல்வேறு காப்பகங்களில் சேமிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் ஆழமான பகுப்பாய்வின் அடிப்படையில் பல புதிய தகவல்களை இந்நூல் தருகிறது.

யூரி ஜுகோவ் ஸ்டாலின் தொடர்பான நூல்களுக்காகவே நன்கு அறியப்பட்டவர். அவரது ஸ்டாலின் தொடர்பான நூல்களில் நன்கறியப்பட்ட நூல் 'இன்னொரு ஸ்டாலின்: 1933-1937 காலப்பகுதியில் சோவியத் ஒன்றியத்தில் அரசியல் சீர்திருத்தங்கள்'. இந்நூலின் வழி ஸ்டாலின் ஒரு ஜனநாயகவாதி என்ற செய்தியை ஆதாரங்களோடு நிறுவுகிறார் ஜுகோவ். ஸ்டாலினை அதிகார வெறி கொண்ட சர்வாதிகாரி, லெனினின் மரபுக்குத் துரோகம் இழைத்தவர் என்று க்ருஷ்ச்சொவினதும் அவரது ஆதரவாளர்களினதும் விளக்கம் 1950-களின் பிற்பகுதியில் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரிடலின் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. ஸ்டாலினைப் பற்றிய கதையாடல் கெடுபிடிப்போரில் தோற்றம் பெற்று முதலாளித்துவ விருப்பத்திற்கு உதவியது. ட்ரொட்ஸ்கியின் தோல்வி 'உண்மை' என்று வாதிட ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் தேவைக்கும் இது பொருந்தியது. எனவே ஸ்டாலின் பற்றிய கட்டுக்கதைகளே பொதுப்புத்தியில் நிலைபெற்றன. இன்று ஆவணங்களின் வழி உண்மையைத் தேடியறிவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அதன்வழி ஸ்டாலின் குறித்துக் கட்டமைக்கப்பட்ட விம்பங்களை இந்நூல் சுக்குநூறாய் உடைத்தெறிகிறது.

யூரி ஜுகோவ் சோவியத் ஒன்றியத்தில் 1930-களின் வியத்தகு காலத்தை மீண்டும் உருவாக்குகிறார். இக்காலப்பகுதி மிகவும் கொந்தளிப்பானது, சோவியத் குடியரசின் எல்லைக்கோடுகள் சவாலுக்குட்படுகின்றன. ஸ்டாலினும் அவரது தோழர்களும் (தலைமைக் குழு) முற்றிலும் புதிய உள் மற்றும் வெளி அரசியல் சூழ்நிலையில் செயற்பட வேண்டும். மிகவும் கடினமான சர்வதேசச் சூழ்நிலையானது 1930-களின் நடுப்பகுதியில் ஸ்டாலினின் ஆதரவாளர்களை 'உலக பாட்டாளி வர்க்கப் புரட்சியின்' போக்கை அதிகாரபூர்வமாகக் குறைக்கவும், 'ஒரே நாட்டில் சோசலிசத்தைக் கட்டமைக்க'ப் பிரகடனப்படுத்தவும், ரஷ்யாவைப் போருக்குத் தயார்படுத்தவும் கட்டாயப்படுத்துகிறது. இவற்றுக்கிடையில் யாராலும் சிந்தித்துப் பார்க்கவியலாதவொன்றை ஸ்டாலின் சிந்திக்கிறார். சோவியத் சமூகத்தின் ஜனநாயகமயமாக்கல் பற்றியும் அதன் அவசியம் பற்றியும் அவர் கவனம் கொள்கிறார். அக்காலப்பகுதியில் சோவியத் ஒன்றியத்தைச் சூழ்ந்துள்ள நெருக்கடிகளின் பின்னணியில் இவ்வாறானவொன்றை வேறு எவராலும் சிந்தித்துப் பார்க்கவியலாது. இந்தப் பின்புலத்திலேயே நடைபெற்ற புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணி தொடங்குகிறது. மாவட்ட மற்றும் நகரக் குழுக்களில் இருந்து சோவியத் ஒன்றியத்தின் உச்ச சோவியத்து வரை அனைத்து அதிகார அமைப்புகளுக்கும் மாற்று அடிப்படையில் பொது, நேரடி, சமமான மற்றும் இரகசியத் தேர்தல்களின் உதவியுடன் உறுப்பினர்களைத் தெரியும் ஜனநாயகமயமாக்கலை ஸ்டாலின் விரும்பினார். இதன்மூலம் அதிகாரத்தின் ருசியை அனுபவித்திருந்த கட்சியின் முக்கிய உறுப்பினர்களோடு முரண்பட நேர்ந்தது. இதனால் கட்சி நிர்வாகிகளின் பிடிவாதமாக நயவஞ்சகமான போராட்டத்தின் விளைவால் 1936-ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு ஸ்டாலின் எதிர்பார்த்த குறிக்கோள் அல்ல, குறிக்கோள் ஒரு புதிய நீதியான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதாகும், மேலும் அரசியலமைப்பு இந்தச் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உதவும் பல வழிமுறைகளில் ஒன்றாகும். ஆனால் பல்வேறு மட்டங்களில் அதிகாரத்தில் இருந்தோர் வசதியான வாழ்க்கைக்காகப் பாடுபட்டனர். அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படாவிட்டால், அவர்கள் லட்சியத்தை அழித்து சோசலிசத்தை அழித்துவிடுவார்கள் என்பதை ஸ்டாலின் புரிந்துகொண்டார். அதிகாரத்துவத்தின் வாழ்க்கையை அவதானிக்கும்போது, சமூகம் படிப்படியாக உற்சாகத்தை இழந்து, ஓரங்கட்டத் தொடங்கும். இறுதியில் சோவியத் ஒன்றியத்தில் அதுதான் நடந்தது.

புதிய அரசியலமைப்பின் அடிப்படையில் தேர்தல்களின் உண்மையான வழிமுறைகள் மற்றும் விதிகளை விளக்குவதற்கு ஸ்டாலினின் தலைமை தொடர்ந்து முயற்சிக்கிறது. ஒவ்வொரு பிளீனியத்திலும், கூட்டங்களிலும், காங்கிரஸிலும் ஸ்டாலின் இதை விளங்கவைக்கக் கடுமையாகப் போராடினார். ஆனால் கட்சியின் பெரும்பான்மை இதைக் கேட்கவில்லை என்பதை ஜுகோவ் நிறுவுகிறார். மேலும் இத்திட்டம் பற்றிய விவாதம் வருகின்ற போதெல்லாம் விவாதத்திற்குப் பதிலாக, 'மக்களின் எதிரிகள்' பற்றி ஏனையோர் பேசினர். 'எதிரிகள் மற்றும் உளவாளிகள்' பற்றிய அச்சத்தை எழுப்பினர். இந்தப் போராட்டத்தில் இறுதியில் ஸ்டாலின் தோல்வியடைந்தார் என்று ஜுகோவ் சுட்டிக்காட்டுகிறார்.

இதற்கான முன்னுரையில் பின்வருமாறு எழுதுகிறார் ஜுகோவ்: 'நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஸ்டாலின் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் உலகின் மிக முக்கியமான அரசியல் தலைவர். இதற்கான ஆதாரம் ஒரு எளிய, வெளிப்படையான, மறுக்க முடியாத உண்மை. ஸ்டாலினைப் பற்றிய புத்தகங்கள், கட்டுரைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை, மிகவும் எதிர்மறையாக இருந்தாலும், சமீபத்திய ஆண்டுகளில் உருவாக்கப்பட்டவை, அவரது வாழ்நாளில் அவரைப் பற்றி எழுதப்பட்டதை விட பல மடங்கு அதிகமாகும். இன்னொன்றையும் ஒப்புக்கொள்ள வேண்டும். இப்போது ஸ்டாலினின் பெயர் நமது வரலாற்றின் ஒரு சகாப்தத்தின் ஒரு வகையான அடையாளமாகச் செயல்படுகிறது, அதை மதிப்பிடுவதற்கு, நாட்டின் தேசிய நலன்கள் என்னவாக இருக்க வேண்டும், அது எப்படி இருக்க வேண்டும், எப்படி வளர வேண்டும், என்ற போக்கைப் பற்றிய இன்றைய யோசனைகள் பின்பற்றப்படுகின்றன என்று ஆராயவேண்டும். ஸ்டாலினின் பெயர் தற்போதைய ஆளும் ஆட்சியின் ஆதரவாளர்களாலும் எதிர்க்கட்சிகளாலும் அரசியல் போராட்டத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படுகி

றது. அதே நேரத்தில், அனைத்து அரசியல்வாதிகளும், தங்களை யார் என்று கருதினாலும் (ஸ்டாலினிஸ்டுகளாக அல்லது ஸ்டாலினிச எதிர்ப்பாளர்களாக) நாட்டிற்கும் நாட்டிற்குள்ளும் நடந்த அனைத்திற்கும் ஒருமனதாக ஸ்டாலின் மட்டுமே காரணம், அவர் மட்டுமே பொறுப்பு என்று சொல்கிறார்கள். உண்மை அதுவல்ல. ஸ்டாலினைப் பற்றிய கட்டுக்கதைகள் புதியவை அல்ல. 1990-களுக்குப் பிறகு ஆவணக் காப்பகங்கள் திறக்கப்பட்ட பின்னர் எழுதியவர்களில் எவரும் உண்மையைச் சொல்லத் துணியவில்லை. அடிப்படையான ஓர் கேள்வியை யாருமே கேட்கவில்லை. கட்சியின் தலைமைக்கான போராட்டத்தில் ஏன் ஸ்டாலின் வெற்றிபெற்றார். ஏன் ட்ரொட்ஸ்கியோ, ஜினோவியேவ்வோ அல்லது புகாரினோ வெற்றிபெறவில்லை. இந்த வினாவுடனேயே ஸ்டாலினை அணுக முடியும். இதனோடு தொடர்புடைய இன்னும் சில வினாக்களும் உள்ளன: ஸ்டாலின் தனது வாழ்நாள் முழுவதும் எதற்காகப் பாடுபட்டார்? கட்டுப்பாடற்ற அதிகாரத்துக்காக மட்டுமா? அவர் தனது திட்டங்களை, இலக்குகளை மறைத்தாரா அல்லது வெளிப்படையாகச் செயல்பட்டாரா? இவற்றிலிருந்து ஸ்டாலினை விளங்கிக் கொள்ளவும் விளங்கப்படுத்தவும் முடியும்.'

### ஸ்டாலின் குறித்த ஆய்வுகள்:

ஜுகோவ் ஸ்டாலின் குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். 'ஸ்டாலின்: ஆர்ட்டின் கவசம்' என்ற நூல் ரஷ்யாவின் வடதுருவ எல்லைகளைப் (ஆர்டிக் பகுதியை) பாதுகாத்து உறுதிப்படுத்துவதில் ஸ்டாலினின் முதன்மையான பங்களிப்பைக் கவனத்திற்குட்படுத்துகிறது. 19-ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து ரஷ்யாவின் வடக்குப் பகுதிகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதையும், அதை உறுதிப்படுத்துவதில் ஸ்டாலினின் பாத்திரத்தையும் யூரி ஜுகோவ் புத்தகத்தில் விரிவாக விவரிக்கிறார். இந்த மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியத்தில் ஸ்டாலினின் கொள்கையானது எவ்வாறு 1884-ல் திட்டமிடப்பட்ட மூலோபாய முக்கியத்துவத்தை நடைமுறைப்படுத்தியது என்றும், இதனால் எவ்வாறு ரஷ்யப் பிரதேசத்தின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் பணிகள் தீர்க்கப்பட்டன, இராணுவ வலிமை கட்டமைக்கப்பட்டது, வடக்கின் பொருளாதாரம் மேம்பட்டது, பிராந்தியங்கள் வளர்ச்சியடைந்தன என்பதை விரிவாக இப்புத்தகம் பேசுகிறது. ஸ்டாலின் எவ்வாறு இந்தப் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சோவியத் ஒன்றியத்தின் கவசமாக எவ்வாறு அதன் வடதுருவ எல்லைகளை மாற்றினார் என்பது மிகவும் முக்கியமானது.

இந்நூலை ஜுகோவ் பின்வருமாறு நிறைவு செய்கிறார்: 'நான் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஆர்ட்டிக் பகுதி பற்றி ஆய்வு செய்துள்ளேன். இது ஸ்டாலினின் வடக்கு எல்லைப்புறத்தின் பாதுகாப்பு என்ற குறிப்பில் இருந்து தொடங்கியது. ஸ்டாலின் காலத்தில் இந்த எல்லைகளை உறுதி செய்ய அதீத கவனம் செலுத்தப்பட்டது. இந்த பகுதியின் முக்கியத்துவத்தை எல்லோரையும் விட ஸ்டாலினே மிகத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் அறிந்திருந்தார். வடபகுதியில் ஒரு கவசத்தையே அவர் உருவாக்கினார். சோவியத் மக்கள் இதன் முக்கியத்துவத்தை அறிந்திருந்தனர், பெரும் இராணுவ செலவினங்களை அனுமதித்தனர். ஆனால் ஸ்டாலின் அத்தியாவசியமான செலவினங்களை மட்டுமே அனுமதித்தார். இப்போது மீட்டிப் பார்க்கின்ற போது வடதுருவத்தில் பாதுகாக்க என்ன இருந்தது என்பதை நான் புரிந்துகொண்டேன். சுகோட்கா மற்றும் வடக்கு யாகுடியாவின் தங்கச் சுரங்கங்கள். மத்திய யாகுடியாவில் வைரச் சுரங்கங்கள் நோரில்ஸ்க்கில் நிக்கல், பிளாட்டினம் மற்றும் தங்கச் சுரங்கங்கள் கிழக்கு மற்றும் மேற்கு சைபீரியாவின் எண்ணெய் யமலில் எரிவாயு. நாட்டின் இந்த அனைத்துச் செல்வங்களுக்கும் சிறந்த, நம்பகமான பாதுகாப்பு என்பது வலுவான வடக்குக் கடற்படையைக் கட்டமைப்பதே என்பதை ஸ்டா




லின் அறிந்திருந்தார். அதன்மூலமே வடக்கையும் அதன் வளங்களையும் பாதுகாக்கலாம் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அவரது மேற்பார்வையில் உருப்பெற்ற வடக்குக் கடற்படை மிகவும் வலுவானதாக இருந்தது. 1991 மற்றும் 1993 நிகழ்வுகள் ஆர்க்டிக் கேடயத்தை உடைத்தது. ரஷ்ய கடற்படையின் சீர்திருத்தம் என்று அழைக்கப்படும் போக்கில், ஏற்கனவே 1995 வாக்கில், கப்பற்படை பாதியாகக் குறைக்கப்பட்டது. இவ்வாறு தொடங்கிய மாற்றங்கள் இறுதியில் வடக்குக் கடற்படையின் அழிவுடன் முடிந்தது. நாடு பாதுகாப்பற்றதாக மாறியது, ஆனால் யெல்ட்சின் அமெரிக்க

ஜனாதிபதியுடன் தனிப்பட்ட நட்பை அறிவிக்க முடிந்தது. ஆர்க்டிக் உடைமைகள் மீதான இராணுவக் கட்டுப்பாட்டை இழந்த நாடு, அரசியல் அச்சுறுத்தலை எதிர்கொண்டு பாது காப்பற்றதாக மாறியது. 2004-ல் தொடங்கி, டென்மார்க், கனடா, நோர்வே போன்ற நாடுகள் ரஷ்யாவின் துருவப் பகு தியில் உள்ள உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்கத் தொடங்




கின. ஆர்க்டிக் பெருங்கடலின் கடல் எல்லைகளை மாற்றுவ தனூடு ரஷ்யாவின் பணக்கார எரிவாயு மற்றும் எண்ணெய் வயல்களைப் பறிக்க முயல்கின்றன. தேசிய நலன்களைப் பாதுகாக்க வேண்டிய அவசரத்திலும் அவசியத்திலும் இன்று ரஷ்யா உள்ளது. இதைப் பாதுகாப்பது தவிர்க்கவியலாதது.'

இப்புத்தகத்திற்கான ஜுகோவ்வின் நிறைவுக் குறிப்புகள் இன் றைய உக்ரேனிய - ரஷ்ய நெருக்கடியின் இன்னொரு பரிமா ணத்தை விளக்குகின்றன. இன்று இந்தப் போரில் மேற்குலக நாடுகளின் அளவுகடந்த அக்கறை, வடதுருவ எல்லை நாடுகளின் செயற்பாடுகள் - நோர்த் ஸ் ரீம் எண்ணெய்க் குழாய் வெடிப்பில் நோர்வேயின் பங்கு, பின்லாந்து நேட்டோ வில் இணைந்தமை - ஆகியவற்றுக்கான காரணிகளைப் புரிந்துகொள்வது இலகுவாகின்றது.

இவரது இன்னொரு நூலாக 'ஸ்டாலினின் மக்கள் பேரரசு', 1934-1938 காலப்பகுதியில் சோவியத் ஒன்றியத்தின் நிர்வாகத் தின் வழிமுறைகள் பற்றிய ஒரு முறையான விளக்கத்தை வழங்குகிறது. அப்போது ஸ்டாலினின் கைகளில் இருந்த அந்த அதிகார நெம்புகோல்கள் குறித்த ஒரு சித்திரத்தை இந்நூல் வரைகிறது. இதில் 1937-1938-ம் ஆண்டுகளில் அடக்குமுறைகளுக்குக் காரணம் ஸ்டாலினின் 'தீய விருப்பம்' அல்ல என்பதை ஸ்டாலினின் தனிப்பட்ட காப்பகம் உட்பட உண்மைப் பொருட்களின் அடிப்படையில் ஜுகோவ் உறுதியு டன் நிருபிக்கிறார். இந்த அடக்குமுறைகள் உயர்மட்டக் கட் சியினர் பலரால் விரும்பப்பட்டு நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவர்கள் ஸ்டாலினின் மரணத்தின் பின்னர் 'பாதிக் கப்பட்ட அப்பாவிகளாக' காட்டப்பட்டனர். எல்லோரும் சேர்ந்து முழுப் பழியையும் ஸ்டாலினின் தலையில் கட்டினர். ஆனால் ஸ்டாலின் சோவியத் சமூகத்தை ஜனநாயகமாக்க முயன்றார். சோவியத் ஒன்றியத்தில் ஓர் உண்மையான மக் கள் பேரரசை உருவாக்க ஸ்டாலின் எவ்வாறெல்லாம் முயன் றார் என்று இந்நூல் ஆவணச்சான்றுகளுடன் எடுத்துரைக்கி றது.

நான்கு பகுதிகளாக எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதற்பகுதி முதலாம் உலகப் போரின் முடிவுக்கும் இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்திற்கும் இடையிலான இரண்டு தசாப்த கால வரலாற்றைச் சோவியத் ஒன்றியத்தின் அடிப்படையில் ஆராய்கிறது. 'பழைய கோட்பாடுகளைத் திருத்த வேண்டிய தன் அவசியம்' என்று தலைப்பிடப்பட்ட இப்பகுதி இக்காலப் பகுதியில் ஸ்டாலின் எதிர்நோக்கிய சவால்கள் பற்றி விரி வாக எடுத்துரைக்கிறார். இவற்றை மூன்றாக நோக்கவியலும்: கைத்தொழில்மயமாக்கலில் எதிர்நோக்கிய சிக்கல்கள், ஜன நாயகமயமாக்கல் நகர்வின் தடைகள் மற்றும் கிழக்கு எல்லை நெருக்கடிகள். இவை ஒவ்வொன்றையும் ஸ்டாலின் எவ்வாறு எதிர்கொண்டார் என்பதை ஆவணங்களின் உதவி யோடு இந்நூல் விளக்குகிறது. உதாரணமாக ஜப்பான் சீனா வின் மஞ்சூரியா மீது தாக்குதல் தொடுத்தபோது போரை ஸ்டாலின் விரும்பவில்லை. மாறாகப் போர் நிறுத்தத்திற்கு அழைப்புவிடுத்தார். அது நிராகரிக்கப்பட்ட நிலையில் உள் நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த மாவோ தலைமையிலான சீன கம்யூனிஸ்ட் கட்சியையும் சியாங்கே சேக் தலைமையி லான கோமித்தானையும் போர் எதிர்ப்பு முன்னணி ஒன்றை உருவாக்கக் கோரினார். சுயாங்கே சேக் அதை நிராகரித்து சோவியத் மீது தாக்குதல் நடத்தினார். மாவோவும் ஸ்டாலி னும் இணைந்து செயற்படுவது தவிர்க்கவியலாததாயிற்று. சீன சோவியத் குடியரசை மாவோ அறிவித்தார்.

இந்நூலின் இரண்டாவது பகுதி 'சோவியத் ஒன்றிய கம்யூ னிஸ்ட் கட்சியின் 17-வது காங்கிரசுக்காக ஸ்டாலினின் அறிக்கை: சோவியத்தின் அடிப்படைக் கொள்கையில் புதிய மாற்றங்கள்' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இதில் புதிய பொருளாதாரக் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவரல், உலகளாவிய புரட்சிக்கு மாற்றான தனது முன்மொழிவுகள், நிர்வாகச் சீர்கேடுகளைச் சரிசெய்ய வேண்டியதன் அவசியம், வலது சந்தர்ப்பவாதத்தை முறியடிக்க வேண்டியதன் அவசி யம் ஆகியன பற்றி விரிவாக ஸ்டாலின் அறிக்கையிட்டுள் ளதாக இப்பகுதி எடுத்துக் காட்டுகிறது. ஸ்டாலின் குறிப்பாக நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து மிகுந்த சினமும் அதிருப்தியு முற்றவராக இருந்தார். இதை முகமற்ற ஆபத்து என்று

விளித்தார். 'நிர்வாக எந்திரத்தில் அதிகாரத்துவமும் எதேட்ச திகாரமும்' என்று ஸ்டாலின் அறிவித்தார், அரசநிறுவனங்க ளின் செயற்பாடின்மை, தனிப்பட்ட பொறுப்பு இல்லாமை, செயல்திறனின் முறையான சரிபார்ப்பு இல்லாதது, சுயவிமர்ச னம் பற்றிய பயம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டினார். 'இங்கு தான் நமது கஷ்டங்களின் ஆதாரங்கள் உள்ளன, இங்கு தான் நமது கஷ்டங்கள் இப்போது கூடுகட்டுகின்றன' என்று எச்சரித்தார். அதேவேளை: 'இவர்கள் கடந்த காலத்தில் நன்கு அறியப்பட்ட தகுதிகளைக் கொண்டவர்கள், பிரபுக்க ளாக மாறியவர்கள், கட்சி மற்றும் சோவியத் சட்டங்கள் அவர்களுக்காக அல்ல, முட்டாள்களுக்காக எழுதப்பட்டவை என்று நம்புபவர்கள். அத்தகைய தொழிலாளர்களை என்ன செய்வது? கடந்த காலத்தில் அவர்களின் தகுதியைப் பொருட்படுத்தாமல், அவர்களை தலைமைப் பதவிகளில் இருந்து நீக்கத் தயங்கக்கூடாது. அவர்களைப் பதவி நீக்கம் செய்து பத்திரிகைகளில் வெளியிட வேண்டும். இந்தத் திமிர் பிடித்த அதிகாரவர்க்கங்களின் ஆணவத்தை வீழ்த்தி அவர்க ளைத் தங்கள் இடத்தில் அமர்த்துவதற்கு இது அவசியம். கட்சி மற்றும் சோவியத் ஒழுக்கத்தை வலுப்படுத்த இது அவ சியம்' என்று தனது நிலைப்பாட்டைத் தெளிவாகவும் உறுதி யாகவும் ஸ்டாலின் அறிவித்தார்.

இந்தப் பின்புலத்திலேயே ஸ்டாலினின் சிறுகுழுவினர் மீதான அதிகாரம் குவிக்கப்பட்டதை நோக்க வேண்டும் என்று நூலா சிரியர் வாதிடுகிறார். இது ஸ்டாலினின் அதிகார மோகத்தால் விளைந்ததல்ல. சந்தேகத்திற்கு இடமின்றி, இதற்குப் பின் னால் முற்றிலும் மாறுபட்ட காரணங்கள் இருந்தன. முதலாவ தாக, மேற்கு மற்றும் கிழக்கில் இருந்து ஒரே நேரத்தில் சோவியத் ஒன்றியத்தின் மீது மிக நெருக்கமான தாக்குதலின் அச்சுறுத்தல் இருந்தது. உண்மையான இராணுவ அபாயத் தின் நிழலில் செம்படை வலுவற்றதாக இருந்தது. செம்படை வலுவானதாக இல்லை. இராணுவ உபகரணங்கள், ஆயதங் கள், ஏனைய தளபாடங்கள் என்பவற்றுக்கு மிகுந்த பற்றாக் குறை இருந்தது. நவீனமயப்பட்டதாக அவை இல்லை. இத னால் ஸ்டாலினும் அவரது நெருங்கிய குழுவும் மிகவும் இக் கட்டான சூழலில் தம்மைக் கண்டனர். இரண்டாவது, வினைத் திறனான நிர்வாகத்தின் தேவையை அவர்கள் உணர்ந்தனர். அது மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் முதல் தேசிய பாதுகாப்பு வரை அனைத்திற்கும் அத்தியாவசியமான ஒன் றாக இருந்தது. இதனால் நிர்வாக மேலாண்மை தவிர்க்கவிய லாததாயிற்று. இவ்விரண்டும் அதிகாரக் குவிப்புக்கான அடிப் படைக் காரணங்கள் என்கிறார் ஜுகோவ்.

இந்நூலின் மூன்றாவது பகுதி எவ்வாறு புதிய காலகட்டத்திற் குச் சோவியத் ஒன்றியத்தை ஸ்டாலின் தயார் செய்தார் என் பது பற்றிப் பேசுகிறது. நான்காவது, நிரந்தரப் புரட்சி என்று சித்தாந்தத்தை மறுதலித்தலும் ஒரு நாட்டில் சோசலிசம் என்ற கருத்தாக்கத்தை வலுப்படுத்தலும் என்பதை நடை முறை யதார்த்தங்கள் பற்றிப் பேசுகிறது. நிறைவுப்பகுதி சோவியத் ஒன்றியத்தின் அரசியலமைப்பை மாற்றியமைப்ப தற்கான போராட்டம் குறித்துப் பல முக்கியமான செய்திக ளைத் தருகிறது. இந்நூலில் இப்பகுதி மிகவும் முக்கியமா னது. ஒரு மக்களாட்சியை உருவாக்க ஸ்டாலின் எவ்வாறு கடுமையாகப் பாடுபட்டார் என்பதையும் அதற்கான எதிர்ப்பு கட்சிக்குள்ளேயே இருந்து வெளிப்பட்டது என்பதையும் இந் தப்பகுதியில் ஜுகோவ் விளக்குகிறார்.

மேற்சொன்ன நூல்களுக்கு அப்பால் ஜுகோவ்வின் ஸ்டாலின் பற்றிய இன்னொரு நூல் மிகவும் பிரபலமானது. ரஷ்ய மொழியில் பல இலட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந்த 'ஒரு ஸ்டா லினிஸ்டின் கையேடு' குறித்தும் சொல்லியாக வேண்டும். இது ஸ்டாலின் காலம் குறித்துச் சொல்லப்பட்ட பல சம்ப வங்களை ஆவணங்களின் உதவியுடன் மறுக்கிறது.

### நிறைவுக் குறிப்புகள்:

வரலாற்றாய்வாளர் யூரி ஜுகோவ்வின் ஆய்வுகள் சில முக்கி யமான வலிய செய்திகளைச் சொல்லிச் செல்கின்றன. எமக் குச் சொல்லப்பட்ட வரலாறு என்பது உண்மையானதா? வர லாற்றை யார்? ஏன் கட்டமைக்கிறார்கள்? வரலாற்றை மீள்வி சாரணை செய்ய வேண்டியதன் அவசியம் என்ன? போன்ற வினாக்களை இனியாவது நாம் எழுப்பியாக வேண்டும். இந் தக் கட்டுரையை ஒரு நடைமுறை உதாரணத்தோடு நிறைவு செய்வது பொருத்தம். கடந்த பெப்ரவரியில் போலந்தின் தலைநகர் வார்சாவில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பைக் கண்டித்தார்: '100,000-க்கும் மேற்பட்ட படைகள் மற்றொரு நாட்டை ஆக்கி ரமித்திருக்கும் இச்செயல் மிகவும் மோசமானது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இப்படி எதுவும் நடக்கவில்லை' என்றார். ஆனால் உண்மை அதுவல்ல. இருபது ஆண்டுக ளுக்கு முன்னர் 130,000 அமெரிக்கப் படைகள் ஈராக்கின் மீது போர் தொடுத்தன. இரண்டாம் உலகப்போரின் பின்னர் வியட்நாமில் ஏற்பட்ட அவமானகரமான தோல்விக்கு அடுத்த படியான தோல்வியை அமெரிக்கா ஈராக்கில் பெற்றது. இல் லாத 'பேரழிவு ஆயுதங்களைத்' தேடி அமெரிக்கா முன்னெ டுத்த எண்ணெய்க்கான யுத்தம் பற்றி வரலாறு எவ்வாறு பதிந்து வைத்துள்ளது. பைடன் சொல்வது உண்மை போல் காட்டப்படுவது ஏன்?. மனிதகுலத்திற்கெதிரான எண்ணற்ற குற்றங்களைப் புரிந்த அமெரிக்கா மீது மனித உரிமைக் குற்றச்சாட்டுகள் எழாதது ஏன்?.

உண்மைகளைப் புதைக்கவே அவர்கள் விரும்புகிறார்கள். அதற்காகப் பொய்களைக் கட்டமைக்கிறார்கள். அதிகாரத்து டன் இசைய விரும்பும் ஆய்வாளர்கள், அதிகாரம் வேண்டி நிற்கின்ற மொழியையே இசைக்கிறார்கள். வெகுசிலரே அலைகடலுக்கு எதிராக நீந்துகிறார்கள். உண்மையை ஆதா ரங்களின் வழி கண்டடைகிறார்கள். அந்த உண்மைகள் சில சமயம் கசப்பானவையாக இருக்கும். ஆனால் கசப்பான உண்மைகளையும் கண்டறிந்து சொல்வதுதானே அறிவியற் பார்வை கொண்ட ஆய்வாளனின் பணி. ஸ்டாலின் மீதான அவதூறும் சோவியத் ஒன்றியம் மீதான விஷமப் பிரச்சாரத் துக்கும் ஒரு நீண்ட வரலாறு உண்டு. அதை ரஷ்யர்களே முழுமையாக நம்புகிற அளவுக்கு அதன் தீவிரம் இருந்தது. ஆவணக் காப்பகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட, ஆவ ணங்கள் சிதைக்கப்பட்ட காலங்களையும் தாண்டி ஆதாரங்க ளோடு பொறுமையாகப் பல்லாண்டு ஆய்வுசெய்த யூரி ஜுகோவ்வின் பணி போற்றத்தக்கது மட்டுமல்ல, வரலாற்று வரைவியலுக்கு ஒரு நல்லதொரு எடுத்துக்காட்டு.



meenilankco@thaiveedu.com




# பொலிவியாவின் நீர்ப் போர்

- சதீஸ் செல்வராஜ்

வழமையைக் காட்டிலும் தற்போது இலங்கையில் உஸ்ணம் அதிகரித்துப் போயிருக்கிறது. மே மாதத்திலும் இந்நிலை நீளும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியிருக்கிறது. குளிர் காற்றினதும் குளிர் நீரினதும் முக்கியத்துவத்தை இதுபோன்ற காலத்தில்தான் பலரும் உணர்கின்றனர். அந்தளவுக்கு உஸ்ணம் உடலை உருக்கிக் கொண்டிருக்கிறது. நா வறண்டு திரியும் மனிதர்களுக்காக நாட்டின் பல பாகங்களில் தெருவோரங்களிலும் சந்திகளிலும் புதுப்புதுக் குளிர்பானக் கடைகளும், ஐஸ்கிறீம் வண்டிகளும், இளநீர் விற்பனைக் கூடங்களும் முளைத்திருக்கின்றன. நீர் தளம்பியிருந்த பாத்திரத்தின் ஓரத்தில் குவிந்திருந்த தேனீக்களின் புகைப்படம் கூட வைரலாகச் சமூக வலைத்தளங்களில் வலம் வந்தன. தண்ணீர்த் தாங்கிகளில் முங்கியெழுந்து உடற்சூட்டைத் தணிக்கப் படாதபாடுபடும் குரங்குகளின் சேட்டை அடங்கிய காணொளியும் இந்த வரிசையில் வந்து இணைந்தன.

தவிர, அண்மையில் சூழலியலாளர் சஜீவ சாமிக்கர ஓர் ஊடக சந்திப்பின் போது, 'சிங்கராஜ வனத்தில் இந்த உஸ்ணக் காலப்பகுதியில் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தோம். ஆய்வின் இடையே எமக்கு அதீத தாகம் எடுக்கவே எம்மிடமிருந்த குடிநீரைப் பருகிக் கொண்டிருந்த வேளையில் அதில் சில சொட்டுக்கள் சிதறி விழுந்து புற்களில் தங்கின. அப்போது அங்கு வேகமாக ஓடிவந்த, சிங்கராஜ வனத்தில் மாத்திரமே வாழக்கூடிய ஓணான் ஒன்று அந்த நீரைப் பருகிச் சென்றது. சிங்கராஜ மழைக்காட்டில் கூட தற்போது வறட்சி ஏற்பட்டிருக்கிறது,' என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார். அந்தளவிற்கு ஒட்டுமொத்த ஜீவராசிகளின் தேடுதல் வேட்டையும் இன்று தண்ணீரை நோக்கியதாய் இருக்கிறது.

ஆனால், கொடுமையிலும் கொடுமையாக இலங்கையில் மின்சாரக் கட்டணமும் தண்ணீர்க் கட்டணமும் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, போதா வருமானம் பெறும் சாதாரண மக்கள் பெரும் இன்னலுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மின்விசிறியை இயக்குவதற்கோ, குளிர்சாதன இயந்திரங்களை இயக்குவதற்கோ, தண்ணீரை இந்த உஸ்ண காலத்தில் கொஞ்சம் அதிகமாகப் பயன்படுத்துவதற்கோ அவர்கள் யோசிக்கும் நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. குழாய்களை மூடிவிட்டு பலரும் போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ள குடிநீரை நுகர்வது கொஞ்சம் அதிகமாகியும் இருக்கிறது.

உலகில் இலாபத்தைத் தேடும் குடிநீர் வியாபாரக் கலாச்சாரத்தினால் இயற்கை சமனிலையில் கூடச் சலனம் ஏற்பட்டிருக்கிறது. பல நாடுகளிலும் மழைக்காடுகளை நோக்கிய கார்பரேட்டுக்களின் அணிவகுப்பு அங்கு ஊற்றெடுக்கும் தண்ணீரை ஆக்கிரமித்து அதற்கும் விலையை நிர்ணயித்துப் பணம் பார்க்கும் நிலை மோசமடைந்திருக்கிறது. இலங்கையின் உமா ஓயாக் கருத்திட்டம்கூட மீள ஆய்வுக்குட்படுத்த வேண்டிய அழிவை விளைவித்த ஒரு திட்டமாகும்.

உலகெங்கிலும் நிலத்தடி நீரின் பொறுப்பற்ற நுகர்வு காரணமாக எதிர்வரும் காலங்களில் அதன் அளவில் அச்சுறுத்தல் ஏற்படவிருக்கிறது. 2030-ம் ஆண்டுக்குள் உலகளவில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையே தங்களது கணிப்பைப் பகிர்ந்துள்ளது. உலகில் 4 பில்லியன் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது ஒரு மாதமாவது கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையை அனுபவித்து வருவதாக யுனிசெஃப் தெரிவிக்கிறது.

உலகம் முழுவதும் இன்று சுத்தமான குடிநீரின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. தண்ணீர் வியாபாரப் பண்டமாக உருமாற்றம் பெற்றதன் விளைவாகச் சாதாரண மக்களிடமிருந்து தண்ணீர் அந்நியமாகிக் கொண்டும் இருக்கிறது. காலங்காலமாக இலவசமாக உலக ஜீவராசிகள் தண்ணீரைப் பெற்றுவந்த தொடர்கதையின் அத்தியாயம் அடுத்தகட்டமாகத் தனியார்மயப்படுத்தலும் வியாபாரமும் எனும் பாதையினூடே பயணப்பட்டுக்கொண்டிருக்கிறது. வியாபாரமயப்படுத்தலின் விளைவாய் ஆயிரமாயிரமாய் மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு மொட்டையடிக்கப்படும் வனாந்தரங்களின் அந்தரங்கங்களைப் பதிவு செய்து வந்த இத்தொடரில், இம்முறை அவ்விருட்சங்களின் வேர்கள் வழியே தண்ணீர் விவகாரத்தைத் தேட முனைகிறேன். அதன்படி, வானில் இருந்து விழும் ஒரு சொட்டு மழைத்துளிக்கும் சொந்தம் கொண்டாடிய முதலாளியின் கொட்டத்தை அடக்கிய பொலிவிய நாட்டு மக்களின் வீரக் கதையைப் பதிகிறேன்.

வடக்கு மற்றும் கிழக்கில் பிரேசில், தென்கிழக்கில் பரகுவே, தெற்கில் அர்ஜென்டினா, தென்மேற்கில் சிலி, வடமேற்கே

பெரு ஆகிய நாடுகளின் மத்தியில் அமைந்துள்ள நாடு பொலிவியா. நாட்டின் மூன்றில் ஒரு பகுதி அந்தீஸ் மலைத் தொடரில் அமைந்துள்ளது. ஸ்பானியர்களின் காலனியாதிக் கத்திற்கு முன் இப்பகுதி இன்கா பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. ஸ்பானியர்கள் இன்காப் பேரரசை 1524-ல் கைப் பற்றத் தொடங்கி 1533-ல் முழுவதையும் தம்வசப்படுத்தினர். ஆக்கிரமிப்பில் அங்கு வாழ்ந்த பழங்குடி மக்களைக் கொன் றொழித்தும் அடிமைகளாக்கியும் இயற்கை வளங்களைச் சுரண்டித் தின்ன ஆரம்பித்தனர். 16-ம் நூற்றாண்டில் அடிமை களாக்கப்பட்ட தொல்குடிகளின் மூலமாகச் சுரங்கத் தொழில் கொடிகட்டிப் பறந்தது. இங்கு பெறப்பட்ட வெள்ளி முதன் மையான வருமானமாக இருந்தது. இந்த ஸ்பானிய ஆக்கிர மிப்பாளர்களிடம் இருந்து விடுதலை பெறுவதற்கான போரிற் குத் தலைமை தாங்கிய சிமோன் பொலிவார் என்பவரின் நினைவாக இந்நிலப்பரப்புக்குப் பொலிவியா என்று பெயரி




டப்பட்டது.

இந்தப் பொலிவியா நாடு உலகமே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு மீண்டும் ஒரு மாபெரும் போராட்டத்தை மேற் கொண்டது. அந்த மக்கள் போராட்டம் தண்ணீரைத் திருட நினைக்கும் திருட்டு முதலாளிகளுக்கு இன்றுவரையிலும் பேயாய் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த மகத்தான பொலிவியா மக்களின் போராட்டம் கொச்சபாம்பா நீர்ப் போர் என்றும், பொலிவியன் நீர்ப் போர் என்றும் அழைக் கப்படுகிறது.

பொலிவியா, 1985-ல் பொருளாதாரச் சரிவை எதிர்கொண்ட போது, உலக வங்கியிடம் நிதி உதவியை நாடியது. அதற் குப் பதிலாக நாட்டின் இரயில் பாதைகள், விமான சேவை கள், தொலைபேசி அமைப்பு மற்றும் எண்ணெய்த் தொழில் ஆகியவற்றைத் தனியார்மயமாக்க வேண்டியிருந்தது. தண்ணீ ரைத் தனியார்மயமாக்கவும் உலக வங்கி வலியுறுத்தியது.

1998 செப்ரெம்பரில் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டி ருந்த பொலிவியாவிற்குச் சர்வதேச நாணய நிதியம் (IMF) 138 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க ஒப்புதல் அளித்தது. இதன் மூலம் நாட்டின் பணவீக்கத்தைக் கட்டுப்ப டுத்திப் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முடியும் என தெரிவித்தது. இதற்காக நாட்டு வளங்களைத் தனியார் மயப் படுத்துவதற்கான யோசனையையும் சர்வதேச நாணய நிதி யம் முன்வைத்தது. தேசிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை கள் மற்றும் கொச்சபாம்பாவின் உள்ளூர் நீர் நிறுவனமான Semapa உட்பட, IMF-இன் வரைவு 'கட்டமைப்புச் சீர்திருத் தங்களுக்கு' இணங்க, பொலிவியா 'மீதமுள்ள அனைத்துப் பொது நிறுவனங்களையும்' விற்க ஒப்புக்கொள்கிறது.

ஜூன் 1999 உலக வங்கி தண்ணீர் மானியங்களை அதைரி யப்படுத்தியது. பொலிவியா அரசாங்கம் 'கொச்சபாம்பாவில் தண்ணீர்க் கட்டண உயர்வைக் குறைக்க எந்த மானியமும் வழங்கப்படக்கூடாது' என்று தெரிவித்தது. உலக வங்கி மற் றும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி பெறும் நாடுகள் தமது பொதுச் சேவைகளுக்கு அதிக மானி யம் வழங்குவதில் இருந்து எப்பொழுதும் அதைரியப்படுத் தப்படுகின்றன.

கதவுகள் மூடப்பட்ட அறைக்குள் இடம்பெற்ற பேச்சுவார்த் தையின்படி, செப்ரெம்பர் 1999-ல் பொலிவிய அரசாங்கம் கொச்சபாம்பா நீர் அமைப்பைப் பன்னாட்டுக் கூட்டமைப் புக்கு குத்தகைக்கு வழங்குகிறது. பெக்டெல் கார்ப்பரேஷ னின் (Bechtel Corporation) துணை நிறுவனம் உட்பட தனி யார் முதலீட்டாளர்களின் பன்னாட்டுக் கூட்டமைப்பான அகு வாஸ் டெல் துனாரிக்குக் (Aguas del Tunari) கொச்சபாம்பா வின் நகராட்சி நீர் அமைப்பை ஒப்படைக்க பொலிவிய அர சாங்கம் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. ஒக்ரோபர் 1999 Aguas del Tunari அதன் திட்டங்களை அறிவிக்கிறது. பொலிவியா தண்ணீர் தனியார்ம யமாக்கலைச் சட்டப்பூர்வமாக்குகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த 'பெக்டல்' (Bechtel) தனியார் நிறு வனம் 1999-ம் ஆண்டு 40 வருடத்திற்கான தண்ணீர் உரிமம் பெற்று கொச்சபாம்பாவில் தண்ணீரை எடுத்து விற்பனை செய்ய ஆரம்பிக்கிறது. முதல் மாதம் சுமூகமாகப் போனா லும், இரண்டாவது மாதத்தில் அந்நிறுவனம் தன் சுயரூ பத்தை வெளிகாட்டியது. தண்ணீர்க் கட்டணத்தை அதிகரிக் கிறது. அதுவரை அரசாங்கத்தால் இலவசமாகவும், குறைந்த செலவிலும் தண்ணீரைப் பெற்றுவந்த மக்கள் அதிர்ச்சியடை கிறார்கள். தினமும் தன்னுடைய வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கைத் தண்ணீருக்குத் தரவேண்டிய சூழலுக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

இதனால் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்காக மக்கள் புறப்பட்டுச் சென்றனர். ஆற்று வழிப்பாதை அமைப்பதாகச் சொல்லி இராணுவம் நிறுத்தப்பட்டது. வீடுகளில் இருக்கும் கிணறுகளில் தண்ணீர் எடுத்தால் கட்டணம் வசூலிக்கப்பட் டது. உடனடியாகப் பணம் கட்டும் வசதியில்லாதவர்களுக் குத் தண்ணீர் இணைப்புத் துண்டிக்கப்படுகிறது. இலவசமா கப் பெற வேண்டிய தங்களுடைய நீர், கட்டணம் கொடுத்த பின்னர்தான் அவர்களுக்கே கிடைத்தது. இறுதியாக மழைநீ ரைச் சேமித்துப் பயன்படுத்தத் தொட்டிகளை மக்கள் அமைத்தனர். இரவோடு இரவாக பெக்டல் நிறுவனம் அந்ந கரிலுள்ள வீடுகளில் கட்டப்பட்டுள்ள மழைநீர்ச் சேகரிப்புத் தொட்டிகளை அடித்து உடைக்கிறது. பூமிக்குள் இருந்து எடுத்தாலும், வானத்தில் இருந்து எடுத்தாலும் அது எங்க ளுடையது என்று கொக்கரித்தது பெக்டல் நிறுவனம். பெக்ட லின் விலையேற்ற அறிவிப்புக்கும், கொடிய நடவடிக்கைக ளுக்கும் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பிக்கிறார்கள்.

கொச்சபாம்பா எதிர்ப்பாளர்கள் நான்கு நாட்களுக்கு நக ரத்தை மூடினர். பாரிய வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தவிர, நகரம் முழுவதும் சாலைத் தடைகளை அமைத்தனர். குடியிருப்பாளர்கள் தங்கள் நகராட்சியால் நடத்தப்படும்

தண்ணீர் அமைப்பைத் தனியார்மயமாக்குவதையும், அகு வாஸ் டெல் துனாரியின் கட்டண உயர்வுகளையும் எதிர்த்துப் போராடினர். ஆனால், இதையெல்லாம் பார்த்துக் கொண்டி ருந்த பொலிவிய அரசாங்கம் சாக்குப்போக்குக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தது.

அரசாங்கத்தின் வக்கற்ற தன்மையால் விரக்தியுற்றுத் தொழிற்சங்க அமைப்பாளரும் பூகோளமயமாக்கல் எதிர்ப்பு ஆர்வலருமான ஆஸ்கார் ஒலிவேரா (Oscar Olivera) தலை மையிலான நீர் மற்றும் வாழ்வின் பாதுகாப்புக்கான கூட்டணி (The Coalition for the Defense of Water and Life - La Coordinadora) 2000 பெப்பிரவரி 4, 5-ம் திகதிகளில் கொச்சபாம் பாவின் நகர பிளாசாவிற்கு அமைதியான பேரணியை நடத்தி யது. ஆட்சியாளர்களால் இவ்வமைதிப் பேரணி வன்முறைக்



களமாக மாற்றப்பட்டது. 2 நாட்களுக்கு இந்நிலைமை நீடித் தது. கலகத்தடுப்புப் பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்ணீர்ப்புகைக் குண்டுகளால் தாக்கினர். இதன்போது, ஏறக்குறைய 175 பேர் காயமடைந்துள்ளதாகப் பதிவாகியுள் ளது. இதுபோன்ற சம்பவம் இலங்கையிலும் இடம்பெற்றுள்ள தையும் இவ்விடத்தில் நினைவுக்குக் கொண்டுவருகிறேன். 2013-ம் ஆண்டு இடம்பெற்ற கம்பஹா, வெலிவேரிய ரத்து பஸ்வல போராட்டம் சுத்தமான குடிநீரை வேண்டி மேற் கொள்ளப்பட்டது.

தம்மிக்க பெரேராவின் கையுறைத் தொழிற்சாலையின் கழிவு காரணமாகக் குடிநீர் மாசடைவதாகக் கூறி, சுத்தமான குடிநீ ரைப் பெற்றுத்தருமாறு வழியுறுத்திப் பிரதேச மக்கள் அமை திப் போராட்டம் நடத்திய வேளையில் ராஜபக்ஷ அரசாங் கம் இராணுவத்தை ஈடுபடுத்தி அந்தப் போராட்டத்தை ஒடுக் கியது. அதன்போது துப்பாக்கிச்சூட்டுப் பிரயோகத்தில் 2 பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட மூவர் படுகொலை செய் யப்பட்டனர். நிற்க,

2000 மார்ச் 22-ம் திகதி La Coordinadora ஒரு அதிகாரப்பூர் வமற்ற வாக்கெடுப்பை நடத்தியது. இதில் பெரும்பான்மை யான 50,000 வாக்காளர்களில் 96 சதவீதம் பேர் தண்ணீர் தனியார்மயமாக்கல் மற்றும் Aguas del Tunari-ன் கொச்சபாம் பாவில் தண்ணீர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்ப தாய் பெறுபேறு அமைந்தது. ஆனால், பெக்டல் நிறுவனத்து டனான ஒப்பந்தத்தை நிறுத்துவது குறித்து அரசு அதிகாரி கள் பரிசீலிக்க மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

கொச்சபாம்பாவின் மத்திய பிளாசாவில் (central plaza) தோன்றிய எதிர்ப்புகள் 2000 ஏப்ரல் 3-ம் திகதி லா பாஸ் (La Paz), பிற நகரங்கள் மற்றும் வெளியிலுள்ள கிராமப்பு றச் சமூகங்களுக்கும் பரவியது. ஆயிரக்கணக்கானோர் கல கத் தடுப்புப் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர். சாலைத் தடைகளை எழுப்பினர். தண்ணீர்க் கட்டண உயர்வு கள் மட்டுமல்லாது, நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார மந்தநிலைக்கும் உக்கிரமடைந்திருந்த வேலையில்லாத் திண் டாட்டத்திற்கும் தீர்வு கோரி எதிர்ப்புப் போராட்டத்தில் கள மிறங்கினர்.

கொச்சபாம்பா பகுதிகளுக்குத் தண்ணீரை வழங்கும் பெக் டல் நிறுவனத்தைக் காப்பாற்றக் களத்தில் இறங்கியது பொலிவியா அரசு. அதற்காக பொலிவிய அரசியலமைப்பின் கீழ் 90 நாட்களுக்கு இயற்றப்படும் இராணுவச் சட்டத்தைப் போன்ற ஒரு நிபந்தனையான 'முற்றுகை நிலை' என்ற சட் டத்தை ஜனாதிபதி ஹ்யூகோ பன்சர் (Hugo Banzer) அமுல் படுத்தினார். பிடியாணைகள் இன்றி தனிநபர்களைக் கைது செய்யவும் தடுத்து வைக்கவும் ஊரடங்குச் சட்டம் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளை அமல்படுத்தவும் இது அனுமதிக் கிறது. இது இலங்கையில் அமுலில் இருக்கும் பயங்கரவா தத் தடைச்சட்டத்துடனும் ஒத்துப்போகிறது. பெக்டல் நிறுவ னத்தின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தலைவர்களும், முக்கிய பிரதிநிதிகளும் இரவோடு இரவாகக் கைது செய்யப் பட்டார்கள். 2000 ஏப்ரல் 8-ம் திகதி ஒரு தெருவில் நிராயுத பாணியாக நடந்து வந்துகொண்டிருந்த விக்டர் ஹியூகோ தாசா என்ற 17 வயது சிறுவன் இராணுவத் தளபதியால் சுட் டுக் கொள்ளப்பட்டான். திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராடிய மக்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. அதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். போரா டிய மக்களின் மீது குண்டு மழை பொழிந்தாலும், அவர்கள் தங்கள் போராட்டங்களைக் கைவிடவில்லை.

விடா முயற்சியும் தொடர் போராட்டமும் கொச்சபாம்பா மக் கள் வரலாற்று வெற்றியில் ஓர் உச்சத்தை எட்டியது. நான்கு நாட்கள் தலைமறைவாக இருந்த பிறகு, ஆஸ்கார் ஒலிவேரா பொலிவிய அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டார். அதன்படி, பெக்டல் நிறுவனத்தின் விவகாரத்தைச் சுருட்டிக்கொள்ள வழிவகுத்தது. தடுத்து வைக்கப்பட்டிருந்த எதிர்ப்பாளர்களை விடுவிப்பதற்கு உறுதி வழங்கப்பட்டது. தண்ணீர் தனியார்மயமாக்கல் சட்டத்தை ரத்து செய்தல் மற் றும் உள்ளூர் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் தண்ணீ ருக்கு விவசாயிகளிடம் கட்டணம் வசூலிக்கும் சட்டமும் நீக் கப்பட்டது.

இறுதியாக 2000-ம் ஆண்டு தண்ணீர் விநியோக உரிமையை நிறுத்திக் கொள்ளுமாறு பொலிவியா அரசாங்கத்தால் பெக் டல் நிறுவனம் நிர்ப்பந்திக்கப்படுகிறது. அதை எதிர்த்து 2001-ம் ஆண்டு உலக வங்கியில் முறையிடுகிறது அந்நிறுவ னம். இருந்தாலும் போராட்டம் செய்த மக்கள் இறுதியாக அந்நிறுவனத்திற்கு எதிராகத் தங்கள் வாதத்தை உலகறியச் செய்தனர். இறுதியில் 2006-ம் ஆண்டு தனது ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு வெளியேறியது பெக்டல் நிறுவனம். தண் ணீர் தனியார்மயமானதற்கு எதிராக வெடித்த முதல் போரும் அதுதான். அதேபோல, ஒரு தனியார் கார்ப்பரேட் நிறுவனம் மக்கள் எழுச்சியால் பின்வாங்கிய நிகழ்வும் அதுதான். தண் ணீருக்காக நடத்தப்பட்ட முதல் போரை மையமாக வைத்து

2010-ம் ஆண்டு ‘ஈவன் தி ரெய்ன்’ (Even the Rain) என்ற சிறந்த சூழலியல் திரைப்படம் எடுக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. தண்ணீர் தனியார்மயமாக்கப்பட்டதன் உலக அனுபவம் இப்படியுமாக அமைந்தது.

நுரையீரல் மற்றும் கல்லீரல் புற்றுநோயால் அவதிப்பட்டு, ஹ்யூகோ பன்சர் ராஜினாமா செய்து பொலிவியன் ஜனாதிபதிப் பதவியை 41 வயதான துணைத் தலைவர் ஜார்ஜ் குய்ரோகாவிடம் ஒப்படைத்தார்.

ஜனவரி 2006-ல், Evo Morales Ayma பொலிவியாவின் முதல் உள்நாட்டு ஜனாதிபதியானார். கொச்சபாம்பா பள்ளத்தாக்கில் தண்ணீர் தனியார்மயமாக்கலுக்கு எதிரான வெகுஜன எதிர்ப்புகளுடன் தொடங்கிய ஐந்தாண்டு கால மக்கள் கிளர்ச்சியை அடுத்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உலக வங்கி தண்ணீர்த் துறையில் சீர்திருத்தம் என்ற பெயரில் நீராதாரங்களை வணிகமயமாக்கி தண்ணீர்ப் பயன்பாட்டை தனியார்மயப்படுத்துவதைத் தொடங்கி வைத்தது. 1992-ம் ஆண்டு ‘நீராதார மேலாண்மையை மேம்படுத்துவது’ ‘Improving Water Resources Management’ என்னும் ஆய்வு அறிக்கையை வெளியிட்டது. இந்த ஆய்வின் அடிப்படையான புரிதலே இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் பகிரப்படும் தண்ணீர் இலாபகரமானதாகவோ திறன் கொண்டதாகவோ அமையாது என்பதுதான். பொதுச் சேவையாக விநியோகிக்கப்படும் தண்ணீரில் 40 முதல் 50 விழுக்காடு வீணாகிறது அல்லது திருடப்படுகிறது. இதனால்தான் ஏழை எளிய மக்களுக்குத் தேவையான தண்ணீரை அவர்களுக்கு அளிக்க முடியவில்லை. ஆகவே தண்ணீர் விநியோகத்தைத் திறமையாகக் கையாள தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என உலக வங்கி பரிந்துரைக்கிறது. ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுகிற கதையாக இது இருக்கிறது. ஆக, தண்ணீர் தனியார்மயப்படுத்தல் என்பது அடிப்படை மனித உரிமை மீறலாகவே கருதப்பட வேண்டும்.

உலகில் சுமார் 400 பகுதிகளில் உள்ள மக்கள், ‘மிகவும் மோசமான தண்ணீர்ப் பிரச்சினை’ சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று வாஷிங்டனைச் சேர்ந்த உலக நீராதார நிலையம் (WRI) என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தண்ணீர்ப் பஞ்சம் காரணமாகப் பல கோடி மக்கள் குடிபெயர்வார்கள் என்றும், போர் மற்றும் அரசியல் நிலையற்ற தன்மை ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கும் என்றும் அஞ்சப்படுகிறது. மெக்சிகோ முதல் சிலி வரையில், ஆப்பிரிக்கப் பகுதிகள் முதல் தெற்கு ஐரோப்பாவில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் வரை, மத்திய தரைக்கடல் பகுதியிலும் ‘தண்ணீர் நெருக்கடி’ அளவு மோசமான நிலையை எட்டிக் கொண்டிருக்கிறது.

உலக மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதிப் பேர் அதாவது சுமார் 260 கோடிப் பேர், ‘அதிகம் தண்ணீர்ச் சிக்கல்’ உள்ள நாடுகளில் வாழ்கிறார்கள். இதில் ‘மிக மோசமான அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ள 17 நாடுகளில் வாழும் 170 கோடிப் பேரும் அடங்குவர்’ என்று அந்த உலகளாவிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தண்ணீர் போதுமானதாக இல்லாத நாடுகளில் வாழ்கின்றனர். 2025-ம் ஆண்டிலேயே உலக மக்கள் தொகையில் பாதிப் பேர் தண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் பகுதிகளில் வசிக்கலாம். 2030-ம் ஆண்டுக்குள் 700 மில்லியன் மக்கள் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையால் இடம்பெயர்ந்து விடுவார்கள். 2040-ம் ஆண்டளவில், உலகளவில் 4ல் 1 குழந்தை மிக அதிக நீர் அழுத்தப் பகுதிகளில் வாழ்வார்கள் என்கிறது யுனிசெஃப் அறிக்கை.

இன்று 771 மில்லியன் மக்கள் (10 பேரில் ஒருவர்) பாதுகாப்பான நீர் கிடைக்காதவர்களாக உள்ளனர். தண்ணீர் பிரச்சினையால் உலகளவில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பெண்கள் ஆவர். பெண்களும் சிறுமிகளும் தினமும் 200 மில்லியன் மணிநேரத்தைத் தண்ணீர் சேகரிப்பதற்காகச் செலவிடுகின்றனர். இது அவர்களது வேலை, கல்வி, ஏனைய துறைசார் விடயங்களில் இருந்து நேரத்தை எடுத்துக் கொள்கிறது. பெண்களுக்குப் பாதுகாப்பான முறையில் வீடுகளுக்கே நீரைப் பெற்றுக்கொள்ளும் முறையான திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் பட்சத்தில் நீரைப் பெற்றுக் கொள்ள விரயமாக்கப்படுகின்ற நேரத்தைப் பயனுள்ளதாக மாற்றிட அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

‘பூமி, காற்று, நிலம் மற்றும் நீர் ஆகியவை நம் முன்னோர்களிடமிருந்து பெற்ற சொத்துக்கள் அல்ல, ஆனால் நம் குழந்தைகளுக்கு நாம் கடன்பட்டிருக்கிறோம். எனவே எங்களிடம் இவை ஒப்படைக்கப்பட்டது போல் அவர்களிடம் நாம் இவற்றை ஒப்படைக்க வேண்டும்’ எனும் காந்தியின் வாக்கு பெறுமதி மிக்கது.

ஆக, தண்ணீரைப் பாதுகாப்போம். சேமிப்போம். வீண்விரயமாதலைத் தடுத்திடுவோம். தனியார்மயப் பொறியிடமிருந்து பத்திரப்படுத்துவோம். எதிர்கால உலகில் உருவாகச் சாத்தியமாக இருக்கக்கூடிய பெரும் நீர்ப் போரை நிறுத்திட செயற்படுவோம்.


***உசாத்துணை:***

- *பொலிவியாவில் எடுத்த ஓட்டம் திருப்பூரில் நிற்கிறது... தண்ணீருக்கான முதல் போர் நடந்த கதை! - துரை. நாகராஜன் (Updated:28 Jun 2018 விகடன்)*
- *தண்ணீர்ப் பிரச்சினையால் தவிக்கும் உலக நாடுகள் - தீர்வுக்கு வழி என்ன? - பாப்லா உச்சோயா பிபிசி உலக சேவை*
- *தனியார்மயமாக்கப்பட்ட தண்ணீர் - உலக அனுபவங்கள் கூறும் பாடம் என்ன? பொன். சந்திரன் - 24 ஜூலை 2018 - கீற்று*
- *How Bolivians Fought For - and Won - Water Access for All - By Sarah Hines - water for all*
- *The Water War in Cochabamba, Bolivia: Privatization Triggers an Uprising Manuel de la Fuente Mountain Research and Development, Vol. 23, No. 1 (Feb, 2003), pp. 98-100 (3 pages)*
- *Water scarcity – UNICEF*
- *https://water.org/our-impact/water-crisis/*
- *Cochabamba Water Revolt - Frontline World*




sathees.selvarajah@thaiveedu.com



# ஒரு விதைக் கொள்ளைக்காரனின் சாகசமும் இறப்பர் தோட்டத் தமிழர்களும்

- என். சரவணன்

இலங்கையில் பெருந்தோட்டத்துறையை ஆரம்பித்த முன்னோடிகளாக மூவரைக் குறிப்பிடவேண்டும். ஜோர்ஜ் பேர்ட் (George Bird) என்பவரால் 1824-ல் கோப்பிச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. ஜேம்ஸ் டெய்லரால் (James Taylor) 1867-ல் தேயிலையும் ஹென்றி விக்ஹாம் (Henry Wickham)



என்பவரால் 1875-ல் இறப்பரும் அறிமுகமானது. இலங்கையின் உட்கட்டமைப்பையும், அபிவிருத்தியையும், வளர்ச்சியையும், வருமானமீட்டக்கூடிய பொருளாதாரத்தையும் தந்தவர்கள் அவர்கள் தான். ஒரு வகையில் இலங்கையின் தன்மையையும், கட்டமைப்பையும் மாற்றக் காரணமானவர்கள்.

சேர். ஹென்றி அலெக்சாண்டர் விக்ஹாம் (Sir Henry Alexander Wickham 1846 - 1928) என்பது இன்றும் பரவலாக அறியப்படாத ஒரு பெயர். உலகளாவிய நவீன வளர்ச்சியில் இறப்பரின் பங்களிப்புப் பாரியது. அப்பேர்பட்ட இறப்பர் இன்று உலகளாவிய ரீதியில் கிடைப்பதற்குக் காரணமாக இருந்தவர் தான் விக்ஹாம். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இறப்பருக்கான மூலப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக விக்ஹாம் பிரேசிலுக்கு அனுப்பப்பட்டார். கைத்தொழில் புரட்சியின் காரணமாக மேற்கத்தேய நாடுகளில் புதிய உற்பத்திமுறைகள் வேகமாக வளர்ச்சியுற்ற காலம். அப்போது, இறப்பர் மிகவும் மதிப்புமிக்க பொருளாக அறியப்பட்டிருந்தது. இது டயர்கள் முதல் நீர் புகா (waterproof) ஆடைகள் வரை அனைத்திலும் பயன்படுத்த அதிக தேவை இருந்தது. இருப்பினும், பிரேசில் அரசாங்கம் இறப்பர் உற்பத்தியில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தது. அது மட்டுமன்றி அதன் ரகசியங்களை வெளிநாட்டினருடன் பகிர்ந்துகொள்ள மறுத்தது. பிற்காலத்தில் இலங்கை இறப்பர் உற்பத்தியில் முன்னோடி நாடுகளில் ஒன்றாக ஆனதன் பின்னணியில் சுவாரசியமான பின்புலக் கதையொன்று உள்ளது.

## இலங்கைக்கு பிரேசிலில் இருந்து களவாடி வந்த இறப்பர் விதைகள்:

விக்ஹாம் குழுவினர் காட்டுவாழ் பழங்குடியினரின் ஊடாக இறப்பரை இரகசியமாகச் சேகரித்தனர். அதன் பின்னர் கப்ப



லில் ஏற்றி இலண்டனில் உள்ள 'கிவ் கார்டன்ஸ்' (Kew Gardens) என்கிற பிரபல பூங்காவுக்குக் கொண்டுவந்து சேர்த்

தார். இலங்கையின் பேராதனையிலும் மலாயாவிலும் இறப்பர் மரம் பயிரிடப்பட்டன. இதன் பின்னர்தான் ஹென்றி ஃபோர்ட் (Henry Ford) அன்று மோட்டார்க் கார்களை மில்லியன் கணக்கானவர்களின் கைகளுக்குக் கொண்டுவந்து சேர்த்தார். அதன் பின்னரே, இறப்பர் ஒரு தோட்டப் பொருளாக உயர்ந்தது.

விக்ஹாமின் வெற்றியால் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கோப்பிப் பயிர் அழிவடைந்து, உற்பத்தி குறுகிவிட்டிருந்த நிலையில் பொருளாதாரத்திற்காகத் தேயிலைத் தோட்டங்களைப் பெரிதும் நம்பியிருந்தது பிரிட்டிஷ் அரசாங்கம். இருப்பினும், விக்ஹாமின் விதைகள் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, இறப்பர் ஒரு முக்கிய பயிராக மாறியது. பிரித்தானிய அரசாங்கம் இலங்கையில் இறப்பர்த் தோட்டங்களை ஸ்தாபிப்பதை ஊக்குவித்ததுடன், 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், தேயிலைக்கு அடுத்தபடியாக நாட்டின் இரண்டாவது பெரிய ஏற்றுமதியாக இறப்பர் மாறியது.

முதலில் 1876-ம் ஆண்டு சேர். வில்லியம் கிங் (Sir William King) இந்தியாவில் உள்ள கல்கத்தா ராயல் பூங்காவுக்கு ஆயிரம் விதைகள் அனுப்பப்பட்ட போதும் அங்கு இருந்த காலநிலைக்கு அது தாக்குபிடிக்காமல் அழிந்து போயின. அதன் பின்னர்தான் இலங்கைக்கு லண்டன் கிவ் கார்டனில் வளர்த்தெடுக்கப்பட்ட (18 அங்குலம் வளர்ந்த) 1919 ‘Hevea braziliensis’ ரகச் செடிகள் பாதுகாப்பாக இலங்கைக்குச் சில தாவரவியல் நிபுணர்களின் பராமரிப்பில் அனுப்பப்பட்டன. 300 சதுர அடிகள் பரப்பளவிலான பெரிய பொதிகளில் அவை அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் 90% வீதமானவை பாதுகாப்பாக இலங்கை வந்து சேர்ந்தன. அந்தச் செடிகள் கொழும்பிலிருந்து 18 மைல்கள் தொலைவிலுள்ள ஹெனரத்கொட தாவரவியல் பூங்காவில் (Heneratgoda Botanical Gardens) நட்ட விதைகள் முதன்முதலில் 1881-ம் ஆண்டில் வெற்றிகரமாகப் பூத்தது. இன்று அது கம்பஹா தாவரவியல் பூங்கா என்று அழைக்கப்படுகிறது.

அதன் பின்னர் பரீட்சார்த்தமாக மரத்தைக் கீறி இறப்பர்ப் பால் எடுக்கும் முதல் சோதனைகள் தொடங்கப்பட்டன. இறப்பர்த் தோட்டம் 1882-ம் ஆண்டில் வெட்டப்பட்டவை நம்பிக்கையளிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு அவை வளர்க்கப்பட்டு இலங்கையில் 260 கன்றுகளிலிருந்து புதிய மரங்கள் நடப்பட்டன. அதன் பின்னர்தான் அதற்கான வணிக முக்கியத்துவத்துக்கான சாத்தியங்கள் உறுதிப்படுத்தபட்டன. ஹெனரத்கொடையில் உள்ள மரங்கள் அவ்வப்போது மெலிந்து நின்ற போதும், 1887-ம் ஆண்டளவில் 457 நல்ல மரங்களைத் தந்தன. அந்த மரங்கள் மேலும் நடவு செய்வதற்கான விதையையும் வழங்கின. 1890-ம் ஆண்டில் வனத் திணைக்களம் எடங்கொடையில் ஒரு தோட்டத்தைத் திறந்தது, 1893-ம் ஆண்டளவில் நடவு செய்வதற்காகச் சுமார் 90,000 விதைகள் விநியோகிக்கப்பட்டன. அடுத்தடுத்த ஆண்டுகளில் இதே எண்ணிக்கையிலான விதைகள் விற்கப்பட்டன. இலங்கையில் 1906-ம் ஆண்டு ஒரு லட்சம் ஏக்கர் இறப்பர் மரங்கள் நடப்பட்டிருந்ததுடன் அது 1928-ம் ஆண்டளவில் 534,000 ஏக்கருக்குப் பெருகியது. 1920-ம் ஆண்டு உலக இறப்பர்த் தேவையின் 70 சதவீதத்தை இலங்கையும் மலேசியாவும் உற்பத்தி செய்தது என்கிறது இறப்பரின் உலக வரலாறு என்கிற நூல். மேலும் 1943-ல் உலக இயற்கை இறப்பர் உற்பத்தியில் இலங்கை முதன்மை நாடாக இருந்ததாகவும், அந்த ஆண்டு 98,000 டன் இயற்கை இறப்பரை இலங்கை உற்பத்தி செய்ததாகவும் அந்த நூல் தெரிவிக்கிறது.

இலங்கையில் இறப்பர்த் தோட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டமை நாட்டிற்கு கணிசமான பொருளாதார நன்மைகளைக்




கொண்டு வந்தது. இது பெருந்தோட்டங்களிலும் இறப்பரைப் பதப்படுத்துவதற்காக நிறுவப்பட்ட இறப்பர் தொழிற்சாலைகளிலும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியது. வீதிகள், ரயில்வே மற்றும் துறைமுகங்கள் போன்ற உள்கட்டமைப்பில் முதலீடு செய்ய இதன் வருவாய் பயன்படுத்தப்பட்டது.

இறப்பர்த் தோட்டங்கள் நிறுவப்பட்டதால், இந்தியாவிலிருந்து ஏராளமான தமிழ்த் தொழிலாளர்கள் இறப்பர்த் தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஒப்பந்தத் தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்டனர். இந்தத் தொழிலாளர்கள் இலங்கை சமூகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய தங்கள் சொந்தக் கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களைத் தங்களுடன் கொண்டு வந்தனர்.

ஆங்கிலேயர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளில் பட்டு, இறப்பர், கோப்பி, வாசனைத் திரவியங்கள், முத்து உற்பத்தி என பலவற்றையும் மேற்கொண்டார்கள். அடிமை முறை ஒழிப்புச் சட்டம் பிரித்தானியாவில் கொண்டு வரப்பட்டதும் கிழக்கிந்தியக் கம்பனிகளுக்கும், தோட்ட முதலாளிகளுக்கும் மலிவானதும், கடும் உடல் உழைப்பையும் தரக்கூடிய பெருந்தொகை ஆட்கள் தேவைப்பட்டது. அந்த அடிமை முறைக்கு மாற்றாக ஒப்பந்தக் கூலி முறையை அறிமுகப்படுத்தினார்கள். ஆட்பிடிப்புக்கு உள்ளூர்வாசிகளில் அதிகாரம் படைத்தவர்களை கண்டு பிடித்தார்கள்.

தென்னிந்தியாவில் இருந்த சாதி அமைப்பு முறை அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. அவர்களின் கங்காணித் தரகர்களாக உயர்சாதிகளைச் சேர்ந்தவர்களை நியமித்தார்கள். அவர்களுக்குக் கீழ் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தவர்களை இந்தக் கூலி வேலைகளுக்காகத் திரட்டினார்கள். இதன் மூலம் ஆங்கிலேயர்கள் எதிர்பார்த்தபடி மலிவான கூலிகளாகவும், அதேவேளை கடுமையான உடல் உழைப்புக்குத் தயாரானவர்களாகவும் கிடைத்தார்கள். அவர்கள் ஏற்கெனவே அடிமைமுறை ஒழிக்கப்படும்வரை அடிமை முறைக்கு உள்ளாகி இருந்த சமூகத்தினர் என்பது இந்தத் தோட்ட உரிமையாளர்களுக்குப் பெரும் சாதகமாக இருந்தது.

உலகிலேயே இந்தியாவிலிருந்து கூலித்தொழிலாளர்களாகப் பல்வேறு நாடுகளுக்குப் போய்ச் சேர்ந்தவர்களில் இலங்கையை விட மோசமான நிலையில் வேறெங்கும் இல்லை என்றே கூறவேண்டும்.

இலங்கையில் கோப்பிச் செய்கை வீழ்ந்த காலத்தில் கைகொடுத்தது தேயிலை உற்பத்தி. அதேவேளை அடுத்த கட்டமாக அவர்களை ஊக்குவித்த முக்கிய உற்பத்தியாக இறப்பர் மாறியது. கோப்பி, தேயிலை, இறப்பர் ஆகிய இந்த மூன்றும் ஆங்கிலேயர் காலத்தில் பிரதான வருமானத்தை ஈட்டித் தந்ததில் முக்கிய பங்கை வகித்தது. இந்த மூன்று பெருந்தோட்டத் துறையும் இந்தியக் கூலித் தொழிலாளர்களையே நம்பி இருந்தது. பிரதான வருமானத்தில் தான் இலங்கையின் அபிவிருத்தி நெடுங்காலம் தங்கி இருந்தது.

இலங்கையில் பாரிய அளவில் இறப்பர் உற்பத்தி செய்த மாவட்டம் களுத்துறை மாவட்டமாகும். அதன் பின்னர் கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களையும் குறிப்பிடலாம். இலங்கையில் மொத்தம் 25 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் இறப்பர்த் தோட்டங்கள் நிருவகிக்கப்படுகின்றன. 1898-ம் ஆண்டு உலகில் முதற்தடவையாக இறப்பர் விதைகள் வர்த்தக ரீதியில் விற்கப்பட்டது இலங்கையில் இருந்துதான். அவ்வாறு 1900-ம் ஆண்டு உலகின் முதல் பெருந்தோட்ட இறப்பர் ஏற்றுமதி இலங்கையில் இருந்து ஏற்றுமதியானது.

இறப்பர் இலங்கையின் பெருந்தோட்டத்துறையின் அங்கமாக மாறியது. இலங்கையில் இறப்பரின் வெற்றிகரமான பயிர்ச் செய்கையின் பின்னர், பிரித்தானியர்கள் மலாயா மற்றும் இந்தோனேசியா போன்ற உலகின் பிற பகுதிகளில் இறப்பர்த் தோட்டங்களை உருவாக்கத் தொடங்கினர், இது இறுதியில் இறப்பர் உற்பத்தியில் இலங்கையை மிஞ்சியது. எவ்வாறெனினும், இலங்கை 20-ம் நூற்றாண்டு முழுவதும் இறப்பர் உற்பத்தியில் ஒரு முக்கிய உற்பத்தியாளராக இருந்ததுடன், இன்று உலகளாவிய இறப்பர்த் தொழிற்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னணி நாடாகத் தொடர்கிறது. 2019-ம் ஆண்டு இலங்கையில் 13,003 தொன் இயற்கை மூல இறப்பரை ஏற்றுமதி செய்ததன் மூலம் அந்த ஆண்டு 4.3 பில்லியன் வருமானத்தை இலங்கை ஈட்டியது. அதற்கு முந்தைய ஆண்டு அதுவே 5.1 பில்லியனாக இருந்தது. அதைத்தவிர இறப்பரின் மூலம் முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்ததன் மூலம் அந்த ஆண்டு 154 பில்லியன் வருமானத்தையும் இலங்கை பெற்றிருக்கிறது.

இறப்பர் உலர் வலயத்துக்கும், ஈர வலயத்துக்கும் இடைப்பட்ட பிரதேசங்களிலேயே தாக்குபிடித்தது. இலங்கையில் இன்று இறப்பர் சிறு தோட்டங்களாகச் சுருங்கி அரசாங்கத்திடம் இருந்து சிறுதோட்ட முதலாளிமார்களிடம் சிக்கியதால் இறப்பரை அழித்துவிட்டு அதற்குப் பதிலாகச் செம்பனைத் தோட்டங்களை உருவாக்கிவிட்டதைக் காண முடிகிறது. இதனால் அப்பிரதேசங்களின் சூழலியல் பாதிப்புகள் அதிகரித்து தண்ணீர் குறைந்து, வறண்ட பகுதிகளாக ஆகிக் கொண்டிருப்பதைச் சுற்றுச் சூழலியலாளர்கள் சுட்டிக் கொண்டே இருக்கின்றனர்.

சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் சிறுதோட்ட முதலாளிகளாகத் தலையெடுத்ததும் அங்கிருந்த தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றில் அதிகம் சுரண்டப்படுவதும் அல்லது அவர்கள் விரட்டப்பட்டு அத்தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர்கள் குடியேற்றப்பட்டதும் நிகழ்ந்து கொண்டிருப்பதுடன், தமிழ் தோட்டத் தொழிலாளார்கள் அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இறப்பர்த் தோட்டங்கள் இலங்கையில் தொடர்ச்சியாக இன்றி ஆங்காங்கு என இருப்பதால் இறப்பர்த் தோட்டத் தொழிலாளர்கள் மலையகத்தைப் போல செறிவாக வாழ வழியற்றவர்களாகவும், தமிழில் கல்வியையோ அல்லது தமது பண்பாட்டையோ பேணுவதில் இருக்கின்ற சிக்கல்களைப் பல காலமாக எதிர்கொண்டு வருகின்றனர். இன்னும் உண்மையைச் சொல்லப்போனால் இறப்பர்த் தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய தலைமுறையினர் சிங்கள சமூகத்துடன் கலந்து சிங்களவர்களாகவே வாழ்ந்து அவ்வினத்திலேயே கரைந்துபோகும் நிலையையும் காண முடியும். குறிப்பாகக் களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் இந்த நிலையின் தீவிரத்தைப் பார்க்கலாம். மலையகத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்களாக அவர்கள் ஆகியிருக்கிறார்கள். விதிவிலக்காக மட்டுமே மலையகத்துடனான தொடர்பைப் பற்றிக் குறிப்பிட முடியும்.

இலங்கைக்கு விக்ஹாம் வந்ததில்லை. ஆனால் அவர் இலங்கையின் வருமானத்திலும், இலங்கையின் அபிவிருத்தியிலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

அவர் பிரேசிலில் இறப்பர் விதைகளைக் கடத்திக்கொண்டு வந்த கதை சாகசபூர்வமானது.

## ஒப்பரேஷன் இறப்பர்:

இப்படிப்பட்ட சூழலில் தான் 1876-ம் ஆண்டில் இறப்பர் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக விக்ஹாம்

பிரேசிலுக்கு அனுப்பப்பட்டார். அமேசனுக்கு வெளியே இறப்பர் உற்பத்தி தொடர்பான புதிய ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆர்வமாக இருந்தது, ஆனால் அங்கு பிரேசில் அரசாங்கம் தொழில்துறையில் இறுக்கமான பிடியைக் கொண்டிருந்தது. இறப்பர் வர்த்தகத்தில் பிரேசிலின் ஏகபோகத்தை உடைக்க, வேறு இடங்களில் இறப்பர் மரங்களை வளர்ப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்கும் பணி விக்ஹாம் வசம் ஒப்படைக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல பிரேசிலில் இருந்து இறப்பர் விதைகளைக் கடத்த முயன்ற முதல் நபர் விக்ஹாம் அல்ல. அவருக்கு முன் பலர் முயற்சி செய்தும், யாரும் வெற்றி பெறவில்லை. பிரேசில் அரசாங்கம் இறப்பர்த் தொழில் இரகசியங்களை இறுக்கமாகப் பாதுகாத்து வந்தது. அதன் ரகசியங்களை வெளிநாட்டவர்கள் திருடுவதைத் தடுக்க எதையும் செய்யத் துணிந்தது.

இதன் காரணமாக விக்ஹாமுக்கு இந்தப் பணி இலகுவாக இருக்கவில்லை. நாட்டின் கடினமான நிலப்பரப்பு, நட்பற்ற உள்ளூர்வாசிகள், இறப்பர் உற்பத்தியில் பிரேசில் அரசாங்கத்தின் ஏகபோகம், அதன் இரகசியம் உள்ளிட்ட தடைகளை விக்ஹாம் பிரேசிலில் எதிர்கொண்டார். ஆனாலும் அவர் பின் வாங்கவில்லை. அவர் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். மேலும் இறப்பர் விதைகளை நாட்டிலிருந்து கடத்த ஒரு புத்திசாலித்தனமான திட்டத்தைத் தீட்டியாகவேண்டும் என்கிற முடிவுக்கு வந்தார். அவரது திட்டம் வரலாற்றின் போக்கை மாற்றும் என்றோ வரவிருக்கும் தசாப்தங்களுக்கு உலகப் பொருளாதாரத்தை வடிவமைக்கும் என்றோ அவர் கூட அறிந்திருக்கமாட்டார்.

## விக்ஹாம் எதிர்கொண்ட தடைகள்:

பிரேசிலில் இருந்து இறப்பர் விதைகளைக் கடத்தும் பணியில் விக்ஹாம் பல தடைகளை எதிர்கொண்டார். பிரேசில் அரசாங்கம் இறப்பர் விதைகளை ஏற்றுமதி செய்யத் தடை விதித்திருந்தது, எனவே அவர் வெற்றி பெற வேண்டுமானால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். கவனத்தை ஈர்ப்பதைத் தவிர்ப்பதற்காக அவர் ஒரு சாதாரண தொழிலாளியாக மாறுவேடம் செய்ய வேண்டியிருக்கும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

பிரேசில் அரசாங்கம் அதன் இறப்பர்த் தொழிலைக் கவனமாகப் பேணி வந்தது. அதன் ரகசியங்களை வெளிநாட்டவர்கள் திருடாமல் இருக்க வழிவகைகளை ஒழுங்கு செய்திருந்தது. இறப்பர் விதைகள் ஏற்றுமதிக்குத் தடை விதித்திருந்ததுடன். இறப்பரின் உற்பத்தி, அதன் ஏற்றுமதி என்பவை தொடர்பாக அரசாங்கம் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. இதனால் விக்ஹாம் போன்ற வெளிநாட்டினருக்கு இறப்பர் விதைகளைச் சட்டப்பூர்வமாகப் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது.

வெளிநாட்டினர் மீது சந்தேகம் கொண்டவர்களாகவும், அடிக்கடி வெளிநாட்டவர்களுக்கு விரோதமாகவும் இருந்த உள்ளூர்வாசிகளின் எதிர்ப்பையும் விக்ஹாம் எதிர்கொண்டார். பலர் வெளிநாட்டினரைத் தங்கள் வாழ்க்கை முறைக்கு அச்சுறுத்தலாகக் கண்டனர். மேலும் பிரேசிலின் வளங்களைச் சுரண்டுவதில் மட்டுமே வெளிநாட்டவர் ஆர்வமாக இருப்பதாக அவர்கள் நம்பிய வெளியாட்கள் குறித்து எச்சரிக்கையாக இருந்தனர்.

தனது பயணத்தில் பிரேசிலின் கடினமான நிலப்பரப்பை விக்ஹாம் எதிர்கொண்டார். நாட்டின் உட்பகுதிக்குள் அவர் தனது சக்தியை அதிகம் விரயப்படுத்தவில்லை. அடர்த்தியான அமேசான் மலைக்காடுகள் பயணத்தைக் கடினமாகவும் ஆபத்தானதாகவும் ஆக்கின. கடுமையான ஆறுகளையும் காடுகளையும் கடந்து செல்ல வேண்டுமானால் மிகவும் சாதுர்யமாக இயங்க வேண்டும் என்பதை விக்ஹாம் அறிந்திருந்தார்.

## விக்ஹாம் வகுத்த சாதுர்யமான திட்டம்:

இந்தத் தடைகள் இருந்தபோதிலும், விக்ஹாம் தளரவில்லை. பிரேசிலில் இருந்து இறப்பர் விதைகளைக் கடத்த வேண்டுமென்றால் ஒரு சாதுர்யமான திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

விக்ஹாம் பிரேசிலில் பல மாதங்கள் கழித்தார், பயணம் செய்தார். விக்ஹாமின் திட்டம் எளிமையானது, ஆனால் பயனுள்ளதாக இருந்தது. தன்னை ஒரு சாதாரண தொழிலாளி போல் வேடமிட்டு, சேகரிக்கப்பட்ட விதைகளைத் தனது பாக்கெட்டுகளில் வைத்துக் கடத்தி வருவார். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவர் பிரேசிலின் தொலைதூரப் பகுதியைத் தேர்ந்தெடுத்தார், அங்கு வெளிநாட்டினர் குறைவாக இருந்தனர்.

விக்ஹாம் பிரேசிலில் பல மாதங்கள் கழித்தார், மதீரா (Madeira) மற்றும் புருஸ் (Purus) ஆறுகளில் பயணம் செய்தார், இறப்பர் மரங்களைத் தேடினார். இறுதியில் அமேசனில் வளர்ந்த அதே இனமான ஹெவியா பிராசிலியன்சிஸ் மரங்களின் தோப்பை (Hevea brasiliensis trees) அவர் கண்டார்.

இடையில் ஒரு பிரேசிலிய ரோந்துப் படகு வந்து, துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சிலர் கொல்லப்படுகிறார்கள். அவர்களிடம் இருந்து தப்புவதற்காக ஏற்கெனவே விதைக் குப்பிகளைக் கடலில் வீசிவிட்டார். மீதமுள்ள குப்பிகளை விக்ஹாம் மூழ்கடிக்கிறார். விக்ஹாம் கைது செய்யப்பட்டார். ஆனால் மீண்டும் பிரேசிலிய அதிகாரிகளால் விதைகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாததால் இறப்பர்த் திருட்டுக்கு நீதிமன்றத்தில் எந்த ஆதாரமும் கிடைக்காது போனது. ஆனால் விக்ஹாமை ஏதாவது வழியில் தண்டனை கொடுக்க முயற்சித்தார்கள். விக்ஹாம் உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். அவர் வரைந்து வைத்திருந்த ஒரு பட்டாம்பூச்சி ஓவியம் தற்செயலாக அங்கே இருந்த கோட்டையின் அமைப்பை ஒத்திருக்கிறது. விக்ஹாம் அப்படி ஒரு கோட்டையைத் தான் பார்த்தது கூடக் கிடையாது என்று மறுத்திருக்கிறார். ஆனாலும் உளவு பார்த்த குற்றத்தின் பேரில் விக்ஹாமிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அவருக்கு எதிராகப் பொய் சாட்சியம் கூறப்பட்டது நிரூபிக்கப்பட்டதால் அந்தத் தண்டனையை மாற்றி விக்ஹாமை விடுதலை செய்தார் கவர்னர். மீண்டும் அவர் இரகசியமாக வைத்திருந்த விதைகளுடன் தப்பி இங்கிலாந்துக்குப் பயணமானார்.

இறுதியில் இந்த மரங்களில் இருந்து சுமார் 70,000 விதைகளைச் சேகரித்து 1876-ம் ஆண்டில் பிரேசிலில் இருந்து கடத்தினார்.

மே 1876-ல், அவர் ரகசியமாக எழுபதாயிரம் இறப்பர் விதைகளை ஒரு கப்பலில் ஏற்றிக்கொண்டு பல்வேறு இன்னல்களுடன் அமேசன் ஆற்றுக்கூடாக பிரேசிலின் கடல் எல்லைக்கு வெளியே வந்தடைந்து அதன் வழியாகத் தொடர்ந்து இங்கிலாந்தை வந்தடைந்தது அந்தக் குழு.



அங்கு கியூவில் (Kew Garden) உள்ள இராஜரீக தாவரவியல் பூங்காவுக்குக் கொண்டு வந்து சேர்த்தார். அங்கு அவை நாற்றுகளாக வளர்க்கப்பட்டன. அங்கே இரண்டாயிரம் விதைகள் மட்டுமே வளர்ந்தாலும், அவை உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்தப் பரீட்சார்த்த முடிவின் வெற்றியைத் தொடர்ந்து அவர் இலங்கைக்கும், மலேயாவுக்கும் (இன்றைய மலேசியா) இன்னும் சில பிரிட்டிஷ் காலனி நாடுகளில் உள்ள தோட்டங்களுக்கும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. அதனை விதைத்து மரமாக்கி அவை பின்னாளில் பல மடங்கு பெருக்கப்பட்டன.

உலக வரலாற்றில் வெற்றிகரமான உயிரியல் திருட்டொன்று மிகவும் வெற்றிகரமாகச் சாத்தியப்படுத்தபட்டதன் பின்னால் சில சாகசக் கதைகள் உள்ளன. அமேசனில் இருந்து மலாயா மற்றும் இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தோட்டங்களுக்கு இறப்பர் தாவர விதைகளை அவர் எவ்வாறு கடத்தினார் என்பது சுவாரசியமான கதை. பல வல்லுனர்களால் சாத்தியப்படாமல் போனதை விக்ஹாம் வெற்றிகரமாக முடித்தார். ஒரு இரவு நேரத்தில் அந்த விதைகளைச் சரக்குக் கப்பலில் ஏற்றிக்கொண்டு தப்பினார். அவர் தேசபக்தரா அல்லது சந்தர்ப்பவாதியா, தொலைநோக்குப் பார்வை கொண்டவரா அல்லது அதிர்ஷ்டசாலியா, கோமாளியா அல்லது திருடனா என்று வரலாற்றாசிரியர்களே இன்னும் உறுதியாகக் கோர முடியவில்லை. அவரைப் பற்றிய சில நூல்களின் தலைப்புகளே ஒரு திருடன் என்றும், திருட்டு என்றும் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. உதாரணத்துக்குச் சில நூல்கள்,

- 'The Thief at the End of the World: Rubber, Power and the Obsessions of Henry Wickham' by Joe Jackson
- 'The Man Who Stole the Rubber Tree' by John Loades
- 'Henry Wickham's Adventurous Life and Exploits' by John Davidson
- 'Henry Wickham: The Explorer Who Became a Criminal' by David Grann
- 'Rubber: A Story of Glory and Greed' by Hugh Pain

ஒரு நாட்டின் இயற்கை வளத்தை அவர்களை மீறி இரகசியமாகக் கொள்ளையடித்த கொள்ளைக்காரன் என்பதா? அல்லது இயற்கை வளத்தை ஏகபோகமாக்கிக்கொண்டு உலகுக்குக் கொடாமல் இருந்த நாட்டில் இருந்து அந்த விதைகளை உலகுக்குப் பரப்பியவர் என்பதா? பிரேசிலின் ஏகபோகம் எவ்வாறு இருந்தாலும் பின்னர் இந்த விதைகள் பெரும் தோட்ட முதலாளிகளின் கார்ப்பரேட் சாம்ராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிற்று என்பது உண்மை.

## இறப்பர் ஏற்படுத்திய உலகளாவிய மாற்றம்:

பிரேசிலில் இருந்து இறப்பர் விதைகளை விக்ஹாம் கடத்தியதும் தொழிற்புரட்சிக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றியதாகக் கருதப்படுகிறது. தொழிற்புரட்சி என்பது 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் நிகழ்ந்த விரைவான தொழில்நுட்ப மாற்றம் எனலாம். மேலும் அது பொருளாதார வளர்ச்சியின் காலகட்டமும் கூட. இந்தப் புரட்சியின் முக்கிய உந்து சக்திகளில் ஒன்று, பாரிய உற்பத்தியை உள்ளிழுக்கும் புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்கூடாக உற்பத்தியில் பாரிய அளவு செயல்திறன் அதிகரித்தது.

தொழிற்புரட்சியில் இறப்பர் முக்கிய பங்கு வகித்தது. 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் செயற்கை இறப்பர் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு டயர்கள், பெல்ட்கள், குழாய்கள் மற்றும் பிற தொழில்துறை பொருட்கள் உள்ளிட்ட பரந்த அளவிலான தயாரிப்புகளுக்குப் பெரும்பாலும் இயற்கை இறப்பர் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டது. தொழிற்புரட்சியின் போது இறப்பரின் தேவை வேகமாக வளர்ந்தது. ஏனெனில் புதிய தொழில்நுட்பங்கள் இந்தப் பொருட்களின் பாரிய உற்பத்திக்கான தேவையை ஏற்படுத்தியது.

குறிப்பாக முதலாம் உலக யுத்தத்தின் போது இறப்பரை மூலப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட உற்பத்திகள் பெருமளவு பயன்பட்டது. இறப்பரின் தேவை அதிகமாக உணரப்பட்ட காலம் அது. இரண்டாம் உலக யுத்தத்திலும் இறப்பரின் பெறுமதி என்ன என்பதை உணரச் செய்த காலம் எனலாம்.

விக்ஹாமின் இறப்பர் விதைகளைப் பிரேசிலில் இருந்து கடத்தியதன் மூலம் உலகளாவிய ரீதியில் இறப்பர் உற்பத்தி பெருகக் காரணமாக இருந்தது. இது இறப்பர்த் தொழிலின் வளர்ச்சிக்குப் பெரும் ஊக்கியாக அமைந்தது. இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் இறப்பர்த் தோட்டங்களை நிறுவியதன் மூலம் இறப்பர் பாரிய உற்பத்திக்கு வழிவகுத்தது. இது இறப்பரின் விலையைச் சந்தையில் குறைக்கவும், பரவலாகக் கிடைக்கவும் உதவியது. இதனால் உற்பத்தியாளர்களுக்குப் பரந்த அளவிலான தயாரிப்புகளில் இறப்பரைப் பயன்படுத்துவதைச் சாத்தியமாக்கியது, இதுவே தொழில்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகமாக அமைந்தது.

இது இறப்பர் தொழிலில் புதுமையைத் தூண்டியதுடன் தொழிற்புரட்சியின் சிறப்பியல்பாகப் பொருளாதாரத், தொழில் நுட்ப மாற்றங்களுக்குப் பங்களித்தது.




விக்ஹாமின் இறப்பர் விதைகளைக் கடத்திப் பரப்பியதானது தொழிலில் புதுமையைத் தூண்ட உதவியது. புதிய இடங்களில் இறப்பர்த் தோட்டங்கள் நிறுவப்பட்டதுடன் அதற்கான புதிய சோதனைகளையும் ஆராய்ச்சிக்கான புதிய வாய்ப்புகளையும் உருவாக்கியது. அது மட்டுமன்றி இறப்பர் மரங்களை உற்பத்தி செய்வது, இறப்பர்ப் பாலை அறுவடை செய்தல், அவற்றைப் பதப்படுத்துவதற்கான புதிய தொழில் நுட்பங்களின் வளர்ச்சிக்கும் வழிவகுத்தது. இது செயல்திறனை அதிகரிக்கவும் செலவுகளைக் குறைக்கவும் உதவியது.

இறப்பர் எத்தனை துறைகளுக்குப் பங்களிப்புச் செய்திருக்கிறது என்பதைத் தொகுத்துப் பார்த்தால் இறப்பர் இன்றிய உலகு எப்படி இருந்திருக்கும் என்பதை அனுமானிக்கலாம்.

**போக்குவரத்து:** நவீன போக்குவரத்தின் வளர்ச்சியில் குறிப்பாக டயர் தயாரிப்பு இதில் தான் தங்கியிருக்கிறது. உலகளாவிய ரீதியில் போக்குவரத்து வண்டில்களின் பெருக்கம் இதுவன்றி சாத்தியப்பட்டிருக்க முடியாது.

**தொழில்:** கன்வேயர் பெல்ட்டுகள், மோட்டார்களுக்கான பெல்ட்டுகள், காஸ்கெட்டுகள் (gaskets), குழாய்கள் போன்ற பரந்த அளவிலான தொழில்துறைப் பயன்பாடுகளில் இறப்பர் பயன்படுத்தப்படுகிறது. இறப்பர் பரவலாகக் கிடைப்பதால் இந்தப் பொருட்களைப் பெரிய அளவில் உற்பத்தி செய்ய முடிந்தது, இது தொழில்துறையின் வளர்ச்சிக்குப் பெரும் உந்துதலாகியது.

**மருத்துவம்:** கையுறைகள், குழாய்கள் மற்றும் வடிகுழாய்கள் போன்ற பல்வேறு மருத்துவப் பயன்பாடுகளிலும் இறப்பர் பயன்படுத்தப்படுகிறது. 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் செயற்கை இறப்பர்க் கண்டுபிடிப்பு இந்தத் தயாரிப்புகளைப் பெரிய அளவில் உற்பத்தி செய்வதைச் சாத்தியமாக்கியது, இது சுகாதாரத்துறையை மேம்படுத்த உதவியது.

**நுகர்வோர் பொருட்கள்:** காலணிகள், ஆடைகள், பொம்மைகள் போன்ற பரந்த அளவிலான பொருட்களில் இறப்பர் பயன்படுத்தப்படுகிறது. மலிவான இறப்பர் கிடைப்பது இந்தத் தயாரிப்புகளை மிகவும் பரவலாகக் கிடைக்க உதவியது, இது பலரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவியது.

**விளையாட்டு:** பந்துகள், காலணிகள் மற்றும் விரிப்புகள் போன்ற பல்வேறு விளையாட்டு உபகரணங்களில் இறப்பர் பயன்படுத்தப்படுகிறது. அந்த வகையில் விளையாட்டுத் துறை இலகுபடுத்தப்படுவதற்கும், பாதுகாப்பை அளிப்பதற்கும் பெரிதும் உதவியிருக்கிறது.

**விவசாயம்:** டிராக்டர்கள் மற்றும் பிற விவசாய உபகரணங்களுக்கு டயர் வடிவில் இறப்பர் விவசாயத்தில் பயன்படுத்தப்படுகிறது. இது விவசாயத் துறையில் உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவியது. இது உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளது. வேகமாக வளர்ந்து வந்த சனத்தொகை வளர்ச்சியின் தேவையை ஈடுசெய்ய உதவியிருக்கிறது.

**கட்டுமானம்:** இறப்பர் கட்டுமானத் தொழிலில் பல பொருட்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கட்டுமானத்துறையில் இறப்பரைப் பயன்படுத்துவது கட்டடங்களின் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்தவும் பராமரிப்புச் செலவுகளைக் குறைக்கவும் உதவியது.

**மின் பொறியியல்:** மின் பொறியியலில் கம்பிகளுக்கும் கேபிள்களுக்குமான வெளி மறைப்புக்கு அதைச் சுற்றிக் காப்பு வடிவத்தில் இறப்பர் பயன்படுத்தப்படுகிறது. இன்று மின் கம்பிகளின் பாதுகாப்புக்கு இறப்பர் பயன்படுத்தப்படுவதன் மூலம் மின் விபத்துகள் பெரிதும் தவிர்க்கப்பட்டுள்ளன. மின் பயன்பாடு, மின் அமைப்புகளின் பாதுகாப்புக்கு நம்பகத்தன்மையை மேம்படுத்த உதவியது.

**இராணுவம்:** இறப்பர் பாதுகாப்புக் கவசங்கள் மற்றும் எரிவாயு முகமூடிகள் மற்றும் காலணிகள் போன்ற உபகரணங்களின் வடிவத்தில் இராணுவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதனால் இராணுவ நடவடிக்கைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்த உதவியது.

**சுற்றுச்சூழல்:** டயர்கள் போன்ற பொருட்களில் இறப்பரின் பயன்பாடானது காற்று மாசுபடுவதற்கும், கழிவுப் பெருக்கத்துக்கும் வழிவகுத்திருப்பது உண்மை. இருப்பினும் மறுசுழற்சி, வளங்குன்றா (Sustainable) பொருட்களின் பயன்பாடு போன்ற புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சி, இந்தச் சிக்கல்களைத் தணிக்கவும், இறப்பர் உற்பத்தியைச் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக மாற்றவும் உதவுகிறது.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இறப்பர் பயன்பாட்டில் மூன்றில் ஒரு பகுதி வாகன உற்பத்திகளுக்காகவே பயன்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் உலக அளவில் கார் உற்பத்தியில் ஜாம்பவானாக இருந்த ஹென்றி போர்ட் (Henry Ford) தனது கார் உற்பத்தியில் எஃகு எந்தளவு முக்கியமோ அந்தளவு ரயர்களுக்குத் தேவையான இறப்பரும் முக்கியமாக இருந்தது. அதற்குத் தேவையான இறப்பர்களுக்காக வேறெவரிலும் தங்கி இருக்காமல் தாமாகவே இறப்பரை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தார். தனது உற்பத்திக்குத் தேவைப்படுகிற இறப்பரை உற்பத்தி செய்யத் தனியாக பிரேசிலுடன் ஒப்பந்தம் செய்து

கொண்டு 2.5 மில்லியன் ஏக்கர்களைக் கொண்ட இறப்பர்த் தோட்டங்களை உருவாக்கினார். பிரேசிலுக்கும் இறப்பர் ஏக போகம் தம்மிடம் இருந்து கைநழுவிப் போன நிலையில் போர்டுடன் ஒப்பந்தத்துக்குச் சம்மதித்தது. போர்ட் தனது இலாபத்தில் 7 வீதத்தை பிரேசில் அரசுக்கும், 12 வருடங்களின் பின் மேலதிகமாக, இலாபத்தில் 2 வீதத்தை அங்கிருந்த உள்ளூராட்சி சபைக்கும் வழங்க ஒப்பந்தம் செய்து கொண்டார்.

ஒட்டுமொத்தமாக, உலகில் இறப்பரின் தாக்கம் பாரியது. அது சாதக பாதக விளைவுகளைக் கொண்டிருக்கிற போதிலும் இறப்பரின் புதிய ஆய்வுகளின்படி அதன் பயன்பாடு ஒரு உருமாற்ற சக்தியாக ஆக்கப்பட்டிருக்கிறது சாதகமான செய்தி. இது பல கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கியாக இருந்து வந்திருக்கிறது. மேலும் பலவிதமான தொழில்களுக்கும் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

## ஜேம்ஸ்பாண்ட்டுக்கு நிகராக அன்று வெளியான திரைப்படங்கள்:

சில ஆண்டுகளுக்கு முன்னர் ரெட்மண்ட் ஓ’ஹான்லன் (Redmond O’Hanlon) என்கிற ஒரு ஆய்வாளர் ஹென்றி விக்ஹாமின் அடிச்சுவடிகளைத் தேடி பிறேசிலுக்குச் சென்றார். அவரைப் பொறுத்தளவில் விக்ஹாம் 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சாகசக்காரர். விக்ஹாம் சென்ற பாதை வழியே சென்று அவர் ஆராய்ந்தவற்றை ஒரு ஆவணப்படமாக எடுத்திருக்கிறார். அது இன்று யூடியூபிலும் பார்க்கமுடியும். தனது சாகச நாயகனாகவும், அன்றைய ஒரு ஜேம்ஸ்பாண்ட் என்றும் அவர் அதில் புகழ்கிறார்.




இறுதியில் இறப்பரின் மீதான பிரேசிலிய ஏகபோகம் முடிவுக்கு வந்தது. அன்றிலிருந்து விக்ஹாம் பிரேசிலில் மிகவும் வெறுக்கப்பட்ட மனிதர்களில் ஒருவராக ஆனார். விக்ஹாம் படகில் சென்று இறங்கிய இடம், விக்ஹாம் வசித்த இடம், விக்ஹாம் விதைகளைக் கண்டெடுத்த தாய்மரம் உள்ள பகுதிகளில் பயணம், பின்னர் அந்த விதைகள் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட கிவ் கார்டன் பகுதி, அங்கிருக்கும் சுவடிக்கூடத் திணைக்களத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிற அவரின் பொருட்கள், குறிப்புகள், நூல்கள் என்பவற்றையும் காண்பிப்பதுடன், பலருடனான நேர்காணல்களையும் செய்திருக்கிறார்.

1938-ம் ஆண்டு விக்ஹாமின் இறப்பர் கொள்ளையடிப்புப் பற்றிச் சாகசக் கதையாக ஒரு திரைப்படம் ஜெர்மன் மொழியில் ‘Kautschuk’ (கவுட்சாக்) என்கிற பெயரில் உருவாக்கப்பட்டது. ‘Kautschuk’ என்றால் தமிழில் இறப்பர் என்று பொருள். ஸ்கண்டிநேவிய மொழிகள் உள்ளிட்ட இன்னும் சில மொழிகளில் அதே ஆண்டு இது மொழிமாற்றம் செய்யப்பட்டு ‘Gummi’, ‘The Green Hell’ போன்ற தலைப்புகளில் வெளியாகி இருக்கிறது.

இரண்டாம் உலக யுத்தம் தொடங்கப்படுவதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அந்தத் திரைப்படத்தின் தொடக்கத்தில் கிவ் கார்டனின் தலைவர் ஹுக்கர் (Sir Joseph Dalton Hooker) அன்றைய சான்சலர் பிரபுவைச் சந்தித்து நிகழப்போகும் அபாயத்தைப் பற்றி எச்சரிக்கிறார். பிரேசிலின் ஏகபோகத்தின் காரணமாக அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்குள் இறப்பரின் விலை தங்கத்தின் விலைக்கு உயர்ந்துவிடும் அபாயம் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். அன்றைய பிரித்தானியக் காலனி நாடுகளில் இறப்பர்த் தோட்டத்துக்கு உகந்த நாடுகளைத் தெரிவு செய்யலாம் என்றும் அதற்கு ஏராளமான இறப்பர் விதைகள் வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறார்.

இறப்பர் விதைகளை ஏற்றுமதி செய்வது கடுமையான சிறைத்தண்டனைக்கு உரிய குற்றம் என்பதால் சட்டவிரோத ஏற்றுமதிக்கு அரசு ஆதவரளிக்க முடியாது என்று சான்சலர் விவாதிக்கிறார். இதனை ஹென்றி விக்ஹாமைக் கொண்டு மேற்கொள்ளலாம் என்றும் அவருக்கு இந்தப் பணியின் மீது மிகுந்த ஆர்வம் இருப்பதையும் சுட்டிக்காட்டி முடிவுக்கு வருகின்றனர். இத்தோடு அந்தச் சாகசப் பயணம் பல தடைகளை எதிர்கொண்டு வெற்றி பெறுவதைப் பற்றி பதிவு செய்திருக்கிறது அத்திரைப்படம்.

1967-ம் ஆண்டு மீண்டும் ‘Kampf um Kautschuk’ (இறப்பருக்கான போராட்டம்) என்கிற பெயரில் இன்னொரு ஜெர்மன் திரைப்படமும் வெளிவந்திருக்கிறது.

## உயிரியல் கொள்ளைக்காரனா?

விக்ஹாமை ஒரு ‘உயிரியல் கொள்ளைக்காரன்’ (Bio-Pirate) என்று இன்றும் அழைப்பதைப் பார்க்கலாம். 1876-ம் ஆண்டு அவர் லண்டன் திரும்பியதும் கிவ் கார்டன் பணிப்பாளர்

ஹுக்கரைச் சந்தித்து பிரித்தானியக் காலனி நாடொன்றில் இந்த விதைகளைக் கொண்டு இறப்பர்த் தோட்டம் உருவாக்கலாம் என்றும் அவற்றை எங்கே, எப்படி விதைப்பது, நடுவது, பராமரிப்பது, அதிலிருந்து இறப்பர்ப் பாலை எடுப்பது, அவற்றைப் பதப்படுத்தி, இறப்பர் மூலப்பொருளை உருவாக்குவது வரை தான் கற்றிருப்பதையும் கூறி அனுமதி கோரினார். ஆனால் ஹுக்கர் எடுத்த எடுப்பில் அந்த யோசனையை நிராகரித்துவிட்டார். அது வெற்றிபெறுவதற்கான உத்தரவாதம் இன்னமும் இல்லை என்று மறுத்துவிட்டார். ஆனால் 70,000 விதைகளையும் பெற்றுவிட்டு விக்ஹாமிடம் 700 பவுண்களைக் கொடுத்துக் கணக்கை முடித்துக்கொண்டார் ஹுக்கர். ஆனால் ஆரம்பத்தில் ஒரு விதைக்குப் பத்துப் பவுண்கள் வீதம் தருவதாக ஹுக்கர் ஒப்புக்கொண்டிருந்ததையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

இந்த விபரங்கள் பலவற்றை விக்ஹாம் பதிவு செய்ததைவிட அவரின் இரகசியப் பயணத்தில் ஒன்றாக இணைந்துகொண்டு அத்தனை இன்ப துன்பங்களையும் அனுபவித்த அவரின் மனைவி வயலட் (Violet Wickham) எழுதி வைத்த டயரியில் இருந்த குறிப்புகள்தான் பிற்காலத்தில் விக்ஹாமின் சாகசப் பயணம் குறித்த பல விபரங்களுக்கான மூலாதாரமாகத் திகழ்ந்தது.

விக்ஹாம் பற்றிப் பல நூல்கள் வெளிவந்துவிட்டன. ஆனால் ஜோ ஜெக்சன் (Joe Jackson) எழுதிய ‘The Thief at the End of The World’ நூல் இவற்றில் மிக ஆழமான நூல் எனலாம். மேற்படி டயரி பற்றிய குறிப்புகள் பல அவரின் அந்த நூலில் இடம்பெற்றன. அமெரிக்க டைம் சஞ்சிகை 2008-ம் ஆண்டுக்கான சிறந்த பத்து நூல்களில் இரண்டாவது நூலாக இந்த நூலைத் தெரிவு செய்தது.

நூற்றாண்டுக்கு முன்னர் வரை காலனித்துவக் காலத்து புதினங்களைப் பதிவு செய்தவர்களில் பலர் ஓவியங்களையும் வரையத் தெரிந்தவர்களாக இருந்தார்கள். தமது பதிவுகளோடு சேர்த்து காட்சியாக அவற்றை வரைந்து பதிவு செய்தனர். புகைப்படக் கருவி வருவதற்கு முன்னர் இத்தகைய ஓவியங்கள் தான் வாசகர்களுக்குச் சாட்சியங்களாக இருந்தன. இன்றும் அக்காலத்தைப் பிரதிபலிக்கின்ற ஓவியங்கள் தான் நம்மெல்லோருக்கும் சாட்சியங்களாக எஞ்சியிருக்கின்றன. விக்ஹாம் இந்தப் பயணத்தின் போது வரைந்த ஓவியங்கள் சில மேற்படி நூலில் இடம்பெற்றுள்ளன. அவரின் ஏனைய ஓவியங்கள் வேறு சில நூல்களிலும் காணக் கிடைக்கின்றன.

விக்ஹாம் தனது பிரேசில் பயணத்துக்கு முன் அவரின் பயண அனுபவங்களைப் பற்றி ஒரு நூலை எழுதியிருந்தார். ‘Rough Notes of a Journey Through the Wilderness, from Trinidad to Para, Brazil: By Way of the Great Cataracts of the Orinoco, Atabapo, and Rio Negro’ என்கிற அந்த நூல் 1872-ம் ஆண்டு வெளிவந்தது. அந்த நூலிலும் இலத்தின் அமெரிக்க வாழ்வியலைச் சித்தரிக்கின்ற பல ஓவியங்கள் காணக் கிடைக்கின்றன.

விக்ஹாமின் வெற்றிகரமான விதைக் கடத்தலின் பின்னர் இறப்பர் உற்பத்தி வெற்றியளிக்கத் தொடங்கியதும் கிவ் கார்டன் தென்னமெரிக்காவின் வேறு நாடுகளில் இருந்தும் Hevea Ceara, Castiloa போன்ற ரகங்களைச் சேர்ந்த இறப்பர் விதைகளைச் சேகரித்துக் கொண்டு வந்து இலங்கை மலேசியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பியது, ஆனால் அந்த மரங்கள் போதிய வெற்றியைத் தரவில்லை. விக்ஹாம் கொண்டு வந்து சேர்த்த Hevea Brasiliensis ரகத்துக்கு நிகராக வேறெந்த இறப்பர் மரங்களும் சிறந்த அறுவடையைத் தரவில்லை.

இலங்கைக்கு இறப்பர்ச் செடிகள் கொண்டுவரப்பட்டபோது’



விக்ஹாம் கூட வராவிட்டாலும் இறப்பர் இலங்கையில் வெற்றியளித்ததைப் பார்வையிடுவதற்காக 1905-ம் ஆண்டு இலங்கைக்கு வந்தார். அவர் பிரேசிலில் களவாடிக் கொண்டுவந்த அந்த விதைகள் இலங்கையில் பெருமரமாக ஆகியிருப்பதை பேரின்பத்துடன் வியந்து பார்த்தபடி அதன் அருகில் புகைப்படங்களை எடுத்துகொண்டார்.

1920-ம் ஆண்டு தான் அவருக்கு ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரால் இங்கிலாந்தின் உயரிய பட்டமான நைட் (Knight) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1911-ம் ஆண்டு இலங்கைத் தோட்ட முதலாளிமார் சம்மேளனமும், இறப்பர் உற்பத்தியாளர்களும் சேர்ந்து அவருக்கு 5000 பவுண்டுகளை அன்பளிப்பு செய்திருந்தனர். அவரின் 80-வது வயதின் போது அமெரிக்க அரசு 25,000 பவுண்டுகளை அன்பளிப்புச் செய்ததுடன், அன்றைய மலேசிய அரசாங்கம் (Straits government) அவரின் சேவையைக் கௌரவிக்குமுகமாக 40,000 பவுண்டுகளையும் அன்பளிப்பு செய்தது.

இறப்பரின் வரலாற்றைப் பற்றி பேசும் எவராலும் தவிர்க்க முடியாத பாத்திரமாக விக்ஹாம் காணப்படுகிறார். இறப்பரின் வியாபகத்துக்குப் பெரும்பங்களிப்பை அவர் ஆற்றியதைப் போலவே அதற்கு நிகராக உலக முதலாளித்துவத்துக்கும், உழைப்புச் சுரண்டலுக்கும் அவர் விரும்பியோ விரும்பாமலோ பாரிய பங்களிப்பையும் அவர் செய்திருக்கிறார் என்பதும் உண்மையே.



sarawanan.n@thaiveedu.com




இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு, ரீவீஜயின் நிர்வாகத்தைக் கையேற்று மிக உற்சாகமாக அனைவரும் இயங்கிக்கொண்டிருந்தோம். ஒரு வெகுசன ஊடகம், செய்திகளோடும் தகவல்களோடும் மட்டுமே சம்பந்தப்பட்டதல்ல. மக்களுக்காக இயங்கும் ஊடகங்கள், அவற்றின் சேவையைப் பெறும் சமூகத்தின் சகல துறை முன்னேற்றத்துக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக, சமூகத்தின் மொழி, கலை, கலாச்சார வளர்ச்சிக்கு ஊடகங்கள் பெருந்தொண்டாற்றலாமென்று, வெகுசன ஊடகங்களின் கடமைகள்பற்றி நாம் கற்றவற்றை ரீவீஜ மூலம் நிறைவேற்றுவதற்கு எனக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பமாகக் கருதி செயலாற்றினேன். ரீவீஜ ஆரம்பித்த நாளிலிருந்தே எனது எதிர்பார்ப்புகளுக்கமைய அவ்வாறுதான் இயங்கிக்கொண்டிருந்தது எனினும், நான் நேரடிப் பொறுப்பை ஏற்றபின்னர் எனது எண்ணங்களை செயலாக்குவதை மேலும் தீவிரமாக்கினேன். குறிப்பாக, எமது சிறுவர்களதும் இளைஞர்களதும் கலைத்துறை விருத்தியில் அதிக கவனம் செலுத்தினோம்.

இருபத்திநான்கு மணித்தியால ஒளிபரப்பு சேவை நடைபெறும் ஒரு தொலைக்காட்சி நிலையத்தில் பணியாற்றவேண்டிய ளவு தொகையில் தயாரிப்பாளர்களோ ஏனைய கடமைகளைச் செய்பவர்களோ இல்லாவிட்டாலும்கூட, மிகத் திறமையாக செயற்பட்டோம் என்று சொல்வேன். இலங்கையில் ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டபோது தினசரி மாலை ஆறு மணி நேர ஒளிபரப்பும் வார இறுதியில் சற்றுக் கூடுதலான நேர ஒளிபரப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டபோது, அங்கு பணியாற்றிய ஊழியர்களைவிட மிகமிகக் குறைந்தளவு பணியாளர்கள் நாள்தோறும் இருபத்திநான்கு மணிநேர ஒளிபரப்பை மேற்கொள்ளும் ரீவீஜ-யில் பணியாற்றினார்கள். குறிப்பாக, ரீவீஜயில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகையோடு ஒப்பிடும்போது தயாரிப்புப் பணியில் ஈடுபட்டவர்களின் தொகை மிகக் குறைவாக இருந்தது. ஒவ்வொரு தயாரிப்பாளரும் பலர் சேர்ந்து செய்யவேண்டிய தொழில்நுட்பப் பணிகளைத் தனியொருவராகவே செய்து, குறை காண முடியாத தரத்திலான நிகழ்ச்சிகளைத் தயாரித்தார்கள். தயாரித்த அனைத்து நிகழ்ச்சிகளையும் இப்போது பட்டியலிடுவதற்கு என்னால் முடியவில்லையென்றாலும் சில நிகழ்ச்சிகளையும் அவற்றைத் தயாரித்தவர்களையும் இப்பொழுது நினைத்துப் பார்க்கிறேன்.

அனைத்து நிகழ்ச்சிகளையும் அனைத்துத் தயாரிப்பாளர்களுமே மேற்கொண்டார்கள். பல நிகழ்ச்சிகள் வெவ்வேறு தயாரிப்பாளர்களால் வெவ்வேறு காலகட்டங்களில் தயாரிக்கப்பட்டன. இங்கே அவற்றைக் குறிப்பிடும்போது சில நேரங்களில் சில தயாரிப்புகள் ஒரு தயாரிப்பாளரின் பெயரிலே பதியப்பட்டிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் தயாரிப்பாளர்கள் அதைப் பெரிய குறையாக எடுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

**ப்ராஸ் லிங்கம்**



ரீவீஜ ஆரம்பித்து மூன்று, நான்கு வருடங்களில் பல இளைஞர்கள் அதிலே பணியாற்றுவதற்கு இணைந்து கொண்டார்கள். அவர்களில் ப்ராஸ் என்ற இளைஞர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர். அவர் ஆரம்பத்தில் 'தில்' (Dhil) என்ற பெயரில் இளைஞர்களுக்கான நடனப் போட்டி நிகழ்ச்சியொன்றைத் தயாரித்தார். எனது நினைவுக் கெட்டிய வரை போட்டி வகையில் தயாரிக்கப்பட்ட முதலாவது நிகழ்ச்சியென்று கருதுகிறேன். ரொறன்ரோவாழ் பல தமிழ் இளைஞர்கள் பங்குபற்றிய அதன் இறுதி நிகழ்ச்சி, ரீவீஜ-யின் ஆறு வருடப் பூர்த்தியின்போது, ரீவீஜ நிலையத்தின் பின்புறமாக உள்ள வாகனத் தரிப்பிடத்தில் மேடை அமைக்கப்பட்டுப் பல இளம் பார்வையாளர்கள் கலந்துகொள்ள, சிறப்பாகத் தயாரிக்கப்பட்டது. ப்ராஸ் லிங்கம் பின்னர் 'சுப்பர் ஸ்ரார்' என்னும் இசைப் போட்டி நிகழ்ச்சியைத் தயாரித்தார். சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்குமான இந்தப் பாடல்ப் போட்டி நிகழ்ச்சி நான்கு வருடங்கள் தயாரிக்கப்பட்டது. இது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. முதலில் ஒரு நிலைய நிகழ்ச்சியாக ஆர்ப்பாட்டமில்லாமல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சிக்கு ரீவீஜ-யின் சந்தைப்படுத்தும் பிரிவினர் சில அனுசரணையாளர்களை ஏற்பாடு செய்தார்கள். பின்னர் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு '7 எஸ் குருப்' (Seven S Group) என்னும் கட்டட நிர்மாண நிறுவனம் அனுசரணை வழங்கத் தொடங்கியதும் நிகழ்ச்சி பிரமாண்டமானது. 7 எஸ் குருப் நிறுவன உரிமையாளர் வரன் சின்னத் தம்பி



எதையும் பெரிய அளவில் செய்யக் கூடிய இயல்புடையவர். அவர் சுப்பர்ஸ்ரார் நிகழ்ச்சிக்கு மாதந்தோறும் கணிசமான தொகைப் பணத்தை அனுசரணையாக வழங்கியதோடு மட்டுமல்லாமல், நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த நிகழ்ச்சி பற்றிய பெரிய விளம்பரத்

தட்டிகளை (bill boards) நெடுஞ்சாலைகளுக்கருகே அமைத்து, பெரியளவில் விளம்பரப்படுத்தினார். அத்தகைய விளம்பரம் சுப்பர் ஸ்ரார் நிகழ்ச்சிபற்றிய ஒருவித பரபரப்பை மக்களிடையே தோற்றுவித்தது. ஒரு தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான மிகப் பெரிய விளம்பரத் தட்டிகளை கனடா வில் அமைத்தமை அது தான் முதல்த் தடவை. அதன்பின் னர் 2011-ம் ஆண்டிலிருந்து மீண்டும் தொடர்ந்து மூன்று வரு டங்கள் நடத்தப்பட்ட ரீவீஜ-யின் கொண்டாட்ட நிகழ்ச்சிகளை யும் ரொறன்ரோவின் தமிழர்வாழ் பகுதிகளில் விளம்பரத் தட் டிகளை வைத்தும் பேரூந்துகளின் பின்புறமாக விளம்பரப் பதாகைகளைப் பொருத்தியும் விளம்பரம் செய்தோம். சுப்பர் ஸ்ராரின் இறுதி நிகழ்ச்சிகள் வெளி மண்டபங்களில் பார்வை யாளர்களின் முன்பாக பெரிய அளவில் நடத்தப்பட்டன. இவ் வாறு வரன் சின்னத்தம்பியின் அனுசரணையினால் சுப்பர் ஸ்ரார் நிகழ்ச்சி பெரிய அளவில் நடத்தப்படத் தொடங்கிய தும் அந்த நிகழ்ச்சி மக்களின் கவனத்தைப் பெருமளவில் பெற்று மிகப் பிரபலமடைந்தது. ரீவீஜ-யின் சுப்பர் ஸ்ரார் நிகழ்ச்சியில் பங்குபற்றிய சில இளம் பாடகர்கள், தென்னிந் திய தொலைக்காட்சியில் தயாரிக்கப்படும் மிகப் பிரபலமான 'சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அதில் முக் கிய பாடகர்களாக விளங்கினார்கள். அவர்களில் ஜெசிக்கா ஜூட்ஸ் ஒரு சுப்பர் சிங்கர் போட்டி நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார். ரீவிஜயில் நிகழ்ச்சிகளை சிறப்பாகத் தயாரித்த ப்ராஸ் லிங்கம் பின்னர் திரைப்படம் தயாரிக்கும் துறையில் ஈடுபட்டு, வரன் சின்னத்தம்பியின் தயாரிப்பில் திரைப்படமொன்றை இயக்கியதோடு, தற்போதும் திரைப்ப டத் துறையிலே தனது கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக் கிறார்.

**சிறீனிகாந்த் பன்னீர்ச்செல்வம்**



ப்ராஸ் லிங்கம் ரீவீஜயில் இணைந்துகொண்ட அதே காலப்பகுதியில் இணைந்த மற்றுமோர் இளைஞர் சிறீனி என்று அழைக்கப்படும் சிறீ-னிகாந்த் பன்னீர்ச்செல்வம். தகவல் தொழில் நுட்பத்துறை யில் பட்டம் பெற்ற அவர், பகுதி நேரமாக மாலைவேளை களில் ரீவீஜ- யில் தயாரிப் புப் பணிகளை மேற்கொண்டவர். சில வழமையான நிகழ்ச் சிகளைக் கிரமமாகத் தயாரித்ததோடு, சுப்பர் ஸ்ரார் ஜூனி யர்-4 நிகழ்ச்சியையும் தயாரித்திருக்கிறார். ரீவீஜயின் இசைய ணித் தேர்வான 'பாட்டாலே பரவசம்', 'திரை முன்னோட்டம்' போன்ற நிகழ்ச்சிகளைக் கிரமமாகத் தயாரித்ததோடு, பல நிகழ்ச்சிகளை அவ்வப்போது தயாரித்திருக்கிறார். குறிப்பாக, ரீவீஜயில் எமது நிர்வாகத்தின் இறுதிக் காலங்களில் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்தார். அவற்றுள் 'உங்கள் விருப்பம்', 'க்றொஸ் றோட்ஸ்', 'விவேகம்', 'ஒளிக் கீற்று' போன்றவை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை. எமது நிர்வாகக் காலகட் டத்தில் கடுமையாக உழைத்தவர் சிறீனி காந்த் பன்னீர்ச்-செல்வம்.



### எம். ஜெயக்குமார் (கண்ணன்)



ரீவீஜ-யின் படப்பிடிப்பாளர்கள் சிலர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாகவும் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களில் கண்ணன் என்று அறியப்படும் எம். ஜெயக்குமார் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். எனது நிர்வாக காலத்தில் 'நடனத்தாரகை' என்னும் இளம் நடனக் கலைஞர்களுக்கான போட்டி நிகழ்ச்சியொன்றைக் கண்ணன் தயாரித்தார். மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்ற இந்த நிகழ்ச்சியின் பிரதம நடுவராக வசந்தா டானியல் அவர்கள் பணியாற்றினார். அதன் இறுதி நிகழ்ச்சி, ஸ்காபரோ - சீனக் கலாச்சார மைய மண்டபத்தில் பார்வையாளர்களின் முன்னிலையில் நடைபெற்றது. சுப்பர் ஸ்ரார் இறுதி நிகழ்ச்சியும் நடனத் தாரகை இறுதி நிகழ்ச்சியும் ஒரே நாள், ஒரே மேடையில் இடம்பெற்றபோது, மிகப் பிரமாண்டமாக அமைந்து மக்களின் பேராதரவைப் பெற்றன. இவ்வாறு ரீவீஜ-இற்காகப் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்த ஜெயக்குமார், தீபாவளி தினமொன்றின் விசேட ஒளிபரப்பில் இடம்பெற்ற ஒரு நாடகம் உட்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் அவரே தயாரித்தார். அந்த ஒளிபரப்பு ஏறக்குறைய எட்டு மணித்தியாலங்களுக்கு இடம்பெற்றது. அன்று கண்ணனால் தயாரித்து ஒளிபரப்பப்பட்ட நாடகத்தில் முரளி என்ற ரீவீஜ படப்பிடிப்பாளரும் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தார். இப்படிப் பலரின் திறமைகள் வெளிப்படுவதற்கு ரீவீஜ நிகழ்ச்சிகள் உதவின.

### பென்ஜமின் கிருபானந்தராஜா



கிருபா அண்ணையென்று ரீவீஜ பணியாளர்களால் அழைக்கப்படும் கிருபானந்தராஜா, முதலில் கிறிஸ்தவ சமய நிகழ்ச்சிகளை ஊடகங்களுக்கு வழங்கும் குழுவொன்றின் அமைப்பாளராக ரீவீஜ-யுக்கு வரத் தொடங்கியவர், பின்னர் படப்பிடிப்பாளர்களில் ஒருவராகப் பணியாற்றத் தொடங்கினார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் இலத்திரனியல்க் கருவிகளைப் பழுதுபார்க்கத்தக்க திறமையைக் கொண்டிருந்த கிருபா, ரீவீஜ-யின் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் விளங்கி, கிரமமாகப் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்ததோடு, கிறிஸ்மஸ் போன்ற பண்டிகை நாட்களில் பல விசேட நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்கினார். ரீவீஜ வெளிக்களங்களில் மேற்கொள்ளும் படப்பிடிப்புகளுக்குத் திடீரென்று அழைத்தாலும் உடனடியாக வந்து பணியாற்றக்கூடிய கிருபா, ரீவீஜ-யின் பல நிகழ்ச்சிகளுக்குப் படப்பிடிப்பாளராகக் கலையகத்திலும் வெளிப்புறங்களிலும் பணியாற்றினார்.

### வரன் லிங்கம்



ரீவீஜ-யுக்கு நிகழ்ச்சிகள் தயாரித்த படப்பிடிப்பாளர்களில் வரன் லிங்கம் முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர். ரீவீஜ நிலையம் ஜார்வீஸ் வீதியில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே பணியாற்றத் தொடங்கிய படப்பிடிப்பாளர் வரன். இவரைப்பற்றியும் ஏற்கனவே இந்த நூலில் சில இடங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். ரீவீஜ-யில் ஒளிபரப்பப்பட்ட 'பாடுவோர் பாடலாம்' என்ற கரியோக்கி (karaoke) முறையில் சினிமாப் பாடல்களைப் பாடும் நிகழ்ச்சியைத் தயாரித்தவர்களில் ஒருவர். அந்த நிகழ்ச்சியைத் தயாரித்த வரன் பின்னர் 'புது ராகம்' என்னும் இளம் பாடகர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சியைத் தயாரித்தார். வாசுகி நகுலராஜா தயாரித்த 'மலரும் மொட்டுகள்' என்ற சிறுவர் தொடர் நிகழ்ச்சிக்குத் தொழில்நுட்பத் தயாரிப்பாளராக விளங்கிய வரன், அதில் தொடராக இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியில் குரங்கு பாத்திரத்திற்கான வேடமிட்டு நடித்தார். அந்த நிகழ்ச்சித் தொடரில் இடம்பெற்ற பறவைப் பாத்திரமாக வேடமிட்டு ரீவீஜ-யில் பணியாற்றிய ஜெனி ஜோசப் நடித்தார். இந்த நிகழ்ச்சி கனடாவில் தமிழ்ச் சிறுவர்கள் விரும்பிப் பார்த்த ஒரு நிகழ்ச்சியாகும். நான் ரீவீஜ தயாரிப்பாளர்களின் பயிற்சிக்கெனத் தயாரித்த தொலைக்காட்சி நாடகத்திற்குப் படப்பிடிப்பாளராகப் பணியாற்றிய வரன், ரொறன்ரோவுக்கு வெளியேயும் கனடாவுக்கு வெளியேயும் சென்று ரீவீஜ நிகழ்ச்சிகளுக்காகப் படப்பிடிப்பை மேற்கொண்டவர். முதல்முதலில் ஈழத்தமிழர்கள் கனடாவுக்குக் கப்பலில் அகதிகளாக வந்த சம்பவத்தை நினைவுகூரும் நிகழ்ச்சியொன்று நியூஃபவுண்லாண்டில் இடம்பெற்றபோது, கனடியப் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி (Gary) ஆனந்தசங்கரியுடன் அங்கு சென்று நிகழ்ச்சியைப் படம்பிடித்து வந்தவர், என்னுடன் ஜெனிவாவுக்கும் படப்பிடிப்புக்காக வந்திருக்கிறார்.

### சுதந்திரேஸ்வரன் நடராசா (செல்வன்)



செல்வன் என்று அறியப்படும் சுதந்திரேஸ்வரன் நடராசா ரீவீஜ-யில் முழுநேரத் தயாரிப்பாளராகவும் படப்பிடிப்பாளராகவும் பணியாற்றியவர். செய்திகள் முதல் ரீவீஜ-யின் வழமையான பல நிகழ்ச்சிகளையும் தயாரித்த செல்வன், விசேட நிகழ்ச்சிகள் பலவற்றைத் தயாரித்து வழங்கியவர். ரீவீஜ-யின் அனேகமான நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பாளராகப் பணியாற்றியதோடு, ஒளியமைப்பு, விஷன் மிக்ஸிங், எடிற்றிங் என்று சகலவற்றையும் தனியாளாகவே செய்து நிகழ்ச்சிகளைத் தயாரிக்கக்கூடியவர். என்னுடன் லண்டன், ஜெனிவா நகரங்களுக்கு வந்து நிகழ்ச்சிகள் செய்தவர். ரீவீஜ-யுக்கென இவர் பல விசேட நிகழ்ச்சிகளைத் தயாரித்

தார். மறைந்த கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரனின் 'வொண்டஃபுள் வைத்திலிங்கம்' என்ற நகைச்சுவை நிகழ்ச்சி, கே.எஸ். பாலச்சந்திரன் எழுதி, இயக்கிய 'நாதன், நீதன், நேதன்' என்ற தொடர் நாடகம், வீ. திவ்யராஜன் தயாரித்துத் தொகுத்து வழங்கிய 'தீதும் நன்றும்' போன்ற நிகழ்ச்சிகளின் நிலையத் தயாரிப்பாளராகவும் தொழில்நுட்பத் தயாரிப்பாள ராகவும் பணியாற்றிய செல்வன், அறிவிப்பாளர் முகுந்தன் தொகுப்பாளராகப் பணியாற்றிய 'பொருத்தம் பதினாறு', மற்றும் 'அரும்புகள்', 'இசையருவி' போன்ற நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்கினார். பெரும்பாலும் மாலை நேரங்களில் ஆரம்பித்து இரவு வெகுநேரம்வரை பணி செய்யும் செல்வன், ரீவீஜ-யின் மிக முக்கிய தயாரிப்பாளர்களில் ஒருவராக விளங்கியவர்.

### தீபன் இராஜலிங்கம்



ரீவீஜ-யின் முழுநேரத் தயாரிப்பாளர்களில் ஒருவராகப் பணியாற்றியவர் தீபன் இராஜலிங்கம். மிக இளவயதில், ரீவீஜ-யின் ஆரம்ப நாட்களிலேயே பணிக்குச் சேர்ந்துகொண்ட தீபன்,முதலில் படப்பிடிப்பாளராக, பின்னர் காட்சித் தொகுப்பாளராகப் பணியாற்றி, அதன்பின்னர் தயாரிப்பாளராக செய்தி, நேர்காணல்கள், மற்றும் ரீவீஜ-யில் மாலை நேரங்களில் ஒளிபரப்பப்படும் 'உங்கள் விருப்பம்' போன்ற நிகழ்ச்சிகளைத் தயாரித்தவர். மாலை நேரங்களில் செய்திகளைக் கிரமமாகத் தயாரிக்கும் தயாரிப்பாளர்களில் ஒருவரான தீபன், கரியோக்கி என்னும் பதிவு செய்யப்பட்டிருக்கும் சினிமாப் பாடல்களின் பின்னணி இசைக்குப் பாடும் நிகழ்ச்சியைப் 'பாடுவோர் பாடலாம்' என்ற தலைப்பில் தயாரித்தவர்களில் ஒருவர். வார இறுதி நாட்களில் காலை வேளைகளில் தீபன் தயாரித்து வழங்கிய 'காலைத் தென்றல்' என்ற நிகழ்ச்சி மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ரீவீஜ, சீஎம்ஆரில் பணியாற்றிய அஞ்சனன் தொகுப்பாளராகப் பணியாற்றினார். தீபனும் ரீவீஜ-யின் ஆரம்ப காலம்முதல் 2016-ம் ஆண்டு அதன் நிர்வாகம் மாறும்வரை பணியாற்றினார்.

### கே.ஜே. பிரதீபன்



இவரும் ரீவீஜ-யில் மாலை வேளைகளில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் தயாரிப்பாளராகவும் பணியாற்றியவர். மாலை நேரங்களில் ஒளிபரப்பான பல நிகழ்ச்சிகளின் தொகுப்பாளராகவும் பணியாற்றிய பிரதீபன், 'ஒளிக்கீற்று' என்ற நிகழ்ச்சியைத் தயாரித்தவர். இவர் பற்றி சீஎம்ஆர் வானொலி பற்றிய பகுதியிலும் குறிப்பிட்டிருக்கிறேன்.

### எஸ். நாதன்



ரீவீஜ-யில் முக்கிய தயாரிப்பாளர்களில் ஒருவர். ரீவீஜ-யின் ஆரம்ப நாட்களில் பிரதான கட்டுப்பாட்டறையை (Master Control Room) இயக்குபவராகத் தனது பணியைத் தொடங்கிய நாதன், பின்னர் ரீவீஜ-யின் செய்திகளை கிரமமாகத் தயாரிக்கும் தயாரிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டே அதன் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்தவர். ரீவீஜ-யில் இணையும் போது மிக இளவயதினராக இருந்த நாதன், சகலவற்றையும் உன்னிப்பாகக் கவனித்து, சரியாகப் புரிந்துகொள்ளக் கூடியவர் என்பதை அவருடன் பழகியபோது தெரிந்துகொண்டேன். இசையில் பண்பட்ட இரசனை கொண்ட நாதன், தன்னைச் சுற்றி நடப்பவற்றைக் கூர்ந்து அவதானிப்பவர். உண்மையில் இத்தகையவர்கள் சிறந்த கலைப் படைப்புகளைத் தயாரிப்பவர்களாகப் பிரகாசிக்கக்கூடியவர்கள். மக்களுக்கான வெகுசன ஊடகங்களில் தயாரிப்பாளர்களாக இவர்கள் சேர்ந்துகொண்டால், அவர்கள் உச்ச நிலைகளை எட்டமுடியும். ஆனால், துரதிஷ்டவசமாக ஈழத் தமிழர்கள் மத்தியில், குறிப்பாகப் புலம்பெயர்ந்தோர் மத்தியில் செலவுச் சுருக்கம் கருதி, தொழில்நுட்பவியலாளர்களையே தயாரிப்பாளர்களாகவும் பணிக்கு அமர்த்தவேண்டி இருக்கிறது. தேர்ந்த இரசனைகொண்ட, சமூகத்தின் பல்வேறு அம்சங்களை ஆழமாகப் புரிந்துகொள்ளக்கூடிய படைப்பாற்றல் கொண்டவர்களைத் தயாரிப்பாளர்களாக நியமித்து, அவர்களின் தயாரிப்புகளுக்கு வேண்டிய தொழில்நுட்பப் பணிகளைச் செய்வதற்குத் தொழில்நுட்பவியலாளர்களை பணிக்கு அமர்த்துவதன் மூலமே தொலைக்காட்சி, வானொலிச் சேவைகள் சிறந்த படைப்புகளை மக்களுக்கு வழங்கமுடியும். அதிஷ்டவசமாக இலங்கையில் எமதுகாலத்தில் அவ்வாறான நிலையே இருந்தது.

நாதன் தயாரித்த 'இராக சங்கமம்' என்ற சாஸ்திரீய இசைப் போட்டி நிகழ்ச்சி, மிகவும் தரமிக்கதாக அமைந்தது. அந்தப் போட்டியின் நடுவர்களாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஷீலா பரத், அனந்தநாராயணன் ஆகியோரும் இலங்கைக் கலைஞர்களில் ஒருவரான தனதேவி மித்திரதேவாவும் பணியாற்றினார்கள். இவர்களோடு சிறப்பு நடுவர்களாக ரொறன்ரோ பெரும்பாகத்தில் சங்கீதம் கற்பிக்கும் பெரும்பாலான இசைக் கலைஞர்கள் பங்குபற்றினார்கள். போட்டியின் பிரதம நடுவரான ஷீலா பரத் அவர்கள் போட்டியாளர்களை சிறந்த முறையில் வழிநடத்திப் பயிற்றுவித்தார். இந்த நிகழ்ச்சியின் இறுதி நிகழ்ச்சிகளும் வெளி மண்டபங்களில் பார்வையாளர்கள் முன்பாக இடம்பெற்றன. நாதன் தயாரித்த மற்றுமொரு முக்கியமான நிகழ்ச்சி 'ஒளித் தடம்'. குறும்படங்களை, அநேகமாக ஈழத் தமிழர்கள் தயாரித்த குறும்படங்களை விமர்சனம் செய்யும் இந்த நிகழ்ச்சியை, ரதனை விமர்சகராகக் கொண்டு நாதன் தயாரித்தார். இது ரீவீஜ-யில் எமது கலைஞர்களின் படைப்புகளுக்கு முக்கியத்துவமளித்த ஒரு நிகழ்ச்சியாகும்.

## 'மதவடி'

ரீவீஜ-யில் பல நகைச்சுவை நிகழ்ச்சிகளும் அவ்வப்போது தயாரிக்கப்பட்டன. செந்தில்நாதன், கமல்பாரதி ஆகியோர் இணைந்து 'வந்திட்டாங்கையா வந்திட்டாங்க' என்ற ஒரு நகைச்சுவை உரையாடல் நிகழ்ச்சியைச் செய்தார்கள். இந்த



நிகழ்ச்சி தயாரித்து ஒளிபரப்பப்பட்டுக்கொண்டிருக்கும்போதே ரீவீஜ-யின் சந்தைப்படுத்தும் உத்தியோகத்தராகப் பணியாற்றிய கணேஷ் முருகேசு 'மதவடி' என்ற ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்தார். இது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. முதலில் செந்தில்நாதனைப் பிரதான பாத்திரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி, பின்னர் சோக்கெல்லோ சண்முகம் அவர்கள் பிரதான பாத்திரத்தில் நடிக்க, தயாரிக்கப்பட்டது. அதன்பின்னர் சுஜந்தன், குகன், செந்தூரன் ஆகியோரைப் பிரதான பாத்திரங்களாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மதவடி, மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்ற நிகழ்ச்சியாகும்.

## ரமேஷ் ராஜதுரை



மிகுந்த அர்ப்பணிப்புடன் ரீவீஜ-யில் பணியாற்றிய தயாரிப்பாளர் ரமேஷ் ராஜதுரை. இவரைப்பற்றி இந்நூலில் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். அவரது பல தயாரிப்புகளில் நான் பங்குபற்றியிருக்கிறேன். ரீவீஜ-யில் எமது நிர்வாகக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் பல பெரிய நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முடியாது போகவே, 'இவ்வார நேயர்' என்ற பெயரில் நான் ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்தேன். கனடாவாழ் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு துறைகளையும் சார்ந்த முக்கியமானவர்களை அழைத்து, அவர்கள் விரும்பிக் கேட்கும் சினிமாப் பாடல் காட்சிகளை ஒளிபரப்பும் நிகழ்ச்சி. அந்தப் பாடலைப் பற்றி, அந்தப் பாடலோடு சம்பந்தப்பட்ட அவர்களது நினைவுகள்பற்றிப் பேசும் அந்த நிகழ்ச்சி மிகவும் சுவாரசியமாக அமைந்து, ரீவீஜ நேயர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்ச்சியில் பி.எச். அப்துல் ஹமீதும் கனடாவுக்கு வந்திருந்த சமயத்தில் பங்குபற்றினார். அந்த நிகழ்ச்சி சுவாரசியமாக அமைந்ததற்குக் காரணம், ரமேஷ் அதைத் தொகுத்த விதமே. தனது பணிக்கு அதிக முன்னுரிமை அளிப்பவர் ரமேஷ். இவர் பதினைந்து வருடங்களாக ரீவீஜ-யில் தயாரித்த நிகழ்ச்சிகளைப் பட்டியலிடுவது சிரமம். அநேகமான நிகழ்ச்சிகளை இவர் ஆரம்பித்து சில காலம் தயாரித்தபின்னர் மற்றைய தயாரிப்பாளர்களிடம் கையளித்தார். எந்த நேரத்திலும் ரீவீஜ கலையகத்துக்கு வந்து பணியாற்றுவதற்குத் தயங்கமாட்டார். ரீவீஜ-யில் காலைச் செய்திகளை ஒளிபரப்ப ஆரம்பித்தபோது அந்தப் பணியை உற்சாகமாக ஏற்றுத் தொடர்ந்து காலைவேளைகளில் பணியாற்றினார். இவர் எமது காலத்தில் இலங்கையில் தொழில்முறை ஊடகங்களில் பணியாற்றியிருந்தால் ஒரு சிறந்த தயாரிப்பாளராக மக்களிடையே பிரபலமாகியிருப்பாரென்று நான் நினைப்பதுண்டு. மிகவும் நேர்மையாகத் தனது பணிகளை ஆற்றும் ரமேஷிடம் எத்தகைய பொறுப்புகளையும் நம்பிக் கையளிக்கலாம்.

ரீவீஜ-யுக்கெனத் தயாரிக்கப்பட்ட பல நிகழ்ச்சிகள், ஃபிரான்சில் இயங்கிய ரீரீஎன் (TTN) தொலைக்காட்சி சேவையில், நிகழ்ச்சிப் பரிமாற்ற ஏற்பாட்டுக்கமைய ஒளிபரப்பப்பட்டன. அதேவேளை, எனது நேரடி நிர்வாக காலத்தில், அவுஸ்திரேலியாவிலிருந்து ஐரோப்பாவிலும் ஒளிபரப்பை மேற்கொண்ட ஜீரீவீ (GTV) தொலைக்காட்சி சேவையோடும் நிகழ்ச்சிப் பரிமாற்றம் மேற்கொண்டோம். எமது சுப்பர் ஸ்ரார், இராக சங்கமம் ஆகிய இசைப் போட்டி நிகழ்ச்சிகளையும் வொண்டஃபுள் வைத்திலிங்கம் என்ற நிகழ்ச்சியையும் பெற்று, அவுஸ்திரேலியாவிலும் ஐரோப்பாவிலும் ஒளிபரப்பிய ஜீரீவீ தொலைக்காட்சி சேவை, அவற்றுக்குப் பதிலாக இந்தியத் தொலைக்காட்சி நாடகங்களை ரீவீஜ-யுக்கு வழங்கியது. அதன்மூலம் இந்திய தொலைக்காட்சி நாடகங்களை வாங்குவதற்காகச் செலவிட்ட பெருமளவு பணத்தை மீதப்படுத்தி எமது நிகழ்ச்சிகளின் தயாரிப்புக்குச் செலவிடக்கூடியதாக இருந்தது.

## ஆனந்த் வைத்தியநாதன்



ரீவீஜ எனது நேரடி நிர்வாகத்தில் இயங்கிக்கொண்டிருந்தபோது அதன் நிகழ்ச்சிகளையும் எமது சமூகத்திலுள்ள இளம் பாடகர்களின் திறமையையும் விருத்தி செய்வதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டோம். அப்படியான முயற்சிகளில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது, இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின்மூலம் உலகத் தமிழர்கள் மத்தியில் பிரபலமடைந்த குரல்ப் பயிற்சி நிபுணர் ஆனந்த் வைத்தியநாதனை அழைத்து, எமது இளையோரைப் பயிற்றுவிப்பதற்கு எடுத்த முயற்சி. வீ. சொர்ணலிங்கம் 2012-ம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதத்தில் இந்த முயற்சிக்கான ஆரம்ப பேச்சுவார்த்தைகளை ஆனந்த் வைத்தியநாதனுடன் நிகழ்த்தினார். அப்போது நான் குடும்பத்துடன் இந்தியா சென்றிருந்தேன். ஆனந்த் வைத்தியநாதனுடன் பேசிய சொர்ணலிங்கம், நான் தமிழ்நாட்டில் இருப்பதை அவருக்குத் தெரிவித்து, எனது தொலைபேசி இலக்கத்தையும் அவருக்குக் கொடுத்திருந்தார். நான் இராமேஸ்வரத்தில் நின்றபோது ஆனந்த் வைத்தியநாதன் என்னுடன் தொடர்புகொண்டார்.

நான் சென்னை திரும்பியதும் அவரைச் சந்திப்பதாகக் கூறி, அதற்கான ஒரு நாளைக் குறித்துக்கொண்டோம். அந்த நாளில் ஆனந்த் வைத்தியநாதன், நான் தங்கியிருந்த ஹொட்டேலுக்குத் தனது இரண்டு நண்பர்களுடன் வந்து, இரவு உணவுக்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கு அவர் கனடாவிலுள்ள தமிழ் இளையோருக்குக் குரல்ப் பயிற்சி அளிப்பது பற்றிப் பேசினோம். அவர், தான் கனடாவுக்கு வந்து, நிலைமைகளை நேரில் அவதானித்து முடிவெடுப்பதாகக் கூறி, தன்னைக் கனடாவுக்கு அழைக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க, நான் கனடா திரும்பி, ரீவீஜ-யின் மூலமாக, அவரைக் கனடாவுக்கு அழைப்பதற்கான விசாவைப் பெறுவதற்கு வேண்டிய ஆவணங்களைச் சமர்ப்பித்தேன். ஆனால், அவருக்கு விசா மறுக்கப்பட்டுவிட்டது. நான் மீண்டும் முயன்ற போதும் அவர் கனடாவுக்கு வருவது கைகூடவில்லை. நான் கொண்டாட்டம் நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக இந்தியக் கலைஞர்களை அழைத்தபோது சுலபமாக அவர்களுக்குக் கிடைத்த விசா, ஆனந்த் வைத்தியநாதன் அவர்களின் விடயத்தில் கைகூடவில்லை. அவர் கூறியவாறே கனடாவுக்கு வந்து, நிலைமைகளை அவதானித்து, கனடிய இளம் தமிழ்ப் பாடகர்களுக்குப் பயிற்சி அளித்திருந்தால், ரீவீஜ உலகத் தமிழ்த் தொலைக்காட்சி அரங்கில் முக்கியமான ஈழத் தமிழ்த் தொலைக்காட்சியாகப் பரிணமித்திருக்கும்.

### சந்தைப்படுத்தல்



2010-ஆம் ஆண்டு ரீவீஜ-யின் நிர்வாகம் மாறியதும் அதில் பணிபுரியும் சகலரும் மிக உற்சாகமாக உழைத்தார்கள். ரீவீஜ-யில் சந்தைப்படுத்தும் பிரிவில் பணியாற்றிய கணேஷ் முருகேசு, சிறீஸ்கந்தராஜா, ராகுலன் ஆகியோர் அந்தப் பிரிவினை மேற்பார்வை செய்த பாலேந்திரனுடன் சேர்ந்து சுறுசுறுப்பாக இயங்கினார்கள். பல பொது நிகழ்ச்சிகளில் ரீவீஜ-யின் சாவடி அமைக்கப்பட்டு, ரீவீஜ-க்கு சந்தா தாரர்களைச் சேர்ப்பது, அதன் செயற்பாடுகளையும் தயாரிக்கும் நிகழ்ச்சிகளையும் விபரிப்பது, ரீவீஜ-யின் இலட்சினை பொருத்தப்பட்ட பொருட்களை மக்களுக்கு விநியோகிப்பது போன்ற சந்தைப்படுத்தல் முயற்சிகளை மேற்கொண்டார்கள். 2012-ஆம் ஆண்டு, அமெரிக்காவின் பல்ற்றிமோர் நகரில் வடஅமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு ஃபெட்னா (Fetna) நடத்திய வருடாந்த மகாநாட்டில் ரீவீஜ சென்று, சாவடி அமைத்து பல நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தது. கணேஷ் முருகேசு தலைமையில் சென்ற இக்குழுவில் நான், அறிவிப்பாளர்கள் ரஞ்சித், தர்ஷினி வரப்பிரகாசம், படப்பிடிப்பாளர்கள் வரன், செல்வன் ஆகியோர் இடம்பெற்றிருந்தோம். பல்ற்றிமோர் நகரில் வைத்தியராகக் கடமையாற்றுபவரும்



ரீவீஜ-யின் 'கேளுங்கள் தரப்படும்' நிகழ்ச்சியில் நோய்கள் சம்பந்தமான கேள்விகளுக்குப் பதிலளிப்பவருமான வைத்தியர் அஞ்சலோ அவர்களின் ஏற்பாட்டில் அந்த மகாநாடு நடைபெற்ற மண்டபத்தில் ரீவீஜ-யுக்கு ஒரு இடம் தரப்பட்டிருந்தது. அங்கு எமது விளம்பரத் தட்டிகளை வைத்து, அவை பின்னணியில் தெரிய பல பிரமுகர்களின் பேட்டி நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்தோம். அறிவிப்பாளர் ரஞ்சித் பல நேர்காணல்களைச் செய்தார். அப்போதுதான் நான் ரஞ்சித்தின் திறமையை இனம்கண்டு பின்னர் அவரை ரீவீஜ-யின் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களில் ஒருவராக இணைத்துக் கொண்டேன். ஃபெட்னா மகாநாட்டில் பங்குபற்றிய அநேகமான தமிழ் மக்களுக்கு ரீவீஜ மிகமுக்கியமான தமிழ்த் தொலைக்காட்சியென்ற அபிப்பிராயம் நிலவியதை என்னால் உணரமுடிந்தது. 'எமது கலைஞர்களை நாமே வளர்த்தெடுப்போம்' என்ற ரீவீஜ-யின் வாசகத்தைப் (motto) பலரும் வரவேற்றார்கள்.

### ஜீரீவீ (GTV) தொலைக்காட்சி



2010-ம் ஆண்டு, நிர்வாக மாற்றத்துக்குள்ளாகி, உற்சாகமாக இயங்க ஆரம்பித்த ரீவீஜ-யின் முதல் நான்கு வருடங்கள் உயிர்ப்புடன் இருந்த போதும் தமிழர்களின் வழக்கப்படியே எம்மிடையே பிரிவினைகள் தோன்றத் தொடங்கின. நான் ரீவீஜ பங்குதாரர்களால் நியமிக்கப்பட்ட, அதன் அன்றாட இயக்கத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் மட்டுமே. பிரிவினைப் பிரச்சினைகள் இல்லாது, ஒற்றுமையாக இயங்கினால் மாத்திரமே ரீவீஜ-யை நான் சிறந்த முறையில் நடத்திச் செல்லலாமேயன்றி, பிரிவினைப் பிரச்சினைகள் தோன்றினால் அவற்றுக்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய சட்டபூர்வமான பலம் எனக்குக் கிடையாது. ரீவீஜ-யை உறுதியாகத் தொடர்ந்து நடத்துவதற்கான ஒரே வழி, அதனை இலாபகரமான நிறுவனமாகவோ அல்லது ஆகக் குறைந்தது இயங்குவதற்குப் போதுமான நிதி

யைக்கொண்ட நிறுவனமாகவோ நடத்துவதுதான். அப்படி நடத்தினால், எனக்கு சட்டபூர்வமாக முடியாவிட்டாலும் தர்க்க ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் துணிந்து நின்று எந்தப் பிரச் சினைக்கும் முகம் கொடுத்திருக்க முடியும். ஆனால், ரீவீஜ-யின் நிதிநிலை மெல்லமெல்ல மோசமடைந்துகொண்டு சென் றது. ரீவீஜ இயங்குவதற்கு அதன் விளம்பர வருமானத்தை அதிகரிப்பதே ஒரேயொரு வழியாக இருந்தது. போதிய அளவு வருமானம் இருந்தால்த்தான் நல்ல நிகழ்ச்சிகளைத் தயாரித்து மக்களின் ஆதரவைப் பெறமுடியும். இலங்கை யில் அரச கூட்டுத்தாபனமாக இயங்கிய ரூபவாஹினிக் கூட் டுத்தாபனத்தைவிட அதிகளவு தமிழ் நிகழ்ச்சிகளைத் தயா ரித்து, முழுக்கமுழுக்க தமிழ்த் தொலைக்காட்சியாக இருபத் திநான்கு மணிநேரமும் இயங்கிய புலம்பெயர் தமிழர்களின் ஊடகம் ரீவீஜ. அதன் வருமானத்தை அதிகரிப்பதற்குப் சந் தைப்படுத்தும் உத்தியோகத்தர்களை அதிகரிக்கவேண்டு மென்று பணிப்பாளர்கள் கருதியதன் விளைவாக ஆர். இளங்கோ என்பவர் சந்தைப்படுத்தும் உத்தியோகத்தராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.



எஸ். பிரபாகரனுக்கு அறிமு கமான இளங்கோ, வீ. சொர் ணலிங்கம் நடத்திய நேர்மு கத் தேர்வின் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்டவர். ரீவீஜ-யில் இளங்கோவுக்கென அவலகம் அமைக்கப்பட்டு, அங்கிருந்து பணியாற்றத் தொடங்கிய இளங்கோ, சில மாதங்கள் பணியாற்றிய பின்னர் அப்பணியை அவரால் தொடர முடிய வில்லை. அதேபோல் நடிகர் சுரேஷ்ராஜாவை சந்தைப்படுத் தும் உத்தியோகத்தராக நியமிப்பதற்கு நான் எடுத்த முயற்சி களும் கைகூடவில்லை.

இந்த நேரத்தில் எஸ். பிரபாகரன் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார். அவுஸ்திரேலியாவிலும் ஐரோப்பாவிலும் இயங்கும் ஜீரீவீ தொலைக்காட்சி சேவையுடன் இணைந்து ஓர் உலகளாவிய சேவையாக இயங்குவதே அந்தப் பிரே ரணை. அந்தச் செயற்பாட்டுக்கு கனடாவே பிரதான தளமாக இருக்கும் என்பது எனக்கு உற்சாகமளிக்கும் செய்தியாக இருந்தது. ரீவீஜ-யின் உரிமையாளர்களில் ஒருவரான வீ. சொர்ணலிங்கம், ரீவீஜ தனித்து இயங்கத் தொடங்கிய நேரத் தில் ஒருமுறை மெல்பேர்ணுக்குச் சென்றபோது ஜீரீவீ-யின் கலையகத்திற்குச் சென்று அவர்களது செயற்பாடுகளைப் பார்த்துவிட்டு என்னையும் அங்கு சென்று பார்க்குமாறு கூறி யிருந்தார். நான் மெல்பேர்ண் சென்றபோது ஜீரீவீ கலையகத் திற்குச் சென்று அவர்களுக்கு அறிமுகமாகியிருந்தேன். அதன்பின்னர்தான் நாம் நிகழ்ச்சிப் பரிமாற்றங்களை மேற் கொண்டோம். அங்கு பணியாற்றிய ரேணுகா என்பவர், எமது நிகழ்ச்சிப் பரிமாற்ற நடைமுறைகளை மிகவும் சிறப்பாக நிர் வகித்தார். ஜீரீவீ-யின் உரிமையாளர் செல்வி என்று அழைக் கப்பட்டவர். அவரது முழுப்பெயர் எனக்குத் தெரியாது. அவர் எஸ். பிரபாகரனுக்கும் தெரிந்தவர். இப்போது, ஜீரீவீ-யுடன் இணைந்து பணியாற்றும் பிரேரணையை எஸ். பிரபாக-ரன் கொண்டுவந்தபோது, சில காரணங்களால் அது கைகூட வில்லை. நாம் உலகளாவிய ரீதியில் ரீவீஜ-யின் சேவை-களை விரிவாக்கக்கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டோம் என்று எனக்குத் தோன்றியது.

### ஐபிசீ (IBC) தொலைக்காட்சி



அந்தக் காலகட்டத்தில் ஒரு நாள் நண்பர் பி.எச்.அப்துல் ஹமீத் என்னைத் தொலைபே சியில் அழைத்து, ஐரோப்பா வில் இயங்கும் ஐபிசீ தொலை காட்சி, வானொலிச் சேவை-களை அங்கு வெற்றிகரமாக இயங்கும் ‘லிபாரா’ என்ற நிறுவன உரிமையாளர்க ளில் ஒருவரான பாஸ்க ரன் வாங்கியிருப்பதாகவும் அவர் கனடாவிலுள்ள தமிழ்த் தொலைக்காட்சி சேவையொன்றுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகவும் தெரிவித்தார். அத்துடன், எனது தொலை பேசி இலக்கத்தை பாஸ்கரனிடம் கொடுத்திருப்பதாகவும் அவர் விரைவில் என்னைத் தொடர்பு கொள்வாரென்றும் தெரி வித்திருந்தார். ஹமீத் கூறியபடியே சில நாட்களில் பாஸ்க-ரன் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார். தான் றொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் அப்போதுதான் வந்து இறங்கியிருப்பதாகவும் அடுத்தநாள் மாலை என்னை ரீவீஜ கலையகத்தில் சந்திப்பதாகவும் கூறினார். பாஸ்கரன் வருவது இணைப்பு பற்றிப் பேசுவதற்காக. ரீவீஜ-யின் அன் றாட செயற்பாடுகளைக் கவனித்துக்கொள்வதற்காக நியமிக் கப்பட்ட நான், ரீவீஜ வேறு நிறுவனத்துடன் இணைந்து இயங்குவது பற்றிய விடயத்தைத் தனித்துக் கையாள்வது உகந்ததல்லவென்று கருதினேன். எனவே, ரீவீஜ-யின் பங்கு தாரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவும் 2010-ம் ஆண்டு ரீவீஜ தனித்து இயங்குவதற்கு ஆரம்பித்ததுமுதல் ஆலோசனைகளை வழங்குபவராக செயற்பட்டுக்கொண்டிருந் தவரும் கனடாவில் ரீவீஜ தொலைக்காட்சி சேவையை ஆரம் பிக்கும் பணியில் முன்னின்று உழைத்தவரும் செயற்திறன் மிக்க ஒருவரென்று நான் கருதுபவருமான எஸ். பிரபாகரனி டம் இதுபற்றித் தெரிவித்தேன். வழக்கமாக மிக முக்கியமான விடயங்களை பிரபாகரனுடன் பேசுமாறுதான் பணிப்பாளர்கள் என்னிடம் கூறுவார்கள். நான் ரீவீஜ நிர்வாகத்தைக் கையேற்ற போது, ரீவீஜ கிட்டத்தட்ட இரண்டு லட்சம் டொலர் வரையி லான பணம் தமக்குத் தரவேண்டியிருப்பதாக பெல் நிறுவ னத்தினர் கடிதம் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். பணிப்பா ளர்களின் ஆலோசனைக்கமைய பிரபாகரனும் நானும் பெல் நிறுவனத்திற்குச் சென்று பேசி அவர்களது அந்தக் கோரிக் கையை இரத்துச்செய்தோம். ரோஜர்ஸ் நிறுவனத்துடன் பேச் சுவார்த்தைகள் நடத்தும்போது குறிப்பாக, எச்.டி. அலைவ ரிசை பெறுவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை பிரபாக ரனே முன்னின்று நடத்தினார். சில சந்திப்புகளுக்கு வீ. சொர் ணலிங்கமும் சமூகமளித்திருக்கிறார். சட்ட சம்பந்தமான பிரச் சினைகளுக்கு பிரபாகரனின் ஆலோசனையைப் பெறும்ப டியே பணிப்பாளர்கள் கூறுவார்கள். ஓரிடத்தில் முழுநேரமா கப் பணியாற்றிக் கொண்டிருந்த எனக்கு மிகுந்தளவு நேரத்தை இப்படியான ரீவீஜ-யின் பிரச்சினைகளுக்காகச் செலவிடவேண்டியிருந்ததால் பிரபாகரனின் உதவி எனக்கு மிகவும் வேண்டியிருந்தது. இப்போது ஐபிசீ-யுடனான பேச்சு வார்த்தைகள் பற்றி நான் பிரபாகரனிடம் தெரிவித்தபோது, அவர் அடுத்தநாள் தான் பாஸ்கரனை சந்திக்க வருவதாகச் சொன்னார். மறுநாள் மாலை பாஸ்கரன் தனது நண்பருடன் ரீவீஜ நிலையத்திற்கு வந்து நிலையத்தைப் பார்வையிட்டார்.

ரீவீஜ தொலைக்காட்சி சேவை, திறமைமிக்க ஈழத் தமிழ் ஊடகர்களைக்கொண்ட, சிறந்த பல நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் தொலைக்காட்சி நிறுவனமாக வளர்ச்சியடைந்திருந்தாலும் புதியவர்களைக் கவரும் அளவுக்கு கவர்ச்சியான தோற்றத்தைக்கொண்ட நிலையம் அல்ல. ஊடகத்துறைக்குப் புதியவரான பாஸ்கரனைக் கவரக்கூடிய தன்மையை ரீவீஜ நிலையம் கொண்டிருக்கவில்லையென்ற எண்ணம் எனது அடிமனதில் இருந்தது. இருந்தபோதும், ஒரு தொலைக்காட்சி நிலையத்தின் வல்லமை அங்கு பணியாற்றுபவர்களின் திறமை, அனுபவம், அந்த நிலையம் தயாரிக்கும் நிகழ்ச்சிகள் முதலியவற்றைக்கொண்டே தீர்மானிக்கப்படுகிறது என்பதை ஒரு தொழிலில் வெற்றியடைந்த பாஸ்கரன் அறிந்திருப்பாரென்று கருதி, ரீவீஜ-யின் தோற்றம்பற்றிய எண்ணத்தைத் தவிர்த்தேன். பாஸ்கரன் நிலையத்தைப் பார்வையிட்ட பின்னர் றெக்ஸ்டேல் என்ற இடத்திலுள்ள ஒரு உணவகத்திற்குச் சென்றோம். எஸ். பிரபாகரன் அங்கு வந்து எம்முடன் இணைந்துகொண்டார். எமது உரையாடலின்போது பாஸ்கரன் ஊடகத்துறைக்குப் புதியவரென்றாலும் ஊடக நிறுவனமொன்றைத் தொழில்ரீதியாகக் கையாளக்கூடியவர் என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தினார்.

ரீவீஜ ஏற்கனவே மக்களின் அபிமானத்தைப்பெற்ற தொலைக்காட்சி சேவை. அதைத் தொழில்ரீதியான கட்டுப்பாட்டுடன் நடத்தக்கூடிய பணபலமிக்க ஒருவரது ஒத்துழைப்பு கட்டாயம் வேண்டுமென்ற நிலையில் நான் இருந்தேன். முதலில், ரீவீஜ-க்கு உரிமையாளரென்று ஒருவர் இல்லை, அது மக்களின் சொத்து, ரீவீஜ-யின் பணியாளர்களே அதன் வெற்றிக்கு உரிமை கோருபவர்களாக இருக்கிறார்கள் என்ற நிலை ஒரு சிறந்த நிலையென்று கருதியிருந்த எனக்கு இப்போது, அந்த நிலை சிறந்ததுதான் என்றாலும் ரீவீஜ நிலையம் ஒரு தொழில்முறை ஊடக நிறுவனத்துக்குரிய கட்டுப்பாடுகளுடன் நடத்தப்பட வேண்டுமென்ற எண்ணம் வலுப்பெற்றிருந்தது. எந்த நிறுவனமும் பணபலம்கொண்ட ஓர் உறுதியான உரிமையாளருக்கோ அல்லது உரிமையாளர்களுக்குக் கீழோ அல்லது அரசாங்கத்தினதோ அல்லது பலம்வாய்ந்த அமைப்பினது கட்டுப்பாட்டிலோ இயங்கவேண்டும். அப்படி இயங்கும் போதும் வேறுவித பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடும் என்றபோதும், அப்படியான கட்டுப்பாட்டோடு இயங்கும் நிறுவனங்களால்தான் அவற்றில் பிரச்சினைகள் தோன்றும்போது, உறுதியான முடிவுகளை எடுத்து, அவற்றை வெற்றிப்பாதையில் நடத்திச்செல்ல முடியும். இப்படிப் பொதுச் சொத்தாக இருப்பது எவராலும் உரிய முறையில் கவனிக்கப்படாத, உறுதியான முடிவெடுக்க முடியாத, பலவீனமான நிறுவனம் என்ற நிலைக்குச் சென்றுவிடுமென்று நான் உணரத் தொடங்கினேன். பாஸ்கரன் போன்ற பணபலம் உள்ளவர்கள் இணைந்து, ஒரு தொழில் நிறுவனமாக நடத்தினால் இரண்டு நிறுவனங்களையும் வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லலாம் என்பது எனது நிலைப்பாடாக இருந்தது. அப்போதிருந்த நிலையில் ரீவீஜ-யின் இயக்கத்தை மறுசீரமைப்புச் செய்து, ஒரு பத்துமாதங்கள் சிறப்பான நிகழ்ச்சிகளைத் தயாரித்து, ரீவிஜ-யை சரியான பாதையில் இயங்கவைத்துவிடலாமென்று நான் கருதினேன். எந்தவொரு தொழிலும் வெற்றி பெறுவதற்கு, அது மக்களின் ஆதரவைப் பெறும்வரை தாக்குப் பிடிக்கக்கூடிய வகையில் நிதிப்பலத்தைக் கொண்டிருக்கவேண்டும். ஊடகங்கள் மக்களின் கவனத்தைப்பெற்று முன்னணியில் வருவதற்கு சில காலமெடுக்கும். அதற்கு தொழில்த்தரம்மிக்க கடுமையான உழைப்பு அவசியம். எம்மிடம் அனுபவம், திறமை, உழைப்பு முதலியன இருக்கின்றன. சில இடையூறுகளால் உரிய வருமானத்தைப் பெறமுடியவில்லை.

பாஸ்கரனுக்கு ஐபீசீயை உலகளாவிய தமிழ் ஊடக நிறுவனமாக வளர்க்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ரீவீஜயும் உலகளாவிய ரீதியாக வளரவேண்டும் என்ற நோக்கையே கொண்டிருந்தது. 2001-ம் ஆண்டு, ரீவீஜ பற்றிப் பேசுவதற்கு எஸ். பிரபாகரனும் நானும் முதல்முதலில் சந்தித்தபோது ரீவீஜ-யை உலகளாவிய சேவையாக விஸ்தரிப்பது பற்றிப் பேசியதை இந்த நூலின் அறுபத்தோராவது அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இப்படி ஒரே நோக்கம்கொண்ட இரண்டு நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து செயற்படுவது இரண்டு நிறுவனங்களுக்குமே நன்மை பயக்குமென்று நான் நினைத்தேன். அன்றைய சந்திப்பு நிறைவடையும்போது, தான் மற்றைய தமிழ்த் தொலைக்காட்சி நிலையங்களையும் பார்க்க நினைத்திருப்பதாகவும் அவற்றையும் பார்த்துவிட்டு முடிவெடுப்பதாக பாஸ்கரன் கூறிச்சென்றார்.

சில மாதங்களின் பின்னர் ஐபிசீ தொலைக்காட்சி, எஸ். சந்திரசேகரனின் ஏரீஎன் (ATN) தொலைக்காட்சி சேவையுடன் இணைந்து செயற்படப்போவதாகப் பலரும் பேசிக்கொள்வதிலிருந்து அறிந்துகொண்டேன். எனக்கு வியப்பாக இருந்தது. எனது பல வருடகால ஊடகப் பயணத்தின் மூலம் பெற்ற அறிவைக்கொண்டு பார்க்கும்போது, ஏரீஎன் தொலைக்காட்சி சேவைக்கும் எமது ஊடகத் தேவைக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. சந்திரசேகரன் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ்நாட்டின் மிகப் புகழ்வாய்ந்த கலைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்தியா கலைகளும் கலைஞர்களும் சிறந்து விளங்கும் நாடு. பிரச்சினைகள் எதுவும் மிகப் பெரியளவில் இல்லாத, பெருமளவு மக்கள் தொகையைக்கொண்ட பெரிய நாடு. இந்திய மக்களது, இந்தியக் கலைஞர்களது, கலைகளது முன்னேற்றத்துக்கான எந்த முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் கனடாவில் இயங்கும் ஏரீஎன் தொலைக்காட்சி சேவைக்கு நிச்சயமாக இல்லை. முழுக்க முழுக்க கனடாவில் வாழும் தெற்காசியப் பிராந்திய மக்கள் தமது நாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்வதற்காக இந்திய, பாகிஸ்தானிய தொலைக்காட்சி சேவைகளின் நிகழ்ச்சிகளை கனடாவில் ஒளிபரப்பும் சேவையையே ஏரீஎன் செய்துகொண்டிருக்கிறது. கனடாவுக்கு வருகின்ற இந்தியக் கலைஞர்களையும் பிரமுகர்களையும் பேட்டி காணும் நிகழ்ச்சிகளைத் தவிர வேறு எந்த நிகழ்ச்சிகளையும் தயாரிக்கவேண்டிய அவசியம் ஏரீஎன்னுக்குக் கிடையாது. ஓர் இந்தியர், தனது நாட்டு நிகழ்ச்சிகளைத் தனது நாட்டு மக்களுக்காக ஒளிபரப்புகிறார், அதைச் சிறப்பாகத் தொழில்நேர்த்தியுடன் செய்கிறாரென்ற கருத்து எனக்கு இருந்தது.

ஆனால், எமது நிலை அவ்வாறானதல்ல. ஈழத் தமிழர்கள் இலங்கையில் இன அடக்குமுறைக்குட்பட்டு எந்தத் துறையிலும் முன்னேற முடியாதவர்களாக குறிப்பாக, கலைத்துறைகளில் மிகவும் பின்தங்கியவர்களாகத் தமது சொந்த நாட்டில் வாழமுடியாது புலம்பெயர்ந்து கனடாவிலும் உலகின் பல நாடுகளிலும் வாழ்பவர்கள். ஈழத் தமிழர்கள் தமது இருப்பைப் பல துறைகளிலும் நிலைநாட்ட வேண்டுமென்ற நிலையில் இருக்கும்போது, எமது எந்தவித முயற்சியும் புலம்பெயர்ந்த தமிழர்களினதும் ஈழத்தில் வாழும் தமிழர்களினதும்

பல்துறை அபிவிருத்திக்கு உதவுவதாக அமையவேண்டும். ஊடகங்கள் குறிப்பாக, தொலைக்காட்சி ஊடகம் அதில் மிகப் பெரும் பங்கை வகிக்கலாம்.

என்னைப் பொறுத்தளவில், எமது கலைஞர்களின் திறமைகளை எமது மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு ஏற்ற ஊடகம் தொலைக்காட்சி ஒன்று மட்டுமே. தொலைக்காட்சிமூலம் ஈழத் தமிழ்க் கலைஞர்களின் திறமைகளும் அவர்தம் படைப்புகளும் கொண்டு சேர்க்கப்படும் போதுதான் எமது கலைத்துறை விரிவடைந்து, பலம்மிக்கதாக மாறும். அதைச் செய்வதற்கு ஏற்ற ஊடகம் தொலைக்காட்சி ஒன்றுதான். இந்த நிலைப்பாட்டையே நான் ரூபவாஹினியில் பணியாற்றும் போதும் கொண்டிருந்தேன். இலங்கையில் நாம் ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலைபெற்ற நாள்முதல் தமிழர் தம் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் நிலையே நிலவுகிறது. அதனால் அவர்கள் தமது வாழ்வுக்காகத் தமது கல்வியைப் பயன்படுத்தும் நிலை இருந்தது மட்டுமேயன்றி, கலை ஆற்றுகைகளின் தரம் மிகப் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. புலப்பெயர்வு ஈழத் தமிழர்களுக்கு ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. அதைப் பயன்படுத்தி, எமது தமிழ்த் தொலைக்காட்சிகள், எமது கலை வளர்ச்சிக்கு மிகுந்த பங்களிப்பைச் செய்யலாம். ஆனால், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு என்பது மிகுந்த பொருள்செலவு நிறைந்த ஒன்று. அதை உணர்ந்து, சிறந்த முறையில் திட்டமிட்டு, அநாவசியமான பிரச்சினைகளுக்குள் சிக்கிவிடாமல், தொலைக்காட்சிகள் மிகக் குறைந்தளவு எண்ணிக்கையில் செயல்ப்பட வேண்டும். இதை நன்கு புரிந்துகொண்டவர்களால்தான் சரியானபடி திட்டமிட்டு, தொலைக்காட்சி சேவைகளை வெற்றிகரமாக நடத்தி, உலகக் கலைப்பரப்பில் நம்மை அடையாளப்படுத்த முடியும்.

எமக்கு மிகப் பெரும் அரசியல்ப் பிரச்சினை இருப்பதால், ஊடகத்துறையில் ஈடுபடுபவர்கள் எல்லோருமே அரசியல் பேசுவதே தமிழ் மக்களுக்கான சேவை என்று கருதுகிறார்கள். நான் ஏற்கனவே இந்தநூலில் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளபடி, எந்தத் துறையைச் சார்ந்தவர்களும் அந்தந்தத் துறையைச் சிறப்பாகச் செய்தால் நமது சமூகம் பல வழிகளிலும் முன்னேற்றமடையும். அரசியல் கலந்துரையாடல்களையும் விவாதங்களையும் மேற்கொள்வதற்கு, நிகழ்ச்சித் தயாரிப்புக்குப் பெரும் பணம் செலவிடவேண்டிய தொலைக்காட்சியை உபயோகிக்க முடியாது. அதற்கு வானொலி ஊடகமே போதுமானது. இதை ஆழமாக உணர்ந்து தொலைக்காட்சியை நாம் சிறந்தமுறையில் பயன்படுத்த வேண்டுமென்பதே எனது நிலைப்பாடு.

நாம் தொலைக்காட்சி மூலம் ஈழத்தமிழர்களின் கலைத்துறையை வளர்க்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, ஈழமக்களின் தேசிய தொலைக்காட்சியாக இயங்குவதே, எமக்கான தொலைக்காட்சி சேவையாக இருக்கமுடியும். ரீவீஜ அதை நன்றாகப் புரிந்துகொண்டு, அந்த அடிப்படையிலேயே பணியாற்றும் முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தது. எமக்கு, நமது மக்களைப் பெருமைப்படுத்தும் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்குப் போதியளவு பணம் வேண்டும். அவ்வாறு நிகழ்ச்சிகளைத் தயாரித்து, அவை ஈழத் தமிழ் வெகுசனங்களைக் கவர்ந்துவிட்டால் அந்தத் தொலைக்காட்சி தனித்துவமான ஈழத் தமிழ்த் தொலைக்காட்சியாகத் திகழமுடியும். பாஸ்கரனுடன் பேசியதில் அவரும் இதே கருத்து நிலையையே கொண்டிருந்தார். ஒத்த கருத்து, சிந்தனை உள்ளவர்கள்தான் இணைந்து பணியாற்ற முடியும். பாஸ்கரன் ஏரீஎன்-னுடன் இணைய எடுத்த முடிவு எனக்கு ஆச்சரியத்தைத் தந்தாலும் ஏதோ ஒரு தொழில்முறைக் காரணத்துக்காக அவர் அந்த முடிவை எடுத்திருக்கலாமென்று நினைத்துக்கொண்டேன்.

அதேநேரம், நான் எந்த விடயத்தையும் பல கோணங்களிலும் சிந்தித்துப் பார்ப்பவன் ஆதலால், பாஸ்கரன் என்ன காரணத்துக்காக ரீவீஜ-யுடன் இணையாமல் விட்டிருக்கலாம் என்று யோசித்தபோது மேலும் ஒரு சாத்தியமான காரணம் தென்பட்டது. இது எனது ஊகம் மட்டுமே. பாஸ்கரன் முதலில் என்னை சந்திக்க வந்தபோது, அவரது உறவினர்கள் சிலரைத் தவிர, அவருக்குத் தெரிந்தவர்கள் பலர் கனடாவில் இருக்கவில்லையென்று நான் நினைத்தேன். பின்னர் அவர் அடிக்கடி கனடாவுக்கு வந்துசெல்ல ஆரம்பித்ததும் கனடா வாழ் தமிழ்ப் பிரமுகர்கள் அவரைச் சூழ்ந்துகொள்ளத் தொடங்கிவிட்டார்கள். அவரை கரன் என்று சுருக்கமான பெயரில், மிக உரிமையோடு அழைத்து, காலம்காலமாக அவருடன் நெருங்கிப் பழகியவர்கள்போன்று நடந்துகொண்டமை எமது சமூகத்தை நன்கு அறிந்துவைத்திருக்கும் எனக்குப் புதிய விடயமாக இல்லாவிட்டாலும் அவர்களில் சிலர் ரீவீஜ-யில் பிரச்சினை இருக்கிறது, அதனோடு இணைவது ஆபத்தானது என்று அவரை எச்சரித்திருக்கலாம் என்று நான் ஊகித்தேன். இணைந்து பணியாற்றவேண்டுமென்று விரும்பி ஒரு நாட்டுக்கு வருபவர், ஏன் பிரச்சினைகளுக்குள் சிக்க வேண்டுமென்று நினைப்பது யதார்த்தமானதே. ஐபிசீ, ரீவீஜ-யுடன் சேர்ந்து இயங்கியிருந்தால் வெற்றிகரமான உலகத் தரமிக்க தொலைக்காட்சி சேவையொன்றை நடத்தியிருக்கலாமென்று இப்போதும் நான் நினைப்பதுண்டு.

### ஈஸ்ட் எஃவ். எம். (East FM.)

அதேவேளை, ரீவீஜ-யின் நிதி நிலை மோசமாகிக்கொண்டே சென்றது. அந்த நேரத்தில் ஈஸ்ட் எஃவ்.எம். என்ற வானொலி அலைவரிசையை வழங்க இருப்பதாக சீஆர்ரீசீ (CRTC) அமைப்பு அறிவித்தது. அந்த உரிமத்தைப் பெற்று, ரீவீஜ-யுடன் இணைந்த வானொலியாகச் செயற்பட்டால் பொருளாதார ரீதியில் ஓரளவு மேம்படலாமென்று அதற்கான உரிமத்தைப் பெறும் முயற்சியில் எஸ். பிரபாகரன் ஈடுபட்டார். சீஎம்ஆர் உரிமத்தைப் பெறுவதற்காக சீஆர்ரீசீ-யின் சபை முன் தோன்றி, அந்த வானொலிச் சேவையை நடத்துவதற்கான தகுதி எமக்கு இருப்பதாக நிரூபிப்பதற்கென அமைக்கப்பட்ட குழுவில், துறைசார் விற்பன்னராக நான் இருந்தது போல், ஈஸ்ட் எஃவ்.எம். வானொலிச் சேவையைப் பெறுவதற்கான குழுவிலும் நான் இருந்தேன். சீஆர்ரீசீ-யின் அந்த அமர்வு 2014-ஆம் ஆண்டு, மே மாதம் 13-ஆம் திகதி இடம்பெற்றது. அந்த நேர்காணலுக்கு முகம்கொடுக்க அன்று கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உரிமையாளர் இளையபாரதியும் கீதவாணி ஒலிபரப்புச் சேவையின் உரிமையாளர் நடா ராஜ்குமாரும் தமது குழுவினருடன் வந்திருந்தார்கள். இருவருமே எனக்கு நன்கு பழக்கமானவர்கள். இளையபாரதி கே. சிவசோதி பற்றி ஏற்கனவே இத்தொடரில்

குறிப்பிட்டிருக்கிறேன்.

**நடா ராஜ்குமார்**



நடா ராஜ்குமார், நான் கல்விகற்ற காங்கேசன்துறை, நடேஸ்வராக் கல்லூரியில் பயின்றவர். நான் அங்கு படித்த காலத்தில் அவர் மிகச் சிறுவனாக இருந்திருப்பார். 1983-ம் ஆண்டு, சிங்களப் பகுதிகளில் இடம்பெற்ற தமிழர் படுகொலைகளைத் தொடர்ந்து, நான் ஊருக்குச் சென்றபோது, கொழும்பிலிருந்து கப்பல்களில் ஏற்றிவரப்பட்டவர்கள் தத்தமது ஊர்களுக்குச் செல்வதற்முன்னர் தங்குவதற்காக நடேஸ்வராக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த முகாமில் தொண்டராகப் பணியாற்றிய இளைஞர் குழுவில் நடா ராஜ்குமாரைப் பார்த்திருக்கிறேன். 1983-ம் ஆண்டு, நான் காங்கேசன்துறையில் இருந்த நாட்களில் அவரை அடிக்கடி பார்த்து அவர் எனக்கு அறிமுகமாகியிருந்தார். 1991-ம் ஆண்டு, நான் கனடா வந்தபின்னர் நடா ராஜ்குமாரை ரொறன்ரோ நகரில் சந்தித்தேன். எம்.பீ. கோணேஸ் 1991-ல் ஆரம்பித்த 'ராகப்பிரவாகம்' வானொலி நிகழ்ச்சியில் அறிவிப்பாளராகப் பணியாற்றிய நடா ராஜ்குமார், 1985-ம் ஆண்டளவில் கனடாவுக்கு வந்துவிட்டார். அப்போதிருந்தே மொன்றியலில் 'தமிழ்த் தென்றல்' என்னும் வானொலிச் சேவையில் பணியாற்றிய அனுபவத்தோடு ரொறன்ரோ வந்து கோணேசின் 'இராகப் பிரவாகம்' நிகழ்ச்சியில் அறிவிப்பாளராகப் பணியாற்றத் தொடங்கிய நடா ராஜ்குமார், 1992-ம் ஆண்டில் சொந்தமாக 'கீதவாணி' வானொலிச் சேவையை ஆரம்பித்தார். முதலில் சீஐஆர்வீ எஃவ்.எம். 88.9 (CIRV FM 88.9) அலைவரிசையில் வார இறுதி நாட்களில் காலை ஒலிபரப்பாக கீதவாணியை ஆரம்பித்தவர், படிப்படியாகத் தனது வானொலிச் சேவையையும் வளர்த்து அவரும் ரொறன்ரோவின் முக்கிய வானொலி ஊடகராக வளர்ந்து தமிழ் மக்களுக்கு அறிமுகமானார்.

இப்படி எனக்கு நன்கு அறிமுகமான இருவர் ஈஸ்ட் எஃவ்.-எம். அலைவரிசையைப் பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். பண்பலை அலைவரிசை யாருக்குக் கிடைத்தாலும் பரவாயில்லையென்ற மனநிலையில் நான் இருந்தேன். இறுதியில் நடா ராஜ்குமாருக்கு ஈஸ்ட் எஃவ்.எம். அலைவரிசையைப் பயன்படுத்தும் உரிமம் கிடைத்தது. இப்போது அந்த வானொலி, தமிழர்கள் அதிகமாக வாழும் ஸ்காபரோ நகரில் மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது.

2015-ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து ரீவீஜ-யின் விளம்பர வருமானம் வெகுவாகக் குறைந்தது. உழைத்த பணியாளர்களுக்கு கிரமமாக ஊதியம் வழங்க முடியவில்லை. அப்படியிருந்தும் ரீவீஜ நிலையத்தை இடம் மாற்றித் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிக்குக் கொண்டுசெல்ல முயற்சித்தோம். ரீவீஜ கலையகம் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதியிலிருந்து மிகத் தொலைவில் இருந்ததால் பணியாளர்களுக்கும் நிகழ்ச்சியில் பங்குபற்றுபவர்களுக்கும் ரீவீஜ கலையகத்திற்கு வந்துபோவது சற்று சிரமாக இருந்தது. எனவே ரீவீஜ நிலையத்தை அனைவருக்கும் வசதியான இடத்தில் மாற்றுவது உகந்ததென்று கருதினோம். அதற்காகப் பல இடங்களைப் பார்வையிட்டோம். அந்த முயற்சியில் வீடு விற்பனை முகவர்தாம். சிவதாசன் மிகுந்த ஒத்துழைப்பு வழங்கினார்.

அக்காலகட்டத்தில் ரீவீஜ-யின் நிலை மிக மோசமாகிக் கொண்டே சென்றது. ரீவீஜ-யை அனைவரும் உரிமை கொண்டாடுவதை விடுத்து, ஒரு தொழில் நிறுவனத்துக்கான கண்டிப்புடன் நிர்வகிக்கவேண்டுமென்று நான் உணர்ந்தாலும், அதற்கான மாற்றங்களைச் செய்யக்கூடிய நிலைமை இருக்கவில்லை. நான் எனது வாழ்வாதாரத்துக்கான பணியில் மிக முக்கிய பொறுப்பில் இருந்தேன். அதை சரிவரக் கவனிக்காது, எனது சக்தியையும் நேரத்தையும் வீணாக்குவது பயனற்றது என உணர்ந்து, எனது பதவி விலகல் கடிதத்தை ரீவீஜ உரிமையாளர்களிடம் சமர்ப்பித்தேன். ஆனால், டொக்டர். சாந்தகுமார், எஸ். பிரபாகரன், மற்றும் ரீவீஜ-யின் சில பணியாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, எனது பதவி விலகல் கடிதத்தை மீளப் பெறவேண்டியதாயிற்று. நான் ரீவீஜ-யின் உரிமையாளர்களால் அமர்த்தப்பட்ட ஒரு பணியாளன். துறைசார்ந்து சிறப்பாகச் செயற்பட என்னால் முடியுமேயல்லாது, ரீவீஜ-யின் உரிமை பற்றிய பிரச்சினைகளில் தலையிட எவ்வித உரிமையும் கிடையாது. ரீவீஜ-யின் உரிமையாளர்களால் அதன் செயற்பாட்டு உத்தியோகத்தராகச் நியமிக்கப்பட்ட நான், எனது தொழில் வரம்பை மீறி, ரீவீஜ-யின் உரிமைப் பிரச்சினையில் தலையிட்டால், நான் சட்டரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். சட்ட வரம்புகளுக்குட்பட்டு செயற்பட வேண்டிய பதவியை வகிப்பதால், ஒரு அலுவலகத்தில் பணியாற்றும் ஏனையவர்களைப்போலத் தமது உணர்வுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப செயல்ப்பட முடியாது. நான் நிரந்தரமாக ஆற்றும் பணி காரணமாக, கனடாவில் ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான சட்டரீதியான அணுகுமுறை எத்தகையது என்பதை நான் அறிந்திருந்ததால் மிகவும் அவதானமாகவே ரீவீஜ விடயத்தைக் கையாண்டேன்.

என்னை நன்கு அறிந்தவர்கள் எனது நிலையைப் புரிந்து கொண்டாலும் என்னை முழுமையாக அறியாதவர்கள், ரீவீஜ பிரச்சினையில் தமக்கு சாதகமாக அல்லது தம்மோடு இணைந்து செயற்படவில்லையென்று ஏமாற்றமடைந்திருந்தார்கள் என்பதை நான் அறிவேன். நான் உணர்ச்சிவசப்படுபவன் என்றாலும், பெரும்பாலும் அறிவின் துணைகொண்டே கருமங்களை ஆற்றுகிறேன். என்னைச் சுற்றி நடப்பவற்றை எப்போதும் மிக உன்னிப்பாக அவதானிப்பதால், ரீவீஜயின் பிரச்சினை என்ன, அதற்கான காரணங்கள் என்னவென்பதை நான் மிகத் தெளிவாக விளங்கிக்கொண்டாலும் அவைபற்றிய எனது அபிப்பிராயங்களை வெளியிடுவதைத் தவிர்த்தே வந்திருக்கிறேன். அபிப்பிராயங்களை வெளியிடுவதால் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமாயின் அவற்றை வெளியிடுவதில் அர்த்தமுண்டு. நான் எப்பொழுதுமே செய்யக்கூடியவற்றை மாத்திரமே அல்லது செய்யமுடியுமென்பவற்றை மட்டுமே மிகுந்த பிரயாசையெடுத்து செய்பவன். செய்ய இயலாதென்று கண்டால் அமைதியாகிவிடுவேன். நினைத்தால் எதையுமே சாதிக்கலாமென்ற ஊக்கப்படுத்தும் உரைகளை நம்புபவனல்ல.

என்னால் எதைச் செய்யமுடியுமென்று அறிவுபூர்வமாக உணர்கிறேனோ அதிலே தீவிரமாக இயங்குவதே எனது நிலைப்பாடு. இதை அறிவுறுத்தும் வாசகமொன்றை, நான் இலங்கையில் பணியாற்றும்போது எனது அலுவலக மேசையின் மேலே போடப்பட்டிருந்த கண்ணாடியின் கீழே வைத்திருந்தேன்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்த வாசகத்தைக் கொண்டிருந்த தபாலட்டையை, நான் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சி பெறுவதற்காக, 1981-ம் ஆண்டு கோலாலம்பூருக்குச் சென்றபோது வாங்கினேன். நான் அந்தத் தபாலட்டையை வாங்கியது அந்த வாசகத்தின்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காக அல்ல, எனது இயல்பை அந்த வாசகம் அச்சொட்டாகப் பிரதிபலித்ததால் மிகவும் மகிழ்ச்சியடைந்து அதை வாங்கினேன். இறைவனிடம் வேண்டுவதுபோன்ற அந்த வாசகம் பின்வருமாறு:

‘God!
Grant me the serenity to accept the things I cannot change,
The courage to change the things I can,
And the wisdom to know the difference.’

இதைத் தமிழில் கூறுவதானால்,

‘இறைவா! எனக்கு மாற்ற முடியாதவற்றை அமைதியாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தையும், மாற்றக்கூடியவற்றை மாற்றுவதற்கான மனவலிமையையும், இந்த இரண்டுக்குமுள்ள வேறுபாட்டைத் தெரிந்துகொள்வதற்கான கூர்ந்த அறிவையும் தாருங்கள்.’

இதில் மாற்றமுடியாதவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் என்பதை மாற்றமுடியாது என்பதை, ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் என்று புரிந்துகொள்ளவேண்டும். உண்மையில் முயற்சி செய்தால் முடியாதது எதுவுமில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எது முடியும் என்பதை அறிந்து, உணர்ந்து அதில் தீவிரமாக உழைத்தால் வெற்றியடையலாம் என்பதே உண்மை. இயலாத காரியங்களில் எத்தகைய முயற்சி செய்தாலும் வெற்றியடையவே முடியாது. மாறாக, ஏமாற்றமும் மனத்துயரும் அவமானமுமே மிஞ்சும். இதை சுலபமாக விளங்கிக்கொள்வதென்றால், எனக்கு இயற்கையாகவே பாடும் ஆற்றல் இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ளும் வல்லமை எனக்கு இருந்தால், தீவிரமான பயிற்சியின்மூலம் அந்த வல்லமையை மேம்படுத்தி சிறந்த பாடகராகப் புகழ்பெறலாம். பாடவே இயலாத குரலைக்கொண்ட ஒருவர், எவ்வளவுதான் முயற்சிசெய்தாலும் சிறந்த பாடகராக முடியாது. தனது திறமை தெரியாது பாட முயற்சி செய்தால் ஏனையோரின் பரிகசிப்புக்குள்ளாக நேரிடும். எதற்கு முயற்சி செய்யவேண்டும், எதற்கு முயற்சி செய்யக்கூடாது என்பதை அறிந்துகொள்வதற்கு நுண்ணிய அறிவு வேண்டும். இது வாழ்க்கையில் எந்தத் துறையிலும் எந்த விடயத்திலும் பிரயோகிக்கக்கூடிய தத்துவம். தோல்விகளால் ஏற்படும் ஆற்றாமை தரும் பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி, பழிவாங்கல் போன்ற துர்க்குணங்களில்லாத, நம்பிக்கை நிறைந்த நிம்மதியான வாழ்க்கைக்கு இந்த வாசகம் வழிகாட்டுகிறது என்பதை நான் முழுமையாக உணர்கிறேன். கி.மு. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீஸின் ‘உன்னையே நீ அறிவாய்’ (know thyself) என்ற தத்துவத்தின் ஓர் எளிமையான வெளிப்பாடாகவே இந்தப் பிரார்த்தனையை நான் புரிந்துகொண்டேன்.

நான் அவமானங்களை அதிகம் சந்திக்காமல் கௌரவத்துடன் வாழ்வதற்கு எனக்கு இயல்பாகவே இருக்கும் மேற்கூறிய நிலைப்பாடே உதவுகிறது என்று நான் கருதுபவன். இந்த நிலைப்பாடே ரீவீஜ சம்பந்தமாகவும் எனக்கு இருந்தது. அந்தப் பிரச்சினைக்குள்ளே சென்று என்னால் வெற்றிகரமாக எதையும் செய்யமுடியாதென்று கருதினேன். அந்த நிலைப்பாட்டுக்கமையவே அதுபற்றி விரிவாகப் பேசுவதையும் இங்கு தவிர்த்திருக்கிறேன்.

2016-ம் ஆண்டின் பிற்பகுதியில் ரீவீஜ-யின் உரிமையாளர்கள் பலமுறை கூடி விவாதித்து, ரீவீஜ-யை வாங்குவதற்கு ஆர்வம் கொண்டிருந்த, அமெரிக்காவில் வசிக்கும் ஜெய் மு. ஜயந்தனுக்குக் கொடுத்துவிடுவதென்று முடிவெடுத்தார்கள். உரிமையாளர்களின் அந்தக் கூட்டங்களுக்கு நான் அழைக்கப்படவில்லை. ரீவீஜ-யை நடத்துவது சம்பந்தமான கூட்டமென்றால் என்னை அழைத்திருப்பார்கள். அதை விற்பது சம்பந்தமான கூட்டமென்பதால் நான் அழைக்கப்படவில்லையென்பது புரிந்துகொள்ளக்கூடியதே.

ரீவீஜ-யை ஜயந்தனிடம் ஒப்படைப்பதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகள் 2016-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 22-ம் திகதி பூர்த்தியானது. அது மனதுக்கு வருத்தமளிப்பதாக இருந்தபோதும், அந்த முடிவுதான் நடைமுறைச் சாத்தியமானது. அதை பெரும்பான்மையான பங்குதாரர்கள் உணர்ந்திருந்தமையால்த்தான் ரீவீஜ-யை ஜயந்தனுக்குக் கையளிக்கும் முடிவு சாத்தியமானது. சமூக நன்மைகருதி ரீவீஜ ஆரம்பிக்கும் முயற்சியில் ஒத்துழைத்து, அதன் பங்குதாரர்களானவர்கள் ரீவீஜ-யின் கடன்களுக்குப் பொறுப்பேற்பார்களென்று எதிர்பார்க்கமுடியாது.

ரீவீஜ-யை ஜயந்தனிடம் கையளித்து, அதற்காகப் பெற்றுக்கொண்ட பணத்தில் பல மாதங்கள் முறையாக சம்பளம் பெறாது பணியாற்றிய பணியாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணம் வழங்கப்பட்டதோடு, ரீவீஜ-யின் ஆரம்ப காலத்தில் பெறப்பட்ட கடன்களும் கொடுக்கப்பட்டன. ரீவீஜ நிர்வாகத்தை நான் பொறுப்பேற்று நடத்திய 2010-ம் ஆண்டுமுதல் 2016-ம் ஆண்டுவரையான காலப்பகுதியில், அதனை நடத்துவதற்காக கடன் எதனையும் பெறவில்லை. பணியாற்றியவர்களுக்கு சம்பளக் கொடுப்பனவாக பல மாதங்களுக்கான சம்பளப் பாக்கி மட்டுமே கொடுக்கவேண்டியிருந்தது. அந்த விபரங்களை நான் டொக்டர். சாந்தகுமாரிடம் சமர்ப்பித்தேன். டொக்டர். சாந்தகுமாரும் எஸ். பிரபாகரனும் ரீவீஜ-யின் கணக்குப் பரிசோதகருடன் (auditor) பல நாட்கள் சேர்ந்து இயங்கி, சகல கொடுப்பனவுகளையும் மேற்கொண்டதோடு, ரீவீஜ-யின் நெடுநாளைய கடன்களையும் அடைத்தார்கள். மிகுதிப் பணத்தில் ‘ஈகை’ என்ற பெயரில் ஓர் அறக்கட்டளையை நிறுவி, ஈழத் தமிழ் மக்களுக்குத் தொண்டாற்றும் நிறுவனமாக டொக்டர். சாந்தகுமாரின் தலைமையில் இப்போது இயங்கிக்கொண்டிருக்கிறது. ரீவீஜ நிறுவனத்தை வாங்கிய ஜயந்தன், அதை நடத்தும் பொறுப்பை சீஎம்ஆர் நிறுவனத்திடம் கையளிக்க, ரீவீஜ இப்போதும் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது.

## டொக்டர். வடிவேலு சாந்தகுமார்



எனது பொது வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் நான் பலரையும் சந்தித்துப் பழகியிருக்கிறேன். அவர்களில் சிலர் எனது மதிப்புக்குரியவர்களாக இருக்கிறார்கள். ரீவீஜ-யில் இணைந்து பணியாற்றிய பதினைந்து வருட காலப்பகுதியில் எனது நன்மதிப்புக் குள்ளானவர்களில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர் டொக்டர். வடிவேலு சாந்தகுமார். அவர் தனது வைத்தியத் தொழிலை மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார். அதுமட்டும் போதுமென்று ஒதுங்கி வாழ்ந்துவிடாமல், ஈழத் தமிழர் நலம் சார்ந்த பல தொண்டுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருபவர். கனடாவில் முன்னணி வகிக்கும் ஈழத் தமிழ்த் தொண்டு நிறுவனங்களில் ஒன்றாகிய 'கனடியத் தமிழ்க் காங்கிரஸில்' (CTC) செயல்ப்படும் அங்கத்தவராக இருப்பதோடு, அதன் தலைவராக சில வருடங்கள் பணியாற்றியவர்.

ரீவீஜ-யின் பிரதான பங்குதாரர்களில் ஒருவரான அவர், அதன் பிரச்சினையைக் கையாண்ட விதம் எனக்கு அவர்மீது மிகுந்த மதிப்பை ஏற்படுத்தியது. என்னைவிட வயதில் மிகக் குறைந்தவரான சாந்தகுமார், மிகவும் அறிவு முதிர்ச்சி கொண்டவர். எந்த விடயத்திலும் யாரும் அவரைப் பிழையாக வழிநடத்த முடியாது என்பதை நான் அவரைக் கூர்ந்து அவதானித்ததில் அறிந்துகொண்டேன். ரீவீஜ-யில் எமது நிர்வாகத்தின் இறுதிக் காலத்தில் டொக்டர். சாந்தகுமாரைப் போன்ற ஒருவர் விடயங்களைக் கையாண்டிருக்காவிட்டால் ரீவீஜ சின்னாபின்னமாகி, அங்கு பணியாற்றிய பலரும் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருப்பார்கள். ரீவீஜ-யை எப்படியாவது தொடர்ந்து நடத்தவேண்டுமென்று பல முயற்சிகளை மேற்கொண்டார். எஸ். பிரபாகரனின் உழைப்பின்மீதும் திறமைமீதும் நம்பிக்கை கொண்டிருந்த அவர், ரீவீஜ-யின் அன்றாட நடவடிக்கைகளில் பிரபாகரன் மேலும் ஈடுபாடு காட்ட வேண்டுமென்று வலியுறுத்தினார். ஆனால், அந்த முயற்சி கைகூடவில்லை. பின்னர் ரீவீஜ-யில் பணியாற்றிய சிலர், தாம் அதை எடுத்து நடத்தலாமென்று கருதியபோது அதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் அதற்குரிய உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கும் மிகுந்த அக்கறை எடுத்து செயலாற்றினார். அதுவும் நடைபெறவில்லை. இறுதியாக, ரீவீஜ-யை ஜயந்தனிடம் கையளிப்பதென்ற முடிவு பங்குதாரர்களால் எடுக்கப்பட்டதும் அதற்காக சட்டத்தரணிகள், கணக்காளர்களோடு பல நாட்களைச் செலவிட்டு, ரீவீஜ-யின் பிரச்சினைகளை சுமுகமாகக் கையாண்டார். இறுதி நேரத்தில் தானே ரீவீஜ-க்கு சென்று, தொழில்நுட்பப் பிரிவின் பொறுப்பாளர் கே. ராஜனுடன் சேர்ந்து அதன் சகல தொழில்நுட்பக் கருவிகளையும் சீஎம்ஆரிடம் கையளித்ததோடு, ரீவீஜ-யின் சகல கோப்புகளையும் எடுத்துச்சென்று தனது அலுவலகத்தில் பத்திரப்படுத்தினார். பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளப் பணத்தை வழங்குவதில் மிகுந்த அக்கறை எடுத்து, அதற்கு முன்னுரிமை வழங்கினார். இவ்வாறு தன்னலம் கருதாது பொதுப்பணி புரிபவர்கள் இனம்கண்டு பாராட்டப்பட வேண்டியவர்கள். சமூக மேம்பாட்டுக்காக தொண்டுகளைச் செய்யும் பொறுப்புகளுக்கு அவரைப் போன்றவர்கள் நியமிக்கப்படவேண்டும். அப்போதுதான் எமது சமூகம் முன்னேறுமென்று நான் உறுதியாகக் கூறுவேன். டொக்டர். சாந்தகுமார் முன்னின்று மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஈகை என்ற தொண்டு நிறுவனம் எமது மக்களின் நன்மைக்காக இயங்கும் நிலை ஏற்பட்டதோடு, ரீவீஜ-யும் இப்போதும் தொடர்ந்து இயங்குகிறது.

இத்துடன் எனது நெடிய ஊடகப் பயணத்தில் நான் பெற்ற அனுபவங்கள், அந்த அனுபவங்கள் என்னுள் ஏற்படுத்திய சிந்தனைகளை, ஊடகத் துறையின் பல அம்சங்கள் பற்றிய எனது கருத்துக்களை உங்களோடு பகிர்வதை நிறுத்திக் கொள்கிறேன். எல்லோரது வாழ்க்கையையும்போலவே எனது வாழ்க்கையும் மகிழ்ச்சியான சம்பவங்களும் மகிழ்ச்சியற்ற மன உழைச்சலைத் தருகின்ற சம்பவங்களும் நிறைந்த ஒன்றுதான். ஒப்பீட்டளவில் பெரும்பாலும் வெற்றிகளும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒன்றாகவே என்னுடைய ஊடக வாழ்க்கை அமைந்தது. எனது வாழ்வின் பெரும்பகுதி ஊடகத் தொழிலோடு ஒன்றித்துவிட்டதால் எனது வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததென்று நான் சொல்லலாம். அதேநேரம், எனது தொழில் வாழ்க்கையில் அவ்வப்போது நிகழ்ந்த மகிழ்ச்சியற்ற சம்பவங்களையும் நான் மறந்துவிட முடியாது. எனவேதான் ஒருசில கசப்பான சம்பவங்களையும் இங்கு மேலோட்டமாக விபரித்திருக்கிறேன். மகிழ்ச்சியான நினைவுகள் எப்போது நினைத்தாலும் மகிழ்வைத் தருவன. கசப்பான சம்பவங்கள் தரும் கவலையும் கசப்புணர்வும் கோபமும் காலப் போக்கில் வீரியமிழந்துவிடுகின்றன. ஆனால், அவை முற்றாக மறக்கப்படுவதில்லை. மகிழ்ச்சியானதும் கசப்பானதுமான சம்பவங்கள் நிறைந்ததே முழுமையான வாழ்க்கை. அந்த வாழ்க்கை அனுபவம் முழுமையாகப் பகிரப்படும் போதுதான் அதிலிருந்து மற்றையவர்கள் பயன்பெற முடியும். 'நினைவு நல்லது' என்று சேர்த்து வாசிக்கும்போது நல்ல நினைவென்ற அர்த்தத்தையும் நினைவு - நல்லது என்று பிரித்து வாசிக்கும்போது நினைப்பது நல்லது என்ற அர்த்தத்தையும் தருவதால் இதற்கு 'நினைவு நல்லது' என்று பெயரிட்டேன். முடிந்தளவு எனது அனுபவங்களையும் எனது எண்ணங்களையும் இங்கு பதிந்திருக்கிறேன். சில அனுபவங்கள் அவசியமற்றவையென்று கருதித் தவிர்த்துவிட்டேன். நீண்ட கால அனுபவமென்பதால் இதுவரை தமிழ் ஊடகத்துறை சார்ந்த எவரும் எழுதாத அளவு நீண்ட தொடராக அமைந்துவிட்டது. ஆறு வருடங்களாக மாதந்தோறும் இந்தக் கட்டுரைத் தொடரை எழுதுவதற்கு உற்சாகமும் ஊக்கமும் கடும் உழைப்பும் தந்து எனது முயற்சியை சாத்தியமாக்கிய 'தாய் வீடு' ஆசிரியர் பி.ஜெ. டிலிப்குமாருக்கு எனது நன்றி.

இந்தத் தொடரை பொறுமையாக முழுவதுமாக வாசித்திருந்தீர்களானால் வெகுசன ஊடகத்துறை பற்றிய உங்கள் புரிதலுக்கும் சிந்தனைக்கும் மேலும் ஒரு பரிமாணம் கிடைத்திருக்கும் என்ற நம்பிக்கையோடு,

உங்களிடமிருந்து நன்றிகூறி விடைபெறுவது,
P. விக்னேஸ்வரன்



wikneswaran.p@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# பஞ்சானும் குஞ்சும் படிச்ச கவி கொஞ்சமில்லை

- எம்.ஐ.எம். சாக்கீர் -

## சம்பவம் - 1

நேற்று...

*'தட்டி உட்ட வட்டாவும்*
*தாமரப்பூ கிள்ள வெட்டும்*
*பொன்னான பாக்கு வெட்டியும்*
*போட்டுச் சப்ப ஆருமில்ல'*

'அந்தக் கிழவனுக்கு வேற வேல ஒண்டும் இல்ல விறாந்தையில இருந்து கொண்டு எந்நேரமும் முணுமுணுத்துத்து இருக்கிறதுதான் வேலை' என்று கடிந்து கொள்கிறாள் சீமா. வைரக்கற்கள் கொண்ட ஒரு பெரும் புதையல் கவனிப்பாரற்ற ஒரு தரிசுநிலத்தில் இருப்பதைப் போல, ஆங்காங்கே சில குடிசைகளில் இந்தக் கிழட்டுக் குரல்களின் கவி முணுமுணுப்புகள் இன்னும் சில எண்ணக்கூடிய வருடங்கள்தான் உயிர்ப்புடன் துடிக்குமோ என்று எண்ணத் தோன்றுவதில் எனக்கு ஆச்சர்யம் இல்லை.

## சம்பவம் - 2

இன்று...

ஐந்து வருடத்திற்கு முன்னர் மூத்தப்பா உயிரோடு இருக்கும்போது அலைபேசியில் பதிந்தெடுத்த சில கவிகளைக் கணினியில் பதிவு செய்து மீளக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அருகில் பார்த்துக் கொண்டிருக்கிற நண்பனின் முகம் மாறிப்போய் ஒரு ரசனையே இல்லாத, இளைஞர்களின் நாகரீகத் திற்கொவ்வாத ஒரு பிராணியைப் பார்ப்பது போல் கடுகடுத்துக் கொண்டு, மன்னிக்கவும் என்னைப் பார்த்துப் பரிதாபப்பட்டுக் கொண்டு எழுந்து சென்றான். அவன் ஹிப்ஹொப் காலத்து இளைஞன்.

இது முரண்நகையான விடயம்தான் என்றாலும், யார் யாரைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டும் என்கிற நிலை தொடர்பிலோ அது தொடர்பில் தர்க்கத்தில் ஈடுபட்டுப் புரியப்படுத்த வேண்டிய நிலையிலோ எனது சீவியத்தைக் கழித்து, நான் எஞ்சியிருக்கிற ஒரு சில வார்த்தைகளையும் காற்றில் கரைவதற்கு முன்னர் தேடி எழுத்திற் பதிக்காமல், எதிர்காலத்தின் கடனாளியாவதை விரும்பவில்லை.

அந்தக் கிழவனின் முணுமுணுப்பு அறுபது எழுபது வருடங்களுக்கு முன்னரான அவரின் பொழுதுபோக்கு நினைவுகளை மீட்டிக் கொண்டிருக்கின்றது. வானொலிகளற்ற, அலைபேசிகளற்ற, வாகன இரைச்சல்களற்ற, காற்றில் சலசலக்கும் கானகத்து மரங்களினதும், பட்சிகளினதும், வயல்வெளியின் தண்ணீர் சலசலப்புகளினதும் ஓசைகளுக்குப் பழக்கப்பட்டுப்போன வேட்டை வீரர்கள் இன்று சாய்வு நாற்காலிகளில் தஞ்சம் கொண்டிருக்கின்றனர்.

## கிழக்கிலங்கை முஸ்லிம் நாட்டார் கவிகள்:

கிழக்கிலங்கை என்பது திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைக் கொண்ட நிலப்பரப்பைக் குறிக்கின்றது. கடல் வளமும், கழனிகளும், காடுகளும் இந்நிலப்பரப்பிற்கு எழில் சேர்க்கின்ற அதே வேளை இங்குள்ள மக்களின் வாழ்வியலோடும் பின்னிப் பிணைந்துள்ளன. இப்பிரதேசம் இருபதாம் நூற்றாண்டின் மிகப்பிந்தைய காலம் வரை பெருமளவு பாரம்பரியங்களில் திழைத்துப் போயிருந்தது. ஈழத்து மக்கட் பண்பாட்டில் தனித்துவமான இயங்கியலைக் கொண்டுள்ள பல பாரம்பரியங்கள் இங்கு நிலவி வந்திருக்கின்றன. அவற்றுள் கிராமியக் கவிகள் எனப்படும் நாட்டார் பாடல்கள் பிரசித்தமானதொரு பங்கை வகிக்கின்றன. எழுதப் படிக்கத் தெரியாத கிராமத்து மக்களினது வாய்வழியாகவே பல நூற்றாண்டு காலம் கடத்தப்பட்டு வந்த செய்திகளின் சாரமாகவும், கிராமத்து மக்களின் அக உணர்ச்சிகளின் வெளிப்பாட்டு சாதனமாகவும் இவை நிலவி வந்திருக்கின்றன.

கிழக்கின் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் அவர்களின் வாழ்வியலை ஆராய்கின்றபோது நாட்டார் பாடல்களைத் தவிர்த்து விட்டு அவற்றைக் கண்டுகொள்வது இலகுவானதொன்றல்ல. இதில் கிழக்குப் பிராந்திய முஸ்லிம் மக்களிடையே வழக்கிலிருக்கும் நாட்டார் பாடல்கள் குறிப்பிடத்தக்க அளவு செழுமையானவையாகக் காணப்படுகின்றன. அவற்றின் எதுகை, மோனை, ஓசைநயம், எளிய சொற்களையும், கடின சொற்களையும் இலாவகமாகக் கையாளுதல், குறியீட்டு முறையில் செய்திகளைச் சொல்லுதல் போன்ற சிறப்பியல்புகள் காணப்படுகின்றன. இவை தமிழிற்கும் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களிற்கும் இடையே வேரொடி விழைந்த உறவுகளைத் துலாம்பரமாகக் காட்டுகின்றன.

இவற்றின் சிறப்பியல்புகளாகப் பத்து விடயங்களை முத்துமீ ரான் பட்டியல் படுத்தியுள்ளார்.

- வாய்மொழியாகப் பரவுதல்
- தோன்றிய காலத்தை அறுதி செய்வது கடினம்
- தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுதல்
- ஒரே சமயத்தில் மாறிய வடிவிலும், நிலைத்த வடிவிலும் வழங்கப்படல்
- அடி வரையறை இல்லை
- எளிமையானவை
- மண்வளச் சொற்களைக் கொண்டிருத்தல்
- உள்ளதை உள்ளவாறு கூறுதல்
- மறித்து வருதல்
- எதுகை, மோனை, அடுக்குத் தொடர் போன்ற இலக்கண அமைப்புகளையும் பெற்றிருத்தல் என்பனவாகும்.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கவிகளைப் பகுப்பதில் பல ஆய்வாளர்களும் பல முறைகளைக் கையாண்டுள்ளனர். இக் கவிகளைக் காலவாரியாகப் பகுக்கின்ற போது,

700 - 1500 : பூவல்கிணற்றுக் காலம்
1501 - 1796 : கொட்டுக்கிணற்றுக் காலம்
1796 - 1948 : கற்கிணற்றுக் காலம்
என்று மருதூர் ஏ. மஜீட் பகுத்துள்ளார்.

இவற்றைப் பொருள்சார்ந்து பகுக்கும் போது தாலாட்டு, பாலர் பாடல்கள், விடுகதைகள், நகைச்சுவைப் பாடல்கள், நையாண்டிப் பாடல்கள், தொழிற்பாடல்கள், ஆசைக்கவிகள், தூதுவிடு பாடல்கள், பிரார்த்தனைப் பாடல்கள், சத்தியப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், பொல்லடிப் பாடல்கள், வழி நடைச்சிந்து, மாப்பிள்ளை வாழ்த்து, மழை வெள்ளம் புயல் போன்றன உணர்த்தும் பாடல்கள் என பலவகையாகப் பகுக் கலாம்.

இவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

**தாலாட்டு:**

*ஆராரோ... ஆரிவரோ...*
*நித்திரைக்கோ நீயழுதாய்*
*என் நேசமுள்ள பாலகனே*
*கத்திறதக் கேட்டு மனம்*
*கலங்குறதே நித்திரை செய்.*

*ஆராரோ... ஆரிவரோ...*

*முத்துக் கலிமாவை*
*மௌனமுடன் மனனஞ்செய்து*
*நெத்தியின் மத்தியிலே*
*நிலை நிறுத்தி நித்திரை செய்.*

*ஆராரோ... ஆரிவரோ...*

*நித்திரையும் மவுத்தாகும்*
*நினைவெல்லாம் ஹயாத்தாகும்*
*பத்திரமாய் என்மகனே*
*பக்தியுடன் நித்திரை செய்.*

என்று இந்தப் பாடல் நெடித்துச் செல்கின்றது. இப்பாடல்கள் குழந்தைகளிற்குச் சிறுபராயத்திலிருந்தே மார்க்கம் தொடர் பான பரிட்சயத்தை ஏற்படுத்துகின்றன. இன்று வானொலி ஓசைகளினாலும் தொலைக்காட்சி நாடகங்களினாலும் மறக்க டிக்கப்பட்ட தாய் சேய் உறவின் நெருக்கத்தை உண்டாக்கும் இக்கவிகளின் பண்பாடு இன்று எங்காவது ஓரிரு இல்லங்க ளிலேயே ஒலிக்கின்றது.

*ஓரோரோ... ஓரகண்டே - நீ*
*ஓராட்டக் கேளாயோ...*
*என் கண்ணே நீயுறங்கு!*
*என் கண்மணியே... நீயுறங்கு!*

*பாலுக்கோ நீயழுதாய்? - என்ர வாப்பா*
*பசிக்கிதென்றோ நீயழுதாய்?*
*தேடாத திரவியமே - என்ர வாப்பா*
*தேன் தேடாப் பாலகனே!*
என்று தொடர்கிறது.

இப்பாடல்களின் ஓசைநயம், பிள்ளைகளை உறங்கச் செய்வ தோடு சொற்பெருக்கையும் (Vocabulory) மொழி வளத்தை யும் தாய்மடியிருந்தே பெற்றுக் கொள்ளத் துணை நிற்கின் றன. பிள்ளையின் முகம்பார்த்து தாய் உரையாடுவது பிள் ளையின் மனவளர்ச்சிக்குப் பெரிதும் துணைநிற்பதை உளவி யலாளர்கள் ஆராய்ச்சிகளில் கண்டுணர்ந்துள்ளார்கள். ஆய்வாளர் கரோலைன் தனது குழந்தை உளவியல் ஆய்வு நூலில் தாலாட்டைப்பற்றி பெரிதும் சிலாகிக்கின்றார். தாலாட்டு தாய் - சேய் இடைத் தொடர்பிற்குத் துணை புரி கின்றது என்பதை வலியுறுத்துகின்றனர். இன்னொரு பாட லிலே,

*ஓரோரோ... ஓரகண்டே - நீ*
*ஓராட்டக் கேளாயோ*
*சிற்றெறும்பு, வண்டு, கொசு*
*தேள், மூட்டை, வெண்கறையான்*
*குத்தினதோ இத்தனையும் - என்*
*குலக்கொழுந்தே நித்திரை செய்*

என்று வெகு இலாவகமாகக் குழந்தைகளிற்கு உயிரினங்க ளின் பெயர்களைப் பதியச் செய்கின்றது இந்தப் பாடல். ஒவ் வொரு தாயும் தன் பிள்ளைக்குப் பல்வேறு விதமான பாடல்க ளைப் பாடி உறங்கச் செய்திருந்தாலும் அம்மரபு இன்று வழக்கொழிந்து வருகின்றது. இது சென்ற தலைமுறை யோடு நிறுத்தப்பட்டுவிட்டதை அவதானிக்க முடிகின்றது. எத் தனையோ சொற்செறிவு மிக்க பல பாடல்கள் இன்னும் பதி யப்படாமல் மடிந்தும் விட்டன.

**நொடிக் கவிகளும், பாலர் பாடல்களும்:**

விளையாட்டுப் பாடல்களைப் பொறுத்தவரை அக்காலச் சிறு வர்கள் தாங்களாகவே அமைத்த பாடல்களும், பெரியவர்கள் ஊட்டிய பாடல்களும், விடுகதை நொடிகளும் மாத்து நொடி களும் கொண்ட பாடல்களும் உள்ளன. உதாரணமாகச் சில நொடிக் (விடுகதை) கவிகளைப் பார்க்கலாம்.

*காய்க்கும், பூக்கும், கலகலக்கும்*
*காகமிருக்கக் கொப்பில்லை. அது என்ன?*
*(திராய்)*

*பொட்டுப் போல் இலையிருக்கும்,*
*பொரிபோல் பூப்பூக்கும்*
*தின்னக் காய் காய்க்கும்,*
*தின்னாத கனி கனியும். அது என்ன?*
*(முருங்கை)*

*எட்டுக்கால் ஊன்றி, இரு கால் படமெடுத்து*
*வட்டக்குடை பிடித்து, வாராராம் வன்னியனார் அது என்ன?*
*(நண்டு)*

*முட்டையிடும் சட்டை கழட்டும், மூனு மாசம் அடைபடுக்கும்*
*நாக்கு நீட்டும் படமெடுக்கும்,*
*நாயன் ஆணப் பாம்புமில்லை அது என்ன?*
*(பனங்கிழங்கு)*

*தொப்பென விழுந்தான், தொப்பி கழன்றான்?*
*(பனம்பழம்)*

*கோடைக்குக் குளத்தருகே, மாரிக்கு மழையருகே*
*சென்னாச் செருப்படி, செல்லாட்டியும் செருப்படி அது என்ன?*
*(செருப்படி பற்றை)*

இவை போன்று சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டுகின்ற பல விடுகதைகளும் புதிர்களும் ஓரளவு வழக்கிலுள்ளன. என்றாலும் கிராமியத்தின் சூழலமைவில் ஏற்படுகின்ற பெரும் மாற்றங்களால் தொலைத்த வண்ணத்துப் பூச்சிகளினதும், மின்மினிகளினதும், குறிஞ்சாப் பூக்களினதும் சலனங்களற்ற இன்றைய வளிமண்டலங்களில், வாகனங்களின் பேரிரைச்சலுக்குள்ளும், ஆங்கிலவழிக் கல்விமுறைகளாலும் இவையும் மறைந்து போய்விடும் அபாயம் உணரப்படுகின்றது. விளையாட்டுப் பாடல்களைப் பொறுத்தவரை இவை சிறுவர்களின் பெரும்பாலான விளையாட்டுக்களில் இடம்பெற்றுள்ளன. இவை உடலை அசைத்து சந்தத்திற்கேற்ற இசைப்பனவாகவோ அல்லது சந்தர்ப்பத்திற்குப் பாடுவனவாகவோ அமையும்.

*கிள்ளிக் கிள்ளிப் பிராண்டியரே*
*கிள்ளி அப்பம் திண்டவரே*
*பாதிப்பிலாக்காய் திண்டவரே*
*பாவட்டங் கைய முடக்கு.*

*சுடு சுடு மாம்பழம்.., ஆலா பற பற...*
*கொக்குப் பற பற..,*
*ஒரிப்படம் திரிப்படம் ஓதிய மங்களம்..,*
*உம்மா கடைக்கு போனா...*

போன்ற விளையாட்டுக்களில் சிறுவர்களின் பெருஞ்சாதனம் அவர்களின் குறும்புத்தனமான கைகள். விளையாட்டுப் பொருட்கள் ஏதுமற்ற பொழுதுகளிலும், தங்கள் கைகளை விரித்து மடித்து விளையாடும் இவ்விளையாட்டு ஒரு பாடல் விளையாட்டாகும். விளையாட்டின் இறுதியில் தோற்பவருக்கு கையால் அடி கொடுப்பதற்காகத் தப்பிக்கும் முன்சோதனைப் பாடலும் ஒன்றுள்ளது. தோற்றவரின் இரு கைகளுக்கு நடுவில் பாடிக் கொண்டே குத்தும் போது அதைப் பிடித்தால் தப்பித்து விடுவார் இல்லையென்றால் தொடர்ந்து பாடலுடன் அடிவிழும். இனி அடியிலிருந்து மறுக்கி தப்பிக்க வேண்டும். இது சிறுவர்களிடம் இருந்த சுவாரஸ்யமானதொரு பொழுதுபோக்காகும் சிலவேளை பெரியவர்களும் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவார்கள்.

*பாட்டங்குத்து பறையன் குத்து*
*புள்ளக் குத்து - இது*
*புளியங்கொத்து*
*புடிக்கக் குத்து.*

*பிடியை தவறவிட்டால்,*

*என்ட பிள்ளைக்கு வைச்ச சோறையும்*
*சுண்டங்காய் கறியையும்*
*எதால வந்து திண்டாய் பூனை*
*ஓட்டாலயா மோட்டாலயா? ஓட்டால.*

இன்று அன்ரொய்ட் மெய்நிகர் உலகத்தில் சிறுவர்கள் காணாமல் போய்விடுகிறார்கள், அவர்களின் பார்வைகளும், மழலைப் பேச்சுக்களும் மௌனித்துப் போகின்றன. நிலவுக்குச் சாந்தமாமா என்றழைக்கும் வழக்கம் உள்ளது. இது தொடர்பில் சாந்தமாமாப் பாடலும், பொருளை அவர் கையாலே மறைத்து வைத்து எடுக்கும் (Navigation Games) புளியடிப் பாடலும், ஆக்காட்டிப் பாடலும் சிறுவர் கவிகளில் பிரபலமானவை.

**வளர்ந்தோர் கவிகள்:**

வளர்ந்தவர்களினால் பாடப்படும் கவிகளில் காதல், வெறுப்பு, ஏக்கம், தனிமை, நகைச்சுவையுணர்வு, தொழிலார்வம், சமய உணர்வு, தத்துவங்கள் என பல்வேறு உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான வளர்ந்தோர் கவிகளை இனிப் பார்ப்போம்.

வளர்ந்தோரின் கவிகளில் நையாண்டிக் கவிகள் சுவாரஸ்யமானவை. இவை பண்டிகைக் காலங்களில் மேடையமைத்து வாதுக் கவிகளாக மாறிமாறி பாடப்பட்டுள்ளன. இவ் அரங்கியற் பாரம்பரியம் இன்று வழங்கொழிந்து விட்டது சம்மாந்துறைப் பிரதேசத்தில் கிடைத்த இதுவரை பதிப்பிக்கப்படாத வாதுக் கவியொன்று,

*'பள்ளித் தெருவட்டப் புள்ளைகாள் - நாங்க*
*பாத்தாலும் ரெண்டொரு புள்ளையாள்*
*ஊருப்புரளிகள் வந்தாக்கால் - நாங்க*
*உட்டுப் பிரியவும் மாட்டங்காள்*

*... குறிச்சொரு வட்டையாம் - அதில்*
*முத்த சனங்கள் அதிகமாம்*
*ஓதப் படிப்புகள் இல்லையாம்*
*ஒண்டும் தெரியாத மூடங்காள்'*

என்று ஒரு குறிச்சிக்காரர் படிக்க,

அடுத்தவர் -

*கிக்கிலிப் பேயர்ர கிட்டங்கி - அது*
*கீழும் மேலும் புகாருமாம்*
*வெளவால் உறையும் வீட்டில் - அங்க*
*வாடி போட்டு தங்கினாக*

*அப்புடி இப்புடி செரிக்கட்டி - ஒரு*
*அருமை கெட்ட கப்பல் செய்தாக*
*வெட்டக்கெறக்க வெக்கத்தில - அத*
*ஊட்டுக்க வச்சு அழகு பாத்தாக*

என்று ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு நக்கலாக அடுத்த குறிச்சிக்காரர்கள் படிப்பார்கள்.

அடுத்தவர்களை நகைச்சுவைக்காகக் கேலிசெய்யும் பாடல்கள்.

*நாகப் பழத்திலையும்*
*நற்காசம் பூவிலையும்*
*காகச் சிறகிலையும் - மச்சி நீ*
*கடுங்கறுப்பாய் ஆனதென்ன*
*கானாங் கறுப்பியரே*
*கருநிற ஒளிதரு பொன்னிற வண்டே*

*கற்ப வழக்கொடி முத்தெழில் முகத்தாய் - உன்ன*
*கண்டு வெகு காலமாச்சே*
*கூழா மரத்தில்*
*குரங்கிருந்து கத்துறாப் போல்*
*கந்தில இருந்த கருங்குரங்கோ - இப்ப*
*வாய்திறந்த*

*கத்தாத காகம்*
*கதறாத காகம்*
*எத்தாத காகம்*
*எறிஞ்சிருவன் பொல்லால*
*வீடிக் கொற பொறுக்கி*
*விழிஞ்செழும்பி ஊரு சுத்தி*
*ஆலங்காய் வாயழகா*
*ஆரொட்ட வாய் கொடுத்தாய்*

*கடக்கிக் கடகுந்தி*
*கடதாசி தான் பொறுக்கி*
*பொருத்தி உடுத்தாலும் - உண்ட*
*புறத்தனங்கள் போறதில்ல*

போன்ற பாடல்கள் வயற்கள நண்பர்களிடையே பரண்களில் பாடப்படும் வாதுக்கவிகளில் பாடப்பட்டுள்ளன. இங்கு ஒரு பரணிலிருப்பவர் ஆணாகவும், இன்னமொரு பரணிலிருக்கும் ஆண் பெண்ணாகவும் பாடல்களை மாறி மாறிப் படிப்பார்கள். இது அவர்களின் தூக்க அசதியைக் குறைக்கவும், தனிமையைக் கழிக்கவும் துணையாக இருந்திருக்கின்றது.

*சாதிகலம் நல்வயிரம்*
*தாழ்வுகடல் ஆணிமுத்து*
*ஆணிமுத்து வாயாரே - ஒன்ன*
*ஆரணைக்கப் போறாரோ*
*பூசின செம்பே - எந்தன்*
*புழுதிபடா வெங்கிலமே*
*ஆசைக்கிளியே மச்சி - ஒன்ன*
*ஆரணைக்கப் போறாரோ*
*குஞ்சி முகத்தழகி*
*கூர்விழுந்த மூக்கழகி*
*சாம்பல் குருத்தழகி - இப்ப*
*சாகுரண்டி உன்னால*

*உசரப் பரண்கட்டி*
*உசிர விளக்கேத்தி*
*தனியாப் படுக்க மச்சான்*
*தலவிதியோ ஒங்களுக்கு*

*சுட்ட கட்ட போல*
*சுடுகாட்டுப் பேய்போல*
*மாட்டட்டை போல - நீ*
*மறவணைக்கும் செப்பமில்லை*

இவை பெண்ணிடம் திருமண விருப்பம் கேட்டு கவி புனைவதும் அதற்கு மாற்றுக்கவியாக அடுத்தவர் பாடுவதாக இருக்கும். இவற்றில் எள்ளல் மிகைத்திருக்கும்.

இவை போல போடியார்மாரின் அதிகாரக் கொடுமைக்கு எதிராகவும் தங்கள் மனக் கஸ்டங்களைப் பலர் கவிகளாகப் பாடியுள்ளனர்.

*போடியாரு பெருவகிறன்*
*பொண்டாட்டி ஓட்டப்பல்லி*
*இளையதம்பி தலையன் - என்ன*
*ஏசி வரக்காட்டினானடி*

சீதனம் கேட்கும் மாப்பிள்ளைக்கு பதில் கொடுக்கும் கவி,

*பத்தேக்கர் காணியும்*
*பால்மாடும் வேணுமெங்காய்*
*இத்தனையும் தாறதுக்கு - ஒங்கட*
*உத்தியோகம் என்ன கிளி*

தனக்குப் பொருந்தாத கணவனைக் குறித்து புலம்புதல்.

*புத்தியறிஞ்சி*
*பூலோகத்தில காத்திருந்து*
*வாண்டேங்கா ராத்தா - ஒரு*
*வகுத்துநசல் காரனுக்கு*
*நாணப்பூப் போல*
*நரைச்ச கிழவனுக்கு*
*குங்குமப்பூப்போல - இந்தக்*
*குமராகா வாச்சிருக்கு*

இவை போலப் பல தொழிற்பாடல்கள் வழக்கில் இருந்திருக்கின்றன. இவற்றில் அம்பாப் பாடல்கள் எனப்படும் மீனவர் பாடல்களும் உள்ளடங்கும். இங்கு வயற்களத்தில் விவசாயிகள் பாடிய கவிகளில் பல வயற்களச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும். தங்கள் தொழிற்சுமைகளையும் கவிகளில் வெளிப்படுத்தியிருப்பார்கள்.

*காவற்பரணிலே*
*கண்ணுறங்கும் வேளையிலே*
*கண்ணான மச்சி வந்து*
*காலூண்டக் கனவு கண்டேன்*

*காவற் பரண்கட்டி*
*கடும்வேல நான் பாக்க*
*ஊருதிண்ணிப் பண்டி வந்து*
*வேலியால புகுந்ததுகா*
*மூலையில வெள்ளாம நல்லா*
*முறுக விளைஞ்சிரிக்கி*
*அள்ளித் துவையா கண்டார் - உனக்கு*
*அள்ளித்தர நான் வாரன்*

அதே போல் ஏக்கப் பாடல்களும் பல பெண்களால் பாடப் பட்டுள்ளன. தனது பெண்பிள்ளைகளிற்குத் திருமணம் கைகூ டாத வேளைகளில் சில தாய்மார் இவ்வாறான பாடல்களைப் பாடியிருக்கின்றனர்.

*பாக்குமரம் பாளை போட்டு*
*பதினாறு காய்காச்சி*
*எல்லாம் விலை பொய்த்து*
*என்ட....*
*இன்னம் போகலையே!*

இடைவெளியில் மகளின் பெயர் இடம்பெறும்.

*பட்ட மரத்தில்*
*பழமிருந்து என்ன செய்ய*
*இலையிருந்து காத்தடிச்சா - கிளி*
*எங்க இருந்தும் வந்து சேரும்*

எவ்வளவு அழகான பெண்ணாயிருந்தாலும் பணம் இல்லை யென்றால் திருமணம் கைகூடுவது கடினம் என்பதை இந்தப் பாடல் வெளிப்படுத்துகின்றது.

*அல்லையில பன் புடுங்கி*
*ஆவரணப் பாயிழைச்சி*
*போட்டுப் படுக்க ஒரு*
*புள்ளமொகம் தந்திருவாய்!*

*குத்து விளக்கெரிய*
*குமரன் குர்ஆன் ஓத*
*பாலன் விளையாட - எனக்கொரு*
*பாக்கியம்தா ஆண்டவனே*

போன்ற பாடல்கள் பல பிள்ளைப்பேறற்ற பெண்களால் பாடப்பட்டுள்ளன.

*ஆழிக் கடலில்*
*அலையெழும்பி வீசினாப்போல்*
*வாடுறங்கா உம்மா - உண்ட*
*வண்ணமுகம் காணாம*

பிரிவுத்துயரில் பாடப்பட்ட பாடல்.

இவை போலவே ஆசைக்கவிகள் பல பாடப்பட்டுள்ளன.

*ஆத்துக்கு அங்கால*
*ஆசைக்குரல் கேக்குதும்மா*
*தங்குதில்ல என் மனசு - நான்*
*தண்ணிக்கு போய் வரட்டா*
*தண்ணீர் எடுத்துவர*

உத்தரவு கேட்கும் மகளிற்குத் தாயார் புத்திமதி கூறுவது அடுத்த பாடலில் இடம்பெறுகின்றது.

*தண்ணிக்கு போய் மகளே*
*தெரியாமல் வா மகளே*
*கண்ணுக்கு இசஞ்சவர நீ*
*கண்ணெடுத்தும் பாத்திராத*
*போறாய்கா புள்ள ஒனக்கு*
*புத்தி சொல்லத் தேவையில்ல*
*ஊரான்ட மணிக்கோர்வை*
*உடஞ்சி போன வதந்தி வரும்*

என்று இன்னொரு தாய் பிள்ளையின் கற்பைப் பாதுகாக்கு மாறு அறிவுரை பகர்கிறாள். இங்க அடுத்தவருக்குச் சொந்த மான பொருளாகக் (ஊரான் மணிக்கோர்வை) கற்பு உவமிக் கப்படுகின்றது.

கணவரைப் பிரிந்து இருக்கும் துணைவியர்கள் பாடுகின்ற பாடலாகச் சில பாடல்கள் கூறப்படுகின்றன. இவ்வகையான பாடல்கள் பல ஆண்களாலேயே பாடப்பட்டுள்ளன.

*கூரையில இருந்து*
*கூவுகிற சேவலாரே*
*தனிய இரிக்கனென்டு - என்ட*
*தலைவருக்கு செல்லிருங்கோ*

*காகம் குருவி*
*கழுகுழுப்பை நங்கிணங்காள்*
*மாடப்புறாவே என்ட*
*மச்சான வரச் சொல்லிருங்க*
*சத்தியப்பாடல்கள் சில*
*அல்லாஹ் அறிய*
*ஆகிறத்துப் பாம்பறிய*
*பள்ளியறிய மச்சி - ஒன்ன*
*பண்ணுறது சத்தியங்கா*

*குமரழிஞ்சி போச்சுதென்டு*
*குடும்பமெல்லாம் வேகிறது*
*சத்தியமாய்ச் சொல்லுறன்டா - ஒனக்கு*
*சதி மகுத்து நிச்சயம்தான்*
*ஆரும் எழுதினத*
*அழிச்செழுதிப் போட்டிரலாம்*
*அந்த ஆதி எழுதினத - அவன்*
*அழிச்செழுதப் போறதில்ல*

இவ்வாறு எண்ணிலடங்கா நாட்டார் பாடல்கள் கிழக்கி லங்கை முஸ்லிம்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்துள்ளன. அக்கரைப்பற்று, நிந்தவூர் சம்மாந்துறை, இறக்காமம், கல் முனை, சாய்ந்தமருது, மருதமுனை, காத்தான்குடி, ஏறாவூர், கிண்ணியா போன்ற இடங்கள் நாட்டார் பாடல்கள் பெரிதும் வழக்கிலிருந்த கிராமங்களாகும். பெண்களும் ஏராளமான

பாடல்களைப் பாடியுள்ளனர். இன்றைய நவீன சாதனங்களின் வளர்ச்சி, நாகரீக மோகம், ஆங்கிலச் சொல்லாடல்கள் போன்றவற்றின் ஆதிக்கத்தாலும், புதிய தொழில்முறைகளின் விருத்தியினாலும் நடைமுறை உலகில் கைவிடப்பட்ட நாட்டார் கவிகள் தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியது நாம் முன்னோக்கியுள்ள காலத்தின் பலவந்தமாகும். பழமை, மரபுகள் போன்றவற்றின் கனதி உரியமுறையில் உணர்த்தப்படாத இளைஞர் சமுதாயம் எதிர்காலத்தில் இப்பொறுப்பைச் சிரமேற்கொண்டு செய்வார்கள் என்பதனை உறுதியாகக் கூறிவிட முடியாது. பெற்றோர்கள், துறைசார் அறிஞர்கள் துணை கொண்டு பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பன எஞ்சியிருக்கின்ற கவிகளைச் சரியான முறையிற் தொகுத்து வருங்கால சந்ததிகளின் பயன்பாட்டிற் காய்ப் பேண வேண்டியது அவசியமாகின்றது.

***'உச்சாரக் கொப்பில்
உசந்ததொரு கூடுகட்டி
பஞ்சானும் குஞ்சும்
படிச்சகவி கொஞ்சமில்லை'***

**துணை நின்றவை...**


- இ. பாலசுந்தரம், ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) (1979)
- றமீஸ் அப்பல்லாஹ், கிழக்கிலங்கைக் கிராமியம் (2201)
- எஸ். முத்துமீரான். கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் (1997)
- எஸ்.எச்.எம். ஜெமீல். கிராமத்து இதயம் (1995)
- மருதூர் ஏ. மஜீத். தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல் (2007)
- Carolyne. RC, Lewis, Advances in infancy research, lullabies


**பாடல்கள் பாடிக் காட்டியவர்கள்:**

- சீனி முஹம்மது ஆமித லெப்பை (வயது 80)
- காஸீம்பாவா இஸ்மாலெப்பை (வயது 70)
- ஆதம் லெப்பை ஆமினா உம்மா (வயது 65)
- ஆதம்பாவா இப்றாஹீம் (வயது 59)
- இ.லெ. றுக்கியா உம்மா (வயது 55)
- அப்தல் மஜீட் (வயது 54)
- மரியம் பீவி கலந்தர் உம்மா



saakir.mim@thaiveedu.com







திடுக்கிட்டு எழுந்தேன். தலையை தடவிக் கொண்டிருந்த கனகவல்லிப் பாட்டி ஆதரவோடு என் தோள்களைப் பிடித்து அமரச் செய்தாள். பூக்கட்டிப் பாத்துட்டாங்களா பாட்டி என்று பயத்தோடு கேட்டேன்.

ம்... நீ எழும்பிறதிற்கு கொஞ்சம் முதல்தான் பறையொலி பெரிசாக கேட்டது. பூக்கட்டி பார்த்துட்டாங்கண்ணு நினைக்கிறன்.

எனக்கு நெஞ்சு நின்று விடும் போலிருந்தது.

யார் மேல பாட்டி பூ விழுந்திருக்கும்?

தெரியல, பூசையால ஆட்கள் வந்தால்தான் கேட்கலாம் என்றாள் பாட்டி.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. முற்றத்தில் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தேன். வீட்டின் பின்புறம் இருந்து யாரோ விசும்பி அழுதபடி தனியாக பேசிக் கொண்டிருப்பது கேட்டது. எட்டிப் பார்த்தேன். பூமகளின் பாட்டி மண் தரையில் முழங்தாளிட்டு உட்கார்ந்து திருக்கோணேச்சரம் இருக்கும் திசையை பார்த்து கைகூப்பி வணங்குவதும், அழுவதுமாக இருந்தாள். சில வேளைகளில் கை நிறைய மண்ணை அள்ளி தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள். ‘பூசைக்குப் போன நாலு பேரும் இவளுக்கு பேத்தி முறைதான்’ என்று எனது காதுக்குள் சொன்னாள் கனகவல்லிப்பாட்டி. திடீரென வீட்டிற்குள் இருந்து பூமகளின் தாயின் அலறல் சத்தம் கேட்டது. நாங்கள் இருவரும் திகைத்து நின்றோம். எங்கள் இருவரையும் தள்ளிவிட்டு பூமகளின் பாட்டி வீட்டிற்குள் பாய்ந்து சென்றார்.

வீட்டின் நடுப்பகுதியில் இருந்த மரத்தூணில் சாய்ந்தபடி வைராவியர் இருந்தார். வழக்கத்துக்கு மாறாக அவரது கண்கள் கலங்கியிருந்தது. அவர் நெஞ்சில் வாடிய மலராக சுருண்டபடி பூமகள் படுத்திருந்தாள். பூமகளை இறுக்கியணைத்தபடி அவளுடலில் தலை புதைத்து பூமகளின் தாய் அழுதுகொண்டிருந்தாள். வாசலில் நின்ற என்னை கண்டதும் வீரிட்டு அழுதபடி ஓடி வந்த பூமகள் என்னை இறுக்கக் கட்டிக்கொண்டாள். சிறிது நேரத்திற்க்குப் பிறகு ‘நிலமகளுக்கு என்னைத்தான் பிடித்திருக்காம்’ என்ற வார்த்தைகள் மட்டும் அவள் வாயிலிருந்து வெளிவந்தது.

என்னைக் கனகவல்லிப் பாட்டியும், பூமகளை அவளது பாட்டியும் எப்படிப் பிரித்தார்கள் என்பது இன்றும் என் நினைவில் இல்லை. பூமகளின் வீட்டிற்குள் இருந்த அவரது சொந்தங்கள் எல்லாம் மெல்ல மெல்ல வீட்டை விட்டு வெளியேறிச் சென்றார்கள். அழுது அடம்பிடித்து வரமறுத்த நான் ‘பூமகளுக்கு இன்னும் அரை நாள் பொழுதுதான் அவள் குடும்பத்தோடு சேர்ந்திருக்க இருக்கிறது’ என்ற கனகவல்லிப் பாட்டியின் மந்திர வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவளுடன் இழுபட்டுச் சென்றேன்.

அடுத்த நாள் வைரவர் மடையில் என்னென்ன நடக்கும் என்பதை கனகவல்லிப் பாட்டி விரிவாகச் சொல்லிக் கொண்டு வந்தாள். அவள் ஆயுளுக்குள் எங்கள் ஊரில் நடக்கும் மூன்றாவது நரபலி இதுவென்றாள். நேரடியாக பார்க்காவிட்டாலும் பின்வந்த நாட்களில் வைரவர் மடையில் கலந்து கொண்டவர்களிடம் இருந்து தான் கேட்டறிந்த நிகழ்வுகளை துல்லியமாக ஒழுங்குபடுத்தி சொல்லிக் கொண்டு வந்தாள் அவள்.

பாட்டி ஏதேதோ சொல்லிக் கொண்டு வந்த போதும் என் மனம் எல்லாம் பூமகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே நிறைந்திருந்தது. கதை சொல்லிக் கொண்டு நடந்து கொண்டிருந்த பாட்டியை இடைமறித்து ‘ஏன் பாட்டி சாமி நரபலி கேக்குது’ என்றேன். ‘ஊரைக் காக்க ஒருத்தர பலி கொடுக்கிறது வழக்கம்தானே’ என்ற பாட்டி, வைரவர் சாமி கூட ஒரு காலத்துல இந்த ஊரைக் காத்து சாமியாய்ப் போனவர்தான் என்றாள்.

ஏன் பாட்டி பூமகள் அப்பாவால இத தடுக்க முடியாதா? பதில் எனது மனதுக்குத் தெரிந்திருந்தும் வாய்விட்டுக் கேட்டேன்.



ஊர் நலனுக்காக தங்களை அர்ப்பணிச்சவங்கம்மா வைராவி பரம்பரை. அரச பணியில் அரசருக்கு மெய்ப்பாதுகாவலர்க ளாக இருக்கும் வைராவிகள் அரசருக்கு ஒரு ஆபத்து என் றால் தங்கள் உயிரைக் கொடுக்கவும் அஞ்ச மாட்டாங்க. அதுமாதிரி ஊர்க்கோயிலில பணியாற்றும் வைராவிகள் ஊர் நலனுக்காக தங்கள் உயிரை கொடுக்க எந்நேரமும் சித்த மாக இருப்பாங்க.

பாட்டி சொல்லிக் கொண்டு வந்தவை எல்லாம் காதுக்குள் கேட்டதேயன்றி எனது மனதுக்குள் எதுவும் செல்லவில்லை. ‘பலி கொடுத்தால் ஊரில நோய் இல்லாமல் போய்விடுமா பாட்டி’ என்றேன். கனகவல்லி பாட்டி என்னையே சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். ‘ஒன்றையும் யோசிக்கா மல் படு வைரவர் துணையால எல்லாம் சரியாயிடும்’ என் றாள் பாட்டி. என்னை நான் வசிக்கும் நாயன்மார் திடல் வீட் டில் சேர்த்து விட்ட திருப்தியோடு தான் இருக்கும் நடுப்பிரப் பன் திடலை நோக்கி நடக்க தொடங்கினாள் கனகவல்லிப் பாட்டி.

அப்பா அன்று முழுவதும் வீட்டிற்கு வரவே இல்லை. வைர வர் மடையின் வேலைகளில் இரவு பகலாக ஈடுபட்டிருந்தார். அம்மாவும், தம்பியும் இரவின் ஆரம்பப் பகுதியிலேயே உறங்கிப் போயிருந்தார்கள். எனக்கு உறக்கம் வரவில்லை. திரும்பத் திரும்ப கனகவல்லி பாட்டி சொல்லி வந்த விட யங்களை மனதுக்குள் மீட்டுப் பார்த்துக் கொண்டேன்.

நாளை இருள் பிரியாத அதிகாலை வேளையில் தலை முழுகி, அலங்கரித்து, வெள்ளை உடையில் பூமகளை அழைத்துச் செல்வார்கள். வைரவர் சாமியின் முன்னால் பெரிய மடை ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். உரிய இடத் தில் கரும் பாவாடை தரையில் விரிக்கப்பட்டு அதன் மேல் பூமகள் அமர்ந்திருப்பாள். பூசை தொடங்கும். வாத்தியங்கள் முழங்கும். உரிய நேரத்தில் பூசாரி பூமகளின் காதிற்குள் மந் திரத்தை ஓதுவார். மந்திரத்தின் முடிவில் பூமகள் மயக்க முற்று விழுவாள். ஏற்கனவே தயார்படுத்தப்பட்ட பாடையில் பூமகளை கிடத்தி கோயிலடிக்கு தெற்காக உள்ள வெம்பு மயானத்திற்கு எடுத்துச் செல்வார்கள். அங்கு ஏற்கனவே வெட்டியிருக்கும் குழியினுள் புதைத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் தங்களுடைய வீடுகளுக்கு சென்று விடுவார்கள். பின்னர் தலைமுழுகி, புதிய ஆடைகள் அணிந்து வைரவர் ஆலயத்திற்கு மீளவும் வந்து பூசையினைத் தொடர்வார்கள்.

கனகவல்லிப் பாட்டி கூட்டி வரும்போது கூறிய ஒவ்வொரு விடயங்களையும் நான் திரும்பத் திரும்ப அசை போட்டுக் கொண்டேன். என்னுடைய முடிவில் நான் தெளிவாகவே இருந்தேன். எப்படியாவது பூமகளை காப்பாற்றிவிட வேண் டும். ஊர் மக்கள், கொடிய நோய், தாய், தந்தை, ஆசைத் தம்பி, ஏன் வைரவர் சுவாமி கூட என் மனக்கண்முன் நிழ லாடவில்லை, அனைத்தையும் பூமகள் ஆக்கிரமித்து இருந் தாள். புதையுண்ட பூமகளைக் காப்பாற்றியதும் திருகோ ணேச்சரத்திற்கு நெல் எடுத்துச் செல்லும் மாட்டு வண்டில்க

ளில் ஏறி கோயிலில் தஞ்சம் புகுவது என்று திட்டமிட்டுக் கொண்டேன்.

எங்களுக்கு நினைவு தெரிந்த பல ஆண்டுகளாக வெம்பு மயானம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. ஒரு முறை நானும், பூமகளும் அங்கு சென்று விளையாடிப் பின்பு அருகிலுள்ள வயல்களில் வேலை செய்தவர்கள் எங்கள் வீட்டில் அதைச் சொல்லி பெற்றோரிடம் அடி வாங்கித் தந்திருந்தார்கள். அதனால் எனக்கு மயானத்துக்குப் போவது பெரிதாக பயம் தருவதாக இருக்கவில்லை. நித்திரை கண்ணைச் சுழட்டிய ஒவ்வொரு கணமும் பூமகளின் முகம் நினைவுக்கு வந்து விழிப்படையச் செய்தது.

எப்போது உறங்கினேனோ தெரியாது. பறையொலி கேட்டதும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். அவசர அவசரமாக ஆடைகளைச் சரி செய்து கொண்டு அம்மாவையும், தம்பியையும் ஒரு முறை திரும்பிப் பார்த்தேன். இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். மெதுவாக வீட்டுக்கு வெளியில் வந்தேன். நிலவொளியில் பாதைகள் தெளிவாகத் தெரிந்தன. முன்னம் நடந்து போன அதே வயல் வரம்புகளுக்கு ஊடாக விறுவிறுவென நடந்து கொண்டிருந்தேன். ஊர்மனைகளுக்குள் இருந்து கேட்கும் நாய்களின் ஊளையிடும் ஓசை ஒரு வித பயத்தை தந்தது. வயல்வெளியில் வீசிக் கொண்டிருந்த ஈரக் காற்று என் படபடப்பை மேலும் அதிகமாக்கியது. இப்போது பூமகளை வைரவர் மடையில் உட்கார செய்திருப்பார்கள் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

உள்ளுணர்வு உந்தித்தள்ள மிக வேகமாக நடந்து வந்த என்னை குடமுருட்டி ஆறு தடுத்தது. பகல் வேளையிலேயே கடப்பதற்கு பயமாக இருக்கும் முதலைகள் உலவும் அந்த ஆற்றை எப்படி கடந்தேன் என்று இப்போதும் புரியவில்லை. எனக்குள் யாரோ இருந்து இயக்கியது போலிருந்தது. வயல் வரம்பில் நடந்து பழக்கப்பட்ட கால்கள் என்பதால் நான் திட்டமிட்ட நேரத்துக்கு சற்று முன்னதாகவே வெம்பு மயானத்துக்கு அருகில் வந்து சேர்ந்தேன்.

மயானத்தில் யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு வயலோரமாகக் கிளைபரப்பி உயர்ந்து வளர்ந்து இருந்த ஆலமரத்தில் ஏறி வசதியான பகுதியில் அமர்ந்து கொண்டேன். எனது பார்வைக்கு எட்டியதாக மயானத்தின் மறுபக்கத்தில் பூமகளுக்காக வெட்டப்பட்டிருந்த புதைகுழி நிலவொளியில் சிறிதாகத் தெரிந்தது. சிறிது நேரத்தில் கோயிலடியில் இருந்து தீப்பந்தங்கள் நகர ஆரம்பித்தன. மனதைத் திடப்படுத்திக் கொண்டு கையில் கிடைத்த ஆலம் விழுதை பற்றிப் பிடித்தபடி எழுந்து நின்று பார்த்தேன். நிலவொளியில் மங்கலாகத் தெரிந்த சிறு உருவங்கள் மெல்ல மெல்லப் பெரிதாகி மயானத்தை நோக்கி வந்தன.

அருகில் நெருங்கியபோது நிலவொளியில் பாடையில் வெள்ளை நிற ஆடையால் மூடப்பட்டிருக்கும் பூமகளின் உடலை கண்டதும் என் தைரியமெல்லாம் உடைந்து போய் ஓஓஓ... என்று அழவேண்டும் போல் இருந்தது. எதிர்பார்த்தபடியே எல்லாம் நடந்தது. மிக விரைவாக வெட்டி இருந்த குழியினுள் பூமகளின் உடலைக் கிடத்தி அவசர அவசரமாக அதன் மேல் மண் நிரப்பி குழியை முற்றாக மூடினார்கள். கனகவல்லி பாட்டி சொல்லியது போல சிறிதாக ஏதோ ஒரு சடங்கை மூடப்பட்ட குழிமேல் பூசாரி செய்தார். அதன் பின் அனைவரும் திரும்பி பார்க்காமல் ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

சுற்றும் முற்றும் பார்த்து யாரும் காவலுக்கு இல்லை என்பதை உறுதி செய்த பின் மெதுவாக மரத்திலிருந்து இறங்கத் தொடங்கினேன். அப்போதுதான் அந்தத் துயரம் நிகழ்ந்தது. ஊரை நோக்கி நடக்கத் தொடங்கிய பூசாரி திடீரென திரும்பி மயானத்தை நோக்கி வந்தார். வந்த வேகத்தில் ஏதோ ஒரு பாடலை உரத்த குரலில் பாடி ஆடத் தொடங்கினார். அவரை தொடர்ந்து வந்த வாத்தியக்காரர்களும் அவர் பாடலுக்கு ஒத்திசைத்தனர். ஆலயத் தொண்டர்கள் அதிர்ச்சியோடு அவர்களைச் சுற்றி இருந்தனர்.

எனக்கு உண்மையில் அழுகை வந்து விடும் போல் இருந்தது. என்னுடைய பூமகள் மயக்கம் தெளிந்து மூச்சை எடுப்பதற்கு கிடங்கில் போராடிகொண்டிருப்பாள். நான் அவளைக் காப்பாற்ற வேண்டிய தருணத்தில் மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறேன். பூசாரி தொடர்ந்து ஆடிக் கொண்டிருந்தான். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போயிருந்தேன் நான். திடீரென்று பூசாரி இரு கைகளையும் மேலே தூக்கி ஏதோ ஒரு சைகை செய்தார். வாத்திய ஒலிகள் அனைத்தும் சட்டென நின்றன. ஆலய தொண்டர்களும், வாத்திய கலைஞர்களும் பின்தொடர பூசாரி ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அவசர அவசரமாக நான் மரத்திலிருந்து கீழே இறங்கத் தொடங்கினேன். மரக்கிளைகள் மெல்ல அசைய இலைகளின் சத்தத்தோடு மிகவும் குளிர்ந்த காற்று ஒன்று வீசத் தொடங்கியது. நான் நிதானிப்பதற்குள் பனிமேகம் ஒன்று என்னைப் பின்னால் இருந்து இறுக்கி அணைப்பது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது. மிகவும் பரிச்சயமான வாசனையொன்றை என் நாசிகள் உணரத் தொடங்கியது. எனக்கு ஏதோ ஒன்று புரிவது போலவும் புரியாமல் குழப்பமாக இருப்பது போலவும் இருந்தது. விழுதுகளைப் பற்றி இருந்த கைகளின் வீரியம் குறையத் தொடங்கியது. கிளைகளின் மேல் உறுதியாக நின்ற கால்கள் தடுமாறத் தொடங்கியது. பின்னால் இருந்து அணைத்த பனிமேகம் தன்னுள் இருந்த குளிர் அனைத்தையும் என் உடலுக்குள் பாய்ச்சிவிட்டு மறைந்து போனதுபோல் உணர்ந்தேன். கைகள் வலுவிழந்து விழுதுகளை விட்டன. கால்கள் தளர்ந்தது. எனது உடல் காற்றில் மிதந்தபடி மரத்தின் கீழ் இருந்த வயலுக்குள் விழுந்தது. பலர் ஓடி வருவது போல சத்தங்கள் கேட்டது.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com



# கண்முன் நிகழும் காலத்தின் கூத்து

**- கிருங்கை சேதுபதி**

**ஓவியம் : ஜீவா**

மகாகவி பாரதியாரின் பத்தாண்டுக் காலப் புதுவை வாழ்வில் நிகழ்ந்தேறிய அற்புதங்கள், இயற்கையிறந்த நிகழ்ச்சிகளாகத் தெரிந்தாலும் அவற்றைப் பொய்யென்று புறந்தள்ளிவிட இயலாது. காரணம், உடனிருந்து கண்டவர்கள் அந்த உண்மைகளைப் புனைவேதுமின்றிப் பதிவு செய்திருக்கிறார்கள்.

அவற்றுள் ஒன்று, புதுவையைத் தாக்கிய நள வருஷத்துப் புயலுக்குப் பின்னர் கண்ட காட்சி.

நள வருஷம் கார்த்திகை மாதம் 8-ந் தேதி (16-11-16) புதன் கிழமை நல்ல நாளில் பாரதியார் முன் சொன்ன வீட்டிற்குக் குடிபோனார். அந்த வருஷம் ஐப்பசி மாதம் மழை இல்லாமல் ஜனங்களெல்லாம், 'ஆ.ஆ' என்று அலைந்தார்கள். கார்த்திகை மாதத்திலோ புயலும் மழையும் அடித்தன!

பாரதியார் புது வீட்டிற்குக் குடிபோன அன்று மாலை சுமார் நாலுமணியிலிருந்தே மேகக் கூட்டங்கள் குவிந்து குவித்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தன... எட்டு மணி சுமாருக்கு மழை ஆரம்பமாயிற்று. கடுமையான மழை. பாகவதத்தில் இந்திரன் மழை, பொழியச் செய்ததைப் படித்திருந்தோம் அப்பொழுது' அதை நேராகவே பார்த்தோம். இடியின் ஓசை வீட்டையே அதிரச் செய்தது. மின்னலின் வீச்சு கண்ணைப் பறித்தது. புயற்காற்றும் வீசத் தொடங்கிற்று. சுண்டு விரல் பருமனுக்கு மழை தாரை தாரையாகப் பொழிந்தது.' என்று அன்று இரவு அடித்த புயற்காற்றின் பேரோசையையும், கொட்டிய மழையின் கனபரிமாணத்தையும் சித்திரப்படுத்தியிருப்பார் யதுகிரி அம்மாள். (பாரதி நினைவுகள், பக்.106-197)

இந்த மழையின் மகோன்னதமான கூத்தினை, ஓசை நயம்பட, உணர்ச்சித் திறம்படப் பாடியவர் பாரதியார். அதுதான், 'திக்குகள் எட்டும் சிதறி' எனத் தொடங்கும் மழைப் பாடல்.

*'அண்டம் குலுங்குது தம்பி-தலை*
*ஆயிரந் தூக்கிய சேடனும் பேய்போல்*
*மிண்டிக் குதித்திடு கின்றான்-திசை*
*வெற்புக் குதிக்குது வானத்துத் தேவர்*
*செண்டு புடைத்திடு கின்றார் - என்ன*
*'தெய்விகக் காட்சி'*

என்று அதனைக் கண்டு அதிசயித்தும், 'காலத்தின் கூத்து' என்றும் கணித்தறிந்து பாடுகிறார் பாரதியார். இது இயற்கையின் உன்னதத்தைக் கண்ட கூத்தாடிப் பாடிய பதிவு.

அனைத்தையும் புரட்டிப் போட்டு அடித்த புயலும் வெட்டிய மின்னலும், கொட்டிய மழையும் சேதப்படுத்தாமல் விட்டுவிட்ட தென்னந்தோப்புதான் அதிசயம்... அது மட்டும் தப்பியது எவ்வாறு? அதனை மட்டும் ஏன் வாயு பொடிக்கவில்லை?

கண்ணாரக் கண்டவர்கள் மூவர். அவர்களுள் ஒருவர் யது-கிரி. புதுவையின் பாரதியார் வாழ்ந்த கவித்துவ வாழ்வைச் சொற்சித்திரமாகத் தீட்டிய அவர் எழுதுகிறார்:

'ஒரு சின்னத் தோப்பு. நூறு மரங்களுக்குமேல் இல்லை. அங்கே சில மரங்கள் மட்டுமே விழுந்து பாக்கி எல்லாம் சீராக இருந்தன. அதைக் கண்டதும் ஏழையின் தோப்பைக் காத்த பராசக்தியைப் பாடவேண்டும் என்று அவருக்குத் தோன்றியதாம். 'பிழைத்த தென்னந் தோப்பு' என்ற தலைப்பில், ஒரு கவிதை செய்தார். 'ஏழை என்றால் காற்றிற்குக் கூட, சுருணை என்பதற்கு இதைவிட உதாரணம் வேண்டுமா?' என்றார். மறுநாள் நாங்கள் எல்லோரும். அங்கே சென்று பார்த்தோம். பாரதியார் பாடிய பிறகு, தென்னந்

தோப்பு ஒரு கண்காட்சித் தோப்பாக ஆகிவிட்டது. ஊர் ஜனங்களெல்லாம் போய்ப் பார்த்து சந்தோஷித்தார்கள்…' (மேலது, பக். 113-114)

1954-ல் அமுத நிலையம் வாயிலாக வெளிவந்த 'பாரதி நினைவுகள்' என்னும் இந்நூலின் கட்டுரைகள், 1938-39களில் எழுதப்பட்டவை. இதற்குச் சற்றுமுன்பான காலக்கட்டத்தில், வ.ரா.வால் எழுதப்பெற்ற 'சுப்பிரமணிய பாரதியார்' தொடர் கட்டுரையில், இந்தத் தோப்பில் பாரதியார் இருந்து,. 'காக்கை குருவி எங்கள் ஜாதி- நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை நோக்க நோக்கக் களியாட்டம்' என்று பாடிக் களித்த செய்தி சொல்லப்பெறுகிறது.

'முத்தியாலுப்பேட்டை கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்திலே, நோக்கி நோக்கிக் களியாட்டம் அடைவார் பாரதியார். அவருடைய ஆனந்தம் வர்ஷ தாரையாகப் பெருக்கடையும். உன்மத்தனைப்போல, (வெறிகொண்டவனைப் போல,) சில சமயங்களில் அவர் ஆகிவிடுவார். இயற்கையின் மின்சார சக்தி, கவிதை உணர்ச்சி என்ற கம்பி மூலமாக, பாரதியாரின் உடலிலும் உள்ளத்திலும் நுழைந்து, பாய்ந்து, பரவி, பூரித்துப் போகும்பொழுது, அவர் ஆனந்தக் கூத்தடிக்காமல் சும்மாயிருக்க முடியுமா? குரலிலே ஸரிக க காமர் காலிலே தாளம் கைகள் கொட்டி முழங்கும். உடல் முழுவதும் அபிநயம்தான். தேகமும் மனமும் அனுபவிக்கும் ஆனந்தத்தையும் சக்தியையும் கண்கள் வெளிக் காண்பிக்கும்,

இவ்வாறு இயற்கை இன்பத்தை இனிது நுகர்ந்த இந்தத் தோப்புத்தான் பாரதி பாடிய, 'பிழைத்த தென்னந்தோப்பு'.

*'வயலிடை யினிலே செழுநீர்*
*மடுக் கரையினிலே.*
*அயலெவரு மில்லை, தனியே*
*ஆறுதல் கொள்ளவந்தேன்.* 1

*காற்றடித் ததிலே, மரங்கள்*
*கணக்கிடத் தகுமோ?*
*நாற்றினைப்போலே சிதறி*
*நாடெங்கும் வீழ்ந்தனவே.* 2

*சிறிய திட்டையிலே உளதோர்*
*தென்னஞ் சிறுதோப்பு*
*வறியவ னுடைமை அதனை*
*வாயு பொடிக்கவில்லை.* 3

*வீழ்ந்தன சிலவாம் மரங்கள்*
*மீந்தன பலவாம்*
*வாழ்ந்திருக்க வென்றே அதனை*
*வாயு பொறுத்துவிட்டான்.* 4

பேனா மன்னர் டி.எஸ். சொக்கலிங்கம் ஆசிரியராக இருந்து நடத்திய 'காந்தி' இதழில் (25.5.1934), வ.ரா. எழுத்தாக வெளியிட்ட இக்கட்டுரையின் நிறைவுப் பக்கத்தில் இந்தச் செய்தி, பாரதிதாசன் சொன்ன செய்தியாகப் பதிவு பெறுகிறது.

'புதுச்சேரியில், கனக சுப்புரத்னம் என்று ஒருவர் இருக்கிறார். இந்தப் பெயரால், அவரை நீங்கள் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. அவர் 'பாரதிதாஸன்' என்ற புனைப் பெயருடன், ஆச்சரியப்படத்தக்க தமிழ்க் கவிதை எழுதுகிறார். அவர் பாரதியாருக்குத் தோழன், சீஷன், எனது அருமையான நண்பர். அவர், மேற்சொன்ன தோட்டத்தைப் பற்றி, அதிசயமான சேதியொன்றைச் சொன்னார்.

***காற்றடிக்குது கடல் குமுறுது***
***கண்ணை விழிப்பாய் நாயகனே***

என்று பாரதியார் பாடியிருக்கிறாரே, அது புதுச்சேரியில் அடித்த பெரும்புயல் சம்பந்தமாக. இன்றைக்குச் சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன், புயல் அடித்தது. தமிழ்நாடு முழுதும் வெள்ளமும் புயலும். உடைத்துக் கொள்ளாத ஆறுகள், ஏரிகள் இல்லை. மரங்கள் சடசடவென்று சரிந்து வீழ்ந்தன. 'காடெல்லாம் விறகான செய்தி' ஆயிற்று நாடு முழுதும்.

புதுச்சேரி கடற்கரை நகரம் புயலால் நேர்ந்த சேதத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. ஒதியஞ்சாலை என்ற தோட்டத்திலிருந்த அழகான மரங்கள் எல்லாம் தலைகுப்புற வீழ்ந்தன் தந்திக்கம்பங்கள் முறிந்து போயின் கட்டிடங்கள் வீழ்ந்தன. கூரைகள் அப்படியே, கூடாரம் அடித்தது போல, உட்கார்ந்துவிட்டன. நகரம் முழுதும் 'பேய் மேய்ந்த' காட்டைப் போலத் தோற்றம் அடைந்தது.

இவ்வளவு பயங்கரமான சேதத்தினடுவே, முத்தியாலுப் பேட்டை கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்திலிருந்த மரங்கள் மட்டும் விழவில்லை என்று பாரதிதாஸன் சொன்னார். எனக்கும் அவருக்கும் அற்புதத்தில் நம்பிக்கையில்லை. ஆனால் நிகழ்ந்ததை நம்பித்தானே ஆக வேண்டும்! இந்த மரங்கள் தப்பித்துக்கொண்ட காரணத்தை முழுதும் ஆராயாமல், அற்புதம் என்று அதைக்கொள்ள, என் மனம் கூசுகின்றது. தனது ரகஸியத்தை, இயற்கைத் தாய் பாரதியாருக்கு அளித்த இடம் கெடாமல் இருக்கவேண்டும் என்பது அவளது விருப்பமோ, என்னவோ என்று கற்பனை கலந்து பேசலாம். ஆனால், மனிதனுடைய அறிவிலே அற்பமும் மகத்தும் கலந்து நிற்கின்றன. இயற்கையின் சூதை அற்ப அறிவினால் அளக்க முடியாது் அளப்பதற்குக் கவிதை உள்ளம் வேண்டும்.'



இது நடந்து, நூற்றாண்டு கடந்துவிட்டது. இந்தச் செய்தி எழுத்தாக்கம் கண்டு, 89 ஆண்டுகள் கடந்துவிட்டன. இக்கட்டுரை, 'மகாகவி பாரதியார்' என்னும் நூலில் இடம்பெறும் போது, (10.9.1945). பதினைந்து வருஷங்களுக்கு முன் என்ற தொடர், 'இன்றைக்குச் சுமார் முப்பது வருஷங்களுக்குமுன்' என்று திருத்தம் பெற்றிருக்கிறது. அதற்குப் பின்னர் வெளிவந்த அனைத்துப் பதிப்புகளிலும் அது முப்பது வருஷங்களைத் தாண்டவே இல்லை.

ஆண்டுகள் எத்தனை கழிந்தாலும், அந்த அற்புதம் அப்படியே 'சித்திரத்தில் தீட்டப் பெற்ற சிறந்த நிகழ்வாகத்தானே இருக்கின்றது? இயற்கைத் தாய் நிகழ்த்திய அற்புதத்தைக் கவிதைக் கண் கொண்டு காணும்போது, கடந்த காலம் நிகழ் காலமாகவே மாறிவிடுகிறது. இதற்குப் பின்வரும் இரு சம்பவங்களும் சாட்சியங்களாகின்றன.

'மற்றுமொரு தெய்வீக அனுபவத்தை பாரதியாரின் மகள் சகுந்தலா பாரதி சொல்லுகிறார். புதுச்சேரியில் அவர்கள் குடியிருந்த வீடு விளக்கெண்ணெய் செட்டியார் என்று பாரதியாரால் பெயரிடப்பட்ட ஒருவரின் பழைய இல்லம். இன்றோ நாளையோ இடிந்து தலையில் விழக்கூடிய நிலையில் இருந்தது அந்த வீடு. முழுவதும் இடித்துவிட்டுக் கட்டினாலொழிய அந்த வீட்டில் வாழ்வது என்பது முடியாத நிலை. அதற்கு நேர் எதிரில் கெட்டியான ஒரு மச்சுவீடு. அந்த வீட்டுக்கு ஒரு போலீஸ் அதிகாரி குடிவருவதாகத் தகவல் இருந்தது. பாரதியாரை வேவு பார்க்க ஏராளமான போலீஸார் சுற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில் நேரெதிர் வீட்டுக்கு ஒரு போலீஸ் அதிகாரி குடிவருவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அவர் குடிவருவதைத் தடுக்க வேண்டுமானால் இவர்கள் அந்த வீட்டுக்குக் குடி போக வேண்டும், அந்தப் போலீஸ் அதிகாரி இந்த பழைய வீட்டுக்குக் குடி வரமாட்டார். வேறு வழியில்லை அந்த மச்சுவீட்டுக்கு பன்னிரெண்டு ரூபாய் வாடகை என்றபோதும், அது அதிகம் தான் என்றாலும் அங்கு குடி போனார்கள். அது கார்த்திகை மாதம். இவர்கள் புதிய வீட்டுக்குக் குடிபோன மறுநாள் இரவு கடுமையான மழை, அதனைத் தொடர்ந்து பேய்க் காற்று வீசத் தொடங்கியது. ஆம்! புயல்காற்று தொடங்கிவிட்டது. பாரதியாரின் இரண்டு பெண் குழந்தைகளும் ஓர் அறையில் படுத்துவிட்டனர். பாரதியும் செல்லம்மாவும் விடிய விடிய கண்விழித்து இறைவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். நடு இரவில் சுற்றுப் புறங்களில் மரங்கள் 'மடேர் மடேர்' என்று ஒடிந்து விழும் ஓசை. ஓசைகேட்டு எழுந்த சகுந்தலாவை பாரதியார் ஆறுதல் சொல்லி 'காற்றும் மழையும் பெரிதாக இருக்கிறது பாப்பா, பயப்படாதே' என்று ஆறுதல் சொன்னார். விடியற்காலையில் மகளை அழைத்துக்

கொண்டு பாரதி வெளியே வந்தார். அப்போது வாயுதேவ னின் விளையாட்டைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். சாலை மரங்களெல்லாம் வேரோடு பெயர்ந்து விழுந்து கிடந்தன. ஏராளமான காக்கைகளும் ஏனைய பறவையினங்களும் கூட் டம் கூட்டமாக இறந்து கிடந்தன. தந்தி மரங்கள் அறுந்து விழுந்து கிடந்தன. வரிசையாக தென்னை மரங்கள் அனைத் துமே வீழ்ந்து கிடந்தன. அப்போது பாரதி பாடிய பாடல் தான்: 'காற்றடிக்குது கடல் குமுறுது கண்ணை விழிப்பாய் நாயகனே!' எனத் தொடங்கும் பாடல். அதில் வரும் சில வரி கள் அவருடைய அனுபவத்தைப் பிரதிபலிப்பதாக அமைந் தது. அது, 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே, இந்த நேரமி ருந்தால் என்படுவோம்? காற்றென வந்தது கூற்றமிங்கே, நம் மைக் காத்தது தெய்வ வலிமையன்றோ' என்ற பாடல். (https://bharathipayilagam.blogspot.com/2015/09/blog-post_11.html#)

இந்த அனுபவத்தோடு ஒட்டிய இன்னொரு பதிவாக அமைகி றது, பாரதியார் எழுதிய சிறுகதை ஒத்த நடைச்சித்திரம் 'மழை'.

இது புயல் மழைக்கு முந்தைய நாளின் அனுபவமாக இருந் திருக்கக் கூடும்.

ஓம், ஓம் ஓம் என்று கடல் ஒலிக்குது, காற்று சுழித்துச் சுழித்து வீசுது, மணல் பறக்குது, வான் இருளுது, மேகம் சூழுது. கடற்கரையில் காற்று வாங்க வந்த ஜனங்கள் கலைந்து வீட்டுக்குத் திரும்புகிறார்கள்.

நானும், ராமராயரும் வேணு முதலியும், வாத்தியார் பிரமராய அய்யரும் இன்னும் சிலருமாகக் கடற்கரை மணல் மேலே உட்கார்ந்து வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தோம். மின் னல் வெட்டு அதிகப்படுகிறது. ராத்திரி ஏழு அல்லது ஏழரை மணி இருக்கலாம்.

'நாமும் எழுந்து வீட்டுக்குப் போக வேண்டியதுதான்' என்று பிரமராய அய்யர் சொன்னார்.

வேணு முதலியார் பாடுகிறார்:

*காற்றடிக்குது கடல் குமுறுது*
*கண்ணை விழிப்பாய் நாயகனே*
*தூற்றல் கதவு, சாளரமெல்லாம்*
*தொளைத் தடிக்குது கூடத்திலே-மழை*
*தொளைத் தடிக்குது கூடத்திலே.*

'பாட்டெல்லாம் சரிதான், ஆனால் மழை பெய்யாது' என்று ராமராயர் மற்றொரு முறை வற்புறுத்திச் சொன்னார்.

'பந்தயம் என்ன போடுகிறீர்?' என்று பிரமராய அய்யர் கேட் டார்.

'மழை பெய்தால் நான் உமக்குப் பத்து ரூபாய் கொடுக்கி றேன்: அதாவது, இன்னும் இரண்டு மணி நேரத்துக்குள் மழை பெய்யாது என்று நான் சொல்லுகிறேன் பெய்தால் நான் உமக்குப் பத்து ரூபாய் கொடுப்பேன், பெய்யாவிட் டால் நீர் நமக்குப் பத்து ரூபாய் கொடுப்பீரா?' என்று ராமரா-யர் சொன்னார்.

பிரமராயர், 'சரி' யென்றார். அப்போது என் தோள் மேலே ஒரு தூற்றல் சொட்டென்று விழுந்தது. நான் 'தூற்றல் போடு கிறது' என்று சொன்னேன். 'இல்லை' யென்று ராமராயர் சொன்னார். 'என் மேல் ஒரு தூற்றல் விழுந்தது' என்று சொன் னேன். அதற்கு ராமராயர், 'அலையிலிருந்து ஒரு திவலை காற்றிலே வந்து பட்டிருக்கும். அது மழைத் தூற்றலன்று' என்றார். 'சரி' என்று சும்மா இருந்துவிட்டேன்.

'என் மேலே ஒரு தூற்றல் விழுந்தது' என்று பிரமராய அய்யர் கூவினார்.

'இதுவும் அலையிலிருந்துதான் வந்திருக்கும்' என்று ராமரா-யர் சொன்னார்.

'அதெப்படித் தெரியும்?' என்று பிரமராய அய்யர் சொல்வதற் குள்ளாகவே தூற்றல் பத்துப் பன்னிரண்டு எல்லார் தலையி லும் விழுந்தது.

'ராமராயருக்குப் பந்தயம் தோற்றுப் போய்விட்டது' என்று நான் சொன்னேன்.

'இல்லை. இது தூற்றல். நான் சிறு தூற்றல் கூடப் போடா தென்று சொல்லவில்லை. மழை பெய்யாதென்று சொன்னேன். சிறு தூற்றல் மழையாக மாட்டாது. இன்னும் இரண்டு மணி நேரம் இங்கே இருக்கலாம். அதுவரை மழைபெய்யாது என்று நிச்சயமாக இப்போதும் சொல்லுகிறேன்' என்று ராமரா-யர் சித்தாந்தம் செய்தார். வானம் அதிகமாகக் கறுத்துவிட் டது. இருள் கக்கிக் கொண்டு மேகத்திரள் யானைத்திரள் போலவே தலைமீது போகலாயிற்று. தூற்றல் போடவில்லை. நின்றுபோய் விட்டது. ஆனால் இருள் மேன்மேலும் அதிகப்ப டுகிறது.

அப்போது நான் சொன்னேன்: 'மழை பெய்தாலும் சரி, பெய் யாவிட்டாலும் சரி. நாம் இங்கிருந்து புறப்பட வேண்டும்' என்று சொல்லி எழுந்தேன்.

'தாங்கள் முதலாவது போங்கள். நானும் பிரமராய அய்யரும் இங்கே கொஞ்ச நேரம் இருந்து விட்டு வருகிறோம்' என்று ராமராயர் சொன்னார்.

சரியென்று சொல்லி நானும் வேணு முதலியாரும் புறப்பட் டோம். மற்றவர்கள் அத்தனை பேரும் பந்தய விஷயத்தி லேயே கவனமாக அங்கே உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் புறப்பட்டு நூறடி தூரம் வருமுன்னாகவே மழைத் தூற்றல் வலுக்கத் தொடங்கிற்று. கொஞ்சம் ஓடிக் கடற் பாலத்தருகே சுங்கச்சாவடியில் போய் ஒதுங்கினோம். மழை வர்ஷமாகச் சொரிந்தது. ராமராயரும், பிரமராய அய்யரும் மற்றோரும் குடல் தெறிக்க ஓடி வந்து சேர்ந்தார்கள். நானும் வேணு முத லியாரும் கொஞ்சம் நனைந்து போயிருந்தோம். மற்றவர்கள் ஊறுகாய் ஸ்திதியில் இருந்தார்கள்.

மழை முழங்குகிறது. மின்னல் சூறையடிக்கிறது. சுருள் மின் னல், வெட்டு மின்னல், வட்ட மின்னல், ஆற்று மின்னல்...

மின்னல் வீச்சிலே கண் கொள்ளை போகிறது. இடி என்றால் இடியா? நம்முடைய சிநேகிதர் பிரமராய அய்யருக்குத் தொண்டை இடிபோலே கர்ஜனை செய்வதை யொட்டி. அவர் மாலைதோறும் பேசுகிற திண்ணைக்கு இடிப் பள்ளிக்கூடம் என்று பெயர் சொல்வார்கள். அவரெல்லாம் இந்த நிஜ இடி யைக் கண்டு கலங்கிப் போய்விட்டார். ராமராயருக்கும் மனத் துக்குள்ளே பயம். வெளிக்குப் பயத்தைக் காட்டினால் அவ மானம் என்பது ராமராயருடைய கொள்கை! ஆதலால் அவர் வேஷ்டியைப் பிழிந்து தாடியைத் துவட்டிக் கொண்டு 'ஓம் சக்தி' 'ஓம் சக்தி' என்று சொல்லத் தலைப்பட்டார்.

வேணு முதலியார் பாடத் தொடங்கினார்.

திக்குக்கள் எட்டும் சிதறி-தக தீம் தரிகிட தீம் தரிகிட தீம் தரிகிட தீம் பக்க மலைகள் உடைந்து-வெள்ளம் பாயுது, பாயுது, பாயுது, தாம் தரிகிட

தக்கத் ததிங்கிட தித்தோம் அண்டம் சாயுது, சாயுது, சாயுது, பேய் கொண்டு தக்கை யடிக்குது காற்று-தக்கத் தாம் தரி கிட, தாம் தரிகிட, தாம் தரிகிட, தாம் தரிகிட

வெட்டி யடிக்குது, மின்னல்-கடல் வீரத் திரை கொண்டு விண்ணை யடிக்குது கொட்டி யிடிக்குது மேகம்-கூ கூவென்று விண்ணைக் குடையுது காற்று சட்டச் சட, சட்டச் சட, டட்டா-என்று

தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம் எட்டுத் திசையும் இடிய-மழை எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!- தக்கத் தக, தக்கத் தக, தித்தோம்!

இவ்வாறு பாடிக் கொண்டு வேணு முதலியார் குதிக்கத் தொடங்கினார். காற்று ஹுஹுஹு என்று கத்துகிறது. வேணு முதலியாரும் கூடவே கத்துகிறார். இடி நகைக்கிறது. வேணு முதலியார் அதனுடன் கூட நகைக்கிறார்.

இவர் குதிக்கிற மாதிரியைக் கண்டு பக்கத்தில் இருந்தவர்க ளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பயம் தெளிந்தது.

ராமராயர் 'ஓம் சக்தி' மந்திரத்தாலே பயத்தை நிவர்த்தி செய் துகொண்டு 'மகா பிரகிருதி வீரரசம் காட்டுகிறாள்' என்று சொன்னார். 'ரௌத்ர ரசம் என்று பிரமராய அய்யர் திருத்திக் கொடுத்தார். 'இரண்டும் ஒன்றுதான்' என்று ராமராயர் மனத றிந்து பொய் சொன்னார். எதிரியை வார்த்தை சொல்ல விடக் கூடாதென்பது ராமராயருடைய கொள்கை. இப்படியிருக்கை யிலே மழை கொஞ்சம் கொஞ்சம் குறையலாயிற்று நெடு-நேரம் அங்கே நின்றோம். ராமராயருக்குச் சாயங்காலமே கொஞ்சம் ஜலதோஷம் மழையில் உடம்பு விறைக்கத் தொடங்கிற்று. இதை வேணு முதலியார் கண்டு அவரை இரண்டு கையாலும் மூட்டைபோலே தூக்கி நிமிர்ந்து நின்று தலைக்கு மேலே கையெட்டும் வரை கொண்டு போய்த் தொப்பென்று தரையின் மேலே போட்டார். 'அட மூடா!' என்று சொல்லி ராமராயர் எழுந்து நின்று கொண்டு, 'உடம் பெல்லாம் சுடக்கெடுத்ததுபோல் நேராய் விட்டது. உடம்பில் உஷ்ணம் ஏறிவிட்டது. இப்போது குளிர் தெரியவில்லை' என்று சொன்னார்.

சிறிது நேரத்துக்குப் பின் மழை நின்றது. நாங்கள் வீட்டுக்குத் திரும்பினோம். வரும் வழியே வேணு முதலியார் பாடுகிறார்.

அண்டங் குலுங்குது தம்பி-தலை ஆயிரந் தூக்கிய சேடனும் பேய்போல் மிண்டிக்குதித் திடுகின்றான்-திசை வெற்புக் குதிக்குது வானத்துத் தேவர் செண்டு புடைத்திடு கின்றார்-என்ன தெய்விகக் காட்சியைக் கண் முன்பு கண்டோம் கண் டோம், கண்டோம், கண்டோம்-இந்தக் காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம்? தக்கத்தகத் தக்கத்தக தித்தோம்.

மறுநாள் காலையில் ராமராயர் பிரமராய அய்யருக்குப் பந் தய ரூபாய் பத்தும் செலுத்திவிட்டார்.

**க**தை முடிந்துவிட்டது. காட்சி முடியவில்லை. மழை இன் னும் மனதுக்குள் தூறலாய் விழுகிறது. வேணு முதலியாகி, பாரதியார் பாடுகிறார்.

***'கண்டோம் கண்டோம்***
***காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம்...***
***தக்கத்தகத் தக்கத்தக தித்தோம்.'***
***இது கண்முன் நிகழும் காலத்தின்***
***கூத்து அல்லவா?***



sethupathi@thaiveedu.com

# தமிழ்வலை - 91

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | ■ | 3 |
| | ■ | ■ | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| 4 | | 5 | | ■ | | ■ | 6 | ■ | |
| | ■ | | ■ | 7 | | | | ■ | |
| ■ | 8 | | | | ■ | ■ | | ■ | ■ |
| 9 | ■ | | ■ | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | | ■ | 12 | | ■ | ■ |
| ■ | 13 | | 14 | ■ | 15 | ■ | ■ | ■ | 16 |
| ■ | ■ | ■ | 17 | | | | | | |
| 18 | | ■ | | ■ | | ■ | ■ | ■ | ■ |

## தமிழ்வலை-91 வினா

### இடமிருந்து வலம்

1 கிழக்கிலங்கையில் ஓர் இடம்
4 யானக்கொம்பு
7 திங்கள்
8 பத்திரம்
10 ஒரு விலங்கு
11 ஒருவகை நோய்
12 தமிழகத்தில் ஓர் ஆறு
13 நோக்கு
17 வட இலங்கையில் ஓர் இடம்
18 கண்டி

### மேலிருந்து கீழ்

1 பௌத்த சமய தாபகர்
2 அபராதம்
3 உறக்கம்
5 பணக்காரர்
6 ஒரு சங்க இலக்கிய நூல்
7 ஒரு தெய்வம்
9 மறுமொழி
14 புலரி
15 செய்யுள்
16 பெண் பறவை

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 90க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 ஜெ | மி | னி | 2 க | ணே | 3 ச | ன் | ■ | ■ |
| ■ | ய | ■ | ■ | ண் | ■ | க | ■ | 4 கோ | ■ |
| ■ | 5 கா | தி | ■ | டா | ■ | 6 தி | ரு | ட் | டு |
| ■ | ந் | ■ | 7 ஆ | ய | ம் | ■ | ■ | ட | ■ |
| 8 க | த | ம் | ப | ம் | ■ | 9 உ | டு | ம் | பு |
| ■ | ன் | ■ | த் | ■ | ■ | ழ | ■ | ■ | ■ |
| 10 அ | ■ | 11 ம | து | ■ | 12 சி | வ | ப் | 13 பு | ■ |
| 14 ம | க | ன் | ■ | 15 சே | ■ | ர் | ■ | வி | ■ |
| ர் | ■ | ற | ■ | லை | ■ | க | ■ | ■ | ■ |
| வு | ■ | ம் | ■ | ■ | 16 வ | ன் | ள | ம் | ■ |

## தமிழ்வலை-90 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
குகன் அருளானந்தன், மார்க்கம்.
விநோதா வசீகரன், மார்க்கம்.
திருமதி நவரட்ணம், ரொறன்ரோ.
ஜூட் செபஸ்தியாம்பிள்ளை, நோத்யோர்க்
சந்திரபாலன் தனா, ஸ்கார்பரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

## தமிழ்பிரபா சபாநேசன்,

**கிளிநொச்சி.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# தொல்காப்பியத்தின் சமூகவியல் – மறுவாசிப்பு

– பொன்னையா விவேகானந்தன்

**உரிப்பொருள்களில் முதற்பொருட்களின் ஆளுகை:**

ஒரு சமூகத்தின் வாழ்வை வளர்ச்சிப்படிகளின் வழியே கட்டமைப்பதில் நிலவமைவுக்கும் தட்பவெப்பங்களாலான காலச் சூழலுக்கும் பெரும்பங்கு உண்டு. தொல்காப்பியர் தமிழரின் திணை சார்ந்த வாழ்வியலை, நிலம், காலம் என்ற முதற்பொருட்களை அடிப்படையாகக் கொண்டே பாகுபடுத்துகின்றார். ஐவகை நிலங்களுக்கான உரிப்பொருளாக்கத்தில் நிலமும் காலமுமே பெரும் ஆளுகை செலுத்துகின்றன. தொழில்களும் மக்கள் கடமைகளும் முதற்பொருளைச் சார்ந்தே நிகழ்கின்றன.

ஒவ்வொரு திணைக்கும் உரிமைப்பட்ட பொருள் உரிப்பொருள். இதனைத் தொல்காப்பியர்

***புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
***ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை***
***தேருங்காதை திணைக் குரிப்பொருளே***

என்று வரையறுக்கின்றார். இந்த உரிப்பொருள்களே அக வாழ்வுக்கு நிலைக்களன்களாக விளங்குகின்றன. உரிப்பொருளற்ற எந்த அகப்பாடலும் முற்றுப்பெறாத பாடலே. இந்த உரிப்பொருள்களில் நிலமும் காலமும் செலுத்தும் ஆளுகையை நோக்குவோம்.

மலைகள் சார்ந்த நிலவமைவில் வாழ்ந்தோர், நிலவமைவுக்கேற்ப தங்கள் வாழ்வை தன்னியல்பு மிக்கதாக வடிவமைத்துக் கொண்டனர். இங்கே காதலர்களுக்கு வகுக்கப்பட்ட உரிப்பொருள் ஒழுக்கம் புணர்தல். காதலர் கூடும் புணர்தல் என்ற நிலை எல்லா நிலங்களுக்கும் பொதுவேயாயினும் இது குறிஞ்சிக்குச் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணமாக அமைவது நிலமும் காலமுமே.

மலைகளின் சரிவான பகுதிகளில் விளையவல்லவை தினை, சாமை போன்ற குறைந்த நீர்வளத்தோடு விளையவல்ல பயிர்கள். குறிஞ்சி நிலத்துக்குரிய விலங்குகளான யானை, பன்றி போன்றவை நள்ளிரவில் புகுந்து பயிர்களைத் தின்றுவிடவல்லவை. அவற்றை விரட்டுவதற்காக மரங்களில் பரண் அமைத்துத் தங்கியிருப்பர். இப்பணியில் பிள்ளைகளாகிய இளம்பெண்களும் ஆடவரும் ஈடுபடுவது வழமை. மனமொத்த காதலர் இருவர் களவொழுக்கத்தில் கூடுவதற்கும் புணர்வதற்கும் இது வாய்ப்பான காலமாக அமைந்தது. இதனால் இந்நிலத்தில் ‘புணர்தல்’ முதன்மை பெற்ற உரிப்பொருள் ஒழுக்கமானது. குளிர்காற்று வீசத் தொடங்குகின்ற காலமான கூதிர்காலத்தை (ஐப்பசி-கார்த்திகை) இவ்வொழுக்கத்துக்குரிய காலம் என்றும் யாமம் எனப்படும் நள்ளிரவை இதற்குரிய சிறுபொழுது என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது. உற்பத்திக்கு உரித்தான நிலமும் அதற்கேற்ற காலமும் குறிஞ்சிநிலத்தின் களவொழுக்கத்தில் ஆளுகை செலுத்துவதை நாம் காணலாம்.

மலையின் சாரல்களையும் அடர்ந்து செறிந்த காடுகளையும் கொண்ட நிலம் முல்லை. இங்கே கார்காலத்தில் பசும்புல் வெளிகள் செழித்துச் சிறந்திருக்கும். முல்லை மக்களின் முதன்மைத் தொழில் மந்தை வளர்ப்பு. நாள்தோறும் பசிய புல்வெளிகளைத் தேடி மந்தைகளைக் கொண்டு செல்வது வழக்கம். மந்தைகளைக் கொண்டு செல்வோர் சிலபொழுதுகளில் திங்கள் கடந்தே மீள்வர். முல்லைநிலத்துக்கு உரிய உரிப்பொருள் ‘இருத்தல்’. இது பிரிதலைக் குறித்து நிற்கும்.

முல்லைநிலத்து ஆடவரின் தலையாய பணி மந்தை மேய்த்தலே. அக்காலத்தில் ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் என்ற மந்தைகளுக்கான சண்டைகள் எப்போதுமே நடைபெறுவன. மேய்ப்பர்களே வீரர்களாகி மந்தைகளைக் காப்பர், கவரப்பட்ட மந்தைகளை மீட்பர். இந்த சண்டைகளில் சாவடைவதும் விழுப்புண்களைப் பெறுவதும் இயல்பானது. மந்தை மேய்ப்புக்குச் சென்ற காதலர் திரும்பி வருவாரா? இல்லை இறந்துவிடுவாரா? எனக் காதலியர் காத்திருத்தலே

‘இருத்தல்’. இவ்வகைக் காத்திருப்புத் தருகின்ற துயரை முன்னிறுத்தியே முல்லைநிலத்துக் களவொழுக்கத்தில் இருத்தல் முதன்மை பெறுகின்றது. முல்லையில் மழைக்குரிய கார்காலம் பெரும்பொழுதாகவும் மந்தை மேய்த்து ஊர்திரும்பும் மாலைப்பொழுது சிறுபொழுதாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இங்கும் உரிப்பொருளை வகுப்பதில் நிலமும் காலமும் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம்.

உழவுத்தொழிலால் செழிப்புற்றிருந்த நிலம் மருதம். நிறைந்த நீர்வளமும் அதனால் சிறந்த வயல்களும் மருதத்தின் வனப்பு. உழவுத்தொழில் தன்னிறைவைக் கடந்து வணிகமாக மாற்றங்கொண்ட களம் இதுதான். மருதமாந்தர் செல்வச் செழிப்பும் கலைச்சிறப்பும் கொண்டனர். இதுவே ஆடவர் சிலர் கணிகையரை நாடக் காரணமாயிற்று எனலாம். பெரும்பாலான மனைவியர் கணவன்மாருடன் ஊடல் கொள்ளப் பரத்தையர் ஒழுக்கமே ஏதுவாயிற்று என்பதைப் பல இலக்கியங்கள் குறிப்பிட்டிருக்கின்றன. மருதத்திணையின் உரிப்பொருள் ஒழுக்கம் ஊடல் என இலக்கணகாரர் வகுப்பதற்கு நிலவமையே காரணம் எனத் துணியலாம். தொழிலும் களவும் ஆண்டு முழுமையுமே சிறக்கும் என்பதால் ஆறுகாலமும் மருதத்துக்குரிய பெரும்பொழுதாகின்றது. உழவுத்தொழிலுக் கேற்ற சிறுபொழுது வைகறை என்பதிலும் ஐயமில்லை.

கடலோடு கூடிய வாழ்நிலமே நெய்தல். இங்கே மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்து, சங்கு சேகரித்தல் போன்ற கடல்சார் தொழில்கள் சிறப்புற்றிருக்கும். பெரும்பாலும் நன்னீர் ஆறுகள் கடலோடு கலக்கும் கழிமுகங்களிலேயே நெய்தல் குடியிருப்புகள் அமைந்திருக்கும். இந்நிலத்துக் காதலர்களுக்குரிய உரிப்பொருள் ஒழுக்கம் இரங்கல். கடற்றொழிலாளர்கள் பெரிதும் மாலைப்பொழுதில்தான் கடல் நோக்கிச் செல்வர். அதிகாலைப் பொழுதுக்குப் பின்னரே மீள்வர். காற்று, பெருமழை என்பன இத்தொழிலுக்கு அச்சுறுத்தலாக அமைவன. கடல் சென்ற காதலன், காலை மீளும் வரை காதல் தலைவியானவள் இரங்கி வருந்திக்கொண்டிருப்பாள். தலைவன் தன்னைக் காண வரவில்லையே எனத் தலைவி இரங்கித் தேம்புவாள் என்பதற்கு இலக்கியங்கள் சான்று தருகின்றன. இந்நிலத்துக்குரிய உரிப்பொருள் ஒழுக்கமான இரங்கலும் நிலவமைவு சார்ந்தே அமைகின்றது. ஆறுகாலங்களும் பெரும்பொழுதாகின்றது. மீனவர் கடல் நோக்கிப் புறப்படும் நேரமாகிய மாலைப்பொழுது (எற்பாடு -எல் (கதிரவன்) படுவது) சிறுபொழுதாக அமைகின்றது.

பாலை இயல்பானதொரு வாழ்நிலமல்ல என்பதால் தொல்காப்பியம் பாலை குறித்து வெளிப்படையாக எதுவும் கூறவில்லை.

*‘முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து*
*நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்*
*பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்’*

எனப் பாலைநிலத் தோற்றதைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது.

பாலைநிலத்தோற்றத்துக்குக் காரணமாக அமைவது காலநிலை. வான்மழை பொய்த்துவிட்டால் எளிதில் வறட்சியுற்று வறுமையுறும் நிலங்கள் குறிஞ்சியும் முல்லையுமே. அங்கு பசிநோய் பெருக்கெடுக்கும்வேளை, களவும், வழிப்பறியும் கொள்ளையிடலும் தோன்றும். இது உயிர்ப்பைத் தக்கவைப் பதற்கான உணவு குறித்த போராட்டம். இதிலே உயிரிழப்புகள் இயல்பாகவே நிகழும். பாலைத்திணைக்கு உரிய உரிப்பொருள் ஒழுக்கம் பிரிதல். பாலைநிலத்துக் காதலன் தன் தொழில்நோக்கிப் பிரிவுற்றால் அப்பிரிவு சிலபொழுதுகளில் நிலையாகிவிடக் கூடும். எல்லா நிலங்களிலும் பிரிதல் பொதுவானதே என்றபோதும் பாலைநிலத்துக்குப் பிரிதல் சிறப்புறக் காரணம் பாலையில் உயிரிழப்புகள் இயல்பாக இடம்பெறுவதேயாம். பொருள் ஈட்டத் தலைவன் பிரியக் கருதி அதனைத் தோழி வாயிலாகத் தெரிவிப்பான். தலைவி பிரிவுக்கு உடன்படாள். எனினும் தலைவன் பிரிவான். பாலைநிலக் கொடுமைகளை நினைத்துத் தலைவி மிகவும் அஞ்சுவாள். சிலபொழுதுகளில் தலைவியும் உடன்செல்வதும் நிகழும். பாலைக்குரிய பெரும்பொழுது இளவேனில் முதுவேனில் காலங்களாகிய கடும் வெய்யிற்காலமாகும். நண்பகல் சிறுபொழுதாகும்.

மேற்கூறிய கருத்துகளின் வாயிலாக ஐந்திணைக் காதலர்களுக்கான உரிப்பொருளைத் திட்டமிடுவதில் முதற்பொருட்களான நிலமும் காலமும் ஆளுமை செலுத்தியிருப்பதை அறியலாம். தொன்தமிழ் இலக்கணிகள் தமிழர் வாழ்வியலை நுண்மான் நுழைபுலத்தோடு நுணுகி ஆய்ந்து அகத்திணை மரபுகளைத் தோற்றுவித்திருக்கின்றனர்.

### களவொழுக்க முடிவும் கற்புநிலையின் தோற்றமும்:

கற்புநிலையை நோக்கிய இலக்கோடுதான் களவொழுக்கம் தோற்றம் கொள்கின்றது என்பதை அறிந்தோம். வாயில்கள் என்போர், அறத்தொடு நிற்றல் என்ற செயன்முறையினூடாகத் தலைவன், தலைவியின் களவொழுக்கத்தை உரியோருக்குத் தெரிவிப்பர். இப்பணியில் தோழியின் பங்கு இன்றியமையாதது. குறிஞ்சிப்பாட்டு என்ற இலக்கியத்தில் தோழி அறத்தொடு நிற்கும் பாங்கு அழகுறக் கூறப்பட்டிருக்கின்றது.

தோழி உள்ளிட்ட தலைவி, செவிலி, நற்றாய் என்னும் நால்வரும் அறத்தொடு நிற்கக்கூடியவர்கள். தலைவி தோழிக்கும் தோழி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் நற்றாய் தந்தை, தன் ஐயர்க்கும் அறத்தொடு நிற்பர். (தன் ஐயர் - தமையன்). அறத்தொடுநிற்றல் தலைவியின் தரப்பிலேயே நடைபெறும். தலைவன் தனித்து முடிவெடுக்கும் தன்மை கொண்டவனாதலினாலும் தலைவனின் காதலைப் பெரிதும் அவன் பெற்றோர் ஏற்பர் என்பதினாலும் அறத்தொடுநிற்றல் தலைவர்களுக்குக் கூறப்படவில்லை.

எவ்வாறான சூழ்நிலைகளில் களவொழுக்கம் வெளிப்படும் என்பதையும் தொல்காப்பியம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

ஆற்று ஊறு அஞ்சுதல் - தலைவன், தலைவியைச் சந்திக்க வரும்வழியில் உள்ள இடர்பாடுகளுக்கு அஞ்சுதல்.

அவன் வரைவு மறுத்தல் - தலைவியை விரும்பும் தலைவன் அவளை மணந்துகொள்ள அவனுடைய உறவினர் மறுத்துவிடுதல்.

வேற்று வரைவு நேர்தல் - தலைவியோடு களவில் சந்தித்த தலைவனை விடுத்து, வேறு ஒருவரைத் தலைவிக்கு மணம்முடிக்கும் சூழல் ஏற்படல்.

காப்புக் கைம்மிகுதல் - பகலிலோ இரவிலோ தலைவி தலைவனைக் காணமுடியாதபடி வீட்டுக்காவல் மிகுந்திருத்தல்.

களவு வெளிப்பட்ட பின்னர் அதைப் பெற்றோர் ஏற்குமிடத்து, ஊரறியத் திருமணம் நடைபெறல் வேண்டும் என்பதை இலக்கணிகள் வலியுறுத்துகின்றனர். இதனை 'மறைவெளிப்படுதலும் தமரிற் பெறுதலும்..' என்ற நூற்பா கூறுகின்றது.

பலரறியத் திருமணம் நடைபெறுவதற்கான காரணத்தையும் தொல்காப்பியர் கூறுகின்றார். களவொழுக்கத்தில் அல்லது ஊரறியாது செய்து கொண்ட திருமணங்களில் பொய்யும் குற்றங்களும் மலிந்திருந்தன. ஊரறியாத் திருமணங்களில் குறிப்பாகப் பெண்களே பெருமளவில் ஆண்களால் ஏமாற்றப்பட்டிருக்கக் கூடும். இதை சமூக ஒழுக்கக்கேடாகக் கருதிய இலக்கணிகள் திருமணம் ஊரறிய நடைபெற வேண்டும் என்பதை அகமரபாகவே வகுத்தனர்.

*'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்*
*ஐயர் யாத்தனர் கரணம் என்ப.'*

கரணம் என்றால் திருமணம் என்றே பொருள். 'கரணம் பிழைக்கின் மரணம்' என்ற முதுமொழியின் தோற்றம் திருமண உறவை அடிப்படையாகக் கொண்டதே எனச் சாமி சிதம்பரனார் குறிப்பிடுகின்றார்.

திருமணம் என்பது முறைப்படுத்தப்பட்ட மங்கலமான சமூக நிகழ்வாகவே கொண்டாடப்பட வேண்டும் என்பது பின்னாளில் வழக்காயிற்று.

*'கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியை*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'*

பெற்றுக்கொள்வதற்குரிய சிறப்புகளைக் கொண்ட மணமகளுக்குக் கொடுப்பதற்குரிய சிறப்புகளைக் கொண்ட மணமகளின் பெற்றோர் மகளைக் கொடுப்பதாகும்.

எனினும் வெளிப்படும் களவொழுக்கங்கள் எல்லாவற்றையும் தலைவியின் பெற்றோர் ஏற்பதில்லை. பெற்றோரால் களவொழுக்கம் மறுக்கப்படுகின்றபோது, காதலர்கள் எல்லோரும் பிரிந்துவிடுவதில்லை. கொடுப்போர் இல்லாமலும் திருமணம் நடக்கலாம் என்கின்றார் தொல்காப்பியர். காதல் மறுக்கப்படுகின்ற சூழ்நிலைகளில் காதலர் இருவரும் 'உடன்போக்கு' என்ற வகையில் வீடுகளை விட்டுச் சென்றுவிடுவர்.

'கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே' என்கின்றார் தொல்காப்பியர். கற்புவாழ்வின் அடித்தளமாக அமைவது தான் தொன்தமிழர் வகுத்துக் கொண்ட இத்திருமண மரபு. இதுவே குடும்பக் கட்டமைப்பின் அடிப்படைக் கொள்கையாகும்.

### தொல்காப்பியர் காட்டும் ஆண் பெண் உரிமைகள்:

ஆண் - பெண் இருவருக்குமான இயல்புகளைத் தொல்காப்பியம் வரையறுத்துக் கூறுகிறது. ஆடவர் இயல்பைக் கூறும் போது,

'பெருமையும் உரனும் ஆடுஉ மேன...' என்கின்றார். அக்காலத்தே இயல்பாக இடம்பெற்ற பொருளியல் சார்ந்த போராட்டங்களும் பகை சார்ந்த போர்களும் ஆடவரை இயல்பாகவே வலிமையுள்ளவர்கள் ஆக்கின. சிறுவர்கள் கூட வீரம் கொண்டிருக்க வேண்டும் எனக் கருதப்பட்ட காலம் அது. நூல்கள் முன்மொழிந்த நற்பண்புகள் ஆடவரைப் பெருமைக்குரியவராக்கின. இவையிரண்டுமே ஆடவருக்கான பேரியல்புகளாகத் திகழ்ந்தன. இங்கே செல்வச்சிறப்பு பேசப்படவில்லை என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

*'அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த*
*நிச்சமும் பெண்பாற் குரிய என்ப...'*

என்ற நூற்பா, பெண்களுக்குரிய பண்புகளாக அச்சம், நாணம், மடம் என்ற மூன்றையும் குறிப்பிடுகின்றது. பிற்காலத்தைச் சேர்ந்தோர் இணைத்துக்கொண்ட பயிர்ப்பு என்பது தொல்காப்பியர் காலத்தில் இடம்பெறவில்லை. அச்சம் என்ற பயத்தோடு கூடிய மருட்சியும் நாணம் என்ற வெட்கமும் மடம் என்ற அடக்க உணர்வும் பெண்களுக்குரிய இயல்புகளாகக்காட்டும் தொல்காப்பியம், பெண்களின் தன்மைகளை மேலும் பட்டியலிடுகின்றது.

*'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்*
*மெல்லியற் பொறையும் கிறையும் வல்லிதின்*
*விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்*
*பிறவும் என்ன கிழவோள் மாண்புகள்'*

கற்பு எனப்படுவது கணவன் முதலியோர் வழிநின்று கற்றுக் கொண்ட நடத்தைகளிலிருந்து விலகாதிருத்தல். காமம் என்பது அன்பு. நற்பால் ஒழுக்கம் என்பது தன் குலத்துக்கு ஏற்றவாறு ஒழுக்கம் பேணுவது. மென்மையாய்க் கெஞ்சி நிற்போரைப் பொறுத்துச் செல்வது பொறை.

கிறை என்பது மறைக்கக்கூடிய செயல்களைப் பிறர் அறியாதவாறு மறைக்கக்கூடிய நெஞ்சுரம். வல்லிதின் விருந்து புறந்தருதல் என்பது, வறுமை செல்வம் இரண்டையும் கருத்திற் கொள்ளாது இயன்றவரை விருந்தினரைப் பேணி அவர் மனம்மகிழப் போற்றுதல். சுற்றம் ஓம்பல் என்பது, உற்றாரையும் சுற்றத்தாரையும் பேணி வாழ்தல். இவற்றோடு பிறவும் உண்டெனக் குறிப்பிடுகின்றது தொல்காப்பியம்.

மகளிருக்கு உயிரைவிட நாணமே பெரிது என்கின்றனர் இலக்கணிகள். இவை மட்டுமல்ல,

*'செறிவும் நிறையுஞ் செம்மையுஞ் செப்பும்*
*அறிவும் அருமையும் பெண்பா லான..'*

என்றும் பெண்களுக்கான இயல்பை நீட்டிச் செல்கின்றனர்.

செறிவு என்கின்ற அடக்கமான தன்மையையும் நிறைவு என்கின்ற அமைதியான நிலையினையும் செம்மை எனும் மனங்கோடாமை என்ற பண்மையும் செப்புதல் என்னும் தேவையானவிடத்திலே பேசும்திறனையும் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவாற்றலையும் மற்றவரின் உள்ளக் கருத்தறியக் கூடியவளாகவும் இருத்தல் வேண்டும்.

பெண்கள் கடல் கடந்து செல்லும் வழக்கமும் போர்க்களத்துக்குச் செல்லும் வழக்கம் இல்லை என்கிறது தொல்காப்பியம்.

கணவன் துன்பத்தால் கலக்கமுறும்போது தாய்போல் அவனைப்பேணி அமைதியுறச் செய்வதுவும் இல்லாளின் கடமை என்றும் கணவனுக்கு முன்னால் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளும் உரிமையும் மனைவிக்கு இல்லை என்றும் உரைக்கின்றது தொல்காப்பியம்.

ஆண் அறிவோடு சிந்தித்துப் பேசுவற்குரியவன் என்பதை, 'கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்' என்ற நூற்பாவால் உணர்த்துகின்றார். இதனால் இத்தன்மை பெண்களுக்குரியதில்லை என உணரலாம்.

அக்காலத்தே பரத்தமைத் தொடர்பு சமூக ஏற்படையதாகவே காணப்படுகின்றது. ஆண் எனப்படுகின்றவன் இல்லக்கிழத்தியாகிய மனைவியைக் கொண்டிருப்பான். சிலபொழுதுகளில் அவன் காமக்கிழத்தி எனக் கூறத்தக்க பரத்தமை ஒழுக்கத்தையும் கொண்டிருப்பான் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

*'காமக்கிழத்தி மனையோள் என்றிவர்*
*ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்'*

என்ற நூற்பா இக்கூற்றை மெய்ப்பிக்கின்றது.

ஆண், பெண் பற்றிய மேற்காட்டப்பட்ட தொல்காப்பியக் கருத்துகளால் தொல்காப்பியர்காலத்துச் சமூக அமைப்பில் ஆண்களின் ஆளுமை ஓங்கி நிற்கவும் பெண்கள் வீட்டுக்கடமைகளோடு மட்டுப்படுத்தப்பட்டவர்களாக, ஆண்களுக்கு நிகரான உரிமைகளற்றவர்களாக இருந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.



vivekanandan.p@thaiveedu.com





# கம்பனின் கருவூலம் திறந்து...

- மாவிலிமைந்தன் சி. சண்முகராஜா

சென்ற இதழில் பாலகாண்டத்தின் 15-வது படலமாகிய பூக்கொய் படலத்திலும் 16-வது படலமாகிய புனல் விளையாட்டுப் படலத்திலும் தயரதன் தனது சேனையோடு சோணையாற்றைச் சேர்ந்து அதன் கரையிலுள்ள சோலையில் தங்கியிருக்க, உடன் சென்ற ஆடவரும் மகளிரும் மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழிப்பதையும் அங்கே பூக்கொய்யும் மகளிர் பற்றிய வருணனைகளையும், ஆடவருடன் மகளிர் ஊடல் கொள்கின்ற காட்சிகளையும் கம்பர் வடித்துவைத்த நயம் மிகுந்த செய்யுள்கள் சிலவற்றில் படித்து இன்புற்றோம். இந்தக் கட்டுரையில் 17-வது படலமாகிய உண்டாட்டுப் படலத்தில் தயரதனுடன் சென்ற சேனைகள் கள்ளுண்டு மகிழ்ந்து களிப்பெய்துகின்ற காட்சிகள் எடுத்துவரப்படுகின்றன.

அந்தி சாய்ந்து முன்னிரவு தொடங்குகின்ற நேரம். நிலவின் ஒளிவெள்ளம் பரவுகின்றது. அதனை நான்கு செய்யுள்களில் கம்பர் வர்ணிக்கின்றர். அவற்றில் ஒன்றைப் பார்க்கலாம்.

*ஆறெலாம் கங்கையே ஆய, வாழிதாம்*
*கூறுபாற்கடலையேஒத்த, குன்றெலாம்*
*ஈறிலான் கயிலையே இயைந்த, என்னினி*
*வேறுயான் புகல்வதுநிலவின் வீக்கமே.*

- கம்ப. பால. 1048

நிலவின் ஒளிவெள்ளம் பரவியதால் ஆறுகளெல்லாம் கங்கை ஆற்றைப்போலத் தோன்றுகின்றன. கடலெல்லாம் சிறப்பித்துக் கூறப்படுகின்ற பாற்கடலை ஒத்துக் காணப்படுகின்றன. மலைகளெல்லாம் ஆதி அந்தமற்ற இறைவனாகிய சிவபெருமானின் திருக்கயிலைமலையை ஒத்ததாகக் காட்சிதருகின்றன. நிலவொளியின் மிகுதியைக் குறித்து வேறு எதனை நான் கூற முடியும் எனக் கேட்கிறார் கம்பர்.

நிலவின் வெண்மை ஒளி பரந்ததால் வெண்ணிற நுரை புரண்டோடும் கங்கை நதியைப் போலமற்ற ஆறுகளெல்லாம் தோற்றமளித்தன. இரவு நேரத்தில் கருநிறமாகத் தோன்றும் கடல்களெல்லாம் நிலவொளியின் வெண்மையால் திருப்பாற் கடலின் நிறமாகத் தோன்றின. மலைகள் யாவும் வெள்ளியங்கிரி எனப்படும் திருக்கயிலாய மலைபோல வெண்ணிறமாகப் பொலிந்தன. இவ்வாறு சிவபெருமான் தலையில் சூடியுள்ள நிலவையும், கங்கையையும், திருமால் பள்ளிகொள்ளும் திருப்பாற் கடலையும் ஒன்றாக வைத்து சமய ஒருமைப்பாட்டைக் கம்பர் மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார் என்றும் கருதலாம். ஒன்றின் குணத்தை இன்னொன்றில் ஏற்றிச் சொல்லும் பிறிதின் குணம் பெறலணி என்னும் செய்யுள் அணிநயமும் இச்செய்யுளில் காணப்படுகிறது.

ஆடவருடன் மகளிரும் சேர்ந்து மதுவைப் பருகும் வழக்கம் அக்காலத்தில் இருந்திருக்கின்றது என்பதைச் சங்க இலக்கியங்கள் கூடச் சில இடங்களில் சுட்டுகின்றன. ஆடவரும் மகளிரும் கள்ளுண்பதையும் அதனால் அவர்களுக்கு ஏற்படுகின்ற மயக்கத்தினால் நிகழும் சம்பவங்களையும் பலநயம் மிக்க செய்யுள்களில் உண்டாட்டுப் படலத்தில் கம்பர் பாடி வைத்துள்ளார்.

*உக்கபால் புரைநிலாவுண்டவள்ளமும்*
*கைக்கொளின் ஒளிபடச் சிவந்துகாட்டத்தன்*
*மைக்கணும் சிவந்ததோர் மடந்தைவாய்வழிப்*
*புக்கதேன் அமிர்தமாய்ப் பொலிந்தபோன்றவே*

- கம்ப. பால. 1053

சிந்தியபாலையொத்த நிலவின் ஒளிவெள்ளத்தைப் போன்று மதுவைக் கொண்ட கிண்ணம் இருக்கிறது. அதிலுள்ள மதுவைப்பருகுவதற்காகக் ஒருத்தி அதைக் கையிலெடுத்தபோது அவளுடைய அழகிய கையின் செந்நிறம் அதில் பட்டதும் அந்தமதுக் கிண்ணமும், உள்ளே இருந்தகள்ளும் தேனைப் போன்று செந்நிறமாக மாறின. அந்த மது அவளது வாயின் வழிசென்ற போது செந்நிறம் நீங்கி மீண்டும் இதன் இயல்பான வெண்ணிறத்தை அடைந்து அமிர்தம் போல் தோன்றியது. அப்போது அந்தக் கிண்ணத்திலிருந்த செந்நிறம் அவளுடைய மைதீட்டப்பெற்ற கருவிழிகளுள் பாய அவள் கண்கள் சிவந்தன என்பது செய்யுளின் பொருள். கைகளின் செந்நிறம் மதுக்கிண்ணத்துள் பாய, மதுக்கிண்ணத்திலிருந்த செந்நிறம் கண்களுள் பாய, வாய்வழி சென்ற மது வெண்ணிறமாக மாற அங்கே வர்ணங்களின் ஜாலவித்தை நிகழ்ந்து கொண்டிருந்தது என வருணிக்கின்றார் கம்பர். அவளும் அந்த மதுவைத் தேனாமிர்தமாகச் சுவைத்தாள் என்பதையும்,

மது உண்டவர்களின் கண்கள் இயல்பாகவே சிவக்கும் என்பதையும் இச்செய்யுளில் அவர் குறிப்பாக உணர்த்துகிறார்.

கள்ளைப் பருகி அதன் போதை மயக்கத்தில் மகளிர் தடுமாற்றமடைந்து செய்கின்ற பலசெயல்களைக் கம்பர் பலசெய்யுள்களில் காட்சிப்படுத்துவார். அவற்றில் ஒன்று இவ்வாறு வருகிறது.

*களித்தகண் மதர்ப்பஆங்கோர் கனங்குழைகள்ளினுள்ளால்*
*வெளிப்படுகின்றகாட்சிவெண்மதிநிழலைநோக்கி*
*அளித்தனள் அபயம் வானத்துஅரவினைஅஞ்சிநீவந்து*
*ஒளித்தனைஅஞ்சலென்றாங்கினியனஉணர்த்துகின்றாள்.*
- கம்ப. பால. 997

பொன்னாலான குழையென்னும் காதணியை அணிந்த ஒரு பெண் மதுக்களிப்பினால் மயங்கிய கண்களினாலே மதுநிறைந்திருக்கும் குடத்தினுள் காணப்படும் வெண்ணிறமுள்ள

**கைகளின் செந்நிறம்**

**மதுக்கிண்ணத்துள் பாய,**

**மதுக்கிண்ணத்திலிருந்த செந்நிறம்**

**கண்களுள் பாய,**

**வாய்வழிசென்ற மது**

**வெண்ணிறமாக மாற அங்கே**

**வர்ணங்களின் ஜாலவித்தை**

**நிகழ்ந்து கொண்டிருந்தது என**

**வருணிக்கின்றார் கம்பர்.**

திங்களின் நிழலைப் பார்த்து, ‘திங்களே நீவானத்திலுள்ள இராகு என்னும் பாம்புக்கு அஞ்சி இந்த மதுக்குடத்துள் வந்து ஒளிந்திருக்கின்றாய். அஞ்சாதே! உனக்கு நான் அடைக்கலம் அளிக்கின்றேன்’ என உணர்த்துகின்றாள் என்கிறார் கம்பர். கள்ளுண்ட மயக்கத்தினால் நிலாவின் நிழல் உண்மையான நிலாவைப்போல் அவளுக்குத் தெரிகிறது. உணர்த்துகின்றாள் எனச் செய்யுளின் ஈற்றில் கம்பர் முடித்திருப்பதில் அவர் ஒரு குறிப்பை அதில் மறைவாக வைத்துள்ளது தெரிகிறது. ‘நிலாவேநான் கணவரைப் பிரிந்த காலத்திலும், ஊடல் கொண்டிருந்த காலத்திலும் நெருப்புக் கதிர்களை வீசி என்னை வருத்தினாய் அல்லவா? அவ்வாறு வருத்திய நீ அரவத்துக்கு அஞ்சி எனது மதுச்சாடிக்குள் வந்து பதுங்கும் காலமும் இப்போது வந்துள்ளது. என்றாலும் நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். இனியாவது முன்னர் நீ செய்தது போல் செய்யாதே’ என்று அதற்கு உணர்த்துகிறாள் எனவும் சில உரையாசிரியர்கள் நயம் காணுகிறார்கள்.

இவ்வாறு ஆடவரும் மகளிரும் கள்ளுண்டுகளித்துக் கொண்டிருந்தபோது ஒருத்தி கள்ளுண்ணும் எண்ணமே இல்லாதிருந்ததன் காரணத்தைக் கம்பர் இவ்வாறு கூறுகிறார்.

*புள்ளுறைகமலவாவிப் பொருகயல் வெருவியோட*
*வள்ளுறைகழிந்தவாள்போல் வசியுறவயங்குகண்ணாள்*
*கள்ளுறைமலர்மென் கூந்தற் களியிளமஞ்ஞையன்னாள்*
*உள்ளுறைஅன்பனுண்ணான் எனநறவுஉண்ணல் எண்ணாள்.*
- கம்ப. பால. 1015

நீர்ப் பறவைகள் வாழ்கின்ற தாமரைத் தடாகத்தில் ஒன்றோடொன்று மோதுகின்ற கயல் மீன்கள் நிலைகெட்டு ஓடும்படி தோலால் செய்த உறையிலிருந்து உருவியெடுத்த வாளைப் போலக் கூர்மையுற்று விளங்குகின்ற கண்களையுடையவளும், தேன் தங்கிய மலரையணிந்த கூந்தலையுடைய இளமயிலைப் போன்றவளுமாகிய ஒருத்தி தனது மனக்குள் எப்போதும் உறைகின்றவனாகிய தன் கணவன் கள்ளுண்ணான் என்ற காரணத்தினால் தானும் கள்ளுண்ண எண்ணாதவளாயினாள் என்கிறார் கம்பர்.

அறிவுமயங்காத ஒருத்தி கள்ளுண்பதை விரும்பாத தன் கணவன் தனது மனத்துளே இருப்பதனால், அவன் இருக்கின்ற உள்ளத்தில் கள்ளுண்ணும் எண்ணத்திற்கே இடங்கொடேன் எனக் கணவனின் ஒழுக்கத்திற்கேற்ப மதுவைப் பருகாதவளாயினாள். மது அருந்தும் பழக்கமில்லாத தன் கணவன் தன் உள்ளத்தில் இருக்கின்றான். தான் மது அருந்தினால் அந்த மது அவன்மீதுபட்டு அவனுக்குக் களங்கத்தை உண்டாக்கிவிடும் என அஞ்சினாள் எனவும் பொருள் நயம் கொள்ளலாம்.

இவ்வாறாக ஆடவரும் மகளிரும் கள்ளுண்ட மயக்கத்தினால் கொண்ட ஊடலும், கூடலும், காமக் கலவியும் பற்றிக் கம்பர் பலவாறு நயம்படப் பாடுகின்றார்.

*பொன்னரும் கலனும் தூசும் புறத்துளதுறத்தல் வம்போ*
*நன்னுதல் ஒருத்திதன்பால் அகத்துளநாணும் நீத்தாள்*
*உன்னருந் துறவுபூண்டஉரனுடைஒருவனேபோல்*
*தன்னையும் துறக்குந் தன்மைகாமத்தேதங்கிற் றன்றே*
- கம்ப. பால. 1102

கலவியின் போது உடலின் மேலே உள்ளனவாகிய பொன்னாலாகிய அழகிய மேகலையையும், அதனோடு சேர்ந்த அணிகலன்களையும், ஆடைகளையும் ஒருத்திதுறந்தாள் என்பது புதுமையல்ல. அழகிய நெற்றியையுடைய அந்தப் பெண் தன் உள்ளத்தேயுள்ள நாணத்தையும் துறந்துவிட்டாள். நினைப்பதற்கே அருமையான துறவினை மேற்கொண்ட மனவுறுதி கொண்ட துறவியைப் போலத்தன்னையே துறக்கக்கூ

டிய நிலைமை காமக் கலவியின் போது ஏற்படுகின்றதன்றோ எனத் தொடர்நிலைச் செய்யுள்களால் ஆடவர் மகளிரிடையே நிகழும் கலவியின்பத்தைக் கம்பர் பலவாறு வருணிக்கின் றார்.

கலவியின் போது ஒரு பெண் ஆடையையும் மேகலையை யும் துறந்து பெண்களின் குணங்களுள் மிகச்சிறந்த நாணத் தையே நீத்தவளாகிக் கிடந்தாள். நாணத்தை நீத்தவளுக்கு ஆடைகளைத் துறப்பது புதுமையல்ல. தன்னையே துறக்குந் தன்மையுள்ள துறவிகளின் மனவுறுதிகாமக் கலவியின் போது ஒரு பெண்ணுக்கு வருவது இயல்பானதே என்கிறார் கம்பர்.

***கொள்ளைப்போர் வாட்கண்ணாளங் கொருத்தியோர் குமரனன்னான்***
***வள்ளற்றார் அகலந்தன்னைமலர்க்கையாற் புதைப்பநோக்கி***
***உள்ளத்தாருயிரன்னாள்மேல் உதைபடுமென்றுநீர்நும்***
***கள்ளத்தாற் புதைத்தீரென்னாமுன்னையிற் கனன்றுமிக்காள்.***

- கம்ப. பால. 1103

உயிரைக் கொள்ளை கொள்ளுதலையுடைய போர்வாளைப் போன்ற கண்களையுடைய ஒருத்தி ஊடல் கொண்டிருந்தாள். அவளது கணவன் அவளை அணைக்க வந்தபோது அவ னது மார்பிலே உதைக்க எத்தணித்தாள். முருகனைப் போன்ற அழகுடைய அவன் தன் வலியமார்பிலுள்ள மாலை யில் அனிச்சப்பூவைப் போன்ற அவளது மென்மையான தாள்கள் பட்டால் அது அவள் தாள்களை முள்ளாகி உறுத் திவிடுமே எனநினைத்துத் தனது மார்பைத் தன் கைகளால் மூடுகிறான். அதனை அவள் கண்டு ‘உமதுமனத்துக்குள்ளே உயிர்போல் பொருந்தியுள்ள உமது ஆசை நாயகியின் மேல் உதைபடும் என்று அஞ்சி உமது கள்ளமான குணத்தி னால் கையைக் கொண்டு மார்பை மூடுகின்றீரா’ எனக்கேட்டு முன்னைவிட இன்னும் மிகுந்த ஊடற் சினத்தினால் சீறினாள் என்று ஒரு காட்சியைக் கம்பர் தருகிறார். திருக்குறளில் புல விநுணுக்கம் என்னும் அதிகாரத்தில் வரும் ‘கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று’ என் பது போன்ற குறட்பாக்களுடன் இச்செய்யுளை ஒப்பு நோக்க லாம்.

இவ்வாறாக, மதுவுண்டுகளித்து மகிழ்ந்துபுலவியும் கலவியும் கண்டுமகிழும் ஆடவரையும் மகளிரையும் வருணிக்கும் 67 செய்யுள்கள் இப்படலத்தில் அடங்கியுள்ளன. அவர்களது உள்ளக்களிப்போடு அந்த இரவுகழிவதைப் பின்வருமாறு கம்பர் வருணிப்பார்.

***அருங்களிமால்களிறுஅனையவீரர்க்கும்***
***கருங்குழல் மகளிர்க்கும் கலவிப் பூசலால்***
***நெருங்கியவனமுலைசுமக்கநேர்கலா***
***மருங்கில்போல் தேய்ந்ததம் மாலைக் கங்குலே.***

- கம்ப. பால. 1111

தணித்தற்கு அரிய மதமயக்கம் கொண்ட ஆண்யானைக ளைப் போன்ற வீரர்கட்கும் கரிய கூந்தலையுடைய மாதர்கட் கும் கலவிப் போரினை நிகழ்த்துவதால் அந்தமாலை இரவா னது ஒன்றோடொன்று நெருங்கியுள்ள அழகிய கொங்கைக ளைச் சுமப்பதற்கு வல்லமையற்ற மாதர்களின் இடையைப் போலத் தேய்ந்து குறைந்து இந்த இரவுப் பொழுது கழிந்தது என்ற கம்பரின் அழகான வருணனையோடு உண்டாட்டுப் படலம் முற்றுப் பெறுகிறது.

இவ்வாறு பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், தேம்பி ழிமதுக்களி, புலவியில் புலத்தல், கலவியில் கலத்தல் ஆகிய பெருங்காப்பியத்துக்குரிய இலக்கணக் கூறுகளுக்கு அமையக் கம்பர் தனது காப்பியத்தை நகரத்திச் செல்வத னைக் காணமுடிகிறது.

இப்படலங்களிலுள்ள அத்துணை செய்யுள்களும் அவற்றை நுகர்வோரின் உணர்ச்சிகளைத் தூண்டி உள்ளக் கிளர்ச் சியை ஏற்படுத்தவல்லன. தொடர்ந்துவரும் படலங்களிலும் கம்பனின் கவிநயம் மிகுந்த செய்யுள்கள் நிறைந்து காணப்ப டுகின்றன. அவற்றை அடுத்துவரும் இதழ்களில் எடுத்து வரு கிறேன். சுவைத்து மகிழ்வோம்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com



# தொன்மையைத் தேடி ஆதித்தமிழர், திணைவழிக் குடிகள் - இலக்கியம், தொல்லியல், பிற சான்றுகள்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தொல்காப்பியம் பொருளதிகாரம், பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட 'கவிதை மரபாகும்' தொல்காப் பியப் பொருளதிகார நூற்பாக்களையே முன்னிறுத்தி அந் 'நூற் பாக்களில் பயின்று வரும்' கவிதை மரபுகளிலிருந்து, அக்காலச் சமூகம், அரச உருவாக்கத்தின் அடிப்படை, வளர்ச்சி, அரச விரிவாக்கம் முதலாய தகவல்களைப் பிரித் தெடுத்து 'ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள், திணை வழி-யாகவே அரசு தென்னாட்டில் உருவாகியிருக்கிறது, விரிவாகி யிருக்கிறது' என்பதை நிறுவுவது இவ் ஆய்வின் கருது-கோளாகும்.

**கடந்தவை...**

கடந்த 25 இயல்களிலும் தமிழ் நாட்டு வரலாற்றில் சிறு குழுக்கள், குழுத் தலைமைகளின் ஆதிக்கமும் பரம்பலும் பற்றிய விரிவான ஆய்வுகள்,

- வரலாற்றுக்கு முற்பட்ட காலம்,
- வரலாற்றுக் காலம்

என்னும் அடிப்படையில் செய்யப்பட்டன.

- தொல்காப்பியர் காலத்தில், தமிழ்மொழி நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில் இருந்திருக்கிறது.
- திணை மக்கள் வாழ்வியல் சார்ந்து இலக்கணக் கோட்பா டுகள் வகுக்கப்பட்டன.

**தொடர்வது...**

இந்த ஆய்வுக்குப் பயன் கொள்ளப்பட்ட சான்றுகளுள் முதன்மைச் சான்றுகளாக நான் கருதுபவை பட்டியலிட்டுத் தரப்படுகிறது. இங்கு நான் எடுத்துவரும் சான்றுகள் மிகச் சிலவே, விவரமும் குறைவே. விளக்கம் வேண்டின் முன்னைய இயல்களைப் பார்க்கவும்.

- தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல்
- தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியல்
- புறநானூறு, பாடல் - 201
- பதிற்றுப்பத்து
- பொருநராற்றுப்படை
- அசோகச் சக்கரவர்த்தியின் 'கிர்னார்' கல்வெட்டு,
- தகடூர் யாத்திரை

'வார்த்தைகள்' வாளை விடக் கூரியவை, மிகவும் பலம் வாய்ந்தவை. வாள் சாதிக்க முடியாதவற்றை வார்த்தைகள் சாதிக்கும் வல்லமை பெற்றவை என்னும் இந்த நிலைப் பாட்டை, பண்டைய குழுத் தலைவர்கள் முறையாகப் பயன் படுத்தியிருக்கிறார்கள் என்பதே இந்த 'ஆய்வுப் பகுதி' கூறும் செய்தியாகும்.

'புலவர்களின் வார்த்தைகள் மூலம் பண்டைய மக்கள் வாழ்வி யலை வடிவமைத்த கதை தான் சங்கப் பாடல்கள்' என்றால் மிகையாகாது.

**தொல்காப்பியம் பொருளதிகாரம்:**

தொல்காப்பியம், தமிழில் இன்று எமக்குக் கிடைக்கும் நூல்க ளுள் மிகப் பழமையானது. காலம் பொ.ஆ.மு. 711 என அறியப்படுகிறது. அகழாய்வுச் சான்றுகளும் இக் கருத்தை வலியுறுத்துவனவாகவே காணப்படுகின்றன.

தொல்காப்பியம், தொல்காப்பியரது வாழ்நாள் சாதனை. இத் தகைய ஒரு இலக்கண நூலை ஒருவர் ஓராண்டு, ஈராண்டு ளில் எழுதியிருக்க முடியாது. அத்துடன், அவர், கணினி யுகத்திலும் வாழவில்லை. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் எழுதத் தொடங்கிய காலத்திற்கும் தொல்காப்பியம் பொருள திகாரம் முடிவுற்ற காலத்திற்கும் இடையே நீண்ட இடை வெளி இருந்திருக்கவேண்டும் என்பதைக் குறித்துக் கொள் வோம்.

'மானிடவியல் என்னும் அறிவுத்துறை மனித இனம், அதன் பண்பாடு, சமூகங்களின் அமைப்புக்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உறவுமுறைகள், மொழிக்கூறுபாடுகள் ஆகி யவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு முழு மனி தனை அடையாளம் காண முயல்கிறது. காலத்தாலும் அதன் எல்லைகள் மிக விரிந்தவை'

- மானிடவியல் பற்றி பேரா. ப. மருதநாயகம்.

இங்கு, மானிடவியல் துறையின் நோக்கம் மற்றும் அதன் பரப்பு விளக்கப்படுகிறது. இந்த ஆய்வு பற்றிப் புரிந்து கொள்வதற்கு மானிடவியல் பற்றிய புரிதல் அவசியம்.

ஆதித் தமிழர் தொடர்பான மானிடவியல் தகவல்களைத் தாங்கி நிற்பது தொல்காப்பியம் பொருளதிகாரம்.

*'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
*பாடல் சான்ற புலனெறி வழக்கு'*

- தொல். அகத். 56

தொல்காப்பியர், உலகியல் வழக்கை அடிப்படையாகக் கொண்டே இலக்கணம் வகுத்திருக்கிறார். இதுபற்றி முதலாம் உரையாசிரியரான இளம்பூரணர், நாடக வழக்காவது சுவை பட வருவன எல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக்




கூறல் என்றும், உலகியல் வழக்காவது உலகத்தார் ஒழுக லாற்றோடு ஒத்து வருவது என்றும் உரைகண்டார். 'வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே' தொல்காப்பியர் என்னும் சான்றோரால் வகுக்கப்பட்ட தொல்காப்பியம் என்னும் 'மக் கள் வாழ்வியலைக் கூறும் இவ்விலக்கியம், 'நாடக வழக்கும் உலகியல் வழக்கும்' இணைய எழுதப்பட்டிருக்கிறது.

## தொல்காப்பியம் பொருளதிகாரம் - அகத்திணையியல்:

ஆதி மனிதன், அடிப்படைத் தேவைகளுக்காக நாடோடிகளா கத் திரிந்த காலத்தை அடுத்து தற்காப்புக்காகத் தற்காலிக இடங்களில் தங்கியிருந்திருக்கிறான். தேவைகள் விரிவாகும் போது தேவைகளுக்கேற்ப படிப்படியாக வளர்ந்து, இனக் குழுக்களாகப் பிரிந்திருக்கவேண்டும். மனிதன், ஒரு சமுதாய நிறுவனமாக, நில உடமைச் சமுதாயமாக விளங்கி அதன் நீட்சியாகத் தனக்கென நிலையான ஒரு இடத்தைத் தேர்ந்து வாழத் தலைப்பட்டிருக்கலாம்.

எனவே, தனிமனித நிலையிலிருந்தே சமூக அமைப்புகள் உருவாவதற்குரிய குழுக்கள் வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும். இவ்வாறான பல குழுக்கள் இணைந்து வாழத் தொடங்கிய காலத்தில் தான் அவர்களிடையே வாழ்க்கை முறை, கலை, பண்பாடு முதலிய சிறப்புப் பண்புகள் சிறுகச் சிறுகத் தோன்றி வளரத் தொடங்கியிருக்கவேண்டும்.

இனக் குழுச் சமூக வாழ்க்கைமுறை நில அடிப்படையில் தான் தோன்றியிருக்கிறது.

திணை நில மக்கள் பற்றியும், அவர்கள் வாழ்ந்த நிலம் பற் றியும், காலங்கள் பற்றியும், நிலம், காலச் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப அவர்கள் உழைப்பு அமைந்தமை பற்றி யும், அவர்கள் உழைப்பின் அடிப்படையில் தம் வாழ்க் கையை அமைத்துக் கொண்டமை பற்றியும் தொல்காப்பியம் மிகத் தெளிவாக விளக்குகிறது.

வரலாற்றில், பல வளர்ச்சிப்படிகளைக் கடந்து வந்த தமிழ் மக்கள் வரலாற்றின் தொடக்க காலம், அதன் வளர்ச்சி பற் றிய தகவல்களைத் தொல்காப்பியத்திலிருந்து பிரித்து எடுத்து நிறுவுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஒன்பது இயல்களைக் கொண்ட தொல்காப்பியம் பொருளதி காரத்தின் முதலாம் இயல் அகத்திணை இயல், பாடல் பாடும் புலவனுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் பகுதி. அதாவது, பாடலுக்குரிய பின்னணி இவ்வியலில் தான் வகுக் கப்படுகிறது. அவை வருமாறு -

- முதல் - 'முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே'. (அகத்தி ணையியல், நூ. 4)

  நிலம்- (வாழும் இடம்) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய் தல், பாலை முதலாய நிலங்கள்.

  பொழுது- காலம் காலை, மாலை முதலாய சிறுபொழுது களும், கார், கூதிர் முதலாய பெரும் பொழுதுகளும்)
- கருப் பொருட்கள் - விலங்குகள், பறவைகள், மரங்கள், அவ்வந்நிலத்திற்குரிய உணவு, பண், பறை, யாழ் இவை போன்றவை பிறவும்
- உரிப் பொருள் - அவ்வந்நிலங்களுக்குரிய புணர்தல், ஊடல், பிரிதல், இருத்தல், இரங்கல் ஆகிய ஒழுக்கங்க ளும்
- வழுக்கள், வழுக் காத்தல் முதலியன.

புலவன் தவறு செய்யாத வகையில் எல்லைகள் சிறப்பாக வரையறுக்கப்பட்டுள்ளன.

## தொல்காப்பியர்கால வாழ்வியலுள் அரசியல்:

மேலே குறிப்பிட்ட மக்கள் வாழ்வியலை அடியாகக் கொண்ட களம் பற்றிய விரிவாக்கம் வருமாறு...

**முதல் -** தொல்காப்பியர் 'முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு' என்கிறார். மேலே குறிப்பிட்ட முதல், கரு, உரி ஆகியவற்றில் முதலில் இருந்து தான் 'தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,;.' (அகத்திணை யியல் நூ. 20) முதலிய கருப் பொருட்கள் அனைத்தும் தோன்றின எனவும் உரிப் பொருட்கள் அனைத்தும் அங்கு தான் நடைபெற்றன என்றும் தொல்காப்பியம் கூறுகிறது. எனவே, அனைத்துக்கும் நிலம் பொழுது என்னும் முதற்

பொருளே காரணம்.

தமிழ்ச் சிந்தனைமரபின் இச்சிந்தனையை வி. கிரபின் அவர்கள், 'புராதன இந்தியத் தத்துவ ஞானத்தின் ஒரு மூலச்சிறப்புள்ள சாதனையாகும்' என்கிறார். (கணியன் பாலன், மூலச்சிறப்புள்ள தமிழ்ச் சிந்தனை மரபு 12, keetru.com).

**நிலம் -** அகத்திணையியலில் இந்த ஆய்வு தொடர்பான தகவல்களைப் பார்க்கலாம். முதற் பொருளில் நிலமும் காலமும் இரு கூறுகள். தொல்காப்பியர் காட்டும் சமூக அமைப்பு நில அடிப்படையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. 'திணை' என்னும் பதம் தொல்காப்பியத்தில் சில இடங்களில் நிலத்தையும் வேறு சில இடங்களில் ஒழுக்கத்தையும் குறிப்பதாக உள்ளது. திணையை (ஒழுக்கம்) ஏழாக வகுத்த தொல்காப்பியர், அந்த ஏழு திணைகளுள் நடுவனதாகிய ஐந்திணையில் பாலை தவிர்ந்த ஏனைய நான்கு திணைகளுக்கும் நிலங்கள் உண்டு என்று கூறி, மக்கள் வாழும் நிலங்களுக்கும் அந்நிலங்களுக்கு உரிய ஒழுக்கங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் விளக்குகிறார்.

*'நடுவண் ஐந்திணை நடுவண் அது ஒழிய*
*படுதிரை வையம் பாத்திய பண்பே'*

- அகத்திணையியல் - 2

வகுக்கப்பட்ட ஏழு திணைகளுள் (ஒழுக்கம்) நிலம் பெறுபவை நான்கு திணைகளே என்பது இந்நூற்பாவின் பொருள். 'பாத்திய பண்பு' என்கிறது, இதுவே 'உலகம் பகுக்கப்பட்ட இயல்பு' என்பதைக் குறிப்பதாகும். தொடர்ந்து வரும் 5ம் நூற்பாவால், குறிப்பிட்ட நான்கு நிலங்கள் எவை என்பதை அறியத்தருகிறார். ஐந்தாவது நிலமான பாலை பற்றி பொழுது கூறும் பகுதியில், நிலம் இல்லாவிட்டாலும் பாலைக்கும் பொழுது கூறப்பட்டுள்ளது என்கிறார் உரையாசிரியர் இளம்பூரணர்.
'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்' - அகத்திணையியல் நூ. 5

நிலங்கள், குறிப்பிட்ட இப் பெயர்களைக் கொண்ட காரணம் பற்றி தொல்காப்பியர் எதுவும் கூறவில்லை, இவை, அன்று, மக்களால் அறியப்பட்ட பெயர்களாக இருந்திருக்கலாம். உரையாசிரியர்களே 'அவ்வந்நிலங்களில் காணப்பட்ட சிறப்புப் பூக்களால் அவை பெயர் பெற்றிருக்கலாம்' என்று காரணம் கூற முயன்றிருக்கிறார்கள்.

தொல்காப்பியர், உலக நியதியின் அடிப்படையிலேயே, இயல்பாக மனிதன் வாழ்ந்த முறையையே பாடல் பொருளாக்கி அதற்கு இலக்கணம் வகுத்திருக்கிறார். அண்டம் பற்றிய தமிழரது சிந்தனை எளிமையான, அதேசமயம் ஆழ்ந்ததும் தர்க்கபூர்வமானதும் பகுத்தறிவும் கொண்டதாகும்.

**முல்லை நிலம் -** காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை நிலம் எனப்பட்டது. செம்மண் பரப்பாக இருந்தமையால் 'செம்புலம்' என்றும் அழைக்கப்பட்டது. மனிதன், வேட்டைச் சமூகத்திலிருந்து மேச்சல் சமூகமாகிய காலத்தில் பசுக்கள், எருமைகள், ஆடுகள் முதலிய கால்நடைகளை வளர்த்துப் பயன் பெற்றான். மந்தை மேய்ப்பிற்காகப் புல்வெளிகளைத் தேடிக் காடுகளில் வாழ்ந்த காலம் அது. முல்லை நில மக்கள் ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர் என அழைக்கப்பட்டனர். 'ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப் பெயர்'

- அகத்திணையியல், நூ. 23.

முல்லை நில மக்களின் முதன்மைத் தொழில் ஆநிரை மேய்த்தல் அத்துடன் உழவு, வரகு விதைத்தல் முதலிய தொழில்களையும் செய்தனர். இவர்களது உணவு தினை, சாமை, நெய், பால் முதலியன. ஏறுதழுவுதல் முல்லை நில மக்களின் முக்கிய விளையாட்டாகும்.

**குறிஞ்சி -** தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வகுக்கப்பட்ட ஐவகை நிலத்தில் இரண்டாவதாகக் கூறப்பட்ட நிலம் குறிஞ்சி. மலையும் மலை சார்ந்த இடங்களும் குறிஞ்சி. மலை நாடு, அருவியும் சுனையும் நிறைந்த அழகிய நிலப்பகுதி. மலை நாட்டில் காட்டுப் பகுதிகளில், தேக்கு, அகில், சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்களும் மூங்கில், வேங்கை முதலிய பிற மரங்களும் காணப்படுகின்றன. குறிஞ்சி நிலத்தில் ஊர்கள் சிறுகுடி எனப்பட்டது. இந் நிலத்தவர் தொழில் கிழங்கு அகழ்தல், தேன் எடுத்தல், தினையும், நெல்லும் விதைத்தல், தினைப்புனம் காத்தல் முதலியன. குறிஞ்சி நிலத்தில் மூங்கிலரிசியும் விளையும். குறிஞ்சி நிலக் குடிமக்கள் குறவர், குறத்தியர், கானவர் என்றும் தலைமக்கள் பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி, நாடன் என்றும் அவரவர் தொழில்களாலும் திணைப் பெயர்களாலும்.

**மருதம் -** வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம். மருத நில மக்கள் மள்ளர், மள்ளத்தியர், உழவர், உழத்தியர், கடையர், ஊரான், கடைசியர், வினைஞர், சிலதர். மருத நில மக்களின் முதன்மைத் தொழில் உழவாகும். உழவுத் தொழிலில், களைகட்டுதல், களை பிடுங்கல், நாற்று நடுதல், நெல்லரிதல், கடாவிடல் முதலிய வேலைகளில் ஆணும் -பெண்ணுமாக ஈடுபட்டனர். உழவுத் தொழிலை மேற்கொண்டமையால் மருதநில மக்களுக்கு ஓய்வு நேரம் மிகுதி. மேலதிகமான நேரத்தை அவர்கள் தமது கலை, பண்பாட்டை வளர்ப்பதில் செலவிட்டனர்.

மருத நிலம் பெரும்பாலும் ஆற்றோரங்களில் தான் காணப்பட்டன. உலக நாகரிகம் வளர்ந்த இடமே ஆற்றோரம் தான். மருத நிலத்தில் கொக்கு, நாரை, குருகு, வாத்து, அன்றில் முதலிய பறவைகளும் எருமை, நீர்நாய், பசு, காளை, ஆடு முதலிய விலங்குகளும் காணப்பட்டன.

**நெய்தல் -** கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். தொல்காப்பியம் இதனை, 'வருணன் மேய பெருமணல் உலகமும்' (அகத்திணையியல் நூ. 5) என்கிறது. நெய்தல் நிலக் குடிகள், நுளைச்சி, நுளையர், பரதவர், பரத்தியர், வலையர், வலைச்சியர், தலைமக்கள் சேர்ப்பன் ஆவர்.

நெய்தல் நில மக்களின் தொழில் மீன்பிடித்தல், மீன் உலர்த்தல், மீன் விற்றல், உப்பு உணக்கல் முதலியன. அத்துடன் உப்பளங்கள் நிறைந்த கடற்கரைப் பரப்பில், உப்புச் சாகுபடி, உப்பு விற்றல் முதலிய தொழில்களும் நடைபெறும். நாடு முழுமைக்கும் தேவையான உப்பு, கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே உற்பத்தியாவதால் உப்பின் கேள்வி அதிகமாகும். கடல் வாணிபம், முத்துக் குளித்தல், கடல் ஆடுதல் முதலிய தொழில்களும் நடைபெற்றன.

நெய்தல் நிலத்து உறைகிணறுகள் இன்று, அகழ்வாய்வில் கண்டறியப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டு அகழ்வாய்வில் முழுமையாகக் கண்டெடுக்கப்பட்ட ஒரு கட்டடம் உறைகிண றாகும். நெய்தல் நில ஊர்கள் பாக்கம், பட்டினம் என்று அழைக்கப்படும்.

நெய்தல் நிலத்தில் கண்டல், புன்னை, ஞாழல், நெய்தல், தாழை, மரங்களும் தாவரங்களும் காணப்படுகின்றன. கடற்க ரைப் பரப்பாக இருப்பதால் இங்கு கடற்காகம், நீர்ப்பறவை களும் காணப்படுகின்றன. நெய்தல் நிலத்து மக்களது உணவு, மீன், இறால், கணவாய் முதலிய கடல் வாழ் விலங் குகள் நண்டு, ஆமை முதலிய கடலிலும் தரையிலும் வாழும் விலங்குகள், கருவாடு, சோறு முதலியனவும் ஆகும்.

**பாலை -** சுரமும் சுரம் சார்ந்த இடமும் பாலை. ஒரு காலத் தில் மக்கள் வாழிடமாக இருந்த குறிஞ்சி, முல்லை நிலப்ப குதிகள் பல்வேறு காரணங்களால் வெப்பம் மிகுதியால் சுர மாகி, மக்கள் வாழ்வதற்கு ஏற்றதாக இல்லாமல் பாழ்பட்ட தாகி விடுகிறது. அத்தகைய பாழான நிலப்பகுதி பாலை என்று அழைக்கப்படும். தொல்காப்பியத்தில் பாலை நிலம் பற்றிய தெளிவான செய்திகளற்ற நிலையில் பொ.ஆ. 2-ம் நூற்றாண்டைச் சேர்ந்த, சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவ டிகள் கருத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

***‘கோத்தொழிலாளரொடு கொற்றவன் கோடி,***
***வேத்தியல் இழந்த வியல் நிலம் போல,***
***வேனல் அம் கிழவனொடு வெங் கதிர் வேந்தன்***
***தான் நலம் திருக, தன்மையில் குன்றி,***
***முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து,***
***நல் இயல்பு இழந்து, நடுங்கு துயர் உறுத்து,***
***பாலை என்பது ஓர் படிவம் கொள்ளும்’***

- சிலப்பதிகாரம், காடுகாண் காதை, அடி. 60-66

இவற்றிற்குத் துணைச் சான்றாகச் சங்கப் பாடல்களும் உள.

*‘நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு*
*முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே’*

- அகத்திணையியல், நூ. 11

என்று, நிலம் வகுக்கப்படாத பாலை நிலத்திற்கு, தொல்காப் பியர் வகுத்திருக்கும் ‘நண்பகல் வேனிலாகிய’ காலமும் இட மும் ஏனைய தகவல்களுடன் ஒத்துப் போகின்றன. எனவே,

*‘முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து,*
*நல் இயல்பு இழந்து, நடுங்கு துயர் உறுத்து,*
*பாலை என்பது ஓர் படிவம் கொள்ளும்’*

என்னும் சிலப்பதிகார அடிகளைச் சான்றாகக் கொண்டு பாலை நிலம் உருவான முறைமையைத் தெளிவுபடுத்தலாம்.

பாலை நில மக்கள் எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் ஆவர். ஆறலைத்தலும் சூறையாடலும் இந்நிலத்திற்குரிய தொழில்கள். பாலைநிலத்தில் செந்நாய், வலியிழந்த யானை, புலி முதலிய விலங்குகளும் புறா, பருந்து, எருவை, கழுகு முதலிய பறவைகளும் வாழ்கின்றன. பாலை நிலத்தில் நீரை நீண்ட காலம் வைத்திருக்கும் இயல்பு கொண்ட தடித்த தோல்களையுடைய உழிஞை, பாலை, ஓமை, இருப்பை முதலிய மரங்கள் காணப்படுகின்றன. இவ் வழியே செல்லும் வழிப்போக்கர்கள் பாலைவனத்துப் பசுந் தரை என்று அழைக்கப்படும் சிறு நீர்க்குழிகளையே நீருக் காக நம்பியிருப்பர். பாலைத் திணைக்கு வேனில் காலம் மற் றும் பின்பனிக் காலம் பெரும் பொழுதுகளாகவும், நண்பகல் சிறுபொழுதாகவும் அமையும்.

***‘ஓதல் பகையே தூதிவை பிரிவே.’***

- அகத்திணையியல், நூ. 27.

தொல்காப்பியர் காலத்தில் மக்கள் கல்வி, போர், தூது முத லிய தேவைகளுக்காகத் தம் சொந்த ஊர்களையும் குடும்பத் தையும் பிரிந்து செல்லும் நிலை இருந்திருக்கிறது. அவ்வாறு செல்லும் போது கொடிய பாலை நிலத்தினூடாகச் செல்வதா கக் கூறப்படுகிறது.

இவற்றின் மூலமாகச் சங்ககாலச் சமூக அமைப்பு ஐவகை நிலப்பாகுபாட்டின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது என்பதையும் அதனையே தொல்காப்பியர் ஆவணப்படுத்தியி ருக்கிறார் என்பதையும் கண்டோம். நிலத் திணை அடிப்ப டையிலேயே சமூகம் அமைந்திருந்தது என்பது இயற்கையின் நியதி.

தொல்காப்பியர் காலத்தில் மக்கள் தாம் வாழ்ந்த நிலத்திற் கும் சூழலுக்கும் ஏற்பத் தமது வாழ்வியலை அமைத்துக் கொண்டார்கள். தமிழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் ஒரே மாதிரியான சூழலையும் சுவாத்திய நிலைகளையும் வாழ்வாதாரத்தையும் கொண்டிருக்கவில்லை. ஓர் இனத்தின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஒழுக்கம் அனைத்துமே அவர்கள் சார்ந்திருக்கும் நிலத்தின் தன்மை, தட்பவெப்ப நிலை, வாழ்வாதாரம் முதலியவற்றிற்கு ஏற்றாற் போலவே அமைந்திருக்கும். அவற்றின் பெயர்களும் அவ்வாறே நிலம் சார்ந்தே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய் தல், பாலை என அமைந்திருந்தன.

### பண்டைய தமிழ் நாட்டின் திணைவழி வரைபடம்

- வரைபடத்தில் நீல நிறத்தில் காணப்படுவது, தமிழ் நாட் டின் கடற்கரைப் பகுதியான நெய்தல் நிலமாகும்.
- அதனை அடுத்து மண்ணிறமாகக் காணப்படுவது வயலும் வயல் சார்ந்த மருத நிலமும் ஆகும்.
- அடுத்து, ஆரஞ்சு நிறத்தில் காணப்படுவது பாலை நிலம்.
- அதனை அடுத்து, பச்சை நிறத்தில் காணப்படுவது காடும் காடு சார்ந்த முல்லை நிலமாகும்.
- நடுவே சிவப்பு நிறமாகக் காணப்படுவது மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலமுமாகும்.

உலக வரைபடங்கள் அனைத்துமே அவரவர் நிலத்திற்கேற்ப இத்தகைய இயல்பையே கொண்டிருக்கும்.
தொடரும்



selvanayaki.s@thaiveedu.com

# தமிழியல் ஆய்வுகள் வரலாறும் வளர்ச்சியும்

## - நா. சுப்பிரமணியன்

சிலப்பதிகாரம் தொடர்பாக நிகழ்ந்துள்ள முக்கிய ஆய்வுகள் என்ற வகையிலே கடந்த கட்டுரைவரை டாக்டர் க. பஞ்சாங்கம் அவர்களின் 'சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை' (1993) என்ற நூல்பற்றி நோக்கினோம். அடுத்து, முனைவர் இராம. குருநாதன், திரு. ப. முத்துக்குமாரசுவாமி ஆகியோரால் தொகுத்தளிக்கப்பட்டுள்ள 'சிலப்பதிகாரம் - ஆய்வுக்கோவை' (2004) மற்றும் கா. அய்யப்பன் - அவர்களைப் பதிப்பாசிரியராகவும் பேராசிரியர் வீ. அரசு அவர்களைப் பொதுப் பதிப்பாசிரியராகவும் கொண்டு வெளிவந்ததான 'சிலப்பதிகாரம்-பன்முக வாசிப்பு' (2009) ஆகிய இரு ஆக்கங்கள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன.

இவ்விரு தொகுப்புகளும் உருவாக்க நிலைகளில் வேறுபட்டவையாகும். 'சிலப்பதிகாரம் - ஆய்வுக்கோவை' என்ற முதலாவது தொகுப்பானது சிலப்பதிகாரம் தொடர்பான 'புதியவகை ஆய்வுகள் தேவை' எனப் பதிப்பாசிரியர்கள் முன்வைத்த வேண்டுகோளுக்கு ஏற்ப ஆய்வாளர்கள் பலரால் எழுதி வழங்கப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாகும். இத் தொடர்பில் இதன் பதிப்புரை தரும் செய்தி வருமாறு:

'சிலப்பதிகாரம் பற்றிய புதுக் கருத்தோட்டங்களில் கட்டுரைகளை அளிக்குமாறு அறிஞர் பெருமக்களைக் கேட்டிருந்தோம். அவர்களில் சிலரே கட்டுரைகளை அனுப்பிவைத்தனர். இன்னும் சிலரிடமிருந்து வந்திருப்பின் புதிய முறையில் வகைப்படுத்தியும் நிரலாக வரிசைப்படுத்தியும் தர எண்ணியிருந்தோம் ஒரு நிரலாகக் கோப்பதில் எடுத்த முயற்சி முற்றுப்பெறவில்லை. இக் கோவையிலமைந்த கட்டுரைகளைக் கீழ்க் காணுமாறு நிரல்படுத்தலாம். ஒப்பியல், சமூகவியல், நாட்டுப்புறவியல், சிலம்பு பெற்ற செல்வாக்கும் தாக்கமும், உத்திகள், நாடக இயல், அணுகுமுறை ஆய்வு, பொதுவானவை என அடக்கிவிடலாம்.'

பெருந்தொகையான ஆய்வாளர்களிடம் வேண்டுகோள் விடப்பட்டிருந்த நிலையில் கிடைத்த ஒருதொகை (22) ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமே இந் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன என்பதும் இதன் தொகுப்பாசிரியர்களான முனைவர் இராம. குருநாதன், திரு.ப. முத்துக்குமாரசுவாமி ஆகியோர் இதைவிட விரிவான ஒரு தொகுப்பை வெளியிடுவதற்கு ஆர்வங் கொண்டிருந்தனர் என்பதும் மேற்படி பதிப்புரையின் மூலம் தெரியவரும் செய்திகளாகும். இவ்வகையில் இத் தொகுப்பானது சிலப்பதிகாரம் தொடர்பாக இந்த நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் - அதாவது 2004-க்கு முன்னரான சில ஆண்டுகளில் - நிலவிவந்துள்ள, 'பலநிலைப் பார்வைகளில் ஒரு பகுதியினவற்றின் பதிவு' என்பதான கவனிப்புக்கும் கணிப்புக்கும் உரியதாகிறது.

இந்நூலுக்கு நான்காண்டுகளின் பின்னர் வெளிவந்ததான 'சிலப்பதிகாரம் பன்முக வாசிப்பு' என்ற நூலும் மேற்சுட்டியதைப் போல, 'பலநிலைப் பார்வைகளின் பதிவு' தான். ஆயினும் அது தொகுப்பு நிலையிலே திட்டப்பாங்கான ஒரு நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட வகையிலும் தொகுக்கப்பட்ட முறையிலும் தனக்கெனத் தனியான ஒரு அடையாளத்தைக் கொண்டதாகும். அதாவது 'கையேடு' அல்லது 'பன்முக வாசிப்பு' என்ற வகை சார்ந்த ஒரு தொகுப்பு என்பதே அதன் அடையாளமாகும். இவ்வாறன இந்த அடையாள நிலை தொடர்பாக இதன் பொதுப் பதிப்பாசிரியரான பேராசிரியர் வீ. அரசு அவர்கள் நூலின் தொடக்கத்திலே 'மாற்று' வரிசை' என்ற தலைப்பில் தந்துள்ள அறிமுகக் குறிப்பொன்று இங்கு பதிவுபெற வேண்டிய முக்கியத்துவமுடையதாகும்.

'ஆங்கிலத்தில் குறிப்பிட்ட துறைசார்ந்த தொகுப்பை உருவாக்கி ரீடர் (Reader) என்னும் பெயரில் வெளியிடுகிறார்கள். அத்துறைசார்ந்த பல்வேறு செய்திகளையும் ஒருங்கே தொகுத்து 'ரீடரில்' தருகிறார்கள். தமிழில் அவ்வகையான முயற்சியின் தொடக்கமாக இவ்வகை முயற்சியைக் கருதுகிறோம். தமிழில் சில எழுத்தாளர்கள் பற்றி இவ்வகையான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வகையான வெளியீட்டைக் 'கையேடு' அல்லது 'பன்முக வாசிப்பு' என்று அழைக்கலாம். 'பன்முக வாசிப்பு' என்ற தொடரை நாங்கள் பயன்படுத்துகிறோம். சிலப்பதிகாரப் பதிப்பு, காலம், கலைவரலாறு, வழிபாடு ஆகியவை தொடர்பான கட்டுரைகள் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்துக்கு எழுதப்பட்ட உரைகள் மற்றும் பதிப்புகள் தொடர்பான விபரங்களையும் இணைத்துள்ளோம்.'

மேற்படி பேராசிரியர் வீ. அரசு அவர்களின் அறிமுகக் குறிப்புக்கு ஏற்ற வகையிலே இவ்வாக்கத்திலே சிலப்பதிகாரமானது 'மூன்று காண்டங்களையும் உள்ளடக்கிய முழு நூலாக' முதலில் அச்சேற்றப்பட்ட காலம் முதலே அவ்வாக்கம்

தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வகை வாசிப்புக ளின் வகை மாதிரிகள் எனத்தக்க பதினான்கு கட்டுரைகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

மேற்சுட்டிய ‘சிலப்பதிகாரம் - ஆய்வுக்கோவை’ என்ற தலைப்பிலான முதலாவது தொகுப்பானது சிலப்பதிகாரம் பற்றியதான ‘சமகாலப்பார்வை - அதாவது இந்த நூற்றாண் டின் தொடக்க ஆண்டுகளின் பார்வையாக’த் திகழ்வது. ‘சிலப்பதிகாரம் பன்முக வாசிப்பு’ என்ற இரண்டாவது தொகுப்பானது ‘அந்நூல் முழுநிலையில் அச்சேறியது முதல் சமகாலம் வரை எவ்வெவ்வாறெல்லாம் நோக்கப்பட்டு - அதா வது வாசிக்கப்பட்டு - வந்துளது என்பதைக் கோடிட்டுக் காட் டும் வரலாற்று முறைசார்ந்த ஒரு வரை படம்’ என்பதான கணிப்புக்குரியதாகத் திகழ்வதாகும்.

மேற்படி இரு தொகுப்புகளுக்குமிடையிலான ஒரு தொடர்பு பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். மேற்படி முத லாவது தொகுப்பில் இடம்பெற்றதான, ‘சிலப்பதிகாரத்தில் புகாரிலிருந்து மதுரைக்குச்சென்ற வழி’ என்ற தலைப்பிலான




பேராசிரியர் ராஜ் கௌதமன் அவர்களின் கட்டுரையானது இரண்டாவது தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளது என்பதே அத் தொடர்பாகும். இரண்டாவது தொகுப்பு முயற்சியை மேற் கொண்டோர் ஐந்தாண்டுகளுக்கு முற்பட்டதான மேற்படி முத லாவது தொகுப்பையும் கருத்துள் இருத்தியே செயற்பட்டுள் ளனர் என்பதை உணர்த்தும் ஒரு சான்றாக இதனைக் கொள் ளலாம்.

மேற்சுட்டிய இரு தொகுப்புகள் பற்றிய இப்போது அறிமு கங்களைத் தொடர்ந்து அவற்றின் உள்ளடக்கங்களைத் தனித்தனியாக நோக்குவோம்.

சிலப்பதிகாரம் - ஆய்வுக்கோவை என்ற தொகுப்பின் உள்ள டக்க அம்சங்கள்

கடந்த கட்டுரைவரை நாம்நோக்கிய டாக்டர் க. பஞ்சாங்க மவர்களின் ‘சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை’ என்ற நூலானது 1990-களின் ஆரம்ப ஆண்டுகள் வரையான சிலப்பதிகார ஆய்வு வரலாற்றின் தரிசனமாக அமைந்ததென் பது நாம் முன்னரே அறிந்த செய்தியேயாம். அவ்வாக்கத் தின் பின்னரான ஏறத்தாழப் பத்தாண்டுக் காலப்பகுதியின் சிலப்பதிகாரச் சிந்தனைகளின் செல்நெறிகளை அடையாளங் காட்ட வல்ல முக்கிய சான்றாதாரங்களிலொன்றாகவே ‘சிலப் பதிகாரம் -ஆய்வுக் கோவை’ என்ற இத் தொகுப்பு நமது கவனத்துக்கு வருகிறது என்பதே இங்கே முதலிற் குறிப்பிட வேண்டிய செய்தியாகிறது.

இதிலிடம்பெற்ற 22 ஆய்வுக் கட்டுரைகளும் 22 ஆய்வாளர்க ளால் எழுதப்பட்டவை என்பதை நாம் முன்னர் நோக்கியுள் ளோம். முற்சுட்டிய ‘சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை’ நூலின் ஆசிரியரான டாக்டர் க. பஞ்சாங்கமவர்க ளின் கட்டுரையொன்றும் (‘சிலப்பதிகாரம் சில பயணங்கள்’ என்ற தலைப்பிலான கட்டுரை) இத் தொகுப்பில் இடம்பெற் றுள்ளது. மேலும், மேற்சுட்டிய நூலில் ‘சிலப்பதிகார ஆய்வா ளர்கள்’ என்றவகையில் நமக்கு அறிமுகமானவர்களான பேரா சிரியர் கா. செல்லப்பன் மற்றும் முனைவர் தி. மகாலட்சுமி ஆகியோரும் இத் தொகுப்புக்குக் கட்டுரைகள் வழங்கியுள்ள னர் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய செய்தியாகி றது.

இத் தொகுப்பிலிடம்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளை, ‘ஒப்பி யல், சமூகவியல், நாட்டுப்புறவியல், சிலம்பு பெற்ற செல் வாக்கும் தாக்கமும், உத்திகள், நாடக இயல், அணுகுமுறை ஆய்வு, பொதுவானவை என அடக்கிவிடலாம்’ என்பதை மேற்சுட்டிய பதிப்புரைக் குறிப்பிலே நோக்கியுள்ளோம். இவற்றுள் ‘ஒப்பியல்’, ‘சமூகவியல்’, ‘நாட்டுப்புறவியல்’ ஆகி யன சார்ந்த பார்வைகள் ஊடாக சிலப்பதிகாரத்தை அணு கும் செயன்முறைகள் கடந்த நூற்றாண்டிலேயே பலராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை டாக்டர் க. பஞ்சாங்கம வர்களின் நூல்மூலம் - குறிப்பாக அந்நூலின் ஐந்தாம் இயல் பற்றியதான கடந்த கட்டுரைப்பகுதி மூலம் ஏற்கெ னவே நாம்தெரிந்து கொண்டுள்ளோம்.

சிலப்பதிகாரத்தை ஒரு நாடக ஆக்கமாகத் தரிசிக்கும் முறை மையும் அதாவது ‘அவல நாடகம்’ என்பதான மேலைத்தேசக் கருத்தாக்கம் சார்ந்து அணுகும் ஆய்வுச் செயற்பாடுகளும் கடந்த நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டன என்பதும் மேற் படி டாக்டர் க. பஞ்சாங்கமவர்களின் நூல் மூலம் ஏற்கனவே அறிந்த செய்தியேயாம். அவ்வகை ஆய்வுகள் குறிப்பாக கிரேக்க மற்றும் ஆங்கில நாடகங்களுடன் ஒப்பிடும் முயற்சி களாக அமைந்திருந்தன என்பதும் அங்கு சுட்டப்பட்டது.

இவ்வாறு சிலப்பதிகாரம் தொடர்பாக ஏற்கனவே கடந்த நூற் றாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வியல் அணுகுமுறைகள் பலவும் மேலும் ஆழமும் அகலமும் பெற்றுவந்துள்ளன என் பதை இத் தொகுப்பிலுள்ள மேற்சுட்டிய ‘ஒப்பியல்’, ‘சமூகவி யல்’, ‘நாட்டுப்புறவியல்’ மற்றும் நாடக இயல்சார் கட்டுரைக ளுள் சில தெளிவாகவே நமக்கு உணர்த்தி நிற்கின்றன. இவ் வகை அணுகுமுறைகள்சார் கட்டுரைகளை முதலில் நோக்கி யபின் ஏனையவகைக் கட்டுரைகளை நோக்கலாம். அவ்வ கையில் முதலிலே ஒப்பியல் நோக்கிலமைந்துள்ள இரு கட் டுரைகள் இங்கு கவனத்துக்கு வருகின்றன.

முதலாவது கட்டுரையானது பேராசிரியர் கா. செல்லப்பன் அவர்களால் ‘சிலம்பும் கிரேக்க நாடகங்களும்’ என்ற தலைப் பிலும், இரண்டாவது கட்டுரை பேராசிரியர் அ.அ. மணவா ளன் அவர்களால் ‘தமிழ் முதற் காப்பியமும் பிறமொழி முதற்

காப்பியங்களும் - ஒரு பாவிக ஒப்பீடு.' என்ற தலைப்பிலும் எழுதப்பட்டவையாகும். கடந்த நூற்றாண்டில் சிலப்பதிகாரத்தை ஒப்பியல் நோக்கில் அணுகுபவர்கள் தமிழிலக்கியங்களுடன் மட்டுமன்றிப் பிறமொழி இலக்கியங்களுடனும் - குறிப்பாக கிரேக்க மற்றும் ஆங்கில அவல நாடக மரபுகளுடனும் - ஒப்பிட்டு விளக்கியுள்ளனர் என்பதை மேலே நோக்கினோம். அவ் வாறான ஒப்பியற் பார்வைகளின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் எனக் கொள்ளத்தக்கனவாகவே மேற்படி இரு கட்டுரைகளும் திகழ்கின்றன.

'சிலம்பும் கிரேக்க நாடகங்களும்' என்ற கட்டுரையின் தொடக்கத்திலே பேராசிரியர் கா. செல்லப்பன் அவர்கள் தமது நோக்கம் பற்றிக் குறிப்பிடுமிடத்து பண்டைத் தமிழகத்துக்கும் கிரேக்கத்துக்கும் இருந்திருக்கக்கூடிய உறவுநிலையையும் தொடர்புறுத்திக்காட்டுவது நமது சிந்தனைக் குரியதாகும். அவருடைய அக் குறிப்பு வருமாறு:

'பண்டைத் தமிழர்கள் கிரேக்கத்தோடு நெருங்கியதொடர்பு கொண்டிருந்தமை ஏற்கனவே எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாற்று உண்மை. 'யவனர்கள' என்று கிரேக்கர்களைத் தமிழ் இலக்கியங்கள் குறிக்கின்றன. இது வெறும் வாணிப உறவாக மட்டுமன்றி இலக்கிய உறவாகவும் இருந்திருக்கிறது என்பதற்குச் சிலப்பதிகாரம் ஒரு சான்று. சிலப்பதிகாரத்தில் உள்ள கிரேக்க நாடகக் கூறுகளைக் காண்பதுவே இக்கட்டுரையின் நோக்கம்.' (சிலப்பதிகாரம் - ஆய்வுக் கோவை. பக்:21-22)

இவ்வாறு தமது நோக்கத்தை முன்வைத்த அவர், சிலப்பதிகாரத்தை கிரேக்கத்தின் பண்டைய துன்பியல் நாடகங்களான ஈஸ்கைலசின் 'அகமெம்னான்' மற்றும் சோபாக்கிளீசின் 'ஈடிபஸ் நாடகங்கள்' (இரு நாடகங்கள்) ஆகியவற்றுடன் ஒப்பு நோக்கி, அவற்றுக்கிடையிலான பொதுமைகளை அடையாளங் காட்டியள்ளார். மேற்படி ஒப்பீட்டிலே மேற்சுட்டிய நாடகக் கதைகளின் 'நோக்குநிலைகள்', 'நாடகக் கட்டமைப்புக் கூறுகள்', 'கதைமாந்தர் பண்புகள்' முதலானவற்றின் பொதுமை அம்சங்கள் அவரால் நமது கவனத்துக்கு இட்டு வரப்பட்டுள்ளன.

'நோக்குநிலை' என்றவகையிலே பேராசிரியர் குறிப்பிடும் செய்தி, மேற்படி இருவரின் கிரேக்க நாடகக் கதைகளும் 'ஊழின் ஆற்றல்', 'பெண்மையின் வன்மை' மற்றும் 'நீதியின் தன்மை' ஆகியவற்றை நாடகமாக்கிக் காட்டுவன' என்பதாகும். சிலப்பதிகாரமும் இந் நோக்கங்களை முன்னிறுத்திய ஆக்கமாகவே காண்கிறார். இத் தொடர்பில் அவர் முன்வைத்துள்ள ஒப்பீட்டின் தொடக்கப்பகுதி வருமாறு:

'ஈஸ்கைலஸ் கிரேக்கத் துன்பியல் நாடகத்தின் தந்தை. அவரும் அவருக்குப்பின் வந்த சோபாக்ளீசும்தான் கிரேக்க நாடகக் கலையின் தூண்களாவர். அவ்விருவரும் எழுதிய நாடகங்கள் ஊழின் ஆற்றலையும், பெண்மையின் வன்மையையும், நீதியின் தன்மையையும் நாடகமாக்கிக் காட்டுகின்றன. இவற்றுக்கும் சிலம்பின் மூன்று நோக்கங்களுக்கும் உள்ள ஒற்றுமை, எளிதிற் புலனாகும்...' (மேற்படி.ப.22). எனத்தொடங்கி அவருடைய இந்த ஒப்பீட்டுப்பார்வை தொடர்கிறது.

மேற்படி ஆக்கங்களின் கதையம்சங்களிலே 'விதியின் ஆற்றல்' தொழிற்பட்டுள்ளமையும் அதற்கேற்பவே கதை மாந்தர் இயக்கங்கள் அமைந்துள்ளமையும் இங்கு விரிவாகவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

'சோபாக்ளிசின் இரண்டு ஈடிபஸ் நாடகங்களிலும் சிலம்பின் பண்புகளைப் பார்க்கலாம். முதல் நாடகமான ஈடிபஸ் மன்னனில், ஈடிபஸ் தந்தையைக் கொன்று தாயை மணப்பான் என்ற தெய்வீகக் கூற்றை (Oracle) நிறைவேறாமல் செய்ய எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் அதனை அவனை நிறைவேற்றவே செய்கின்றன. இறுதியில் அரசனான அவன் தான் தான் குற்றவாளி, தன்நகரின் எல்லாத் தன்பங்குகளுக்கும் தான்தான் பொறுப்பாளி என உணர்கிறான். அதற்குமுன் அவனும் டயாஸியாசும் பேசுவது வழக்குரை காதையை ஒத்துளது... (மேற்படி.ப.23). எனத்தொடர்கிறது இந்த ஒப்பபீட்டுப் பகுதி.

'கதைக் கட்டமைப்புக் கூறுகள்' என்றவகையில் சிலப்பதிகாரத்தின் 'குழுப்பாடல்' களுக்கும் கிரேக்க 'கோரஸ்' களுக்குமுள்ள ஒற்றுமைகளும் இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஒப்பீடுகளின் இறுதியிலே 'இந்திய மரபிலேயே சிலப்பதிகாரம்தான் முழுமையான துன்பியல் நாடகக் காப்பியமாக விளங்குகிறது' என்ற குறிப்புடன் இக்கட்டுரை நிறைவடைகின்றது. (ப.26)

பேராசிரியர் அ.அ. மணவாளன் அவர்களுடைய கட்டுரையானது வெவ்வேறு மொழிகளின் முதற் காப்பியங்களுடன் சிலப்பதிகாரத்தை ஒப்பிடும் முயற்சியாகும். அவ்வகையில் இதிலே, கிரேக்க மொழியின் 'ஒடிசி' (Odyssey) மற்றும் இலியட் (Iliad), சம்ஸ்கிருத மொழியின் இராமாயணம் மற்றும் மகாபாரதம், இலத்தீன் மொழியின் 'ஈனிட்' (Aeneid) ஆகியன சிலப்பதிகாரத்துடன் ஒப்புநோக்கப்பட்டுள்ளன. இவ்வொப்பீட்டிலே குறிப்பாக, மேற்படி காப்பியங்களின் கதையம்சங்கள், தலைமைக்கதை மாந்தர்களின் இயல்புகள் மற்றும் அவர்களால் உணர்த்தப்பெறும் 'பாவிகம்' எனப்படும் 'தலைமைப் பண்புகள்' ஆகியனவே இங்கு விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.

இவ்வொப்பீட்டு முயற்சியிலே முதலில் சிலப்பதிகாரம் உட்பட மேற்சுட்டிய பிறமொழிக் காப்பியங்கள் உருவான சமுதாய வரலாற்றுச் சூழல்கள் கவனத்துக்கு இட்டு வரப்பட்டுள்ளன. கிரேக்கத்தின் மேற்படி காப்பியங்கள் 'வீரயுகத்திலும், வடமொழியின் மேற்படி இராமாயணம மற்றும் மகாபாரதம் ஆகியன 'வீரயுகத்தின் முடிவிலும் உருவானவை என்பதே பேராசிரியர் அ.அ. மணவாளன் அவர்களின் கணிப்பாகும். தமிழின் முதற் காப்பியமான சிலப்பதிகாரம் மற்றும் இலத்தின் மொழியின் முதற் காப்பியமான ஈனிட் ஆகியன உருவான காலங்களை, அவ்வம் மொழிகளின் 'வீரயுகங்களை அடுத்து வந்தவையான பேரரசு உருவாக்கக் காலங்கள்' ஆக அவர் கணித்துள்ளார். இவ்வாறான சமுதாய வரலாற்று காலங்களின் வேறுபாடுகளுக்கு ஏற்பவே மேற்படி காப்பியங்களின் கதையம்சங்கள் மற்றும் பாவிகப் பண்புகள் ஆகியன வேறுபட்டமைந்துள்ளன என்பதே அ.அ. மணவாளன் அவர்கள் இக் கட்டுரையிலே ஆய்வு நிலையில் நமது கவனத்துக்கு இட்டுவந்துள்ள செய்தியாகும்.

'வீரயுகம்' சார்ந்த ஆக்கங்களின் கதையம்சங்களிலே 'தனிமனித வீரம்' மற்றும் 'தனிமனித வெற்றி' ஆகியனவே முக்கியத்துவம் பெற்றிருந்தன' என்பதும் அவ்வகையிலே அவற்றில் குறிப்பாக கிரேக்க காப்பியங்களிலே தொடக்க நிலையிலே

‘உடல்வீரமும் பின்னர் ‘அறிவுக்கூர்மை’, ‘சூழ்ச்சித் திறன்’ ஆகியனவும் முக்கிய பாவிகப் பண்புகளாக வெளிப்பட்டன’ என்பதான அவதானிப்புகள் அவரால் முன்வைக்கப்பட்டுள் ளன. ஆனால், ‘இந்திய வீரயுகக் காப்பியங்களான இராமாய ணம், மகாபாரதம் ஆகியன, உடல் வீரமும் சூழ்ச்சித்திறனும் கூட அறத்தின் சார்பாக வெளிப்பட்டால் மட்டுமே வெற்றிய டைய முடியும் என்பதை உணர்த்துவன’ என்ற கருத்தை அவர் பதிவு செய்துள்ளார்.

‘பேரரசு உருவாக்கக் காலங்கள்’ சார்ந்த ஆக்கங்களான சிலப்பதிகாரம், ஈனிட் ஆகியவை, ‘நாடு மற்றும் சமூகம்சார் பொதுவாழ்வின் சிக்கல்களைத் தவிர்க்கும் நோக்கில் ‘ஒழுக்க வீரத்தை முன்னிறுத்தும் வகையிலான கதையம்சங்கள் கொண்டமைந்தவை’ எனக்கூறும் மணவாளன் அவர்கள் ‘இவ் விரு ஆக்கங்களும் உடல்வீரம் என்ற பாவிகப் பண்பு தொடர்பில் வேறுபட்ட பார்வை கொண்டவை’ என்பதான தமது புரிதலையும் நமது கவனத்துக்கு இட்டு வந்துள்ளார். இத் தொடர்பிலான அவர் கூற்று வருமாறு:

‘...பேரரசுகள் தோற்றம் பெற முயலும் காலத்தே தோன்றிய இலத்தீன் காப்பியமும் தமிழ்க் காப்பியமும் (ஈனிட்டும் சிலப் பதிகாரமும்) ஒழுக்க வீரம் என்ற அம்சத்தைச் சிறப்பித்துப் பேசுவன. இவ்விரண்டினுள்ளும் இலத்தீன் முதற் காப்பியம் இலக்கினை அடையத் தடை ஏற்படின் உடல் வீரம் சார்ந்த போர்ப் பண்புகளும் மேற்கொள்ளத்தக்கன என்று காட்டுகி றது. சிலப்பதிகாரமோ ‘வெற்றியேதரினும் போர்ப் பண்புகள் விலக்கத்தக்கன’ என்று காட்டுகிறது.’ (சிலப்பதிகாரம்-ஆய் வுக்கோவை:ப.41)

இவ்வாறு பிறமொழிகள்சார் முதற் காப்பியங்களுடன் சிலப்ப திகாரத்தை ஒப்பிடும் முறையில் அமைந்ததான இக்கட்டுரை யின் இறுதியிலே சிலப்பதிகாரத்தின் தனித்தன்மை என்ற வகையிலான ஒரு அவதானிப்பையும் அவர் பதிவுசெய்துள் ளார். கதைத் தலைவியான கண்ணகி ‘தெய்வநிலை எய்தி னாள்’ என்பதான கதையம்சமே இங்கு தனித் தன்மையான சிறப்பம்சமாக அவரால் சுட்டப்பட்டுளது. இத்தொடர்பிலான அவருடைய ஒப்பீட்டுக் குறிப்பொன்று இங்கு சுட்டத்தக்க முக்கியத்துவமுடையதாகும். அக்குறிப்பு வருமாறு:

‘ஏனைய காப்பியங்கள் இவ்வுலக வாழ்க்கையின் சிக்கல் களை வெல்லும் வீரம் பற்றிப் பேசவும், தமிழ்க்காப்பியம் மட்டும் மானுடராகப் பிறந்தவர் தெய்வமாகத் தக்கதொரு குறிக்கோள் வீரத்தைப் பாராட்டிப் பேசுகிறது’ (மேற்படி பக் கம்)

இக்கூற்றிலே ‘தமிழ்க் காப்பியம்’ என்பது சிலப்பதிகாரத் தையே குறிப்பதென்பது வெளிப்படை.

அடுத்து, இத்தொகுப்பிலிடம்பெற்றுள்ள ‘சமூகவியல்’ மற்றும் ‘நாட்டுப்புறவியல்’ முதலான வகைகள் சார்ந்த கட்டுரைகள் இங்கு கவனத்துக்கு வரவுள்ளன.

சிலப்பதிகாரத்தைச் ‘சமூகவியல்’ நோக்கில் அணுகும் செயன்முறைகள் கடந்த நூற்றாண்டிலே தொடங்கிவிட்டன என்பதும், அவை ‘பொதுவான சமூகப்பார்வை’ மற்றும் ‘மார்க்ஸிய நோக்கிலான வர்க்கப்பார்வை’ ஆகிய இருவகை யான அணுகுமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதுமான செய்திகளை முன்னைய கட்டுரையிலே நோக்கி யிருந்தோம். அவ்வாறான அணுகு முறைகளுக்கான வகை மாதிரிச் சான்றுகளாக திருவாளர்கள் சாமி சிதம்பரனார், ப.அருணாசலம் மற்றும் கே. முத்தையா, தொ.மு.சி. ரகுநா- தன் முதலியவர்களின் எழுத்தாக்கங்கள் அங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்டன என்பதும் இங்கு நினைவுக்கு வருகிறது.

இவ்வாறு கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிமுதல் தொடரும் இருவகை அணுகுமுறைகள் கொண்ட சமூகவியற் பார்வைக- ளில் குறிப்பாக, முதல்வகையான ‘பொதுவான சமூகப்பார் வைகளின் ஒரு சீரான தொடர்ச்சியை சிலப்பதிகாரம் - ஆய் வுக்கோவை என்ற இந்நூலின் சில கட்டுரைகளிலும் அவதா னிக்க முடிகிறது.

மேற்படி ‘பொதுவான சமூகப்பார்வை’ சார்ந்த அணுகுமுறை யானது இலக்கியத்தில் அமைந்திருக்கும் சமூகக் கூறுக ளைப் பகுத்தாராயும் செயற்பாடாக அமைவதாகும். குறித்த இலக்கியம் காட்சிப்படுத்தியுள்ள சமூகம்சார் கூறுகளையும் அது இலட்சியப்படுத்தி நிற்கும் சமூக அம்சங்களையும் நுனித்து நோக்குவதனூடாக அவ்வாக்கத்துக்கும் அது எழுந்த சமூகச் சூழலுக்கும் உள்ள உறவைத் தெளிந்து கொள்வதே இவ்வகை ஆய்வின் நோக்கமாகும். கடந்த கட்டு ரையில் நாம் நோக்கியவர்களான சாமி. சிதம்பரனார் எழுதிய ‘சிலப்பதிகாரத் தமிழகம்’ என்ற நூலும் ப. அருணாசலம் அவர்களின் ‘சிலப்பதிகாரச் சிந்தனை’ என்ற நூலும் இத்த கைய நோக்குசார் முயற்சிகளாக அமைந்தனவேயாகும்.

மேற்சுட்டியவாறான அணுகுமுறையின் தொடர்ச்சிகள் எனத் தக்கவகையிலான நான்கு கட்டுரைகள் இவ்வாய்வுக் கோவை யில் இடம்பெற்றுள்ளன. முனைவர் க.ப. அறவாணன் அவர்க ளின் ‘சிலம்புவழித் தமிழரும் தமிழுணர்வும் - ஒரு சமூகவியல் ஆய்வு’, முனைவர் சிலம்பு நா. செல்வராசு அவர்களின் ‘சிலப்பதிகாரம் கட்டமைக்கும் குடும்பம் - சமூகவியல் ஆய்வு’, திரு.கோ. பார்த்தசாரதி அவர்களின் ‘ஆட்சியருக் கான அறவுணர்வும் எச்சரிக்கையும்’, முனைவர் நா. செயப்- பிரகாசு அவர்களின் ‘சிலப்பதிகாரச் சமுதாயம்’ ஆகியனவே, அவை.

இவற்றுள் நான்காவதான முனைவர் நா. செயப்பிரகாசு அவர் களின் ‘சிலப்பதிகாரச் சமுதாயம்’ என்ற கட்டுரையானது அச் சமுதாயம் பற்றிய பொதுச் செய்திகளின் பதிவாக மட்டுமே அமைந்துளது. அவ்வகையில் க.ப. அறவாணன், சிலம்பு நா. செல்வராசு மற்றும் கோ. பார்த்தசாரதி ஆகிய மூவரின் கட்டு ரைகளே ஆய்வு நிலையில் கவனத்துக்குரியவையாகின்றன. இவை முறையே ‘தமிழுணர்வு’, ‘குடும்பக் கட்டமைப்பு’ மற் றும் ‘அரச நீதி’ ஆகிய சமூக அம்சங்களை மையப்படுத்திய பார்வைகள் என்பதை அவற்றின் தலைப்புகளே உணர்த்திவி டுகின்றன. இம்மூன்றினுள் அறவாணன் மற்றும் பார்த்தசாரதி ஆகியோரின் கட்டுரைகள் பெரிதும் சிலப்பதிகாரக் கதை நிகழ்வுகளையும் தகவல்களையும் மையப்படுத்திய விளக்கவு ரைகள் என்ற கணிப்புக்குரிய ஆக்கங்களாகவே அமைந்துள் ளன.

க.ப. அறவாணன் அவர்களின் கட்டுரையானது ‘தமிழுணர்வு’ என்ற பண்பாட்டம்சமே சிலப்பதிகாரத்தின் உருவாக்கத்துக்

கான சமூகநிலைப்பட்ட காரணி என்ற கருத்தை முன்வைக்கும் நோக்கில் எழுதப்பட்டதாகும். அதாவது, 'அரசியல் மற்றும் சமய நிலைகளில் பல்வேறு பிரிவுகளாகப் பிளவுண்டிருந்த தமிழகச் சமுதாயத்தை தமிழர் என்ற உணர்வுத் தளத்தில் ஒருங்கிணைத்தல் வேண்டும் என்பதான குறிக்கோளை முன்னிறுத்தியே இளங்கோ சிலப்பதிகாரத்தைப் படைத்துள்ளார்' என்பதே இக்கட்டுரையில் அவரால் பல்வேறு அகச்சான்றுகள் ஊடாக எடுத்துரைக்கப்பட்டுளது. இதனை உறுதி செய்யும் வகையில் அமைந்ததான இக்கட்டுரையின் நிறைவுக்குறிப்பு வருமாறு:

'இளங்கோ சிலம்பை எழுதியதன் நோக்கம் குடிப் பிரிவுகளுக்கு அப்பால் சமயப் பிரிவுகளுக்கு அப்பால் தமிழர் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்பதேயாகும்.' (மேற்படி: ப.49)

திரு. பார்த்தசாரதி அவர்களின் கட்டுரையின் தொனிப்பொருளாக அமைந்த அம்சம் 'ஆட்சியாளன் செய்யும் தவறானது அரசை அழிப்பதோடு மட்டுமன்றி நாடு அழியவும் காரணமாகி விடுகிறது' என்பதேயாகும். 'இதனை உணர்த்தும் வகையிலான கதையம்சங்கொண்ட வகையிலேயே சிலப்பதிகாரமானது ஆட்சியருக்கான எச்சரிக்கையாகத் திகழ்கிறது' என்பதே பார்த்தசாரதியவர்களின் இக்கட்டுரையிலே விரித்துரைக்கப்பட்டுள்ளது.

சிலம்பு நா. செல்வராசு அவர்களின் 'சிலப்பதிகாரம் கட்டமைக்கும் குடும்பம் - சமூகவியல் ஆய்வு ' என்ற கட்டுரையானது 'சமூகவியல்' மற்றும் 'மானிடவியல்' ஆகியனசார் சிந்தனைகளை உள்ளடக்கியமைந்த வகையில் மேற்சுட்டிய இரண்டையும்விட ஆழமானதாகவும் நுண்ணாய்வு என்ற கணிப்புக்குரியதாகவும் திகழ்வதாகும். குடும்ப வாழ்வியல் சார் முக்கிய அம்சங்களான, 'குடும்ப உறவுகள்', 'கூட்டு மற்றும் தனிக் குடுமப்ப அமைப்புகள்', 'மணமுறைகள்', 'மக்கட்பேறு' முதலான பலவற்றையும் மையப்படுத்தியதாக அவருடைய இந்நுண்ணாய்வு கட்டமைக்கப்பட்டுளது.

'சிலப்பதிகாரம் காட்சிப்படுத்தியுள்ள குடும்பக் கட்டமைப்பானது சங்க இலக்கியங்கள் காட்டும் திணை அடிப்படையிலான குடும்ப அமைப்பிலிருந்து பெரிதும் மாற்றமடைந்த ஒன்று' என்பதும் அவ்வகையில் அவ்வாக்கம், 'ஒரு பெரும் சமூக மாற்றத்திற்குப் பின்பே தோன்றியுள்ளது' என்பதுமே ஆய்வு நிலையில் இக்கட்டுரையில் பல்வேறு தரவுகளின் ஊடாக நிறுவப்பட்ட முடிபாகும்.

இந்த ஆய்வுக் கோவையிலே இடம்பெற்ற கட்டுரைகளில் முனைவர்.சா. வளவன் அவர்களின் 'நாட்டுப்புறச் சிலப்பதிகாரம்', முனைவர் செ.மா.சு. வசந்தகோகிலம் அவர்களின் 'சிலப்பதிகாரக் கதை உருவாக்கமும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களும்' ஆகியவற்றின் தலைப்புகளே அவை, 'நாட்டுப் புறவியல்' சார்ந்த ஆய்வுகள் என்பதை வெளிப்படையாகவே உணர்த்தி நிற்பனவாகும்.

மேற்படி இக்கட்டுரைகளை நோக்கும் முயற்சியிலே முதற்கண் சிலப்பதிகாரத்துக்கும் 'நாட்டுப் புறவியலுக்கமான தொடர்பு பற்றியனவாக கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்துள்ள ஆய்வுகள் இங்கு நினைவில் மீட்பதற்குரியன. அவ்வகையில் நாம் முன்னரே நோக்கியுள்ள டாக்டர் பஞ்சாங்கமவர்களின் 'சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை' என்ற நூல் தந்துள்ள முக்கிய ஆய்வுநிலைத் தரவுகள் இங்கு கவனத்துக்குரியனவாகின்றன.

சிலப்பதிகாரத்தின் மூலக்கதை சங்க இலக்கிய காலத்தில் வழக்கிலிருந்த ஒரு பழைய கதை என்பதும், 'அதில் இடம் பெற்றுள்ள 'கானல்வரி', 'வேட்டுவவரி', 'ஆய்ச்சியர் குரவை', 'குன்றக்குரவை' ஆகிய காதைகளும் 'வாழ்த்துக்காதையிலிடம் பெற்றுள்ளவையான 'ஊசல்வரி', 'கந்துகவரி', 'வள்ளைப்பாட்டு' முதலியனவும் தமிழரின் பண்டைய நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் நாட்டுப்புற ஆடல்கள் ஆகியவற்றின் செல்வாக்கால் உருவானவை' என்பதுமான ஆய்வு முடிபுகள் அந்நூலில் பதிவாகியுள்ளன.

நாட்டுப்புற ஆடல்கள் என்ற வகையிலே பண்டைய கூத்துகளுடன் - குறிப்பாக, 'சாக்கியர் கூத்து' மற்றும் 'தெருக்கூத்து' ஆகியவற்றுடன் - சிலப்பதிகாரம் கொண்டிருந்திருக்கக்கூடிய தொடர்புகள் பற்றிய ஊகங்கள் அங்கு சுட்டப்பட்டுள்ளன. இவ்வாறான ஆய்வு முடிபுகளை முன்வைத்தவர்கள் என்ற வகையிலே தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், நா. வான-மாமலை, சோம. இளவரசு, முத்துச்சண்முகன், இரா. பிரேமா, துரை. சீனிச்சாமி, குருவிக்கரம்பை சண்முகம், கா. அப்பாத்-துரை, பி. தட்சிணாமூர்த்தி, அ. அறிவுநம்பி ஆகிய பல தமிழறிஞர்கள் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதும் இங்கு நினைவில் இருத்தவேண்டிய செய்தியாகிறது.

மேற்சுட்டியவாறு சிலப்பதிகாரமானது 'நாட்டுப்புறவியல்' நோக்கில் அணுகப்பட்டு வந்துள்ள வரலாற்றின் சீரான ஒரு தொடர்ச்சியையே இந்த ஆய்வுக் கோவையிலுள்ள முனைவர் வளவன் மற்றும் முனைவர் செ.மா.சு. வசந்த கோகிலம் ஆகியோரின் மேற்சுட்டிய கட்டுரைகள் நமக்குக் காட்சிப்படுத்துகின்றன. இவ்விருவரின் கட்டுரைகளும் உள்ளடக்க நிலைக-ளில் வேறுபட்டவையாகும்.

முனைவர் வளவன் அவர்களின் கட்டுரையானது நாட்டுப்புற மக்கள் மத்தியில் கூத்துகள் வடிவிலும் 'உடுக்கடிப்பாடல்', 'வில்லுப்பாட்டு' முதலிய பாடல் வகைகளிலும் பேணப்பட்டு வரும் 'சிலப்பதிகாரக் கதை வடிவங்கள்' பற்றிய ஆய்வாக அமைந்ததாகும். 'நாட்டுப்புறச் சிலப்பதிகாரம்' என அமைந்த இதன் தலைப்பானது சிலப்பதிகாரக் கதையம்சங்களை உள்ளடக்கியவையான மேற்படி நாட்டார் கலை வடிவங்களையே குறித்து நிற்பதாகும். அதாவது மூலக் கதையம்சமானது இளங்கோவால் சிலப்பதிகார காப்பியமாக உருவாக்கம் எய்திவிட்ட பின்னருங்கூட பல்வேறு வடிவங்களில் மக்கள் மத்தியில் உயிர்ப்புடன் நிலவி வந்துள்ளமை - மற்றும் நிலவி வருகின்றமை - ஆகியன பற்றிய ஆய்வுப் பார்வையாக இது அமைந்துளது.

மேற்சுட்டியவாறான நாட்டார்கலை வடிவங்களின் வரலாறு, சிலப்பதிகாரக் காப்பியத்திலிருந்து அவை வேறுபட்டுள்ள நிலைகள், சமூகத்தில் அக்கலை வடிவங்கள் பெற்று வந்துள்ள செல்வாக்கு மற்றும் அவை பேணப்பட்டு வந்துள்ள முறைமைகள் முதலியவற்றை இக்கட்டுரை நமது கவனத்துக்கு இட்டுவருகிறது.

நாட்டுப்புறச் சிலப்பதிகாரம் தொடர்பான வரலாறு என்ற

வகையில் இந்திய மண்ணிலே தமிழகத்திலும் கேரள மாநிலத்திலும் ஈழத்திலும் வழக்கிலிருந்துவரும் பல கண்ணகிக் கதைகள், கோவலன் கதைகள் பற்றியும் அவை அச்சேற்றப் பட்டமை பற்றியுமான தகவல்கள் பல இக்கட்டுரையிலே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான கதைவகைகள் 'சிலப்பதிகாரக் கதையம்சங்களிலிருந்து வேறுபட்டமைந்துள் ளமை' மற்றும் அவ்வகை வேறுபாடுகள் 'நாட்டுப்புறங்களின் சராசரி மாந்தரின் உணர்வுகளுக்கு நெருக்கமாக அமைந்து வந்துள்ளமை' ஆகிய செய்திகளையும் முனைவர் வளவன் அவர்கள் இக்கட்டுரையிலே நமது கவனத்துக்கு முன்வைத் துள்ளார். அவ்வகையில் புதிய தரவுகளைக் கொண்ட முக் கிய கட்டுரையாக இது திகழ்கிறது.

முனைவர் வசந்த கோகிலம் அவர்களுடைய கட்டுரையானது சிலப்பதிகாரக் கட்டமைப்பை மையப்படுத்தியதாகும். குறிப் பாக அக்கட்டமைப்பிலே நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் வகித்திருக்கக்கூடிய பங்கு பற்றிய பார்வையாக அது அமைந்துளது. தனது படைப்புக்கு நாட்டுப்பறக் கதையம்சத் தைத் தேர்ந்துகொண்ட இளங்கோ அம்மக்கள் வழக்கிலுள்ள பல்வேறு இலக்கியக் கூறுகளையும் உள்வாங்கியே தமது காப்பியத்தைக் கட்டமைத்துள்ளார் என்பதே இக்கட்டுரையின் சாராம்சமாகும். அவ்வகையில் ஏற்கெனவே துரை. சீனிச்சாமி முதலிய சில ஆய்வாளர்கள் மேற்கொண்ட காப்பியக் கட்ட மைப்பு பற்றிய பார்வைகளின் தொடர்ச்சியாக இக்கட்டுரை திகழ்கிறது எனலாம்.

அடுத்து, சிலப்பதிகாரத்தை நாடகப் பண்பு கொண்ட ஆக்க மாகத் தரிசிக்கும் வகையில் இவ்வாய்வுக் கோவையியில் இடம்பெற்றுள்ள இரு கட்டுரைகள் இங்கு கவனத்துக்கு வரு கின்றன. அவை, முனைவர் இரா. குமரவேலன் அவர்களின் 'சிலம்பில் நாடகப்பாங்கு' என்ற கட்டுரையும் முனைவர் மு. தங்கராசு அவர்களால் எழுதப்பட்டதான 'சிலம்பும் மேடை நாடகமும்' என்ற கட்டுரையுமாகும்.

'சிலப்பதிகாரத்தை நாடகப்பண்பு கொண்ட ஆக்கமாகத் தரி சிக்கும்' ஆய்வு முயற்சிகள் கடந்த நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டன என்பதும் அவ்வகையில் அவை குறிப் பாக, மேலைத்தேச மரபிலிருந்து அறிமுகமான 'அவல நாட கம்' என்ற கருத்தாக்கம் சார்ந்து நிகழ்ந்துள்ளன என்பதும் இக்கட்டுரையில் முற்பகுதியில் சுட்டப்பட்டுள்ளன. அவ்வகை ஆய்வுகள் குறிப்பாக கிரேக்க மற்றும் ஆங்கில நாடகங்களு டன் ஒப்பிடும் முயற்சிகளாக அமைந்திருந்தன என்பதும் ஏற் கெனவே அங்கு நோக்கப்பட்டன. அவ்வகையில் அமைந்த தான பேராசிரியர் கா. செல்லப்பனவர்களுடைய 'சிலம்பும் கிரேக்க நாடகங்களும்' என்ற கட்டுரையையும் மேலே நோக் கியுள்ளோம்.

இங்கு நாம் நோக்கவுள்ள கட்டுரைகளில் முதலாவதான முனைவர் குமரவேலன் அவர்களது கட்டுரையானது சிலப்ப திகார காவியத்தை நாடகம் என்ற கட்டமைப்பு நிலையில் நோக்குவதற்கான அடிப்படைகளை விளக்கியுரைக்கும் நோக் கில் எழுதப்பட்டதாகும். சிலப்பதிகாரமானது 'நாடகப் பாங்கு டைய ஆக்கமாகவே பல்லாண்டுகளாகக் கருதப்பட்டு வருவ தும்' 'நாடக நிலையில் மேடையிலும் திரையிலும் நிகழ்த்தப் பட்டு வருவதும்' பொதுவாக நாமறிந்த செய்திகளேயாகும். முனைவர் குமரவேலன் அவர்களின் இக்கட்டுரையானது 'அவ்வாக்கத்தை நாடகமாகக் கொள்ளும் வகையில் அமைந் துள்ள கூறுகள் யாவை?' என்பதை அடையாளங் காட்டும் நோக்கில் எழுதப்பட்டதாகும்.

இலக்கிய வடிவங்கள் என்றவகையில் 'காப்பியம்' மற்றும் 'நாடகம்' ஆகிய இரண்டும் வேறுபட்டவை என்பது வெளிப் படை. காப்பியமானது வாசிப்பை மையப்படுத்திய கதைகூ றும் முறைமையாகும். நாடகமானது கதையம்சத்தை, 'கட்புல நுகர்வு' மற்றும் 'செவிப்புல நுகர்வு' ஆகியவற்றுடனான நிகழ்த்துகலை அம்சங்களை மையப்படுத்தி எடுத்துரைக்கும் கட்டமைப்பாகும். சிலப்பதிகாரமானது காப்பியம் என்ற வகையிலான கட்டமைப்பிலே நாடகம் சார்ந்த மேற்படி நிகழ்த்துகலை அம்சங்களையும் உள்ளடக்கி உருவாக்கப் பட்டதாகும். அதனாலேயே இதனைக் நாடக வகைசார் ஆக் கமாகவும் தரிசிக்கும் மரபு தமிழ்ச் சூழலில் உருவாகி நிலைத்தும் விட்டது. இவ்வாறு அதனை நாடகமாகக் காண்ப தற்கான அடிப்படைகள் யாவை என்பதைச் சுட்டிக்காட்டும் செயற்பாடாகவே முனைவர் இரா. குமரவேலன் அவர்களின் இக்கட்டுரை அமைந்துளது.

இம் முயற்சியிலே சிலப்பதிகாரத்தின் 'கதைப்பின்னல்', 'கதை மாந்தர் சித்திரிப்பு', அதில் இடம்பெற்றுள்ள 'இசை - கூத்து சார் கூறுகள்' மற்றும் 'நாடக இயக்கத்துக்கான காட் சிப் பின்புலக் குறிப்புகள்' முதலான பல்வேறு அம்சங்களை அவர் கவனத்துக்கு இட்டுவந்துள்ளார். இவ்வாறான அம்சங் கள் நாடகப் பாங்கானவை என்பதை விளக்கியுரைப்பதற்கு அவர் ஆய்வுக்கு முன்னைய ஆய்வாளர்களை ஒட்டி மேலை நாட்டு நாடக மரபுசார் சிந்தனைகளையே ஒப்பீட்டு நிலையி லான முக்கிய ஆதாரங்களாக எடுத்தாண்டுள்ளார். இவ்வ கையில் குறிப்பாக அரிஸ்டாட்டில், என்றி வெல்சு, எலியட், மௌல்டன் முதலான மேலைத்தேச நாடகச் சிந்தனையாளர்க ளின் கருத்துகளை மையப்படுத்தி இக்கட்டுரையை அவர் கட்டமைத்துள்ளார்.

'அரிஸ்டாடிலின் பழைய அளவுகோலின் படியும், மௌல்ட னின் புதிய ஆய்வு நோக்கின்படியும் சிலப்பதிகாரம் ஒரு சிறந்த நாடகமாக விளங்குகிறது என்பதை இக்கட்டுரை ஆராய்ந்து நிறுவியுள்ளது'

என்ற குறிப்புடன் அவருடைய இக்கட்டுரை நிறைவடைகிறது.

இரண்டாவதான முனைவர் மு. தங்கராசு அவர்களுடைய கட் டுரையானது மேடை நாடகம் என்ற நிகழ்த்துகலை வடிவம் பெற்றவையான 'சிலப்பதிகாரக் கதைகளைப் பற்றிய ஒரு மதிப்பீட்டுக் குறிப்பாகும். குறிப்பாக சங்கரதாஸ் சுவாமிகள் மேடையேற்றிய 'கோவலன் சரித்திரம்'. இந்திரா பார்த்த சாரதி அவர்களால் எழுதப்பட்ட 'கொங்கைத்தீ' மற்றும் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் எழுதப்பட்டதான 'சிலப்பதிகார நாடகம்' ஆகியன பற்றிய ஒரு பொதுநிலை மதிப்பீடாக மட்டுமே இது அமைந்துள்ளது.

(தொடரும்.)



subramanian.n@thaiveedu.com

# பூமா

## -அகரன்

ஓவியம் - ட்ராட்ஸ்கி மருது

நீ அழாதே குளுட். உனக்கு என்ன நடந்தது? அவளது கீழ் உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தது. கொக்கு ஒன்று நீரில் நடப்பது போல் என் அருகே வந்து தனது இரவு உடையை தூக்கி தன் தொடைப்பகுதியை காட்டினாள்.

அவளது வலது தொடையில் வெள்ளை துண்டால் கட்டு போடப்பட்டிருந்தது. இடது தொடையை விட இரண்டு மடங் காக அது வீங்கி இருந்தது. தொடைப்பகுதி பொலித்தீன் பையில் குருதியை கட்டி விட்டது போல் இறைச்சி நிறம். அல்லது சிவத்த பூவிதழ்கள் குலைந்து கிடப்பது போல் இருந்தது.

'குளுட் நீ என்ன விபத்தில் சிக்கினாயா?' என்றேன்.

அவள் தலையை அசைத்தாளேயொழிய வாய் திறந்து ஒன் றும் மொழிந்தாள் இல்லை. உதடுகள் தைத்துவிட்டது போல வும், கன்னங்கள் கசக்கிவிட்ட தாள்கள் போலும் இருக்க கண்ணீரை துடைத்தபடி இருந்தாள். மெலிந்த மூக்கு திடீ ரென உயிர் பெற்றது போல் சிவந்தது. கண்களில் இருந்து மீன் முட்டைகள் போல் துளிகள் கொட்டியபடி இருந்தது.

அவள் கரங்களைப் பற்றி... 'உனக்கு என்ன நடந்தது? நீ என்னை அழைத்திருக்கலாமே?' என்றேன்.

என் தோளில் நாடியை வைத்தபடி 'பூமா என்னை கடித்து விட்டது' என்று என் முதுகுக்கு கேட்கும்படி சொன்னாள். புய லில் சிக்கிய தென்னோலை போல் இருந்த அவள் அள கத்தை வருடியபடி 'அதற்கு என்ன நடந்தது?' என்றேன்.

'முந்தைய நாள் இரவு நான் தூங்கிக் கொண்டிருந்தேன். அது கீழே இருக்கின்ற அவனது பெட்டிக்குள் தூங்கிக் கொண்டிருந்தது. சாமம் கடந்த நேர்த்தில் பாய்ந்து அது என்னை தாக்கியது. ஆனால் கடித்த மறு நொடி வந்த ரத் தத்தை அதன் நாக்கு தொட்டதும் பாய்ந்து ஓடி வெளியே சென்றுவிட்டது. அது தன்னுடைய கனவில் ஏற்பட்ட அதிர்ச்சி யில்தான் அப்படி செய்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் பூனை வைத்தியர்கள், அது வாழ் வின் அந்திமத்துக்கு வந்துவிட்டது, அதற்கு நினைவுகள் கலையும் நோய் வந்துவிட்டது என்கிறார்கள்'.

'ஏதாவது சாப்பிட்டாயா?'

'இல்லை. மூன்று நாட்களாக இல்லை. பூமா சாப்பிட மறுக் கிறது. அது என்னை நேர்கொண்டு பார்க்க மறுக்கிறது. நான் அருகே போகும் போது அது வெளியேறி விடுகிறது. நான் அதை மன்னித்துவிட்டேன். ஆனால் அது தன்னை தனிமைப் படுத்திக் கொள்கிறது. பூமா கனவில் தான் அதைச் செய்தி ருக்கிறது. ஆனால் வைத்தியர்கள் அதை ஏற்க மறுக்கிறார் கள்.

'அது எல்லாம் சரியாகிவிடும். நீ முதலில் அந்த மென் இருக்கையில் இருந்து கொள்.'

அவள் கரங்களைப் பற்றி இருக்கை இடம் வரை கொண்டு சென்று அமர வைத்தேன். தன் இரு கரங்களாலும் பூவை வருடுவது போல் கண்ணீரைத் துடைத்தபடி புன்னகைத்தாள்.

'நீ எனக்கு அழைத்து இருக்கலாமே?' என்றேன்.

'இங்கே பார் உனது இலக்கத்தை எழுதிப் பார்த்தேன். என் னால் எல்லா இலக்கங்களையும் சேர்க்க முடியவில்லை.

'முதலில் என் இலக்கத்தை ஒரு இடத்தில் எழுதி வை. நீ அதிகமான அழுத்தத்தில் இருந்தால் உனது அலெக்சாண்டர் மூளை வேலை செய்யாது' என்றேன்.

அவள் முகத்தில் முதுமுகை பூத்தது. அலை அலையாக கன்னங்கள் மடிந்து சிரிப்பு வந்தது.

குளுட் கைபேசி பாவிக்காதவள் மட்டுமல்ல, அதை வெறுப்ப வளும் கூட. வயர்பேசி மட்டும் உண்டு. அவள் மூளையில் எல்லா இலக்கங்களும் இருக்கும். தனது மூன்று மகள்களின் இலக்கம், நண்பிகள், அரசு அலுவலகங்கள், உணவகங்கள் வைத்திய நிலையம் என்று மனப்பாடமாக்கி வைத்திருப்பாள். இது பற்றி ஒரு முறை 'உன்னால் எப்படி இத்தனை இலக் கங்களையும் மூளையில் வைத்திருக்க முடிகிறது?' என்ற போது,

'அலெக்சாண்டர் தன் படையிலிருந்த 30,000 வீரர்களின் பெய ரையும் நினைவில் வைத்திருந்தான். உங்கள் வருங்காலம்



மனித மூளையை பூஞ்சனம் பிடிக்க வைக்கும் காலமாகத் தான் இருக்கும்' என்றாள்.

அவள் வீட்டில் தொலைக்காட்சி இல்லை. பார்க்கும் இட மெல்லாம் புத்தகங்கள்.

'முதலில் நான் உனக்கு உணவு செய்து தருகிறேன்' என் றேன்.

'நீ இன்று வருவாய் என்று உனக்காக காத்திருந்தேன்' என் றாள்.

அவள் சமையலறை விற்பனை நிலையங்களில் விளம்பரத் துக்கு வைத்தது போல் சுத்தமாகவும், அழகாகவும் இருந் தது.

இஸ்பானியோல் தொர்த்தியா என்ற உணவை அவள் விரும் புவாள். இலகுவாகவும் வேகமாகவும் அதை செய்யலாம் என்று சிந்தித்தபடி முட்டை, உருளைக்கிழங்கு, வெங்காயம் என்பவற்றை எடுத்துக் கொண்டேன். உருளைக்கிழங்கையும் வெங்காயத்தையும் சிறு துண்டுகளாக்கி, அவற்றை சற்று வதக்கி, சொறிசோ பன்றி வத்தல் கீலங்களை அதற்குள் போட்டு முட்டையோடு கலந்து அவித்தால் 15 நிமிடத்திற் குள் தொத்தியா தயாராகிவிடும்.

குளுட் ஓய்வு காலத்தை 9 ஆண்டுகளாக அனுபவிக்கிறாள். அவளுக்கு இப்போது 71 வயது. ஆனால் சென்ற கிழமை பாரிசில் நடைபெற்ற போராட்டத்திற்கு சென்று வந்திருந் தாள். 62 வயதிலிருந்து 64 வயதாக ஓய்வு காலத்தை மக்க ளின் விருப்பத்திற்கு எதிராக மாற்றிய அதிபருக்கு எதிராக நான் ஏதாவது செய்திட வேண்டும் என்று துடிப்பில் இருந் தாள்.

'இந்த வயதில் இது உனக்கு அவசியமா? நீ தானே எல்லா வற்றையும் கடந்து விட்டாய்?' என்று நான் கூறிய போது 'அப்படி அல்ல, நாம் இங்குதான் இருந்தோம். நாம் இங்கு தான் இருக்கிறோம். நெருப்பு பற்றிய கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்க முடியாது' என்றாள். அப்போது தான் தனது பெயரின் அர்த்தத்தை எனக்கு சொன்னாள். 'குளுட் என்ற பெயர் லத்தின் மொழியில் 'மக்களின் வெற்றி' ஆனால் மக் கள் வெல்லும் காலம் கண்ணுக்கு தெரியவில்லை' என்று தனக்கே உரிய முறையில் சத்தமிடாது சிரித்தாள்.

குளுட்டின் வீட்டில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை நாலு மணியிலிருந்து ஏழு மணி வரை எனக்கு வேலை இருக்கும். நான் சென்றதும் முதலில் நாம் இருவரும் காபி குடிப்போம். அவள் ஏற்கனவே என்னென்ன வேலை என்பதை அந்த மேசையில் எழுதி வைத்திருப்பாள். அவ ளுக்கு எட்டாத பகுதியில் இருக்கும் குளியலறை சுவர்களை கழுவுவது, ஏற்கனவே சுத்தமாக இருக்கும் பூனையின் அறையை காற்று எடுப்பானால் தூசிகளை இழுப்பது, புத் தக அலுமாரிகளின் கண்ணாடிகளை துடைப்பது, எல்லாவற் றிலும் முக்கியமாக அவளுடன் பேசுவது.

அவளோடு பன்னிரெண்டு ஆண்டுகள் வாழும் பூனையின் அறை குளுட்டின் அறையைவிட அழகுடன் இருக்கும். விலங்குகளிலேயே சுத்தமானது பூனை. நபிகள் நாயகம் வீட் டில் வளர்க்க அனுமதித்த ஒரே விலங்கும் அது தான்.

கிரேக்க பூனைகள் பொறாமைப்படும் படி குளுட்டின் பூனை வசதிகளை அனுபவித்தது. அதற்கென்று கதிரை, விளையாட ஊஞ்சல், உயிரில்லாத எலிகள். பஞ்சு விரிப்பு, அதற்கு உயிர்ச்சத்து மாத்திரைகள் என்று உலகில் பல மனிதர்கள் காணாத சுகபோகங்களை அனுபவித்தது. அவள் எங்கு நடந்து திரிந்தாலும் அவள் கால்களை வருடியபடி நின்றிருக்கும். அதன் வயிறு வெண்மையாகவும் முதுகு சாம்பல் நிறத்திலும் கால்கள் இருட்டு நிறத்திலும் இருக்கும். கண்கள் மஞ்சளில் கறுப்புப் பொட்டு வைத்தது போல் நிறங்கள் குழைத்து வைத்த பூனை. எனக்கு அது குரலை மறந்த பூனை என்ற உறுதியான நம்பிக்கை உண்டு. ஒரு போதும் அது குரல் எழுப்பிப் பார்த்ததில்லை. அதற்கு எந்தக் குறைகளும் இல்லாததால் கத்துவதை மறந்திருக்கலாம்.

‘இப்படியான பூனை அறை ஒன்று அகதிக்கு கிடைத்தால் தேவலை’ என்று நினைத்துக் கொள்வேன். அப்படிக் கிடைத்தாலும் அகதிகள் அதை பன்றிகளின் அறையாக மாற்றிவிடும் ஆற்றல் வாய்ந்தவர்கள். அங்கு இப்படியான சிந்தனைகளில் வேலை செய்து கொண்டிருந்தால் குளுட் ‘உனது நேரம் முடிந்துவிட்டது. உடனடியாக சாப்பாட்டு மேசைக்கு வருவாயா?’ என்பாள். அந்த நேரத்தில் ஏற்கனவே திட்டமிட்டபடி இரவு உணவை ஆக்கி வைத்திருப்பாள். ஒரு வேலையாளுக்கு சமைத்து பசியாற வைத்து அனுப்பும் முதலாளி அவள். அவளுக்கு வேறு வழியும் இல்லை.

அந்தோனியின் சந்தையில் சனி காலையில் வேலைசெய்ய ஆரம்பித்த போதுதான் குளுட்டை சந்தித்தேன். அதிகாலையில் முதியவர்கள் கொண்டாட்டத்திற்கு செல்வது போல் தம்மை அலங்கரித்து வருவார்கள். அந்தோனி என்னை சிரிக்க வைப்பதற்கு பால்-இயல் கதைகளை கூறியபடி வியாபாரம் செய்வான். சிரிக்காமல் அவனருகில் பூதமும் நிற்க முடியாது. அப்படி ஒருநாள் மரக்கறிகள் வேண்டியபின் ‘நீங்கள் சிரித்த படியே வேலை செய்கிறீர்கள்’ என்றபடி என்னருகே வந்தவள் ‘எனக்கு வீட்டு விஞ்ஞானம் அறிந்த பெண் வேண்டும். ஒவ்வொரு ஞாயிறும் மூன்று மணி நேரம் வேலை இருக்கும்’ என்றாள். எனக்கு ‘வீட்டு விஞ்ஞானம்’ என்ற சொல் புரியவில்லை. அவள் தன் இலக்கத்தை கையோடு எழுதி வந்திருந்தாள். மாலையில் அழைத்து விபரம் கேட்ட போது வீடு சுத்தம் செய்வதற்கு ஒரு பெண் வேண்டும் என்பது தெரிய வந்தது. அந்த வேலைக்கு ஆணை அனுமதிக்க மாட்டாயா? என்றேன். ‘ஆண்கள் இவ்வளவு வளர்ந்திருப்பார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை’ என்றாள். ‘எங்கள் பெண்களுக்கு காலம்காலமாக செய்த கொடுமைகளுக்கு பலனாக இப்போது நமக்கு தண்டனை கிடைத்துள்ளது’ என்றேன். இப்படிப்பேசி அந்த மூன்று மணி நேர வேலையை கைப்பற்றிக் கொண்டேன்.

கணவன் இறந்து பத்து ஆண்டுகள் கடந்து விட்டது. பிள்ளைகள் மிக தூரம் சென்று விட்டார்கள். அவள் அகதி இல்லாவிட்டாலும் தனிமையில் வாழ்கிறாள். அவள் பூனை மட்டுமே பேச்சுத்துணை. இப்போது ஞாயிறுகளில் பூனைக்கு போட்டியாக நான்.

ஆனால் வீடு நிறைந்த நிழற்படங்கள் உடன் பிள்ளைகள், கணவர், அவளது பெற்றோர் என அழகிய சட்டங்களில் மாட்டப்பட்டிருந்தனர். புகைப்படங்கள் பேசும் காலம் வருங்காலத்தில் வரலாம். அதுவரை குளுட் மட்டும் அவற்றுடன் பேசுவாள். பூனைக்கு அருகில் என் புகைப்படமும் இருக்க வாய்ப்புண்டு. பூனையின் வயதை விசாரித்த போது, ‘ஆரம்பத்தில் விலங்குகளை வீட்டில் வளர்ப்பதில் விருப்பம் இருக்கவில்லை. கமிங்வே வளர்த்த பூனை அவர் தற்கொலை செய்து இறந்ததும், உணவு உண்ணாமல் இருந்து இறந்ததை அறிந்த போதுதான் பூனை மீது மனிதப் பற்று ஏற்பட்டது. என் கணவன் மிசலுக்கு சொன்னேன். மறுநாள் இந்தப் பூனையை ஒரு மாதக் குழந்தையாக மிசல் கொண்டு வந்தார். மிசல் அடுத்த ஆண்டு இறந்தபின் அவரை நினைவுபடுத்தியபடி பூமா இருக்கிறது ’என்பாள்.

தொர்த்தியா மஞ்சள் சூரியகாந்தி போல் வெந்து வந்திருந்தது. அதை தட்டில் எடுத்தபடி குளுட் இருந்த இருக்கை நோக்கி நடந்தேன்.

‘மூன்று நாட்களில் நீ உடல் இளைத்துவிட்டாய்’ என்றேன்.

‘பூமா கடித்த காலின் வலி அப்படியே இருந்தது. வைத்தியசாலையில் இருந்து வந்து படுத்ததும் அசைய முடியவில்லை.’

‘இப்போது உன் பூமா எங்கே?’

‘அது தன் அறையில் இருக்கிறது. இரவில் கத்தியபடி இருந்தது. நான் அழைத்தும் அருகே வரவில்லை. அது எந்த உணவையும் எடுக்கவில்லை.’

‘அப்படியா? இந்த உணவில் கொஞ்சம் கொடுப்போமா?’

‘ஏன் கூடாது? சற்று பொறு நானும் வருகிறேன்’

பூமா பாதியாக குறைந்திருந்தது. எனக்கு உள்ளுக்குள் ‘விசர்ப் பூனை இன்று என்னையும் வேட்டையாடுமோ’ என்ற பயம் இருந்தாலும் வெளிக்காட்டாமல் நின்றேன். குளுட் அதை பார்த்தபடியே இருந்தாள். அவள் கண்களில் நீர் ஊறி வருவது தெரிந்தது. கையை நீட்டி ‘பூமா என்னிடம்வா... பூமா என் செல்லமே! என்னிடம்வா... ‘என்று இரந்தாள். பூமா தொத்தியாவையும், என்னையும் ஏறெடுத்து பார்க்காமல் வெளியேறியது. அதன் அசைவு புலி ஒன்று ஒதுங்கிப் போகும் முறையில் இருந்தது. அறையெங்கும் அது உண்ணாத உணவுகள் நிறைந்திருந்தது.

குளுட் மீண்டும் மூக்கு சிவந்து கண்கலங்க ஆரம்பித்தாள். அவளை தோளில் அணைத்து ‘அழாதே அது தேறிவிடும்’ என்றேன்.

‘இல்லை நாளை போலீஸ் அதை கைது செய்ய வருகிறார்கள். அது என்னை விட்டுப்போய்விடும்’ என்று குலுங்கி அழுதாள். ‘அது இல்லாமல் எப்படி நான் வாழ்வது?’ என்ற குளுட்டின் ஒலி என் முதுகில் இருந்து வந்த போது வீதியில் பூமா வீரிடும் சத்தமும் டீசல் மிருகமொன்றின் சத்தமும் சேர்ந்துவந்தது.



akaran@thaiveedu.com



# பெறுமதி சேர்க்கப்பட்டது

– வசந்தி தயாபரன்

ஓவியம் : செல்வன்

தங்கையிடம் மட்டுமே பகிர்ந்துகொள்ளக்கூடிய எத்தனையோ கதைகள்! அம்மா இறுதி நாட்களில் சொன்னவை! அம்மாவின் கடைசி நிமிடங்கள்! ரெலிபோனில் சொல்லாத எத்தனை எத்தனை! ஒரேயொரு தங்கை தாரிணியுடன் கதைத்து, தனது மனப்பாரத்தை இறக்கலாம் என்றுதான் வேதா நம்பியிருந்தாள்.

வேதாவின் மனதில் அம்மா வந்து நின்றா. தாரிணியைப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்துடனேயே ஐந்து வருடங்களாகக் காத்திருந்து, மேலே போய்விட்டா அம்மா. கொரோனா வந்து, அம்மாவை அது பலியெடுத்து, இறுதிக் கிரியைகளும் செய்யமுடியாமல் அநாதைபோல அம்மாவைத் தூக்கிக் கொடுத்துவிட்டு செய்வதறியாமல் தவித்த நாட்கள்... குற்ற உணர்வுடன், எத்தனை இரவுகள் நித்திரையின்றி... தோள் சாய்த்து அழுவதற்கும் ஆற்றுவதற்கும் எவரும் வரமுடியாத அந்த நாட்களின் இம்சை.

தாரிணி காரிலிருந்து இறங்கியதும் வேதாவை நோக்கி வந்து, அவள் கையைப் பற்றினாள். கன்னத்துடன் கன்னம் வைத்தாள். 'ஹூம்...' என்று விசும்பிவிட்டு, ஆழமான ஒரு மூச்சை விட்டாள். தங்கையின் தொடுகையில், கண்களில் நீர் திரளத் தொடங்கியது. அம்மாவின் நினைவுகள் அலை அலையாகப் பொங்கியெழுந்து தொண்டைக்குள் முட்டிக்கொண்டு அடைக்குமாற்போல! வேதா உடைந்து அழத் தொடங்கினாள். அடிவயிற்றைப் பிளந்துகொண்டு அழுகை எழுந்தது.

'ஸ்...அக்கா!' என்றது தாரிணியின் கண்டிப்பான குரல். 'அங்க பாருங்கோ, அவர் பார்த்துக்கொண்டு நிற்கிறார். அங்கேயென்றால் செத்தவீட்டுக்கு ஒருவரும் அழமாட்டினம். அது மரியாதையில்லை. அழுகையை நிப்பாட்டுங்கோ அக்கா! கண்ணைத் துடையுங்கோ! அவர் எங்களை ஏதோ பட்டிக்காடுகள் என்று நினைக்கப்போறார்.' தாரிணி வேதாவின் கையை அழுத்தியதில் ஏதோ எச்சரிக்கை தெரிந்தது.

ஆட்களுக்கு முன்னால் கட்டிப் பிடித்து அழுவது இப்போதெல்லாம் நாகரிகமில்லை என்று வேதாவுக்கு உண்மையிலேயே தெரியாது! வெளிநாட்டுப் பழக்கவழக்கங்களாக்கும்! அதுவும் பெற்ற தாயின் பிரிவின் வலியை சகோதரிகள் பகிர்ந்துகொள்வது கூடவா? அம்மாவின் இழப்பின் நோவை இவ்வளவு சுலபமாகக் கடந்துபோகவும் முடியுமா? அப்படியானால், தாய்ப்பாசம், இழப்பின் துயர் எல்லாமும் கூட அங்குள்ளவர்களுக்கு இல்லையா? வேதாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

தூரத்தில் நின்ற அவர் கிட்ட வந்தார். இலங்கையில் வாங்கிய பற்றிக் சேட்டுடனும் உச்சிக் குடுமியுடனும் அவர் ஏதோ விதத்தில் இலங்கையின் பழங்குடிகளை நினைவூட்டினார். மென்மையாக அவளது தோள்களை அணைத்துக்கொண்டு 'சிம்பதிஸ்...' என்று கைகுலுக்கினார். அதற்குமேல் என்ன செய்வது என்று தெரியாமல் தாரிணியின் முகத்தைப் பார்த்தார். அவருக்கு இங்குள்ள பழக்கங்கள் என்னவென்று தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் தாரிணி?

தாரிணி ஒருவேளை அவரின் முன்னால் இப்போது அழுவதற்குத் தயங்குகிறாளோ? பிறகு தனிமையில் கதைப்பாளோ? அல்லது ஒருக்காலும் கதைக்கவே மாட்டாளோ? வேதாவுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

ஒன்றும் புரியாதவளாய் கனத்த மனதுடன் வேதா மௌனமாக வீட்டுக்குள் போனாள். மகள் நிம்மி ஹோலின் இருட்டு மூலையில் நின்று, தாயின் வாடிய முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'அட, இது நிம்மியல்லா! வளந்திட்டாள்' என்றபடி தாரிணி தனது கணவருக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தாள். அவர் வந்து 'ஹாய்' என்று நிம்மியின் கைகளைக் குலுக்கினார். தோளை அணைத்துக்கொண்டார்.

'அப்பிடியே நில்லுங்கோ! படம் எடுக்கவேணும்.'

நிம்மி சங்கடத்துடன் நெளிந்தாள். முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் இப்படி நெருக்கமாக நின்று அணைத்துக் கொள்வது அவளுக்கு ஏதோபோல இருந்தது.

'ஏனக்கா இப்படி வெக்கப்பட்டு மூலைக்க நிக்கிறாள்? அம்மாவையின்ர வளப்பாக்கும்! இந்தக்காலத்தில இப்பிடி இருந்து என்ன செய்யப்போறாள்?'

வேதாவுக்கு மெல்லிதாகக் கோபம் வந்தது. இந்த மண்ணில்



வளர்ந்தவள் தானே தாரிணி! திடீரென அவளுக்கு எல்லாமே அந்நியமானதாக, நகைப்புக்குரியதாக மாறிப்போய் விட்டதா? அம்மாவின்ர சாவைப் பற்றி ஒரு சொல்லுக்கூட இது வரை கதைக்க விரும்பாமல் இறுக்கமாக இருக்கும் தாரிணி, அவவிட வளர்ப்பைப் பற்றி நொட்டை சொல்வது மட்டும் என்ன நாகரிகம்!

நிம்மி வேகமாகத் தனது அறைக்குள் போனாள். அவளது கோபம் நியாயமானதுதானே! ஐந்து வருடங்களாக நிம்மியுடன் மனம் விட்டுக் கதைத்துப் பழகாத தாரிணிக்கு, அவளது ஆளுமை பற்றி என்ன தெரியும்!

அப்பப்பா அம்மம்மாவின் கைக்குள் வளர்ந்த செல்லப் பேத்தி நிம்மி. மன உறுதி மிக்க ஒரு பதின்ம வயதுப் பெண்ணாக, வளர்ந்து நிற்பவள்! ஒரு தாயாக வேதாவுக்கு அவளைப் பற்றிப் பெருமை!

**வே**தா பரபரப்பாக சமையலில் ஈடுபட்டிருந்தாள். தாரிணி குசினிக்குள் எட்டிப் பார்த்தாள்.

'அக்கா, இதென்ன அம்மியில அரைக்கிறீங்கள்! இன்னும் உதுகளை விட்டுத் துலைக்கேல்லையே...'

'ஏன், எங்கட அம்மா, அம்மம்மா எல்லாரும் அரைக்கேல் லையே! நீயும் இங்க இருக்கேக்கை எல்லாம் அரைச்சனி தானே!'

'அது அந்தக்காலம் அக்கா. இப்ப வசதிகள் வந்த பிறகு ஏன் பழசையே கட்டிப்பிடிச்சு அழுகிறீங்கள்? அதுதான் உங் கட கைகள் எல்லாம் இப்படிக் காச்சுப் போயிருக்குது. நான் பாலரில கைகளையும் கால் பாதத்தையும் அழகு படுத்திக் கொண்டுதான் வந்தனான். இங்க... என்ர கையைப் பாருங்கோ!'

வேதா அரைப்பதை தாரிணி படம் எடுத்துக்கொண்டே நாக ரிக உலகம் பற்றி வகுப்பு எடுத்துக்கொண்டு இருந்தாள்.

'தாரிணி, என்னவோ கனக்கச் சொல்லுறாய்! பின்ன ஏன் இதையெல்லாம் படம் எடுக்கிறாய்?'

'அக்கா, உங்களுக்கு ஒன்றும் தெரியாது! இது எங்கட பாரம் பரிய சமையல் முறை என்று போட்டு, இதை என்ர குரூப் பில போட்டால், நிறையப்பேர் லைக் போடுவினம். அங்க யுள்ள சனத்துக்கு அது ஒரு டிரெண்ட்! அப்பதான் சைனிஸ், இந்திய, நேபாளி ஆக்களைப்போல நாங்களும் பழைய பாரம்பரியம் உள்ள ஆக்கள் என்று பெருமையாக் காட்ட லாம்'.

வேதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. பாரம்பரியம் என்றா தாரிணி சொன்னாள்? இதுவரை அம்மாவைப் பற்றி ஒரு சொல்லும் கேட்காத தாரிணிக்கு, இந்தச்சொல்லை உச்ச ரிக்க அருகதை இருக்கிறதா என்று வேதாவுக்குச் சிரிப்பு வந்தது.

**சா**ப்பாட்டு மேசைக்கு அழகிய பூக்கள் போட்ட விரிப்பை நிம்மி விரித்திருந்தாள். 'கைபட்டா கைலாயம் போல இருக்க வேணும்' என்று அம்மம்மா சொல்லிக் கொடுத்ததை அவள் மறக்கவில்லை. எதிலும் ஒரு நறுவிசை! நேர்த்தி!

அம்மியில் அரைத்த கறியை சப்புக் கொட்டியபடி ருசித்துச் சாப்பிட்டாள் தாரிணி.

தாரிணி குனிந்து மேசையின் கீழே கைகளால் சுரண்டிப் பார்த்தாள்.

'இது அப்ப வீட்டில இருந்த பழைய மேசைதானே அக்கா?'

'ஓம், நாங்கள் சின்ன வயசில இதில இருந்துதானே படிக்கிற னாங்கள். நீயும் நானும் ஒருவரையொருவர் குட்டிக்கொண்டு, நுள்ளிக்கொண்டு!

'இதைத்தூக்கி எறிஞ்சுபோட்டு மொடர்னான மேசை கதி ரையை வாங்கிப் போடுங்கோ அக்கா! டொக்கு டொக்கு எண்டு ஆடுது. சரியான பழசாப் போச்சு! இன்னும் பாவிக்கி றீங்களே'.

வேதா ஒன்றும் பேசாமல் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு குசினிக்குள் போனாள்.

'அம்மா, நீங்க பழைய கதைகளைச் சொல்லிக்கொண்டே இராதேங்கோ. சும்மா விட்டிட்டு இருங்கோ!'

நிம்மியின் குரலில் எரிச்சல் தெரிந்தது.

நிம்மி, குசினியில் பாத்திரங்களைக் கழுவுவது, வழமைக்கு மாறாக, பெரிய சத்தத்துடன் கேட்டது.

தாரிணியின் கணவர் வளவுக்குள் நிற்கும் பெரிய நாவலை யும், இலுப்பையையும், வேம்பையும் பார்த்து வியந்துபோய் சுற்றிக்கொண்டிருந்தார். செண்பகம், கிளி, பருந்து என்று கண்ணில்பட்ட எல்லாவற்றையும் படம்பிடித்தார். கிணற்றுக் குள் எட்டிப்பார்த்து ஆச்சரியப்பட்டார். 'இவருக்கு உதுகளில ஒரு பைத்தியம்!' என்றபடி தாரிணி அம்மாவின் அறையிலி ருந்த பெட்டகத்தை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

'அம்மம்மாவிட பெட்டகம் தானே அக்கா?'

'பரவாயில்லையே, உனக்கு நினைவிருக்குதே!'

'ஓ, அம்மா இதைப் பொத்திப் பொத்தி வச்சிருப்பா!'

தாரிணிக்கு அம்மாவின் நினைவு வந்ததில் வேதாவுக்கு ஒரு திருப்தி. இனி ஆறுதலாக இருந்து கதைக்கலாம்.

எங்கு தொடங்குவது? அம்மா இறப்பதற்கு முதல்நாள் அப் பாவைப் பற்றிக் கதைத்ததை முதலில் சொல்லவேண்டும். பிறகுதான் மிச்சம் எல்லாம்! வேதா மனதில் வரிசைப்படுத் திக் கொண்டாள்.

தாரிணி எதுவுமே பேசாமல், பெட்டகத்தைக் கிண்டிக்கொண் டிருந்தாள். அதற்குள் இருந்த சில பொருட்களை எடுத்துப் பார்ப்பதும் வைப்பதுமாக இருந்தாள்.

'தாரிணி, அம்மாவிட பட்டுச் சேலைகள் ஒன்றிரண்டு கிடக் குது, புத்தகங்களும் கிடக்குது. பாத்து உனக்கு வேண்டிய தைக் கொண்டுபோவன்'.

'அதுகளைக் கொண்டுபோய் என்ன செய்யிறது? பிள்ளைக ளுக்குத் தமிழ் வாசிக்கத் தெரியாது. நானும் உந்தப் பழைய பட்டுச்சேலையை உடுக்கப் போறதில்லை! நீங்களே வைச்சி ருங்கோ'.

அந்தப் பட்டுச்சேலைகள் புத்தகங்கள் எல்லாவற்றிலும் அம் மாவின் வாசமும், அவ வாழ்ந்த நாட்களின் வாசமும் ஒட்டி யிருப்பதை இவள் உணரமாட்டாள். இவள் அவற்றை உதறி புதிய நறுமணங்களைப் பூசிக்கொண்டு நீண்டகாலமாகி விட் டதாக வேதாவுக்குப்பட்டது.

'அக்கா இங்க பாருங்கோ இந்த பித்தளைப் பாத்திரத்தை!

சுத்திவர எவ்வளவு வேலைப்பாடு! கிளிகள், செடிகள்! ஐயோ நல்ல வடிவாயிருக்கு! வீட்டு ஹோலில வைச்சு விட்டா, வாறவை எல்லாரும் பாரம்பரியப் பொருள் எண்டு சொல்லி பார்த்து ஆச்சரியப்படுவினம். இதை நான் கொண்டுபோகப் போறன்.'

'அதுக்கென்ன தாரிணி. கொண்டுபோவன்'

இந்தப் பொருட்கள் அம்மாவும் அம்மம்மாவும் புழங்கியவை என்ற நினைப்புக்கூடவா வரவில்லை? இது அவளுக்கு ஒரு பகட்டுச் சின்னம்! விசேடமான நாட்களுக்கு மட்டும் அணியும் நகைகள் போல!

இப்போதும் அவள் அம்மாவைப் பற்றி எதுவுமே பேசாதது வேதாவுக்கு என்னவோ போலிருந்தது, ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் அல்லவா நாங்கள் இருவரும்! ஒன்றாக வளர்ந்தவர்கள் அல்லவா! தாயின் பிரிவுத் துயரால் என் மனம் கனப்பதுபோல இவளுக்குக் கனக்கவில்லையா? உணர்வுகளைக் கொன்று புதைத்து சடமாக வாழ... எப்படி இவள் மாறிப்போனாள்? வேதாவால் நம்பமுடியவில்லை!

அவளுடன் அம்மாவின் இறுதிக் கணங்கள் பற்றிப் பேசத் துடிப்பதும், மனச் சுமையை இறக்கி வைக்கத் தவிப்பதும் முட்டாள்தனம்! ஒத்த உணர்வு இல்லாத சடப் பொருளிடம் பேசுவது போன்றது, என்று வேதாவின் மனம் சொன்னது. உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்படுகிற பைத்தியமாகத் தான் அவள் தன்னைப் பார்ப்பாள் என்றும் வேதா புரிந்து கொண்டாள்.

வாழ்க்கை மிக விசித்திரமானது! அது இரத்த உறவு என்பதன் அர்த்தத்தை மாற்றி எழுதியபடி இருக்கிறது. பேசித் தீர்க்காதவையும் அழுது தீர்க்காதவையுமாக... உள்ளே மூடி வைத்து சீழ் பிடிக்கத் தொடங்கிவிட்ட காயங்கள்! பெருகிவரும் மனநோயாளிகள்!

'இந்தப் பாக்குவெட்டியையும் கொண்டு போகப்போறன். வாவ்! என்ன வடிவான வேலைப்பாடு! இப்பதான் நான் இதைக் கிட்டப் பிடிச்சுப் பாக்கிறன்.'

'பாக்குவெட்டியைக் கொண்டுபோய் நீ என்ன செய்யப் போறாய்?'

'அக்கா. உங்களுக்கு இதுகள் விளங்காது அக்கா! இதுக்கு ஒரு நூற்றைம்பது இருநூறு வயசு இருக்குமோ? அப்படி ஒரு பொருள் எண்டால், என்ர வெளிநாட்டு பிறண்ட்ஸ் எல்லாம் வாயைப் பிளந்து ரசிப்பினம் தெரியுமோ?'

யார் யாரையோ திருப்திப்படுத்தவும், தனது பெருமையைக் கூட்டிக்கொள்ளவும், முன்னோர்கள் விட்டுச்சென்ற பொருட்கள் தேவை! ஆனால், அவர்களின் நினைவுகளை வழித்துத் துடைத்து எறிந்துவிட்டு!

பாரம்பரியமான மனித உணர்வுகளுக்கும் குடும்ப உறவுகளுக்கும் பெறுமதி தேய்வதும், பழைய பொருட்களுக்கு மட்டும் போலியான பெறுமதி கூடிக்கொண்டே போவதும் நாகரிகம்! சொந்தங்கள் கூடி, வாய்விட்டு அழுது, துயரைப் பகிர்ந்து, மனதைத் தேற்றி ஆறுதலடைவது பாரம்பரியமல்ல! பட்டிக்காட்டுத்தனம்!

இதுதானா யதார்த்த உலகம்! தலைகீழாக மாறிவரும் பெறுமதிகள்! பாரம்பரியம் என்ற சொல்லை ஒற்றை அர்த்தத்துள் முடக்கிப் பார்க்கும் புதிய உலக நியதி! உணர்ச்சிகளைக் கொன்று வாழும் புதிய பாரம்பரியம்!

வேதாவுக்கு மெல்ல மெல்லப் புரிய ஆரம்பித்திருந்தது. கண் முன்னே நடப்பதை சீரணித்துத்தானே ஆகவேண்டும்!

தாரிணியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. வேதா பேசாமல் நின்றாள்.

'சித்தி, பாக்குவெட்டியை மட்டும் எடுக்காதேங்கோ. விட்டிட்டுப் போங்கோ'

நிம்மி அறைக்குள் வந்து நின்றதை வேதா அப்போதுதான் கண்டாள்.

தாரிணியின் முகம் கறுத்தது. ஆனால், அவள் அழகான ஒரு புன்னகையால் அதனை மறைத்துக் கொண்டாள்.

'ஏன் நிம்மி, நான் இதை, வேலைப்பாடுள்ள பாரம்பரியச் சின்னம் என்று வடிவா அலங்காரமா காட்சிப்படுத்தி வைப்பேன். நீ இந்தச் சின்னப் பாக்குவெட்டியை இந்தப்பெட்டிக்குள்ள வைச்சிருந்து என்ன செய்யப்போறாய்?'

'என்ர அம்மம்மா சொன்னவ, தன்ர அம்மம்மா வைச்சிருந்த பாக்குவெட்டியாம் இது! இப்படிப்பட்ட சாமான்கள் பொம்பிளைப் பிள்ளையிட்ட இருந்தா பேர் சொல்லும். இது உன்னட்டத்தான் இருக்கவேணும் நிம்மி, எண்டும் அம்மம்மா சொன்னவ.'

ஒளிச்சு ஒளிச்சு நின்ற நிம்மி இப்படிப் பேசுவாள் என்று தாரிணி நினைக்கவே இல்லை.

ஒரு நிமிடம், தனது அம்மாவே அங்கே நின்று கதைப்பது போல வேதா உணர்ந்தாள். நிம்மியை அம்மாவின் அன்பும் பாசமும் வழிநடத்துவதை நினைத்து, அவளது மனம் பூரித்தது.

**வே**தா அம்மாவின் பெட்டகத்தைத் திறந்து பாக்குவெட்டியை எடுத்துப் பார்த்தாள். மூன்று, நான்கு தலைமுறைகளாக அம்மாக்களின் கைவிரல்கள் பட்டு அது தேய்ந்து வழுவழுப்பாக இருந்தது. அந்தப் பாக்குவெட்டி, அம்மியில் அரைத்துக் காய்த்துப் போயிருந்த தனது முரட்டுக்கைகளை பாசத்துடன் இதமாகத் தடவிக் கொடுப்பதுபோல, வேதா உணர்ந்தாள்.

நூற்றைம்பது வருடப் பாசப் பாரம்பரியம் அந்த வீட்டில் உயிருடன் வாழ்ந்துகொண்டிருக்கிறது!



vasanthy.t@thaiveedu.com

# மீட்சி

- அரவிந்த் வடசேரி

ஓவியம் : ஜீவா

முதலாளி வரச்சொல்லியிருந்ததால் அம்மா வேலை செய்யும் கடைக்கு சென்றிருந்தான் சுரேஷ். அவர் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். காலையில் கடை திறந்த நேரம் என்பதால் வாடிக்கையாளர்கள் யாரும் இல்லை. அம்மா ஏதோ துணி பண்டிலைப் பிரித்து ஷோ கேசில் அடுக்கிக் கொண்டிருந் தார். சாந்தி அக்காதான் அவனை ஒரு ஸ்டூல் எடுத்துப் போட்டு உட்கார வைத்தாள். அனைவரின் முகத்திலும் ஒரு சிறு புன்னகை அவனுக்காக ஒளிந்து கொண்டிருந்தது. முத லாளி இல்லை என்றால் ஏதாவது பேச்சுக் கொடுத்திருப்பார் கள்.

அப்பா தவறி பல வருடங்கள் ஆகியிருந்த போதிலும் அம்மா சாமர்த்தியமாக வாழ்க்கை நடத்தி வந்தார். ஓரிரு முறை வட்டிக்கு கடன் வாங்கியிருந்தாலும் பிறரிடம் கடன் கேட்பது அவரது தன்மை இல்லை. தவிர்க்க முடியாத சில நேரங்களில் முதலாளியிடம் மட்டும்தான் சம்பளம் முன்பண மாக வாங்குவார். அது அனேகமாக அவனுடைய தேவைக ளுக்காகத்தான் இருக்கும். அதனாலேயே தனக்கு அவன் மேல் உரிமை இருப்பதாக நினைக்கிறார் முதலாளி. தீபாவ ளிக்கும் பொங்கலுக்கும் அவனை அழைத்து அன்பளிப்பு தருவார். அவன் நல்ல பையன் எனும் அபிப்பிராயம் தெரிந் தவர்களுக்கெல்லாம் இருந்தது. சாதாரண நாட்களிலேயே முதலாளி அறிவுரை சொல்லி அறுத்தெடுப்பார். இப்பொழுது வேலை கிடைத்ததை அம்மா சொன்னதன் பேரில் அவனை அழைத்திருந்தார். அவருக்காக காத்திருக்கும் பொழுதுதான் கைபேசியில் சேமித்திராத அந்த எண்ணிலிருந்து வாட்ஸாப் பில் குறுஞ்செய்தி வந்தது.

‘ஹாய் டா, நான் யாருன்னு தெரியுதா?’

டிபி-யில் படம் எதுவும் இல்லை. அனேகமாக பையன்களில் யாராவதுதான் இருக்கும். அவன் தான் அவர்களுக்கெல்லாம் கேளிக்கைப் பொருள். அவனது உடலமைப்பும் கண்ணில் தெரியும் சாசுவதமான மிரட்சியும் அவனை கேலிக்குரியவ னாக்கியிருந்தது. இருந்தாலும் அவனுக்கு கேம்பஸில் வேலை கிடைத்ததில் கொஞ்சம் மிரண்டு போயிருந்தார்கள்.

‘சாரிண்ணா, உங்க நம்பரை நான் சேவ் பண்ணலே.’

‘அண்ணனா? ஏன் உனக்கு பொண்ணுங்க மெசேஜ் பண்ண மாட்டாங்களா?’

‘சும்மா கலாட்டா பண்ணாதீங்கண்ணா, யாருன்னு சொல் லுங்க.’

‘உனக்கு கால் லெட்டர் ஏதாவது வந்ததா?’

‘இன்னும் இல்லீங்கண்ணா. நீங்க யாரு?’

‘நானும் உன் கூடத்தான் ஃபைனல் ரவுண்டுக்கு வந்தேன்? நான் ஓல்ட் கேம்பஸ்.’

‘சரிங்க, ஏதாவது தெரிஞ்சா சொல்றேன். நீங்களும் சொல் லுங்க.’

‘ஓகே, பை டா’

‘சரிங்க’

‘ஏண்டா ஒருத்தர் மெசேஜ் அனுப்பினா யார், என்னன்னு, விசாரிக்க மாட்டியா?’

‘அதான் சொன்னீங்களே ஓல்ட் கேம்பஸ்னு.’

‘பையனா பொண்ணான்னு கூட தெரியணும்னு தோணலியா?’

‘பொண்ணா நீங்க?’

‘ரொம்பத்தான் உத்தமனா நடிக்காதே என்ன. போன வாரம் இன்டர்வியூக்கு வந்த போது மட்டும் அப்படி லுக் வுடடே.’

‘இல்லக்கா, சத்தியமா இல்ல.’

‘அக்காவா? டேய், நீ எல்லாம் வேலை கெடச்சு வெளியூர் போயி என்னத்த சாதிக்கப் போறியோ. இன்னும் அம்மாவ கட்டிப் பிடிச்சுதான் தூங்கறியா? நான் தான் தேத்தணும் போல.’

அவனுக்கு என்ன சொல்வதென்றே விளங்கவில்லை. பேசாம லிருந்து விட்டான். மீண்டும் மெசேஜ் ஏதும் வராதது நிம்மதி யாக இருந்தது. அதற்குள் முதலாளியும் கூப்பிட்டார்.

‘வாடா சுரே’, பெரிய ஆளாயிட்டே. வேலை கிடைச்சுதுன்னு



அம்மா சொன்னாங்க. அதான் வரச் சொன்னேன். ரொம்ப சந்தோஷம்டா. அம்மாவ நல்லா பாத்துக்கணும் டா ‘என கொஞ்சம் சத்தமாகவே சொன்னார். அவன் வெறுமனே சிரித்து வைத்தான். ‘எங்கே வேலை? எவ்வளவு சம்பளம்?’

‘அதெல்லாம் இன்னும் முடிவாகலீங்க ஐயா? லெட்டர் வரும்னு சொல்லியிருக்காங்க. அனேகமா சென்னையிலே இருக்கும். இல்லைன்னா பெங்களூரு.

‘சரி லெட்டர் வந்தா வா என்ன? நல்லா சாப்பிட்டு ஓடம்பை தேத்துடா, வெளியூர் போறதுக்குள்ளே.’

‘சரிங்க ஐயா. நான் வரேணுங்க’ என்றான் ஜாக்கிரதையாய், அறிவுரையின் தொடக்கத்தினை மோப்பம் பிடித்தபடி.

‘சரிடா, சும்மா வெளியே அலையாதே.’

மொதலாளிக்கும் ஏதோ வேலை இருந்திருக்க வேண்டும். அதிசயமாய் இவ்வளவு சீக்கிரம் விட்டு விட்டார். அதிர்ஷ்ட மான நாள் போல என எண்ணிக்கொண்டான். அம்மாவிடமும் மற்றவர்களிடமும் சொல்லிக்கொண்டு வெளியே வந்தான்.

‘தூங்கு மூஞ்சி, என்னடா பண்ணறே?’ என்ற மெசேஜ் தான் அவனை மதியத் தூக்கத்திலிருந்து எழுப்பியது. அது வரை அவன் அதை மறந்தே போயிருந்தான்.

‘யாருங்க நீங்க? சும்மா விளையாடாதீங்க.’

‘நீயெல்லாம் ஆம்புளை தானா? அவனவன் ஏதாவது ஃபிகர் மாட்டாதான்னு மிஸ்டு கால் விட்டு அலையாரானுங்க, நீயும் இருக்கியே.’

‘சரி, வீடியோ கால் பண்ணுங்க, நான் நம்பறேன்.’

‘அடடா, ஆசையைப் பாரு. இவன் பெட்லெ படுத்திட்டே இருப்பானாம். வீடியோ கால்லே நான் வந்து கெஞ்சுவே னாம். வேணுண்ணா இன்னைக்கு 7 மணிக்கு சந்தைக்கு வரு வேன். மஞ்சள் சுடிதார். தேடிக்கண்டுபிடிச்சா உன் அதிர்ஷ் டம்.’

‘நான் வரமாட்டேன்.’

‘வேண்டாம்னா வரவேண்டாம், போடா.’

‘நெஜமாவா?’

ஆன்லைன் அறிவிப்பு அணைந்து விட்டது. ‘எவனோ விளையாடறான்’ என தனக்குள் சொல்லிக் கொண்டான் சுரேஷ்.

சரியாக ஆறரை மணிக்கு மீண்டும் மெசேஜ் டோன்.

‘ரெடி ஆயிட்டு இருக்கேன். மஞ்சள் சுடிதார்.’ மீண்டும் ஆஃப்லைன்.

‘சனிக்கிழமையானா இதே ரோதனையாப் போச்சு இவனுங்களோட’, சந்தைப் பேட்டைக்கு எதிரில் குடியிருக்கும் ராமசாமி அலுத்துக் கொண்டே வழி மறித்து கேட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த இரு சக்கர வாகனத்தை வெறுப்புடன் இழுத்து ஓரமாக தள்ளினார். நகரின் பல இடங்களில் தினசரி உழவர் சந்தைகள் இருந்தாலும் மாநகரின் எல்லையில் இருக்கும் புதிதாக அந்தஸ்து உயர்த்தப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்ட இங்கு இன்னும் அந்த வசதி இருக்கவில்லை. ஊருக்குள் இருக்கும் பெருமாள் கோவிலுக்கு சனிக்கிழமைகளில் வரும் பக்தகோடிகளுக்காக சிறு சிறு கடைகள் கோவில் வாசலில் பல காலமாகவே இருக்கத்தான் செய்தன. மலிவு விலையில் குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாமான்கள், பிளாஸ்டிக் வீட்டு அலங்காரப் பொருட்கள், பெண்களுக்கான பொட்டு, கம்மல் வகையறா, சாமி படங்களும் பிளாஸ்டிக் உருவங்களும் போன்றவை தான் விற்பனைக்கு வைத்து இருந்தனர். கோவிலுக்கு வரும் வெளியூர்க்காரர்களும் பொழுது போகாத சில உள்ளூர் வாசிகளும் தான் வடிக்கையாளர்களாக இருந்தனர். காலப்போக்கில் கடைகள் பெருகி, வரிசை நீண்டு, பிரதான சாலையினை எட்டிய கடைகளால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட, காலியாகக் கிடந்த அரசாங்க நிலத்திற்கு அவற்றை மாற்றும் பொழுது அது இவ்வளவு பெரிய வாரச் சந்தையாக மாறும் என யாரும் எண்ணவில்லை. கோவிலில் இருந்து சற்று தள்ளி, மக்களின் பார்வைபடும் இடத்திற்கு மாறியதும் கடைகளின் எண்ணிக்கையும் விற்பனை பொருட்களின் வகைகளும் அதிகமாயின. காய்கறிகளும் மசாலாப் பொருட்களும் சந்தைக்கு வரத் தொடங்கியதும் உள்ளூர் வாடிக்கையாளர்கள் பெரும்பான்மையாயினர். முதலில், தரம் குறைவு, சுகாதாரம் இல்லை என ஒதுங்கி இருந்தவர்களுக்கும்கூட விலை குறைவாகவும் கடைகள் அதிகமாகவும் இருந்ததால் பைகளைத் தூக்கிக் கொண்டு சந்தைக்கு கிளம்பும் நிர்பந்தம் ஏற்பட்டது. பிளாஸ்டிக் சேர், மடக்குக் கட்டில், மெத்தை-தலையிணை என சந்தை விரிவடைந்தது. சில நாட்களில் இரு சக்கர வாகனங்களும் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களும் கூட காட்சிப் படுத்தப்பட்டன. கூட்டம் அதிகமானதும் ஏற்கனவே இருந்த ஓரிரு டீக்கடைகளுக்கும் சிறு தீனிக் கடைகளுக்கும் போட்டியாக சில தாற்காலிகக் கடைகளும் முளைத்தன. கடைகள் பெருகப் பெருக ஊரிலிருந்து இரண்டு மூன்று கிலோமீட்டர்கள் தள்ளி இருப்பவர்கள்கூட சந்தைக்கு படை எடுத்தனர்.

‘என்னத்தக் கண்டு இவ்வளவு கூட்டம் அம்முதோ இங்கே’ வாய் விட்டு அலுத்துக் கொண்டார் ராமசாமி. வேலை முடிஞ்சு ஆஞ்சு ஒஞ்சுபோய் வரும்போது வண்டியை உள்ளே கொண்டு போக முடியாதபடி வாசலை அடைத்து நிறுத்தி விடுகிறார்கள் சந்தைக்கு வந்த சிகாமணிகள். குளிர் பதனிடப்பட்ட வகுப்பறைகளும் வாகனங்களும் கொண்ட பொதுப் பள்ளியில் தொடங்கி கழிவு நீர்த் தொட்டி சுத்தம் செய்யும் கம்பெனிகள் வரை பலரது உபயங்களால் ஐந்தாறு அறிவிப்புகள் கேட்டின் முன் வாகனங்கள் நிறுத்தக் கூடாது என அறிவுறுத்திய போதும் யாரும் கண்டுக் கொள்வதில்லை. ரோட்டில் நடப்பதான ஞாபகம் கூட இல்லை பலருக்கும். சாலையோரக் கடைகளில் எதையாவது வாங்கி அசைபோட்டுக் கொண்டோ, இணையருடன் இழைந்து பேசிக் கொண்டோ, கடைகளை கூர்ந்து பார்த்துக் கொண்டோ வாகனங்கள் வழி கேட்டு விடுக்கும் ஒலியினை சட்டை செய்யாமல் நடு ரோட்டில் நடப்பது நடைமுறையாகிப் போனது. சமீபத்தில் கூட, புதிதாக கார் ஓட்டக் கற்றுக் கொண்ட ஒரு பெண், கும்பலைக் கண்டு தடுமாறி பிரேக் மிதிப்பதற்கு பதிலாக ஆக்சிலேட்டரை மிதித்து ஒரு முதியவரின் மேல் காரின் முன் சக்கரம் ஏறி இறங்கியது. பிறகும் கூட நிறுத்த முடியாமல், மேலும் முன்னேறி பின் சக்கரமும் ஏறிக் கடந்த பின்தான் நிறுத்தினாள். அதிர்ஷ்டவசமாக அவர் ஒரு சில நாட்கள் மருத்துவமனையில் இருந்து எந்த சேதமும் இன்றி வீடு திரும்பினார் என்பது ஒரு அதிசயம். அதற்குப் பிறகு போலீசாரின் ரோந்து வாகனம் வந்து போகத் தொடங்கியிருந்தாலும் நிலைமையில் பெரிய மாற்றம் ஒன்றும் இல்லை.

சுரேக்கு உடம்பு முழுவதும் உதறுவது போலவும் தலைக்குள் கம்பி மத்தாப்பின் ஒளி சிதறுவது போலவும் இருந்தது. யாராவது பையன்களின் விளையாட்டாக இருக்குமோ எனும் ஐயம் தான் மேலோங்கி இருந்தது. தான் தேடிக்கொண்டிருப்பதை மறைந்திருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்களோ என அதையும் ஒரு கண்ணால் கவனித்துக் கொண்டு தான் இருந்தான். சொன்னது போல வராமல் இருந்து என்ன நடக்கிறது என பார்த்திருக்கலாமோ என நினைத்தான். இருந்தாலும் உள்ளுக்குள் ஒரு குறுகுறுப்பும் சின்னதாகக் கொஞ்சம் சபலமும் இருந்தது.

இரு சக்கர வாகனத்தினை உள்ளே நிறுத்தி கேட் சாத்த திரும்பிய போதுதான், மணிகண்டன் பரிவாரங்களுடன் வீதியுலா வருவதை ராமசாமி பார்த்தார். மிகவும் அமைதியான பையனாகத்தான் இருந்தான் மணிகண்டன். கடந்த சில ஆண்டுகளாகத் தான் அரசியல்வாதியாகி விட்டான். அதுவும் தீவிர அரசியல். தங்களது சாதிச் சங்க கூட்டங்களுக்கும் கோயில் நிகழ்வுகளுக்கும் போய் வந்துக் கொண்டிருந்தவனுக்குள் திடீர் என அரசியல் புகுந்துக் கொண்டது. அடுத்த கவுன்சிலர் தேர்தலிலோ முடிந்தால் சட்டப் பேரவை தேர்தலிலும் கூட வேட்பாளராகும் கனவு அவனுக்கிருந்தது. அவனை கும்பலுடன் கண்டால் அச்சம் கலந்த மரியாதையுடன் மக்கள் சிலர் விலகி நடக்கும் அளவிற்கு பிரபலமாக இருந்தான். வாய் திறந்தால் உலக அரசியலும் தேசிய அரசியலும் குறித்த அவனது அபிப்பிராயங்கள் தடையின்றி தீர்மானமாக தெறித்தன. தன் இருப்பினை கட்சிக்கும் சமூகத்திற்கும் நிரூபிக்கும் பொருட்டு சந்தர்பங்களுக்காக காத்திருந்து எதிர்வினைகள் புரிந்தான். சமீப காலமாக இந்தப் பகுதியில் சங்கிலி பறிப்பும் திருட்டுக்களும் அதிகரித்து வருவதால் அவன் முன்னெடுப்பில் இளைஞர்களின் ரோந்துப் படை ஒன்று செயல்பட்டுக் கொண்டிருந்தது.

திடீரென இருவர் ஒரு இளைஞனை இரு பக்கமும் பிடித்து மணிகண்டனிடம் அழைத்து வந்தனர். ஒரு மாற்றுக் குறைந்த மாநிறத்தில் குட்டை என்று சொல்ல முடியாத உயரத்தில் பூஞ்சையாக இருந்தான். நீர் திரையிட்டதாலோ என்னமோ, மருண்ட கண்கள் வெள்ளையும் கறுப்புமாக பளபளத்துக் கொண்டிருந்தன.

‘ரொம்ப நேரமா பாத்துகிட்டு இருக்கோம் அண்ணாச்சி, அங் கிட்டும் இங்கிட்டும் திருஞ்சுகிட்டிருக்கான். பாத்தா வாங்க வந்தவன் போலவும் இல்ல, விக்க வந்தவன் போலவும் இல்ல.’ என்றான் பிடித்து வந்தவர்களில் ஒருவன். அவர்க ளைச் சுற்றி வேடிக்கை பார்க்க கும்பல் ஒரு வட்டம் போட் டுக் கொண்டது.

‘கிட்டக்க வாடா, என்னடா திருட வந்தே?’ என்றான் மணி-கண்டன்.

‘இல்லண்ணா, சும்மா வேடிக்கை தான் பாத்துட்டு இருந் தேன்’ என்றவனின் குரல் பிசிறு தட்டியது.

‘பொய் சொன்னே அறஞ்சு பல்லைப் பேத்துடுவேன். கூட யாரெல்லாம் இருக்காங்க.’

‘சத்தியமா சொல்றேண்ணா, தனியாத் தான் வந்திருக்கேன். சும்மா சுத்திப் பாக்கலாம்னு.’ அவன் சொல்லிக் கொண்டி ருக்கும் போதே மணிகண்டன் உருமினான்.

‘வீணா அடிபட்டு சாகாதே, உண்மையைச் சொல்லீறு’ என்ற படி கையை ஓங்கினான்.

‘அண்ணா, சத்தியமா சொல்றேண்ணா’ எனும் போது அவன் கண்களில் நீர் வழியத் தொடங்கி இருந்தது.

‘இப்படித் தாங்க ரெண்டு வாரம் முன்னே சந்தைக்கு வந்த ஒரு பொம்பளையோட பர்ஸை எவனோ அடிச்சிட்டான்னு அழுதுகிட்டிருந்தது.’ என்றான் கும்பலிலிருந்த ஒருவன்.

மணிகண்டனின் கூட்டாளிகளில் ஒருவன் இளைஞனின் கையைப் பிடித்து முறுக்கினான்.

‘ரெண்டு போட்டாத்தான் மணி இவனெல்லாம் உண்மையை கக்குவான்’ என்றான். ஏனையோர் உடல் மொழியால் ஆமோ தித்து அடிக்கத் தயார் ஆயினர்.

‘அய்யோ அண்ணா, அடிக்காதீங்க அண்ணா’ என அவன் சத்தமிட்டு அழுதான்.

‘என்ன மணி, பஞ்சாயத்தா? ஓரமா போப்பா. இருக்கற கூட் டத்திலே நீ வேற வழிய மறிச்சிட்டு’ என்றார் பெரியவர் ஒரு வர்.

‘இப்படி வாடா, என்னடா பேரு?’ என அவனை ராமசாமியின் கேட் அருகே இழுத்து வந்தனர். அவன் உடல் நடுங்கிக் கொண்டிருப்பது கிட்டத்தில் தெரிந்தது.

‘சுரேஷ்ங்க அண்ணா.’

‘எந்த ஊருடா?’ என்றான் மணிகண்டன்.

‘இதே ஊரு தான்ண்ணா’

‘வீடு எங்கே?’

‘எம்.ஜி.ஆர் நகர்ண்ணா’

‘என்ன வேலைக்கு போறே?’

‘வேலைக்கு லெட்டர் வரும்னு காத்துகிட்டிருக்கேன்ண்ணா’

‘என்ன வேலைடா ?’

‘CTS-லே ண்ணா. கேம்பஸ்லே கெடச்சுதுண்ணா’

‘சீக்கிரமா உண்மையைச் சொன்னா அடி வாங்காம தப்பிக்க லாம்.’

திடீரென கும்பலை விலக்கிக் கொண்டு செல்ஃபோனை நீட் டிப் பிடித்துக் கொண்டு ஆவேசமாக அவள் வந்தாள்.

‘அண்ணா வழி விடுங்க. பேஸ்புக் லே லைவ் போட்டிருக் கேன். விடுங்க அவனை. என் கூட படிக்கிற பையன் தான் அவன். திருடவெல்லாம் மாட்டான்.’

அவளது மஞ்சள் வண்ணச் சுடிதார் வீதி விளக்கின் வெளிச் சத்தில் தங்கமாக ஜொலித்தது. திருத்தமான புருவங்களுக்கு கீழ் ஒளிரும் விழிகள் எதிரிகளை மிரளச் செய்தன. உரிமை யாக அவனது கையைப் பற்றி கும்பலுக்கு வெளியே இழுத் துச் சென்றாள். கும்பல் திகைத்து நின்றது.

‘என்னா தில்லு பாரு பொட்டச்சிக்கு. கண்ணகி சிலம்பைத் தூக்கிட்டு வந்த மாதிரி இல்லே வந்தா. அவ்வளவு சீக்கிரம் விட்டிருக்கக் கூடாது மணி’ என்றான் கூட்டாளிகளில் ஒருவன், அவர்கள் காதுக்கெட்டாத தொலைவுக்கு போனதும்.

‘டேய் பொம்பளைங்க விஷயத்திலே சின்னத் தப்பு பண்ணி னாலும் போச்சுடா, ஜாக்கிரதையா இருங்க. பேஸ்புக் லைவ் போட்டா ஃபோன்ஐ ஒடச்சிட்டாக் கூட ரெகார்ட் இருக்கும்டா’ என்றபோது மணியின் முகத்தில் தெரிந்த அச்சம் கும்பலை வாயடைக்க வைத்தது.

‘ஏண்டா, யாராவது மிரட்டினா தைரியமா பேசுவியா, இல்லை, அழுவியா. அதெப்படி, உன் முழியே திருட்டு முழியாச்சே. அவுங்க சந்தேகப்படலைன்னாத்தான் அதிசயம்.’ என்று பிறருக்கு கேட்காத அடிக்குரலில் சீறினாள் அவள். கும்பலைவிட்டு சிறிது தொலைவு வந்து விட்டிருந்தாலும் அவன் கையைப் பற்றியிருந்ததை அவள் விடவில்லை. அவ னுக்கு அது பெரும் ஆதரவாக இருந்தது.

‘உன்னையெல்லாம் கட்டிகிட்டு...’ பாதியில் நிறுத்தினாள். சுரேஷ் மௌனமாக உடன் நடந்து சென்றான்.



aravind.vadaseri@thaiveedu.com



# தோணிகள் கரையேறுகின்றன

– எ. ஜெனாத்

ஓவியம் : செல்வன்

வாடைக்காற்று வீசிக் கொண்டிருந்தது. என்றும் போல இந்தப் பரவைக் கடல் ஆரவாரமேதுமற்று வானத்தை நோக்கி தவம் செய்து கொண்டிருந்தது. ஆனாலும் சில நாட்களாகவே கடற்கரை இறங்கு துறையிலும் அதை அண்மித்த காற்று வளவிலும் வளமைக்கு மாறான ஆரவாரமும் ஆள் நடமாட்டமும் தென்படுவதற்கு காரணம் நாவாந்துறை கடலில் எந்தக் காலமும் நடந்திராதது போல கடலட்டைகள் அளவின்றி பெருகியிருப்பது தான்.

பொதுவாக இரண்டு பாகம் ஆழமான நீருக்குள் மூச்சுப்பிடித்தே அட்டை குளிப்பார்கள். ஆழ் நீச்சல் தெரிந்த சுழி-யோடிகள் முகத்தை மூடும் அட்டை கண்ணாடியும், நீச்சலுக்கு உதவியாக கால்களில் அட்டைச் சப்பாத்துகளும் அணிந்து கொண்டு தான் ஆழ் கடலில் முங்குவார்கள். ஆனால் இப்போது இடுப்பு முட்டு நீருக்குள் குஞ்சு அட்டையெடுப்பதற்கு அவையெல்லாம் எதற்கு? இரவில் கடல் நீருக்குள் அட்டைகளை தேடுவதற்கு உதவியாக ஒரு ரோச் லைற் மட்டும் கைவசமிருந்தால் போதும். யாரும் அட்டை-யெடுக்கச் செல்லலாம் என்றாகிவிட்டது.

இரண்டு வாரங்களாகவே மாலை வேளையாகினால் கடற் தொழிலாளிகளை மட்டுமல்ல ஊரில் உள்ள இளந்தாரிகளையும் ஏன் படித்துக் கொண்டிருக்கும் இளம் வட்டுக்களையும் கூட கடற்கரையில் காணலாம். குழுக் குழுவாக அட்டையெடுக்கச் சென்று அதை அட்டை பண்ணை முதலாளிகளுக்கு விற்று வரும் பணத்தை தமக்குள் சமனாக பங்கிடுவார்கள். இரண்டு மூன்று மணித்தியாலங்கள் கடலில் கிடந்தால் தலைக்கு மூவாயிரத்திற்கும் குறையாத உழைப்பு. பணம் வருவதை இழக்க யாருக்கு தான் மனம் வரும்?

குஞ்சு அட்டைகளை வாங்கும் அட்டை பண்ணைக்காரருக்கும் இதனால் நல்ல இலாபம். இவற்றை அவர்களுடைய பண்ணைகளில் போட்டு நாலைந்து மாதங்கள் பராமரித்து, அட்டைகள் உரிய பருவத்திற்கு வந்த பின்னர் எடுத்து விற்றால் ஏழு மடங்கு இலாபம் பார்க்கலாம். இதனால் அவர்கள் இறங்கு துறையில் நின்று ஆளுக்காள் முந்தியடித்துக் கொண்டு தொழிலாளிகளிடம் அட்டைகளை பேரம் பேசி வாங்கிக்கொள்வார்கள்.

உப்புக் காற்று கடலில் இருந்து சாதாளை மணத்தையும் கரைக்கு அள்ளியெறிந்து கொண்டிருந்தது. பீற்றர் வலது தோளில் மரக்கோலை அணைத்த படி இறங்கு துறை வீதியில் விரித்துக் காயப்போட்டிருந்த வலைகளின் மேலாக நடந்து கடற்கரையில் அமைக்கப் பட்டிருந்த கப்பலேந்தி மாதா சுரூபத்தடிக்கு வந்து சேர்ந்தான். வேலியோரம் மரக்கோலை சாற்றி வைத்து விட்டு சுரூபத்தடியில் வானத்தையே வெறித்துப் பார்த்தபடி உட்காந்திருந்தான். வானில் அங்கு மிங்குமாக அசைந்து திரியும் இரண்டு மேகக் கூட்டங்கள் சந்தித்துக் கொண்ட போது பாலகன் யேசுவை மடியிலேந்தியபடி மரியாள் யேசுவிற்கு பாலூட்டிக் கொண்டிருந்த காட்சியாக விரிந்ததை கண் இமைக்காது பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான். சில கணங்களில் அவனின் மனம் பிரச்சினைகளின் வலையில் சிக்காடித் திணறியது.

கடந்த கால பிரச்சினைகளுக்கும் எதிர்கால தேவைகளுக்கும் இடையே அலைக்கழிந்து நிம்மதியை தொலைத்து, நிகழ் காலத்தில் நடைபிணங்களாக அலைந்து தேய்வதே சாமானியர்களின் வாழ்க்கை என்றாகிவிட்டது. அதிலும் ஒரு மீனவனின் வாழ்கை போராட்டங்களாலேயே பின்னப்பட்டது. அவனுக்கு கடலோடும் கடனோடும் தினம் தினம் போராட்டம். மணி மூன்றாகிக் கொண்டிருந்தது. ஆனாலும் வெய்யில் தேகத்தை உருக்கியது. கடலில் மணலுக்குள் புதைச்சலில் கிடக்கும் அட்டைகள் வெளிவரும் நேரம் வந்து விட்டது. எல்லோரும் வள்ளங்களை தாங்கிக் கொண்டு தொழிலுக்கு சென்று கொண்டு இருந்தார்கள். இரண்டு வாரமாகவே பீற்றரோடு அட்டையெடுக்கச் செல்லும் அவனுடைய நண்பர்களான நீக்கிலஸ்சையும், அலைக்சையும் இன்னும் கடற்கரை



பக்கம் காணவில்லை.

நாளைய பொழுது விடிந்தால் பீற்றறுக்கு எத்தனை பிரச்சி னைகள்? மூன்று மாதங்களாக கட்டப்படாத ஆட்டோ லீசிங் பணத்தை செலுத்துவதற்கு கம்பனியால் கொடுத்த கடைசி தவணையும் நாளையோடு முடிகிறது. ஒரு வேளை நாளைக் கும் பணம் செலுத்தவில்லையென்றால் கம்பனிக்காரர் வீட்டு முகவரிக்கு ஆட்களை அனுப்பி ஆட்டோவை தூக்கிவிடு வார்கள். சில மாதங்களாகவே இரால் பாடும் இல்லை. ஆட் டோவும் போனால் குடும்பத்தை எப்படி கொண்டிழுப்பது?

என்ற யோசனை அவனை அலைக்கழித்தது.

ஏற்கனவே தலை நிமிர்ந்த முடியாத கடன் ஒருபுறம், யாரோ நகைக்கடைக் காரனிடம் வீட்டுப் பத்திரங்களை ஈடு வைத்து வட்டிக்கு பெற்ற பணத்தை திரும்பச் செலுத்த தாமதமாகிய தால் வீடும் அறுதியாகப் போகிறது. போன வாரம் ஒரு வாக னத்தில் வந்த நான்கு பேர் வீட்டுக்குள் இருந்த அலமாரிகள் முதற் கொண்டு எல்லாப் பொருட்களையும் எடுத்து தெரு வில் போட்டுவிட்டு, உடனடியாக வீட்டை விட்டு வெளியேறச் சொன்னார்கள். பணத்தை ஒரு மாதத் தவணைக்குள் செலுத்தி வீட்டுப் பத்திரத்தை மீட்டு விடுவோம் என்று மன் றாட்டமாக கேட்டு, ஒருவாறு அவர்களை சமாளித்து அனுப்பி விட்டார்கள். இன்றுவரை சொந்த பந்தமென்று யாரும் கண்டு கொள்ளவேயில்லை.

ஏதோ பீற்றரின் மனைவி ஜெசி சிறுகச் சிறுக மிச்சம் பிடித்த பணத்தில் பிலோமினாவோடு சேர்ந்த ஐந்து இலட்சரூபாய் சீட்டை அறாக்கழிவில் தீர்த்து எடுத்தே இரண்டு மூன்று மாத மாக சாப்பாட்டுச் செலவை சமாளித்து வந்தார்கள். இந்த மாத சீட்டுக்காசு இருபதாயிரத்தி சொச்சம் நாளைக்கு செலுத்தியாக வேண்டும். விடிவிடியென பிலோமினா அக்கா சீட்டுக் காசுக்கு வீட்டு வாசலில் வந்து நிற்பா. அது இன் னொரு புறம்.

இரண்டு மூன்று கல்யாண வீடுகளுக்கு மொய்ப் பணம் இல் லாமல் வெறுங் கையோடு சென்று கைநனைத்த பின், வீதிக ளில் அவர்களை கண்டு இன்னும் எத்தனை நாட்கள் தனக் குள்ளே வெட்கப்பட்டு கூனிக் குறுகுவது? வைக்க வேண்டிய மொய்காசுகளை கொடுத்தாக வேண்டும்.

இதெல்லாமிருக்க வங்கியில் அடகு வைத்த பூட்டுக் காப்பிற் கும் வட்டி செலுத்தாததால் ஏலத்தில் விடப்போகிறார்கள். இவற்றில் எதை யோசிப்பது? எதை விடுவது என்று வானத்தை நோக்கி பெருமூச்செறிகிறான். மேகங்களுக்கிடை யில் இயேசு மேலாடையை போர்த்திக் கொண்டு கையில் ஒரு கோலோடு செம்மறியாட்டு கூட்டங்களை மேய்த்துக் கொண்டு போவதாக அச்சு அசலான காட்சியொன்று அவன் கண்களுக்கு படுகிறது. இயற்கை நொடிப் பொழுதில் எத் தனை மாயாஜாலங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது? மனிதர்கள் அதை காண வேண்டும் என்பதை அது எதிர் பார்ப்பதே இல்லையே. ஆனால் அவற்றை காணும் கண்கள் தான் எத்தனை பேறுபெற்றவை!

காயப்போட்ட வலைகளை எடுப்பதற்காக டானியல் வெறும் மேலோடு அந்தப் பக்கமாக வந்தான். கடலுக்கு சென்று இரால்கூடு தட்டி விட்டு வந்திருந்த அவனின் கருத்த தேகத் தில் உப்புப் பூத்திருந்தது.

‘கும்பா தொழில் எப்படி’ என்று கேட்டான் பீற்றர்.

‘பரவாயில்லை நேற்றையப் போல வரும் கும்பா’ என்றான் டானியல். கடற்தொழில் செய்பவர்கள் தங்களின் அன்றைய உழைப்பு எவ்வளவு என்றோ கடலில் எந்தப் பக்கத்தில் அதிக இரால் பாடு என்றோ பெரும்பாலும் யாருக்கும் சொல லமாட்டார்கள்.

வேலியோரமாக யாரோ பேத்தைக் குஞ்சுகளை வீசியிருக்கி றார்கள். ஒரு பூனை அந்தப் பேத்தைகளின் காற்றடித்த வயிற்றை கடித்துப் பிய்த்துக் கொண்டிருந்தது. அந்த நாற் றம் கொமட்டல் வருவிக்கவே இருவரும் காறி உமிழ்ந்து விட்டு எழுந்து கடலை நோக்கி நடக்க தொடங்கினார்கள். பீற்றர் கரையை தழுவும் நீரில் இறங்கி, முன்னொருநாள் உதைபந்தாட்ட பயிற்சியின் போது காலில் ஏற்பட்ட கண்டல் காயமொன்றை கையால் அழுத்திக் கொண்டிருந்தான். கட லையே நம்பி வாழும் மக்களுக்கு உணவு மட்டுமில்லாமல் மருந்தும் கூட இந்த உப்புக் கடல் தானே!

கடலில் பீற்றரின் காலுக்குள் ஏதோ மிதிபடுகிறது. குனிந்து அதை எடுத்துப் பார்க்கிறான். அது ஒரு கடற் சங்கு. பீற்றர் அதை வீசிவிட மனமில்லாதவன் போல கையில் வைத்துக் கொண்டு கேட்டான்.

‘கும்பா இண்டைக்கு வலம்புரிச் சங்கு ஒண்டு கிடந்து எடுத்தா எப்பிடிருக்கும்?’

‘பிறகென்ன கும்பா... ஆட்டோவ வித்திட்டு அவுடி காரில தான் ஊருக்குள்ள திரிவீங்க’ என்றான் டானியல்.

‘கும்பா வலம்புரி சங்கை எப்பிடி கண்டு பிடிக்கிறது?’

‘சங்குச் சதையை வானத்தை பார்த்திருக்க நிமிர்த்தி, நெஞ் சுக்கு அருகில சங்கின்ர தலைபுறத்தை வைச்சு பார்க்கும் போது நமக்கு வலப்பக்கமாக புரியிருந்தால் அது வலம்புரிச் சங்கு கும்பா. இலட்சம் கோடியில் ஒரு சங்கு தான் அப்படி வலம்புரியாக இருக்கும்’ என்று கூறிவிட்டு. பீற்றர் வைத்தி ருந்த சங்கை தன் கைகளில் வாங்கி வலம்புரியை கண்டறி யும் முறையை காட்டிக் கொடுத்தான் டானியல்.

இருவரும் பேசிக் கொண்டிருக்கையில நீக்கிலஸ்சும் அலைக்சும் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். செருப்பை கழற்றி ஒரு ஓரமாக வேலியோரம் மறைத்து வைத்து விட்டு மரக்கோலையும் தொழில் பைவரையும் தூக்கிக் கொண்டு இறங்கு துறை வீதியில் ஊரிகளும் நண்டுக் கோதுகளும் கால்களில் தைக்காதவாறு கவனமாக அடியெடுத்து வைத்து நடந்து வந்து பீற்றரோடு வள்ளத்திலேறினார்கள்.

‘இண்டைக்கு வள்ளத்தை கட்டையடிப் பக்கமாக விடுவோம். கம்படி, முகத்துவாரப் பக்கமா தான் நிறைய வள்ளம் அட் டைக்கு போகுது’ என்றான் அலைக்ஸ். அணியத்தில் நீக்கி லஸ்சும் கடையாளில் பீற்றரும் நின்று மரக்கோலால் தாங்கத் தொடங்கினார்கள். பரலோக மாதா கோயில் முகப்பை நோக் கிச் சென்று மூவரும் ஒரு ‘பிதாச்சுதன்’ போட்ட பின் வள்

ளத்தை திருப்பிக் கொண்டு கட்டையடியை நோக்கி தாங்கத் தொடங்கினர்கள்.

ஒரு நாரை கடலில் ஏதோ திசை காட்டிக் கூட்டிச் செல்வதை போல அவர்களின் தலைக்கு மேலாக, காலை பின்புறமாக ஒடுக்கி பணிவாக பறந்து கொண்டே சென்றது. வள்ளம் நகர்ந்து கொண்டிருக்கும் போதே நடு பலகையில் உட்கார்ந்திருந்த அலைக்ஸ் வள்ளத்தில் கிடந்த தூர்க் கம்பை எடுத்து பட்டியில் கூட்டமாக நின்ற கடற் காகங்களை நோக்கி பலமாக வீசினான். மீதமெல்லாம் பறந்துவிட, ஒரேயொரு கடற் காகம் மயக்கம் போட்டு கடலில் விழுந்தது. ஏதோ, இறுதிப் போட்டியில் பாடுமீன் அணிக்கெதிராக கோல் போட்டது போல தேகத்தில் முறுக்கேற்றி வானத்தை அண்ணாந்து பார்த்து கூப்பாடு போட்டான். அவன் இப்படி பல நாட்கள் முயன்று கடற் காகங்களிடம் தோற்றுப் போயிருக்கிறான். அவர்கள் வள்ளத்தை பட்டிக்கு அருகில் செலுத்த அலைக்ஸ் கடலில் குதித்து தண்ணீரில் மூச்சின்றி கிடந்த கடற் காகத்தை எடுத்து வள்ளத்திற்குள் போட்டுவிட்டு ஒரே தாவலில் வள்ளத்திலேறினான். அணியத்தில் நின்றுகொண்டு ‘இண்டைக்கு நல்ல பிரட்டல்’ என்று சொண்டுக்குள் சிரித்தான் நீக்கிலஸ். பீற்றருக்கு நினைப்பெல்லாம் நாளைய ஆட்டோ லீசிங் பற்றியேயிருந்தது. மூவருமாக மரக்கோலால் வேகமாக தாங்கிக் கொண்டு கட்டையடியை சேர்ந்தார்கள். கடலில் மரக்கோலை ஊன்றி வள்ளத்தை கட்டிவிட்டு மூவரும் கடலுக்குள் குதித்தார்கள்.

கட்டையடியில் நெஞ்சு முட்டு தண்ணீருக்குள் மூவரும் ‘உழக்கு அட்டை’ தேடிக்கொண்டு இருந்தார்கள். பொடி நடையில் கால்களால் மிதித்து அட்டை தேடும் முறையை கடற் தொழிலாளிகள் அப்படி சொல்லுவார்கள். கூப்பிடு தொலைவில் சில வள்ளங்கள் தென்பட்டன. இளவெட்டுகள் அட்டை தேடிக் கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்தில் பரலோக மாதாவே என்று மன்றாடிக் கொண்டு நீக்கிலஸ் கீழே குனிந்து முதலாவது அட்டையை எடுத்துவிட்டு ‘டேய் தோய்ஞ்சிட்டன்’ என்று அடக்கமான சத்தத்தில் சொன்னான்.

அடுத்தடுத்த நிமிடங்களில் மற்ற இருவருக்குமே அட்டைகள் கிடைத்தன. மாறி மாறி மூவருமே அட்டைகளாக எடுத்துக் கொண்டிருந்தார்கள். என்றைக்கும் இல்லாதவாறு பீற்றரின் காலுக்குள் சங்குகளும் மிதிபடத் தொடங்கியது. ஜெசிக்கு சங்குச் சதைக் கறியென்றால் விருப்பம் என்பது அவனுக்கு ஞாபகம் வர காலுக்குள் மிதிபடும் சங்குகளையும் எடுத்து வள்ளத்தில் போடத் தொடங்கினான். இதை கண்டதும் ‘என்ன பீற்றர் நாளைக்கு மத்தியானம் வீட்ட சங்குக் கறியாக்கும்’ என்று சிரித்து விட்டு அட்டையெடுப்பதில் தீவிரமாயிருந்தான் நீக்கிலஸ்.

நல்ல சீரான காற்று. நீரோட்டமும் சாதகமாக இருந்தது. கடல் நீரும் அளவான கதகதப்பாக இருந்தது. புதைச்சலில் கிடந்த அட்டைகளெல்லாம் மேலெழும்பிக் கிடக்கிறது. அலைச்சலின்றி அட்டை கிடைப்பதில் மூவருக்கும் முகமெல்லாம் மலர்ச்சி. வேக வேகமாக அட்டைகளை எடுத்து இடுப்பில் கட்டியிருந்த அரைச்சாளுக்குள் போட்டுக் கொண்டிருந்தார்கள். வயிறு பசியெடுத்தாலும் எவருக்கும் வள்ளத்திலேறி கரைக்குப் போக மனமில்லை. எல்லா நாட்களும் இப்படி சாதகமாக அமையாது. காட்டுப் பாதையில் கனிகளை கண்டால் உடனே பறித்து விட வேண்டும். போய்த் திரும்பும் போது பறிக்கலாம் என்றால் அது சாத்தியமற்றது. அது போலதான் கடற் பரப்பிலும்.

கடல் பிரபஞ்சத்தின் பேரதிசயங்களை எல்லாம் தன்னகத்தே கொண்ட மகா பிரமிப்பு. மூவரும் முழுமூச்சாக அட்டை தேடிக்கொண்டிருந்தார்கள். மொத்தமாக நூற்றுக்கணக்கான அட்டைகள். இன்றைக்கு ஆளுக்கு பத்தாயிரத்திற்கும் அதிகம் பங்குக் காசு கிடைக்கும். ஆனாலும் பீற்றரின் பணத்தேவைக்கு அது போதுமானதல்ல.

கடலில் அதிகமான அளப்புழுக்களும் மிதிபட்டன. அது ஒரு வகையான கடல்வாழ் உயிரினம். தேகத்தில் பட்டால் கடியை உண்டாக்கும்.

அலைக்சுக்கு அளப்புழு என்றாலே எரிச்சல் ‘கடலில கிடக்கிற எல்லாத்தையும் ஏற்றுமதி செய்யுற இந்த சைனாக்காரன் இந்த அளப்புழுக்கள அள்ளி ஏத்துறானில்லையே? கடியாவது குறையும்’ என்று வாய்க்குள்ளே முணுமுணுத்தான்.

பரலோக மாதா கோவில் திருந்தாதி மணியொலித்தது. அவர்களையே அறியாமல் வலது கை முகத்தில் சிலுவை அடையாளம் இட்டது. மணி ஆறாகிவிட்டது. இரட்டைப் பனை பக்கமிருந்து கரைநோக்கி வந்துகொண்டிருந்த வள்ளமொன்றில் செபஸ்தியானும் அந்தோனியும் இருந்தார்கள். ‘தம்பி எப்படியடா அட்டை?’ என்று கேட்டார் செபஸ்தியான்.

நீக்கிலஸ் என்றைக்கும் போல அதே பதில் ‘சும்மா பரவாயில்லை’ என்று இழுத்து விட்டான். நல்ல அட்டை எடுபடுகிறது என்றால் அவர்களும் அதில் முகாந்திரம் இட்டு விடுவார்களே! பரவாயில்லை என்ற பதிலோடு செபஸ்தியானின் வள்ளம் பறந்து போனது. பீற்றரின் காலுக்குள் ஒரு சங்கு தட்டுப்பட்டது.

குனிந்து அந்தச் சங்கை கையில் எடுத்துப் பார்த்தான். பாசி படர்ந்து, ஓரிரு இடங்களில் அலசு பிடித்திருந்தது. கையிற்கு அடக்கமான அதன் அழகு கண்களை தைத்தது. ஆனால் அதில் அதிகம் சதை கிடைக்காது. பேசாமல் அதை கடலுக்குள்ளேயே எறிந்து விடலாம் என்று நினைத்துக்கொண்டு வீச முற்பட்ட போது கணப் பொழுதில் மின்னல் பொறிபோல் உள்ளுணர்வு தூண்ட, அவன் கவனமனைத்தும் சங்கில் நிலை குத்தியது.

அவனையறியாமல் ஏதோ பதட்டம். நெஞ்சு ஓங்கி அடிக்கத் தொடங்கியது. தண்ணீருக்குள்ளும் தனக்கு வியர்ப்பதை அவன் உணரத் தொடங்கினான். கைகள் தளர்ந்து உதறத் தொடங்கியது. இந்தச் சங்கில் ஏதோ ஒரு வித்தியாசம்... ஒரு வேளை இது அதுவாக இருக்குமோ?

ஒரு கணம் பீற்றர் தன்னையே திடப்படுத்திக் கொண்டு கரை யில் நிற்கும் போது டானியல் கூறிய வார்த்தைகளை மனதிற் குள் மீட்டுப் பார்த்தான். தன் கையில் இருந்த சங்கை நெஞ் சிற்கு அருகில் வைத்துக் கொண்டு, அதை கவிழ்த்து, சதையை வான் நோக்கி பார்க்கப் பிடித்துக் கொண்டு உற் றுப் பார்த்தான். பதட்டம்... நடுக்கம்... நெஞ்சு ஓங்கியடிக்கி றது... மெதுவாக வள்ளத்தை நோக்கி நடக்கத் தொடங்கி னான்.

அணியத்தில் எடுத்துப் போட்ட சங்குகளில் ஒன்றை எடுத்து அதேபோல் நெஞ்சண்டையாக அணைத்து போர் பார்த்தான். அதன் சுழி இடது புறமாக இருந்தது. இன்னொரு சங்கை எடுத்துப் பார்த்தான். அதன் சுழியும் முன்னதை போல இடது புறமாகவே இருந்தது. இப்போது தான் இறுதியாக எடுத்த சங்கை வைத்து போர் பார்த்தான். அதன் சுழி மட்டும் வலது புறமாக இருந்தது. அது வலம்புரிச் சங்கு! ஓ வலம்புரியே தான்!

அவனால் நம்பவே முடியவில்லை. சங்கை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, சற்றுத் தொலைவாக அட்டை தேடிக் கொண்டு நின்ற இருவரையும் கூப்பிட்டு நீக்கிலஸ்சிடம் சங்கை கொடுத்து 'இதைபார்' என்று மட்டும் சொன்னான். மூவரிலும் அவன் சற்று அனுபவம் கூடிய கடற் தொழிலாளி. சங்கை வாங்கி தன் இடது கையில் வைத்துப் போர் பார்த் தான். வேறு பேச்சு எதுவும் பேசவில்லை. 'இது வலம்புரி. இனி கடலில் நிக்க கூடாது வள்ளத்தை கரைக்கு தாங்குங்க' என்றான்.

வலம்புரிச் சங்கு சமுத்திரா தேவியின் பெரும் திரவியம். பல இலட்சங்கள் பெறுமதி மிக்கது. அது அதிஷ்டத்தின் உச்சம். அது கிடைத்து விட்டால் அடுத்த நிமிடமே கடலில் இருந்து கரைக்கு போய்விட வேண்டும், இல்லையென்றால் கடலில் பெரிய ஆபத்து நேரும் என்று பெரியவர்கள் சொல்லி அவன் கேள்விப் பட்டிருக்கிறான்.

பீற்றருக்கு கைகால் உதறிக் கொண்டே இருந்தது. அவன் கடையாளில் நின்று மரக்கோலால் வலிக்க வள்ளம் அங்கும் இங்குமாக அலைக்கழிக்கிறது. அலைக்ஸ் அவனிடமிருந்து மரக்கோலை வாங்கி வலிக்கத் தொடங்கினான்.

இருளின் ஆட்சி தொடங்கியது. வானம் நட்சத்திரங்களால் நிரம்பிக் கிடந்தது. பீற்றர் வானத்தை அண்ணாந்து பார்த்து 'பரலோக மாதாவே எல்லாம் நல்லதாகவே நடக்க வேணும்' என்று வேண்டிக்கொண்டு இருந்தான். கிழக்கு திசையில் நட் சத்திரம் ஒன்று பிரகாசமான ஒளிக்கீற்றோடு கீழே விழுந்தது. கடல் பரப்பிற்கு மேலாக முரல் மீன்கள் துள்ளிப் பாய்ந்து கொண்டிருந்தன. வேகமாக தாங்கிக் கொண்டு மூவரும் கரையை வந்தடைந்தார்கள். துறையில் வள்ளத்தை கட்டி விட்டு, தொழில் பைவருக்குள் இருந்த அட்டைகளையும், அலைக்ஸ் அடித்துப் போட்ட கடல் காகத்தையும் தூக்கிக் கொண்டு இறங்கு துறை வீதியால் மண்பிட்டிக்கு வந்தார் கள். இரால் கொம்பனியில் மின் விளக்குகள் எரிந்து கொண் டிருந்தன. சங்கை பற்றி விசாரிக்கலாம் என்று உள்ளே சென் றார்கள்.

அலுவலக அறையின் முதலாளி இருக்கையில் யோணர் அமர்ந்திருந்து கணக்குகளை பார்வையிட்டுக் கொண்டிருந் தார். மூவரும் சென்று சங்கை அவரிடம் கொடுத்தார்கள். யாரும் எதுவுமே பேசவில்லை. யோணர் சங்கில் படிந்திருந்த அலசினை கட்டை விரல் நகத்தால் அகற்றிவிட்டு போர் பார்த்தார். அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற ஏக்கத் தோடு பீற்றர் அவரையே பார்த்துக் கொண்டு நின்றான். சங் கிலிருந்த கண்களை நிமிர்த்தி மூவரையும் பார்த்துவிட்டு 'திறம் சங்கு... வலம்புரி தான். நாற்பது-ஐம்பது இலட்சம் வரை போகும். ஆனாலும் நாலு இடத்தில விசாரிச்சு குடுங்க' என்றார். மூவருக்கும் கொள்ளை ஆனந்தம்.

இந்தக் கதை ஊர் முழுவதும் தீயாய் பரவி கடற்கரை காத்து வளவு எங்கும் ஒரே கூட்டம். நாவாந்துறையே சந்ததி சந்த தியாக கடற்தொழில் செய்தாலும் இன்றுவரையில் இந்தப் பரவைக் கடலில் யாருக்கும் இதற்கு முன் வலம்புரி கிடைத் ததில்லை. இது தான் முதற் தடவை.

ஊரில் சிலர் சங்கை விற்று வரும் பணத்தை மூவருக்குள் ளும் சரி சமனாக பங்கிட வேண்டும் என்றும், இன்னும் சிலர் வலம்புரியை கண்டு எடுத்தவனுக்கு கண்கூலியும் வைத்து பங்கிடுவதே முறையென்றும் பலவாறு பேசிக் கொண்டார் கள்.

மூவரும் பரலோக மாதா கோவிலை நோக்கி நடந்தார்கள். பீற்றர் முழங்காலில் இருந்து கொண்டு மாதாவையே உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவனை அறியாமலே கண் களில் நீர் பூத்தது. கிழக்கு வானிலிருந்து பிரகாசத்தோடு கட லில் விழுந்த நட்சத்திரம் பரலோக மாதாவின் மணிமுடியில் மின்னி ஜொலித்துக் கொண்டிருந்தது.



jenath.e@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***   ***Fax: 1-416-849-0594***   ***Tel: 1-416-857-6406***

# சாம்பலில் திரண்ட சொற்கள்

– தேவகாந்தன்

லேசான குடும்பமில்லை, இப்ப நீர் கேக்குற ஆக்களின்ர குடும்பம். பாட்டன், பூட்டன், கொப்பாட்டன், கோந்துறு, மாந்துறு எண்டு கன தலைமுறையளாய்த் தழைச்சு வாற பரம்பரை. அவையைப்பற்றி மற்றவை சொல்லத்தான் கேட்டிருக்கிறன். ஆனா கந்தப்பு வாத்தியார நேரில அறிவன். அவர்தான் அந்தக் குடும்பத்தில நானறிஞ்ச மூத்த தலைமுறை ஆள். உவ சிவயோகமலரின்ர பாட்டன்காறன் அவர்.

அநியாயம் சொல்லக்கூடாது, வெகு திறமான மனிஷன். கண்ணுக்கு முன்னால ஒரு சீவன் பட்டினி கிடக்க விட்டதில்லையாம். ஒரு, பெரிய தாதுப் பஞ்சத்திலயிருந்தும், கோதாரி நோயிலயிருந்தும் எங்கட சனம் தப்பிப் பிழைச்ச அந்தக் காலத்தில அவர் செய்த சேவையள மறக்கேலாவெண்டு இப்பவும் சொல்லுவின. பசியெண்டு போன ஆக்களுக்கு மனிசன் கைப்பிடி அரிசியாச்சும் குடுக்காமல் விட்டதில்லையாம். மனிஷர் மட்டுமில்லை, றோட்டில நிக்கிற ஆடு மாடு பசியாக் கிடந்தாக்கூட குழையொடிச்சுப் போட்டிட்டுப் போற ஆள் என்பினம்.

அவரின்ர மோன் வீரகத்தியும் நல்ல மனுஷன்தான். காலம்புறத்தில பள்ளிக்குடம் போக குளிச்சு முழுகி வெள்ளை வேட்டி சட்டையோட நெற்றியில துருநூற்றுப் பூச்சும் சந்தனப் பொட்டுமாய் வெளிக்கிட்டு வந்தாரெண்டா, சூரியன் வாறமாதிரி அப்பிடி பளீரெண்டிருக்கும். பாத்து சிரிச்சிட்டு ஒருக்கா தலையசைச்சாரெண்டா பன்னீர் தெளிச்சமாதிரி மேல் குளுர்ந்துபோகும்.

அவரை சமவயதுக்காறர் எண்டில்லை, பெரியாக்கள்கூட, வீரகத்தியெண்டு பேர் சொல்லிக் கூப்பிட்டதில்லை. ஆரும் எவரும் வித்துவான் வீரகத்தியெண்டுதான் கூப்பிடுவின. இந்தியாவெல்லாம் போய் நல்லாப் படிச்ச மனிஷன். கிரந்தப் பேச்சுக்கு ஆள் நம்பர் வண். வீட்டுக்குக்கிட்ட சரஸ்வதி வித்தியாசாலையெண்டு ஒரு சின்னப் பள்ளிக்குடமிருக்கு, அதிலதான் முதல்ல வாத்தியார் வேலை பாத்தார். பிறகு வல்வெட்டித்துறைப் பள்ளிக்குடத்தில தலைமை வாத்தி வேலை கிடைச்சு போயிட்டார்.

சயிக்கிள்ல போய், சயிக்கிள்ல வருவர். போக ஆறு கட்டை, வர ஆறு கட்டை. அந்தப் பன்னிரண்டு கட்டையையும் மூசி மூசி உழக்குவார். வழியில ஒரு வெத்திலை தேத்தண்ணியெண்டு நிக்கிறேல்ல. பொயிலைப் பழக்கமும் இல்லை. ஆனா வேறயொரு பழக்கமிருக்கு. மூக்குப் பொடிப் பழக்கம்.

அதுக்கெண்டு ஒரு கறுப்பு டப்பா, நெருப்பெட்டிச் சைஸ்ஸில, வைச்சிருக்கிறார்.

அவர் மூக்குப் பொடி போடுறதும் பாக்கவலு சோக்காயிருக்கும். கதைச்சுக்கொண்டிருக்கேக்கயே நசுக்கிடாமல் டப்பாவை மெள்ளமாத் துறந்து ஒரு நுள்ளு, ஒரு நுள்ளளவுதான், பொடி எடுப்பார். எடுத்துக் கையில வைச்சபடி கதைச்சுக் கொண்டு நிப்பார். முன்னால நிக்கிற ஆள் அங்கால இங்கால பாக்க, அப்பிடியே காத்து வளத்துக்கு முதுகைத் திருப்பிக் கொண்டு நிண்டபடி ரண்டு மூக்கோட்டைக்கயும் மாறி மாறி பொடி நுள்ளியெடுத்த விரலுகளை வைச்சு ரண்டு ரண்டு தரம் சர்… சர்ரெண்டு இழுப்பார். இழுத்திட்டு திரும்பினாரெண்டா, முந்தி அந்த இடத்தில நிண்ட வாத்தியாரைக் காணேலாது. அந்தளவு உயரம், பெருப்பமாயிருந்தாலும், நிக்கிறது வேற ஆள்தான். கண்ணெல்லாம் நல்லாய்க் கலங்கி, மூக்கும் சிவத்திருக்க ஒருக்காச் செருமிப்போட்டு கதைச்சாரெண்டா விஷயமொண்டாயிருக்கும், ஆனா அது ஆரோவின்ர கதைதான்.

வாத்தியாற்ர கெட்டபுறமது. அதை, அவரோட நெருங்கிப் பழகினவையில கூட கனபேர் கவனிக்கேல்லை. மூக்குப் பொடி போடுறதால உடம்பு சுகமில்லாமப் போன ஆக்கள் கனபேரிருக்கினம். அவையில குணம் கெட்டுப்போன ஆக்களும் கனபேர் இருக்கிறதாய்க் கேள்வி. வாத்தியாரும் பொடியால குணம் கெட்டுப்போன மனிசன்.

மனிஷன் இப்ப உயிரோடயுமில்லை. இல்லாமப் போன ஒராளைப்பற்றி பொல்லாப்புச் சொல்லப்படா. எண்டாலும் இந்தளவு சொல்லவேணும். அப்பத்தான் அந்தக் குடும்ப ஆக்கள் பட்ட சீரழிவுகளை விளங்கேலும். மனுஷி அன்னபூரணம், தங்கச்சியார் லச்சுமி, பெட்டையள் ரண்டு… அதுகள், எல்லாருமே அவற்ர அந்தப் பழக்கத்தால பாதிக்கப்பட்டிருக்கினம்.

அன்னபூரணம் பத்து கர்ப்பம் தாங்கிச்சிது. அதில ரண்டு தான் பிள்ளையாய்ப் பிறந்திது. மற்ற எட்டும் அழிஞ்சு போச்சு. மூத்த பொம்பிளப்பிள்ளை, அதுதான் உவ சிவயோ-கமலர், மேல் வகுப்பில படிக்கேக்கயே தாய்க்கு ரண்டுதரம் கர்ப்பம் கலைஞ்சு குய்யோமுறையோவெண்டு கத்திக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டோடியிருக்கினமெண்டா பாருமன்.

ஆஸ்பத்திரியிலயும் நேசியும் மேற்றனும் வித்துவானைத் திட்டுறத நானே என்ர காதால கேட்டன். 'பிள்ளைத்தாச்சிப் பொம்பிளயளெண்டா லாம்புச் சிமிலி மாதிரிக் கவனமாய்ப் பாக்கவேணும் உங்கட உங்கட அமருகளயும் ஆத்திரங்களையும் அவையில போய்த்தீர்த்திடக் குடா' எண்டு தாறுமாறாய்ப் பேசினாளவை.

அதாலதான் உவ சிவயோகமலரும் தேப்பனோட மோங்குடுத்து கதைக்காம கதைக்காம கொஞ்ச நாள் திரிஞ்சிது.

கதை பேச்சில எவ்வளவுதான் வித்தியாசமிருந்தாலும், மனநிலையிலயும் நடத்தையிலயும் சரியாய் தேப்பனைப் போல தான் உந்தப்பிள்ளை.

எவ்வளவுக்குப் படிச்சிருந்தாலும் அந்தாளிட்டயொரு தடிப்புக் குணமிருந்ததை ஒருத்தராலயும் இல்லையெண்ணேலா. சுத்தமான சைவக்காறர் சாதியும் கலப்புக் கிலப்பில்லாத வெள்ளாளச்சாதி யாழ்ப்பாணத்தில அரசர்மாரிருந்த காலத்தில எடுபிடி வேலை செய்தெண்டாலுஞ்சரி, படையள நடத்திற ஆக்களாய் இருந்தெண்டாலுஞ்சரி, இல்லாம... சபையில ராசாவுக்கு ஆலோசனை சொல்லுற மந்திரியாயிருந்தாலுஞ் சரி... என்னண்டோ காணி பூமியெண்டு நல்லா சொத்துச் சேர்த்திட்டுது அந்தக் குடும்பம். எங்கட அப்பரே சொல்லியிருக்கிறார், உவங்கட காணி பூமியெல்லாம் எத்தினை எத்தினை பரப்பு, எங்கெங்க இருக்கெண்டு உவங்களுக்குக் கூடத் தெரியாதாம்.

அந்தக் காலத்தில கந்தப்பு வாத்தியாரிட்ட பன்ரண்டு சுத்து சில்லு வண்டிலொண்டு இருந்துதாம். அதில பிணைக்கிற மாடுகள் ரண்டும் இந்தியாவிலயிருந்து கொண்டுவந்த வடக்கன் மாடுகளாம். அந்த வண்டில்ல நான் ஏறினதில்லையெண்டாலும், புடிச்சுக்கொண்டு பின்னால ஓடியிருக்கிறன். ஷோக்கான வண்டில். அதுகின்ர சில்லுக்கு மஞ்சள் பெயின்ற் அடிச்சிருக்கு நுகத்தடிக்கு சிவப்புப் பெயின்ற் குத்துக்காலுக்கு பச்சை. அந்த வண்டில் நிப்பாட்டுற கொட்டில்ல கட்டியிருந்த பறணில கிடந்த ஊரிப்பட்ட சாமானுகளோட அஞ்சாறு சாக்குமூட்டையளும் கிடந்துதாம். அதில ரண்டு மூண்டில ஏதேதோ பனையோலைச் சுவடிக் கட்டுகளாம். மிச்சத்தில காணி உறுதியள்தானாம் இருந்திது.

ஒண்டும் விளையாட்டுப் பேச்சில்லை. நீர் தாராளமாய் நம்பலாம். எண்டாலும் இரக்கப்படுற மனமும் ஓட்டைக்கையுமாய் இருந்ததில கனகாணியள வித்துச் சிலவழிச்சிட்டுதுகள் இன்னும் கொஞ்சக் காணியள பழனிகோயிலுக்கு எழுதிவைச்சிட்டுதுகள். எண்டாலும் வித்துவான் தன்ர காலத்தில பெரிய காணி பூமிக்காறராய்த்தான் இருந்தார். அவற்ர தங்கச்சியாருக்கு ஊரில அரண்மனை வீடெண்டு இருந்த ஒரு பெரிய வீட்டைக் குடுத்துக் கலியாணம் செய்துவைச்சினமெண்டது. லேசான விஷயமே?

அப்ப... தடிப்பு ஏறாமல் என்ன செய்யும்?

சாந்தமான மனிஷனெண்டபடியா தண்டுமுண்டுக்கு வித்துவான் நிக்கிறேல்லைத்தான். ஆனா அவற்ர தம்பி சண்முகராசாவெண்டு ஒருத்தர் இருக்கிறார், அந்தாள் வெட்டுக்குத் துக்கும் கிறுங்காத மனிஷன். எங்கட தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் ஆலயப்பிரவேசம் நடத்தின காலத்திலயும், தேனிக்கடைப் பிரவேசம் நடத்தின காலத்திலயும் சண்டியன்மாரைச் சேத்துக்கொண்டு தென்மராச்சிக்கே நெஞ்சை நிமித்திக் கொண்டு வந்திட்டுது.

அச்சுவேலிப் பிரச்சினை முத்தின நேரத்தில ஆளுக்கு வெடி வைக்கத் திரிஞ்சாங்கள் ஆற்ர நல்லகாலமோ, மனிஷன் தப்பியிட்டுது.

அந்த இறுமாப்பும் தடிப்பும் வித்துவானிட்டயும் இருந்திது. ஆனா என்னவொண்டு, வெளிவெளியாய் அதை அவர்காட்டினதில்லை, அதுதான் வித்தியாசம்.

அந்த மனநிலைதான் உவவிட்டயும். சும்மாலேசுப்பட்ட ஆளில்லை உவ. அதில ஐமிச்சப்படத் தேவையில்லை. எல்லாம் தெரிஞ்சுதான் சொல்லுறன். சாதித்தடிப்பும், பணத்திமிரும் எல்லாம் அடி அடியாய் வந்தசொத்து அவைக்கு.

அந்தஸ்த்து வித்தியாசமிருந்தாலும் ஒரே சாதியாக்கள் இவையின்ர முன்னால் வீட்டு கணபதிப்பிள்ளை குடும்பம். வித்துவானுக்கும் பெண்சாதிக்கும் இங்கிதமாய் நடக்கத் தெரிஞ்சதால போக்குவரத்து, குடுக்கல் வாங்கல் எல்லாமிருந்திது. மட்டுவில் பண்டித்தலைச்சி அம்மன்கோயில், சன்னதிகோயில், வல்லிபுரக் கோயிலெல்லாம் குடும்பமாய் வண்டில்ல போய்வருவின. கணபதிப்பிள்ளையர் இதுகளுக்குப் பின்னடிச்சுக் கொண்டு நிண்ட மனுஷன் தான். எண்டாலும் குடும்பத்தை அனுப்பி வைப்பார்.

ஒருநாள் அம்மன் கோயிலுக்குப் போன இடத்தில, பொங்கல் முடிஞ்சோடன பெடியன் எல்லாரையும் முந்தி வந்து பின்பக்கத்தில வெய்யில் முகத்தில அடிக்காத மாதிரி ஏறியிருந்திட்டுது. உந்த சிவயோகமலர் இருக்கே... அதுவும் சின்னன்தான் அப்ப... தங்கடவண்டில்... தான்தான் முதல்ல ஏற வேணுமெண்டு நண்டு நிண்டிட்டுதாம். பெடியன் கீழ இறங்கிற மட்டும் ஒருதற்ர சமாதானத்தில அடங்கேல்லயாம். தேப்பன் தடி எடுத்தும் பாத்தாராம். அதுக்கும் கேக்கேல்லையாம். பெடியன் கீழ இறங்கினாப் பிறகு தான் பெட்டை அடங்கிச்சிதாம். சில பேருக்கு சின்ன வயதிலயே போட்டி பொறாமையானமனம் அமைஞ்சிடுது போல. அதில உவ சிவயோகமலரும் ஒராளெண்டு நினைக்கிறன். கடைசிவரை



சுந்தரத்தாரை நிம்மதியாயிருக்க விடேல்லயே உந்த மனுஷி. உவள் துன்னாலைத் தங்கம்மான்ர மோள் சிவத்தியோட கொஞ்சக்காலம் இவவுக்கு பெரிய கொண்டாட்டம் இருந்துதெல்லோ, உவவின்ர கதையெல்லாம் சிவத்தி சொல்லியிருக்கிறாள்.

கடைசியில ரண்டு பேருக்கும்தான் கலியாணம் நடந்தி தெண்டாலும், அல்வாய்ச் சிவன்கோயிலடி சீதணவீட்டில இருக்கேக்கயே நாயும் பூனையுமாய்த்தானாம் எப்பவும் இருந்தினம். அதுவும் வீணை வாசிக்க கச்சேரிக்குப் போறனெண்டு கொழும்பில போய்க்கிடந்தா கொஞ்சநாள். சுந்தரத்தாரும்

ஏன் விட்டிட்டு இருந்தாரெண்டு எனக்கெண்டா உண்மையில விளங்கேல்லை.

ஒரு நாள் கொழும்பிலயிருந்து வீட்டை வந்தவவுக்கும் சுந்த ரத்தாருக்கும் பெரிய வாக்குவாதமாய்ப் போச்சு. இந்தத்தக ராறில... என்ன மாதிரி நடந்திதோ... இல்லாட்டி இவர்தான் தள்ளி விழுத்தினாரோ தெரியாது... சுவரோட சார்த்தி வைச் சிருந்த வீணை கீழ விழுந்து உடைஞ்சு போச்சு. அந்தக்கா லத்திலயே பத்தாயிரம்ருவா பெறுமதியாம். உவ கோவிச்சுக் கொண்டு போய் தேப்பன் வீட்டில நிண்டிட்டா. ஒருநாள் சுந்த ரத்தார் பள்ளிக்குடம் போக வீட்டை வந்து அவர் கீறிவைச்சி ருந்த படங்களெல்லாத்தையுமெடுத்து கிழிச்செறிஞ்சிட்டு போயிட்டா. மூண்டு பிள்ளையளுக்குப்பிறகும் இந்த மாதிரி விளையாட்டு வேண்டாமெண்டு இவர்தான் போய் உவவை பிறகு கூட்டி வந்தாராம்.

மூண்டு பிள்ளையள் இவைக்கு. மூத்தரண்டும் பெடியள் கடைசி பொட்டை. தாயைப்போல மூண்டும் நல்லவடிவும் நிறமும். அவர் காக்காக்கறுப்பு சிரிப்புத்தான் வெள்ளை. இவைக்கு தோல் வெள்ளையெண்டாலும் சிரிப்பு கறுப் பாய்த்தான் இருந்திது.

மூண்டுக்குள்ளயும் ரண்டாம்பொடியன் மகேந்திரசிவம் நல்ல குணமும் வடிவும். என்ர கணக்குச்சரியெண்டால், பொடியன் தொண்ணூறில நாட்டை விட்டு வெளிக்கிட்டிருக்கவேணும். தொண்ணூற்றொண்டில கனடா வந்து சேந்திட்டுது. என்ர மோனும் சரியா அந்த ஆண்டிலதான் வெளிக்கிட்டு தொண் ணூற்றொண்டில கனடா வந்து சேந்தவன்.

எனக்கு இந்தரண்டாவது பெடியன் மகேந்திரசிவத்தை நல் லாத்தெரியும். ஊரிலயிருக்கேக்கயே தெரியும். என்ர மோன்ர வகுப்பெண்டபடியா கதைபேச்சுமிருந்திது. கனடா வந்தும் கொஞ்சக்காலம் ஸ்காபரோவிலதான் பெடியன் இருந்திது. பிறகு இயக்கங்களின்ர தொந்திரவு வலுத்துப் போச்செண்டு ஒட்டாவா போட்டுது.

நல்ல பொடியன் பொறுப்புத் தெரிஞ்ச பொடியன். தாயை ஏஜன்ரால இஞ்ச எடுத்துவிட்டது அந்தப் பிள்ளை தான். சகோதரங்களை வெளி நாட்டுக்கு எடுத்து விட்டதும் அந்தப் பிள்ளைதான். ரண்டாயிரத்தில ஒராளை சிலோனிலயிருந்து ஏஜன்ரால எடுத்து விடுறதெண்டாலே குடும்பம் கடனில முழு கிப்போம். மூண்டு பேரையெண்டா, யோசிச்சுப்பாரும். இப் பிடி ஒண்டையும் பாராம, இஞ்ச எடுத்து விட்டதுக்கு உவ செய்த கைமாறு என்ன தெரியுமே?

அதைக் கொஞ்சம் விளப்பமாச் சொன்னாத்தான் உமக்கு வடிவா விளங்கும். நேரமிருக்குத்தான? சொல்லுறன், கேளும்.

ஒட்டாவா போய் அடுத்த வரியத்திலயே அங்கயிருந்த ஒரு கயானாப் பெட்டைக்கும் மகேந்திரசிவத்துக்கும் பழக்கமாகிப் போச்சு. தனியாய் இருந்தவர் தான், கட்டுப்பாடில்லாம பழகி யிட்டினம் போல, பொடிச்சி மாதமாய்ப் போச்சு. அதால திடீ ரெண்டு கலியாணம் செய்திட்டினம். சகோதரங்களுக்கும் சொல்லேல்லை, ஊரில தாய் தேப்பனுக்கும் சொல்லேல்லை. தாய்க்காறி வரப்போறா, நேரில சொல்லலாமெண்டும் நெச்சி ருக்கலாம்.

தாய்க்காறி ரண்டாயிரத்தில ஒரு நல்ல சமரில வந்தா வெண்டு ஞாபகம். பொடியனும் வலுசந்தோஷமாய் மனிஷி யையும் பிள்ளையையும் ஒட்டாவாவிலயிருந்து கூட்டி வந்து ரொறன்ரோ எயாப்போட்டில நிண்டுகொண்டிருக்கு.

மோன், தாய்வாறதாய்ச் சொன்ன பிளைற் வந்து மூண்டு மணத்தியாலமும் ஆயிட்டுது, இதென்ன, ஆள் இன்னும் வரேல்லையெண்டு ஏங்கிப் போச்சு. மகேந்திரசிவம் சிலோன் ஏஜன்ருக்கு போனடிக்கிறார். பதில் கிடைக்குதில்லை. விஷ யத்தைக் கேட்டறியிற கயானாப் பிள்ளைக்கும் பெரிய சோக மாயிருக்கு.

கடைசீல விசாரணைக்கு இமிக்கிறேஷன்காறர் மகேந்திரசி வத்தைக் கூப்பிடுறாங்கள். இவர் போய் எல்லா அலுவலை யும் முடிச்சிட்டு தாயைக் கூட்டிக்கொண்டுவாறார்.

மாமிக்காறியைப் படத்தில கண்டிருக்கும், அந்தக் கயனாப் பிள்ளையும் வலு சந்தோஷத்தோட சிரிச்சுக்கொண்டு அவ விட்டப் போகுது. மகேந்திரசிவம் நிண்ட சீரிலயும், பிள் ளையை ஆதரவோட அவளிட்டயிருந்து வாங்கின மாதிரியில யும் ஒரு அனுமானம் அவவுக்கு வந்திருக்கும், பார்வையி லயே கேள்வி விழுகிது.

எல்லாம் சொல்லுறன்... நீங்கள் முதல்ல வாருங்கோ... எண்டி றார் மோன். மனுஷி வேண்டா வெறுப்பாய் அந்தப் பிள் ளையை விலத்திக்கொண்டு அங்கால போகுது.

அம்மா எண்டிறார் மோன்.

'எனக்கு எல்லாம் விளங்கியிட்டுது, மகேந்திரன். இந்தக் கேவ லத்தைப் பாக்கிறதுக்குத்தான் அவசரப்பட்டு என்னைக் கூப் பிட்டனியோ...'

நான் கூப்பிட்டிருந்தாலும் காசு அவ்வளவும் குயின்ஸி பாங் கில கடனெடுத்தது...

'அதென்னவோ, அது உன்ர பிரச்சினை. இப்ப என்னைக் கொண்டு போய் எங்யனயெண்டான்ன தங்கவிடு. சிலவுக்கும் கொஞ்சம் காசுதா. நான் அபிநயாவோடயும் நடராச சிவத் தோடயும் கதைச்சு என்ர வழியைப்பாக்கிறன். எப்பவாச்சும் என்னைப்பாக்க வேணும்போல இருந்தா, நீமட்டும் வந்துபார் அந்த நாயும் அதுகின்ர குட்டியும் என்ர கண்ணிலயும் படக் குடாது.'

வாய்க்கு ஆயிரம் பாஷை இருக்கட்டும். முகத்துக்கு ஒரு பாஷைதான், ஒரேயொரு பாஷைதான், மாமிக்காறியின்ர வாயில வந்ததுகளை விளங்காட்டியும், முகத்திலயிருந்து வந்த பாஷையை அந்த கயானாப் பிள்ளையால விளங்கியி ருக்க ஏலும். அது விளங்கின நிமிஷத்தில தன்ர மனிசன்ர குடும்பத்தில இருந்த மதிப்பு ஆசை பாசம் கனவு கற்பனை எல்லாத்தையும் அந்தப்பிள்ளை எரிச்சிருக்கும். இது நடந்தது ரண்டாயிரத்தில யெண்டா... பாரும்... இப்ப ரண்டாயிரத்துப் பத்தொன்பது... பதினெட்டு பத்தொன்பது வரியம்... மாமியா

ரைப் பாக்கவரேல்லை, மோனும் வாறதில்லை.

மோன் எப்பாலுமிருந்திட்டு போனில கதைக்கிறாரெண்டு கேள்வி. அதுவும் தேப்பனோட தான்கூட.

அவரும் பெட்டையோட கதைக்கிறேல்லை. தன்ர மனுஷிக் குத் தெரிஞ்சிடுமெண்ட பயமாக்கும்.

எல்லாற்ர ஆட்டத்துக்கும் இடம் விட்டு காலம் ஓடிக் கொண் டிருக்கு.

எல்லாரும் நெச்சிருப்பினம், நாங்கள் வெண்டிட்டம்... நாங் கள் வெண்டிட்ட மெண்டு.

அது அப்பிடித்தானாவெண்டு போகப் போகத்தான தெரியும்.

அது அவரைத் திடுக்கிடப் பண்ணியது. உறைந்து போகச் செய்தது. அத்தனை ஆண்டு கால தன் மனைவியின் பராம-ரிப்பில் அவ்வாறான ஒரு நிலைமையை சுந்தரம் என்றும் எதிர் கொண்டதில்லை. யாரும் யாரையும் எதிர்கொள்ளக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. அது அவருக்கே நேரும் போது என்ன ஆவார் அவர்?

வாழ்வில் எதுவித ஆசாபாசமும் அற்றதாய்க் கழிந்த கடந்த காலங்களைப் போலவே மீதி நாட்களையும் கடத்திவிடும் தீர் மானம் தான் அவரிடத்தில் இருந்திருந்தது. துன்பம், துயரம், இழப்பு, நோய் நொடியென எதனிலுமே பிரக்ஞையற்ற ஒரு விருத்தா வாழ்க்கையெனினும் அதையே குறியாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

அவரது வயதும், நிலைமையும் அதைவிட அவரிடம் எதிர் பார்க்கச் செய்ய முடியாதன தான். ஆனாலும் அவை அவ தானத்தில் இருக்க வேண்டியவை. தவிர்க்கப்படக் கூடா தவை.

மனைவியின் இரவுணவை எடுத்துக் கொண்டிருக்கையில் அவரது அறைக்குள் விக்கலெடுப்பது போன்ற அபூர்வமான ஓசை பிறப்பதைக் கேட்டார் சுந்தரம். ஆபத்தெதையும் எதிர் பார்க்காது அநாயாசமாக நாலடி வைத்து என்னது எனப் பார்க்கப் போலத்தான் சிவயோகமலரின் அறை வாசலை அவர் சமீபித்தார்.

உள்ளே மலர் மூச்செடுக்க படும்துடிப்பில் திடுக்கிட்டுப் போனார். அவரது உடம்பே விறைத்துப் போனது. ‘மலர்...!’ என அலறியதற்கு மேல் ஏது செய்யவும் இயலாது போனார். அவ்வாறான ஆபத்துச் சமயங்களில் அவசர சிகிச்சைப் பிரி வுக்கு எடுத்துச் செல்ல அம்புலன்ஸ் உதவிக்கு 9-1-1-க்கு போனெடுக்கவும் முடியாதவராய் அவர் ஆகியிருந்தார். குறைந்தபட்சம் அவரால் செய்ய முடிந்தது படிக்கட்டுப் பக் கம் திரும்பி ‘சாந்தீ...!’யென பெருங்குரல் எடுக்க மட்டுமே.

ஏற்கனவே அவர் ‘மல’ரெனக் கதறியது கேட்டு பெரிய மாமன் செல்ல முத்துவுக்கு தேநீர் போட்டுக் கொடுத்து தானும் அருந்திக் கொண்டிருந்த சாந்தரூபிணி செவிப்புல னைக் கூர்த்திருந்தாள். அதனால் பின்னும் சுந்தரம் தன் னைக் கத்தியழைத்த சத்தத்தில் ஏதோ ஆபத்தையுணர்ந்து கொண்டு விநாடிகள் தாமதமின்றி கீழே ஓடினாள். தன் வேகத்தை இப்முறை பாதிப்படிக் கட்டில் அவள் நிறுத்திக் கொள்ளவில்லை.

கீழே இறங்கி இருவர் மீதும் கவிந்த பார்வையில் நிலைமை யின் கடுரத்தை விளங்கிப் போனாள் சாந்தரூபிணி.

மலர் மூச்செடுக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். மூச்சு உள்ளே செல்லப்போல் வெளியேறவும் முடியாது திணறி னார். உடனடியாக மலரின் நெஞ்சை நீவி அவர் அமைதிய டையும்படி, ‘அதொண்டுமில்லை, வாய்வுப் பிரச்சினையாயி ருக்கும்’ என எதையோ சொல்லி நம்பிக்கைவரப்பண்ண முயற்சித்தார்.

அந்தளவில் கண் விழிகள் பிதுங்கி, சுவாசம் பெரும்பாலும் மலருக்குத் தடைபட்டுப் போயிருந்தது. அந்த நிலையில் அவரது மனத்தில் தோன்றிய ஒரே எண்ணம்... ‘செயற்கைச் சுவாசம்.’

அவசரமாய் சுந்தரத்தைத் தெளிவித்து 9-1-1-க்கு போனெடுக் கச் சொல்லிவிட்டு மலருக்கு வாய்வழி காற்றை ஊதும் முறையைத் தொடங்கினாள்.

ஒரு நிமிஷமாயிற்று, இரண்டு நிமிஷமாயிற்று... சாந்தரூபிணி யின் நம்பிக்கைகள் தளரவாரம்பித்தன. மலர்தன் இறுதி மூச்சை ஏற்கனவே விட்டுவிட்டதாகவே எண்ணிவிட்டாள். அந்த நேரத்தில் வீட்டுவாசலில் இரைந்த வாகனச்சத்தம் அவளைமீண்டும் அம்முயற்சியில் தொடர்ந்து மும்முரமாய் ஈடுபடவைத்தது.

திடீரென மலரின் தொண்டையில் அடைப்பொன்று திறபட்டது போன்ற சத்தம். மறுகணம் அவரின் அவதியான சுவாசம் சுய மாய் இயங்கத் தொடங்கியது.

அந்தளவில் அம்புலன்ஸில் வந்த வைத்திய அதிகாரிகள் நிலைமையைப் பரிசீலித்து, முதலில் பிராணவாயுச் செலுத்து கையையும், பின் அவரை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்வ தற்கான ஆயத்தத்தையும் செய்தார்கள்.

வெளியே, ஷ்ட்ரெச்சரில் எடுத்துச்சென்று வண்டியுள் மலரை ஏற்றுகிற நேரத்தில், இன்னும் ஆசுவாசப் படமுடியாதிருந்த சிவயோகமலரின் கரம் சுந்தரத்தின் பக்கம் நீண்டு அவரைப் பற்றியது.

கூடச்செல்வதா வேண்டாமாவெனத் தயங்கியபடி நின்றிருந்த சுந்தரம் மேற்கொண்டு ஒருகணம் தாமதிக்கவில்லை. அம்பு லன்ஸில் ஏறிக்கொண்டார்.

‘மாமா நிக்கிறார், நான் பின்னால அவரோட காரில வருவன், நீங்கள் யோசியாமலிருங்கோ, அங்கிள்’ என்று சுந்தரத்திற்கு தெம்பளித்தாள் சாந்தரூபிணி.

ஆஸ்பத்திரியில் அந்த நேரத்தில் வெகு சந்தடியாயிருந்தது. நெடுஞ்சாலை விபத்தொன்றினால் பொலிசும் டொக்டர்களு மென இருந்த பரபரப்பைத் தாண்டி அவசரகால சிகிச்சைக் கான ஓரறையில் மலரைக் கொண்டு சென்றார்கள். டாக்டரின்

பரிசோதனை முடியும்வரை பார்வையாளர்கள் வெளியே அந் தரத்திலிருக்க விடப்பட்டனர்.

தனக்கு அன்றிரவு அன்ரியுடன் தங்க வசதியாயிருக்கு மென் றும், சுந்தரத்தை வீடு சென்று பிள்ளைகளுக்கும் மற்றும் வேண்டியவர்களுக்கும் தகவலளிக்கும் காரியத்தைக் கவனிக் கும் படியும் வற்புறுத்தினாள் சாந்தரூபிணி.

டாக்டர் வெளியே வந்து உடல் நிலைபற்றித் தெரிவித்ததும் சிறிது சமாதானமானவர், உள்ளே சென்று மலரைப் பார்த்து, அவரின் கரத்தை ஆதரவாகத் தடவி அவளிடம் விடை பெற் றார்.

வீடு வந்த சுந்தரத்தின் அமைதி இன்னும் தொலைவிலேயே நின்றிருந்தது... ஒரு சிறு பொழுதில், புகைப்பதினாலான புற் றுநோய் எச்சரிக்கையை இரண்டு தடவைகள் மீறினார். அப் போதும் மனம்தெளிய அவருக்கு மறுத்திருந்தது.

முதலில் மலரின் சுகவீனம் பற்றி பிள்ளைகளுக்கு அறிவிக்க வேண்டுமென ஒட்டாவாவிலுள்ள மகேந்திரசிவத்திற்கு போனெடுத்து விஷயத்தைச் சொன்னார். பின்னர் நள்ளிரவு தாண்டியிருந்தாலும் பரவாயில்லையென இங்கிலாந்திலுள்ள அபிநயவல்லியை அழைத்தார். கனடாவுக்கும் அவுஸ்திரேலி யாவுக்கும் பதினாறு மணிநேர வித்தியாசமாதலால் நள்ளிரவு தாண்டியிருக்கும் அந்த நேரத்தில் தாயின் நிலைமையைச் சொல்லி நடராஜசிவத்தைப் பதற்றப் படுத்த வேண்டாமென காலையில் போன் செய்யக்காத்திருந்தார்.

பிள்ளைகள் இரண்டு பேருக்கும் தாயின் சுகவீனத்தை அறி வித்த போதே அவர்களுக்குச்சொன்ன ஆறுதல் வார்த்தைக ளால் தானுமே அமைதி கூடப்பெற்றுப் போனார் அவர். அது மூன்றாவது தடவையும் புற்றுநோய் எச்சரிக்கையை மீறு வதிலிருந்து அவரைத்தடுத்தது.

சோபாவில் அமர்ந்திருந்த சுந்தரத்தின் மனம் ஆழமற்று அந் தந்த விஷயங்களிலும் தொட்டுத் தொட்டுப்பறந்து கொண்டி ருந்தது.

உண்மையில் 9-1-க்கு போனெடுக்க வேண்டுமென்பது அவ ருக்குத் தெரிந்திருந்தது. எண்ணத்திலும் ஓடியது. உடம்பு தான் இயங்காதிருந்து விட்டது. தனது ஸ்தம்பிதம் மேலும் சிறிது நேரம் நீடித்துதான் 'சாந்தீ...!' எனக் கத்தாதிருந் தாலோ, காதில் அத்தொனிவிழாது அவள் வரத்தாமதமாகியி ருந்தாலோ மலருக்கு என்னநேர்ந்திருக்குமென எண்ண அவ ரது மனம் பதறியது. அந்தப் பேரிழப்பு தன்னால் நேர்ந்த தாக இருந்தால் வாழ்க்கை முழுக்க அதுவொரு பழியாய், பாவமாய் தன்னை நிழலாய்ப் பின்தொடர்ந்திருக்குமேயென எண்ண அவரது நெஞ்சு துடித்தது. பின்தொடரும் அந்த ஆத்மாகூட தன்னை சகல வழிகளிலும் பழிவாங்கத் தயங்கி யிராதென எண்ண அவரது உள்நடுக்கம் மேலும் அதிகரித் தது.

அப்போது, அம்புலன்ஸில் ஏற்றும் கணத்தில், சுத்தரம் நிற்கு மிடத்தைத் துளாவி அவரைப் பற்றுக்கோடாய் சிவயோகமலர் பற்றியதை நினைத்துப் பார்த்தார். அதுதான் உயிர் அகத் ததோ புறத்ததோ என்ற தருணத்தில் அவர் காட்டியிருக்கக் கூடிய அடைக்கலத்தின் அடையாளமென்பதை அவர் அறி வார். அந்த அடைக்கலமாய் தானிருந்ததில் ஒரு நிறைவும், அந்த நினைப்பில் ஒரு சிலிர்ப்பும் அவரிடத்தில் உண்டாயின.

சிவயோகமலர் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிய பின்னாலும் தன் அகங்காரத்தின், உதாசீனத்தின், சிறுமைப்படுத்துவதின் மனக்கூறுகள் அழிந்தவராய் நடப்பாராவென்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. ஆயினும் அப்போதும் அவர் தன் இரக்கத்துக்குரியவராகவே இருப்பாரென்பதில் சுந்தரத்திற்கு நம்பிக்கை. அந்தளவு மோசமான உத்தரிப்பை மலர் ஒரு சிறு காலவெளியில் அனுபவித்திருந்தார். இரவுகளில் பயங் கரக் கனவுகளாய் அந்தக்காட்சி ரூபம்தனக்குத் தோன்றி விடக்கூடாதே என சுந்தரம் உள்ளுள்ளாய் விரும்பிக்கொண் டார்.

எவ்வளவு செல்வாக்கான, எவ்வளவு வசதியான குடும்பத்திலி ருந்து வந்தபெண் அவர். திடீரென்ற உயிரச்சம் நேர்ந்த போது எல்லாமிழந்தவராய், எதுவுமற்றவராய், வெறும் உயிர்ச்சடலமாய் ஆகியிருந்தாரே! அது தன் அந்திமத்தின் அடையாளமாவென்ற ஏக்கம் பார்வைக்கும் வெறுத்திருந்த தன்னையும் துணைக்கு அழைத்ததே!

அவ்வாறுதான், எல்லோரும் அடங்குவதற்கு ஒருதருணம் வரு கிறது.

அவர் முன்பே எண்ணியிருந்தது போல் அது ஒரு கணத்தின் விளைவுதானே!

கணமென்பது காலத்தின் வகிர்ந்தெடுக்கப்பட்ட மிகச்சிறுபொ ழுது.

தேகத்துக்கும் சவத்துக்கும், ரூபத்திற்கும் அரூபத்திற்கும், நனவுக்கும் கனவுக்கும், சத்துக்கும் அசத்துக்குமிடையில் ஊடாடிக் கொண்டிருக்கிறது அது.

புள்ளி போலன்றி, கணத்துக்கு பரிமாணமுண்டு. சிலவற்றின், ஒன்றிலிருந்து ஒன்றாகும் மாற்ற விசைக்குத் தேவையான காலவளவு அதுதான்.

கலாபூர்வமான விஷயங்களின், உதாரணமாக சித்திரத்தில், கணம் சிறைப்பிடிக்கும் உணர்வு உயிர்த்துவம் பெறுகிறது. அதுவே உயிராகிறது. உயிரின் உயிருமாகிறது.

அவ்வாறான பல கணங்களை சுந்தரம் தவற விட்டிருக்கிறார். அந்த வீணைக்கலைஞி சிவயோகமலரும் கூட அவ்வாறான பலகணங்களைத் தவற விட்டவரே.

இழக்கும் போது மட்டுமன்றி இழந்த பின்னாலும் அதுபற்றி உணரப்படாது போவதில் விளைகிறது பேரிழப்பு. யாரிவர்க ளில் கூடுதலான பேரிழப்பாளியாகக்-கூடும்?

(தொடரும்)



devakanthan@thaiveedu.com

# முமு – இவான் துர்கனெயெவ்

தமிழில் : என். கே. மகாலிங்கம்

ஓவியம் : ஜீவா

மொஸ்கோவிலிருந்து வெகுதூரத்தில் உள்ள ஒரு வீதியில் வெண்ணிறத் தூண்களும் உப்பரிகையும் கொண்ட ஒரு வீடு அது. அது ஒரு பக்கம் சாய்ந்து வளைந்து போயிருந்தது. அதில் ஒரு சீமாட்டி வாழ்ந்து வந்தாள். அவள் ஒரு கைம் பெண். அந்த வீட்டில் ஏராளமான அடிமைகள் வேலை செய்தனர். அவளுடைய மகன்மார் பீற்றர்ஸ்பேர்க்கில் அரச சேவையில் இருந்தனர். மகள்மார் மணம் முடித்து வேறாகப் போய் விட்டனர். சீமாட்டி அதிகம் வெளியே போக மாட்டாள். கிளர்ச்சியற்ற கஞ்சத்தனமான முதிய வயதில் தனியாகவே வாழ்ந்து வந்தாள். அவளுடைய பகல் பொழுதுகள் மகிழ்ச்சியற்றதாகவும் சோர்வாகவுமே கடந்து சென்றன. மாலைகள் இரவுகளிலும் பார்க்க இருண்டதாகவே இருந்தன.

அவளுடைய எல்லா வேலைக்காரர்களிலும் பார்க்க ஒருத்தன் மிகவும் தனித்துத் தெரிந்தான். அவன் பெயர் ஜெராசிம். அவன் சாதாரணமான மற்றவர்களிலும் பார்க்கக் குறைந்தது பன்னிரண்டு அங்குலம் கூடுதலான உயரமும் வீரனுக்குரிய உடலமைப்பும் கொண்டவன். ஆனால் பிறந்ததில் இருந்தே காது கேட்காதவன். அத்துடன் வாயும் பேச முடியாதவன். அவனுடைய உரிமையாளரான அந்தச் சீமாட்டி கிராமத்தில் மற்றச் சகோதரர்களிடம் இருந்து தனியாக ஒரு குடிசையில் வாழ்ந்த அவனை கொண்டு வந்திருந்தாள். மானியமுறை குடிமை முறையில் வாழ்ந்த சிறுவிவசாயிகளில் அவன் தான் மிகவும் நேரம் தவறாத உழைப்பாளி என்று மதிக்கப் பட்டிருந்தான். அசாதாரண பலம் வாய்ந்த அவன் நாலு பேரின் வேலையைத் தனியாளாகச் செய்வான். அவன் கைகள் வேகம் வேகமான வேலை செய்யும். அவனுடைய பெரிய உள்ளங் கைகள் கலப்பையை அழுத்த, அவன் நிலத்தை உழுவதைப் பார்ப்பதே மனதிற்கினிமையானதொரு காட்சி. குதிரையின் உதவியின்றி நிலத்தைப் பிளந்து உழும்போது அவனைப் பார்க்க வேண்டும். நிலம் தானாகவே பிளந்து கொடுக்கும். புனித பீற்றரின் நாளில், வெறிகொண்ட தன் ஆற்றலால் அடர்ந்த இளம் மரங்களை அரிவாளால் வேருடன் வெட்டித் தள்ளுவான். அல்லது வேகமாக களைக்காமல் இரண்டடி தூரம் பாயும் சூடடிக்கும் கோலைச் சுழற்றி வெட்டுவான். அவன் தோளிலுள்ள இறுக்கமான நீண்ட தசை நார்கள் நெம்புகோல் போல மேலெழும்பி கீழே விழும்.

அவனுடைய நிரந்தரமான அமைதி அவன் செய்யும் தொழிலுக்குப் புனிதமான கண்ணியத்தை கொடுக்கும். அவன் அற்புதமான சிறுவிவசாயி. அவனுக்கிருந்த இயற்கையான குறைபாடுகளை விட்டால் அவனை எந்தப் பெண்ணும் மணம் முடிக்க விரும்புவாள்... ஆனால் அவனை - ஜெராசிம்மை - மொஸ்கோவிற்கு கொண்டு வந்து விட்டார்கள். கொண்டு வந்தபோது அவனுக்கு பூட்ஸ் வாங்கிக் கொடுத்தார்கள். கோடை கால நீண்ட மேலாடையும், குளிர்காலத்துக்கான செம்மறி ஆட்டுத் தோலில் தைத்த மேலாடையும் வாங்கிக் கொடுத்து கையில் விளக்குமாறும் மண்வெட்டியும் கொடுத்து அவனை சுமைதூக்கும் ஆளாக நியமித்தார்கள்.

முதலில் அந்த புதிய வாழ்க்கையை அவன் மிகவும் வெறுத்தான். குழந்தைப் பருவத்திலிருந்தே வயல் வேலை செய்யவும் கிராமத்து வாழ்க்கைக்குமே பழகி இருந்தான். தன் குறைபாட்டால் ஆண்கள் சமூகத்திடமிருந்து தவிர்க்கப்பட்டு ஊமையாக ஆனால் வலிமையுடன் வளர்ந்திருந்தான். செழிப்பான மண்ணில் வளர்ந்த மரம் போல. அவனை நகரத்திற்கு கொண்டு வரப்பட்டபோது என்ன நடந்தது என்பதை அவனால் புரிந்து கொள்ள இயலவில்லை. திகைத்துப் போய் மெய்மறந்து போய் நின்றான். வயல்களில் வயிறுவரை வளர்ந்த வளமான புல்லை வயிறு நிறையத் தின்று நின்ற வலிமையான இளம் காளை ஒன்றை, தீப்பொறிகள் பறக்க, புகையும் நீராவிக் காற்றும் முகத்தில் அறையும் புகையிரத வண்டிப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டு சென்ற காளை போல திகைத்துவிட்டான். புதிய இடத்தில் ஜெராசிம் செய்ய வேண்டிய வேலைகள் சிறு விவசாயிகள் செய்யும் கடும் வேலைக்குப் பக்கத்தில் வைத்துப் பார்த்தால் மிகவும் அற்பமானவை. அரை மணி நேரத்தில் எல்லா வேலைகளையும் முடித்து விடுவான். முற்றத்தில் திரும்பவும் வந்து நிலைகுத்தி அசையாமல் நின்று போவோர் வருவோரை வாய் திறந்து பார்த்துக் கொண்டிருப்பான். தன்னுடைய குழப்பான நிலைக்கு என்ன காரணம் என்ற விளக்கத்தைக் கேட்பதற்

காக நின்று கொண்டிருப்பது போல. அல்லது திடீரென ஒரு மூலைக்குப் போய் நிற்பான். தான் வைத்திருந்த தும்புக்கட்டையையோ மண்வெட்டியையோ எறிந்து விட்டு நிலத்தில் முகம் குப்புற விழுந்து கிடப்பான். மணித்தியாலக் கணக்காக அசையாமல் கிடப்பான். கூட்டில் அடைத்த மிருகத்தைப் போல. ஆனால் மனிதன் எல்லாவற்றுக்கும் பழகிக் கொள்வான் என்பது தெரிந்ததே. அதேபோல ஜெராசிம்மும் கடைசியில் நகரத்தில் வாழப் பழகிக் கொண்டான். அவனுக்குச் செய்வதற்கு கொஞ்ச வேலைகளே இருந்தன. அவனுடைய வேலை, முற்றத்தை சுத்தமாக வைத்திருப்பது, ஒரு நாளைக்கு இரண்டு தரம் பீப்பாவில் தண்ணீர் எடுத்து வருவது, குசினிக்கும் வீட்டுக்கும் விறகு பிளந்து கொண்டு வருவது, அந்நியர்களை வீட்டுக்கு வராமல் தடுப்பது, இரவில் காவல் காப்பது ஆகியவை. அவனுடைய கடமைகளை பெரும் ஆர்வத்துடன் செய்தான் என்று தான் சொல்ல வேண்டும். முற்றத்தில் எந்தவொரு ஒரு துரும்போ தூசியோ கூடக் கிடக்காது. மழைக் காலத்தில் தண்ணீர் எடுத்து வரும் குதிரை வண்டி சிலவேளைகளில் தெருவில் புதைந்து விடும். சாதாரணமாக அவன் அதைத் தோளால் தள்ளிவிட்டால் வண்டி மட்டுமல்ல அதனுடன் சேர்ந்து குதிரையும் அசைந்து செல்லும். விறகு வெட்டும்போது கோடரி, கிளாஸ் கிணுகிணுப்பது போல, கிணுகிணுக்கும். துண்டுகளும் துணுக்குகளும் எல்லாத் திசைகளிலும் பறக்கும். அந்நியர்களைப் பொறுத்தவரை, ஒருநாள் இரவு இரண்டு கள்ளர்களை பிடித்தான். பிடித்து அவர்களின் தலைகளை ஒன்றுடன் ஒன்று மோதினான். அந்த மோதலே போதுமானதான இருந்தது. அதன் பிறகு அவர்களை காவல் நியைத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சுற்றுப்புறங்களில் இருந்தவர்கள் அதன் பின் அவனுக்கு மிகவும் மதிப்பு கொடுக்க துவங்கினார்கள். பகல் நேரங்களில் வந்தவர்கள், கள்ளர்கள் அல்ல, சாதாரணமாகத் தெரியாதவர்கள், அவனைக் கண்ட மாத்திரத்தில் அவனைப் பார்த்து கைகளை அசைப்பார்கள், சத்தம் போடுவார்கள், என்னவோ அவனுக்கு காது கேட்கும் என்பது போல. அந்த வீட்டில் இருந்த மற்ற வேலையாட்கள் அவனுடன் அதிகம் நட்பாக இருக்கவில்லை. அவனுக்குப் பயந்து போய் இருந்தார்கள். ஆனால் தெரிந்தவர்களாக இருந்தார்கள். அவர்களை அவன் சக தோழர்களாகவே நடத்தினான். அவனுக்கு சைகைகளால் பலவற்றையும் புரிய வைத்தார்கள். அவற்றை அவனும் புரிந்து கொண்டான். அவர்கள் இட்ட ஆணைகளைச் சரியாகவும் செய்தான். அவனுக்கு தன்னுடைய உரிமைகள் என்னவெனவும் தெரியும். மேசையில் அவனுடைய இருக்கையை மற்றவர்கள் எடுக்கத் துணிய மாட்டார்கள். அவன் கண்டிப்பான அதேவேளை தீவிரமான குணவியல்பு உள்ளவன். எல்லாவற்றிலும் ஒழுங்கைக் கடைப்பிடிப்பவன். அவனுக்கு முன்னால் சேவல்கள் கூட சண்டை பிடிக்க துணியமாட்டா. எவரும் அவன் முன்னால் அவனுக்குப் பிடிக்காத எதையும் செய்யத் துணிய மாட்டார்கள். அப்படியானவர்களை அவன் நேரடியாகக் கண்டால் அவர்களின் கால்களைப் பிடித்து பத்து முறை சக்கரம் சுழல்வது போல சுழற்றி ஒவ்வொரு திசையில் எறிவான். முற்றத்தில் வாத்துக்களும் இருந்தன. அவை அனைவருக்கும் தெரிந்தது போல, கண்ணியமான, நியாயமான பறவைகள். அவற்றில் அவனுக்கு மரியாதை உண்டு. அவற்றை நன்றாகக் கவனிப்பான். அவற்றுக்கு நன்றாக உணவளிப்பான். ஆண் வாத்து போல் அவன் ஸ்ரெப்பிஸ் புல்வெளியைச் சேர்ந்தவன் அல்ல. குசினிக்கு மேலுள்ள முகட்டின் கீழ் உள்ள சிறிய அறை ஒன்று அவனுக்கு ஒதுக்கி இருந்தார்கள். அதை அவன் தன் விருப்பம் போல ஒழுங்கு செய்திருந்தான். ஓக் மரப் பலகையில் ஒரு கட்டில் செய்தான். நாலு குத்திகளில் கால்களையும் செய்திருந்தான். உறுதியான மரக்கட்டில் அது. ஒன்றோ இரண்டோ தொன் எடையுள்ள ஒரு பொருளை அதன் மேல் போட்டாலும் அது வளையாது. கட்டிலுக்குக் கீழே திடமான பெட்டகம் ஒன்றை வைத்திருந்தான். மூலையில் அதேபோன்ற திடமான ஒரு சிறிய மேசை. மேசைக்கருகில் ஒரு முக்காலி. அத்தனை திடமும் தடிமனான முக்காலி. சிலவேளை அதை ஜெராசிம்மே தூக்கி நிலத்தில் போடுவான், ஒருவகைப் புன்முறுவலுடனும் மகிழ்ச்சியுடனும். அந்தச் சிறிய அறையை அவன் ஒரு ஆமைப்பூட்டால் பூட்டி வைத்திருந்தான். அது வட்டமான கூடை போன்ற உருவத்தையுடையது. கறுப்பு நிறம். ஆமைப்பூட்டின் திறப்பை மட்டும் எப்பொழுதும் தன் இடுப்புப் பட்டியில் வைத்திருப்பான். தன் அறைக்கு எவரும் வருவதை அவன் விரும்புவதில்லை.

அப்படி ஒரு வருடம் கழிந்தது. அதன் முடிவில் ஜெராசிம்மிற்கு ஒரு சிறிய சம்பவம் நடந்தது.

அவனுடைய முதிய சீமாட்டி எல்லாவகையிலும் புராதன வழிகளையே பின்பற்றுபவள். அவளிடம் பெருந்தொகையான வேலைக்கரார்கள் இருந்தனர். அவளுடைய வீட்டில் சலவை செய்யும் பெண்கள் மட்டும் அல்ல தையல்காரிகள், தையல்காரர்களும், தச்சர்களும் இருந்தனர். சேணம் தயாரிப்பவர்கள் இருந்தனர். அவனை கால்நடை அறுவைச்சிகிச்சை நிபுணர் என்றும் அழைத்தனர். வேலைக்காரர்களுக்கும் தனியாக ஒரு மருத்துவர் இருந்தார். வீட்டுக்காரிக்கு ஒரு மருத்துவர் வீட்டிலேயே தங்கி இருந்தார். சப்பாத்து தைப்பவன் ஒருத்தனும் இருந்தான். அவனுடைய பெயர் கப்பிற்றோன் கிளி-மொவ். துயரமான குடிகாரன். கிளிமொவ் காயப்பட்ட உயிரினமாகத் தன்னை நினைத்துக் கொண்டான். தன்னுடைய தகுதியை ஒருவரும் பாராட்டுவதில்லை என்பது அவன் குறை. அவன் பீற்றர்ஸ்பேக்கிலிருந்து வந்த பண்பட்ட மனிதன். தொழில் இல்லாமல் மொஸ்கோவில் இருக்கக் கூடாது என்பதனால் அப்படி அந்தக் காட்டில் இருக்கிறான் என்பது அவனுடைய நினைப்பு. குடித்தால் நெஞ்சில் அடித்து அதை அழுத்தமாக வெளிப்படுத்துவான். துயரம் தான் அவனை அப்படி ஆக்கியிருந்தது. ஒருநாள் சீமாட்டியின் தலைமை மேற்பார்வையாளானான கவ்றில்லா அவனை அழைத்துப் பேசினான். மேற்பார்வையாளனின் மஞ்சள் நிற கண்களையும் வாத்தின் அலகு போன்ற மூக்கையும் பார்த்து மட்டும் அவனை மதிப்பிட்டால் அவன் அதிகாரத்திற்குரிய ஒருவனாகவே வரையறுக்கப்பட்டவன் போன்று இருப்பான். அத்துடன் அவனுக்குரிய விதியும் அதுதான். கப்பித்தோனுடைய ஒழுக்கச் சீர்கேட்டைப் பற்றி சீமாட்டி தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருப்பாள். கப்பித்தான் ஒருநாள் மாலை குடித்துவிட்டு வீதியில் விழுந்து கிடந்தபோது கண்டெடுக்கப்பட்டு அழைத்து வரப்பட்டிருந்தான்.

‘கவ்ரில்லா, அவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தால்

அவன் திருந்தி விடுவான் என்று நினைக்கிறாயா?' என்று சீமாட்டி அவனைக் கேட்டாள்.

'அவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தால்... அம்மா, அது மிகவும் நல்ல காரியம், நிச்சயம் நல்ல காரியம்' என்று கவ்றால் பதிலளித்தான்.

'ஓம், ஆனால் யாரை அவனுக்கு மணம் முடித்துக் கொடுப்பது?'

'ம், அம்மா,. அது உங்கள் விருப்பம். அவனை அப்படி முற்றிலும் அலைய விடவும் முடியாது.'

'அவன் ரற்றியானாவை விரும்புகிறானா?'

கவ்றில்லா ஏதோ சொல்ல விரும்பினான். உடனே தன் வாயை மூடிக் கொண்டான்.

'ஓம், அவன் ரற்றியானாவை மணம் முடிக்கட்டும். கேட்குதா?' என்று சொல்லிக் கொண்டு அவள் கொஞ்ச மூக்குப் பொடியை மனநிறைவுடன் எடுத்தாள்.

'ஓம், அம்மா,' என்று சொல்லிவிட்டு பின் தங்கிக் கொண்டான், கவ்றில்லா.

தன்னுடைய அறைக்குத் திரும்பி வந்தான். அந்த அறை ஒரு சிறிய தங்கும் விடுதி. உலோக றங்குப் பெட்டிகளால் ஏறக்குறைய விடுதி முழுவதும் நிரம்பி இருந்தது. கவ்றில்லா முதலில் தன் மனைவியை வெளியே அனுப்பிவிட்டு யன்னலுக்கு அருகில் இருந்த கட்டிலில் ஏறி இருந்து சிந்தித்தான். சீமாட்டியின் எதிர்பாராத ஏற்பாடு அவனைத் தெளிவாகவே சிக்கலில் மாட்டிவிட்டிருந்தது. எழும்பி கப்பிற்றோனை அழைத்தான். கப்பிற்றோன் வந்தான். அவர்களின் உரையாடலை வாசகர்களுக்கு அறிவிப்பதற்கு முன் கப்பிற்றோனுக்கு மணம் முடித்து வைக்கப்போகும் அந்த ரற்றியானா என்பவள் யார், பெரிய சீமாட்டியின் ஆணை மேலாளனை ஏன் கலவரப்படுத்தியது ஏன் என்பதை இவ்விடத்தில் அறிவிப்பது பொருத்தமானது.

ரற்றியானா முன் சொன்ன சலவைக்காரிகளில் ஒருத்தி. பயிற்சி பெற்ற திறமையான சலவைக்காரி. மெல்லிய துணிமணிகளை சலவை செய்வதற்கு பொறுப்பாக இருக்கிறாள். இருபத்தெட்டு வயது. மெலிந்தவள். பொன்னிற முடி. இடது கன்னத்தில் சில மச்சங்கள். றஸ்ஸியாவில் இடது கன்னத்தில் மச்சங்கள் இருப்பது தீங்கு விளைவிக்கும் என்று கருதப்படுகிறது. அது மகிழ்ச்சியற்ற வாழ்க்கையின் அடையாளம்... அதனால் ரற்றியானா தான் நல்லதிர்ஷ்டம் கொண்டவள் என்று சொல்லி தற்பெருமைப்பட முடியாது. இளமைக் காலத்திலிருந்தே அவளை அனைவரும் மோசமாகவே நடத்தினார்கள். இரண்டு பேரின் வேலையை தனியாகவே செய்யக்கூடியவள். ஆனால் அவளை எவருமே அன்பாக நடத்தியதில்லை. மோசமான ஆடைகளே அவளுக்குக் கிடைத்தன. மிகச் சிறிய வேதனமே கொடுக்கப்பட்டது. உறவுகள் என்று



இவான் துர்கனெயெஃவ், 1818-1883. ரஷ்ய நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர், மொழிபெயர்ப்பாளர். ரஷ்ய இலக்கியத்தை மேற்கு நாடுகளில் பிரபல்யம் அடைய வைத்தவர். அவருடைய A Sportsman's Sketches என்ற சிறுகதைத் தொகுப்பு ரஷ்ய இலக்கியத்தின் யதார்த்தவாத படைப்பு. அது ஒரு மைல் கல் என்று சொல்லப்படுகின்றது. இந்தக் கதைகளின் செல்வாக்கும் 1861 அடிமை ஒழிப்புக்கான காரணமாகச் சொல்லப்படுகிறது. அவருடைய Fathers and Sons என்ற நாவல் 19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த புனைவுகளில் முதன்மையானது என்று சொல்லப்படுகின்றது. இவர் அருமையான குறு நாவல்களும் எழுதியுள்ளார்.

பிரபுத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தாய் கல்வி கற்றவர். மிகவும் கண்டிப்பானவர். இவரையும் அப்படித்தான் வளர்த்தார். அவரே இந்தக் கதையில் வரும் சீமாட்டி அவர் என்றே சொல்கிறார்கள். அவர் 500 அடிமைகளை வைத்திருந்தார் என்றும் சொல்லப்படுகிறது. அவர்களின் வீட்டு மொழி ஃப்ரெஞ்.

இவர் ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளில் அதிகமாக வாழ்ந்தவர். ஜேர்மானிய அறிவொளிக் காலக் கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்டவர். அந்தக் கருத்துக்கள் ரஷ்யாவையும் முன்னேற்ற உதவும் என்று எண்ணினார். அக்காலத்தில் படித்த ரஷ்யர்களைப் போல இவரும் அங்கிருந்த அடிமை முறையை ஒழிக்க வேண்டும் என்று விரும்பினார். இவருக்கு பிரெஞ், டொச், ரஷ்யன், ஆங்கிலம், ஸ்பானிஷ் ஆகிய பல மொழிகள் தெரியும். ஸ்பானிஷ் மொழியிலிருந்து நேரடியாக செவன்ராசின் டொன் கிஹொற்றேவை ரஷ்யன் மொழியில் மொழிபெயர்த்திருக்கிறார். அது ரஷ்யன் இலக்கியத்தில் பெரும் செல்வாக்கும் செலுத்தி இருக்கிறது. டோஸ்ரோவெயெஸ்கியின் மிஸ்கின் பாத்திரத்தில் கிஹொற்றோவின் செல்வாக்குள்ளது என்று சொல்கிறார்கள். இவர் கோகோலைப் பற்றி உரையாற்றியபோது டோஸ்ரோவெஸ்கி சைபிரியச் சிறையில் இருந்து விடுதலை அடைந்து வந்து அந்தக் கூட்டத்திற்கு வந்து அதைக் கேட்டிருக்கிறார். இவர் திருமணம் முடிக்கவில்லை. ஆனால் அவர் ஒபெரா பாடகியான போலின் வியாகொற்றினை மிகவும் விரும்பி இருக்கிறார்.

அவருடைய நெருங்கிய நண்பர் ப்ரெஞ் எழுத்தாளரான ஃப்ளோபியர். அவருடைய சமுக, அழகியல் கருத்துக்கள் போன்றவையே இவருடையவையும். இருவரும் தீவிரவாத அரசியலில் இடதுசாரி வலதுசாரி கருத்துக்களை வெறுத்தவர்கள். ஏதோ பல காரணங்களால் டோஸ்ரோவெயெஸ்கி, ரோல்ஸ்ரோய் ஆகியோருக்கு இவரைப் பிடிப்பதில்லை. இவரின் கதைகள் அவர்களைப் போல ஆன்மீகப் பார்வை கொண்டவை அல்ல. சமூக சீர்திருத்தப் பார்வை கொண்டவை.

ரஷ்ய யதார்த்த இலக்கியத்தின் முன்னோடி. இவரின் கதைகளில் தூய்மையான கலைத்துவம் வெளிப்படும். அழகியல் இருக்கும். இயற்கையை அழகாக வர்ணிக்கத் தெரிந்தவர்.

மூமு பலரும் விரும்பும் சிறுகதை. மூமு என்ற நாயின் சிற்பம் பீற்றர்ஸ்பேர்க்கில் ஓர் உணவகத்தின் அருகில் உள்ளது. அந்த உணவகத்திற்கும் அதே பெயரை வைத்துள்ளனர். பிரான்சிலுள்ள நோர்மன்டி என்ற நகரிலும் மூமுவின் சிற்பம் உள்ளது. அந்தக் கதை திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது. பாடல்களும் உள்ளன.

ஒருவரும் இருக்கவில்லை. இருந்த மாமா ஒருத்தனும் கிராமப்புறத்தில் உபயோகமற்றவனாக இருக்கிறான். முன்பு அவன் ஒரு வீட்டு வேலைக்காரனாக இருந்தான். மற்ற மாமாமார் சிறுவிவசாயிகள். முன்னொரு காலத்தில் அவள் அழகானவள் என்று எல்லோராலும் கணிக்கப்பட்டவள். அந்த நல்ல அழகு வெகுவிரைவில் முடிந்துவிட்டது. இயல்பான குணத்தைப் பொறுத்தவரை அவள் சாதுவானவள். அல்லது பயந்தவள் என்றே சொல்லலாம். அவளைப் பொறுத்தவரை அவள் அதை எப்பவும் பொருட்படுத்தவதில்லை. மற்றவர்களை அவள் கண்டால் அவளுக்கு மரண பயம் பிடித்துவிடும். அவளுக்கு இருக்கும் ஒரே எண்ணம் தன்னுடைய வேலையை நேரத்திற்கு எப்படி முடிப்பது என்பது மட்டுந்தான். அதனால் அவள் எவருடனும் கதைப்பதில்லை. எசமானியின் பெயரைக் கேட்டாலே நடுங்குவாள். ஆனால் எசமானிக்கு அவளை அதிகம் தெரியாது. ஜெராசிம்மை கிராமப்புறத்திலிருந்து கொண்டு வந்தபோது அவனுடைய பிரமாண்டமான உருவத்தைப் பார்த்தவுடன் அவள் பயத்தால் இறந்துவிடுவாள் போலத் தோன்றினாள். அவனைச் சந்திப்பதைத் தவிர்க்க முயன்றாள். அவனை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அதைத் தவிர்ப்பதற்காக கண்களை கீழே வைத்துக் கொண்டு அவனைக் கடந்து சலவை செய்யும் இடத்திற்கு விரைவாகச் சென்றுவிடுவாள். ஜெராசிம் முதலில் அவளில் விஷேச கவனம் ஒன்றும் செலுத்தவில்லை. அவள் அவன் வழியில் வந்தால் அவளைப் பார்த்து முறுவலிப்பான். பின் அவளை ரசித்துப் பார்க்க வெளிக்கிட்டான். கடைசியில் அவளைப் பார்ப்பதிலிருந்து கண்களை எடுக்கவே இல்லை. அவளுக்கும் அவனில் பிடிப்பு ஏற்பட்டது. அதை முகத்தில் லேசான மாற்றத்தால் அல்லது தன் கூச்ச அசைவுகளால் காட்டிக் கொண்டாள். அந்த மாற்றம் எப்படி எவரால் நடந்தது என்று சொல்ல முடியும்? ஒருநாள் அவள் தன் எசமானியின் கஞ்சி போட்டு மடித்த வெளிக்குப் போடும் ஜக்கெற் ஒன்றை கையில் கொண்டு சென்று கொண்டிருந்தாள். அப்பொழுது யாரோ ஒருத்தன் சடுதியாக அவளின் கையைப் பிடித்தான். அப்போது அவள் ஏறக்குறைய குழறியே விட்டாள். அவள் பின்னால் நின்றான் ஜெராசிம். மடத்தனமான புன்முறுவலுடன் தெளிவற்ற அன்பான முணுமுணுப்புக்களுடன் கையை நீட்டினான். கைக்குள் சேவல் உருவத்தில் இஞ்சி பிஸ்கோத்துகள் இருந்தன. அதை அவள் வேண்டாம் என்று மறுக்கவே நினைத்தாள். ஆனால் அவன் அவளுடைய கைக்குள் அவற்றைப் பலமாக வைத்துவிட்டான். பிறகு தன் தலையை அசைத்து விட்டு நடந்துபோய் திரும்பிப் பார்த்தான். அன்பாக எதையோ சத்தம் இட்டான்.

அந்த நாளிலிருந்து அவளை அவன் விடவில்லை. எங்கே அவள் போகிறாளோ அவன் அந்த இடத்தில் நிற்பான். அவளைச் சந்திப்பதற்கு புன்முறுவலுடன், ஒருவித உறுமலுடன், கைகளை அசைத்துக் கொண்டு நிற்பான். திடீரென்று அவன் ஆடைக்குள்ளிருந்து ஒரு றிபனை எடுத்து அவள் கையில் கொடுப்பான். அல்லது அவள் போகும் வழியில் உள்ள குப்பைகளை கூட்டிச் சுத்தமாக்கிவிடுவான். பரிதாபத்துக்குரிய அந்தப் பெண்ணுக்கு எப்படி அதற்கு எதிர்வினையாற்றுவதென்றோ என்ன செய்வதென்றோ தெரியவில்லை. விரைவில் வீட்டிலுள்ள அத்தனை பேருக்கும் வாய் பேசாத அந்த சுமைதூக்கியின் செயல்கள் தெரிய வந்தன. அவன் ரற்றியானவின் மேல் எய்யும் கேலிகள், பகிடிகள், சாடைமாடையான குறிப்புகள் எல்லாமே தெரியவந்தன. ஜெராசிம்மைப் பொறுத்தவரை எவருமே அவனைப் பார்த்து கிண்டல் செய்யத் துணிய மாட்டார்கள். அவன் பகிடிகளை விரும்புவதில்லை. உண்மையில் அவனுடைய முன்னிலையில் அவளையும் எவரும் தொந்தரவு செய்வதில்லை. அவள் விரும்பினாளோ இல்லையோ அவள் அவனுடைய பாதுகாப்பில் இருப்பதாக உணர்ந்தாள். வாய் பேசாத, காது கேளாதவர்களைப் போல அவனும் மிகவும் சந்தேகம் கொண்டவன் தான். அவனைப் பார்த்தோ அவளைப் பார்த்தோ யாராவது பார்த்துச் சிரித்தால் அது அவனுக்கு தெரிந்துவிடும். ஒருநாள் இரவுணவு நேரம், ரற்றியானாவின் மேலாளரான ஆடைகளுக்குப் பொறுப்பானவள் அவளை தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தாள். ரற்றியானா என்ன செய்வதென்று தெரியாமல் யாரிடம் உதவிக்குப் போவதென்று தெரியாமல் கவலைப்பட்டு அழத் துவங்கினாள். திடீரென ஜெராசிம் எழும்பி தன் பிரமாண்டமான கையை நீட்டி ஆடை காப்பாளினியின் தலையில் வைத்து, அவளுடைய முகத்தைக் கடும் கோபத்துடன் பார்த்தபோது அவளுடைய தலை மேசையில் தொப்பென்று விழுந்தது. எல்லோரும் அசையாமல் நின்றார்கள். பிறகு ஜெராசிம் தன் கரண்டியை எடுத்து தன் கப்பேஜ் சுப்பை குடிக்கத் துவங்கினான். 'அவனைப் பாருங்கள். ஊமைப் பேயை, மரப் பேயை!' என்று எல்லோரும் அடங்கிய குரலில் முணுமுணுத்தார்கள். ஆடைக்குப் பொறுப்பானவள் எழுந்து வேலைக்காரிகளின் அறைக்குச் சென்றாள். இன்னொரு முறை கப்பிற்றோன் ரற்றியானாவுடன் வம்பளந்து கொண்டிருந்தான். அப்போது ஜெராசிம் அவனைக் அழைத்துக் கொண்டு வண்டி மடுவத்திற்குச் சென்றான். அங்கே மூலையில் சாத்தியிருந்த தண்டொன்றை கையில் எடுத்து அவனை இலேசாக அச்சுறுத்தினான். அதன் பிறகு எவரும் ரற்றியானாவுடன் ஒரு சொல்லும் பேசுவதில்லை. ஆடைப் பொறுப்பாளினி வேலைக்காரிகளின் அறைக்குச் சென்றவுடன் மயங்கி விழுந்தாள். அப்படி நடந்தது ஜெராசிம்மால் தான் வந்தது என்பது சீமாட்டியின் காதுகளுக்கு எட்டக்கூடிய வகையில் மிகவும் திறமையாக அவள் நடித்தாள். ஆனால் சலனபுத்தியுள்ள முதியவள் அதைக் கேட்டு சிரிக்க மட்டும் செய்தாள். பலமுறை சிரித்தாள். அது ஆடை காப்பாளினிக்குக் கோபத்தை வரவழைத்தது. சீமாட்டி திரும்பத் திரும்ப, 'எப்படி உன் தலையை அவன் தன் பலமான கையை வைத்து அமத்தினான்,' என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தாள். அடுத்த நாள் சீமாட்டி ஜெராசிம்முக்கு ஒரு ரூபிள் பணம் கொடுத்து அனுப்பினாள். அவனுடைய பலத்தையும் நன்றியுள்ளதனத்தையும் அறிந்து ஆதரவுடன் அவள் அவனை நன்றாகக் கவனித்து வந்தாள். ஜெராசிமும் அவளிடம் கணிசமான பயபக்தியுடன் தான் நடந்து வந்தான். ரற்றியானாவை மணம் முடிப்பதற்கு அவளுடைய ஆதரவைப் பெறும் நம்பிக்கையுடன் ஒரு விண்ணப்பத்துடன் அவளிடம் அவன் போக இருந்தான். மேலாளன் அவனுக்கு புதிய மேலாடை ஒன்றைத் தருவதாக உறுதியளித்திருந்தான். அதைப் போட்டுக் கொண்டு சீமாட்டியின் முன்னால் நல்ல தோற்றத்துடன் போவதற்காகக் காத்திருந்தான். அந்த நேரத்தில்தான் சீமாட்டிக்கு ரற்றியானாவை கப்பிற்றோனுக்கு மணம் முடித்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் சடுதியாக அவள் தலைக்குள் புகுந்தது.



சீமாட்டிக்கும் மேலாளன் கவ்றிலாவுக்கும் நடந்த உரையாட லுக்குப் பின், அவன் மனம் ஏன் நிலைகுலைந்தான் என்பது இப்போது வாசகர்களுக்குப் புரிந்திருக்கும். யன்னலில் இருந்த அவனுக்கு சீமாட்டி ஜெராசிம்முக்கு ஆதரவாக இருக்கிறாள் என்பது தெரியும். அதனால் தான் அவனும் ஜெராசிம்மிற்கு கொஞ்சம் இடம் கொடுத்து நடக்கிறான். இருந்தும் அவன் வாய் பேச முடியாதவன். அவன் ரற்றியா னாவை விரும்புகிறான் என்பதை சீமாட்டிக்கு அவனால் சொல்ல முடியவில்லை. ஆனால் அவன் விசித்திரமான கண வனாக இருப்பான் என்பது உண்மை. என்னை ஆண்டவன் மன்னிக்க வேணும். ரற்றியானோவை கப்பிற்றோன் மணம் முடிக்கப் போகிறாள் என்பதை ஜெராசிம் அறிந்தால் வீட்டி லுள்ள எல்லாவற்றையும் அவன் உடைத்தெறிவான். ‘ஆன்மா என்னைக் காப்பாற்றட்டும்! அவனுடன் எதையும் தர்க்க நியா யத்துடன் கதைக்க முடியாது. அப்படியான பேய் அவன். என்னுடைய பாவங்களை கடவுள் மன்னிக்கட்டும். அவனைச் சமாளிக்க முடியாது... கடவுளே! அப்படி அவன் சிந்தித்துக் கொண்டிருந்தபோது கப்பிற்றோன் வந்தான்.

கப்பிற்றொனுடைய வருகை கவ்றில்லாவின் சிந்தனையைக் குலைத்தது. சீரழிந்த சப்பாத்துக்காரன் கப்பிற்றோன் உள்ளே வந்தான். கைகள் பின்னால் இருந்தன. தள்ளிக் கொண்டி ருந்த சுவரை கவனிக்காமல் கடந்து வந்து கதவுக்கு அரு கில் நின்றான். இடது காலுக்கு முன்னால் வலது காலை குறுக்காக வைத்து, தலையை அசைத்துக் கொண்டு, ‘உனக்கு என்ன வேணும்?’ என்று கேட்பது போல நின்றான்.

கவ்றிலா கப்பிற்றோனைப் பார்த்தான். விரல்களால் யன்னல் சட்டகத்தில் தட்டிக் கொண்டான். கப்பிற்றோன் தன் கனத்த கண்களை சற்று உருட்டிப் பார்த்தான். கீழே பார்க்கவில்லை. சற்று இளித்தான். எல்லாத் திசைகளிலும் பறந்து கொண்டி ருந்த தலைமுடிக்குள் கைகளை விட்டான். ‘சரி, நான் இங்கே இருக்கிறேன். என்ன வேணும்?’ என்றான்.

‘நீ அழகான ஆள் தான்,’ என்று சொல்லிவிட்டு சற்று நேரம் நின்றான், கவ்றிலா. ‘அழகான ஆள், அதை மறுக்க முடியாது!’

கப்பிற்றோன் தன் தோள்களை இழுத்தான்.’ நீ மட்டும் அதிலும் சிறந்தவனா? என்று அவன் தனக்குள்ளே எண்ணிக் கொண்டான்.

‘உன்னைப் பார். உன்னைப் பார்.’ கவ்றிலா அவனைக் கடிந்து கொள்வது போலச் சொன்னான். ‘எப்படி இருக்கிறாய்?’ என்றான்.

கப்பிற்றோன் தன் அவலட்சணமான கிழிந்த மேலங்கியையும், ஒட்டுக்கள் போட்ட காற்சட்டையையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டான். வெடித்த பூட்சுகளை மேலும் கொஞ்ச கவனத்துடன் பார்த்தான். வலது பக்கத்து பூட்சில் பெருவிரல் வெளியே தள்ளிக் கொண்டிருந்ததையும் பார்த்தான். அதன் பின் மேலாளரின் மேல் அவன் கண்கள் திரும்பச் சென்றன.

‘சரி’

‘சரி? திரும்பவும் சொன்னான். ‘சரி, அதன் பிறகு நீ சரி என்று சொல்கிறாயா? உன்னைப் பார்த்தால் முதிய நிக்கைப் போல (நரகத்தின் தலைவன்) தெரிகிறாய். அப்படிச் சொல்வதற்கு கடவுள் என்னை மன்னிக்கட்டும். அப்படித்தான் நீ தோன்றுகிறாய்.’

கப்பிற்றோன் கண்களை வேகமாக சிமிட்டினான்.

என்னை மீண்டும் மீண்டும் துஷ்பிரயோகம் செய்கிறாய். செய். உனக்கு விரும்பியது போல செய், கவ்றிலா அன்ட்றெயேச்,’ என்று அவன் எண்ணினான்.

‘இந்தா பார், நீ திரும்பவும் குடித்து விட்டு நிற்கிறாய். திரும்பவும் குடித்திருக்கிறாய், இல்லையா? சொல்லு,’ என்று கவ்றிலா துவங்கினான்.

‘என்னுடைய உடல் பலவீனம் காரணமாக சாராயம் கலந்த பானங்களை அருந்துகிறேன். அது உண்மை,’ என்று பதிலளித்தான், கப்பிற்றோன்.

‘உன்னுடைய உடல் பலவீனம் காரணமாக!... ம்... உன்னை அவர்கள் சாதாரணமாக விட்டு விடுகிறார்கள். அதனால் தான் நீ இப்படி நடக்கிறாய். நீ பீற்றர்ஸ்பேக்கில் பயின்றவன். அங்கே நீ பலவற்றையும் கற்றிருப்பாய்! ஆனால் நீ இப்போ சும்மா இருந்து சாப்பிடுகிறாய்.’

‘அதற்கு நியாயத்தீர்ப்பு வழங்க ஒரேயொரு நீதிபதி தான் இருக்கிறார். அவர் கடவுள் மட்டுந்தான். வேறொருவரும் இல்லை. அவருக்குத்தான் தெரியும். இந்த உலகத்தில் நான் எப்படிப்பட்ட மனிதன் என்று. நான் சும்மா இருந்து சாப்பிடுகிறேனா என்று. அதேபோல என் குடிபோதையைப் பற்றி நீ சொன்ன கருத்தும் அவருக்குத்தான் தெரியும். அதற்கு என்னைக் குற்றம் சாட்ட முடியாது. அவரே என்னை அந்தச் சலனத்துக்குக் கொண்டு சென்றார். அவர் தந்திரமாகத் தப்பித்துவிட்டார். ஆனால் நான்...’ என்றான் கப்பிற்றோன்.

‘நீ ஒரு வாத்தைப் போல வீதியில் கைவிடப்பட்டிருந்தாய். ஆ, நீ ஒரு ஒழுக்கம் கெட்ட ஆள்! ஆனால் அதுவல்ல பிரச்சினை,’ என்று மேலாளன் சொல்லிக் கொண்டிருந்தான். ‘உனக்கு நான் சொல்றதுக்கு ஒன்று இருக்கிறது. எங்கள் சீமாட்டி...’ இந்த இடத்தில் அவன் சொல்றதை ஒரு நிமிசம் நிறுத்தினான். ‘நீ மணம் முடிக்க வேண்டும் என்று எங்கள் சீமாட்டி விரும்புகிறாள். உனக்குக் கேட்கிறதா? நீ மணம் முடித்தால் திருந்தி விடுவாய் என்று அவர் நினைக்கிறாள். உனக்குப் புரிகிறதா?’

‘எனக்கு நல்லாப் புரிகிறது.’

‘அப்படியென்றால் சரி. என்னைப் பொறுத்தவரையில் உனக்கு நல்ல அடி கொடுத்தால் திருந்தி விடுவாய்... ஆனால் அது அவளுடைய பிரச்சினை. சரி, அதற்கு நீ சம்மதமா?’

கப்பிற்றோன் இளித்தான்.

‘ஒருத்தனுக்கு திருமணம் மிகச் சிறந்த ஒரு விசயம், கவ்றிலா அன்ட்றெய்ச். என்னைப் பொறுத்தவரை நான் அதற்கு மிகுந்த சம்மதம் தெரிவிக்கிறேன்.’

‘அப்படி என்றால் நல்லது.’ பதிலளித்துவிட்டு தனக்குள் சிந்தித்தான் கவ்றிலா: இந்த மனிதன் எதையும் மிக ஒழுங்காக சொற்களில் வெளிப்படுத்துகிறான். ‘ஆனால் ஒன்று இருக்கிறது.’ உரத்து தொடர்ந்தான். ‘எங்கள் சீமாட்டி உனக்குத் தெரிவு செய்தவள் ஒரு துரதிஷ்டக்காரி.’

‘ஏன்? அவள் யார்? எனக்குச் சொல்.’

‘ரற்றியானா.’

‘ரற்றியானா?’

கப்பிற்றோன் தன் கண்களை விழித்துப் பார்த்தான். பிறகு சுவரிலிருந்து தள்ளி இருந்தான்.

‘சரி, நீ அவளை விரும்பவில்லையா? அவள் உன் ரசனைக் குரியவள் இல்லையா?’

‘இல்லை, அவள் என் ரசனைக்குரியவள் இல்லை என்றா சொல்கிறாய், கவ்றிலா அன்ட்றேயேச்? அவள் சரியானவள் தான். அவள் கடின உழைப்பாளி... கவ்றிலா உனக்கே தெரியும், அந்தக் காட்டு மனிதன், ஸ்ரெப்பி அரக்கன் அவள் பின்னால் அல்லவா திரிகிறான்...’

‘எனக்குத் தெரியும், நண்பா. எல்லாமே எனக்குத் தெரியும்,’ என்றான் அவன் சொல்வதை நிறுத்தி, கவ்றிலா எரிச்சலுடன். ‘ஆனால் இங்கே பார்...’

‘என் மேல் ஆணை, கவ்றிலா அன்ட்றேய்ச், அவன் என்னைக் கொன்று போடுவான். கடவுளே. அவன் என்னைக்

கொன்றே போடுவான். அவன் என்னை ஒரு பூச்சியை நெரிக் கிற போல நெரித்துப் போடுவான். அவனுடைய கைமுட்டி யைப் பார்த்திக்கிறாயா? அவன் கைமுட்டிகள் மினின் பொசாஸ்கி சிலைகளின் பெரிய கைகளைப் போல. அவ னுக்குக் காது கேட்காது. அவன் அடிப்பான். எப்படித்தான் அடிப்பான் என்று அவனுக்கே தெரியாது! தன்னுடைய பெரிய கைமுட்டிகளை சாதாரணமாக வீசுவான், நித்திரை யில் இருப்பது போல. அவனைச் சாந்தப்படுத்துவதற்கு ஒரு வழியும் இருக்காது. அது உனக்குத் தெரியும் கவ்றிலா அன்ட்றெவிச், அவனுக்குக் காது கேட்காது. அத்துடன் அவ னுக்குப் புத்தியும் இல்லை. அவனுக்கு இருக்கும் புத்தி என் னுடைய கால் குதி அளவிலும் பார்க்கச் சிறியது. அவன் ஒருவகை மிருகம். அவிசுவாசிகளின் தெய்வச்சிலை போல. அதிலும் மோசமானது என்னவென்றால் அவன் ஒரு மரக் கட்டை. அவனிடம் அடி வாங்க வேணும் என்பதற்கு நான் என்ன பாவம் செய்தேன்? எனக்கு எல்லாம் முடிந்து போய் விட்டது. நான் இலக்கின்றி அலைந்து திரிகிறவன். நான் அனுபவித்தது எல்லாம் போதும். ஒரு மண் பானை போல என்னை அடித்திருக்கிறார்கள். இருந்தும் நான் ஒரு மனிதன். மதிப்பற்ற பானை அல்ல.'

'எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும். கதைத்துக் கொண்டே இருக்காதே...'

'கடவுளே!' காலணி தைப்பவன் உற்சாகத்துடன் தொடர்ந் தான், 'இதற்கு முடிவு எப்போ வரும்? என் கடவுளே! நான் ஓர் ஏழை. அதிஷ்டமில்லாதவன். என்னுடைய துயரங்கள் முடிவில்லாதவை.! என்ன வாழ்க்கை. என் வாழ்க்கை எப்படி வந்து முடிந்துவிட்டது. என்னுடைய இளமைக் காலத்தில் ஜேர்மனியர்கள் அடித்தார்கள். நான் தொழில் கற்றவன். இள மைக் காலத்தில் என்னுடைய நாட்டினரும் என்னை அடித் தார்கள். கடைசியாக வயது முதிர்ந்த காலத்திலும் நான் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேன், பார்.'

'ஊ, என்ன நொந்து போன ஆன்மா நீ! அதைப்பற்றி நீ ஏன் இத்தனை கதைக்கிறாய்?' என்றான் கவ்றிலா அன்ட்றியேச்.

'நீ என்ன சொல்லுகிறாய், கவ்றிலா அன்ட்றியேச். அடி வாங் குவதற்கு நான் பயப்படவில்லை. ஒரு கனவான் தனியாக என்னைக் கூப்பிட்டுத் தண்டிக்கலாம். ஆனால் ஆட்களுக்கு முன்னால் ஒரு நல்ல வார்த்தையாவது சொல்லலாம். நான் ஒரு மனிதன். பாருங்கள் யாருடன் நான் மோத வேண்டும் என்று.'

'எழும்பு, இணக்கமாய் இரு,' என்று கப்றிலா பொறுமையில் லாமல் இடைமறித்துச் சொன்னான். கப்பிற்றோன் தட்டுத் தடு மாறிக் கொண்டு வெளியேறினான்.

'ஆனால் அவன் இல்லாவிட்டால் நீ அதற்கு சம்மதிப்பாய் அல்லவா?' என்று மேலாளன் சத்தம் போட்டுக் கேட்டான்.

'நான் என் சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன்,' என்றான் பதி லடியாக, போய்க் கொண்டிருக்கும்போதே.

அவனுடைய நுட்பமான மொழி அவனைக் கைவிடவில்லை இப்படியான மோசமான நிலைமையிலும்.

மேலாளன் தன் அறைக்குள் பலமுறை மேலும் கீழும் நடந் தான்.

'சரி, ரற்றியானாவைக் கூப்பிடு,' என்றான் கடைசியாக.

சில நிமிஷங்களின் பின் ரற்றியானா சத்தமில்லாமல் வந்து கதவடியில் நின்றாள்.

'உங்கள் ஆணை என்னவோ, கவ்றிலா அன்ட்றியேச்?'

அவளை மேலாளன் கூர்ந்து பார்த்தான்.

'ரனுஷா, நீ மணம் முடிக்க விரும்புகிறாயா? எங்கள் சீமாட்டி உனக்கொரு கணவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.'

'ஓம், கவ்றிலா அன்ட்றியேவிச். என்னுடைய கணவனாக அவர் எவரைத் தெரிந்தெடுக்கிறார்?' என்று கேட்டாள் தட்டுத டுமாறிக் கொண்டே.

'கப்பிற்றோனை, அந்தப் பாதணி செய்பவனை.'

'ஓம், ஐயா.'

'அவன் மறதி பிடித்தவன். ஆனால் சீமாட்டி அவன் தான் உனக்குச் சரியான ஆள் என்று தெரிவு செய்திருக்கிறார்.'

'ஓம், ஐயா.'

'அதில் ஒரு பிரச்சினை இருக்கிறது... அந்த காது கேளாத வன், ஜெராசிம், உன்னை விரும்புகிறான். அது உனக்குத் தெரியும். எப்படி நீ அந்த கரடியை விரும்ப வெளிக்கிட் டாய்?'

'அவன் என்னைக் கொன்று போடுவான், கவ்றிலா அன்ட்றெ-விச். என்னைக் கொன்று போடுவான். உண்மை.'

'உன்னைக் கொல்லுவான்... அதைப் பற்றி நாங்கள் பார்த் துக் கொள்ளுகிறோம். கொல்லுவான் என்று நீ ஏன் சொல்லு கிறாய்? அவனுக்கு உன்னைக் கொல்ல ஏதாவது உரிமை இருக்கிறதா? சொல்லு?'

'எனக்குத் தெரியாது, கவ்றிலா அன்ட்றியெச். அவனுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது.'

'எப்படிப்பட்ட பெண் நீ! நீ அவனுக்கு ஏதாவது உறுதி மொழி கொடுத்திருக்கிறாயா?'

'என்னிடம் என்ன கேட்கிறீர்கள்?'

மேலாளன் சற்று நேரம் யோசித்துக் கொண்டு அமைதியாக இருந்தான். 'நீ சாதுவான ஒரு ஆன்மா. அது உண்மை.' என் றான் உரத்து. 'இன்னொரு முறை பிறகு உன்னுடன் கதைக் கிறேன். இப்போ நீ போகலாம். ரானிஷா, நீ கட்டுக்காதவள் அல்ல. நிச்சயமாக.'

ரானிஷா கதவடியில் தன்னைச் சற்று சுதாகரித்துக் கொண்டு போய்விட்டாள்.

'சிலவேளை நாளைக்கு எங்கள் சீமாட்டி இந்த திருமணத் தைப் பற்றி முழுவதாக மறந்தும் போய் விடலாம்,' என்று மேலாளன் நினைத்தான். 'இங்கே நான் வீணாக அதைப்பற் றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்! அந்த மரியாதை யற்ற முரட்டுத்தனமான அந்த ஆளை கட்டிப் போட வேணும் என்ற நிலைமை வந்தால் கட்டிப் போடத்தான் வேணும். அவனைப் பற்றிப் பொலிசுக்கு அறிவிக்க வேணும். உஸ்ரின்யா ஃபைடொரோவ்னா!' என்று தன் மனை வியைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டான். 'சமோவார் குடுவை யைச் சூடாக்கு, என் நல்ல ஆன்மாவே...' என்றான்.

அன்று முழுநாளும் ரற்றியானா தன் சலவைக்கூடத்தை விட்டு வெளியே போகவில்லை. முதலில் அழ ஆரம்பித் தாள். பிறகு கண்ணீரைத் துடைத்து விட்டு தன் வேலையைச் செய்யத் துவங்கிளாள். கப்பிற்றோன் ஜின் கடையில் ஒரு நண்பனுடன் குடித்துக் கொண்டு பின்னிரவுவரை இருந்தான். நண்பன் சோர்வான தோற்றமுடைய ஒருத்தன். பீற்றர்ஸ்பேர்க் கில் தான் ஒரு கனவானுடன் வசித்தாக கப்பிற்றோன் அவ னுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். ஆள் பரவாயில்லை, ஆனால் கொஞ்சம் கண்டிப்பானவன். அவனுக்குச் சிறிய தொரு பலவீனமும் இருந்தது என்றான். அவனும் குடிப்ப தற்கு மிகவும் விருப்பமானவன். பெண்களைப் பொறுத்த வரை அவன் எவருடனும் நீண்ட காலம் வாழ்ந்ததில்லை. கப் பிற்றோனின் சோர்வான நண்பன் ஓம் என்று மட்டும் சும்மா சொல்லிக் கொண்டிருந்தான். கடைசியாக கப்பிற்றோன் நாளை ஒரு நிகழ்ச்சியில் ஒருத்தனைத் தாக்க வேண்டி வரும் என்றான். அதற்கு அவனுடைய சோர்வான கூட்டாளி படுப்ப தற்கு நேரமாகி விட்டது என்றான். இருவரும் கடுகடுப்பான முகத்துடன் அமைதியாகப் பிரிந்து சென்றார்கள்.

அதேநேரம் மேலாளன் எதிர்பார்த்தது போல நடக்கவில்லை. முதியவள் கப்பிற்றோனின் திருமணத்தைப் பற்றியே சிந்தித் துக் கொண்டிருந்தாள். அன்றிரவு அவளுடன் இருந்த தோழி யுடன் அதைத் தவிர அவள் வேறெதைப் பற்றியும் கதைக்க வில்லை. அந்தத் தோழியை சீமாட்டி தனக்கு நித்திரை வரா தபோது தன்னுடன் பொழுதுபோக்குவதற்காக மட்டும் வீட்டில் வைத்திருந்தாள். முதியவள் இரவுகளில் வண்டி ஓட்டுபவ னைப் போல பகலில் தூங்கினாள். கவ்றிலா காலை உண வின் பின் தன் அறிக்கையுடன் அவளிடம் வந்தபோது அவ ளுடைய முதல் கேள்வி: 'எப்படி திருமண விஷயம் போகி றது?' என்பது தான். அவனுடைய பதில், அதற்கு நல்லாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதே. அத்துடன் கப்பிற்றோன் தன் மரியாதையைச் செலுத்துவதற்கு அன்று அவளிடம் வரு வான் என்றும் சொன்னான். முதியவளுக்கு அன்று நல்ல சுகம் இல்லை. அதனால் தன் கடமைகளைச் செய்ய அன்று நேரமிருக்கவில்லை. மேலாளன் தன் அறைக்குத் திரும்பிச் சென்று ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினான். அதைக் கூட்டியது திருமணத்தைப் பற்றி தீவிரமாக சிந்திப்ப தற்குத்தான். ரற்றியானா அதிக பிரச்சினை கொடுக்க வில்லை. இரண்டு மூன்று தலைகள் அல்ல ஒரு தலை தான் போகும் என்றான் கப்பிற்றொன் அந்தக் கூட்டத்தில். ஜெரா-சிம் எல்லோரையும் சிடுசிடுப்பாக பார்த்துக் கொண்டிருந் தான். அவன் வேலைக்காரர்களின் குடியிருப்புப் படிகளில் அசையாமல் இருந்தான். தனக்குத் தீங்கு செய்யத்தான் அவர்கள் திட்டம் தீட்டுகிறார்கள் என்று நினைத்தான். அவர்க ளில் உணவு விடுதி முதிய பணியாளும் இருந்தான். அவனு டைய பட்டப்பெயர் அங்கிள் ரெயில். அவனுடைய ஆலோச னையை எல்லோரும் மரியாதையாக எதிர்பார்த்தார்கள். ஆனால் அவனிடன் இருந்து வந்தது ஒன்று மட்டுந்தான்: 'உண்மையில் நிலைமை மிகவும் மோசம், மிகவும் மோசம்!' என்றான். எதுவும் நடந்து விடக்கூடாது என்ற பாதுகாப்புக் கருதி முதலில் கப்பிற்றோனை மரக்காலை அறைக்குள் பூட்டி வைத்தார்கள். பிறகு அந்தப் பிரச்சினையைப் பற்றி ஆலோசித்தார்கள். வன்முறையால் தீர்ப்பது எளிதான காரி யம். கடவுளே அது நடக்கக் கூடாது. அது பெரும் கல கத்தை ஏற்படுத்தும். சீமாட்டிக்குத் தெரிய வரும். நிலைமை மிக மோசமாகப் போகும்! அப்படியானால் என்ன செய்வது? அவர்கள் திரும்பத் திரும்ப ஆலோசித்தார்கள். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஜெராசிம்மிற்கு குடிப்பவர்களைப் பிடிப்பதில்லை என்று அவர்களுக்குத் தெரியும். பலமுறை அதைக் கண்டிருக்கிறார்கள். வெளிவாயிலில் அவன் இருக் கும்போது எவராவது குடிபோதையில் தள்ளாடிக் கொண்டு தலையில் தொப்பியை காதுவரை விழ சென்று கொண்டிருந் தால் அவன் வெறுப்புடன் மறு பக்கம் திரும்பி விடுவான். ரற்றியானா குடித்து விட்டுப்போவது போலவும் ஜெராசிம் இருக்கிற பக்கமாக தள்ளாடிக் கொண்டு விழுந்தெழும்பி வருவது போலவும் அவள் நடிக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். ரற்றியானா அதற்கு நீண்ட நேரமாக ஒத் துக் கொள்ளவில்லை. இறுதியில் அவளை ஒத்துக் கொள்ள வைத்தார்கள். அப்படித்தான் தன் மேல் அன்பு வைத்திருப்ப வனை நிறுத்தலாம் என்று அவளும் ஒத்துக் கொண்டாள். அன்று அவள் வெளியே போனாள். கப்பிற்றோனை மரக்கா லைக்குள் இருந்து வெளியே விட்டார்கள். எப்படியோ அவ னுக்கு மணம் முடிப்பதில் ஆர்வம் இருந்தது. ஜெராசிம் வெளிவாயிலில் வரம்புக் கல்லில் மண்வெட்டியால் நிலத் தைக் கீறிக் கொண்டிருந்தான்... அவனுக்குப் பின்னால் ஒவ் வொரு மூலையிலும், ஒவ்வொரு யன்னல் திரைக்குப் பின்னா லும் எல்லோரும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்... அவர் கள் போட்ட திட்டம் எதிர்பாார்த்ததிலும் பார்க்க வெற்றிகர மாக முடிந்தது. ரற்றியானாவை அவன் முதலில் பார்த்த போது வழக்கம் போல அவளைப் பார்த்து தலையை அசைத்தான். பின் அன்பான ஆனால் தெளிவில்லாத சத்தங் களை இட்டான். பின் அவளைக் கவனமாகக் கூர்ந்து பார்த் தான். தான் வைத்திருந்த மண்வெட்டியை கீழே போட்டு விட்டு துள்ளி எழுந்து அவளிடம் போய் தன் முகத்தை அவள் முகத்துடன் நெருக்கமாக வைத்துப் பார்த்தான். அவள் பயந்து போய் மேலும் தடுமாறி கண்களை மூடிக் கொண்டாள். அவளைக் கையைப் பிடித்து கைகளில் தூக்கி முற்றத்தில் சுழற்றிய பின் சபை கூடியிருந்த அறைக்குச் சென்று கப்பிற்றோனிடம் நேராகத் தள்ளிவிட்டான். ரற்றி யானா ஏறக்குறைய மயக்கம் அடைந்த நிலைக்குப் போய் விட்டாள். ஜெராசிம் அவளைப் பார்த்து கையை அசைத்த பின் சிரித்துக் கொண்டு கனத்த அடி வைத்து தன் அறைக் குப் போய்விட்டான். அடுத்த இருபத்து நாலு மணித்தியா லங்கள் அவன் வெளியே வரவில்லை. அவன் கட்டிலில்

இருந்து முகத்தைக் கைகளில் ஏந்திக் கொண்டு இருந்தான் என்று குதிரைச்சவாரி பயிற்சியாளனான அன்ரிக்பா சுவரில் உள்ள ஒரு துவராத்துகளால் பார்த்தபோது கண்டதாகச் பிறகு சொன்னான். இடைக்கிடை ஒரேமாதிரி மெதுவாக சத்தம் போட்டான் என்றும் சொன்னான். அவன் புலம்பிக் கொண்டும் கண்களை மூடிக் கொண்டு முன்னாலும் பின்னாலும் அசைந்து கொண்டு தலையை ஆட்டிக் கொண்டு பட கோட்டிகள் சோகப் பாடலைப் பாடுவது போல முனகிக் கொண்டிருந்தான் என்று சொன்னான். அன்ரிக்பாவினால் அதைப் பொறுக்க முடியாமல் அந்தத் துவாரத்தை விட்டு வந்துவிட்டான் என்றும் சொன்னான். அடுத்த நாள் ஜெராசிம் அறைக்குள்ளிருந்து வெளியே வந்தபோது அவனில் எந்த வித மாற்றத்தையும் காண இயலவில்லை. ஆனால் அவன் மேலும் சிடுசிடுப்பானவானவே காணப்பட்டான். ரற்றியானாவையோ கப்பிற்றானையோ பார்த்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. அன்று மாலை அவர்கள் இருவரும் இரண்டு வாத்துக்களைக் கைகளில் ஏந்திக் கொண்டு சீமாட்டியின் முன் தோன்றினார்கள். ஒரு வாரத்தில் இருவரும் மணம் முடித்தனர். திருமண நாளில் கூட ஜெராசிம் தன் நடத்தையில் எந்த மாற்றத்தையும் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் ஆற்றில் இருந்து வரும்போது தண்ணீர் கொண்டு வராமல் வந்திருந்தான். பீப்பாவை வரும் வழியில் தெருவில் எப்படியோ போட்டு உடைத்துவிட்டான். அன்றிரவு தொழுவத்தில் குதிரையைக் கடுமையாகத் தேய்த்துக் கழுவினான். அது காற்றில் அசைவதை போல அசைந்து கொண்டிருந்தது. இரும்பு போன்ற அவனுடைய கைமுட்டியின் பலம் கொண்டு கழுவியதால் காலை மாறி மாறி வைத்து கொண்டு ஊசலாடியது.

இவை எல்லாம் வசந்த காலத்தில் நடந்தவை. இப்போது இன்னொரு ஆண்டும் கடந்து சென்றது. அந்தக் காலத்தில் கப்பிற்றோன் மிக மோசமான குடிகாரனாக மாறி இருந்தான். எதற்குமே பயனற்றவனாகவும் மாறிப் போனான். மனைவியுடன் களஞ்சிய வண்டியில் தூரவுள்ள ஒரு கிராமத்திற்கு அவனை அனுப்பி வைத்தார்கள். அவன் புறப்பட்டுச் சென்ற நாளில் மிகவும் நல்லவன் போல நடித்தான். இனிமேல் எப்பொழுதுமே வீட்டில்தான் இருப்பேன் என்று சொன்னான். தன்னை எங்கென்றாலும் அனுப்புங்கள் என்றான். உலகத்தின் அடுத்த முனைக்கென்றாலும் என்றான். ஆனால் அதன் பிற்பாடு தன் உறுதியைக் கைவிட்டான். தன்னை கல்வியறிவற்ற மக்கள் மத்தியில் கொண்டு போய் விட்டு விட்டதாக உளறிக் கொண்டிருந்தான். முடிவில் தன் தொப்பியைக் கூட தலையில் அணிய முடியாதளவு முற்றாகச் சரிந்து விழுந்து விட்டான். உதாரண குணமுள்ள ஒருத்தன் அதை அவன் தலையில் போட்டு நேர்ப்படுத்திவிட்ட பின் மேல்புறத்தில் அமர்த்தித் தட்டிவிட்டான். எல்லாம் தயாரானபோது சிறுவிவசாயிகள் தங்கள் கைகளில் குதிரையின் கடிவாளத்தை எடுத்தார்கள். வண்டிகளை இயக்குவதற்குமுன் 'ஆண்டவனின் ஆசிர்வாதத்துடன்' என்ற வார்த்தைகளுக்காகக் காத்திருந்தார்கள். ஜெராசிம் தன் அறைக்குள்ளிருந்து வெளியே வந்தான். ரற்றியானவிடம் சென்று சிகப்பு நிற பருத்தி கைக்குட்டை ஒன்றை பிரியாவிடை அன்பளிப்பாக அவளுக்குக் கொடுத்தான். அதை ஒரு வருடத்திற்கு முன்பே அவளுக்காக வாங்கி இருந்தான். அந்தக் கணம்வரை தன் வாழ்க்கையில் நிகழ்ந்த அருவருப்பான விபரங்களை எல்லாம் எதிலும் பற்றற்று அடக்கி வைத்திருந்த அவள், இப்பொழுது தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் வெடித்து அழுதாள். தன் இருக்கைக்குச் சென்றவுடன் ஜெராசிம்மை மூன்று முறை முத்தமிட்டாள், நல்ல கிறிஸ்தவப் பெண் போல. அவன் அவர்களுடன் சேர்ந்து நகரத்தின் எல்லைவரை செல்லவே நினைத்திருந்தான். வண்டிக்குப் பக்கத்தில் சிறிது தூரம் நடந்தான். ஆனால் கிறைமியன் கோட்டையை அண்மித்தவுடன் சடுதியாக நின்று தன் கையைக் காட்டிவிட்டு ஆற்றோரமாக நடந்து சென்று விட்டான்.

அப்பொழுது மாலையாகிக் கொண்டிருந்தது. ஆற்றைப் பார்த்துக் கொண்டு மெதுவாக நடந்து கொண்டிருந்தான். திடீரென்று ஏதோவொன்று கரைக்குப் பக்கத்துச் சேற்றில் தட்டுத் தடுமாறி போராடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவன் நின்று அதைப் பார்த்தபோது வெள்ளையும் கறுப்பும் கலந்த சிறிய நாய்க்குட்டி ஒன்றைக் கண்டான். எவ்வளவு முயன்று பார்த்தும் அது நீருக்குள்ளிருந்து வெளியேற முடியாமல் தவித்தது. வெளியே வரப் போராடியது, திரும்பவும் நழுவியது, நனைந்து மெலிந்த சிறிய உடம்பு முழுவதும் நடுங்கியது. ஜெராசிம் அதிர்ஷ்டமில்லாத அந்தச் சின்னஞ் சிறிய குட்டியைப் பார்த்தான். அதை ஒரு கையால் தூக்கி, தன் மேலங்கியின் நெஞ்சிப்பகுதிக்குள் வைத்துக் கொண்டு வீட்டுப் பக்கம் நோக்கி வேகமாக நடந்தான். தன் அறைக்குள் சென்று குட்டியை கட்டிலில் வைத்தான். தடித்த மேலங்கியால் மூடினான். பின் வைக்கோல் எடுப்பதற்காக தொழுவத்துக்கு ஓடினான். பால் எடுக்கக் குசினிக்கு ஓடினான். கவனமாக மேலங்கியை மடித்து வைத்து விட்டு அதன் மேல் வைக்கோலைப் பரப்பி வைத்தான். கட்டிலில் பாலை வைத்தான். பாவபட்ட அந்தச் சிறிய நாய்க்குட்டி பிறந்து மூன்று கிழமைக்கு மேல் இருக்காது. அதன் கண்கள் திறந்திருந்தன. ஒரு கண் மற்றக் கண்ணிலும் பார்க்க பெரிதாக இருந்தது. கோப்பையிலிருந்த பாலை எப்படி நக்கிக் குடிப்பதென அதற்குத் தெரியவில்லை. நடுங்கிக் கொண்டு கண்களைச் சிமிட்டிக் கொண்டு சும்மா இருந்தது. அதன் தலையை தன் இரண்டு விரல்களால் மெல்லப் பிடித்து அதன் சிறிய மூக்கை பாலுக்குள் ஓட்டி நனைத்தான். குட்டி மணந்து பார்த்தது. பின் ஆசையுடன் நக்கிக் குடிக்கத் துவங்கியது. உடம்பைக் குலுக்கியது. மூச்சுத் திணறியது. ஜெராசிம் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தான். பின் பெரிதாகச் சிரித்தான். இரவு முழுவதும் அதைக் கவனித்துக் கொண்டே இருந்தான். அதை போர்வையால் மூடி விட்டான். கைகளால் தேய்த்து உலர்த்தி விட்டான். கடைசியில் அவன் உறங்கிப் போனான். அதன் பக்கத்தில் அமைதியாகவும் மகிழ்வாகவும் உறங்கினான்.

ஜெராசிம் கவனித்தது போல எந்தத் தாயும் அந்தக் குழந்தையைக் கவனித்திருக்க மாட்டாள். அது பெண் குட்டி என பின்னர் என்று தெரிய வந்தது. அது ஆரம்பத்தில் வலுவற்ற, பலவீனமானமாக, அசிங்கமானதொன்றாகத் தோன்றியது. ஆனால் படிப்படியாக அது பலமானதாகவும் பார்க்க அழகானதாகவும் மாறியது. அவனுடைய தளராத கவனிப்பே அதற்குக் காரணம். எட்டு மாதத்தில் அதுவொரு அழகான நாயாக மாறியது. அது ஸ்பானியல் இனத்தைச் சேர்ந்தது. அதற்கு நீண்ட காதுகளும் அடர்த்தியான மயிருடைய

சுருண்ட வாலும் இருந்தன. பெரிய மனதில் உள்ளதை வெளிப்படுத்தும் கண்களும் இருந்தன. அது ஜெராசிம்முடன் பாசத்துடன் ஒட்டிக் கொண்டது. அவனுக்குப் பக்கத்திலேயே வாலை ஆட்டிக் கொண்டு அவன் எங்கு சென்றாலும் கூடவே சென்றது. அதற்கு அவன் ஒரு பெயர் கூட கொடுத் திருந்தான். அதை மூமு என்று அழைத்தான். வீட்டிலிருந்த மற்ற வேலைக்காரர்களும் அதை மூமு என்று அழைத்தார் கள். மற்றவர்களும் அதை விரும்பினார்கள். மற்றவர்களுக்கு அவனுடைய தெளிவற்ற சத்தங்கள் புரியும். அந்த வீட்டில்



வசித்த எல்லா வேலைக்காரர்களும் அந்தக் குட்டியை விரும் பினார்கள். அவர்களும் மூமு என்றே அழைத்தார்கள். அது மிக அறிவுள்ள பிராணி. அனைவருடனும் நட்பாகவே பழ கும். ஆனால் ஜெராசிம்மை மிகுந்த பற்றுடன் நேசித்தது. ஜெராசிம்மும் அதை பேருணர்ச்சியுடன் நேசித்தான். மற்றவர் கள் அதைத் தடவிக் கொடுப்பதை அவன் விரும்புவ தில்லை. அதை ஏதாவது செய்து விடுவார்களோ என்ற பயமோ அல்லது பொறாமையோ? எதனால் என்று தெரிய வில்லை. கடவுளுக்குத் தான் தெரியும்! அது அவனைக் காலையில் எழுப்பி விடும். அவனுடைய மேலாடையைப் பிடித்து இழுத்து எழுப்பும். தண்ணீர் இழுக்கும் முதிய குதி ரையின் கடிவாளத்தை வாயில் கௌவிக் கொண்டு வந்து அவனிடம் கொடுக்கும். அந்தக் குதிரையுடனும் அது மிக வும் நட்பாகவே பழகியது. முகத்தில் பெரும் முக்கியத்துவம் தோன்ற குதிரையுடன் ஆற்றுக்கு நடந்து செல்லும். துடைப் பங்களை, மண்வெட்டிகளையும் பாதுகாக்கும். ஜெராசிம்மின் அறைக்குள் செல்ல எவரையும் அனுமதிக்காது. அவனும் தன் அறைக் கதவில் ஒரு சிறிய ஓட்டையை அது வெளியே பார்ப்பதற்காக வெட்டி வைத்திருந்தான். அங்கே தன்னை முழுமையான எசமானி நினைத்துக் கொள்ளும். முழு சுதந்தி ரத்துடன் இருந்து கொள்ளும். ஜெராசிம்மின் அறைக்குள் சென்றவுடன் நேராக அவன் கட்டிலில் பாய்ந்து திருப்தியுடன் இருந்து கொள்ளும். இரவில் அது உறங்குவதே இல்லை. ஆனால் போதிய காரணமின்றி குரைப்பதும் இல்லை. முட்டாள்த்தனமாக வீட்டு நாய்களைப் போல. அவை பின் னங்கால்களில் இருந்து கொண்டு கண்களை சிமிட்டிக் கொண்டு மூக்கால் காற்றை நுகர்ந்து கொண்டு சலித்துப் போய் நட்சத்திரங்களைப் பார்த்து மூன்று முறை குரைப்பது போல இது குரைப்பதில்லை. மூமுவின் நொய்மையான சிறிய குரல் நல்ல காரணமின்றி உயர்ந்து ஒலிப்பதில்லை. யாராவது அந்நியன் ஒருத்தன் வேலிப்பக்கம் போனால் அல் லது சந்தேகத்திற்குரிய சலசலப்புச் சத்தம் கேட்டால் மட் டுமே குரைக்கும். உண்மையில் அதுவொரு சிறந்த கண்கா ணிப்பு நாய். அந்த வீட்டின் முற்றத்தில் இன்னொரு நாயும் இருந்தது. அது பழுப்பு மஞ்சள் நிற புள்ளிகள் விழுந்த நாய். அதன் பெயர் வூல்ஃப். ஆனால் அதைக் கட்டியிருந்த சங்கிலியை இரவில் கழற்றி விடுவதில்லை. கிழடு தட்டிப் போன நாய் அது. தன் விடுதலையைக் கூட விரும்பாத ஒன்று. அது தன் பட்டியில் சுருண்டு குறண்டிக் கொண்டு படுத்திருக்கும். சிலவேளைகளில் மட்டும் நித்திரைச் சோம்ப லில் சத்தமில்லாமல் குரைக்கும். அதன் பயனற்ற தன் மையை அதுவே உணர்ந்தது போல. மூமு சீமாட்டியின் வீட் டிற்குப் போனதே இல்லை. ஜெராசிம் விறகைத் தூக்கிக் கொண்டு வீட்டின் அறைகளுக்குள் போனபோது கூட அது அங்கே போனதில்லை. அது போகாமல் பின் தங்கி நின்று விடும். பொறுமையில்லாமல் படியில் அவனுக்காகக் காத்தி ருக்கும். காதுகளைக் கூர்மையாக வைத்துக் கொண்டு கதவி லிருந்து சிறிய கிரீச்சிட்ட சத்தம் வந்தாலும் தலையை வலது பக்கமும் இடது பக்கமும் திருப்பிக் கொண்டு பார்க்கும்.

அப்படியாக இன்னொரு வருடம் சென்றது. ஜெராசி பாரம் தூக்கியாக திருப்தியுடன் வாழ்ந்து கொண்டிருந்தான். திடீ ரென்று ஒருநாள் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. கோடை காலத்தில் ஒருநாள் முதிய சீமாட்டி தன் அடியாட் களுடன் வரவேற்பு மண்டபத்தில் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தாள். அன்று அவள் மிகவும் உற்சாகமான மன நிலையில் இருந்தாள். சிரித்துக் கொண்டும் பகிடி விட்டுக் கொண்டும். அவளுடைய அடிமைகளும் சிரித்தும் பகிடி பண்ணிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் அவர்கள் அத் தனை மகிழ்ச்சியாக இருக்கவில்லை. சீமாட்டி உற்சாகமாக இருக்கும்போது வீட்டில் இருந்த மற்றவர்கள் அதை விரும்பு வதில்லை. ஏனென்றால் அவள் தான் மகிழ்ச்சியாக இருக்கும் போது மற்றவர்களும் அவளுடன் உடனே முற்று முழுவதாக கலந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பாள். எவராவது முகத்தைச் சுழித்தால் அவள் சீற்றம் அடைந்து விடுவாள். இரண்டாவது, அந்த திடீர் எழுச்சிகள் நீண்ட நேரம் நிலைப் பதும் இல்லை. அதன் பிறகு அவள் கசப்பான துயரார்ந்த

மனநிலைக்குள் போய் விடுவாள். அன்று அவள் நல்ல மன நிலையில் அதிர்ஷ்டத்துடன் படுக்கையை விட்டு எழுந்திருந் தாள் போலும். சீட்டு விளையாடும்போது படைவீரர்கள் உள்ள நாலு சீட்டுக்களை எடுத்தாள் போலும். அதாவது அவள் நினைத்த காரியம் நடக்கும் என்று நினைத்தாள். ஒவ் வொரு நாள் காலையிலும் தன் அதிர்ஷ்டத்தை சீட்டு விளை யாட்டில் கண்டு கொள்ள முயலுவாள். அன்று அவள் குடித்த தேநீரும் சுவையாகவே இருந்தது. அதற்காக தன் வேலைக்காரிகளை புகழ்ந்தாள். இரண்டு பென்ஸ் பணமும் கொடுத்தாள். சுருக்கம் விழுந்த உதடுகளில் இனிமையான புன்சிரிப்புடன் வரவேற்பறை யன்னலுக்குச் சென்றாள். யன்ன லுக்கு முன்னால் ஒரு பூந்தோட்டம் இருந்தது. அதன் நடுவே ஒரு றோஸ் செடிகளின் கீழே மூமு இருந்து ஓர் எலும்பை பரபரப்புடன் நன்னிக் கொண்டிருந்தது. அதைச் சீமாட்டிக் கண்டு விட்டாள்.

'கருணை கொண்ட ஆண்டவரே!' என்று திடீரென்று கத்தினாள். 'அது எந்த நாய்?'

முதிய சீமாட்டிக்கு பக்கத்தில் நின்றவள் சற்று சுணங்கினாள். அதற்கு எப்படிப் பதிலளிப்பது தெரியாமல் திகைத்துப் போய் நின்றாள். எந்த அடிமையும் அப்படித்தான் நிற்பார் கள்.

'என...எனக்குத் தெரியாது. இது அந்தக் காது கேட்காதவ னின் நாய்' என்றாள் தட்டுத் தடுமாறிக் கொண்டு.

'கருணையுள்ளவரே!' சீமாட்டி அவளை இடைநிறுத்தினாள். 'இதுவொரு வசீகரமான குட்டி! அதைக் கொண்டு வரும்படி ஆணை இடுகிறேன். அவன் இதை கனகாலமாக வைத்திருக் கிறானா? எப்படி நான் இதை இதுவரை பார்க்கவில்லை? உள்ளே கொண்டு வரும்படி ஆணை இடுகிறேன்.' என்றாள்.

உடன்நின்றவள் மண்டபத்துக்குள் ஓடினாள்.

'சிறுவனே, மூமுவை உடனே கொண்டு வா! அது பூந்தோட் டத்துக்குள் நிற்கிறது.'

'அப்படியானால் அந்த நாயின் பெயர் மூமு. நல்ல பெயர்,' என்றாள் சீமாட்டி.

'ஓ, உண்மை. போய் விரைவாகக் கொண்டு வா, ஸ்ரீபன்,' என்றாள் உடன்நின்றவள்.

ஸ்ரீபன் உறுதியான கட்டிளம் பருவ ஆண். அவனுடைய பொறுப்புக்களில் ஒன்று சீருடை அணிந்து விருந்தினர்களை உள்ளே விடுவதும் உணவு மேசையில் நிற்பதும். அவன் பூந்தோட்டத்திற்கு ஓடி, மூமுவைப் பிடிக்க முயன்றான். அது அவன் கையிலிருந்து சாதுரியமாக நழுவி வால் காற்றில் பறக்க ஜெராசிமிடம் ஓடியது. அப்பொழுது அவன் குசினி யில் நின்று பீப்பாவை தலைகீழாகப் புரட்டிப் போட்டுக் கழு விக் கொண்டிருந்தான். அவன் கையிலிருந்த பீப்பா குழந் தைகளின் மேளத்தை போல அவனுக்கு இருந்தது. ஸ்ரீபன் மூமுவின் பின்னால் ஓடினான். அது ஜெராசிம்மின் காலடியில் குந்தி இருந்தியது. அதை அவன் பிடிக்கப் பார்த்தான். விவேகமான நாய் அந்நியனைத் தொட விடாது. ஒரு துள்ள லில் அது தப்பிவிட்டது. ஜெராசிம் அந்தச் சந்தடியை புன்மு றுவலுடன் பார்த்துக் கொண்டு நின்றான். கடைசியில் ஸ்ரீபன் எழும்பி சீமாட்டி அதைக் கொண்டு வரும்படி சொன்னதை அவனுக்கு சைகைளால் விளங்கப்படுத்தினான். ஜெராசிம் மும் சற்று வியந்துபோய் மூமுவை அழைத்தான். அதைக் தூக்கி ஸ்ரீபனின் கைகளில் கொடுத்தான். ஸ்ரீபன் விரைந்து வரவேற்பு மண்டபத்திற்குச் சென்று அதைத் தரையில் விட் டான். முதிய சீமாட்டி தன்னிடம் வரச் சொல்லி மென்மையாக அதை அழைத்தாள். தன் வாழ்நாளில் அப்படியான அற்பு தமான இடத்திற்கு செல்லாத மூமு பயந்துபோய் கதவடிக்கு ஓடியது. பணிவுடன் வேலை செய்யும் ஸ்ரீபன் அதைத் திரும் பவும் சீமாட்டியிடம் கலைத்து விட்டான். அது நடுங்கிக் கொண்டு சுவருக்குப் பக்கத்தில் பதுங்கியது.

'மூமு, மூமு என்னிடம் வா. உன்னுடைய சீமாட்டியிடம் வா,' என்றாள் சீமாட்டி. திரும்பவும், 'முட்டாளே, பயப்படாமல் வா,' என்றாள்.

மூமு எல்லாப் பக்கமும் திகைத்துப் போய்ப் பார்த்தது. ஆனால் அசையவில்லை.

'அது சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டு வாருங்கள்' என் றாள் முதியவள். 'எப்படிப்பட்ட முட்டாள். உன் சீமாட்டியிடம் வர மாட்டேன் என்கிறாயே. அது எதற்குப் பயப்படுகிறது?' என்றாள்.

'மரியாதைக்குரியவரே, உங்களுடன் அதற்குப் பழக்க மில்லை,' என்றாள் அங்கிருந்த ஒருத்தி பலகீனமான ஆனால், இணக்கமான குரலில்.

ஸ்ரீபன் ஒரு சோசரில் பால் கொண்டு வந்து மூமுவுக்கு முன் னால் வைத்தான். மூமு அதை மணந்து கூட பார்க்க வில்லை. நடுங்கிக் கொண்டு முன்பு பார்த்தது போல எல் லாப் பக்கமும் பார்த்தது.

'ஆ, எத்தனை முட்டாள் நீ!' என்றாள் சீமாட்டி. பின் அதனி டம் சென்று குனிந்து அதைத் தடவ முயன்றாள். மூமு தன் தலையைச் சடுதியாகத் திருப்பி தன் பற்களைக் காட்டிச் சீறி யது. சீமாட்டி தன் கைகளை வேகமாகப் பின்னால் இழுத்துக் கொண்டாள்.

ஒரு கண நேரம் அமைதி. மூமு மெல்ல உறுமியது. முறை யிடுவது போலவும் மன்னிப்புக் கேட்பது போலவும்... முதிய சீமாட்டி அலறிக் கொண்டு பின் வாங்கினாள். மூமு சடுதி யாக அசைந்து அவளை அச்சுறுத்திவிட்டது.

'ஆ!' அங்கிருந்தவர்கள் எல்லோரும் கிரீச்சிட்டுக் கத்தினார் கள். 'உங்களைக் கடித்து விட்டதா? ஆண்டவன் காப்பாற்றட் டும்! (மூமு தன் வாழ்நாளில் எவரையுமே கடித்த தில்லை.) ஆ, ஆ.'

'அதைக் கொண்டு போ.' என்றாள் முதிய சீமாட்டி, வேறொரு

குரலில். ‘இழிவான சின்ன நாய்! எப்படிப்பட்ட வெறுக்கத் தக்க உயிர்!’

திரும்பி தன் தனியறைக்குச் சென்றாள். அவளுடன் நின்ற வர்கள் ஒருவரை ஒருவர் மருண்டு போய்ப் பார்த்தார்கள். அவளைப் பின் தொடர முயன்றார்கள். அவள் நின்று அவர் களை வெறுப்புடன் பார்த்து, ‘எதுக்காக வாறீர்கள்? நான் உங்களைக் கூப்பிடவில்லையே,’ என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

அவளுடன் நின்றவர்கள் ஸ்ரீபனிடம் நம்பிக்கையற்றுக் கைக ளைக் காட்டினார்கள். அவன் மூமுவைத் தூக்கிக் கொண்டு போய் கதவுக்கு அப்பால் வேகமாக வீசினான். அது ஜெரா சிம்மின் காலடியில் போய் விழுந்தது. அரை மணி நேரம் வீட்டில் ஆழ்ந்த அமைதி நிலவியது. முதிய சீமாட்டி சோஃபாவில் குந்தி இருந்தாள். மழை மேகத்திலும் பார்க்க இருண்டு போன முகத்துடன்.

எப்படிப்பட்ட அற்பமான விஷயங்கள் சிலரை கலவரப்ப டுத்தி விடுகின்றன!

மாலைவரை சீமாட்டி கெட்ட மனநிலையில் இருந்தாள். எவரு டனும் அவள் பேசவும் இல்லை, சீட்டு விளையாடவும் இல்லை. இரவும் மோசமாகவே கழிந்தது. அவளுக்குக் கொடுத்த ஓடிக்கொலோனும், வழக்கமாகக் கொடுக்கும் கொலோனைப் போல இருக்கவில்லை என்று நினைத்தாள். தலையணையிலும் சவர்க்காரம் மணக்கிறது என்று நினைத் தாள். துணிமணிக்குப் பொறுப்பானவளைக் கூப்பிட்டு எல்லா ஆடைகளையும் மணந்து பார்க்கச் சொன்னாள். உண்மை யில் மனவமைதி கெட்டுப் போய் எரிச்சல் அடைந்திருந் தாள். அடுத்த நாள் காலையில் கவ்றிலாவை வழக்கத்திற்கு ஒரு மணி நேரம் முன்னரே அழைத்தாள்.

‘சொல்லு,’ என்று நேரடியாகவே துவங்கினாள். அவள் தன் அறையின் வாயில்படியைத் தாண்டியவுடன் சிறு நடுக்கத்து டன் நின்றான். ‘உன் முற்றத்தில் எந்த நாய் இரவு முழுவதும் குரைத்துக் கொண்டிருந்தது? அது என்னை நித்திரை கொள்ளவிடவில்லை,’ என்றாள்.

‘நாய், ம் எந்த நாய். ம்... அது காதுகேளாதவனுடைய நாயாக இருக்கலாம் என்று நடுங்கும் குரலில் பதில் சொன் னான்.

‘அது காது கேளாதவனுடைய நாயோ யாருடைய நாயோ எனக்குத் தெரியாது. அது என்னை நித்திரை கொள்ள விட வில்லை. அப்படிப்பட்ட நாய்களை நாங்கள் ஏன் இங்கே வளர்க்கிறோம். அது எனக்குத் தெரிய வேணும். எங்களிடம் முற்றத்து நாய் ஒன்று இருக்கிறதல்லவா?’

‘ஓம், ம்மா. எங்களிடம் இருக்கிறது. வூல்ஃப்.’

‘சரி, அப்போ ஏன் இன்னும் ஒன்று மேலதிகமாக. எதற்காக எங்களுக்கு பல நாய்கள்? அது இன்னும் ஒழுங்கின்மை யைக் கொண்டு வருகிறது. இந்த வீட்டில் அவற்றைக் கட் டுப்படுத்த எவரும் இல்லை. அதுதான் பிரச்சினை. அந்தக் காதுகேளாதவனுக்கு ஏன் நாய்? எங்கள் முற்றத்தில் நாய் வளர்க்க அவனுக்கு யார் அனுமதி கொடுத்தது? நேற்று நான் யன்னலடிக்குப் போனேன். அது பூந்தோட்டத்தில் படுத் திருந்தது. ஏதோ அசிங்கத்திற்குள் கிடந்து எதையோ நன் னிக் கொண்டிருந்தது? என்னுடைய றோசா கன்றுகள் அங்கே இருக்கின்றன.’

சீமாட்டி நிறுத்தினாள்.

‘அது இன்றைக்கே இங்கிருந்து போக வேணும். கேட்கிறதா?’

‘ஓம், ம்மா.’

‘இன்றைக்கே. இப்பொழுதே. அந்த அறிக்கையைத் தரும் படி பிறகு உனக்கு ஆள் அனுப்புவேன்.

கவ்றிலா போய்விட்டான்.

வரவேற்பறையால் அவன் போய்க் கொண்டிருந்தபோது ஒழுங்கைக் கடைப்பிடிப்பதற்காக மணி ஒன்றை எடுத்து ஒரு மேசையிலிருந்து இன்னொரு மேசையில் வைத்தான். வாத் துப் போன்ற தன் மூக்கை யாருக்கும் தெரியாமல் சீறினான். பின்னர் வெளி மண்டபத்துக்குள் போனான். வெளி மண்டபத் துக்குள் உள்ள பெட்டகத்தின் மேல் ஸ்ரீபன் யுத்தத்தில் கொல்லப்பட்ட ஒரு வீரனைப் போலப் படுத்திருந்தான். அவ னுடைய வெற்றுக் கால்கள் மேலாடையின் கீழ் துருத்திக் கொண்டு இருந்தன. மேலாடையை அவன் கம்பளியாக பாவித்திருந்தான். மேலாளன் அவனை ஒரு தள்ளுத் தள்ளி அவனுக்குச் சில அறிவுறுத்தல்கள் கொடுத்தான். அதற்கு அவன் கொட்டாவிக்கும் சிரிப்புக்கும் இடையில் ஏதோ குசுகு சுத்தான். மேலாளன் போய்விட்டான். ஸ்ரீபன் எழும்பி தன் மேலாடையையும் பூட்சுகளையும் அணிந்து கொண்டு வெளியே போய் படிகளில் நின்றான். ஐந்து நிமிஷம் போக வில்லை. ஜெராசிம், பிளந்த பெரிய மரக்குற்றிகளைத் தூக் கிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். அவனுடன் அவனை என்றுமே பிரியாத மூமுவும் வந்து கொண்டிருந்தது. (சீமாட்டி யின் படுக்கையறையும் அறையும் கோடை காலத்திலும் சூடாக்கி வெதுவெதுப்பாக இருக்க வேண்டும் என்று ஆணை இட்டிருந்தாள். அதற்காகத்தான் அந்த விறகு.) ஜெராசிம் கத வடியில் பக்கவாட்டுக்குத் திரும்பி கதவை தோளால் தள்ளி னான். பாரத்துடன் தடுமாறிக் கொண்டு வீட்டுக்குள் சென் றான். மூமு வழக்கம் போல அவனுக்காக காத்துக் கொண்டு வெளியே தங்கி நின்று கொண்டது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஸ்ரீபன் அதைத் தூக்கிக் கொண்டு, தன் தொப்பியைப் போடாமலே திடீரென்று முற்றத்துக்கு வெளியே ஓடினான். முதலில் கிடைத்த வண்டியில் சந்தைக் குச் சென்றான். அங்கே அதை வாங்குவதற்கு ஒருத்தன் கிடைத்தான். அவனுக்கு அதை ஒரு ஷிலிங் பணத்திற்கு விற்றான். குறைந்தது ஒரு கிழமையாவது அதைக் கட்டி வைக்க வேணும் என்ற நிபந்தனையுடன் தான் விற்றான். உட னடியாகத் திரும்பி வீட்டுக்கு வந்தான். வீட்டுக்கு வர முன் னர் வண்டியிலிருந்து இறங்கி முற்றத்தைச் சுற்றி வந்து வேலிக்கு மேலாக பாய்ந்து பின் வீதியால் முற்றத்துக்கு வந்

துதான் உள்ளே வந்தான்... ஜெராசிம்மிக்மை சந்திப்பதற்குப் பயந்து வாயிற் கதவால் வரவில்லை.

இருந்தும் அவனுடைய கவலை தேவையற்றது. ஜெராசிம் அப்போது முற்றத்தில் நிற்கவில்லை. வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தபோது வெளியே மூமுவைக் காணவில்லை என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. ஒருநாளுமே அது தனக் காகக் காத்திருக்காமல் விட்டதில்லை. அதனால் அவன் அங்குமிங்கும் அதைத் தேடி ஓடி தனக்குத் தெரிந்த குரலில் அழைத்தான். தன் அறைக்குள் ஓடினான். வைக்கோல் போருக்கு ஓடினான். வீதிக்கு ஓடினான். எல்லாவிடமும் ஓடி னான்... அதைக் காணவில்லை! மற்ற அடிமைகளிடம் வந்து கேட்டான். நம்பிக்கையற்ற சைகைகளால் அங்கிருந்த அடி மைகளிடம் நிலத்தில் இருந்து அதன் உயரத்தை கைகளால் காட்டிக் கேட்டான்... அதற்கு என்ன நடந்தது என்பது பற்றி உண்மையில் சிலருக்குத் தெரியாது. அவர்கள் தங்கள் தலையை ஆட்டினார்கள். சிலருக்குத் தெரியும். பதிலுக்குச் சிரித்தார்கள். அப்போது மேலாளன் பெரிய ஆளின் தோர ணையில் வண்டிக்காரனை திட்டிக் கொண்டிருந்தான். ஜெரா சிம் முற்றத்துக்கு வெளியே ஓடிப் போனான்.

அவன் திரும்பி இருப்பான் என்று கருதக் கூடியதாக இருந் தது. சீமாட்டியின் வீட்டு யன்னலுக்கு எதிரில் அசையாமல் அங்கிருந்த இடிகளில் கூட்டமாக நின்ற, வீட்டு அடிமைக ளைக் கூர்ந்து பார்த்தான். திரும்பவும் தெளிவற்ற குரலில் 'மூமு' என்றழைத்தான். மூமு பதில் சொல்லவில்லை. அது போய்விட்டது. எல்லோரும் அவனைப் பார்த்தார்கள். எவ ருமே அவனுடன் ஒரு சொல் பேசவோ புன்னகை செய்யவோ இல்லை. அன்றிரவு முழுவதும் அவன் அனுங்கிக் கொண்டு கிடந்தான் என்று அன்ரிக்பா என்ற வண்டியோட்டி அடுத்த நாள் குசினியில் இருந்தபோது சொன்னான்.

அடுத்த நாள் முழுவதும் ஜெராசிம் வெளியே வரவில்லை. அவனுக்குப் பதிலாக வண்டிக்காரன் பொட்டாப் என்றவனை தண்ணீர் கொண்டு வர அனுப்பினார்கள். அதற்காக பொட் டாப் மகிழ்ந்தான். தன்னுடைய ஆணை நிறைவேற்றப்பட்டதா என்று சீமாட்டி கவ்றில்லாவிடம் கேட்டாள். கவ்றிலா ஓம் என் றான். அடுத்த நாள் காலை ஜெராசிம் தன் அறையிலிருந்து வெளியே வந்து வழக்கமான தன் வேலைகளைச் செய்தான். இரவுணவு அறைக்குப் போய் உணவை உண்டு விட்டு எவ ருக்கும் வணக்கம் சொல்லாமல் திரும்பவும் வெளியே போனான். வழக்கமாகவே அவனுடைய முகம் உயிரற்றது. இப்போது அது கல்லுப் போல மாறி விட்டது. காது கேளாத வாய் பேசாத ஒருவன் இருப்பது போல. இரவுணவின் பின் திரும்பவும் முற்றத்துக்கு வெளியே போனான். ஆனால் அதிக நேரம் போகவில்லை. திரும்பவும் உள்ளே வந்து வைக்கோல் போரின் மேலுள்ள மாடிக்குப் நேராகப் போனான். இரவு வந்தது. தெளிவான நிலவொளி இரவு அது. ஜெராசிம் பெருமூச்சு எறிந்து கொண்டு கிடந்தான். தொடர்ந்து அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். திடீரென்று தன் மேலாடையை ஏதோவொன்று இழுப்பதை உணர்ந்தான். தலையைத் தூக் காமல் திரும்பினான். கண்களை இறுக்கமாக மூடிக் கொண் டிருந்தான். திரும்பவும் ஏதோ இழுத்தது. முன்பிலும் பார்க்க வலிமையாக இழுத்தது. துள்ளி எழுந்தான். அவனுக்கு முன் னால் கழுத்தைச் சுற்றிய ஒரு கயிற்றுடன் மூமு நின்றது. கைகளால் அதைக் கட்டி அணைத்தான். அது அவனுடைய மூக்கை கண்களை தாடியை மீசையை எல்லாவற்றையும் நக் கியது... எழும்பி நின்று ஒரு நிமிஷம் சிந்தித்தான். வைக் கோல் போரிலிருந்து எச்சரிக்கையாக கீழே இறங்கினான். ஒருவரும் இல்லை என்று திருப்தி அடைந்த பின் தன் அறைக்கு வெற்றிகரமாகச் சென்று சேர்ந்தான். தன்னுடைய நாய் தொலைந்து போகவில்லை, சீமாட்டியின் ஆணைப்படி யாரோ அதை கொண்டு போய் இருக்க வேணும் என்பதை யும் ஊகித்தான். மூமு சீமாட்டியை சீண்டி விட்டதாக வேலைக்காரர்கள் சைகைகள் மூலம் அவனுக்கு ஏற்கெனவே சொல்லியும் இருந்தார்கள். அதனால் தன்னால் முடிந்ததை இப்போது செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான். முதலில் அதற்கு உணவு கொடுத்தான். அதைத் தடவி விட்ட பின் படுக்கையில் இட்டான். இரவு முழுவதும் அதை எப்படி மறைத்து வைத்திருப்பது என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். இறுதியில் நாள் முழுவதும் அதை தன்ன றையில் வைத்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். இடைக்கிடை அதை வந்து பார்க்க வேண்டும் என்றும் இர வில் மட்டும் அதை வெளியே கொண்டு போக வேணும் என் றும் தீர்மானித்தான். கதவில் இருந்த துவாரத்தை தன் பழைய மேலாடையால் மறைத்தான். எதுவும் நடக்காதது போல விடிவதற்கு முன்னரே முற்றத்தில் போய் நின்றான். வஞ்சகமில்லாத தந்திரத்துடன். முகத்தில் சோகமான உணர்ச் சியுடன். ஆனால் மூமு தன் முனகல்களால் அவனைக் காட் டிக் கொடுத்துவிடும் என்பது பரிதாபத்துக்குரிய அவனுக்குத் தெரியவில்லை. காதுகேளாதவனின் நாய் திரும்ப வந்து விட் டது என்பதும் அதை அவன் அறைக்குள் பூட்டி வைத்திருக் கிறான் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அவன் மேல் இருந்த அனுதாபத்தாலும் அவனுக்குப் பயந்தும் அந்த இர கசியத்தை ஒருவரும் சொல்லவில்லை. மேலாளனும் என்ன செய்வது என்று தன் தலையைச் சொறிந்து கொண்டிருந் தான். தலையை ஆட்டி, 'கடவுள் அவனைக் காப்பாற்றட் டும்! என்னவோ சீமாட்டியின் காதுகளுக்கு எட்டாமல் இருந் தால் போதும்,' என்று ஒன்றும் செய்யாமல் இருந்தான்.

ஜெராசிம் அன்று மிக மிக உற்சாகத்துடன் வேலை செய் தான். முற்றம் முழுவதையும் தேய்த்துச் சுத்தமாக்கினான். தன் கைகளாலேயே ஒவ்வொரு களையையும் பிடுங்கி எறிந் தான். சீமாட்டியைத் திருப்திப் படுத்துவதற்காக பூந்தோட்ட வேலியின் ஒவ்வொரு தடியையும் தனித் தனியாக நேராக இறுக்கி நட்டான். உண்மையில் அவன் கஷ்டப்பட்டு உழைப்பதை சீமாட்டி கூட கவனித்தாள். இரண்டு முறை மூமுவைப் பார்ப்பதற்காக இரகசியமாக தன் அறைக்குச் சென்று வந்தான். இரவு வந்தபோது வைக்கோல் போரில் படுக்காமல் அதனுடன் தன்னறையில் படுத்தான். புதிய காற் றைச் சுவாசிப்பதற்காக இரவு இரண்டு மணிக்கு அதை வெளியே அழைத்துச் சென்றான்.

முற்றத்தில் நன்றாக நடந்த பின் அவன் திரும்பி வரும்போது வீதியின் பின்பக்க வேலிப் பக்கமிருந்து ஏதோ அசைந்த சத் தம் கேட்டது. மூமு தன் காதுகளைக் கூர்மையாக்கி உறுமி யது. வேலிப் பக்கம் சென்று முகர்ந்தது. பின் உரத்து கிரீச்



சிட்ட குரலில் குரைத்தது. யாரோ ஒரு குடிகாரன் அங்கே கிடந்தான். அந்தவேளையில் முதியவளும் நீண்ட நேரமாக நரம்புக் கோளாறால் அவதியுற்று அப்போது தான் நித்திரை கொள்ளத் துவங்கி இருந்தாள். இந்த நரம்புக் கோளாறு இர வுணவை நன்றாகச் சாப்பிட்ட பின் தூங்கினால் அவளுக்கு மேலும் அதிகரித்து விடும். மூமு திடீரெனக் குரைத்து அவளை எழுப்பிவிட்டது. அவளின் இதயத் துடிப்பு மேலும் படபடவென துடித்தது. மயக்கம் வருவது போலத் தோன்றி யது. 'பெண்களே, பெண்களே' என்று முனகினாள். பயந்து போன வேலைக்காரிகள் படுக்கையறைக்குள் ஓடி வந்தார் கள். 'ஓ, ஓ, நான் சாகப் போகிறேன்,' என்று கத்தினாள். கைகளை ஆவேசமாக அடித்தாள். 'திரும்பவும் அந்த நாய் வந்துவிட்டதா? ஓ, மருத்துவரைக் கூப்பிடுங்கள். நான் சாகப் போகிறேன். நாய்! ஓ!' என்று கத்திக் கொண்டு தலையை பின்னால் சாய்த்தாள். அவளுக்கு மயக்கம் வந்து விட்டது. மருத்துவரிடம் ஓடினார்கள். அதாவது வீட்டு மருத்துவரான ஹரிட்டரிடம். மென்மையான சத்தமில்லாத பூட்சுகளை அணிந்து கொண்டு வந்து சீமாட்டியின் நாடித் துடிப்பை மென்மையாக எடுக்கத் தெரியும். அதுதான் அவருடைய தகுதி. பிறகு அவர் போய் இருபத்து நாலு மணி நேரத்தில் பதினாலு மணி நேரம் நித்திரை கொள்ளுவார். மீதியுள்ள நேரம் எல்லாம் பெருமூச்சு எறிந்து கொண்டு முதியவள் தூங்குவாள். அதற்காக தொடர்ச்சியாக செர்ரி பழத் துளிகள் கொடுப்பார். மருத்துவர் ஓடி வந்து, இறகுகளை எரித்த புகையால் அறையை நிரப்பினார். சீமாட்டி கண்களைத் திறந்தபோது அவளுக்கு ஒரு கிளாஸ் நிறைய புனிதமான செர்ரி துளிகளை வெள்ளித் தட்டில் வைத்துக் கொடுத்தார். முதியவள் அதைக் குடித்து விட்டு அழும் குரலில் நாயைப் பற்றி, கவ்றிலாவைப் பற்றி, தன் தலைவிதியைப் பற்றி புலம் பிக் கொண்டிருந்தாள். தான் முதிய பரிதாபத்துக்குரிய பெண் என்றும் எல்லோரும் தன்னைக் கைவிட்டு விட்டார்கள் என்றும், எவரும் தன்னில் இரக்கம் காட்டுவதில்லை என்றும் தான் இறந்து போய் விட வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள் என்றும் குறைகூறத் துவங்கினாள். அதற்கி டையில் அதிர்ஷ்டமில்லாத மூமுவும் குரைக்கத் துவங்கி இருந்தது. ஜெராசிம் அதை வேலியடியிலிருந்து அழைக்க முயன்றான். 'அங்கே பார், அங்கே பார், திரும்பவும்...' என் றாள் முதியவள் முனகிக் கொண்டே. திரும்பவும் அவளு டைய விழிகள் மேலே சொருகின. மருத்துவர் வேலைக்காரி ஒருவரிடம் ஏதோ குசுகுசுத்தார். அவள் வெளி மண்டபத் திற்கு விரைந்து சென்று ஸ்ரீபனை அசைத்து எழுப்பினாள். அவன் கவ்றிலாவை எழுப்ப விரைந்தான். கவ்றிலா சீற்றத் தில் முழு வீட்டையும் எழுப்ப ஆணை இட்டான்.

ஜெராசிம் திரும்பிப் பார்த்தபோது யன்னல்களில் வெளிச்சங் களும் நிழல்களும் அசைந்து கொண்டிருந்தன. ஏதோ பிரச் சினை வருவதை உள்ளுணர்வால் உணர்ந்து மூமுவைத் தூக்கிக் கொண்டு தன் அறைக்குள் ஓடி பூட்டிக் கொண்டு உள்ளே இருந்தான். ஒரு சில நிமிஷங்களின் பின் ஐந்து ஆண்கள் அவனுடைய கதவைத் தட்டினார்கள். அது தாழ்ப் பாள் போட்டிருப்பதை அறிந்து தட்டுவதை நிறுத்தினார்கள். கவ்றிலா பயந்த மனநிலையில் அங்கே வந்து அவர்களை காலைவரை காத்திருந்து கவனிக்கச் சொன்னான். பிறகு வேலைக்காரிகள் இருக்கும் இருப்பிடத்திற்குப் பறந்தான். லியுபோவ் லியுபோவ்னா என்ற தன் பழைய கூட்டாளியூடாக சீமாட்டிக்கு, அந்த நாய் அங்கிருந்து எங்கோ ஓடி விட்டதா

கவும் அதை நாளைக்கு கொன்று விடுவார்கள் என்றும் அதற் காக கோபப்படாமல் இருக்கச் சொல்லியும் செய்தி அனுப்பினான். அந்தக் கூட்டாளியின் உதவியுடன் தான் அவன் தேயிலை, சீனி, இன்னும் பல சரக்குச் சாமான்க ளைக் களவெடுப்பதும் கணக்குகளில் மோசடி செய்வதும். முதியவள் அத்தனை விரைவாக ஆறுதல் அடைந்து விடக் கூடியவள் அல்ல. ஆனால் மருத்துவர் அன்று பன்னிரண்டு துளிகள் கொடுப்பதற்குப் பதிலாக அவசரத்தில் நாற்பது துளிகள் கொடுத்திருக்கிறார். அந்த வலிமையான போதைப் பொருள் வேலை செய்திருக்கிறது. கால் மணி நேரத்தில் முதியவள் அமைதியாகவும் ஆழமாகவும துயிலத் துவங்கி விட்டாள். அந்த நேரத்தில் ஜெராசிம் தன் படுக்கையில் வெளிறிய முகத்துடன் மூமுவின் வாயை இறுக்கிப் பொத்திக் கொண்டு படுத்திருந்தான்.

அடுத்த நாள் காலை சீமாட்டி நேரம் சென்று எழும்பினாள். ஜெராசிம்மின் அறையை இறுதியாகத் தாக்குவதற்கு ஆணை கொடுப்பதற்காக கவ்றிலா அவள் எழும்பும்வரை காத்திருந் தான். அதேவேளை ஏற்படப்போகும் பயங்கர புயலுக்கு முகம் கொடுக்கவும் தயாராக இருந்தான். ஆனால் புயல் வரவில்லை. முதியவள் படுக்கையில் கிடந்து தன் முதிய அடியாளை வரும்படி சொல்லி அனுப்பி இருந்தாள்.

'லியுபொவ் லியுபோவ்னா,' என்று அடங்கிய ஆனால் பலவீ னமான குரலில் தான் சொல்லப் போவதை ஆரம்பித்தாள். தான் ஒடுக்கப்பட்டவள் போன்றும் கைவிடப்பட்ட பாதிக்கப் பட்டவள் போன்றும் நடிப்பதில் அவள் கை தேர்ந்தவள். அந்த வேளை அங்கிருந்த அனைவரும் மிகவும் அசௌகரி யமாக உணர்வார்கள் என்பதைத் சொல்லத் தேவையில்லை. 'லியுபொவ் லியுபிமொவ், என்னுடைய நிலைமையைப் பார். போ, என் அன்பே, கவ்றிலா அன்ட்றியேவிச்சிடம் போய்ச் சொல்லு. அவனுடைய சீமாட்டியின் ஓய்விலும் பார்க்க இழி வான நாய் ஒன்றை உண்மையில் மதிக்கிறானா என்று கேள்.' கூடவே, ஆழமான உணர்ச்சி வெளிப்பட, 'என் அன்பே, போ. கவ்றிலா அன்ட்றேவிச்சிடம் எனக்காகப் போ.'

லியுபிபொவ் லியுபிமொவ்னா கவ்றிலாவின் அறைக்குக் போனாள். அவர்கள் இருவருக்கும் இடையே என்ன உரை யாடல் நடந்தது என்று தெரியவில்லை. ஆனால் கொஞ்ச நேரத்திற்குப் பின் மக்கள் கூட்டம் ஒன்று முற்றத்தைக் கடந்து ஜெராசிம்மின் அறையை நோக்கிச் சென்றது. கவ்-றிலா கூட்டத்திற்கு முன்னால் நடந்து கொண்டிருந்தான், கையில் தொப்பியை ஏந்திக் கொண்டு. வாயிற்காவலர்களும் சமையல்காரர்களும் அவனுக்குப் பின்னால் சென்றார்கள். அங்கிள் ரெயில் யன்னலுக்கு வெளியே பார்த்து உத்தரவு கள் கொடுத்துக் கொண்டிருந்தான். அதாவது கைகளை அசைத்து காட்டிக் கொண்டிருந்தான். அவர்களுக்குப் பின் னால் ஒரு கூட்டம் சிறுவர்கள் தாவிக் கொண்டும் துள்ளிக் கொண்டும் நடந்து சென்றார்கள். அதில் அரைவாசிப் பேர் வெளியில் இருந்து அங்கே ஓடி வந்தவர்கள். ஜெராசிம்மின் அறைக்குச் சென்ற ஒடுங்கிய படிக்கட்டுக்களில் ஒரு காவ லாளி இருந்து கொண்டிருந்தான். கதவடியில் இரண்டு காவ லாளிகள் பொல்லுகளுடன் நின்றார்கள். சிலர் அதில் ஏறவும் துவங்கினார்கள். ஆனால் அது முற்று முழுதாக தடுக்கப் பட்டுவிட்டது. கவ்றிலா கதவடிக்கு நடந்து சென்று கைமுட்டி யால் கதவைத் தட்டி, 'ஜெராசிம் கதவைத் திற!' என்று சத் தம் போட்டான்.

மூமுவின் அடங்கிய குரைப்புக் குரல் மட்டும் கேட்டது. பதி லில்லை.

'கதவைத் திற, நான் சொல்கிறேன்,' என்று திரும்பவும் சொன் னான்.

'கவ்றிலா அன்ட்றேயிச், அவனுக்குக் காது கேட்காது, உனக் குத் தெரியாதா?, அவனால் கேட்க முடியாது.' என்று ஸ்ரீபன் கீழே இருந்து கத்தினான்.

எல்லோரும் சிரித்தார்கள்.

'அப்போ என்ன செய்யலாம்?' என்று கவ்றிலா மேலிருந்து கேட்டான்.

'கதவில் ஒரு ஓட்டை இருக்கிறது. அதற்குள் தடியை விட்டு ஆட்டு' என்றான் ஸ்ரீபன்.

கவ்றிலா குனிந்து பார்த்தான்.

'அதை எதனாலோ அடைத்து வைத்திருக்கிறான், மேலங்கி யாலோ என்னத்தாலோ.'

'சரி, மேலாடையை உள்ளே தள்ளு.'

அந்த நேரத்தில் மூமுவின் அடங்கிய குரைப்பு திரும்பவும் கேட்டது.

'பாருங்க, பாருங்க, அது கதைக்கிறது,' என்று சொன்னது கூட்டம். திரும்பவும் எல்லோரும் சிரித்தார்கள்.

கவ்றிலா தன் காதைச் சொறிந்தான்.

'முடியாது, நண்பனே. வேண்டுமானால் நீயே மேலாடையைத் தள்ளு,' என்றான் கவ்றிலா.

'சரி, நான் செய்கிறேன்.'

ஸ்ரீபன் தட்டுத் தடுமாறி மேலே ஏறி ஒரு தடியை எடுத்து தடுத்து வைக்கப்பட்டிருந்த மேலாடையைத் தள்ளினான். பின் ஓட்டைக்குள்ளால் தடியால் துழாவி, 'வெளியே வா, வெளியே வா,' என்று கத்தினான். இன்னும் தடியை கையில் வைத்துக் கொண்டிருந்தபோது அறைக்கதவு வேகமாகத் தள் ளித் திறக்கப்பட்டது. உடனே கூட்டமாக நின்றவர்கள் தாறு மாறாக விழுந்தடித்துக் கொண்டு இறங்கினார்கள். கவ்றிலா தான் முதலில் இறங்கினான். அங்கிள் ரெயில் தன் யன்ன லைப் பூட்டினான்.

'வெளியே வா, வெளியே வா, வெளியே வா,' என்று கத்தி னான் கவ்றிலா முற்றத்தில் நின்று கொண்டு.

ஜெராசிம் அசையாமல் தன் கதவடியில் நின்றான். கூட்டம் படிக்கட்டின் கீழ் கூடி நின்றது. இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு ஜேர்மன் மேலாடையில் ஜெராசிம் அந்த பாவப்பட்ட உயிரினங்களை வெறுப்புடன் கீழே பார்த்தான். அவன் சிறுவிவசாயிகள் போடும் சிகப்புச் சட்டையில் இராட்சதன் போல நின்றான். கவ்றிலா ஓரடி முன்னால் வைத்தான்.

'நண்பனே மரியாதை இல்லாமல் நடக்காதே,' என்றான் கவ்றிலா.

சீமாட்டிக்கு அவனுடைய நாய் வேண்டும் என்று சொல்கிறாள் என்று சைகைளால் அவனுக்கு விளங்கப்படுத்தத் துவங்கினான். அதை உடனடியாக அவளுக்கு கொடுத்து விடு. அல்லது உனக்கு கெடுதல்தான் நடக்கும், என்றான்.

ஜெராசிம் அவனைப் பார்த்த பின் நாயைக் காட்டி தன் கையால் கழுத்தைச் சுற்றி காட்டினான், சுருக்குக் கயிறு ஒன்றை இறுக்குவதைப் போல. பின் கவ்றிலாவைப் பார்த்து இன்னும் என்ன வேண்டும் என்ற கேள்விக் குறியுடன் நின்றான்.

'அதுதான், அதுதான்,' என்று ஆமோதிப்பது போல கவ்றிலா தலையை ஆட்டினான்.

ஜெராசிம் கண்களை தாழ்த்தினான். பின் சடுதியாக மூமுவைக் காட்டினான். அது இதுவரை நேரமும் அவனுக்குப் பக்கத்தில் வஞ்சகமில்லாமல் வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. என்ன என்று அறியும் ஆவலுடன் காதுகளை கூர்மையாக வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தது. திரும்பவும் ஜெராசிம் கழுத்தைச் சுற்றி இறுக்கும் சைகையை காட்டி விட்டு தன் நெஞ்சில் பலமாக அடித்தான், மூமுவைத் தானே கொல்லுவேன் என்று காட்டுவது போல.

'ஆனால் எங்களை நீ ஏமாற்றி விடுவாய்,' என்று அதற்குப் பதிலளித்தான், கவ்றிலா.

ஜெராசிம் அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்து விட்டுத் திரும்பவும் தன் நெஞ்சில் தட்டிவிட்டு தன் அறைக் கதவை அடித்துச் சாத்தினான்.

எல்லோரும் அமைதியாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'அதற்கென்ன அர்த்தம்?' என்று கவ்றில்லா துவங்கினான்.

'அவனை அப்படியே இருக்க விடுங்கள், கவ்றிலா அன்ட்றெயிச். அவன் உறுதிமொழி அளித்தபடி செய்வான். அவன் அப்படித்தான். உனக்குத் தெரியும்... உறுதிமொழி அளித்தால் அதைச் செய்யாமல் விட மாட்டான். அவன் எங்களைப் போன்றவன் அல்ல. அவனுக்கு உண்மை என்றால் உண்மை தான். ஓம்,' என்றான் ஸ்ரீபன்.

'ஓம்,' என்றார்கள் எல்லோரும். தங்கள் தலைகளை அசைத்து. 'ஓம், ஓம்,, அப்படித்தான்.'

அங்கிள் ரெயில் தன் யன்னலைத் திறந்து 'ஓம்' என்றான்.

'சரி, பார்ப்போமே,' என்றான் கவ்றிலா. 'இருந்தும் அவனைக் கவனிப்பதை நாங்கள் விடப் போவதில்லை. எறொஸ்கா, இங்கே பார்,' என்றான் மஞ்சள் பருத்தி ஆடையில் அணிந்த பரிதாபத்துக்குரிய ஒருவனைப் பார்த்து. அவன் தன்னை ஒரு தோட்டக்காரன் என்று சொல்லிக் கொள்பவன். 'நீ ஒரு பொல்லை வைத்துக் கொண்டு இங்கே இரு. ஏதாவது நடந்தால் என்னிடம் ஓடி வந்து சொல்லு,' என்றான்.

எறோஸ்கா ஒரு பொல்லை எடுத்து வைத்துக் கொண்டு படித்தட்டின் கடைசிப் படியில் இருந்து கொண்டான். கூட்டம் கலைந்து சென்றது. என்ன நடக்கப் போகிறதென்று அறிய ஆவலுள்ள ஒரு சில சிறுவர்களைத் தவிர. கவ்றிலா வீட்டுக்குப் போய் எல்லாம் செய்தாயிற்று என்று சீமாட்டியிடம் சொல்வதற்கு லியுபொவ் லியுபொவ்னாவை அனுப்பி வைத்தான். தேவையானால் ஒரு பொலிஸ்காரனை வரவழைப்பதற்காக வண்டிக்காரன் ஒருவனையும் அனுப்பி வைத்தான். சீமாட்டி கைக்குட்டையில் ஒரு முடிச்சுப் போட்டு அதன் மேல் கொஞ்ச ஓடிக்கொலோன் தெளித்து அதை முகர்ந்தாள். கன்னங்களில் அதைத் தடவிக் கொண்டாள். தேநீர் குடித்தாள். செர்ரித் துளிகள் அருந்தி இருந்ததால் திரும்பவும் துயின்றாள்.

ஆரவாரம் முடிந்து ஒரு மணி நேரத்தின் பின்னர் ஜெராசிமின் அறைக்கதவு திறந்தது. அவன் வெளியே வந்தான். மிகவும் மதிப்புள்ள மேலாடை ஒன்றை அணிந்திருந்தான். மூமுவைக் கயிற்றில் கட்டி கையில் பிடித்திருந்தான். அவன் போவதற்காக எரொஸ்கா தள்ளி இருந்தான். ஜெராசிம் வாயிற் கதவடிக்குச் சென்றான். முற்றத்தில் நின்ற சிறுவர்கள் அவனை அமைதியாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் திரும்பிப் பார்க்காமல் தொப்பியை மட்டும் தலையில் அணிந்து கொண்டான். அவனைப் பின்தொடந்து அவன் என்ன செய்கிறான் என்று ஒற்றனைப் போல பார்க்கச் சொல்லி கவ்றிலா எறொஸ்காவிடம் சொன்னான். எறொஸ்கா தூரத்திலிருந்து பார்த்தபோது ஜெராசிம் தன் நாயுடன் சாப்பாட்டுக் கடைக்குப் போவதைக் கண்டான். அவன் வெளியே வரும்வரை காத்திருந்தான்.

ஜெராசிம் சமையல்கடைக்காரருக்கு நன்றாகத் தெரிந்தவன். அவனுடைய சைகைகள் கடைக்காரனுக்கு நன்றாகப் புரியும். இறைச்சி துண்டுகள் போட்ட கப்பேஜ் சுப் கேட்டு விட்டு ஜெராசிம் மேசையில் கைளைக் கட்டிக் கொண்டிருந்தான். மூமு அவனுடைய கதிரைக்குப் பக்கத்தில் நின்றது. அமைதியாக தன் கூரிய புத்தியுள்ள கண்களால் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தது. அதனுடைய உடம்பு மயிர்கள் பளபளப்பானவை. அவற்றை அப்பொழுதுதான் அவன் வாரி விடப்பட்டிருந்தான். ஜெராசிம்முக்கு சுப்பைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதற்குள் அவன் கொஞ்ச பாணை நொருக்கித் தூள்களை போட்டான். இறைச்சியை சிறிது சிறிதாக வெட்டினான். கோப்பையை மூமுவுக்கு முன்னால் நிலத்தில் வைத்தான். மூமு தன் நாகரிகமான பாணியில் அதைக் குடிக்கத் துவங்கியது. சின்னஞ்சிறிய முகவாயை நேர்த்தியாக வைத்திருந்தது. அதனால் சுப் முகத்தில் படவில்லை. ஜெராசிம் அதை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். கண்களிலிருந்து பெரிய இரண்டு கண்ணீர்த் துளிகள் உருண்டு விழுந்தன. ஒன்று நாயின் புருவத்தில் விழுந்தது. மற்றது சுப்புக்குள் விழுந்தது. தன் முகத்தை கையால்

மறைத்தான். மூமு கோப்பையில் இருந்த அரைவாசிச் சுப்பை குடித்து முடித்துவிட்டு வெளியே வந்து தன் உதடு களை நக்கிக் கொண்டிருந்தது. ஜெராசிம் எழுந்து சுப்பிற் கான காசைக் கொடுத்துவிட்டு வெளியே போனான். பரிசார-கன் அவனை குழப்பமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். எறொஸ்கா அவனைப் பார்த்தவுடன் மூலையில் ஒளித்துக் கொண்டான். பின் அவனை முன்னால் போக விட்டு பின் னால் போனான்.

ஜெராசிம் அவசரமில்லாமல் நடந்தான். அவன் கையில் மூமு வைக் கட்டியிருந்த கயிறு இருந்தது. வீதியின் மூலைக்கு அவன் வந்தபோது எதையோ சிந்திப்பது போல நின்றான். பின் திடீரென்று கிறிமியன் கோட்டை நோக்கி துரித கதியில் நடந்தான். வழியில் ஒரு வீட்டின் முற்றத்திற்குள் சென்றான். அங்கே விடுதி ஒன்று கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அதிலி ருந்து இரண்டு செங்கற்களை எடுத்துக் கொண்டான். கிறிமி யன் கோட்டையில் ஆற்றங்கரைப் பக்கம் திரும்பினான். அங்கே இரண்டு சிறிய துடுப்புப் படகுகள் ஒரு கழியில் கட் டபட்டிந்தது. அங்கே சென்றான். அந்த இடம் அவனுக்குப் பரிச்சயமானது. படகு ஒன்றில் மூமுவுடன் பாய்ந்து ஏறினான். அப்போது முதிய ஒரு முடவன் தோட்டத்து கொட்டில் மூலையிலிருந்து வெளியே வந்து அவனைப் பார்த்துச் சத் தம் போட்டான். ஆனால் ஜெராசிம் அவனைப் பார்த்து தலையை ஆட்டிவிட்டு படகை ஆற்றின் விசைக்கு எதிராக விறுவிறுப்புடன் வலிக்கத் துவங்கினான். ஒரேயொரு கணத் தில் இருநூறு யார் தூரத்தைக் கடந்தான். முதியவன் கொஞ்ச நேரம் அங்கே நின்றான். பின் இடது கையாலும் பிறகு வலது கையாலும் முதுகைச் சொறிந்தான். பிறகு கொட்டிலுக்கு தாண்டித் தாண்டிச் சென்றான்.

ஜெராசிம் படகை நெடுந்தூரம் ஓட்டிக் கொண்டு போனான். மொஸ்கோவைக் கடந்தான். ஆற்றங்கரையின் இருபக்கமும் புல்வெளிகள், சந்தைத் தோட்டங்கள், வயல்கள், அடர்த்தி யான புதர்கள் என்று சென்று கொண்டே இருந்தன. சிறுவிவ சாயிகளின் கொட்டில்கள் தெரிய ஆரம்பித்தன. நாட்டுப்புறத் தின் மணம் வீசத் துவங்கியது. தான் வைத்திருந்த துடுப்புக் களை படகின் அடியில் வைத்தான். தலையை தாழ்த்தி மூமுவைப் பார்த்தான். மூமு ஈரமில்லாத ஓர் இருக்கையில் அசையாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது. அவனு டைய பிரமாண்டமான கைகள் அதன் முதுகைப் பிடித்துக் கொண்டிருந்தது. படகின் அடிப்பகுதி முழுவதிலும் தண்ணீர் நின்றது. படகு படிப்படியாக நீரோட்டத்துடன் நகரத்தை நோக்கி திரும்பவும் இழுபட்டுக் கொண்டிருந்தது. இறுதியில் ஜெராசிம் முகத்தில் ஒருவித எரிச்சல் தோன்ற அவசரமாக எழும்பினான். கொண்டு வந்த செங்கற்களை ஒரு கயிற்றில் கட்டினான். அதில் இறுக்கும் சுருக்கொன்றைப் போட்டு மூமு வின் கழுத்தைச் சுற்றிப் போட்டான். மூமுவைத் தூக்கி ஆற் றின் மேலாகக் கொண்டு சென்றபோது அதைக் கடைசியாக ஒருதரம் பார்த்தான்... அதுவும் எந்தவித அச்சமும் இல்லா மல் நம்பிக்கையுடன் அவனைப் பார்த்து மெதுவாக வாலை ஆட்டியது. அவன் முகத்தை மறு பக்கம் கசப்புடன் திருப் பிக் கொண்டான். கைகளைப் பிசைந்தான்... மூமு விழுந்த போது அது கதறிய ஊளைக் குரலோ தண்ணீர் சிதறி ஏற் பட்ட கனத்த சத்தமோ ஜெராசிம்மிற்கு கேட்கவில்லை. அவ னுக்கு பெரும் ஆரவாரமான நாள் கூட அமைதியான நாளே. எங்களுக்கு மிக அமைதியான இரவும் சத்தம் உள்ள இரவே. அவன் திரும்பவும் கண்களைத் திறந்தபோது சிற்றலைகள் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு ஆற்றில் விரைந்து சென்று கொண்டிருந்தன. படகில் அடித்தன. அக லமாக வட்டமிட்டு தூரத்தில் உள்ள கரையை அடைந்தன.

எறொஸ்காவின் பார்வையிலிருந்து ஜெராசிம் மறைந்து விட் டான். எறொஸ்கா வீட்டுக்கு வந்து அவன் என்ன பார்த்தான் என்பதை அறிவித்தான்.

‘சரி, அவன் அதை மூழ்கடித்து விட்டான். இப்போது நாங் கள் எல்லோரும் நிம்மதியாக இருக்கலாம். அவன் ஒருமுறை உறுதிமொழி அளித்தால்...’ என்றான் ஸ்ரீபன்.

அன்று அவனை எவரும் காணவில்லை. வீட்டில் உணவு சாப்பிடவும் வரவில்லை. மாலை வந்தது. இரவுணவு சாப்பிட எல்லோரும் கூடி இருந்தார்கள்.

‘எப்படிப்பட்ட விசித்திரமான உயிரினம் அந்த ஜெராசிம்! ஒரு நாய்க்காக வருத்தம் அடைந்ததைப் பார்,’ என்றாள் தடித்த சலவைக்காரி, திடீரென உணர்ச்சிவசப்பட்டு,

‘ஜெராசிம் இங்கே தான் இருந்தான்,’ என்று சொல்லி அழு தான் ஸ்ரீபன், கரண்டியால் தன் கஞ்சியை சுரண்டி அள்ளிக் கொண்டே.

‘எப்படி? எங்கே?’

‘இரண்டு மணித்தியாலங்களுக்கு முன். ஓம். வாசல்கதவருகே அவனைச் சந்தித்தேன். இங்கே இருந்து அவன் போய்க் கொண்டிருந்தான். முற்றத்திலிருந்து வெளியே வந்தான். நாயைப்பற்றி நான் அவனிடன் கேட்க முயன்றேன். அவன் நல்ல மனநிலையில் இருக்கவில்லை என்று தெரிந்தது. அவன் என்னைத் தள்ளிவிட்டான். தன் வழியில் நிற்க வேண் டாம் என்றுதான் அப்படிச் செய்தான் என்று நினைக்கிறேன். ஆனால் அவன் தள்ளியபோது என்னுடைய கழுத்து ஒடிந் தது போல இருந்தது. ஓ×! ஸ்ரீபனால் சிரிக்காமல் இருக்க இயலவில்லை. தன் கழுத்தைத் தடவிவிட்டான். ‘ஓம், அவனு டைய கைமுட்டி எப்படிப்பட்டது!’

எல்லாரும் ஸ்ரீபனைப் பார்த்துச் சிரித்தார்கள். இரவுணவுக் குப் பிறகு எல்லோரும் கலைந்து சென்றார்கள்.

அந்த நேரத்தில் பிரமாண்டமானதொரு உருவம் தன் தோள்க ளில் ஒரு பையுடனும் கையில் ஒரு தடியுடனும் தீவிரத்துடன் பிரதான தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தது. அது ஜெராசிம். எதையும் பார்க்காமல் அவசரமாக நடந்து போய்க் கொண்டிருந்தான். தன் வீட்டை நோக்கி, தன் கிராமத்தை நோக்கி. தன் சொந்த நாட்டுப்புறத்திற்கு. பரிதாபத்துக்குரிய மூமுவை மூழ்கடித்த பின் தன் அறைக்கு விரைந்துபோய் குதிரை மூடும் துணியொன்றில் சில பொருட்களை அவசர மாக மூட்டையாகக் கட்டி தோளில் சுமந்து கொண்டு போக ஆயத்தமானான். அவனை மொஸ்கோவிற்கு அழைத்து வந்த போது அந்த தெருவை கவனமாக அவதானித்திருந்தான். சீமாட்டி அவனை அழைத்து வந்தபோது அந்தக் கிராமம்

தெருவிலிருந்து ஒரு இருபது மைல்கள் தூரம் உள்ளே இருந்தது. அவன் தோற்கடிக்க முடியாத நோக்கத்துடனும், பிடிவாதமான ஆனால் மகிழ்ச்சியான தீர்மானத்துடன், தோள்கள் நேராக நிமிர்ந்தும், நெஞ்சு விரிந்தும் இருக்க நடந்து கொண்டிருந்தான். கண்கள் முன்னால் நிலையாகவும் நேராகவும் குத்தி நின்றன. அவனுடைய வயதேறிய தாய் அவனுக்காக வீட்டில் காத்துக் கொண்டிருப்பாள் என்பது போல, அந்நியர்கள் மத்தியில் விசித்திரமான பகுதிகளில் அலைந்து திரிந்த பின் அவன் எப்போ வருவான் என்று எதிர்பார்த்து அழைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது போல அவன் அவசரமாக சென்று கொண்டிருந்தான், அந்தக் கோடையில் அப்போது இரவாகிக் கொண்டிருந்தது. இரவு இன்னும் வெம்மையுடன் இருந்தது. ஒரு பக்கம் சூரியன் மறைந்து கொண்டிருந்தது. அடிவானத்தில் இன்னும் வெளிச்சம் சற்று மங்கிக் கொண்டிருந்தது. மறைந்து கொண்டிருக்கும் கடைசி ஒளி வீசிக் கொண்டிருந்தது. மறு பக்கம் நீல பழுப்பு நிற அந்தி மெல்லொளி ஏற்கெனவே எழுந்து விட்டது. இரவு அந்தப் பக்கமிருந்து வந்து கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான காடைகள் எல்லாப் பக்கமும் இருந்து பறந்து கொண்டிருந்தன. கோர்ன்கிரேக் பறவைகள் புதர் பற்றைகளிலிருந்து ஒன்றை ஒன்று அழைத்துக் கொண்டிருந்தன. ஜெராசிம்மால் அவற்றைக் கேட்க முடியவில்லை. மரங்களின் மென்மையான இரவின் முணுமுணுப்புக்களைக் கேட்க முடியவில்லை. அதுவே அவனுடைய வலிமையான கால்களை நடத்திச் சென்றது. ஆனால் இருண்ட வயல்களிலிருந்து காற்றில் மிதந்து வந்த பரிச்சையமான பழுத்த கம்புப் பயிர்களின் மணத்தை மணக்க முடிந்தது. வீட்டிலிருந்து வந்து முகத்தை அணைக்கும் காற்றை உணர்ந்தான். தலைமுடியுடனும் தாடியுடனும் விளையாடும் காற்றை அவனால் உணர முடிந்தது. வீட்டுக்குச் செல்லும் வெண்ணிறமாகிக் கொண்டிருக்கும் தெருவை முன்னால் பார்த்தான். அது அம்பைப் போல நேராகச் சென்று கொண்டிருந்தது. எண்ணில்லாத விண்மீன்களை ஆகாயத்தில் கண்டான். அவை அவனுடைய பாதையை வெளிச்சமிட்டுக் காட்டிக் கொண்டிருந்தன. சிங்கத்தைப் போலத் துணிந்து வெளியேறியிருந்தான். எழுந்து வரும் சூரியன் தன் சிவந்த வெளிச்சத்தைக் காட்டியது. அவன் இன்னும் புத்துணர்ச்சியுடனும் களைப்பற்றும் நடந்து கொண்டிருந்தான். இப்போது அவனுக்கும் மொஸ்கோவிற்கும் முப்பது மைல் தூரம் தான் இருந்தது.

இரண்டு நாட்களில் அவன் வீட்டில் நின்றான். சின்னஞ் சிறிய கொட்டில் அது. அங்கே குடியிருத்திய ஒரு படைவீரனின் மனைவி அவனைக் கண்டு வியந்து போனாள். புனித படங்களுக்கு முன்னால் நின்று அவற்றை வணங்கினான். பின் கிராமப் பெரியவரைச் சந்திக்கச் சென்றான். கிராமப் பெரியவர் முதலில் ஆச்சரியப்பட்டுப் போனார். ஆனால் வைக்கோல் வெட்டும் காலம் அப்போது தான் துவங்கி இருந்தது. ஜெராசிம் முதல் தரமான அறுவடைக்காரன். அந்த இடத்திலேயே அவன் கைகளில் ஒரு அரிவாளைக் கொடுத்தார்கள். அவன் பழைய மாதிரியே அறுவடை செய்யத் துவங்கினான். அள்ளிக் கூட்டி வேகமாக வெட்டுவதையும் வாரி அள்ளுவதையும் பார்த்த சிறுவிவசாயிகள் திகைத்துப் போய் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

மொஸ்கோவில் ஜெராசிம் போய் விட்ட அடுத்த நாள் அவன் அங்கே இல்லை என்பதை அறிந்து கொண்டார்கள். அவனுடைய அறைக்குச் சென்றனர். அதை தலைகீழாகப் புரட்டி தேடினர். கவ்றிலாவுடன் பேசினர். அவனும் வந்தான். எல்லாவிடமும் பார்த்தான். தோள்களைக் குலுக்கினான். காது கேட்காதவன் ஓடி விட்டான் என்றும் அல்லது அந்த முட்டாள் நாயுடன் அவனும் மூழ்கி இறந்து போனான் என்று தீர்மானித்தான். அந்தச் செய்தியை பொலிசுக்கு அறிவித்தார்கள். சீமாட்டிக்கும் அறிவித்தார்கள். முதியவள் பயங்கரமாக கோபம் கொண்டாள். வெடித்து அழுதாள். என்ன மாதிரி என்றாலும் அவனைக் கண்டு பிடியுங்கள் என்று உத்தரவிட்டாள். அந்த நாயை கொல்லச் சொல்லித் தான் ஒருக்காலும் ஆணை இடவில்லை என்று பிரகடனம் செய்தாள். உண்மையில் கவ்றிலாவைத் திட்டிய திட்டில் அன்று முழுவதும் அவன் தலையை ஆட்டிக் கொண்டும் முணுமுணுத்துக் கொண்டும் இருந்தான். அங்கிள் ரெயில் கடைசியாக வந்து 'சரி, சரி' என்று அனுதாபத்துடன் சொல்லும்வரை அவன் அப் படி இருந்தான். கடைசியில் ஜெராசிம் தன் கிராமத்தில் இருக்கிறான் என்ற செய்தி வந்தது. முதியவள் சற்று சமாதானம் அடைந்தாள். முதலில் அவன் மொஸ்கோவிற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தாள். பின்னர் அப்படியான நன்றியற்ற உயிரினம் அவளுக்கு முற்றிலும் உபயோகம் அற்றது என்று பிரகடனப்படுத்தினாள். அது நடந்த சில காலத்தில் அவள் இறந்து விட்டாள். அவளுடைய வாரிசுகளுக்கு ஜெராசிம்மைப் பற்றிச் சிந்திக்க நேரம் இருக்கவில்லை. தாயின் மற்ற வேலைக்காரர்கள் வருடாந்த வாடகை கொடுத்து தங்கள் சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளாலாம் என்று அவர்கள் அறிவித்து விட்டார்கள்.

ஜெராசிம் இன்னும் தன் குடிசையில் தனிமையில் வசித்து வருகிறான். அவன் முன்பு போலவே பலத்துடனும் உடல்நலத்துடனும் வாழ்கின்றான். முன்பு போலவே நாலு பேருடைய வேலையை தனி ஒருவனாகவே செய்கின்றான். முன்பு போலவே தீவிரமானமாக, உறுதியாக இருக்கிறான். ஆனால் அவன் மொஸ்கோவலிருந்து திரும்பி வந்த பிறகு பெண்கள் சகவாசத்தையே விட்டுவிட்டான். அவர்களைத் திரும்பிக்கூட பார்ப்பதில்லை. ஒரு நாயைக் கூட வைத்திருக்கவில்லை.

'அது நல்ல அதிர்ஷ்டமே. பெண்களின் சகவாசமில்லாமல் இருப்பது நல்லதே, ஆனால் நாயைப் பொறுத்தவரை, அவனுக்கு அது ஏன்? எந்த கள்ளனும் காசுக்காக அவனுடைய குடிசைக்கு வர முடியாது என்று சிறுவிவசாயிகள் காரணம் ஒன்றைச் சொல்லிக் கொண்டார்கள். வாய் பேசாதவனுடைய பிரமாண்டமான பலம் அப்படிப்பட்ட புகழை அவனுக்கு அளித்திருந்தது.



mahalingam.k@thaiveedu.com

# எவரெவர் கைவிடம்

நாஞ்சில் நாடன்
ஓவியம் : ஜீவா

கிழமைக்கு ஒரு முறை காவலாளிக்கு அல்லும் பகலுமாய் அறுபது நாழிகை வேலை பார்க்க வேண்டும். ஒருவர் முழு நாள் பணியில் இருக்கும் நாளில் மற்றவருக்கு விடுமுறை. எங்காவது வெளியூர்ப் பயணம், நோய்ப் படுதல், பண்டிகை, வழிபாடு என்றால் மாற்று ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம். ஊதியம், காவலாளிக்கு குடியிருப்பின் நிர்வாகக் குழு வழங்கும். பிராவிடண்ட் ஃபண்ட், கிராஜுவிடி, பென்ஷன் எதுவும் இல்லையா என்று கேட்கத் துணிய மாட்டீர்கள் தானே! அவை புரந்தரனாரிடம் வரம் வாங்கி வந்தவர்களுக்கானவை.

நியாய சபைகளில் கூட நியாயம் குற்றுயிரும் குலை உயிருமாய்க் கிடக்கிறது ஏலம் போகிறது. கண்களைக் கட்டிக் கொண்டு துலாக்கோல் பற்றி நிற்கும் நீதி தேவதை கண்ணீரும் கம்பலையுமாக நிற்கிறாள். அவள் கையில் கொற்கை முத்தின் காற்சிலம்பும் இல்லை.

எம்.ஏ... எம்.ஃபில்... பி.எச்.டி... நெட் தேர்வு, செட் தேர்வு வென்றவர்க்கு எல்லாம் அரசுக் கல்லூரி ஊதியம் என்றால் மாதம் ஒன்றரை இலட்சம். தனியார் கல்லூரியானால் மாதம் இருபதினாயிரம். அரசு வேலைக்கு கொடை, காணிக்கை, தட்சணை, அன்பளிப்பு, கையூட்டு, கோழை, இலஞ்சம் எவ்வளவு என்ற கணக்கு நமக்கெதற்கு? அப்பம் தின்னவோ, அல்லால் குழி எண்ணவோ?

வீட்டில் இருந்து இறங்கி, பகல் காவலாளிப் பணிக்கு நடக்கும் சோணாசலத்துக்கு எதற்கு இந்த கழுதைக்குச் சிரைக்கும் வேலை என்று தோன்றிற்று. எவன் பெண்டாட்டி எவனுடன் போனாள் என்பது ஊடகங்களின் கவலை, நமக்கு எதற்கு என்று எண்ணினார்.

தனது சந்து கடந்து, வீதியையும் போக்குவிட்டு, பிரதான சாலைக்கு வரும் போது, இடது கைப் பக்கம் குடிநீர் குழாய் உடைந்த சிற்றோடையாகப் பாய்ந்து பெருக்கெடுத்து ஓடியது. சாலையைத் தோண்டி குழாய் பதித்தபின் இந்தக் கசிவு - அல்ல - உடைப்பு ஆறாவதோ ஏழாவதோ முறை. மூன்று பேர் வட இந்தியத் தொழிலாளர்கள், குழாய் உடைந்து பெருகும் இடத்தில் தோண்டிக் கொண்டிருந்தனர். சோணாசலம் எட்டு முதல் பதினோராம் வகுப்பு வரை இந்தி பயின்றவர். பள்ளியில் இந்தி கற்றவர்கள் தேர்வு கண்டிப்பாக எழுத வேண்டும். ஆனால் வெற்றி பெற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. என்றாலும் சோணாசலத்தின் பதினோராவது வகுப்பு தேர்ச்சிச் சான்றிதழ் புத்தகத்தில், இந்தியிலும் தேர்வாகிய பதிவு இருந்தது.

எனவே தனக்குத் தெரிந்த தனித்தமிழ் இந்தியில் சரளமாகக் கேட்டார் - ‘கியா ஹை பாய்? எண்ணெய்க் கிணறு தோண்டுகிறீர்களா?’

சற்று முறைத்துப் பார்த்தவர்கள் மேற்கொண்டு சிரித்தனர். ஊர் கேட்டால் ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், உத்ராஞ்சல் என்பர். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்!’ என்ற கணியன் பூங்குன்றன் நினைவுக்கு வந்தார் முந்நாள் தமிழாசிரியரும் இந்நாள் காவலாளியும் ஆன சோணாசலத்துக்கு. இன்றோ ‘யாதும் எம் முதல், யாவரும் அடிமையர்’ என்றாகி விட்டது.

இவர்களை வடக்கன்ஸ் என்கிறார்கள் இன்று. வடக்கன்ஸ் என்பது எம்மொழிச் சொல் என்ற கேள்வி குறுக்கு வெட்டிற்று! ஏன்யா, ராகாஸ், ரஸி காஸ், பெரியவா பக்தாஸ் எல்லாம் எம் மொழிச் சொல் என அதே மனம் குறுக்குக் கேள்வியும் கேட்டது!

சற்று நின்று, போய் வரும் வாகன ஓட்டம் கணித்து, சாலை கடந்து, தனது பணியிடம் நோக்கி நடக்கத் தொடங்கினார். ஐம்பதடி முன்னால், முதியோர் குலத்து ஆண் ஒன்று நடந்து கொண்டிருந்தது. ஏதோ வேறுபாடு உணர்ந்து மீண்டும் கவனித்தார். தலையில் கவசம் அணிந்திருந்தார். வண்டியைப் பார்க் செய்தபோது கழற்ற மறந்திருப்பார் போலும்! ஏதோ வேலையாகப் போகிறாரோ அல்லது வேலை முடிந்து வண்டிக்குத் திரும்பிக் கொண்டிருந்தாரோ? முதுமைத் தளர்வில் நடை தாழ்ந்திருந்தது. சோணாசலம் நடந்து அவரைக் கடக்க யத்தனிக்கையில், யதார்த்தமாகக் கேட்டார் -

‘வண்டியை நிறுத்தச்சிலே, ஹெல்மெட் கழற்றி வைக்க மறந்

திட்டீங்களா?'

முதியவர் சற்றுத் தாமதித்து, திரும்பிப் பார்த்து, இள நகையுடன் - 'நான் வண்டி ஓட்டினதே இல்லே - சின்ன வயசேல அதுக்குண்டான வசதி இல்லே...'

'பின்னே எதுக்கு ஹெல்மெட்?'

'ரோட்டைப் பாத்தேள்ளா? குண்டும் குழியுமா? மழை பெய்தா நீச்சல் குளமாயிரும்... பண்டு ஆர்.கே. லக்க்ஷ்மண் கார்ட்டூன் போட்ட மாதிரி, இந்தக் குழிகளை நிரப்புகதுக்குப் பதிலா, ஒவ்வொரு குழியிலும் குறுக்க பாலம் கெட்டலாம்... இத்தனை பெரிய மேடு பள்ளத்திலே, என்னதான் பாத்து நடந்தாலும், நிதானம் தவறி கீழே விழுந்தா என்ன செய்ய? அதான்...'

'அதுஞ்சரிதான்... விழுந்தாலும் மண்டை உடையாது... அப்பம் தொடை எலும்பு, இடுப்பு எலும்பு, விலா எலும்பு, மணிக்கட்டு முறிஞ்சாப் பரவால்லியா?'

'அதாவது கெட்டுப் போட்டு ரெண்டு மாசம் கெடந்தா எந்திரிச்சு நடமாடலாம்... மண்டை ஓடு கழன்று போச்சுண்ணா? அதான் ஹெல்மெட் போட்டுக்கிட்டு வாக்கிங் போறேன்...'

'நியாயந்தான்... இப்பிடியொரு தேவை வாக்கிங் போகப்பட்ட இந்தியக் கெழடு கட்டைகளுக்கு இருக்குங்கிறது தெரிஞ்சா, சீனாக்காரன் எவனும் முழு கவசம் தயாரிச்சு விற்பனைக்குக் கொண்டாந்திடுவான்... சரி! பாத்துப் போங்கோ...'

விடை பெற்று விரைந்து நடந்தார் சோணாசலம். நடந்து தனது காவல் பணி அமைந்த குடியிருப்பை அடைந்தார். இரவுப் பணி பார்த்த சக காவலாளி, கையில் சோற்றுப் போணிப் பையுடன் நின்றிருந்தார்.

'A-3 லே இருக்கப்பட்ட கிழவி உம்மைத் தேடினாள் யா... போயி என்னாண்ணு கேளு' என்று கள்ளச் சிரிப்பொன்றைச் சிந்திவிட்டு - தெளித்து விட்டு - வீசிவிட்டு - உதிர்த்து விட்டு - நகர்ந்தார்.

தனியாக இருக்கிறாள். கணவன் சென்ற ஆண்டு சிவலோகப் பிராப்தி அடைந்து விட்டார். ஆணும் பெண்ணுமாய் தத்தம் குடும்பத்துடன் நியூ ஜெர்சியிலும் நியூ மெக்சிகோவிலும் ஈராண்டுக்கு ஒருமுறை வந்து செல்வார்கள்.

சமையல், சாப்பாடு, சீரியல்கள், மாதம் ஒருமுறை மருத்துவர், ஸ்மார்ட் ஃபோன் என்று கழிந்தது கிழவியின் காலம். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் ஆன்லைனில் ஆர்டர் செய்தால், டெலிவரி வரும். அற்ற கைக்கு பகல் காவலாளியிடம் ஏதும் வாங்கிவரச் சொல்வாள். முன்னிரவில் வாங்கி வைத்திருந்து மறுநாள் காலையிலும் கொடுக்கலாம். அல்லது பணிநேரம் முடிந்து அங்காடியில் போய் வாங்கி வந்து கொடுத்துவிட்டுப் போகலாம்.

எப்போது போனாலும் மசாலா சாய் போட்டுத் தருவாள். மாதந்தோறும் ஐம்பது நூறு கை நீட்டமும் உண்டு. கைநீட்டம் என்பது சமகாலத் தமிழின் அன்பளிப்பு அல்ல.

பணியில் தன்னைப் பொருத்திக் கொண்டபின், சாவகாசமாக மின்தூக்கியில் பயணித்து, A-3 வாசல் மணியை அழுத்தினார் சோணாசலம். கதவு லென்ஸ் வழியாக நோட்டமிடுவது தெரிந்தது. சேப்டி லேட்ச் விலக்கப்பட்டு கதவு திறந்தது. முகமலர்ச்சியுடன்,

'வாங்க சோணாசலம்... உள்ள வாங்க... உக்காருங்க...' என்றாள் கிழவி.

'சொல்லுங்கம்மா... கூப்ட்டீங்களாம்...'

'அட... சும்மா உள்ளே வந்து உக்காருங்க... எனக்கும் சாயா குடிக்கிற நேரந்தான்... இருங்க வாறன்'

எதற்கு இப்படி மூத்த வயதுடையவர்கள், உள்ளாடை ஏதும் இன்றி, நைட்டி மட்டும் போட்டுக் கொண்டு நடக்கிறார்கள் என்று நினைத்தார் சோணாசலம். எல்லாம் கடந்த பரமானந்த மோன நிலையாக இருக்கலாம் என்றும் எண்ணினார். எதைக் கடப்பது, எதைத் துறப்பது? திருவள்ளுவர் சொன்னார், 'நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வார்' என்று. கொக்கென்று நினைத்த கொங்கணவனும் துறவி தானே!

மசாலா சாய் மெய்யாலுமே சுவையாக இருந்தது. இரண்டு மாரி பிஸ்கட்களும் பொருத்தம்தான். பருகிக் கொண்டே கேட்டார் சோணாசலம் - 'எதுக்கும்மா வரச் சொன்னீங்க?'

ஒண்ணும் பெரிய வேலையில்லே சோணாசலம்... நேரம் கிடைக்கிற போது, நம்ம பழனியாண்டி மால்லே போயி கொஞ்சம் சில்லறை சாமான் வாங்கணும்...'

'லிஸ்ட் குடுங்கம்மா...'

'லிஸ்ட் என்ன பெரிய லிஸ்ட்? பெரிய வெங்காயம் ரெண்டு கிலோ, கேரள ரஸ்தாளி ஒரு டஜன், மூணு தேங்கா, வெந்தயக்கீரை இல்லேண்ணா பாலக் கெடச்சா ஒரு கட்டு... நான் வேணும்மா கேட்ல ஒக்காந்துக்கிறேன். நீங்க போயி வாங்கீட்டு வந்திருங்கோ...' என்றாள் கிழவி.

'ஐய்யய்யோ... நீங்க வேண்டாம்மா... நம்ம குடியிருப்புக்கு எதிர்த்த வீட்லே குடியிருக்கப்பட்ட டிரைவர் அண்ணாச்சி, காலம்பற காப்பிக்குடி ஆன பெறகு வந்து எங்கூட ஒரு மணிக்கூர் பேசீட்டு இருப்பாரு... அவரை உக்காத்தி வச்சுக்கிட்டு, போயிட்டு வந்திருவேன்' என்று கூறி கட்டைப்பையும் காசும் வாங்கிக் கொண்டார் காவலாளி. தான் ஐய்யய்யோ எனக் கூவியதில் ஐந்து யகரங்கள் பயின்று வந்துள்ளன என்றும் சிந்தித்தது முன்னாள் தமிழாசிரியர் புத்தி.



எதிர்த்த வீடு, ஒரு பழைய பங்களா. உரிமையாளரும் அவர் மனைவியும் மாண்ட்ரியலில் இருக்கும் மகள் குடும்பத்துடன் ஆறு மாதம் தாமசம் போயிருந்தார். வீட்டுக் காவலுக்கு, பராமரிப்புக்கு முன்னாள் ஓட்டுநர், ஒற்றைப்புறம் கூட்டாளிக்கு தங்கல் ஏற்பாடு. செடிகளுக்கும் தண்ணீர் ஊற்றணும். தங்கல் இலவசம், சம்பளம் தனி.

அவர் உரையாட வந்ததும், நயந்து பேசி, அவரை வாசலில்

உட்கார வைத்து, தமிழின் அரும் பெரும் பொக்கிஷங்க ளான - குடியிருப்போர் படித்து விட்டு எறிந்து போகும் - வாராந்தரிகளை கையில் தந்து - 'கொஞ்சம் பாத்துக்கி டுங்கோ... இன்னா வந்திட்டேன்' என்று கையில் கட்டைப் பையுடன் கிளம்பினார் சோணாசலம்.

காலை வெயில் ஏறுமுகமாக இருந்தது. அதிக ஆள் நடமாட் டம் இல்லாத, மர நிழல்கள் கவிந்த, குறுக்கு வழியும் ஆன, முதன்மைச் சாலை, இடைச்சாலை, குறுக்குச் சாலை தேர்ந்து நடந்தார்.

அங்காடிக் கட்டடத்தின் முற்றத்தில், அன்றைய மலிவான காய்கறிகள் குவிக்கப் பெற்று, விலை எழுதிய அட்டைகளும் கண்ணில் படும்படியாக வைக்கப்பட்டிருந்தன. எடைக்க ணக்கு - பணத்தில், முட்டைக்கோசு பதினைந்து, பூக்கோசு முப்பது, தர்பூசணி என்ற கலிங்கர் இருபது, தக்காளி - ஆப் பிள் இருபத்தி நான்கு, தக்காளி - நாடு இருபத்திரண்டு, சின்ன வெங்காயம் நாற்பது, பெரிய வெங்காயம் பதினான்கு என...

கட்டைப் பையை வாசலில் இருந்த கவுண்டரில் ஏற்பித்து, கூடையொன்றை எடுத்து நடந்து, இரண்டு கிலோ அளவி லான பெரிய வெங்காயம் பொறுக்கினார். கீரைக் குவியல் கள் கிடந்தன. கொத்துமல்லி, புதினா, அரைக்கீரை, தண்டன் கீரை, பாலக், வெந்தயக்கீரை எனும் மேத்திக் கீரை, சுக் கட்டி என்ற மணத்தக்காளிக் கீரை, வல்லாரை என. அகத் திக் கீரை, காட்டுக்கீரை, வள்ளக்கீரை, பசலிக்கீரை, முருங் கைக் கீரை, கொடுப்பைக் கீரை, கையாந்தகரை எதுவும் மால்களில் கிடைக்காது.

துண்டங்களாக்கி அடுக்கப்பட்டிருந்தன அரசாணிக்காய், வெள்ளைப் பூசணி. நீண்டு கிடந்தன சுரை, புடலை, பீர்க்கு, முருங்கை.

தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்து, பில் போடப் போனார். நூற்று எண்பத்தேழு ரூபாய் என்றாள் பில் போட்ட பெண். இருநூறு பணம் தாள் ஒன்றைக் கொடுத்து, பதின்மூன்று பணம் மீதம் பெற்று, பில் தொகையைச் சரிபார்த்தார் முன் னாள் தமிழாசிரியர். ரூ.186-52 என்றிருந்ததை முழுமைப்ப டுத்தி இருந்தாள். முதற்பொருள் பெரிய வெங்காயம் கிலோ ரூபாய் 21-00 என்று பில் ஆகி இருந்தது. பெரிய வெங்கா யம் தேர்ந்து பொறுக்கும் போதே விலை கவனித்திருந்தார். அச்சிட்டு பெரிய வெங்காயம் அம்பாரத்துக்கு வைக்கப்பட்டி ருந்த மரத்தடுப்பில் ஒட்டியிருந்தனர்.

ஏதேனும் பிழை இருக்கலாம் என்றெண்ணி, பில் போட்ட பெண்ணிடம் கேட்டார்.

'ஏம்மா? பெரிய வெங்காயம் வெளீல பதினாலு ரூவாண்ணு அடிச்சு ஒட்டீருக்கு! நீங்க இருபத்தோரு ரூவா பில் போட் டிருக்கீங்க...'

இருபக்கமும் நின்று கொண்டே பிற வாடிக்கையாளருக்கு பில் அடித்துக் கொண்டிருந்த பெண்கள் திரும்பிப் பார்த்த னர். சோணாசலத்துக்கு பில் அடித்த பெண் சொல்லினாள் - 'இல்லீங்க தாத்தா... விலை இருவத்தோரு ரூவா தான்...'

'அப்பம் வெளீல பதினாலுண்ணு அடிச்சு ஒட்டீருக்கு?'

'இருக்காதே! இதுல இருவத்தொண்ணுதான் வருது...'

'அது எப்பிடிம்மா?'

'இருங்க! பாக்கச் சொல்றேன்!' என்று கூறி, காய்கறிகள் அடுக்கிக் கொண்டிருந்த ஊழியச் சிறுவனை அழைத்துப் பார்த்து வரச் சொன்னாள்.

சோணாசலம் சற்று நேரம் நின்றிருந்தார். வெளியே விலை பார்க்கப் போன ஊழியன் மடங்கி வந்து -

'அங்க விலை ஏதும் ஒட்டலீங்க அக்கா' என்று கூறி நகர்ந்து போனான்.

எனில் சில மாமாங்கங்கள் தாம் தமிழ் கற்பித்தது பாழா எனக் கறுவி, சோணாசலம் வெளியே வந்தார். மற்றெல்லாக் காய்கறிக் குவியல்கள் கிடந்த தடுப்புக்களிலும் ஒட்டப்பட்ட விலைத்தாள்கள் இருந்தன. பெரிய வெங்காயம் கிடந்த தடுப்பில் ஒட்டப் பட்டிருந்த தாளை மட்டும் காணோம்.

பித்தா தன் மனம், பார்வை பாதிப்பா எனச் சஞ்சலித்துத் தடுமாறினார். முற்றத்தில், காய்கறிப் பரத்தல்களின் இடையே, குப்பைகளைப் பெருக்கித் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்த ஊழியர் இருவர் அவரைக் கண்காணித்தனர். சோணாசலம் சுற்றுமுற்றும் பார்த்தார். சுரைக்காய் பெட்டிய ருகே ஒரு காகிதம் கசங்கிக் கிடந்தது. எடுத்துப் பிரித்தார். பெரிய வெங்காயம் 14-00 என்று எழுதப்பட்டிருந்தது. அவர் கேள்வி எழுப்பிய பிறகு, பார்க்க வந்த பையனோ, மற் றெந்த ஊழியரோ பிய்த்தெடுத்துச் சுருட்டி வீசியிருக்க வேண் டும். தண்ணீர் விசிறிக் கொண்டிருந்த ஊழியன் அவரைப் பார்த்து மென்னகைத்தான்.

'அது வேற ஏதோ தாள் தாத்தா!' என்றான்.

ஒன்றும் பேசத் தோன்றாமல், மால் உள்ளே நுழைந்து, கவுண்டரில் இருந்த பெண்ணிடம் அதைக் காட்டினார்.

'நாங்க என்ன தாத்தா செய்யது? கம்ப்யூட்டர்லே வாற விலை தானே அடிக்க முடியும்?' என்றாள்.

பணம் கொடுத்து மிச்சச் சில்லறையும் வாங்கியாயிற்று. வேண்டாம் என்று பொருளை விட்டு விட்டுப் போனால் A-3 கிழவி கேட்பாள். வேறு கடைக்கு அலைய மனப் பொறுதி யும் இல்லை.

'சரிம்மா! நல்லாருங்க!' என்று கை உயர்த்தி ஆசி வழங்கி விட்டு வெளியே வந்து, கூடையில் இருந்த பில்போட்ட பொருள்களை கட்டைப் பைக்கு மாற்றி விட்டு, காவலாளி உத்தியோகம் பார்க்கும் அடுக்குமாடிக் குடியிருப்பை நோக்கி நடக்க ஆரம்பித்தார் சோணாசலம்.



nanjilnadan@thaiveedu.com


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com


கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை
கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com


BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
RMG
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
விற்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Chairman's Club Award Winner
Platinum Club Winner 2022
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
உங்கள் Gas Furnace இருந்து CO அளவிற்கு
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Guaranteed Repairs
Professional Service
Flat Rate Pricing
Fully Insured
Parts and Labour guarantee
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280


Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasinghams
Realtor
416.937.8090


SABONA


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9863
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage


NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
21
CENTURY 21
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4. Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Barrister and Solicitor
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah
Realtor
647-888 3500
DILEEP Thangavel
Realtor
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE*

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
President & CEO
416-666-1120

Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
Ph: 416.439.0224
Cell: 416.450.5011

Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFE Financial Services Inc.
416-909-0400 416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
Cell: 416 505 8532

DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner